106

T.N.L.A.D

10.4.2000

V.95 No.1

D
Y211,31'P00
P0.95.1.

223302

வெளியீடு 10-1-2001 Issued 10-1-2001

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

திங்கட்கிழமை, ஏப்ரல் 10, 2000 – தொகுதி 95 – எண் 1

**Monday the 10th April, 2000 – Volume 95 – No. 1**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

**Legislative Assembly Secretariat, Fort St. George,**
**Chennai-600 009**

விலை ரூ. *3.00*] [Price Rs. 3.00

**10-4-2000**

## உள்ளடக்கம்


*பக்கங்கள்*

| | |
|---|---|
| தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் | iii-vi |
| Personnel of the Government of Tamil Nadu | vii-xi |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல் | xiii-xiv |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் பட்டியல் (அகர வரிசைப்படி) | xv-xxv |
| *1.* **வினாக்கள்-விடைகள்—** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 1-38 |
| *2.* **தகவல் கோரல்—** | |
| உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள் | 38-42 |
| *3.* **மானியக் கோரிக்கைகள், 2000-2001, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி | |
| கோரிக்கை எண் 17 - கல்வி | 42-133 |
| *மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் | 42,49,50-57,59-60,66,67,77-78, 87,89-90,91,93-95,98, 99,101 102, 115,116, 117-118,122-124,126-127, 129-131 |
| திரு. மு. அப்பாவு | 49-61 |
| *திரு. பி. இராசமாணிக்கம் | 61-64 |
| திரு. ஜே. ஹேமச்சந்திரன் | 65-70 |

223302



| | | பக்கங்கள் |
|---|---|---|
| 3. | மானியக் கோரிக்கைகள், 2000-2001, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி | |
| | கோரிக்கை எண் 17 - கல்வி—தொடர்ச்சி | |
| | திரு. இரா. மகேந்திரன் | 70-75 |
| | திரு. ஏ.வி.ஏ. நாசர் | 44,75-81 |
| | *திரு. வெ. கோவிந்தன் | 81-84 |
| | திரு. பி. வெங்கடசாமி | 47,85-88 |
| | *டாக்டர் க. கிருஷ்ணசாமி | 88-96 |
| | திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரான் | 46,96-104 |
| | திரு. மா. இராமச்சந்திரன் | 104-110 |
| | திரு. தி.ப. ஆறுமுகம் | 110-114 |
| | *திரு. ஜி. நிஜாமுதீன் | 47 48,114-121 |
| | திரு. சி. ஞானசேகரன் | 42,105,121-133 |
| 4. | அரசினர் சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்)— | |
| | தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000 | 133-135 |
| 5. | பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்— | 136 |



## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

## ஆளுநர்—நீதிபதி செல்வி மீ. பாத்திமா பீவி

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. **முதலமைச்சர்** : **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:**

*பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, மாவட்ட வருவாய் அதிகாரிகள், உள் துறை, நிதி, திட்டம், தொழில்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, சிறுபான்மையினர் நலன், கடவுச் சீட்டு, மற்றும் வணிக வரிகள்.*

2. **கல்வி அமைச்சர்** : **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:**

*தொழிற்கல்வி உள்ளிட்ட கல்வி, சட்டமன்றம், தேர்தல்கள், மின்னணுவியல, அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் மற்றும் முன்னாள் இராணுவத்தினர்.*

3. **மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:**

*மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலம் மற்றும் மின்சாரம்.*

4. **வருவாய்த் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:**

*வருவாய், வருவாய் வாரியம், மாவட்ட வருவாய் நிருவாகம் மற்றும் மாவட்டத் துணை ஆட்சியாளர்கள்.*

5. **ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. கோ.சி. மணி:**

*நகராட்சி நிருவாகம், சமுதாய வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.*

6. வேளாண்மைத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்புப் பயிர் மேம்பாடு.

7. பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. துரைமுருகன்: பொதுப் பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டம், செயற் திட்டப் பணிகள், வனம் மற்றும சின்கோனா.

8. போக்குவரத்துத் துறை அமைச்சர் : மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம் மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

9. நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்: நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள்.

10. தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் : மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்: தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை.

11. உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. கா.நா. நேரு: உணவு, விலைக் கட்டுப்பாடு மற்றும் குடிமைப் பொருட்கள் வழங்கல், பொது விநியோக முறை, கூட்டுறவு மற்றும் புள்ளிவிவரங்கள்.

12. பால்வளத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. க. சுந்தரம்: பால், பால்பண்ணை வளர்ச்சி, குடிசை மாற்றுத் திட்டம் மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.



13. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்: தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, இரும்பு மற்றும் எஃகுக் கட்டுப்பாடு, பத்திரிகை அச்சுக் காகிதக் கட்டுப்பாடு மற்றும் இசுலாமிய அறக்கட்டளை (வக்ஃப்).

14. சட்டத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. ஆலடி அருணா: சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள், எடைகள் மற்றும் அளவைகள் குறித்த சட்டம், கம்பெனிகள் பதிவு, கடன் வழங்கல் பற்றிய சட்டமியற்றல் உட்பட கடன் நிவாரணம் மற்றும் சீட்டு நிதி பற்றிய சட்டம் இயற்றுதல்.

15. கைத்தறித் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி: கைத்தறி, துணித் தொழில்.

16. பிற்படுத்தப் பட்டோர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: பிற்படுத்தப்பட்டோர் நலன், மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சீர் மரபினர் நலன் வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.

17. இளைஞர் மற்றும் மாசுக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: விளையாட்டு, இளைஞர் பணிப்படை மற்றும் சுற்றுச்சூழல் மாசுக் கட்டுப்பாடு.

18. வீட்டு வசதித் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி: வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி, நகர அமைப்புத் திட்டமிடல் மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி.

19. ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:**
கிராமக் குடிசைத் தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பதிவுத் துறை, முத்திரைத் தாள் சட்டம் மற்றும் சத்துணவு.

20. செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:**
செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை மற்றும் அரசு அச்சகம்.

21. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் : **மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:**
கால்நடை பராமரிப்பு.

22. சமூக நலத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குண பாண்டியன்:**
மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், இரவலர் காப்பு இல்லம், அனாதை இல்லங்கள், குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம்.

23. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:**
ஆதிதிராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்.

24. சுற்றுலாத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன்:**
சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.

25. கதர்த் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:**
கதர் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்.

26. மீன் வளத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:**
மீன் வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்.



## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR—Justice Selvi M. FATHIMA BEEVI

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. **Chief Minister** .. **The Hon. Kalaignar M. Karunanidhi:**
Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Home, Finance, Planning, Industries, Prohibition and Excise, Minorities Welfare, Passports and Commercial Taxes.

2. **Minister for Education** .. **The Hon. Prof. K. Anbazhagan:**
Education including Technical Education, Legislature, Elections, Electronics, Science and Technology and Ex-servicemen.

3. **Minister for Health and Electricity** .. **The Hon. Thiru Arcot N. Veerasamy:**
Health, Medical Education and Family Welfare and Electricity.

4. **Minister for Revenue** .. **The Hon. Thiru Nanjil K. Manoharan:**
Revenue, Board of Revenue, District Revenue Establishment and Deputy Collectors.

5. **Minister for Rural Development and Local Administration** .. **The Hon. Thiru Ko.Si. Mani:**
Municipal Administration, Community Development, Panchayats, Panchayat Unions and Rural Indebtedness and Urban and Rural Water Supply.

6. **Minister for Agriculture** .. **The Hon. Thiru Veerapandi S. Arumugam:** Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development.

7. **Minister for Public Works and Forest** .. **The Hon. Thiru Duraimurugan:** Public Works, Irrigation including Minor Irrigation, Programme Works, Forest and Cinchona.

8. **Minister for Transport** .. **The Hon. Dr. K. Ponmudi:** Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Chennai Metropolitan Development Authority.

9. **Minister for Highways** .. **The Hon. Thiru Pasumpon Tha. Kiruttinan:** Highways and Ports.

10. **Minister for Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments.** .. **The Hon. Dr. M. Thamizhkudimagan:** Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments.

11. **Minister for Food, Public Distribution System and Co-operation** .. **The Hon. Thiru K.N. Nehru:** Food, Price Control and Civil Supplies, Public Distribution System, Co-operation and Statistics.

12. **Minister for Milk** .. **The Hon. Thiru K. Sundaram:** Milk and Dairy Developement, Slum Clearance and Accommodation Control.



13. **Minister for Labour** .. **The Hon. Thiru A. Rahman Khan:** Labour, Census, Employment and Training, Iron and Steel Control, Newsprint Control and Wakf.

14. **Minister for Law** .. **The Hon. Aladi Aruna:** Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits.

15. **Minister for Handlooms** .. **The Hon. Thiru N.K.K. Periasamy:** Handlooms, Textiles.

16. **Minister for Backward Classes** .. **The Hon. Thiru M.R.K. Panneerselvam:** Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Overseas, Refugees and Evacuees.

17. **Minister for Youth and Pollution Control** .. **The Hon. Thiru Pongalur N. Palanisamy:** Sports and Youth Service Corps and Environmental Pollution Control.

18. **Minister for Housing** .. **The Hon. Thiru K. Pitchandi:** Housing, Rural Housing Development, Town Planning and Urban Development.

19. **Minister for Rural Industries and Registration** .. **The Hon. Thiru I. Periasamy:** Rural Industries including Village and Cottage Industries, Registration and Stamp Act and Nutritious Meals.

20. **Minister for Information, Publicity and Printing** .. **The Hon. Thiru V. Mullaivendan:** Information and Publicity, Film Technology and Cinematography Act, Stationery and Printing and Government Press.

21. **Minister for Animal Husbandry** .. **The Hon. Pulavar P.M. Senguttuvan:** Animal Husbandry.

22. **Minister for Social Welfare** .. **The Hon. Tmt. S.P. Sarkunapandian:** Social Welfare including Women's and Children's Welfare, Beggars Home, Orphanages and Correctional Administration and Integrated Child Development Services Scheme

23. **Minister for Adi-Dravidar and Tribal Welfare** .. **The Hon. Thiru Samayanallur S. Selvarasu:** Adi-Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour.

24. **Minister for Tourism** .. **The Hon. Thiru N. Suresh Rajan:** Tourism and Tourism Development Corporation.

25. **Minister for Khadi** .. **The Hon. Thiru Andhiyur P. Selvarasu:** Khadi Board, Bhoodan and Gramdan.

26. **Minister for Fisheries** .. **The Hon. Tmt. S. Jenefer Chandran:** Fisheries and Fisheries Development Corporation.



# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

*பேரவைத் தலைவர்*

**மாண்புமிகு திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்**

*பேரவைத் துணைத் தலைவர்*

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி**

*மாற்றுத் தலைவர்கள் பட்டியல்*

1. **திரு. அ.லெ. சுப்பிரமணியன்**
2. **திரு. சி.டி. தண்டபாணி**
3. **திரு. குத்தாலம் பி. கல்யாணம்**
4. **டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்**
5. **திரு. நா. பெரியசாமி**

*செயலாளர்*

**திரு. வெ. இராசாராமன்**

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல்

| | | | |
|---|---|---|---|
| 1. | திருமதி பானுமதி ஆனந்தராஜன் பி.எஸ்.சி., பி.ஜி.எல். | - | கூடுதல் செயலாளர் |
| 2. | திரு. செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ., பி.எல். | - | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 3. | திரு. இரா. வெங்கடேசன், எம்.ஏ., எல்.எல்.பி. | - | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 4. | திரு. கி. சாயிநாதன், பி.ஏ., பி.ஜி.எல். | - | இணைச் செயலாளர் |
| 5. | திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பி.ஜி.எல். | - | இணைச் செயலாளர் |
| 6. | திருமதி வீ.நா. உமா, பி.ஏ. | - | குழு அலுவலர் |
| 7. | திரு. சா. கணேசன், பி.ஏ., பி.ஜி.எல். | - | துணைச் செயலாளர் |
| 8. | திரு. தி. திருமாவளவன், பி.எஸ்சி., பி.எல். | - | துணைச் செயலாளர் |
| 9. | திரு. வெ. இராமகிருஷ்ணன் எம்.ஏ., பி.எல். | - | பேரவைத் தலைவரின் சிறப்புத் தனிச் செயலர் |
| 10. | திரு. மு. ஆறுமுகப்பெருமாள், எம்.ஏ., பி.லிட். | - | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 11. | திரு. சு. ராஜகுரு | - | குழு அலுவலர் |
| 12. | திரு. சௌரி அய்யாத்துரை | - | பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர் |
| 13. | திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | - | துணைச் செயலாளர் |
| 14. | திரு. கோ. ஸ்ரீராமன், பி.காம். | - | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 15. | திரு. எம். ஜோபாய், பி.காம்., பி.ஜி.எல். | - | துணைச் செயலாளர் |
| 16. | திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.எல். | - | துணைச் செயலாளர் |
| 17. | திரு. இல. மாரியப்பன், பி.ஏ. | - | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 18. | திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | - | துணைச் செயலாளர் |

| | | |
|---|---|---|
| 19. | திரு. ஜி. அனீஸ் அகமத்,<br>எம்.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| 20. | திரு. மா. செல்வராஜ்,<br>பி.எஸ்சி., பி.எல். | - துணைச் செயலாளர் |
| 21. | திரு. வெ.சி. சுப்பிரமணியன்,<br>எம.ஏ., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| 22. | திரு. சு. பாலச்சந்தர். பி.ஏ.. பி.எல். | - சார்புச் செயலாளர் |
| 23. | திருமதி என். துளசிபாய், பி.ஏ. | - சார்புச் செயலாளர் |
| 24. | திரு. கோ. ரவீந்திரன்,<br>எம்.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| 25. | திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. | - சார்புச் செயலாளர் |
| 26. | திரு. டி. கோவிந்தராஜு,<br>எம்.ஏ., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| 27. | திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன்<br>எம்.எஸ்.சி., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| 28. | திரு. ம. பிலிப், எம்.ஏ., பி.ஜி.எல். | - தலைமை நிருபர் |
| 29. | திருமதி சீ. கனகவல்லி, டி.சி.பி. | - தலைமை நிருபர் |
| 30. | திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ. | - தலைமை நிருபர் |
| 31. | திரு. ச. பாலகிருஷ்ணன்<br>பி.எஸ்.சி., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| 32. | திருமதி இரா. அமிர்தவல்லி,<br>எம்.ஏ., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| 33. | திருமதி கி. இந்திரா,<br>பி.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| 34. | திரு. நா. நடராஜன், பி.ஏ., பிஜிஎல். | - தலைமை நிருபர் |
| 35. | திருமதி என். மீனாட்சி<br>எம்.ஏ., பி.ஜி.எல்., | - சார்புச் செயலாளர் |
| 36. | திரு. மு. பொன்னுரங்கம்<br>எம்.ஏ., பி.எல் | - தலைமை நிருபர் |
| 37. | திரு. தி. உமாபதி, பி.ஏ. | - தலைமை நிருபர் |
| 38. | திருமதி ப. சரஸ்வதி<br>எம்.ஏ., பி.ஜி.எல்., | - சார்புச் செயலாளர் |
| 39. | திரு. கோ. தேவராஜன், பி.ஏ. | - சார்புச் செயலாளர் |
| 40. | திருமதி இரா. கஸ்தூரி<br>பி.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி)

## பெயர்களும் தொகுதிகளும்

| | | |
|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. | - திருவாரூர் (செ.வ.) |
| 2. | அந்தியூர் ப. செல்வராசு. திரு. | - அந்தியூர் (செ.வ.) |
| 3. | அபுல்ஹசன், திரு. எம்.எம்.எஸ். | - மயிலாடுதுறை |
| 4. | அப்துல் லத்தீப், திரு. ம. | - வாணியம்பாடி |
| 5. | அப்பாவு, திரு. மு. | - இராதாபுரம் |
| 6. | அமரமூர்த்தி, திரு. டி. | - அரியலூர் |
| 7. | அய்யலுசாமி, திரு. லி. | - கோவில்பட்டி |
| 8. | அருண்குமார், திரு. பா. | - மேட்டுப்பாளையம் |
| 9. | அழகராஜா. திரு. என்.ஆர். | - தேனி |
| 10. | அழகிரி. திரு. ச. | - சிதம்பரம் |
| 11. | அழகுவேலு, திரு. ச. | - கண்டமங்கலம் (செ.வ.) |
| 12. | அன்பரசன் திரு. சி. | - அறந்தாங்கி |
| 13. | அன்பழகன், திரு. வ. | - செய்யார் |
| 14. | அன்பழகன். பேராசிரியர் க | - துறைமுகம் |
| 15. | அன்பில் பெரியசாமி, திரு. | - திருச்சிராப்பள்ளி-2 |
| 16. | ஆசையன், திரு. பெ. | - ஆண்டிப்பட்டி |
| 17. | ஆண்டமுத்து, திரு. வெ.அ. | - பவானிசாகர் |
| 18. | ஆருண் ரஷீத், திரு. ஜே.எம். | - வில்லிவாக்கம் |
| 19. | ஆலடி அருணா, திரு. | - ஆலங்குளம் |

20. ஆவுடையப்பன், திரு. இரா. - அம்பாசமுத்திரம்

21. ஆறுமுகம், திரு. தி.ப. - திருச்செங்கோடு

22. ஆற்காடு நா. வீராசாமி, திரு. - அண்ணா நகர்

23. ஆனந்தன், திரு. பால - வந்தவாசி (செ.வ.)

24. இரகுமான்கான், திரு. அ. - இராமநாதபுரம்

25. இராசமாணிககம், திரு. க.வெ.வீ. - மேலூர்

26. இராசமாணிக்கம், திரு. பி. - ஒரத்தநாடு

27. இராசன், திரு. வி.பி. - இராஜபாளையம் (செ.வ.)

28. இராசேந்திரன் என்கிற தீரன், திரு. ஆ. - ஆண்டிமடம்

29. இராமசாமி, டாக்டர் வை. - பண்ருட்டி

30. இராமசாமி, திரு. கே.ஆர். - திருவாடனை

31. இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். - கம்பம்

32. இராமச்சந்திரன், திரு. சி.இரா. - தொண்டமுத்தூர்

33. இராமச்சந்திரன், திரு. மா. - திருவோணம்

34. இராமலிங்கம், திரு. ஏ. - காட்டுமன்னார்கோவில் (செ.வ.)

35. இராமலிங்கம், திரு. செ. - திருவிடைமருதூர்

36. இராமன், டாக்டர் இ.எஸ்.எஸ். - பள்ளிப்பட்டு

37. இராமஜெயம், திரு. ந.பூ. - மயிலாப்பூர்

38. இராஜ ரெட்டி, திரு. ச. - தளி

39. இராஜேந்தர், திரு. டி. - பூங்கா நகர்

40. இளங்கோ, திரு. கோ. - அவினாசி (செ.வ.)



41. ஈஸ்வரன், திரு. ரா. - வாசுதேவநல்லூர் (செ.வ.)

42. உதயசூரியன், திரு. தா. - சங்கராபுரம்

43. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். - தஞ்சாவூர்

44. கணேசன், திரு. ஐ. - எடப்பாடி

45. கணேசன், திரு. கே.சி. - ஜெயங்கொண்டம்

46. கருணாநிதி, கலைஞர் மு. - சேப்பாக்கம்

47. கருப்பசாமி, திரு. சொ. - சங்கரநயினார்கோவில் (செ.வ.)

48. கருப்பண்ண உடையார், திரு. ந. - பாபநாசம்

49. கருப்புசாமி, திரு. டி. - உப்பிலியாபுரம் (ஆவா.)

50. கன்னையன், திரு. க. - தொட்டியம்

51. காஞ்சனா கமலநாதன், டாக்டர் - கிருஷ்ணகிரி

52. காந்தி, திரு. ஆர். - இராணிப்பேட்டை

53. கிருஷ்ணசாமி, டாக்டர் க. - ஒட்டப்பிடாரம் (செ.வ.)

54. கிருஷ்ணன், திரு. எஸ்.வி. - நாங்குநேரி

55. கிருஷ்ணன், திரு. சீ. வெ. - வேடசந்தூர்

56. குண்டன், திரு. டி. - உதகமண்டலம்

57. குத்தாலம் பி. கல்யாணம், திரு. - குத்தாலம்

58. குமாரதாஸ், டாக்டர் தே. - கிள்ளியூர்

59. கும்மிடிப்பூண்டி கி. வேணு, திரு. - கும்மிடிப்பூண்டி

60. குழந்தை தமிழரசன், திரு. - விருத்தாசலம்

61. கோதண்டம், திரு. ஏ. - ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)

62. கோபால், திரு. பா. - மேட்டூர்

63. கோபு, திரு. சி. - அணைக்கட்டு

64. கோமதி சீனிவாசன், திருமதி - வலங்கைமான் (செ.வ.)

65. கோவிந்தன், திரு. ப. - தாரமங்கலம்

66. கோவிந்தன், திரு. வெ. - பேரணாம்பட்டு (செ.வ.)

67. சக்ரபாணி, திரு. ஆர். - ஓட்டன்சத்திரம்

68. சண்முகம், திரு. கோ. - திருப்பத்தூர்

69. சண்முகம், திரு. சி. - ஆலந்தூர்

70. சண்முகம், திரு. ம. - கிணத்துக்கடவு

71. சண்முகம், திரு. வி.சி. - நெல்லிக்குப்பம்

72. சந்தானம், திரு. லா. - சோழவந்தான்

73. சந்திரசேகரன், திரு. சி. - சேந்தமங்கலம் (ஆ.வா.)

74. சந்திரசேகரன், திரு. துரை. - திருவையாறு

75. சமயநல்லூர் எஸ். செல்வராசு, திரு. - சமயநல்லூர் (செ.வ.)

76. சம்பத், திரு. ஏ.ஜி. - முகையூர்

77. சரஸ்வதி, திருமதி ஆர். - தாராபுரம் (செ.வ.)

78. சற்குணபாண்டியன், திருமதி எஸ்.பி. - டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்

79 சாமிநாதன், திரு. மு.பெ. - வெள்ளக்கோவில்

80 சிங்காரவேலு, திரு. வி.பி. - வால்பாறை (செ.வ.)

81. சிவபுண்ணியம், திரு. வை. - மன்னார்குடி

82. சிவராமன், திரு. ஆர். - திருப்பத்தூர்

83. சிவராஜ், திரு. சு. - ரிஷிவந்தியம்

84. சிவலிங்கம், திரு. எஸ்.ஆர். - பனமரத்துப்பட்டி



85. சிவானந்தம், திரு. ஆர். - ஆரணி

86. சிவாஜி, திரு. இ.ஏ.பி. - திருத்தணி

87. சின்னய்யா, திரு. வெ. - திருமயம்

88. சீனிவாசன், திரு. ஏ.ஆர்.ஆர். - விருதுநகர்

89. சுகவனம், திரு. இ.ஜி. - பர்கூர்

90. சுடலைமுத்து, திரு. அ. - போடிநாயக்கனூர்

91. சுதர்சனம், திரு. டி. - பூந்தமல்லி

92. சுந்தரம், திரு. க. - பொன்னேரி (செ.வ.)

93. சுந்தரம், திரு. ந. - காரைக்குடி

94. சுந்தரம், திரு. பி.ஆர். - இராசிபுரம்

95. சுந்தர், திரு. கே. - உந்திரமேரூர்

96. சுப்பராயன், திரு. கே. - திருப்பூர்

97. சுப்பிரமணி என்கிற சி.சு. மணி, திரு. சி. - திருவள்ளூர்

98. சுப்பிரமணி, திரு .பி.என். - ஆற்காடு

99. சுப்பிரமணியன், திரு. அ.லெ. - திருநெல்வேலி

100. சுப்புலட்சுமி செகதீசன், திருமதி - மொடக்குறிச்சி

101. சுரேஷ் ராசன், திரு. என். - கன்னியாகுமரி

102. செங்குட்டுவன், புலவர் பூ.ம. - மருங்காபுரி

103. செங்கை சிவம், திரு. - பெரம்பூர் (செ.வ.)

104. செல்லக்குமார், டாக்டர் அ. - தியாகராய நகர்

105. செல்வம், திரு. ரெ. - குளித்தலை

106. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன், திரு. - கொளத்தூர் (செ.வ.)

107. செல்வராஜ், திரு. து. - உடுமலைப்பேட்டை
108. சேகரன், திரு. ஆர்.ஆர். - ஓமலூர்
109. சேதுநாதன், திரு. ரா. - திண்டிவனம்
110. சைதை கா. கிட்டு, திரு. - சைதாப்பேட்டை
111. சொக்கர், திரு. ஆர். - சிவகாசி
112. சொக்கலிங்கம், திரு. ஜி. - திருப்போரூர் (செ.வ.)
113. ஞானசேகரன், டாக்டர் ஆ. - மேல்மலையனூர்
114. ஞானசேகரன், திரு. சி. - வேலூர்
115. டேவிட் செல்வின், திரு. எஸ். - ஸ்ரீவைகுண்டம்
116. தங்கமணி, திரு. கே. - மானாமதுரை (செ.வ.)
117. தங்கம் தென்னரசு, திரு - அருப்புக்கோட்டை
118. தங்கவேலன், திரு. சுப. - கடலாடி
119. தங்கவேல், திரு. அ.ல. - சேலம்-2
120. தண்டபாணி, திரு. சி.டி. - கோயம்புத்தூர் மேற்கு
121. தமிழ்க்குடிமகன், முனைவர் மு. - இளையான்குடி
122. தமிழ்ச்செல்வன், திரு. ஆர். - அரக்கோணம் (செ.வ.)
123. தமிழ்மணி, திரு. வீ. - செங்கல்பட்டு
124. தளபதி, திரு. கோ. - சேடப்பட்டி
125. தனபாலன், திரு. கே.ஆர்.ஜி. - சேலம்-1
126. தனபால், திரு. வி.ஜி. - குடியாத்தம்
127. தாமரைக்கனி, திரு. இரா. - ஸ்ரீவில்லிபுத்தூர்
128. திசைவீரன், திரு. உ. - பரமக்குடி (செ.வ.)
129. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. - பேராவூரணி



130. திருவேங்கடம், திரு. பெ.சு. - கலசப்பாக்கம்
131. துரைசாமி, திரு. பா. - வரகூர் (செ.வ.)
132. துரை, திரு. கே. - திருவெறும்பூர்
133. துரைமுருகன், திரு. - காட்பாடி
134. தெய்வநாயகம், திரு. எ. - மதுரை மத்தி
135. தேவராஜன், டாக்டர் மு. - பெரம்பலூர் (செ.வ.)
136. நடராசன், திரு. ஆ - பேரூர்
137. நடராஜன், திரு. த. - செஞ்சி
138. நயினா முகமது, திரு. கோ. - கடையநல்லூர்
139. நன்னன், திரு. கொ.வீ. - செங்கம் (செ.வ.)
140. நாகரத்தினம், திரு. ச. - கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
141. நாசர், திரு. ஏ.வி.ஏ. - புவனகிரி
142. நாஞ்சில் கி. மனோகரன், திரு. - திருவல்லிக்கேணி
143. நிஜாமுதீன், திரு. ஜி. - நாகப்பட்டினம்
144. நேரு, திரு. கா.நா. - லால்குடி
145. பசும்பொன் தா. கிருட்டிணன், திரு. - சிவகங்கை
146. பத்மா, டாக்டர் - நன்னிலம் (செ.வ.)
147. பரணிகுமார், திரு. பா. - திருச்சிராப்பள்ளி-1
148. பரிதி இளம்வழுதி, திரு. - எழும்பூர் (செ.வ.)
149. பழனிசாமி, திரு. ஜி. - திருத்துறைப்பூண்டி (செ.வ.)
150. பழனிவேல் ராஜன், திரு. பி.டி.ஆர். - மதுரை மேற்கு
151. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. - குறிஞ்சிப்பாடி
152. பன்னீர்செல்வம், திரு. மு. - சீர்காழி (செ.வ.)

153. பாண்டுரங்கன், திரு. ந. - பெரணமல்லூர்
154. பாலகிருஷ்ணன், திரு. சோ. - முதுகுளத்தூர்
155. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.என். - பவானி
156. பாலசுப்பிரமணியன், திரு. ப. - பட்டுக்கோட்டை
157. பிச்சாண்டி, திரு. கு. - திருவண்ணாமலை
158. புகழேந்தி, திரு. இ. - கடலூர்
159. புரட்சிமணி, திரு. ச. - மங்களூர் (செ.வ.)
160. பூவேந்தன், திரு. த. - பழனி (செ.வ.)
161. பெரியசாமி, திரு. இ. - ஆத்தூர்
162. பெரியசாமி, திரு. என். - தூத்துக்குடி
163. பெரியசாமி, திரு. என்.கே.கே. - ஈரோடு
164. பெரியசாமி, திரு. நா. - பெருந்துறை
165. பெருமாள், திரு. வி. - ஏற்காடு (ஆவா.)
166. பெர்னார்டு, திரு. இரா. - குளச்சல்
167. பொங்கலூர் நா. பழனிசாமி, திரு. - சிங்காநல்லூர்
168. பொன்முடி, டாக்டர் க. - விழுப்புரம்
169. பொன்முடி, திரு. எஸ்.எஸ். - பல்லடம்
170. பொன்னம்மாள், திருமதி ஏ.எஸ். - நிலக்கோட்டை (செ.வ.)
171. மகேந்திரன், திரு. இரா. - நாட்ராம்பள்ளி
172. மணிக்கண்ணன், திரு. ஆ.செ. - திருநாவலூர்
173. மணி, டாக்டர் அ. - உளுந்தூர்பேட்டை (செ.வ.)
174. மணி, திரு. கோ.சி. - கும்பகோணம்
175. மணி, திரு. டி. - விளவங்கோடு



176. மணி, திரு. ஜி.கே. - பெண்ணாகரம்
177. மணி நாடார், திரு. எஸ்.எஸ். - சாத்தான்குளம்
178 மணிமாறன், திரு. இரா. - திண்டுக்கல்
179. மணிவர்மா, திரு. க. - தண்டராம்பட்டு
180 மதிவாணன், திரு. இரா. - இராயபுரம்
181. மதிவாணன், திரு. செ. - அச்சரப்பாக்கம் (செ.வ.)
182. மனோகரன், திரு. கு. - தருமபுரி
183. மாயவன், திரு. தி.ப. - ஸ்ரீரங்கம்
184. மாரி அய்யா, திரு. பே. - புதுக்கோட்டை
185. மாரிமுத்து, திரு. அ. - வானூர் (செ.வ.)
186. முகம்மது இஸ்மாயில், திரு. எஸ்.எஸ். - அரவக்குறிச்சி
187. முகம்மது கோதர் மைதீன், திரு. - பாளையங்கோட்டை
188. முத்து, திரு. வி. - சங்கரி (செ.வ.)
189. முத்துராமலிங்கம், திரு. ம. - திருமங்கலம்
190. முபாரக், திரு. பா.மு. - கூடலூர்
191. முருகேசன், திரு. பொ. - காஞ்சிபுரம்
192. முல்லைவேந்தன், திரு. வ. - மொரப்பூர்
193. முனிரத்தினம், திரு. ஆ.மு. - சோளிங்கர்
194. மூக்கப்பன், திரு. இரா. - சின்னசேலம்
195. மூக்கையா, திரு. எல். - பெரியகுளம்
196. மோகனதாசன், திரு. கோ. - பூம்புகார்
197. மோகன் கந்தசாமி, திரு. ப. - பொங்கலூர்

| | |
|---|---|
| 198. மோசஸ், டாக்டர் எம். | - நாகர்கோவில் |
| 199. ரங்கநாதன், திரு. எம். | - குன்னூர் (செ.வ.) |
| 200. ரங்கநாதன், திரு. ப. | - புரசைவாக்கம் |
| 201. ரவி அருணன், திரு. கே. | - தென்காசி |
| 202. ரவிசங்கர், திரு. கு. | - விளாத்திகுளம் |
| 203. ராசேந்திரன், திரு. ஏ. | - போளூர் |
| 204. ராணி, செல்வி க. | - தலைவாசல் (செ.வ.) |
| 205. ராமசாமி, திரு. ஏ.எம். | - ஆத்தூர் |
| 206. ராமச்சந்திரன், திரு. செ. | - திருப்பரங்குன்றம் |
| 207. ராஜு, திரு. எஸ். | - பொள்ளாச்சி |
| 208. ராஜேந்திரன், திரு. எஸ்.கே. | - சத்தியமங்கலம் |
| 209. ராஜ்குமார் மன்றாடியார், திரு. என்.எஸ். | - காங்கேயம் |
| 210. லட்சுமணன், திரு. வி.கே. | - கோயம்புத்தூர் கிழக்கு |
| 211. வல்லரசு, திரு. பி.என். | - உசிலம்பட்டி |
| 212. வாசுகி முருகேசன், திருமதி | - கரூர் |
| 213. விசுவநாதன், திரு. இரா. | - நத்தம் |
| 214. விஜயகுமார், திரு. கே.எம். | - சாத்தூர் |
| 215. விஜயன், திரு. டி.சி. | - திருவொற்றியூர் |
| 216. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. | - வீரபாண்டி |
| 217. வீரப்பன், திரு. கே.கே. | - கபிலர்மலை |
| 218. வெங்கடசாமி, திரு. பி. | - ஓசூர் |
| 219. வெங்கடாசலம், திரு. அ. | - ஆலங்குடி |



| | |
|---|---|
| 220. வெங்கடாசலம், திரு. ஜி.எல். | - பாலக்கோடு |
| 221. வெங்கடேசன், திரு. ச.க. | - மதுராந்தகம் |
| 222. வெங்கடேசன், திரு. பி.வி.எஸ். | - காவேரிப்பட்டினம் |
| 223. வெங்கிடு, திரு. ஜி.பி. | - கோபிச்செட்டிப் பாளையம் |
| 224. வேடம்மாள், திருமதி ஏ.ஆர். | - அரூர் (செ.வ.) |
| 225. வேதரத்தினம், திரு. எஸ்.கே. | - வேதாரண்யம் |
| 226. வேலாயுதன், திரு. சி. | - பத்மநாபபுரம் |
| 227. வேலுசாமி, திரு. வ. | - மதுரை கிழக்கு |
| 228. வேல்சாமி, திரு. க. | - நாமக்கல் (செ.வ.) |
| 229. வேல்துரை, திரு. பா. | - சேரன்மகாதேவி |
| 230. வைதியலிங்கம், திரு. மீ.அ. | - தாம்பரம் |
| 231. ஜெனிபர் சந்திரன், திருமதி எஸ். | - திருச்செந்தூர் |
| 232. ஜோதிகண்ணன், திரு. மு.ந. | - முசிறி |
| 233. ஸ்டாலின், திரு. மு.க. | - ஆயிரம் விளக்கு |
| 234. ஹேமச்சந்திரன், திரு. ஜே. | - திருவட்டாறு |
| 235. ஆன் டி' மான்டி, திருமதி | - நியமனம் |

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்

திரு. கே.வி. வெங்கடபதி - அரசு தலைமை வழக்கறிஞர்

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**பங்குனி 28, பிரமாதி - திருவள்ளுவர் ஆண்டு 2031**
**2000, ஏப்ரல் 10, திங்கட்கிழமை**

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** *அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு*
*மாடல்ல மற்றை யவை"*

*கல்வி ஒன்றே அழிவற்ற செல்வமாகும். அதற்கொப்பான சிறந்த செல்வம் வேறு எதுவும் இல்லை.*

### 1. வினாக்கள் - விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினாக்கள்-விடைகள். வினா எண் 261, திரு. சீ.வெ. கிருஷ்ணன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

**261—**

**மகளிர் காவல் நிலையம்**

***18086—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:**

*மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*ஒவ்வொரு ஒன்றியத்திலும் மகளிர் காவல் நிலையம் அமைக்கப்படுமா?*

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஒவ்வொரு ஒன்றியத்திலும் மகளிர் காவல் நிலையம் அமைப்பது குறித்த செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய வேடசந்தூர் தொகுதியில் கடைக்கோடியில் இருக்கிற ஐயம்பாளையம், முத்தகாபட்டி, லந்தக்கோட்டை ஆகிய இடங்களிலிருந்து திண்டுக்கல் தலைநகருக்குச் செல்வதற்கு 75 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டியிருப்பதால், வரதட்சணைக் கொடுமை போன்ற பல்வேறு வழக்குகளுக்கு, ஏழ்மை நிலையில் இருக்கின்ற பெண்கள் செல்ல முடியவில்லை. தொகுதியின் தலைநகரிலாவது ஒரு மகளிர் காவல் நிலையம் அமைக்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, நிதி ஆதாரம் இடம் கொடுத்தால், நிலைமைக்கு ஏற்றவாறு மாண்புமிகு உறுப்பினருடைய இந்தக் கருத்துப் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறையினர் வழக்குத் தொடுத்து, நீதிமன்றங்களிலே சாட்சிகளை அளிக்கக்கூடிய முறை அவ்வளவு திருப்திகரமாக இல்லாத காரணத்தால் பல வழக்குகளைப் பொறுத்தவரை, இப்போதெல்லாம் விடுதலையாகிவிடுகிற (acquittal) நிலைமை இருக்கிறது. ஆகவே, புலன் விசாரணை செய்யக்கூடிய அலுவலரும், அதேபோல, வழக்கை நடத்துகிற அலுவலரும் சட்டம் படித்த நபராக....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது துணை வினாவா? அதுவும் நீங்கள் ஒரு வழக்கறிஞர்.

**திரு. சி. ஞானசேகரன்:** வழக்கறிஞர்களுக்காகத்தான் கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதனால் துணை வினா எது வேண்டுமானாலும் கேட்கலாமா? மகளிர் காவல் நிலையத்தைப் பற்றித் துணை வினா கேளுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டம் படித்தவர்களை ஒவ்வொரு காவல் நிலையத்திலும்—ஆந்திரா போன்ற பகுதிகளிலே—இப்போது Prosecuting Inspector-ஆகப் போட்டிருக்கிறார்கள். அவர்களே புலன் விசாரணை செய்கிறார்கள்,





அவர்களே சாட்சிகளுக்குச் சரியாகச் சொல்லிக்கொடுத்து, பிறகு அவர்களை நீதிமன்றத்திலே கொண்டுபோய் நிறுத்துகிறார்கள். எனவே; வழக்குகள் எல்லாம் தண்டனையில் முடியக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, வழக்கறிஞர்களை Prosecuting Inspector-ஆக ஒவ்வொரு காவல் நிலையத்திலும் நியமிக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறதா என்று தங்கள் வாயிலாக மாண்புமிகு முதல்வர் அவர்களிடமிருந்து தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, வழக்கறிஞர்களைக் காவல் நிலையத்திலே வைக்கக்கூடிய யோசனை எதுவும் அரசுக்கு இல்லை. (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. குழந்தை தமிழரசன்.

**திரு. குழந்தை தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் எத்தனை மகளிர் காவல் நிலையங்கள் இயங்கி வருகின்றன? அவற்றில் எத்தனை மகளிர் காவலர்கள் பணிபுரிந்து வருகின்றனர்? அதேபோன்று, பல இடங்களில் மகளிர் காவல் நிலையங்கள் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கைகள் வந்துள்ளன. நான் கடந்த இரண்டு ஆண்டுகளாக விருத்தாசலத்திலே மகளிர் காவல் நிலையம் அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வேண்டி வருகிறேன். இந்த ஆண்டு முன்னுரிமை கொடுத்து விருத்தாசலத்திலே மகளிர் காவல் நிலையம் அமைக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, தமிழகத்திலே 58 மகளிர் காவல் நிலையங்கள் இருக்கின்றன. முன்னுரிமை கொடுத்து மகளிர் காவல் நிலையம் அமைக்க முடியுமா என்று கேட்டார். மகளிருக்குத்தான் முன்னுரிமை தரமுடியுமே அல்லாமல், காவல் நிலையங்களுக்கும் முன்னுரிமை தருவது இப்போது இயலாத காரியம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகளிர் காவல் நிலையங்களைப் பொறுத்தவரையில் முன்னாள் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆரம்பித்த திட்டங்களில் மிகச் சிறப்பான திட்டமாகும். அந்த மகளிர் காவல் நிலையங்கள் எல்லாம் இன்று சிறப்பான முறையிலே செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. முதல்வர் அவர்கள் பதில் உரையின்போது ஒன்றியத்திலே மகளிர் காவல்

நிலையங்கள் ஆரம்பிப்பதற்கு கருத்துரு இல்லை என்று கூறியிருக்கிறார்கள். ஆகவே, அந்த சிறந்த திட்டத்தை ஒவ்வொரு ஒன்றியத்திலேயும் ஆரம்பிக்கவில்லையென்றாலும், ஒவ்வொரு வட்டத்திலும், அல்லது ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியில் ஒன்றாவது அமைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 9-35*

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவைக்குத் தவறான தகவலைக் கொடுக்கிறார்கள். மகளிர் காவலர்கள் திட்டம், முன்பிருந்த முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா ஆட்சியிலேதான் தொடங்கப்பட்டது என்று சொன்னார். அது முற்றிலும் தவறு. முழுக்க முழுக்கத் தவறு. 5-9-1973 தேதியில்தான், அரசாணை நிலை எண் 2382, உள்துறை, நாள் 5-9-1973-ன்படிதான் இந்த மகளிர் காவலர்கள் தமிழகத்திலே நியமிக்கப்பட்டார்கள். அதற்குப் பிறகும்கூட, 1990 ஆம் ஆண்டு 79 காவலர்கள் தேர்வு செய்யப்பட்டார்கள். 1991 ஆம் ஆண்டு 389 பேர் தேர்வு செய்யப்பட்டார்கள். 1997 ஆம் ஆண்டு 3052 பேர் தேர்வு செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மற்றொன்று கேட்டார். ஒன்றியங்களிலே அமைக்க முடியாவிட்டாலும்கூட, சட்டமன்றத் தொகுதிகளிலாவது அமைக்க முடியுமா என்று கேட்டார்கள். தொகுதி வாரியாக அல்லது ஒன்றிய வாரியாக என்று இல்லாமல், தேவைப்படுகின்ற இடங்களில்தான் காவல் நிலையங்களை அமைக்க இயலும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் காஞ்சனா கமலநாதன்.

**டாக்டர் காஞ்சனா கமலநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாதிக்கப்பட்ட பெண்கள் தரப்பிலேயிருந்து இந்த மகளிர் காவல் நிலையங்களில் இதுவரை கொடுக்கப்பட்டுள்ள வழக்கு மனுக்கள் எத்தனை? அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதையும், நிலுவையில் இருக்கின்ற வழக்குகள் எத்தனை என்ற விவரங்களையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, எத்தனை வழக்குகள் இருக்கின்றன என்ற விவரம் என்னிடத்திலே இல்லை. ஆனால், எத்தகைய வழக்குகள் என்ற விவரத்தை வேண்டுமானால் தரலாம். இதைச் சொல்வதற்குக் காரணமே, இதை மகளிர் புரிந்து கொண்டு, எத்தகைய வழக்குகளுக்காகச் செல்ல வேண்டும் என்பதற்காக இதை விவரமாகச்



சொல்கின்றேன். வரதட்சணைக் கொடுமை, வரதட்சணைக் கொடுமையால் இறப்பு, திருமணத்திற்கு முன்போ அல்லது பின்போ வரதட்சணைக் கேட்டு, பெண்கள் அவதிப்படுதல், வரதட்சணையால் பெண்கள் தற்கொலைக்கு முயற்சி செய்தல், கணவனால் துன்புறுத்தப்படுதல், பெண்களைக் கடத்துதல், கற்பழிப்பு, பெண்களை மனம் மற்றும் உடல்ரீதியாகக் கொடுமைப்படுத்துதல், பெண்களை மானபங்கப்படுத்துதல், சிசுக்கொலை, 21 வயதிற்கு உட்பட்ட பெண்களை வியாபார நோக்குடன் வெளியிடங்களுக்கு அழைத்து வருதல், கட்டாயக் கருக்கலைப்பு, விபச்சாரத்திற்காகப் பெண்களை விற்பது மற்றும் வாங்குவது போன்ற செயல்கள், கணவனால் கைவிடப்பட்டால் ஜீவனாம்சம் கோருதல், பெண்கள் விபச்சாரம், மனைவி அல்லாத பிற பெண்களுடன் தொடர்பு கொள்ளுதல், பெற்றோர் மற்றும் இதர நபர்களால் குழந்தைகளை வைத்துப் பிச்சை எடுத்தல் மற்றும் குழந்தைகள் அநாதைகளாக விடப்படுதல், இருதார மணம், திருமணம் செய்து கொள்வதாகப் பழகி ஏமாற்றுதல், மகளிரை இழிவாகச் சித்தரித்தல் போன்ற வழக்குகள் மகளிர் காவல் நிலையங்களில் விசாரிக்கப்படுகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் எம். மோசஸ்.

**டாக்டர் எம். மோசஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகர்கோவில் தொகுதிக்கு உட்பட்ட செங்கம்புதூர் பகுதியில் ஒரு காவல் நிலையம் அமைத்துத் தரவேண்டுமென்று மூன்று ஆண்டுகளாக நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கேட்டுக் கொண்டிருக்கிறேன். இந்த ஆண்டாவது தருவார்களா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, கேள்வி மகளிர் காவல் நிலையத்தைப் பற்றியது. மாண்புமிகு உறுப்பினர் கேட்பது பொதுக் காவல் நிலையத்தைப் பற்றியது. அது பிறகு ஆலோசிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகளிர் காவல் நிலையத்தில் பணிபுரிகின்ற காவலர்கள் விசாரணைக்குச் செல்லும்போது, Law and Order-ல் உள்ள ஆண் காவலர்களையும் அவர்களுக்குப் பாதுகாப்பிற்காக அழைத்துச் செல்ல வேண்டியிருக்கிறது. இரவு 7 மணிக்கு மேலே அவர்கள் வீட்டிற்குப் போவதற்கும் Law and Order-ல் உள்ள காவலர்கள் பாதுகாப்பாகப் போகவேண்டியிருக்கிறது. ஆகவே, Law and Order-ல் உள்ள ஆண் காவலர்கள் அவர்களுக்குப்

பாதுகாப்பாகப் போவதற்குத் தடை விதிக்கப்படுமா? இந்த பெண் காவலர்களுடைய சீருடை ஒருமாதிரியாக இருக்கிறது. அதை வேறுமாதிரியான சீருடையாக மாற்றுவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுப்பதற்கு அரசு ஆவன செய்யுமா? அதேமாதிரி ஆண் காவலர்களுக்கும் சீருடை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா? தனியார் துறையினர் இந்தக் காவலர் உடையைப் பயன்படுத்துவதற்குத் தடை விதிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, ஆண் காவலர்கள், பெண் காவலர்களுக்குத் துணை போகிறார்கள்; பாதுகாப்பாகப் போகிறார்கள் என்பதெல்லாம் சரியான செய்தியாக எனக்குத் தெரியவில்லை. சீருடையைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். இதைப்பற்றி ஏற்கெனவே எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே இங்கே பிரச்சினை எழுப்பி, அந்த உடைகளை மாற்ற வேண்டுமென்று அவர் எடுத்துக்கூறி, அதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டது. எதிர்க்கட்சித் தலைவர், முதலமைச்சர், நம்முடைய அம்மையார் பொன்னம்மாள் ஆகியோர் அடங்கிய ஒரு குழு அமைக்கப்பட்டு, இரண்டொரு அதிகாரிகள் அந்தக் குழுவிலே இணைக்கப்பட்டு, அந்தக் குழு பணியைத் தொடங்குவதற்கு முன்பே, பெண் காவலர்கள், தாங்கள் இப்போது அணிந்திருக்கிற இந்த உடையேதான் தங்களுக்குச் சரியாக இருக்கிறது; இதை மாற்ற வேண்டாம் என்ற கோரிக்கை வைத்ததன் காரணமாக, அந்த முயற்சி கைவிடப்பட்டது.

*முற்பகல் 9-40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இறுதியாக, திருமதி ஆர். சரஸ்வதி.

**திருமதி ஆர். சரஸ்வதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகளிர் காவல் நிலையங்கள் எல்லாம் புதியதாகக் கட்டப்பட்டு சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. அங்கு பணிபுரியும் மகளிர் காவலர்கள், வெகு தொலைவில் இருந்து வருகிறார்கள். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், என்னுடைய தாராபுரம் நகரில் பணிபுரியும் மகளிர் காவலர்கள், ஈரோட்டிலிருந்து வருவதால், குறித்த நேரத்திற்குள் வர முடிவதில்லை. ஆதலால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், காவல் நிலையம் அருகிலேயே, குடியிருப்புக் கட்டித்தர ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக, காவலர்களுக்குக் குடியிருப்புகள் கட்டித் தரப்பட்டு வருகின்றன. அவற்றிலே, பெண் காவலர்களுக்கும் குடியிருப்புகள் கட்டித் தருகிற முயற்சி, அரசிடத்திலே உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 262, திரு. ப. பாலசுப்பிரமணியன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**262—**

**துணை மின் நிலையத்தை உயர்த்துதல்**

***16280—திரு. ப. பாலசுப்பிரமணியன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அதிராம்பட்டினம் துணை மின் நிலையத்தை 33 K.V. -லிருந்து, 66 K.V. -க்கு உயர்த்தும் செயற்குறிப்பு, அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது உயர்த்தப்படும்?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**திரு. ப. பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை தொகுதி, அதிராம்பட்டினம் பேரூராட்சியில், 1996 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இத்துணை மின் நிலையம், கிட்டத்தட்ட 7,000 இணைப்புகளைக் கொண்டிருக்கிறது. கடற்கரை ஓரமாக அமைந்திருக்கிற இந்தப் பேரூராட்சி, கிட்டத்தட்ட இருபதுக்கும் மேற்பட்ட கயிற்றுத் தொழிற்சாலைகள், இருபத்தைந்துக்கும் மேற்பட்ட இறால் பண்ணைகள் மற்றும் உப்புத் தொழிற்சாலைகள் எல்லாம் பெற்றிருக்கிற காரணத்தினாலும், நிலையத்தினுடைய மின்னழுத்தம் குறைவாக இருக்கிற காரணத்தினாலும், அதை 66 K.V. -ஆக மாற்றித்தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிராம்பட்டினம் 33/11 Kilo Volt ஆள் இல்லா துணை மின் நிலையத்தை, வழக்கமான துணை மின் நிலையமாக மாற்றி,

மின்மாற்றியின் திறனை 5 M.V.A.-லே இருந்து, 8 M.V.A.-வாக உயர்த்தும் செயற்குறிப்பு, ஒப்புதல் அளிககக்கூடிய நிலையில் உள்ளது. எனவே, அந்தத் திறனை உயர்த்தியதற்குப் பிறகு, அங்கே மாண்புமிகு உறுப்பினர் சொன்ன குறைபாடு இருக்காது. எனவே, துணை மின் நிலையத்தினுடைய அளவை 66 Kilo Volt-ஆக உயர்த்த வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எம்.எம்.எஸ். அபுல்ஹசன்.

**திரு. எம்.எம்.எஸ். அபுல்ஹசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சாரம் ஒவ்வொரு நாளும், "இந்த நேரம்தான் நிற்கும்; இத்தனை மணி நேரம் வேலை செய்யாது" என்று சொல்லியிருந்தாலும்கூட, எந்த நேரம் அது போகிறது என்று சொல்ல முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. அதைக் குறிப்பிட்ட நேரத்திலே செய்து கொடுக்க, அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புவதோடு, அதிராம்பட்டினம் மின் நிலையத்தைப் பற்றி அமைச்சர் அவர்கள் இப்போது திட்டத்திலே இல்லை என்று சொன்னார்கள்; அங்கு கயிற்றுத் தொழிற்சாலைகள் அதிகமாக இருப்பதால் பத்தாயிரக்கணக்கான பேர்கள் வேலை செய்து வருகிறார்கள். அங்கு மின்சாரம் நின்றவுடன், அவர்களால் அங்கு வேலை செய்ய முடியவில்லை. அதனால், அந்தக் கயிற்றுத் தொழிற்சாலைகளுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. ஆகையினால், இந்த 33 என்ற அளவை, 66 என்ற அளவாக மாற்றிக் கொடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சாரத்தைப் பொறுத்தவரையில், விவசாயிகளுக்கு பகலிலே 4 மணி நேரம் மின்சாரம் கொடுக்க, 3 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, எந்தெந்த மண்டலங்களுக்கு காலை 6 மணியிலேயிருந்து 10 மணி வரைக்கும், 10 மணியிலேயிருந்து 2 மணி வரைக்கும், 2 மணியிலேயிருந்து மாலை 6 மணி வரைக்கும் வழங்கப்படும் என்பது பத்திரிகைகள் வாயிலாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதிலே இப்போது அதிகமான குறைகள் இல்லை. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப்போல, அவருடைய பகுதியிலே அந்தக் குறை இருக்குமேயானால், உரிய நடவடிக்கை எடுக்கப்படும். அதிராம்பட்டினத்திலே 33/11 Kilo Volt ஆள் இல்லாத் துணை மின் நிலையத்தை, 66 Kilo Volt துணை மின் நிலையமாக மாற்ற முடியாது என்று சொன்னேனே தவிர, அந்த மின்மாற்றியினுடைய திறனை, 5 M.V.A. விலேயிருந்து, 8 M.V.A.-ஆக உயர்த்துவதற்கான செயற்குறிப்பு, ஒப்புதல் அளிக்கப்படுகின்ற சூழ்நிலையில் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறேன். அந்தத் திறன் அதிகபபடுத்தப்பட்டால், அந்தக் குறைபாடுகள் அந்தப் பகுதியிலே இருக்காது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மீ.அ. வைதியலிங்கம்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எத்தனை துணை மின் நிலையங்கள், துறையால் அனுமதிக்கப்பட்டு, அரசு நிலமாற்றம் செய்யாததன் காரணமாக, நிதியாதாரம் ஒதுக்கப்பட்டும்கூட, நடைபெறாமல் இருக்கின்றன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 9-45*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆட்சி 1996 ஆம் ஆண்டு பொறுப்பேற்றுக்கொண்டபோது, ஏறக்குறைய 250 இடங்களிலே துணை மின்நிலையம் அமைக்கவேண்டிய ஒரு கட்டாயம் இருந்தது. எனவே, இந்த அரசாங்கம், இதற்கு முன்பிருந்த அரசாங்கத்தில் ஒரு ஆண்டுக்கு 40 துணை மின்நிலையங்களைக் கட்டுவது என்றிருந்த நிலையை மாற்றி, 60 துணை மின் நிலையங்களை ஒவ்வொரு ஆண்டும் கட்டவேண்டுமென்று முடிவெடுத்து, முதலமைச்சர் அவர்களும் அதற்கான நிதியையும் ஒதுக்கித்தந்து, இந்த நான்கு ஆண்டுகளிலே ஏறக்குறைய இருநூறுக்கு மேற்பட்ட துணை மின்நிலையங்கள் கட்டி முடிக்கப்பட்டு, இன்றையதினம் செயல்பட்டு வருகின்றன. எங்கேயாவது துணை மின்நிலையங்கள் கட்டுவதற்கு இடம் கிடைக்காத காரணத்தினாலே, அந்தப் பணி தடைப்பட்டிருக்கிறதா என்று கேட்டார்கள். இரண்டு இடங்களிலே அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை இருக்கிறது. வேறு இடம் பார்ப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மின்சாரம் கொடுப்பதிலே-இப்போது உண்மையிலேயே நேற்றையதினம் நாங்கள் எல்லாம் மிகவும் சிரமத்தை அடைந்தோம். காரணம், "என்னப்பா கரும்புக்குத் தண்ணீர் பாய்ச்சியாகிவிட்டதா current சரியாக வருகிறதா" என்று கேட்டால், மின்சாரமே வரவில்லை. current-ஐ எடுத்துவிடுகிறோம்; மோட்டார் ஓடுகிறது; உடனே நின்று விடுகிறது; பதினொரு தடவை அந்த மாதிரி ஆகி, பிறகு அரை வயல்கூட பாயமுடியாத ஒரு நிலைமை இருக்கிறது' என்று சொல்கிறார்கள்.

அப்படிப்பட்ட ஒரு நிலைமை ஏற்படுமேயானால், திடீரென்று அந்த மின் motor burn ஆகிவிடுகின்றது. அப்படி burn ஆனபின் wiring செய்யவேண்டுமென்றால், அதற்கு, புது motor வாங்குவதற்கு எந்த அளவு பணம் செலவாகுமோ, அந்த அளவுக்குச் செலவாகின்றது. ஆகையினாலே, இந்தக் காலக்கெடுவை அதாவது மின்சாரம் வழங்குவதை நிறுத்தாத அளவுக்கு விவசாயிகளுக்கு 4 மணி நேரமோ, 6 மணி நேரமோ நாம் தடையில்லாமல் கொடுப்பதற்கான ஒரு சூழ்நிலையை உருவாக்க முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப்போல, அவருடைய பகுதியிலே மின்சாரத் தடை இருக்குமானால், அதைப் போக்குவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும். அப்படித் தடை ஏற்படுகின்ற காரணத்தினாலே, விவசாயிகளுக்கு coil எரிந்து விடுகிறது, அதைக் கட்டவேண்டுமென்றால், புதிய motor வாங்கக்கூடிய அளவிற்குச் செலவாகிறது என்று சொன்னார்கள். அக்கா அவர்களை அப்படி யாராவது ஏமாற்றியிருந்தால், அது தவறு. புது motor வாங்குவதற்கு பத்தாயிரம் ரூபாய் செலவாகும்; coil கட்டுவதற்கு ஆயிரம் ரூபாய் செலவாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லி. அய்யலுசாமி.

**திரு. லி. அய்யலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே விவசாயிகளுக்கு பகலிலே நான்கு மணி நேரம் மின்சாரம் கொடுக்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். எங்கள் பகுதி தூத்துக்குடி மாவட்டத்தில், கோவில்பட்டி, எட்டையபுரம், கழிஞ்சிபுரம் area முழுவதும் நான்கு மணி நேரம் முழுவதும் மின்சாரம் கிடைப்பது இல்லை. ஆகவே, இரண்டு தடவை அரை அரை மணி நேரம் நிறுத்தி விடுகிறார்கள். என்ன என்று மின்சாரத் துறை மூலம் தொடர்பு கொண்டு கேட்டால், 'அங்கே எப்போதும்வென்றானிலிருந்து மின்சாரம் வரவில்லை; ஆகவே நின்று விடுகிறது, மின் அழுத்தம் குறையும்போது தானாகவே நின்றுவிடுகிறது' என்று சொல்கிறார்கள். அந்த மின் அழுத்தம் குறையாமல், அதைத் தரமான மின் அழுத்தமாகக் கொடுப்பதற்கு அந்தப் பகுதியில் ஏற்பாடு செய்ய அமைச்சர் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி அனல் மின் நிலையத்திலே இருந்து



நாள் ஒன்றுக்கு ஆயிரம் mega watt மின்சாரம் உற்பத்தியாகிக் கொண்டிருக்கிறது. கோவில்பட்டிக்கு தூத்துக்குடியிலிருந்துதான் மின்சாரத்தை நாம் வழங்கிக்கொண்டிருக்கிறோம். அங்கே மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப்போல குறைபாடுகள் இருப்பதாக என்னுடைய கவனத்திற்கு இதுவரையிலே யாரும் கொண்டுவரவில்லை. இருந்தாலும், தூத்துக்குடியினுடைய தலைமைப் பொறியாளரோடு தொடர்புகொண்டு, இதுகுறித்து விசாரித்து, உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா.மு. முபாரக்.

**திரு. பா.மு. முபாரக்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 20-3-2000 அன்று நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் Parson Valley புதிய மின்நிலையத் திறப்பு விழாவுக்காக நீலகிரிக்கு வருகை தந்தபோது, கூடலூர் தொகுதியில், 110 kilo volt மின்நிலையம் அமைப்பதற்கு இடம் கிடைக்காதது குறித்து அவரிடத்திலே சொல்லப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், துறையினருக்கும் ஒரு வாரம், பத்து நாட்களுக்குள் அதை நிறைவு செய்து எனக்குத் தகவல் தரவேண்டுமென்று அமைச்சர் அவர்கள் அங்கேயே உத்தரவு போட்டுவிட்டு வந்தார்கள். அதனால் அந்த மாவட்ட மக்கள் பெரிதும் அந்தப் பத்திரிகைச் செய்தியைப் பார்த்து, மகிழ்ந்து, மகிழ்ச்சியில் இருக்கிறார்கள். அமைச்சருடைய உத்தரவை ஏற்று நில ஒதுக்கீடு குறித்து ஏதாவது தகவல் வந்திருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-50

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொறடா அவர்கள் நான் அதிகாரிகளோடு பேசும்போது என்னோடுதான் இருந்தார். அங்கே, மாவட்ட ஆட்சித் தலைவரும் அதற்கான முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறார். கோவையிலே இருக்கக்கூடிய, தலைமைப் பொறியாளரும், இடத்தைத் தேர்வு செய்து, உடனடியாக, இந்த ஆண்டு டிசம்பருக்குள்ளாக, 110 kilo volt துணைமின் நிலையம் அமைப்பதற்கு ஏற்கெனவே மின்சார வாரியம் ஒப்புதலும் அளித்து, நிதியும் ஒதுக்கி இருக்கிற காரணத்தால், அதைக்கட்டி முடிக்க அவர்கள் உத்தரவாதம் தந்திருக்கிறார்கள். எனவே மாண்புமிகு உறுப்பினருடைய அந்தக் கோரிக்கை இந்த ஆண்டு டிசம்பருக்குள்ளாக நிச்சயம் முடிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறைந்த மின் அழுத்தம் என்பது ஒரு பெரிய பிரச்சினையாக, தமிழ்நாட்டிலே இருந்து வருகிறது. இந்தக் குறைந்த மின் அழுத்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு, தமிழ்நாட்டில் எத்தனை துணை மின் நிலையங்களை அமைக்க வேண்டியிருக்கும்? அப்படி அமைக்க வேண்டிய துணை மின்நிலையங்கள் பற்றிய மதிப்பீட்டும், அத்தகைய மதிப்பீடு செய்யப்பட்ட துணை மின் நிலையங்கள் எந்தக் காலவரையறைக்குள் அமைக்கப்படும் என்பதுபற்றியும் ஏதாவது மதிப்பீடு மாநில அரசிற்கு இருக்கிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1996-ஆம் ஆண்டு, இந்த அரசு பொறுப்பேற்றவுடனே, அதைப்பற்றி மதிப்பீடு செய்தோம். தமிழ்நாட்டிலே 300 இடங்களிலே, குறைவான மின் அழுத்தம இருப்பதாக, அன்றையதினம் அறிக்கை தரப்பட்டது. அந்த அறிக்கையை வைத்துக்கொண்டுதான், 5 ஆண்டு காலத்திற்குள்ளாக, அந்த 300 இடங்களிலேயும், துணை மின் நிலையம் கட்டி முடிக்க வேண்டும் என்று திட்டமிட்டோம். இப்போது ஏறக்குறைய 200-க்கு மேற்பட்ட துணை மின் நிலையங்கள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. 20,25 துணை மின் நிலையங்கள் இன்னும் ஓரிரு மாதங்களிலே, கட்டி முடிக்கக்கூடிய சூழ்நிலையில் இருக்கின்றன. இருந்தாலும், 2001-ஜுன் மாதத்திற்குள்ளாக, தமிழ்நாட்டிலே மின் அழுத்தம் குறைவாக இருக்கக்கூடிய பகுதிகளே இல்லை என்று சொல்லக்கூடிய அளவிற்கு அனைத்து இடங்களிலும், துணை மின் நிலையங்கள் கட்டி முடிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 263, திரு. ஏ. கோதண்டம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**263—**

### ஆரம்ப சுகாதார நிலையம்

**•22787—திரு. ஏ. கோதண்டம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பெரும்புதூர் வட்டம், சோமங்கலம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை 24 மணி நேரமும் இயக்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?





**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) திருப்பெரும்புதூர் வட்டம், சோமங்கலம் ஆரம்ப சுகாதார நிலையம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையமாகும். அரசின் கொள்கை முடிவின்படியும் அரசாணை, நிலை எண் 400, சுகாதாரம், நாள் 29-8-1996ன்படியும், வட்டார அளவிலான முதன்மை ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் சமுதாய நல மையங்கள் மட்டுமே 24 மணி நேர மையங்களாக மாற்றப்படுகின்றன. சோமங்கலத்திலுள்ள ஆரம்ப சுகாதார நிலையம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையமாக உள்ளதாலும், இந்த நிலையத்தால் பயன்பெறும் புறநோயாளிகளுடைய எண்ணிக்கை சராசரியாக நாள் ஒன்றுக்கு 81 மட்டுமே என்று இருப்பதாலும், இந்த நிலையத்தை 24 மணி நேர மையமாக மாற்றும் சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**திரு. ஏ. கோதண்டம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பெரும்புதூர் வட்டம், சோமங்கலம் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் உள்ளது. அதைச் சுற்றியுள்ள 20-க்கு மேற்பட்ட கிராமங்களில், மக்கள் சிகிச்சைக்கு வசதி இல்லாமல், அவசரமாகச் செல்லவேண்டுமென்றால், வாகனப் போக்குவரத்து வசதி இல்லாமல், திருப்பெரும்புதூருக்கும், குரோம்பேட்டைக்கும் செல்ல வேண்டும். மேலும், அங்கு கல்குவாரிகளில் பணியாற்றுகின்ற தொழிலாளர்கள் இருக்கின்றார்கள். அதனால்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாவைச் சுருக்கமாக கேட்க வேண்டும். ஓர் உரைபோல நிகழ்த்தக்கூடாது.

**திரு. ஏ. கோதண்டம்:** அதனால், அதனை, 24 மணி நேர மருத்துவமனையாக ஆக்க முடியுமா, மாற்ற முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய தொகுதியான திருப்பெரும்புதூர் தொகுதியில், பல மருத்துவமனைகள் இருக்கின்றன. அவர் சொல்வதைப்போல திருப்பெரும்புதூரிலேயும் ஒரு வட்ட மருத்துவமனை இருக்கிறது. அங்கே இருக்கக்கூடிய மருத்துவமனைகளுக்கு போதுமான நோயாளிகள் இல்லையென்பதுதான் அரசுக்குக் கிடைத்திருக்கின்ற தகவல். எனவே, இப்போதைக்கு அங்கே 24 மணி நேர மருத்துவமனையாக மாற்றுவதற்கு வாய்ப்புகள் நிச்சயமாக இல்லை.

[2000 ஏப்ரல் 10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 264, திரு. நா. பெரியசாமி, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**264—**

**நில ஒதுக்கீடு**

***27983—திரு. நா. பெரியசாமி:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெருந்துறை வட்டம், காசிப்பில்லாம்பாளையம் பால் உற்பத்தியாளர் சங்க அலுவலகக் கட்டட வசதிக்காக, நில ஒதுக்கீடு கேட்டு முறையீடு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு அதன் மீது எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) வரப்பெறவில்லை.

(ஆ) இக்கேள்வி எழாது.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வினாவில் குறிப்பிட்டிருக்கிற பால் உற்பத்தியாளர்கள் சங்கம், 1988ஆம் ஆண்டு சொந்தமாக தனி நபரிடத்திலே நேரடி கிரயம் மூலமாக இடம் வாங்கி இருக்கிறது. அதற்குப்பின், அரசின் திட்டமாக அமைந்த தொழில் வளர்ச்சி மையத்தில் அந்த இடம் கையப்படுத்தப்பட்டுவிட்டது. அதற்குப் பிறகு, அந்தச் சங்கத்திற்கு அலுவலகம் இல்லை. அந்தத் தொழில் வளர்ச்சி மையத்திலேயே, ஒரு குறைந்தபட்ச இடத்தை, அந்தச் சங்கக் கட்டடத்திற்குள்ளாக வழங்குவதற்கு வருவாய்த் துறை நிருவாகம் ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-55

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து ஈரோடு மாவட்ட வருவாய் அலுவலர் தமது அறிக்கையில், மேற்படி பால் உற்பத்தியாளர் சங்க அலுவலகக்



2000 ஏப்ரல் 10]

கட்டட வசதிக்காக நில ஒதுக்கீடு கோரி முறையீடு எதுவும் வரப்பெறவில்லை என்று தெரிவித்துள்ளார். எனவே, நில ஒதுக்கீடு கோரி மனு கொடுத்தால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் இன்னொன்றையும் கேட்டு இருக்கிறார். காசிப்பில்லாம்பாளையம் பால் உற்பத்தியாளர் சங்க அலுவலகத்திற்கா[illegible] வாங்கிய இடம் சிப்காட் மூலம் அமைக்கப்படும் தொழில் வளர்[illegible] மையத்திற்கு சாலை வசதி செய்துகொள்ள பயன்படுத்தி[illegible] கொள்ளப்பட்டுள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு சிப்காட் வளாகத்தில் பால் உற்பத்தியாளர் சங்க அலுவலகம் அமைய இடம் ஒதுக்கித்தர ஆவன செய்யப்படுமா என்று கேட்டு இருக்கிறார். பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி சுப்புலட்சுமி செகதீசன்.

**திருமதி சுப்புலட்சுமி செகதீசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்தில் இதைப்போன்று கூட்டுறவு அமைப்புகளுக்கு அரசாங்கத்தினுடைய நிலம் வேண்டுமென்று கேட்டால், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களே அதற்கான பட்டா வழங்கலாம் என்று தமிழக அரசு இந்தச் சட்டத்தை எளிமைப்படுத்தித் தந்து இருக்கிறார்கள். இந்தச் சட்டம் வருவதற்கு முன்பாக பல்வேறு சங்கங்களில் நிலம் கேட்டு அந்தக் கோப்பு, இங்கு இருக்கக்கூடிய நில நிர்வாக ஆணையாளர் அவர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. இப்போது மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களே, இதைப் பரிசீலிக்கலாம் என்ற நிலை வந்துவிட்ட பிறகு, இன்னும் அந்தக் கோப்புகள் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு வந்து சேரவில்லை. உடனடியாக அப்படிப்பட்ட கோப்புகள் மீண்டும் மாவட்ட ஆட்சித் தலைவருக்கே அனுப்பி வைக்கப்பட்டு, கூட்டுறவுச் சங்கங்களுக்கு இடம் ஒதுக்கீடு செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லாம் முடிந்து போய்விட்டது என்று எண்ணி நான் உட்கார்ந்தேன். திரும்ப இப்படி ஒரு திடுக்கிடும் தகவல் கிடைக்கும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 265, திரு. ஆர். சிவானந்தம், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

[2000 ஏப்ரல் 10

**265**

**சாக்கடை சீரமைப்பு**

***18930—திரு. ஆர். சிவானந்தம்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி நகரில், பீகுட்டை என்ற இடத்தில் சாக்கடைச் சீரமைப்புப் பணி மேற்கொள்ள ஆரணி நகராட்சிக்குப் போதிய மானியம் அளிக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆரணி நகரம், பீகுட்டை என்ற இடத்தில் சாக்கடைச் சீரமைப்புப் பணி மேற்கொள்ள மானியம் அளிக்கும் செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. ஆர். சிவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இந்தக் குட்டை ஆரணியின் மைய நகரத்திலே அமைந்து இருக்கிறது. நகராட்சியினுடைய கழிவுநீர் பெரும் பகுதியாக இந்தக் குட்டையிலே விடப்படுகிறது. இதனால் இந்தப் பகுதியில் பெரிய சுகாதார கேடு ஏற்படுவதோடு, நிலத்தடி நீர் பாதிக்கப்பட்டு, குடிப்பதற்கான குடிநீர் எல்லாம் சீர்கெட்டு வருகிறது. எனவே, பிற்காலத்தில் ஏற்படுகின்ற கோடிக்கணக்கான செலவுகளைத் தவிர்க்கவாவது, இதனை மறுபரிசீலனை செய்து இந்த நிதியை வழங்க அரசு பரிசீலிக்குமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரணிக்கு அருகில் உள்ள திருமலை சமுத்திரம் ஏரி நிரம்பி வழிந்து பாரதியார் தெரு, தாது தெரு, புளியங்குளம் பகுதிகள், அலிகான் தெரு, ராஜா தெரு வழியே வெள்ளம் வந்து பீகுட்டையில் சேருகிறது. பீகுட்டை நிரம்பி அங்கிருந்து பையூர் ஏரிக்கு நீர் போய்ச் சேருகிறது. மழைக்காலங்களில் மழை அதிகமாகிவிட்டால் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுவது உண்மைதான். இருந்தாலும் இதனைச் சீர்செய்ய வேண்டுமானால், அங்கே பீகுட்டை வரை கால்வாய் அமைக்க மதிப்பீடும் தயார் செய்து, அதை நிறைவேற்றலாம் என்ற எண்ணத்தில் நகராட்சி இருந்தாலும், போதிய நிதி வசதி இல்லாத காரணத்தினாலும், அப்படிப்பட்ட நிலையைச் சரி செய்வதற்கு பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான கால்வாயின் வழியில் அதனைத் தூர் வாரிப் புதுப்பித்து விடலாம் என்ற முடிவும் எடுத்து, அதற்கிடையில் ஒரு தனியாருடைய நிலம் இருக்கிற காரணத்தினாலும், அதிலேயும் அந்த வாய்க்கால் வருவதற்கு அவர்களிடத்திலே அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று நகராட்சிமன்ற ஆணையர் தெரிவித்த கருத்தைத்தான் நான் குறிப்பிட்டு இருக்கிறேன். அதற்கு ரூ.40 இலட்சம் நிதி தேவை என்றும், பொதுப் பணித் துறையில் அதைப்போன்று செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளலாம் என்றும் மாவட்ட ஆட்சியர் மூலம் 21-3-2000-ல் கடிதம் எழுதப்பட்டிருக்கிறது. அந்த விவரம் தெரிந்தபிறகு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.



2000 ஏப்ரல் 10]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 266, டாக்டர் மு. தேவராஜன், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**266—**

**பேருந்து நிலையம்**

***25889—டாக்டர் மு. தேவராஜன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரம்பலூர் தொகுதி, பெரம்பலூரில் உள்ள புதிய பேருந்து நிலையத்தை மாற்றி தேசிய நெடுஞ்சாலையில் அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இப்பேருந்து நிலையத்தை மாற்றியமைக்க போதிய சாத்தியக்கூறுகள் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் மு. தேவராஜன், இருக்கையில் இல்லை.

**வினா எண் 267,** திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

[2000 ஏப்ரல் 10

முற்பகல் 10-00

**267—**

### சொட்டு நீர்ப்பாசனம்

***22081—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதியிலுள்ள தென்னை விவசாயிகளுக்கு சொட்டு நீர்ப்பாசனம் செய்வதில் முன்னுரிமை வழங்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தென்னை சாகுபடிக்கு என்று தனியே முன்னுரிமைத் திட்டம் ஏதும் தற்போது நடைமுறையில் இல்லை. எனினும், மத்திய அரசின் ஒத்துழைப்புடன் செயல்படுத்தப்படும் திட்டத்தின்கீழ் மானிய அடிப்படையில் சொட்டு நீர்ப்பாசனம் தோட்டக்கலைப் பயிர்களில் அடங்கிய தென்னைப் பயிருக்கு அமைத்துத்தரும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மாவட்ட தேவைக்கேற்ப மற்றும் சொட்டு நீர்ப்பாசனம் அமைக்க சாத்தியக்கூறுகளுக்கேற்ப மானியத் தொகை மாவட்டவாரியாக ஒவ்வொரு வருடமும் அளிக்கப்படுகிறது.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேராவூரணி தொகுதியிலே அதிகமான அளவிலே தென்னை உற்பத்தி செய்யப்படுகின்றது. முற்றிலும் அந்தப் பகுதியிலே ஆழ்குழாய்க் கிணறுகளை நம்பி பாசனம் செய்யப்படுவதால், அங்கே குறைந்த பரப்பளவிலே பாசனம் செய்யப்படுகிறது. ஆனால், சொட்டு நீர்ப்பாசன முறையிலே அதிகமான அளவிலே பாசனம் செய்யப்படுவதால், அந்தப் பகுதியிலே இருக்கின்ற தென்னை விவசாயத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கின்ற வகையிலே தென்னை உற்பத்தியைப் பெருக்குகின்ற வகையிலே அந்தப் பகுதிக்கு சொட்டு நீர்ப்பாசனத்திற்கு முக்கியத்துவமும், முன்னுரிமையும் கொடுத்து, இன்னும் அதிகமான அளவிலே மானியம் வழங்க அமைச்சர் ஆவன செய்வாரா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.



2000 ஏப்ரல் 10]

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாவட்டத்தினுடைய தேவையை அறிந்து, அந்தத் தேவையின் அடிப்படையில் மத்திய அரசாங்கம் ஒதுக்கீடு செய்யக்கூடிய நிதியைப் பகிர்ந்து அளித்து, இந்த சொட்டு நீர்ப்பாசன முறை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. அந்த அடிப்படையிலே, தஞ்சாவூர் மாவட்டத்தில் 19,183 ஹெக்டேர் பரப்பில் தென்னை பயிரிடப்படுகிறது. நாகப்பட்டினம் மாவட்டத்தில் 13,944 ஹெக்டேர் பரப்பில் தென்னை பயிரிடப்பட்டு வருகிறது. ஆகவே, இப்போதும் அங்கு சொட்டு நீர்ப்பாசனத்திற்காக 1998-99வது ஆண்டு ரூ.10.24 இலட்சம் செலவிடப்பட்டது. இதில் மகளிருக்காக 17 யூனிட்டுகளும், ஆதிதிராவிடருக்காக 1 யூனிட்டும், மற்றவர்களுக்காக 5 யூனிட்டும், ஆக, 23 சொட்டு நீர்ப்பாசன யூனிட்டுகள் அமைக்கப்பட்டுள்ளன. தேவை இன்னும் இருக்குமானால், மாண்புமிகு உறுப்பினர்களுடைய கோரிக்கையை அடிப்படையாகக் கொண்டு நிதி கூடுதலாக ஒதுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ம. சண்முகம்.

**திரு. ம. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொள்ளாச்சி பகுதி மக்கள் மட்டுமல்லாமல், தமிழ்நாட்டில் தென்னை விவசாயிகளுக்குப் பயன்படுகிற வகையில் தமிழ்நாடு தென்னை மேம்பாட்டுக் குழுமம் அமைத்து எங்களுக்கெல்லாம் பயன் கிடைக்க வழிவகை செய்தீர்கள். அதேபோல, பொள்ளாச்சியிலும், பட்டுக்கோட்டையிலும் தென்னைக்கு வணிக வளாகம் அமைப்பதற்கான உத்தரவைப் பிறப்பித்திருக்கிறீர்கள். அதேபோல, தென்னை மரங்களுக்கு எங்கள் பகுதியிலே, Eriophyid mite என்ற நோய் பாதித்து விலை வீழ்ச்சி அடைந்த இந்த நேரத்திலே கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக இன்றைய தினம் கிலோ 1-க்கு 31 ரூபாய் ஆதார விலை அறிவித்து, கொள்முதல் செய்து கொண்டிருக்கிறார்கள். ஒட்டுமொத்தமாக இத்தனை காரியங்களுக்கும் எங்களுடைய பகுதி விவசாயிகள் சார்பாக இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். சொட்டு நீர்ப் பாசன விவசாயிகளுக்கு சொட்டு நீர் மானியம் கிடைக்காமல், 2,3 ஆண்டுகள் வரை தாமதம் ஆகிறது. அவற்றை நிறைவேற்றுவதற்கு கோவை மாவட்ட விவசாயிகளுக்கு முன்னுரிமை கொடுத்து சொட்டு நீர்ப்பாசனம் அமைக்க அரசு மானியம் வழங்குமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

[2000 ஏப்ரல் 10

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சொட்டு நீர்ப்பாசன மானியத்தை அதிகமாகப் பயன்படுத்திக்கொள்ளக்கூடியவர்கள் கோவை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகை மாவட்டத்தில், கடலோரப் பகுதியிலே தென்னை சாகுபடி செய்பவர்கள், சொட்டு நீர்ப்பாசனத்திற்கான வசதியைப் பயன்படுத்த முடிவதில்லை. காரணம், அந்தச் சொட்டு நீர் வரக்கூடிய வழியிலே, உப்பு கலந்த நீராக இருப்பதால், salt content படிந்து, வாயை அடைத்து விடுகின்றது. அதனால், அது முறையாக வெற்றிகரமாக அமையவில்லை. மாற்று ஏற்பாடாக ஏதாவது செய்ய அரசு முன்வருமா அல்லது அதற்கு வேறு ஏற்பாடுகள் செய்வதற்கு ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்வது உண்மைதான். உப்பு, அந்தக் குழாயின் வழியாக செல்கிறபோது, அது பிறகு அடைத்துக் கொள்கின்றது. அதற்கு வேறு மாற்று வழிகள் என்ன என்பதைத் துறை ஆராய்ந்து கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தென்னை விவசாயிக்கு சொட்டு நீர்ப்பாசனம் போட்டுக்கூட, திண்டுக்கல், மதுரை மாவட்டங்களில் மழை இல்லாத காரணத்தினாலே, பல மரங்கள் பட்டுப் போய்விட்டன. பல மரங்கள் பட்டுப்போய்விட்ட காரணத்தினாலே, நாங்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் சொன்னபோது, அவர்கள் உடனடியாக நேரிடையாக வந்து பார்வையிட்டு, நல்லமுறையிலே சொட்டு நீர்ப்பாசனம் செய்ய உதவி செய்தார்கள். இருந்தாலும்கூட, பல நல்ல காய் கொடுத்த மரங்கள் பட்டுப்போய்விட்ட காரணத்தினாலே, அதை மீண்டும் வாங்கிப் போடுவதற்கு முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிற காரணத்தினாலே எந்தெந்தப் பகுதிகள் மழையினால் பாதிக்கப்பட்டனவோ அல்லது தண்ணீர் வரத்துப் பற்றாமல் பாதிக்கப்பட்டனவோ அந்தப் பகுதிகளின் மரங்களுக்கெல்லாம், பட்டுப்போன மரங்களுக்கெல்லாம் அரசாங்கம் நல்ல தரமான அதிக மகசூல் கொடுக்கக்கூடிய கன்றுகளை மானியத்தில் கொடுக்கும் சூழ்நிலையை உருவாக்க முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.



2000 ஏப்ரல் 10]

*முற்பகல் 10-05*

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக ஒரு ஹெக்டேரில் தென்னை பயிரிடுவதாக இருந்தால் மானியமாக ரூ.3,000 கேரளாவில் இருக்கின்ற தென்னை வாரியத்தின் மூலம் பெற்றுத் தரப்படுகிறது. மரம் பட்டுவிட்டால், நோய் தாக்கி காய்ந்துபோய் விட்டால் அதற்கு replacement செய்வதற்கு ரூ.200/- வரை நாம் உதவி செய்கின்றோம். அதுபோல பட்டுப்போன தென்னை மரத்தை எடுத்துவிட்டு புதிய கன்று வைப்பதற்கு ரூ.5/- மானியம் நாம் தருகிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதை அறியாமல் இருந்தால், இப்போது அந்த மாவட்டத்தில் இருக்கக்கூடிய வேளாண்மை இணை இயக்குநர் அவர்களோடு தொடர்பு கொள்வார்களேயானால் இந்த உதவியைப் பெற்றுத் தருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 268, திரு. பி. வெங்கடசாமி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**268—**

**தரிசு நிலங்கள்**

***24206—திரு. பி. வெங்கடசாமி:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒசூர் மற்றும் தெங்கனிகோட்டை வட்ட கிராமப் பஞ்சாயத்துக்களில் எவ்வளவு ஏக்கர் தரிசு நிலங்கள் உள்ளன?

(ஆ) ஆம் எனில், பஞ்சாயத்து வருமானத்தை அதிகரிப்பதற்கு தரிசு நில மேம்பாட்டு வாரியத்தின் மூலம் செயல்படுத்தும் திட்டம் ஏதேனும் உள்ளதா?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கிராமப் பஞ்சாயத்தில் உள்ள தரிசு நில விவரங்கள் ஓசூர் தாலுக்காவில் 3,300 ஹெக்டேர், தெங்கனிகோட்டை தாலுக்காவில் 1,151 ஹெக்டேர். ஓசூர் மற்றும் தெங்கனிகோட்டை தாலுக்காக்களைச் சார்ந்த கிராமப் பஞ்சாயத்துக்களில் தரிசு நில மேம்பாட்டு வாரியத்தின்

மூலம் திட்டப் பணிகள் ஏதும் தற்போது செயல்படுத்தப்படவில்லை. அதே சமயத்தில் பெண்ணாகரம் வட்டத்தில் 1000 ஹெக்டேர் பரப்பளவில் தருமபுரி மாவட்டத்தில் பெண்ணாகரம், பருவதனஹள்ளி, அஞ்சனஹள்ளி, சிக்கரஹள்ளி, வட்டுவனஹள்ளி, பிக்கிலிமலை, பிக்கிலி, தித்தொப்பனஹள்ளி ஆகிய 8 கிராமங்களில் தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் தமிழக அரசால் திட்டமிடப்பட்டு 1999-2000 ஆண்டில் செயல்படுத்தப்பட்டது.

**Thiru B. VENKATASAMY:** Hon. Speaker Sir, there are lot of unassessed waste lands available in Thoporomboke and podugal panchayats. According to the statement of the Hon. Minister 3300 Hectares of waste lands in Hosur Taluk and 1151 Hectares of waste lands in Denkanikottai Taluk are available. So, may I request the Hon. Minister to take up these lands under Waste Land Development Board and augment the income of the panchayats so that the panchayats may also get the income and the people in the villages will also get employment opportunities? Sir, may I know from the Hon. Minister whether he is going to implement any scheme for the development of these lands through the Waste Land Development Board?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் வேளாண்மையைப் பெருக்க, பண்ணை வருமானத்தை அதிகரிக்க, மண்ணின் ஈரப்பதத்தைக் காக்க சமுதாயத்திலே நலிந்தவர்களின் தேவைக்கேற்றவாறு விறகு, தீவனப் பயிர், மரத்தேவை மற்றும் வேலைவாய்ப்புகளை அதிகரிக்கும் நோக்கத்தோடுதான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டு இந்தத் தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. அதன் அடிப்படையில் 1999-2000 ஆண்டில் தருமபுரி மாவட்டத்தில் மழை மற்றும் நீர்வளப் பாதுகாப்பு நடவடிக்கை 1000 ஹெக்டேரில் மேற்கொள்ளப்பட்டது. அதில் 81 ஹெக்டேரில் மாங்கன்றுகளும், 20 ஹெக்டேரில் சப்போட்டா கன்றுகளும், 899 ஹெக்டேரில் புளிய மரங்களும் நடப்பட்டன. அதன்படி தருமபுரி, திருவண்ணாமலை, விழுப்புரம், பெரம்பலூர், புதுக்கோட்டை, ஈரோடு, மதுரை, சிவகங்கை, விருதுநகர் மற்றும் திருநெல்வேலி ஆகிய 10 மாவட்டங்களில் தலா 1000 ஹெக்டேர் பரப்பளவில், மொத்தம் 10,000 ஹெக்டேரில், தரிசு நில மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த நிதிநிலை அறிக்கையில்கூட நம்முடைய முதலமைச்சர் அறிவித்திருக்கிறார் 2000-2001 ஆம் ஆண்டில் 24 மாவட்டங்களில் 30,000



ஹெக்டேரில் அதாவது 75,000 ஏக்கரில் 12 கோடி ரூபாய் செலவில் தரிசு நில மேம்பாட்டுப் பணிகள் நிறைவேற்றப்படும் என்று. அந்த அடிப்படையில்தான் ஓசூர் தாலுக்காவிலும், தெங்கனிகோட்டை தாலுக்காவிலும் தரிசு நில மேம்பாட்டுப் பணிகள் நிறைவேற்றப்படுகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 269, திரு. க. மணிவர்மா, மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்.

**269—**

**அணைக்கட்டு**

***25266—திரு. க. மணிவர்மா:**

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தண்டராம்பட்டு தொகுதியில் ஓடுகின்ற பாம்பன் ஆற்றின் குறுக்கே Check dam அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம், எனில் எப்பொழுது?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தண்டராம்பட்டு தொகுதி, பாம்பன் ஆற்றின் குறுக்கே பதிமூன்று அணைக்கட்டுகள் கட்டப்பட்டு ஆற்றின் வலதுபுறத்திலுள்ள நிலங்களுக்குப் பாசன வசதிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

முற்பகல் 10-10

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் பாம்பன் ஆற்றின் குறுக்கே 13 அணைக்கட்டுகள் கட்டப்பட்டும் முழுமையான பாசனத்தை விவசாயிகள் பெற முடியவில்லை. பராமரிப்பு இல்லாமல் அணைக்கட்டுகளும், கால்வாய்களும் தூர்ந்து கிடக்கின்ற காரணத்தால் முழுமையான பாசனத்தை விவசாயிகள் பெறமுடியாமல் இருக்கிறார்கள். அணைக்கட்டுகளைச் சீர்செய்து, கால்வாய்களைத் தூர் வாரித் தருவதோடு,

இடதுபுறங்களில் இருக்கின்ற உள்செக்கடி, பிமரப்பட்டி, குபேரபட்டினம், மேல்முத்தானூர், கீழ்பாச்சார், மேல்பாச்சார் போன்ற கிராமங்களில் இருக்கின்ற நிலங்களில் நிலத்தடி நீர் இல்லாத காரணத்தால் ஆற்றின் குறுக்கே 3 Check dams கட்டி, அதன் மூலம் நீரைத் தேக்கி நிலத்தடி நீர் பெறுவதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் ஆவன செய்வார்களா எனத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி பாம்பன் ஆற்றின் குறுக்கே அணைக்கு Check dam கட்டப்படுமா என்பது. ஏற்கெனவே அந்த ஆற்றிலே 13 Check dams கட்டப்பட்டிருக்கின்றன. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் இப்போது தூர் வாருவதைப் பற்றிச் சொல்கிறார். அதுபற்றி இந்த அரசு தனியாகக் கவனிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 270, திரு. குழந்தை தமிழரசன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**270—**

### வாகன ஆய்வாளர் அலுவலகம்

***23910—திரு. குழந்தை தமிழரசன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூர் மாவட்டம், விருத்தாசலம் நகரில் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம் திறக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது திறக்கப்படும்?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) கடலூர் மாவட்டம் விருத்தாசலம் நகரில் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம் திறக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.



**திரு. குழந்தை தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருத்தாசலத்தில் மோட்டார் வாகனப் பகுதி நேர அலுவலகம் திறப்பதன் அவசியத்தை மாண்புமிகு அமைச்சரவர்கள் என்னைவிட நேரடியாக உணர்ந்திருக்கிறார்கள். தொழுதூரிலேயிருந்து வேப்பூர், கூத்தக்குடி ரயில்வே gate வரை தேசிய நெடுஞ்சாலையிலே அடிக்கடி தவிர்க்க முடியாமல் விபத்துக்கள் ஏற்படுகின்றன. வாகனங்களைத் தணிக்கை செய்வதற்கு அங்கிருந்து 45 கிலோமீட்டர் தொலைவிலுள்ள நெய்வேலிக்கு வர வேண்டுமென்பதால் தற்போது அந்தப் பிரச்சினை வந்து கொண்டிருக்கிறது. விருத்தாசலத்திலே 150-க்கும் மேற்பட்ட பேருந்துகள், 300 ஆட்டோக்கள், 400 கார்கள், ஏறத்தாழ அந்தப் பகுதியிலே 20,000-க்கும் மேற்பட்ட இரு சக்கர வாகனங்கள் ஓடுகின்றன. இவற்றைப் பதிவு செய்வதற்கும், இதர பணிகளுக்காகவும் நெய்வேலியைத்தான் அணுக வேண்டியிருக்கிறது. நெய்வேலியில் இரு சக்கர வாகனங்களைத் தவிர, வேறு வாகனங்களைப் பதிவு செய்வதற்கு வாய்ப்பில்லை. எனவே இந்த நிலைமைகளை எல்லாம் கருத்தில் கொண்டு, மாண்புமிகு அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேபோல் எனக்கு போக்குவரத்து ஆணையர் ஒரு கடிதமும் அனுப்பியிருக்கின்றார். 21-3-1999-லே இந்த ஆண்டு நிதிநிலைமையின் காரணமாக அங்கு மோட்டார் வாகனப் பகுதி நேர அலுவலகம் திறக்கும் வாய்ப்பில்லை; எனவே வரும் ஆண்டு பரிசீலிக்கப்படும் என்று ஒரு கடிதமும் அனுப்பியிருக்கிறார். ஆனால் கருத்துரு, பரிந்துரை வந்திருக்கிறது. எனவே இதையெல்லாம் கருத்தில்கொண்டு, மாண்புமிகு அமைச்சரவர்கள் விருத்தாசலத்திலே இந்த ஆண்டு முன்னுரிமை கொடுத்து, பரிசீலனை செய்து, மோட்டார் வாகனப் பகுதி நேர அலுவலகம் திறக்க முன்வர வேண்டுமென்று கேட்டு முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது விருத்தாசலம் பகுதி, நெய்வேலியின் பகுதி நேர அலுவலகத்தின் கட்டுப்பாட்டிலே இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னதைப் பொல தொழுதூரிலிருந்து நெய்வேலிக்கு 45 கிலோமீட்டர் இருந்தாலும் கிட்டத்தட்ட விருத்தாசலம் 35 கிலோமீட்டரில் வந்துவிடுகிறது. ஆகவே எங்கே அமைத்தாலும் தூரம் என்பது வாய்ப்பாக அமைய முடியாது. ஒரு புதிய பகுதி நேர அலுவலகம் திறக்க வேண்டுமென்று சொன்னால், தொடராச் செலவு ரூ.8,35,400-ம் தொடரும் செலவாக, ரூ.5,25,000-ம் ஒரு பகுதிநேர அலுவலகத்திற்குத் தேவைப்படுகிறது. ஆகவே அரசினுடைய நிதிநிலைமையைக் குறித்து, வருங்காலங்களிலே இதைப் பற்றிப் பரிசீலிக்கலாம்.

[2000 ஏப்ரல் 10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 271, திரு. ஜி. சொக்கலிங்கம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**271—**

**கூடுதல் பேருந்துகள்**

***31746—திரு. ஜி. சொக்கலிங்கம்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்போரூர் தொகுதி, முள்ளிப்பாக்கம் கிராமத்திற்கு செங்கல்பட்டு-மானாமதி செல்லும் (டி.75) அரசுப் பேருந்துகளைக் கூடுதலாக இயக்க வேண்டுமென்று கோரிக்கை ஏதும் வந்துள்ளதா?

(ஆ) அவ்வழித் தடத்தில் புதிய பேருந்துகளை இயக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) முள்ளிப்பாக்கம் வழியாக இயக்கப்படும் நகரத்தடம் எண் டி75-ஐ திருப்போரூர் வரை நீட்டித்து இயக்கக் கோரி முள்ளிப்பாக்கம் கிராம மக்கள் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

(ஆ) தற்போது தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் காஞ்சிபுரத்தில் இயக்கப்படும் நகரத்தடம் எண் டி75 மூலம் செங்கல்பட்டிலிருந்து மானாமதிக்கு முள்ளிப்பாக்கம் வழியாக தினசரி 4 நடைகள் இயக்கப்படுகின்றன. இதில் பயணிகள் அடர்வு 41% மட்டுமே உள்ளது. எனவே, தற்போது உள்ள பேருந்து வசதியே போதுமானது. புதிய பேருந்துகள் இயக்க வேண்டிய தேவை எழவில்லை. கூடுதல் பேருந்துகளும் இயக்க வேண்டிய தேவை எழவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 272, திரு. தங்கம் தென்னரசு, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.



2000 ஏப்ரல் 10]

**272—**

**புறவழிச்சாலை**

***19786—திரு. தங்கம் தென்னரசு:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை-தூத்துக்குடி நெடுஞ்சாலையில் காரியாபட்டியில் புறவழிச்சாலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்திய விடையைத் தெரிவிக்க அனுமதிக்க வேண்டுகிறேன்.

தற்போது இல்லை.

**திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையிலிருந்து தூத்துக்குடிக்குச் செல்லக்கூடிய நெடுஞ்சாலை இப்போது தேசிய நெடுஞ்சாலையாகத் தரம் உயர்த்தப்பட்டு இருக்கிற காரணத்தால் இப்போது மிகத் தரமான சாலைகள் அங்கு அமைக்கப்பட்டு, தூத்துக்குடியிலிருந்து முன்பெல்லாம் கோயில்பட்டி வழியாகச் சென்று கொண்டிருந்த லாரிகள், கன்டெய்னர்கள் எல்லாம் இப்போது காரியாபட்டி வழியாகச் செல்லக்கூடிய ஒரு நல்ல நிலை உருவாகியிருக்கிறது. இருந்தாலும் காரியாபட்டி, கல்குறிச்சி ஆகிய ஊர்களின் வழியாகச் செல்லக்கூடிய நேரத்தில், அந்த ஊர்ச் சாலைகளின் குறுக்கே அகலம் மிகக் குறைவாக இருக்கின்ற காரணத்தால் மிகுந்த போக்குவரத்து நெரிசல் ஏற்படக்கூடிய நிலையும் இருக்கிறது. எனவே இப்போது இருக்கக்கூடிய போக்குவரத்து நெரிசலையும், வருங்காலங்களில் ஏற்படக்கூடிய போக்குவரத்து அடர்வினையும் கருத்திலே கொண்டு அந்த இடத்திலே சுற்றுச்சாலை அமைக்கக்கூடிய ஒரு முயற்சியினை அமைச்சர் அவர்கள் மேற்கொள்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக நான் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-15

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை—தூத்துக்குடி சாலை அண்மையிலேதான் தேசிய நெடுஞ்சாலையாக மாற்றப்பட்டு அறிவிக்கப்பட்டு இருக்கிறது.

எனவே இந்தச் சாலையை மேம்படுத்துவதாக இருந்தாலும், புறவழிச்சாலை அமைப்பதாக இருந்தாலும் இனி மத்திய அரசு தரைவழிப் போக்குவரத்துத் துறையின் மூலமாகத்தான் நிறைவேற்றப்பட வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் தங்கம் தென்னரசு அவர்கள் கேட்டிருக்கிற காரியாபட்டி புறவழிச்சாலையை கிட்டத்தட்ட 6 கிலோ மீட்டர் நீளத்திற்குப் போட வேண்டிய அவசியம் இருக்கிறது. அங்கு இப்போது வண்டிப் பாதையோ அல்லது சாதாரண சாலையோ கிடையாது. முழுமையாக நிலம் கையகப்படுத்தப்பட வேண்டும். தோராயமாக நிலம் கையகப்படுத்துவதற்கும் சாலை அமைப்பதற்கும் கிட்டத்தட்ட 20 கோடி ரூபாய் தேவைப்படுகிறது என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. என்றாலும் இதுவரையில் இந்தத் திட்டம் பரிசீலிக்கப்படவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே கேள்வி எழுப்பியிருக்கிற காரணத்தினால் இந்த ஆண்டு தேசிய நெடுஞ்சாலைக்கு அறிவுறுத்தி 2000-2001 ஆம் ஆண்டில் இதை ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கான முயற்சி இருக்கிறது. ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 273, திரு. மு.பெ. சாமிநாதன், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**273—**

**இருவழிச்சாலை**

***29607—திரு. மு.பெ. சாமிநாதன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், வெள்ளக்கோவில் தொகுதி, காங்கேயம்-கொடுமுடி சாலையை, கி.மீ.8/0 முதல் 21/0 வரை, இருவழிச்சாலையாக மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது? மதிப்பீடு எவ்வளவு?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 274, திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

**274—**

**அருங்காட்சியகம்**

***14416—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் டவுன் ஹாலில் இயங்கி வரும் அருங்காட்சியகம் வேலூர் கோட்டைக்குள் உள்ள கட்டடத்திற்கு எப்போது மாற்றப்படும்?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வேலூர் நகர மன்றத்தில் இயங்கிவரும் அரசு அருங்காட்சியகம், மைய அரசின் கட்டுப்பாட்டிலுள்ள வேலூர் கோட்டைக்குள் உள்ள கட்டடத்திற்கு 1-4-1999 முதல் மாற்றப்பட்டு பொது மக்கள் பார்வையிட்டு வருகின்றனர்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி நெடு நாட்களுக்கு முன்னாலே போடப்பட்ட ஒரு கேள்வி. கேள்வி போட்ட பிறகு டவுன் ஹாலிலிருந்த இந்த அருங்காட்சியகத்தை வேலூர் கோட்டைக்குள்ளே மாற்றியதற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்போது இருக்கக்கூடிய காப்பாட்சியர் காந்தி என்பவர் மிகச் சிறப்பாக அந்த அருங்காட்சியகத்தை நிர்வாகம் செய்து கொண்டிருக்கிறார். அருங்காட்சியகத்திற்குத் தேவையான பொருட்களை எல்லாம் இன்னும் பிற மாவட்டங்களிலிருந்துகூட அவர் நிறைய சேகரித்துக் கொண்டு வந்து அங்கே சிறப்பாக நடத்திக் கொண்டிருக்கிறார். இடம் போதவில்லை. அங்கே இருக்கக்கூடிய பணியாளர்களும் போதவில்லை. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பணியாளர்கள் இன்னும் 4 பேர்களை அங்கே நியமித்து விரிவாக்கம் செய்வதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு அருங்காட்சியகத்திற்கும் இத்தனை பணியாளர்கள் என்ற வரையறை இருக்கிறது. அதே நேரத்தில் வேலூர் அருங்காட்சியகம் 1983 ஆம் ஆண்டிலிருந்து இயங்கி வருகிற காரணத்தினால் இப்போது புதிதாக இடமாற்றம் செய்யப்பட்டு உள்ளபடியே நீங்கள் சொன்னதைப்போல காப்பாட்சியாளர்கள் ஒவ்வொரு மாவட்டத்தினுடைய அருங்காட்சியகத்திலும் வேறு மாவட்டங்களில் இருக்கின்ற சிறப்பான புதிய நாணயங்கள், ரோமானியர் காலத்தில் இருக்கிற நாணயங்கள் ஆங்காங்கு இருக்கின்ற பானை ஓடுகள் அதன் வாயிலாக வெளி உலகத் தொடர்புகள் இவற்றிற்கானவற்றையெல்லாம் கொண்டு வந்து சேர்க்கிறார்கள். அவை மாவட்டங்களுக்குப் பரவலாகப் பிரித்துத் தரப்படுகின்றன. எனவே எல்லாப் பொருட்களையும் சிறப்பாக அமைப்பதற்கும், காட்சிப்பெட்டிகளை சிறப்பாக அமைப்பதற்கும் அரசு தக்க ஏற்பாடு செய்யும். பணியாளர்கள் உண்மையிலேயே குறைவாக இருப்பார்களானால் அந்தக் குறையையும் நீக்குவதற்கு ஆவன செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 275, திரு. செங்கை சிவம், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

**275—**

**சுசீந்திரத்தில் சிற்பம்**

***24223—திரு. செங்கை சிவம்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி சுசீந்திரத்தில் பட்டினத்தார் படைப்புச் சிற்பம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



(அ) ஆம்.

(ஆ) சுசீந்திரம் இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப்படாத திருக்கோயில் பிரிவில், சுசீந்திரம் அருள்மிகு தாணுமாலயன் திருக்கோயிலில் செண்பகராமன் மண்டபத்தில், தெற்குச் சுவரிலிருந்து இரண்டாவது வரிசையில், மேற்கிலிருந்து ஐந்தாவது தூணில், மேற்கு நோக்கி காட்சி தரும் சிற்பம் பட்டினத்தார் சிலை என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அச்சிலை கோவணத்து ஆண்டியாக, கரும்பைத் தோளிலே தாங்கி நிற்பதால் பட்டினத்தார் சிலை என்று கண்டறியப்பட்டது.

**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டினத்தார் காலம் எது? அவருடைய சிறப்பு என்ன? இக்கோவிலில் வேறு எந்த வடிவங்களில் சிற்பங்கள் உள்ளன என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டினத்தாருடைய காலம் கி.பி. 11-ஆம் நூற்றாண்டு ஆகும். அவருடைய சிறப்பு; கடைசியாக நமக்கெல்லாம் ஒரு செய்தி சொல்லிவிட்டுப் போனார்;

'காதற்ற ஊசியும் வாராது காண் கடைவழிக்கே' என்பதுதான் அவர் கடைசியாகச் சொன்ன செய்தி. அதுதான் அவருடைய சிறப்பு. அதே நேரத்தில் சுசீந்திரம் கோயிலில் பலபடைப்புச் சிற்பங்கள் இருக்கின்றன. குறிப்பாக சம்மதம் சிற்பங்கள் மற்றும் தசாவதாரச் சிற்பங்கள் உள்ளன. அத்திருக்கோயிலினுடைய ஊஞ்சல் மண்டபத்தில் ரதி-மன்மதன் சிலைகள், அர்ச்சுனன், கர்ணன் சிலைகள் உள்ளன. சித்திரசபையில் வேணுகோபாலன், கங்காளநாதர், நடராசன், காளி, பிரம்மா, அனுமன், அர்ச்சுனன் முதலிய சிலைகள் உள்ளன. அதேநேரத்திலே முருகன் சன்னதியில் நாஞ்சில் குரவர்கள், தேவதாசிகள், மாலுக்குட்டி, சீதையம்மாள் ஆகிய சிலைகள் உள்ளன. செண்பகராமன் மண்டபத்தில் சைவ ஆகமச் சிலைகளும், வைணவ ஆகமச் சிலைகளும் மற்றும் வாலி, சுக்ரீவன் யுத்தம் புரியும் சிற்பங்களும் உள்ளன. அத்திருக்கோயிலினுடைய நீலகண்ட விநாயகர் சன்னதியில் உள்ள வசந்த மண்டபத்தின் கூரையில் நவக்கிரகங்களின் சிற்பங்கள் உள்ளன. இந்தக் கோயிலில் மொத்தத்தில் உள்ள 184 தூண்களில் பாவை விளக்குகள் உள்ளன.

*முற்பகல் 10-20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன்.

[2000 ஏப்ரல் 10

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுசீந்திரம் தாணுமாலய சுவாமி கோயிலிலுள்ள பல சிற்பங்கள் பாதுகாப்பில்லாத நிலையில் இருக்கின்றன. சில சிற்பங்கள் மட்டும் நல்ல வகையிலான பாதுகாப்பிற்குத் தகுந்தாற்போல் இரும்பு வலைகள் எல்லாம் அமைக்கப்பட்டு பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. ஆனால், பல சிற்பங்கள் இன்னும் பாதுகாக்கப்பட வேண்டிய நிலையில் இருக்கின்றன. அவற்றைப் பாதுகாக்க அரசு விரைவில் ஆவன செய்வதுடன், இந்தக் கோவிலில் உள் பிரகாரத்தில் ஒவ்வொரு தூணிலும், ஒவ்வோர் ஓசை வரக்கூடிய விதத்தில் 18 தூண்கள் இருக்கின்றன. அவற்றுக்கும் பாதுகாப்பு வசதியை மேலும் அதிகப்படுத்தி, அரசு இந்த அரும் சிற்பங்களைப் பாதுகாக்க ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு கோயிலுக்கும் காவலர்கள் போடப்படுவதே இவற்றையெல்லாம் பாதுகாப்பதற்காகத்தான். அதற்குப் பிறகு ஒவ்வொரு சிற்பத்திற்கும் கம்பி வலை போடுவது என்று தொடங்கினால் இந்தப் பிறவியில் அதற்கு நமக்கு வாய்ப்பே இருக்காது என்று நான் கருதுகிறேன். என்றாலும் அதிகமான காவலர்களைப் பணியமர்த்தி எல்லாக் கோயில்களிலும் இருக்கிற சிற்பங்களும் முறையாகப் பேணப்படுவதற்கும் அதே நேரத்தில் வேறு எவராலும் சிதைக்கப்படாமல் பாதுகாக்கப்படுவதற்கும் ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 276, திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

**276—**

**கூட்டுறவு நூற்பாலை**

***28328—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதியில் எவ்வித தொழில் வளர்ச்சியும் இல்லாமலிருப்பது அரசிற்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் ஒரு கூட்டுறவு நூற்பாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?



2000 ஏப்ரல் 10]

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதியில் புதிய கூட்டுறவு நூற்பாலை அமைக்கும் உத்தேசம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 277, திருமதி ஆர். சரஸ்வதி, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

**277—**

**மாணவியர் விடுதி**

***30327—திருமதி ஆர். சரஸ்வதி:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தாராபுரம் நகரில் இயங்கிவரும் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதிக்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஈரோடு மாவட்டம், தாராபுரம் நகரில் இயங்கிவரும் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதிக்குக் கட்டடம் கட்டித் தருவது குறித்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திருமதி ஆர். சரஸ்வதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 15-6-1998 அன்று தொடங்கப்பட்ட பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதி, 50 மாணவியரோடு மாதம் ரூபாய் 2200 வாடகை என்ற அளவில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. போதிய வசதிகள் இல்லாமல், மாணவியர் மிகவும் சிரமப்படுகிறார்கள். பல வருடங்களுக்கு முன்பே மாணவியர் விடுதி கட்டுவதற்கென்று ஒதுக்கப்பட்ட இடம் இப்போது காலியாக உள்ளது. ஆகவே, இந்த ஆண்டு நிதி ஒதுக்கி மாணவியர் நலன் கருதி புதிய கட்டடம் கட்டித் தருவதற்கு மறுபரிசீலனை செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் நிதிநிலைக்கேற்ப மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 278, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன், மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர்.

**278—**

**குடியிருப்புகள்**

***22878—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:**

மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பவானி நகரில் வீட்டுவசதி வாரியத்தின் மூலம் பொதுமக்கள் மற்றும் அரசு ஊழியர்களுக்குக் குடியிருப்புகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எத்தனை வீடுகள் கட்டப்பட உள்ளன?

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி வீட்டுவசதித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுரையிலே இல்லை என்றும், கேள்விக்கே இடம் இல்லை என்றும் பதிலைக் கொடுத்து இருக்கின்றார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே பலமுறை நேரிலே விண்ணப்பம் கொடுத்தும் நேரிலே சொல்லியும்கூட, பவானி வட்டத்தினுடைய தலைநகரமாக இருக்கக்கூடிய பவானி நகரத்தின் அனைத்து அலுவலர்களும், அதிகாரிகளும், குடியிருக்கக்கூடிய வகையிலே அனைத்து அலுவலகங்களும் இயங்கிக் கொண்டிருக்கக்கூடிய இந்தச் சூழ்நிலையை முன்னிட்டு மீண்டும் அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து பவானி நகரத்திலே வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுமக்களுக்கான சொந்தக் குடியிருப்பைப் பொறுத்தவரையில் பவானி நகரில் போதிய நிலம் கிடைக்கப்பெறாததால் திட்டம் செயல்படுத்தப்படவில்லை. பவானி நகரில் நிலம் கையகப்படுத்திட வீட்டுவசதி வாரியம் முயற்சி மேற்கொண்டிருக்கிறது. அதற்கு சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அரசு ஊழியர் குடியிருப்பைப் பொறுத்தவரையில் மாவட்டத் தலைநகரம் மற்றும் கோட்டத் தலைநகரங்களிலேதான் கட்டிக் கொடுக்கப்படுகிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் அரசு புறம்போக்கு நிலத்தைப் பெற்றுத் தந்தாரேயானால் அங்கே வாடகை வீடு குடியிருப்பைக் கட்டுவதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டுவசதித் துறையின் மூலமாக, கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக கிராமப்புறங்களிலே இருக்கிற ஏழையெளிய மக்கள் பயன்பெறுகின்ற வகையிலே வீடுகள் கட்டிக் கொள்வதற்காக 12,000 ரூபாய் அளவிலே நிதி வழங்கப்பட்டது. இப்போது நிறுத்தப்பட்டுவிட்டது. அது மிகப்பெரிய பாதிப்பை ஏற்படுத்துகிறது. அதுவும் போதுமான தொகை இல்லை. அதை 25,000 ரூபாயாக உயர்த்தி, நிறுத்தப்பட்டிருக்கிற அந்தத் திட்டத்தை மீண்டும் அந்தக் கிராமப்புறத்து மக்களுக்கு வீடு கட்ட கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக வழங்கச் செய்வதற்கான முயற்சியை அரசு மேற்கொள்ளுமா என அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 25,000 ரூபாய் கடனும் வழங்கப்படுகிறது. அந்தக் கடனும் நிதித் துறையின் அனுமதியைப் பெற்று வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 279, திரு. எஸ்.வி. கிருஷ்ணன், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.

[2000 ஏப்ரல் 10

**279—**

### விட்டுமனைப்பட்டா

***7821—திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாங்குநேரி தொகுதி, வடுகச்சிமதில் ஊராட்சி வடிவால்புறம் மற்றும் செண்பகராமநல்லூர், காக்கைகுளம் ஆதிதிராவிடர்களுக்கு இலவச வீட்டுமனைப்பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

செண்பகராமநலலூர், காக்கைகுளம் கிராமத்தில் 25 வீட்டுமனைப்பட்டாக்கள் 1-4-1998 ஆம் ஆண்டு வழங்கப்பட்டுள்ளது. வடுகச்சிமதில் ஊராட்சி, வடிவால்புறம் கிராமத்தில் அனைவருக்கும் சொந்தமாக வீடுகள் உள்ளதால் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கிடும் அவசியம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.வி. கிருஷ்ணன், இருக்கையில் இல்லை.

வினா எண் 280, திரு. ச. அழகுவேலு, மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.

**280—**

### ஆதிதிராவிட மாணவியர் விடுதி

***24192—திரு. ச. அழகுவேலு:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கண்டமங்கலம் ஊராட்சி, விக்கிரவாண்டி பேரூராட்சி ஆகிய கிராமங்களில் ஆதிதிராவிட மாணவியர் விடுதி தொடங்க அரசு ஆவன செய்யுமா?



2000 ஏப்ரல் 10]

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை. மாநிலத் திட்டக் குழு, புதிய விடுதிகள் திறப்பது அவசியம் இல்லை என்றும், தற்போதுள்ள விடுதிகளைப் பராமரிக்கவும் தரத்தை மேம்படுத்திடவும் தனிக் கவனம் செலுத்த வேண்டும் என்றும் பரிந்துரை செய்துள்ளது.

**திரு. ச. அழகுவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சருடைய பதிலில்—அரசாங்கத்தினுடைய விதிகளுக்கேற்ப என்னுடைய ஒன்றியத்திலே 9 உயர்நிலைப்பள்ளிகள், அரசு மேல்நிலைப் பள்ளிகள் இயங்கி வருகின்றன—புதிதாக, விடுதிகள் தொடங்குவதற்கு அரசாணை இல்லை என்று குறிப்பிடுகிறார்கள். அதை விளக்கமாக அவர்கள் தெரிவிக்க வேண்டுகிறேன்.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினரின் கோரிக்கையைத் தற்போது ஏற்க முடியாது என்று சொன்னேன். அதற்கு விளக்கம் அளிக்க வேண்டுமென்று கேட்கிறார். ஆதிதிராவிட நலத் துறையின் சார்பாக 1075 விடுதிகள் இயங்கி வருகின்றன. இதில் 615 விடுதிகள் வாடகைக் கட்டடத்திலும், 460 விடுதிகள் சொந்தக் கட்டடத்திலும் இயங்கி வருகின்றன. அந்த மாணவியர் விடுதியில் தங்கிப் பயிலும் பிள்ளைகளுக்கு எந்தவிதக் குறையும் இல்லை என்ற நிலையை ஏற்படுத்த வேண்டுமென்பதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்கள் கடந்த நான்கு ஆண்டுகளில்கூட புதிதாக 111 விடுதிகளைத் திறந்திருக்கிறார்கள். 82 விடுதிகள் புதிதாகக் கட்டப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டுகூட 43 விடுதிகள் கட்டுவதற்காக 14 கோடி ரூபாயை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். ஆகவே மாணவ, மாணவியர் விடுதிகளில் தங்கிப் படிக்கின்ற பிள்ளைகளுடைய தரத்தை உயர்த்த வேண்டிய கட்டாயச் சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினால் எதிர்காலத்தில், பெற்ற பிள்ளைகளுக்கு முதலில் உணவைக் கொடுத்துவிட்டு, பெறாத பிள்ளைகளைப் பற்றிச் சிந்திக்க வேண்டிய கட்டாயச் சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினால்—அடுத்து இல்லை என்று சொல்லவில்லை—எதிர்காலத்தில் சிந்தித்து நல்ல முடிவெடுக்கப்படும் என்பதையும், பரிசீலிக்கப்படும் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருந்துறை பேரூராட்சியில் ஒரு மாணவியர் விடுதி, பேருந்து நிலையத்திற்கு மிக அருகிலேயே கட்டப்பட்டுள்ளதால் அதிலே பாதுகாப்பற்ற சூழ்நிலை தோன்றியிருக்கிற காரணத்தினால் அதை வேறு இடத்திற்கு மாற்றுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேருந்து நிலையத்திற்கு அருகில் இருக்கின்ற காரணத்தினால் பாதுகாப்பு இல்லை என்று சொல்கிறார்கள். அவருடைய தொகுதியில் பாதுகாப்பான இடம் ஒன்றிருந்தால் அதுவும் அவர்களே வாடகைக்கு அந்தக் கட்டடத்தைப் பிடித்துக் கொடுத்தால் அதற்குரிய முயற்சியில் அந்த உறுப்பினர் ஈடுபட்டால் அதற்கு அரசு ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[*குறிப்பு:* ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்

### உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

(*திரு. பி.ஆர். சுந்தரம், திரு. சி. ஞானசேகரன் மற்றும் சில உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்.*)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன என்றவுடன் 7 பேர் எழுந்து நிற்கிறீர்களே? இது என்ன மரபு? (குறுக்கீடு) உங்கள் பின்னாலே பாருங்கள். திரு. ஞானசேகரன் சொல்லுங்கள். மற்றவர்கள் உட்காருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு ஏற்கெனவே நாம் ரேஷன் கடைகளில் போடக்கூடிய அரிசியினுடைய விலையை உயர்த்திவிட்டது. பிறகு கெரசின் விலையையும், gas விலையையும் உயர்த்தியதன் விளைவாக இன்று தமிழக மக்களுடைய





தலையின்மீது அதிகமான சுமை சுமத்தப்பட்டிருக்கிறது என்று நாங்கள் ஏற்கெனவே வலியுறுத்தி வருகிறோம். ஆந்திர மாநிலத்தினுடைய முதல்வர் திரு. சந்திரபாபுநாயுடு அவர்களும், இப்போது மத்திய அரசிலே அமைச்சராக இருந்து கொண்டிருக்கிற இரயில்வே அமைச்சர் மாண்புமிகு மம்தா பேனர்ஜி அவர்களும்கூட அந்தக் கூட்டணியில் இருந்தாலும்கூட gas விலையினுடைய உயர்வையும், கெரசின் விலை உயர்வையும் வன்மையாகக் கண்டித்திருக்கிறார்கள்.

நம்முடைய தமிழக அரசின் சார்பாக அப்படிப்பட்ட கண்டனக்குரல்கள் ஏனோ வரவில்லை. மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பத்திரிகையாளர்கள் கேட்டபோது வேறு வழியில்லை மத்திய அரசுக்கு என்று அவர் மத்திய அரசுக்கு வக்காலத்து வாங்கிவிட்டது தமிழ்நாட்டு மக்களுக்கு மிகப்பெரிய ஏமாற்றத்தை அளித்திருப்பதோடு மட்டுமல்லாமல் தமிழக மக்கள் மிகவும் துன்பத்தில் ஆழ்ந்திருக்கிறார்கள்.

*முற்பகல் 10-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் தீர்மானம் கொடுத்துவிட்டு....

**திரு. கே. சுப்பராயன்:** Point of order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பிய இதேமாதிரி பிரச்சினையிலே நான் உட்பட, பல எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கொடுத்திருக்கிறோம். இப்படியொரு, privilege என்ற முறையிலே ஒரு உறுப்பினர் அனுமதிக்கப்படுவதன் மூலம் இதே பிரச்சினையை எழுப்பியிருக்கிற முன்கூட்டியே கொடுத்திருக்கக்கூடிய மற்ற உறுப்பினர்கள் இந்தப் பிரச்சினையை எழுப்புவதற்குரிய வாய்ப்பு இல்லாமல் போகிறது. இதுகுறித்துத் தங்கள் கருத்தை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் அருமையான கருத்தைச் சொன்னார்கள். நான் நூற்றுக்கு நூறு அவர் கருத்தை ஆதரிக்கிறேன். ஞானசேகரன் எழுந்து பேசிக் கொண்டிருக்கிறார். அப்படிப் பேசுகின்ற நேரத்திலே நான் கொடுத்திருக்கிற தீர்மானம் என்னவாயிற்று என்று கேட்டால், ஒட்டுமொத்தமான பதிலைச் சொல்ல முடியும். ஆனால், தீர்மானம் என்னவாயிற்று என்று கேட்பதற்குப் பதிலாக 10 நிமிடங்கள் ஒரு பேருரையே நிகழ்த்துகின்றார். இது அவை மரபை மீறுகின்ற ஒரு விஷயமாகும்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்கு நான் அனுமதி கொடுக்கவில்லை. அதற்குள்ளே எழுந்து நின்றால் என்ன அர்த்தம்? நான் பேசிக்கொண்டிருக்கிறேன், நீங்கள் உட்காருங்கள். ஆகையினாலே, "தீர்மானம் கொடுத்திருக்கிறேனே அதை எடுத்துக் கொள்கிறீர்களா" என்று கேட்பதுதான் முறையேயொழிய, நீங்கள் கருத்தைத் தெரிவித்து, அந்த அமைச்சர் இப்படிச் சொன்னார், அந்த மாநிலத்திலே இப்படிச் சொன்னார்கள் என்று சொல்வதெல்லாம் இப்போதே அதை விவாதத்திற்கு எடுத்துக்கொண்டது மாதிரி பொருள் ஆகிவிடும். இப்போது சொல்லுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் தன்னுடைய உரிமையைக் காப்பாற்றிக் கொள்வதிலே நான் நிச்சயமாகக் குறுக்கே நிற்கமாட்டேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் குறுக்கே நிற்கக்கூடாது. நான்தான் அந்த உரிமையைக் காப்பாற்ற வேண்டும். அவர் கேட்கிற கேள்வி நியாயமானது. "10 பேர் கொடுத்திருக்கிறார்களே, ஞானசேகரனை மட்டும் ஏன் பேசவிட்டீர்கள்" என்று கேட்கிறார். அது நியாயமான கேள்வி. நீங்கள் உட்காருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி ஏற்கெனவே நானும் கொடுத்திருக்கிறேன்; அவரும் கொடுத்திருக்கலாம். பல பேர் கொடுத்திருக்கலாம்; இப்படிக் கொடுத்திருக்கக்கூடிய ஒரு நிகழ்வை இப்படி நேரம் இல்லா நேரத்திலே, நிச்சயமாக மக்களுடைய முக்கியமான பிரச்சினையை....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மீண்டும் நீங்கள் தொடர்ந்து பேசிக்கொண்டிருப்பது முறை அல்ல. நான் கொடுத்த தீர்மானம் என்னவாயிற்று என்று கேளுங்கள். அதை எடுக்கிறேன் அல்லது எடுக்கவில்லை என்று சொல்கிறேன். இப்போது நீங்கள் உட்காருங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பி.ஆர். சுந்தரம், உங்களுக்கும் இதேதானா? அதைத்தான் சொல்லிவிட்டேன். இன்னும் ஏன் பேசிக் கொண்டேயிருக்கிறீர்கள். ஞானசேகரனுக்கு அனுமதி இல்லை.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை சம்பந்தமாக ஒத்திவைப்புப் பிரச்சினை



கொடுத்திருப்பார்களேயானால்— இன்னும் சில நொடிகளில் தங்களுடைய அறையில் அலுவல் ஆய்வுக் குழு (Business Advisory Committee) கூடவிருக்கிறது. அதிலே—கலந்து பேசி இந்த ஒத்திவைப்பையும் எப்போது எடுத்துக் கொள்ளலாம் என்ற முடிவிற்கு வரலாம். அநேகமாக தங்களுடைய அறையிலே எல்லா எதிர்க்கட்சித் தலைவர்களும், எதிர்க்கட்சி உறுப்பினர்களும், நானும் அமர்ந்து பேசி, ஒவ்வொரு நாளும் எடுத்துக் கொள்வது முறையாக இருக்கிறது. அந்த முறை ஒன்று இருக்கும்போது இந்த முறையையும் சேர்த்தால் நம்முடைய அவையினுடைய நேரம்தான் வீணாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பல ஆண்டுகளாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்ன அந்த முறையைத்தான் கடைப்பிடித்துக் கொண்டிருக்கிறோம்; அவை ஒழுங்காக நடந்தது. இப்போது திடீரென்று ஞானசேகரன் புது முறையைக் கடைப்பிடிக்க ஆரம்பித்துவிட்டார். இதை நான் கண்டிக்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் திரும்பத் திரும்ப அனுமதி இல்லாமல் பேசுகிறீர்கள், உட்காருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** 'Zero hour'-லே raise பண்ண we have right, we have precedent.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலிலே நீங்கள் உட்காருங்கள், நான் சொல்கிறேன். நீங்கள் raise பண்ணினால்கூட, இது விஷயமாக நான் தீர்மானம் கொடுத்திருக்கிறேனே என்ன ஆகியிருக்கிறது என்று கேட்கலாமேயொழிய, இப்படி அதை சாக்காக வைத்து 10 நிமிடங்கள் நீங்கள் பேசினீர்கள் என்றால், நீங்கள் மட்டும் பேசிவிட்டு, நான் சுப்பராயனுக்கு அனுமதி கொடுக்கவில்லை என்றால் என்ன அர்த்தம்? இந்தத் தீர்மானத்தை விவாதத்திற்கு எடுக்காமல், எல்லோரையும் பேச அனுமதித்துக் கொண்டிருக்க வேண்டும் என்கிறீர்களா?

**THIRU C. GNANASEKARAN:** Hon. Speaker Sir, Thiru Subbarayan cannot prevent me from raising the matter.....

**HON. SPEAKER:** This is not the way to raise the point. You have only the right to ask me. Don't show your anger then, I will start showing my anger. You have got the right to say that you have given a motion and ask what had

happened to that. Beyond that, you cannot give a lecture. I won't allow the so called Zero hour to be converted into a lecture hour.

**THIRU C. GNANASEKARAN:** Hon. Speaker Sir, it can be raised.

**HON. SPEAKER:** You can only ask me "What has happened to the Motion?" Please sit down. (Interruption) No. I will not allow you to speak.

## 3. மானியக் கோரிக்கைகள், 2000-2001,

### விவாதமும் வாக்கெடுப்பும்-தொடர்ச்சி

### கோரிக்கை எண் 17-கல்வி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2000-2001 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 17-கல்வி, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

*முற்பகல் 10-35*

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கல்வி பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.4,648,95,17,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்." எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1015, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரி அரசு மேல்நிலைப் பள்ளியைப் பிரித்து ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, பெண்கள் மேல்நிலைப் பள்ளி என அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கல்வி பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,648,95,17,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 43. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, "எடப்பாடி தொகுதி, எடப்பாடி அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளிக்கு நான்கு வகுப்பறைகள் கொண்ட ஒரு கூடுதல் கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கல்வி பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 4,648,95,17,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1136, திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டம், துடுப்பதி அரசினர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்திட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கல்வி பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 4,648,95,17,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 826 திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருப்பூர் வடக்குப் பகுதி, நெறிபறைச்சல் ஊராட்சி, பூலுபட்டி முந்திரிக் காட்டில் கரடுப் புறம்போக்கு நிலத்தில் ஒரு பெண்கள் உயர்நிலைப் பள்ளி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கல்வி பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 4,648,95,17,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 373, திரு. வை. சிவபுண்ணியம்.

[2000 ஏப்ரல் 10

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தொகுதிக்குட்பட்ட மகாதேவப்பட்டினம் அரசினர் உயர்நிலைப் பள்ளியை இவ்வாண்டே மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கல்வி பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 4,648,95,17,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 473, திரு. எஸ்.வி கிருஷ்ணன், இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் எண் 463 திரு. ஆர்.ஆர். சேகரன், இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் எண் 716 திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத், இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் எண் 883, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.:

"கல்வி பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 4,648,95,17,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1154, திரு. க. மணிவர்மா.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கல்வி பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 4,648,95,17,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 678, திரு. ஏ.வி.ஏ. நாசர்.

**திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கல்வி பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 4,648,95,17,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."



2000 ஏப்ரல் 10]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 554, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், செம்பியன்மாதேவிபட்டினம் ஊராட்சியில் தொடக்கப் பள்ளி தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கல்வி பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 4,648,95,17,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 343, திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பாபநாசம் சட்டமன்றத் தொகுதி, திருப்புறம்பியம், புள்ளபூதங்குடி, வீரமாங்குடி கபிஸ்தலம் ஆகிய ஊர்களிலுள்ள உயர்நிலைப்பள்ளிகளை மேல்நிலைப்பள்ளிகளாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கல்வி பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 4,648,95,17,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 381, திரு. கே. தங்கமணி.

**திரு. கே. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஒன்றியம், வண்ணிக்குடி கிராமத்தில் புதிய தொடக்கப்பள்ளி தொடங்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கல்வி பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 4,648,95,17,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 415, திரு. வி. அய்யலுசாமி.

**திரு. வி. அய்யலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவில்பட்டி ஒன்றியத்தில் உள்ள நாலட்டின்புதூரில் உள்ள சாரதா

உயர்நிலைப்பள்ளியை மேல்நிலைப்பள்ளியாகத் தரம் உயர்த்துவது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கல்வி பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 4,648,95,17,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1059, திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கல்வி பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 4,648,95,17,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1094, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம், மேல் ஒலக்கூர் அரசு உயர்நிலைப்பள்ளியை இந்தக் கல்வி ஆண்டில் மேல்நிலைப்பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கல்வி பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 4,648,95,17,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 76 திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டம், தேங்காபட்டினம் உயர்நிலைப்பள்ளியை மேல்நிலைப்பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கல்வி பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 4,648,95,17,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 656, திரு. ச. புரட்சிமணி, இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் எண் 3131, திரு. பி. வெங்கடசாமி.



**THIRU B. VENKATASAMY:** Hon. Speaker Sir, "To discuss the need to introduce Computer Education from the elementary education level itself in the State" I move—

"That the sum of Rs. 4,648,95,17,000 allocated under Demand No.17-Education be reduced by Rs.100/-.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1021 திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் எண் 428 திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தொழிற்கல்வி ஆசிரியர்களின் கோரிக்கைகளை அரசு பரிவுடன் நிறைவேற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கல்வி பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.4,648,95,17,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 740, டாக்டர் தே. குமாரதாஸ்.

டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரசுப் பள்ளிகளுக்குக் கணிப்பொறி வழங்குவது போல அரசு உதவி பெறும் தனியார் பள்ளிகளுக்கும் கணிப்பொறி வழங்குவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கல்வி பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.4,648,95,17,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 787, திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாகை மாவட்டம், கீழையூர் பிரதானராமபுரம் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகவும், கன்னியாகுமரி தேங்காய்ப்பட்டினம் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகவும், நாகை மாவட்டம், நாகூர் மியான் தெரு முஸ்லிம் நகரவை ஆரம்பப்

பாடசாலையை நடுநிலைப் பள்ளியாகவும், நாகை மாவட்டம், நாகை ஒன்றியம், ஆழஞ்சமங்கலம் ஆதிதிராவிட நலத் தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகவும் தகுதி உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கல்வி பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.4,648,95,17,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 650, திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவையில் ஓர் உள்விளையாட்டு அரங்கம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கல்வி பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.4,648,95,17,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2734, டாக்டர் க. கிருஷ்ணசாமி, இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் எண் 1445, திரு. ப. கோவிந்தன்.

**திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம், தாரமங்கலம் சட்டமன்றத் தொகுதி, பாப்பம்பாடி ஊராட்சி, கரட்டூரில் புதிதாகத் தொடக்கப் பள்ளி ஒன்று ஆரம்பிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கல்வி பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.4,648,95,17,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கையும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின்முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.



***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வி குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பெற்று மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அப்படி வழங்கப்பட்ட அந்தக் குறிப்புகளில், பள்ளிக் கல்வித் துறைக்காகத் தனியான குறிப்புகளும், அதேபோல உயர்கல்வித் துறைக்காக ஒரு கொள்கை விளக்கக் குறிப்பேடும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறைக்கான ஒரு குறிப்பும் வழங்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி, சட்டமன்றப் பதிவேட்டில் பதிந்துக்கொள்ள வேண்டும்@ என்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றுக்கு விளக்கம் அளிக்கின்றேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அத்தோடு, விளையாட்டுத் துறை பற்றியும் இளைஞர் நலன் பற்றியும் பதில் அளிக்க வேண்டிய தேவை ஏற்படின், மாண்புமிகு அமைச்சர் திரு. பொங்கலூர் நா. பழனிசாமி அவர்களும் உரிய விளக்கம் அளிப்பார் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் தொடங்குகிறது. விவாதத்தில் ஏறத்தாழ 12 உறுப்பினர்கள் பேச இருக்கின்றார்கள். அருள்கூர்ந்து ஒவ்வோர் உறுப்பினரும் 10 நிமிடங்களுக்கு மேல் பேச எடுத்துக்கொள்ளக் கூடாது என்று அன்போடு வேண்டுகின்றேன். முதலில் மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு.

முற்பகல் 10-40

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992-க்கு முன்னால் ஆரம்பிக்கப்பட்ட சுமார் 219 உயர்நிலைப் பள்ளிகளுக்கு அன்றைய அரசால் அங்கீகாரம் வழங்கப்பட்டது. தேர்வு எழுதினார்கள், தேர்வு முடிவு வெளியிடப்பட்டது, தேர்வானவர்களுக்கு 1992-க்கு முன்னால் எழுதியவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. 1992 ஆம் ஆண்டு எழுதிய சுமார் 15,270 பேர் தேர்விலே வெற்றி பெற்றிருந்தாலும் அவர்களுக்கு சான்றுகள் வழங்கப்படவில்லை. அதற்கு அந்த மாணவ மாணவிகள் தொடர்ந்து போராட்டத்தை நடத்திக் கொண்டேயிருந்தாலும் இந்த அரசு பொறுப்பேற்ற பின்பு மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் திரு. சோ. பாலகிருஷ்ணன் அவர்கள் தலைமையில்

@ 137 முதல் 318 வரையிலான பக்கங்களில் இணைப்புகள் I, II மற்றும் III ஆக அச்சிடப்பெற்றுள்ளன.

ஒரு குழுவை அமைத்து அதற்கு ஒரு முடிவு செய்ய வேண்டுமென்று நீங்கள் உத்தரவிட்டு, அந்த அடிப்படையில் மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் அவர்கள் அறிக்கையைச் சமர்ப்பித்து விட்டார்கள். ஆனால் எதிர்க்கட்சித் தலைவர் தலைமையில் அமைக்கப்பட்ட குழுவில் பெரும்பாலானவர்கள், அவர்களுக்குச் சான்றிதழ்களை வழங்க வேண்டுமென்று பரிந்துரைத்த பின்பும், "உச்சநீதிமன்றத்தின் தீர்ப்புக்குப் பின்புதான் கொடுக்க முடியும்; ஆகவே உச்சநீதிமன்றத்திலே ஒரு Review petition போட வேண்டும்" என்று நீங்கள் கூறிவிட்டீர்கள். தற்போது என்னுடைய கேள்வி எல்லாம் 23-9-1992 அன்று உச்சநீதிமன்றத்திலே ஆணை பிறப்பிக்கப்பட்டு, "தேர்வு எழுதி தேர்ச்சி பெற்றவர்களுக்கு. யாருக்குமே சான்றிதழ் வழங்கக்கூடாது" என்று அறிவுறுத்திய பின்பும் 9-2-1993 அன்று சுமார் 17 பள்ளிகளுக்கு, ஆயிரத்துக்கும் மேற்பட்ட சான்றிதழ்கள் வழங்கப்பட்டு இருக்கின்றன. ஆனால், நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு எவ்வளவு சான்றிதழ்கள் வழங்கப்படவில்லை என்று கல்வித் துறையிலிருந்து அவர்களுக்கு விவரம் கொடுக்கும்போது 15,870 சான்றிதழ்கள் வழங்கப்படவில்லை என்று அறிவுறுத்தியிருக்கிறீர்கள். உண்மையிலேயே 15,870 சான்றிதழ்கள் அங்கே இருக்கின்றனவா? சான்றிதழ்கள் உண்மையிலேயே இல்லாத காரணத்தால்தான் இவ்வாறு நீங்கள் செய்கிறீர்களா? அல்லது . . . . (குறுக்கீடு) சொல்லி முடித்து விடுகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அப்பாவு அவர்கள் இரண்டு, மூன்று பிரச்சினைகளை ஒன்றாக ஆக்க முயற்சிக்கிறார்.

ஒன்று, எதிர்க்கட்சித் தலைவர் பாலகிருஷ்ணன் அவர்களுடைய தலைமையில் ஒரு குழு நியமிக்கப்பட்டு, தகுந்த ஆய்வுகள் ஏதேனும் நடத்தி உரிய வழிமுறைகளைக் காண முடியுமா என்று ஒரு முயற்சி மேற்கொள்ளப்பட்டது. ஆனால் சான்றிதழ்களை வழங்க வேண்டுமென்ற அந்தக் கருத்து உச்சநீதிமன்றத் தீர்ப்புக்கு எதிராக இருக்கிற காரணத்தால் அந்தச் சான்றிதழ்களை வழங்க இயலவில்லை என்ற நிலைமையில் உச்சநீதிமன்றத்தை மறுபடியும் தீர்ப்பை review செய்யும்படி அரசு சார்பாகக் கேட்டுக்கொள்வதைத்தவிர வேறுவழியில்லை. அரசு



நீதிமன்றத்தினுடைய கண்டனத்திற்கு ஆளாகாதவாறு, முறையாகச் செயல்பட வேறு வழி இல்லாததால் அந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அதனுடைய முடிவு பின்னர் தெரியும்.

மற்றொன்று இந்த விளக்கம் சொல்லாவிட்டால், மற்ற உறுப்பினர்களுக்கு இதுபற்றி அதிகம் தெரியாக காரணத்தால், அப்பாவு அவர்கள்தான் இந்த criminal நடவடிக்கைகளைப் பற்றி அறிந்து சொல்லக்கூடிய ஒருவராக இருக்கிற காரணத்தால், விளக்கம் சொல்ல வேண்டிய கடமை எனக்கிருக்கிறது. ஒரு, ஆசிரியர் பயிற்சி மாணவர்களுக்கான record புத்தகம் பற்றி அவர்கள் கொண்டு வந்து, இந்த record புத்தகங்கள் கல்வித் துறையால் வழங்கப்பட்டுள்ளன என்று சொன்னார்கள். அது குறித்துக் கல்வித் துறைச் செயலாளர், அந்தத் துறை இயக்குநர்கள் எல்லாம் பரிசீலித்தார்கள். அந்த Record books அரசாங்கம் வழங்குவதல்ல; அந்தந்தப் பயிற்சிப் பள்ளிகள் வழங்குகிற Record books; அப்படி வழங்குவதற்கு ஒரு முறை இருக்கிறது; வழங்கி இருக்கிறார்கள். மேலும், "Record itself does not mean that they are eligible candidates or passed candidates." என்றெல்லாம் சொல்லி விளக்கம் சொல்லப்பட்டது.

அடுத்து, சான்றிதழ்களைச் சில பள்ளிகளிலே வழங்கி இருக்கிறார்கள். அதுவும் அரசாங்கச் சான்றிதழ்கள் என்று தெரிவித்திருக்கிறார்கள். அதுபற்றி என்ன விளக்கம் என்று கேட்டால், முழுவதும் படிப்பதாக இருந்தால் 5 நிமிடங்கள், 10 நிமிடங்கள் ஆகும். அப்பாவு அவர்கள் படித்துக்கொள்வார் என்ற நம்பிக்கையிலே நான் அந்த நேரத்தை எடுத்துக்கொள்ள வேண்டாம் என்பதற்காகச் சொல்கிறேன். நீதிமன்றத்திலே பல கட்டங்களிலே வழக்கு நடைபெற்றது. முதல் கட்டத்திலே எல்லாம் யார் யார் வழக்குக்குப் போகிறார்களோ அவர்களுடைய பள்ளிகள் 1991 ஆம் ஆண்டுக்கு முன்னால் நடைபெற்று வந்த பள்ளிகளாக இருந்தால், அதுவும் அம்மாணவர்களில் யாரேனும் தேர்வு எழுதியிருந்தால் அவர்களுக்கு சான்றிதழ்களை வழங்குங்கள் என்று நீதிமன்றத்திலே இரண்டு, மூன்று முறை தனிப்பட்டவர்கள் வழக்குக்குப் போனபோது, அந்த முடிவைத் தெரிவித்தார்கள். அந்தத் தேதி விவரம் நீதிமன்றத்திலே அளிக்கப்பட்ட தீர்ப்பில் இருக்கிறது. இறுதியான ஒரு தீர்ப்பிலே சொல்கிறபோது, இனி நீங்கள் யாருக்குமே வழங்கக்கூடாது என்று தீர்ப்பு வழங்கிவிட்டார்கள். அது Bench தீர்ப்பு. ஆகவே, அது மற்றத் தீர்ப்பைக் கட்டுப்படுத்தும். அதற்கு முன்னால் வழங்கியதையும் அந்தத் தீர்ப்பிலே குறிப்பிட்டு, இதுவரையிலே வழங்கியது போதும், இனி யாருக்கும்

வழங்காதீர்கள் என்ற தீர்ப்பு இருக்கிறது. அப்பாவு அவர்கள் படித்துக்கொள்வார்கள் என்ற நம்பிக்கையில் இதற்கு மேல் அவையினுடைய நேரத்தை நான் எடுத்துக்கொள்ளாமல் அந்தத் தீர்ப்பின் அடிப்படையில் வழங்கப்பட்ட சான்றிதழ்கள் குறித்துத் தேதி வாரியாக அரசாங்கத்தினுடைய பதிவேடு (record) மூலமாக நான் தெரிவித்துக்கொள்கிறேன். இன்னும்கூட ஒன்று, அப்படி ஏதேனும், தவறு இருக்குமானால், யார் தவறு செய்தாலும் நடவடிக்கை எடுக்க இந்த அரசு தயங்காது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-45*

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உங்களைப் பொறுத்தவரையில் எனக்கு முழு நம்பிக்கையுண்டு. ஆனால் 1993 ஆம் ஆண்டு சான்றிதழ்கள் வழங்கியதில் உச்ச நீதிமன்றத்தினுடைய குற்றச்சாட்டுக்கு ஆளாகாமல் இருக்கும்போது, ஏன் நீங்கள் அனைத்துச் சான்றிதழ்களையும் வழங்கக் கூடாது என்று நான் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) நான் சொல்லி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** இது சட்டமன்றம். ஆகவே, நான் பதில் சொல்லவேண்டும். நீதிமன்றத்தில் வழங்கச் சொன்ன அந்தச் சான்றிதழ்கள், அந்தப் பள்ளிகளுக்கு, அந்தக் காலகட்டத்தில் தேர்வு எழுதிய மாணவர்களுக்கு வழங்கப்பட்டன. இறுதித் தீர்ப்பு வருகிறபோது, மேல்நிலையிலே உள்ள Bench-லிருந்து இதுவரையில் வழங்கியது இருக்கட்டும். இனி யாருக்கும் வழங்கக் கூடாது என்று—வழங்கியதற்கு அனுமதி கொடுத்து, இனி வழங்குதல் ஆகாது என்று—முடிவு தெரிவித்துவிட்ட காரணத்தால், மீறிச் செயல்படுவதற்கு அரசுக்கு வழி இல்லை.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலுரையில் மேலும் விளக்கங்களை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, நான் இன்னும் ஒருசில கருத்துகளைச் சொல்ல விரும்புகிறேன். 1993-க்குப் பிறகு நீங்கள் சான்றிதழ்கள் வழங்கவில்லையென்றால், 1992-லே உச்ச நீதிமன்றத்திலே தீர்ப்பாகி இனி யாருக்கும் வழங்க வேண்டாமென்று அறிவித்த பின்பு, உச்ச நீதிமன்றத்திலும், உயர்நீதிமன்றத்திலும் எந்த ஆணையும் வழங்கவில்லை என்று கூறுகிறார்கள். அதற்கு சரியான விளக்கங்களை நீங்கள் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இருந்தபோதிலும் 219 பள்ளிகளிலே சான்றிதழ்கள் வழங்கப்படவில்லை, நிறுத்தி வைத்திருக்கிறார்கள் என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவருக்கு



அறிக்கை கொடுத்துவிட்டு, 17 பள்ளிகளிலே வழக்குமன்றத்தின் மூலம் சான்றிதழ்கள் பெற்றிருக்கிறார்கள் என்ற குறிப்பையும் நீங்கள் கொடுக்கவில்லை. அதற்கும் விளக்கம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விளக்கங்கள் சொல்கிறபோது, எண்ணிக்கையிலே வித்தியாசம் இருக்கலாம். தேதிவாரியாக அரசாங்கத்தினுடைய நடவடிக்கைகளில் அத்தனையும் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. பதிவு செய்யப்பட்ட நடவடிக்கையை நான் இந்த அவையிலே தெரிவித்திருக்கிறேன்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1995 ஆம் ஆண்டு நாம் எதிர்க்கட்சியாக இருந்தபோது, அன்றைய அரசு வெளியிட்ட 340 அரசாணையைக் கடுமையாக முரசொலியில் ஒன்றரைப் பக்க அளவிலே நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் எதிர்த்தார்கள். 1996-லே நாம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்துவிட்டோம். ஆனால் அரசாணை எண்ணை சற்று மாற்றி, 525 என்று மாற்றியிருக்கிறார்களே தவிர, என்ன நிலையில் இருந்ததோ அதே நிலையில்தான் இருக்கிறது.

உதாரணத்திற்கு ஆசிரியர்-மாணவர் விகிதம் 10-லிருந்து 15 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்ற விகிதத்தில்தான் உலகம் முழுவதும் வளர்ந்த நாடுகளில் இருக்கிறது. நம்முடைய நாட்டைப் பொறுத்தளவில், தமிழகத்தைப் பொறுத்தளவில் அரசாணை 250-ன்படி 20 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர், 35 மாணவர்களுக்கு அதிகமாக இருந்தால் இரண்டு பிரிவுகளாகப் பிரித்துக்கொள்ளலாம் என்று நடைமுறையில் இருந்ததை இப்பொழுது மாற்றி 40 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் . . .

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஓர் ஆசிரியராக இருந்து, பள்ளிகளிலே மாணவர்களிடத்திலே பழகியவர். தவறான விவரத்தைச் சொல்லி, அது ஏதோ ஒரு கட்சிக்கோ, தங்களுக்கோ ஒரு பெரிய வெற்றியாகும் எனக் கருதி ஓர் உண்மையை நாட்டுக்கு வெளிப்படுத்தியதாக எண்ணிப் பேசுவது முறையல்ல. நான் 1957 ஆம் ஆண்டிலிருந்து சட்டமன்றத்திலே இருந்து இருக்கிறேன். 1962 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட அரசாணை பற்றிய விவரம் எனக்குத் தெரியும். அதற்குப் பின்னர் நான் ஆசிரியர் பிரதிநிதியாக மேலவையிலேயும் இருந்து

இருக்கிறேன். ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், ஒரு தவறான அடிப்படையை வைத்துக்கொண்டு, அரசு ஏதோ தவறு செய்ததாக தவறான முடிவுக்கு வரவேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். என்றைக்கும் 1:20 என்பது நடைமுறைப்படுத்தப்படவில்லை. ஓர் ஆசிரியருக்கு 20 மாணவர்கள் என்பது நடைமுறையில் இல்லை. சில இடங்களில் 10 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர், 27 மாணவர்களுக்கு 3 ஆசிரியர்கள் இருக்கிற இடமெல்லாம் கூட இருக்கிறது. அது வேறு. நடைமுறைப்படுத்துவதிலே 1:20 நடைமுறைப்படுத்தலாம் என்று கருதியவர்கள் நடைமுறைப்படுத்த முடியாத காரணத்தால், வழங்கியுள்ள நிதிநிலைமை இடம் கொடுக்கிற அளவுக்கு மட்டும் இந்தக் குறிக்கோளை நிறைவேற்றலாம் என்று அப்பொழுதே தெரிவித்துவிட்ட நிலையில் ஒரு நாளும் 1:20 நடைமுறைப்படுத்தப்படவில்லை. அதை நான் நிரூபிக்க முடியும். அதனாலே 1:20 கூடாது என்பதல்ல. அந்நாளிலேயே செயல்படுத்த முடியாத நிலைமையை நான் இந்த அவையிலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உலகத்திலேயே நேபாளத்திலேதான் 75 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்ற விகிதம் இருக்கிறது. ஆகவேதான் நேபாளத்திலேயிருந்து கல்வி கற்று வருகின்றவர்கள் எல்லாம் கூர்கா வேலைக்குத்தான் தகுதியாக இருக்கிறார்களே தவிர, தரமான பொறியாளரோ, மருத்துவத் துறையிலோ மிகச் சிறந்த வகையிலே நேபாளர்கள் முன்னேறவில்லை என்றால் அங்கே மாணவர்களுடைய எண்ணிக்கை அதிகமாகவும், ஆசிரியர்களுடைய எண்ணிக்கை குறைவாகவும் இருப்பதுதான் காரணம். அதை மனதிலே வைத்து, நம்முடைய இடைநிலைப் பள்ளி ஆசிரியர்கள் . . .

முற்பகல் 10-50

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கல்வித் துறையிலே மிகுந்த அக்கறை உடையவர். என்னோடு அடிக்கடி பழகக்கூடியவர். 50 மாணவர்கள் இருக்கிற பள்ளிகளிலே சில இடங்களில் இரண்டு ஆசிரியர்கள் இருக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. அது ஏற்கெனவே உள்ள நிலைமைகள் காரணமாக இருக்கிறது. அதற்காக, அங்கு ஒன்றும் தேர்ச்சி அதிகமாக இல்லை. மாணவர்கள் எண்ணிக்கை குறைவாகவும், ஆசிரியர்கள் எண்ணிக்கை விகிதாசாரத்திலே அதிகம் இருக்கிற உயர்நிலைப் பள்ளிகளிலேகூட தேர்ச்சி நிலையில் மாணவர்களுடைய



விகிதாசாரம் மிக அதிகப்படுத்தப்படவில்லை. அதிக மாணவர்கள் இருந்து ஆசிரியர்கள் சற்று குறைவாக இருக்கிற இடத்திலேகூட தேர்ச்சி அதிகம் இருக்கிறது. அதற்கு அப்பாவு அவர்கள் ஆசிரியர் என்ற முறையில் எப்படி அவர்கள் செயல்படுகிறார்கள் என்று தயவுசெய்து விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதோடு இதை நிறுத்திவிடுகிறேன். ஏனென்றால், எதிர்க்கட்சியிலே இருக்கும்போது நீங்கள்தான் இதை எதிர்த்திருக்கிறீர்கள். ஆளும் கட்சிக்கு வந்ததற்குப் பிறகு உங்களுடைய நிலை என்ன என்பதை நான் பதிவு பண்ணுவதற்காகத்தான் கேட்டேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** இப்போது எதிர்க்கட்சியிலே இருக்கிற காரணத்தால் மாண்புமிகு அப்பாவு அவர்கள் எதிர்க்கலாம். ஆனால், அரசு விளக்கம் சொல்ல வேண்டுமே, அந்தக் கடமையைத்தான் நான் செய்கிறேன்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அடுத்து பட்டதாரி ஆசிரியர்கள் இடைநிலை ஆசிரியர் பணியிடத்திலே பணியாற்றலாம், இடைநிலை ஆசிரியர்களுக்குரிய சம்பளத்தைப் பெற்று என்று இருந்தது கடந்த கால ஆட்சியிலே நிறுத்தப்பட்டுவிட்டது. அவர்கள் 1½ இலட்சம் பேர் தமிழகத்திலே படித்து வேலையில்லாமல் கிட்டத்தட்ட 35, 40 வயது வரை இருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு இது நன்றாகத் தெரியும். அவர்களை நேரிலே சந்தித்தபோது இந்த ஆண்டு 6, 7, 8 வகுப்புகளில் இடைநிலை ஆசிரியர் பணியிடத்திலே எல்லா பட்டதாரி ஆசிரியர்களையும் நியமிக்கலாம் என்ற ஒரு கருத்துருவைச் சொன்னார்கள். அதை இந்த ஆண்டு நடைமுறைப்படுத்த வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, துணைத் தலைவர் அவர்களும், அவையும் என்னை மன்னித்துக்கொள்ள வேண்டும். ஏனென்றால், அடிக்கடி விளக்கம் சொல்லி, ஏதோ நான் உறுப்பினருடைய பேச்சுக்கு இடையூறு செய்வதாகத் தயவுசெய்து கருதக் கூடாது.

அந்தக் கொள்கையிலே எனக்கு உடன்பாடு உண்டு. பட்டதாரி ஆசிரியர்களை நடுநிலைப் பள்ளி இடைநிலை ஆசிரியர்களின் இடத்திலே நியமிப்பதாக இருந்தால், நியமித்தால் நல்லதுதான் என்பது என்னுடைய கருத்தும்கூட. ஆனால், ஏற்கெனவே, நீதிமன்றத்திலே சில பேர் வழக்குப்

போட்டதனுடைய விளைவு இடைநிலை ஆசிரியர் பணியிடத்திலே பட்டதாரி ஆசிரியர்களை தனியார் பள்ளிகளில் நியமித்தாலும், அதற்கு இனி அனுமதி வழங்கக் கூடாது என்று தீர்ப்பளிக்கப்பட்டது. ஏனென்றால், அதுவரையிலும் நாங்கள் அனுமதி வழங்கினோம். இப்போது, அரசாங்கம் அதை ஒரு கொள்கையாக ஏற்றுக்கொண்டு, அந்தக் கொள்கை அடிப்படையிலே இடைநிலை ஆசிரியர் பணியிடத்திலே பட்டதாரி ஆசிரியர்களை நியமிப்பதை ஏற்பதில்லை என்ற அந்தக் கருத்து அடிப்படையிலே தனியார் பள்ளிகளுக்குப் பதில் சொல்லிக்கொண்டு வந்தது. இப்போது அரசாங்கம், கொள்கையை மாற்றி, நீதிமன்றத்திலே அரசே கொள்கையை மாற்றிக்கொண்டது, ஆகவே, நீதிமன்றம் அனுமதிக்க வேண்டும் என்று கேட்கலாமா என்ற நோக்கத்தில் நாங்கள் பரிசீலிக்க இருக்கிறோம். இன்னும் ஒன்று, நீதிமன்றத்திலே தெரிவித்தபடி Secondary Grade ஆசிரியர்கள் பெறுகிற பயிற்சியைப் பட்டதாரி ஆசிரியர்கள் பெறவில்லை. ஆகவே, Secondary Grade இடத்தில் நியமிக்கக் கூடாது என்று தொடக்கப் பள்ளிகளுக்கான நியமனம் பற்றிய ஆணையிலே அப்படித் தெரிவித்திருக்கிறார்கள். இருந்தாலும், அரசு காலத்தின் தேவையைக் கருதி, இப்படி இடைநிலை ஆசிரியர்களுக்கான இடத்திலே பட்டதாரி ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டால், நியமிக்கப்பட்ட அளவுக்கு ஏற்றுக்கொள்வதற்கு அரசு ஒத்துக்கொள்ளலாம் என்ற கருத்தை நீதிமன்றத்திலே தெரிவிக்கலாமா என்ற ஆலோசனையிலே நாங்கள் இருக்கிறோம். அதைத் தெரிவித்து, நீதிமன்றத் தீர்ப்பு வந்தால் தவிர, எங்களிடத்திலே விண்ணப்பித்துள்ள தனியார் பள்ளிகளுக்குக்கூட நாங்கள் இப்போது அனுமதி கொடுப்பதற்கு எங்களுக்கு உரிமை இல்லாமல் இருக்கிறது.

**திரு. மு. அப்பாவு:** முடிவிலே உரிமை இல்லையென்று சொல்லிவிட்டீர்கள். முழு உரிமையும் உங்களுக்குத்தான்; நமக்குத்தானே இருக்கிறது. நீங்கள் பட்டதாரி ஆசிரியர்களை இடைநிலை ஆசிரியர்கள் பணியிடத்தில் நியமிக்கலாம் என்று முன்பு இருந்த முறையைக் கொண்டு வந்தால் போதும்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** அதிலே இரண்டு தவறு. அரசுக்கு முழு உரிமை இருக்கிறது என்றால்கூட, நீதிமன்ற தீர்ப்புக்குக் கட்டுப்பட்டுத்தான் இந்த அரசு இயங்க முடியும். இல்லையென்றால் contempt of Court ஏற்படும். இயக்குநர் அவர்களுக்கு அபராதம் போடுகின்ற நிலைமை ஏற்கெனவே ஒரு வழக்கிலே வந்தது. அந்த நிலைமைக்கு அதிகாரிகள் தயாராக இருக்க மாட்டார்கள். இன்னொன்று, கொள்கை



முடிவு எடுக்கிறபோது, ஏற்கெனவே உள்ள ஒரு துறையைச் சார்ந்தவர்கள் பாதிக்கப்படுவதாக வழக்குப் போட்டால் அந்த வழக்குக்கும் பதில் சொல்லியாக வேண்டும்.

**திரு. மு. அப்பாவு:** எந்த அளவிலாவது பதில் சொல்லி, இடைநிலை பணியிடத்திலே பட்டதாரி ஆசிரியர்களை நியமிக்கின்ற பழைய நிலையைக் கொண்டுவர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

1991-க்கு முன்னால் ஆரம்பிக்கப்பட்ட அரசு பள்ளிகளில் எல்லாம், மேல்நிலைப் பள்ளிகளில், 8 பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டு, ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால், தனியார் பள்ளிகளிலும், சிறுபான்மையினர் நடத்துகின்ற பள்ளிகளிலும் 8 ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை. 5 ஆசிரியர்கள்தான் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களை நேரிலே சந்தித்துப் பேசியபோது, இது நிதித் துறையிலே இருக்கிறது என்று சொல்லி, செயலர் அவர்களை அழைத்து . . .

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** ஏற்கெனவே 5 ஆசிரியர்கள்தான் கொடுத்தார்கள். 8 ஆசிரியர்கள் தேவைப்படுகிற படிப்புக்கு 5 ஆசிரியர்கள் வழங்குகின்ற நிலைமை இடைக்காலத்திலே ஏற்பட்டுவிட்டது. அதை மாற்றிக் குறைந்தது +2 வகுப்புகளுக்கு இரண்டு ஆண்டுகளில் 8 ஆசிரியர்கள் வழங்க வேண்டுமென்று ஆணையிடப்பட்டிருக்கிறது. நடைமுறைப்படுத்துவதிலே ஏற்பட்ட பழைய குறைகளை இப்போது உடனே தீர்த்துவிட முடியாது. ஏற்கெனவே, தொய்விழந்துவிட்ட அந்த இடங்களை உடனுக்குடன் நிரப்ப முடியாத காரணத்தால், இப்போது கிடைக்கின்ற அதிக இடங்களைக் கொண்டு கூடுமானவரையில் பரவலாக ஆசிரியர்கள் இல்லாத குறையைப் போக்க முயற்சிக்கப்படுகிறது.

*முற்பகல் 10-55*

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசு பள்ளிகளில் நீங்கள் நியமித்தது போன்று தனியார் பள்ளிகளிலும், சிறுபான்மையினர் நடத்துகின்ற பள்ளிகளிலும் சுமார் 120 பணியிடங்கள்தான் இருக்குமென்று நான் எண்ணுகிறேன்; ஆகவே, நீங்கள்கூட நம்முடைய கல்விச் செயலாளரை அழைத்து 500 பணி இடங்களையாவது வழங்குவதற்கு முயற்சி செய்கிறேன் என்று சொன்னீர்கள்; அதற்கு நான் நன்றி கூறுகின்றேன்; அந்த அளவில் 14, 15 ஆண்டுகளாக . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 10 நிமிடங்கள்தான் உங்களுக்குக் கொடுக்கச் சொன்னார்கள். 16 நிமிடங்கள் ஆகிவிட்டன; இன்னும் ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஐந்து நிமிடங்களாவது கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்னும் ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உயர்நிலைப் பள்ளிகளிலும் அதே நிலைதான்; கடந்த காலங்களில் 3 பணியிடங்கள்தான் வழங்கப்பட்டு இருக்கின்றன. நீங்கள் ஆட்சி பொறுப்பேற்ற பின்பு 5 பட்டதாரி பணியிடங்கள் அரசு பள்ளிகளிலே கொடுத்து இருக்கின்றீர்கள். அதேபோன்று இதையும் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1991-க்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் - சிறுபான்மையினர் நடத்துகின்ற பள்ளிகளுக்கு அரசு மானியம் வழங்கி இருக்கிறது. 1991-க்குப் பிறகு ஆரம்பிக்கப்பட்ட பள்ளிகளுக்கு அரசு மானியம் ஒருபோதும் வழங்கவில்லை என்று அவர்களிடம் எழுதி வாங்கி, அவர்களுக்கு அங்கீகாரம் வழங்கி இருக்கின்றீர்கள். ஆனால், ஏற்கெனவே ஓர் உயர்நிலைப் பள்ளி நடத்துகின்றவர் 8 ஆம் வகுப்பு வரை அரசு மானியம் பெற்றவர்; ஓர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்றுகின்றவர்; உயர்நிலைப் பள்ளி வரை அரசினுடைய மானியம் பெற்றவர்; தமிழகத்தில் இருக்கின்ற உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் கிட்டத்தட்ட 40 சதவீதம் பள்ளிகள் தனியார் சிறுபான்மையினர் மூலம் நடத்தப்படுகின்றன; கிருத்தவர்கள், இராமகிருஷ்ணா மிஷன், அதேபோன்று முஸ்லீம்கள் போன்ற சிறுபான்மையினர் நடத்துகின்ற பள்ளிகள் 40 சதவீதம் பள்ளிகள் இருக்கின்றன; அரசு பள்ளிகள் 60 சதவீதம் இருக்கின்றன; இந்த அரசு பொறுப்பேற்ற பின்பு கிட்டத்தட்ட 250-க்கு மேற்பட்ட உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளை நீங்கள் ஆரம்பித்து இருக்கின்றீர்கள். அதேபோன்று தனியார் பள்ளியில் இருக்கின்ற இடங்களிலும் அதே அளவு பள்ளிகளை நீங்கள் குறைந்தபட்சம் 200 பள்ளிகளையாவது தரம் உயர்த்துவதற்கு அனுமதித்து இருக்க வேண்டும். ஆனால், கிட்டத்தட்ட 120 பள்ளிகளுக்குத்தான் தரம் உயர்த்தப்பட்டு இருக்கிறது. 60 சதவீதம் பள்ளிகளை, அதாவது கிட்டத்தட்ட 300 பள்ளிகளைத் தரம் உயர்த்தி இருக்கின்றபோது, சிறுபான்மையினர்,



தனியார்கள் நடத்துகின்ற தரம் உயர்த்தப்பட்ட கிட்டத்தட்ட 120 பள்ளிகளுக்கும் நீங்கள் அரசு மானியம் வழங்க வேண்டும். காரணம் அவர்கள் மாணவர்களிடம் ஒரு ரூபாய்கூட நிதி வசூல் செய்யவில்லை. நீங்கள் பள்ளியை ஆரம்பித்தவுடன் மாணவர்களுக்கு மதிய உணவு வழங்குகிறீர்கள்; அவர்களுக்கு இலவச நோட்டுப் புத்தகங்களை வழங்குகிறீர்கள். ஆனால் ஆசிரியர்களோ படித்து முடித்து, தகுதி வாய்ந்த ஆசிரியர்கள், பட்டதாரி ஆசிரியர்கள், முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள், இடைநிலை ஆசிரியர்கள், தகுதியானவர்கள் 10 ஆண்டுகள், 15 ஆண்டுகள் இலவசமாகவே கல்வியைப் போதித்து வருகின்றார்கள். ஆகவே, 1991-க்கு பின்னர் ஆரம்பிக்கப்பட்ட பள்ளிகளுக்கு ஒருபோதும் இனிமேல் மானியம் வழங்கப்படமாட்டாது என்று அரசு கொள்கை முடிவு எடுத்து சட்டமாக இயற்றியதாகக் கேள்விப்படுகிறேன்; எனக்கு அதுபற்றித் தெரியவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலுரையில் . . . .

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, மிக முக்கியமான ஒரு செய்தி இது. இப்போது ஆண்டுக்கு 500 கோடி ரூபாய்க்கு மேல் கல்வித் துறையிலே மட்டும் செலவு உயர்வு; இந்த 4 ஆண்டுகளில் 2 ஆயிரம் கோடி ரூபாய் அதிகச் செலவு; ஏற்கெனவே உள்ள நிலையிலிருந்து இப்போது இரண்டு மடங்கு இந்த 4 ஆண்டுகளில் கல்விச் செலவு; அதற்கு பல நியாயமான காரணங்களும் உள்ளன. சில, மத்திய அரசினுடைய ஊதியத் திட்ட அடிப்படையை ஏற்றுக்கொண்டதன் காரணமான விளைவும் அதிலே இருக்கிறது; அது நியாயமா அல்லவா என்பதல்ல; உள்ள நிலைமை. 1990-91-வது ஆண்டிலேயே கல்விச் செலவு அதிகமாகிறது என்ற அடிப்படையில், யார் யார் புதிதாக வகுப்பு ஆரம்பிக்க விரும்புகிறார்களோ, மேல்நிலையிலே வகுப்புகளைத் தொடங்குகிறார்களோ, அதற்கு அரசாங்கத்தினுடைய உதவி நிதியைக் கேட்காவிட்டால் அவர்கள் தொடங்கலாம் என்று அனுமதிக்கப்பட்டது. அது ஒரு கொள்கை முடிவாக எடுக்கப்பட்டு, 1990-91-க்கு பின்னர் தொடங்கப்படுகிற எந்த மேல் வகுப்புகளுக்காகவும் அரசு ஆசிரியர் மானியம் வழங்க இயலாத நிலைமையைத் தெரிவித்து, அதையும் ஏற்றுக்கொண்டு தொடங்கியவர்கள்தான் அப்போது முதல் தொடங்கி இருக்கிறார்கள். ஆகவே, 1990-91 ஆம் ஆண்டுக்குப் பின்னர் தொடங்கியவர்கட்கு இப்போது நாம் அவர்களுக்கெல்லாம் நிதி வழங்காமல் சிறுபான்மைப் பள்ளிக்கூடத்திற்கு மட்டும் வழங்க முடியாது; பெரும்பான்மைப் பள்ளிக்கூடத்திற்கும் வழங்க வேண்டும்; ஏற்கெனவே ஒரு கொள்கை அடிப்படையிலே ஏற்றுக்கொண்ட ஒரு திட்டத்தை இன்னும் பெரும்பான்மையினருடைய பள்ளிக்கூடங்களுக்கு

நடைமுறைப்படுத்துவதற்கு 30 கோடி ரூபாய் தேவை என்ற அடிப்படையில் முயற்சித்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே, சிறுபான்மைக்கு ஒரு நீதி, பெரும்பான்மைக்கு ஒரு நீதி என்று தனித்தனி நீதி, நிதி வழங்குவதில் ஏற்பட முடியாது. அப்படி ஏற்பட்டால், நீதிமன்றத்திலே பதில் அளிக்கிற போது நம்முடைய பதிலை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். ஆகவே, அந்தக் கொள்கை முடிவை மாற்றுவதாக இருந்தால், நூறு கோடி ரூபாய் அதற்கு மேலும் தேவை. எல்லாவற்றிற்கும் மானியம் கொடுத்துவிட்டு, எல்லாவற்றிலேயும் நம்முடைய வரியைக் குறைத்துவிட்டு, மேலும் ஆயிரம் கோடி ரூபாய் கல்விக்கு மானியம் என்று சொன்னால், உலக வங்கியிலேகூடக் கடன் கிடைக்காது.

*முற்பகல் 11-00*

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு அமைச்சருடைய விளக்கத்திற்கு நன்றி தெரிவித்துகொள்கிறேன். 1991-க்குப் பிறகு ஆரம்பிக்கப்பட்ட அனைத்துப் பள்ளிகளின் எண்ணிக்கை, பெரும்பான்மையோர் நடத்துகின்ற பள்ளிகளையும் சேர்த்துதான் மொத்தம் 120 இருக்கிறது. நீங்கள் 300 பள்ளிகளை நடத்துகின்றீர்கள். 60 சதவீதப் பள்ளிகளை நடத்துகின்றீர்கள். அவர்கள் 40 சதவீதப் பள்ளிகளை நடத்துகின்றார்கள். 120 பள்ளிகளைத் தரம் உயர்த்தி நடத்துகின்றார்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுவும் தவறு, அரசாங்கம் ஒட்டுமொத்தமாக 60 சதவீதப் பள்ளிகளை நடத்துகிறது. தனியார் ஒவ்வொருவரும் தனித் தனியே நடத்துகின்றார்கள். அதுவும் அவர்கள் விரும்பினால்தான் மேல் வகுப்பை நடத்துகிறார்கள். ஆகவே, தனியார் நடத்துகின்ற பள்ளிகளைச் சதவீத அடிப்படையில், ஒட்டுமொத்தமாக 40 சதவீதம் என்று சொல்லக்கூடாது. அதிலே சிறுபான்மையினர் நடத்துகின்ற பள்ளிகள் இருக்கின்றன; பெரும்பான்மையினர் நடத்துகின்ற பள்ளிகளும் இருக்கின்றன. ஆகவே, இதிலே பல்வேறு பிரிவுகள் இருக்கின்றன. அது முக்கியமல்ல. நிதி வசதிதான் மிக முக்கியமானது.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிதி ஆதாரத்தைத் தேடி, அவர்களுக்கு, அந்தப் பணியிடங்களுக்கு நிதி உதவி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தமிழகத்திலே . . . (மணியடிக்கப்பெற்றது) நான் ஒரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 21 நிமிடம் பேசி இருக்கிறீர்கள். உட்காருங்கள். திரு. பி. இராசமாணிக்கம்.



**திரு. மு. அப்பாவு:** உடனே பேசி முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 21 நிமிடம் பேசி இருக்கிறீர்கள். உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. பி. இராசமாணிக்கம்.

***திரு. பி. இராசமாணிக்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு நாட்டினுடைய பொருளாதார வளர்ச்சிக்கும், சமுதாய வளர்ச்சிக்கும் மிக அடித்தளமாக அமைவது கல்வி. குறிப்பாக, தனி மனித வளர்ச்சிக்கும், வெற்றிக்கும் ஒழுக்கத்திற்கும், சிந்திக்கும் திறனுக்கும் மிக மிக அவசியம் கல்வி.

இந்தக் கல்வியை ஒரு காலத்தில் உயர்ந்தோர்களே பெறுகிற வாய்ப்பும் வசதியும் இருந்த நிலை மாறி, இப்போது ஏழையெளியவர்கள், மிகமிகச் சாமான்யர்கள், குறிப்பாக வறுமைக்கோட்டிற்குக் கீழே இருப்பவர்கள், கிராமப்புறத்தைச் சேர்ந்தவர்கள், கணினிக் கல்வியைப் பெறுகின்ற ஒரு அரிய வாய்ப்பை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களும் தந்து, இந்த நாட்டில், தமிழகத்தில் கல்வியில் மறுமலர்ச்சியை உருவாக்கித் தந்துள்ளார்கள் என்று சொன்னால் மிகையாகாது.

கல்லாமையை இல்லாமை ஆக்க வேண்டும் என்ற உன்னதமான குறிக்கோளுடன் நமது அரசு 4,648.95 கோடி ரூபாயைக் கல்விக்காக ஒதுக்கீடு செய்ததோடு, ஆதிதிராவிடர் நலத் துறை மூலமாக பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மூலமாக கல்விக்காக நிதியொதுக்கி, சற்றொப்ப 5,000 கோடி ரூபாயைக் கல்விக்காகச் செலவு செய்கிற ஓர் அரசு, இந்தியாவில் நம்முடைய அரசுதான் என்பதைச் சொல்லிக்கொள்வதில் நான் பெருமைப்படுகிறேன். எனவே, மாணவர்கள் எளிதில் கல்வி பெற, அறிவியல் கல்வி பெற, கணினிக் கல்வி பெற, அதுவும் இலவசமாகப் பெற, கற்றல், கற்பித்தல் என்ற அடிப்படையில் கல்வி வளர்ச்சியில் அக்கறை கொண்ட அரசு நம்முடைய அரசு. எனவே, இந்த அரசினுடைய திட்டங்களை நான் பாராட்டுகிறேன்.

குறிப்பாக, தொடக்கக் கல்வி, பள்ளிக் கல்வி, உயர்நிலைக் கல்வி, கல்லூரிக் கல்வி என்ற நிலையில் பாகுபடுத்தி, தொடக்கக் கல்வியை எல்லா மாணவர்களும், குறிப்பாக கிராமப்புற மாணவர்கள் கட்டாயம் பெற வேண்டுமென்ற திட்டத்தின் அடிப்படையில், தொடக்கக் கல்வி இயக்கம், வாழ்வொளித் திட்டம் போன்ற திட்டங்களைத் தீட்டியுள்ளது.

கடந்த ஆண்டு கணினிக் கல்வி 666 மேல்நிலைப் பள்ளிகளில் வழங்கப்பட்டது. இந்த ஆண்டு அனைத்து உயர்நிலைப் பள்ளிகளில், மேல்நிலைப் பள்ளிகளில் கணினிப் பயிற்சியை வழங்க வேண்டுமென்று தந்திருக்கிற அறிவிப்பிற்காக நமது அரசை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கிராமங்கள்தோறும், எல்லாக் கிராமங்களிலும், குறிப்பாக, ஒரு கிலோமீட்டர் தூரத்திற்கு ஒரு தொடக்கப் பள்ளி என்று சொல்கிற அளவிற்கு, இதுவரை 712 புதிய தொடக்கப் பள்ளிகள் நம்முடைய அரசால் உருவாக்கப்பட்டிருக்கின்றன. எதிர்காலத்தில் 100 தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாகவும், 50 நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், 50 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் உயர்த்துவதாக அறிவித்திருக்கிற இந்த மகத்தான அரசை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒரு காலத்தில் தனியார் கல்விக்கூடங்களில் அளிக்கப்படுகின்ற கல்விதான் தரம் உயர்ந்தது என்றிருந்த நிலை மாறி, இன்றைக்கு அரசினுடைய கல்விக்கூடங்கள் அனைத்திலும் அடிப்படை வசதிகள், குறிப்பாக ஆய்வகங்கள், கட்டட வசதிகள், கழிப்பிட வசதிகள், பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகள், ஆசிரியர் பற்றாக்குறை இல்லாமை போன்றவற்றைக் கவனித்து, பல்வேறு சாதனைகளைப் படைத்த அரசாக இந்த அரசு விளங்கி வருகிறது.

மாவட்டந்தோறும் 50 மாணவர்கள், 50 மாணவியர்களை ஊக்கப்படுத்துகின்ற வகையில் அவர்களுக்கு உதவித்தொகை; அதைப்போல, பள்ளியிறுதித் தேர்வில் முதலிடம் பெறும் 3 மாணவியர்கள், 3 மாணவர்களுக்கு அரசு உதவித் தொகை வழங்குவது, கிராமப்புற மாணவர்களுக்குப் பொறியியல் கல்வியில், மருத்துவக் கல்வியில் 15 விழுக்காடு இட ஒதுக்கீடு அளித்தது; சாதிச் சான்றுகள் வழங்குதல் போன்ற பல்வேறு அம்சங்களை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுபோல, ஆதிதிராவிடர் மாணவர்களுக்கு சிறப்பு மேற்பார்வைக் கல்வித் திட்டம் என்ற பெயரில் 625 உயர்நிலைப் பள்ளிகளிலும், 375 மேல்நிலைப் பள்ளிகளிலும் ஊக்கக் கல்வி பெறுகிற வகையில் ஒரு சிறப்புத் திட்டத்தை இந்த அரசு அறிவித்து இருக்கிறது. அதுபோல, பிற்படுத்தப்பட்ட மாணவிகளுக்கு ஐந்தாம் வகுப்பு வரை 60,000 மாணவிகளுக்கு வருடத்திற்கு ரூ.500 வீதம், 6 ஆம் வகுப்பு முதல் 30,000 மாணவிகளுக்கு மாதந்தோறும் ரூபாய் 100 என்கிற வீதத்தில் மாணவிகளை ஊக்கப்படுத்துகிற வகையில் இந்த அரசு பல்வேறு திட்டங்களைத் தந்திருக்கிறது.



முற்பகல் 11-05

தந்தை பெரியார் அவர்கள். சமஉரிமை சமூகநீதி பெறவேண்டுமானால் பெண்களுக்குக் கல்வி மிக மிக அவசியம் என்று சொன்னார்கள். கல்வியல்ல மின்னாள், வாழ்வில் என்றும் மின்னாள் என்று பாவேந்தன் அவர்கள் சொன்னார்கள். கல்வி இல்லா பெண்கள் களர் நிலம் என்று கூறியுள்ளதற்கேற்ப, அந்நிலத்தில் புல் விளைவிக்கலாம், நல்ல புதல்வர்களை விளைவிக்க முடியாது என்பதை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், கல்வி அமைச்சர் அவர்களும், நன்கு உணர்ந்த காரணத்தால் பெண் கல்விக்கு அதிகமான சலுகைகளை வழங்கி, இந்த நாட்டில் பெண்கள் முன்னேற்றத்திலே அக்கறை கொண்டுள்ள அரசு இந்த அரசு என்பதை நிரூபித்து இருக்கிறார்கள், இந்த நிதிநிலை அறிக்கை மூலமாக என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்போது பயிற்று மொழி பிரச்சினைக்குரிய விவாதப் பொருளாக ஆகி நீதிமன்றம் வரை வந்திருக்கிறது. எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்பது இந்த அரசினுடைய கொள்கை. தமிழைப் படி, தமிழால் படி என்பது இந்த அரசினுடைய கொள்கை. அதை நிலைநிறுத்துவதற்காக இந்த அரசு பல்வேறு வகைகளில் முயற்சிகள் மேற்கொண்டதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மும்பையில்கூட, அங்கிருக்கிற மாநகராட்சிப் பள்ளிகளில், 46 பள்ளிகளில் 1 ஆம் வகுப்பிலிருந்து 7 ஆம் வகுப்பு வரை பயிற்று மொழி தமிழாக இருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொண்டு, தமிழகத்திலும் இந்த நிலை வர வேண்டும்; நம்முடைய முதலமைச்சர் அவர்களும் அதற்கான முயற்சிகளை அதிக அக்கறையோடு எடுத்து வருகிறார்கள்.

நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களையும் கடந்த இரண்டு ஆண்டுகாலமாக வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்வது, ஒரத்தநாட்டில் ஓர் அரசு மகளிர் கல்லூரி வேண்டுமென்பது. அங்கே கிட்டத்தட்ட 20 மேல்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன; 25 உயர்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன; 10 நடுநிலைப் பள்ளிகள் இருக்கின்றன; 150-க்கும் மேற்பட்ட தொடக்கப் பள்ளிகள் இருக்கின்றன. எனவே, அங்கே இருக்கிற எங்களுடைய தொகுதி மக்கள் ஒரு மகளிர் கல்லூரி வேண்டுமென்று விரும்பிக் கேட்கிறார்கள். அதற்காக ஒரத்தநாட்டில் இருக்கிற வர்த்தக சங்கம் 50 இலட்ச ரூபாயை நிதியாக இரண்டாண்டு காலத்திற்கு முன்பே வழங்கியிருக்கிறது. எங்களிடம் எங்கள்

பெயரில் வங்கிக் கணக்கிலே இருக்கிறது. நாடாளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர் என்ற அடிப்படையில், தஞ்சை நாடாளுமன்ற உறுப்பினர் அவர்கள் தொகுதி வளர்ச்சி நிதியிலிருந்து 50 இலட்ச ரூபாய் தர இருக்கிறார்கள். மாவட்ட ஆட்சியர் நிர்வாகத்தில் இருக்கிற சத்திரத்திற்குச் சொந்தமான இடம் உடனடியாக கல்லூரி அமைப்பதற்கு ஏற்றதாக இருக்கிறது. எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், பேராசிரியர் பெருந்தகை அவர்களும் எங்களுக்கு இந்த ஆண்டு, ஒரு கல்லூரியைத் தொடங்குவதற்கு உங்களுடைய சிறப்பான அறிவிப்பை இந்த மன்றத்திலே வெளியிட வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, திருவாரூர் மாவட்டம், பேரையூர் அரசு உயர்நிலைப் பள்ளியை அரசு மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுபோல, நீடாமங்கலத்தில் ஓர் அரசு பெண்கள் உயர் நிலைப் பள்ளியைத் தொடங்கிட வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன. ஒரத்தநாட்டில் நீண்டகாலமாக அரசு கலைக் கல்லூரி இயங்கி வருகிறது. அதற்குச் சரியான கட்டட வசதி இல்லை. அதை வழங்குவதற்கு நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மன்னார்குடியில் இயங்கி வருகிற அரசுக் கல்லூரியிலே முதுகலைப் பட்ட வகுப்புகளை இந்த ஆண்டு தொடங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அரசு, கல்விக்காக பல்வேறு சலுகைகளைச் செய்கிற அரசு என்று நம்முடைய நிதிநிலை அறிக்கையில் இருந்து நான் புள்ளிவிவரத்தோடு கூற முடியும். அந்த அடிப்படையில் தொழிற்கல்வி ஆசிரியர்களை நியமனம் செய்திட, குறிப்பாக கலை ஆசிரியர்களையும் நியமனம் செய்திட அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-10

அரசு உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளிகளில் மார்க்கர் பணி என்ற பணியிடம் ஏற்படுத்தப்பட்டு 200-க்கும் மேற்பட்டவர்கள் நிரந்தரப்படுத்தப்படாமல் இருக்கிறார்கள். அவர்களையும் நிரந்தப்படுத்த வேண்டுமென்று கேட்டு, இந்த அரிய வாய்ப்பைத் தந்தமைக்காக நன்றி சொல்லி விடைபெற்றுக்கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன்.



**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மிக முக்கியமான ஒரு துறை கல்வித் துறை என்பதை இந்த நாடு அறியும். அரசமைப்புச் சட்டம் அனைத்துக் குழந்தைகளுக்கும் Primary Education கட்டாயமாகக் கொடுக்கப்பட வேண்டுமென்று சுட்டிக்காட்டியிருப்பதை ஏற்று நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கின்ற அரசு தமிழக அரசு என்று கொள்கைக் குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. நான் இந்த நேரத்தில் Policy Note-லே சொல்லப்பட்டிருக்கிற பல விஷயங்களை அரசினுடைய கவனத்திற்கு, நடைமுறையிலே அதிலே ஏற்பட்டிருக்கிற சில பிரச்சினைகளைச் சுட்டிக்காட்டுவதற்குக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இப்போது தமிழக அரசு, எல்லா உயர்நிலைப் பள்ளிகளிலேயும் Computer கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. நான் அதை வரவேற்கிறேன். ஆனால், நம்முடைய Primary Schools உள்ளிட்ட பல பள்ளிகளிலே இருக்கின்ற நிலை என்னவென்றால், பல வகுப்புகளிலே மாணவர்கள் உட்காருவதற்குப் போதுமான பெஞ்ச் வசதி இல்லை என்ற ஒன்றை நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

நாம் Computer கல்வி ஏற்படுத்துவதற்கு முயற்சி எடுக்கின்ற நேரத்திலே இப்படிப்பட்ட பிரச்சினைகளிலும் தமிழக அரசு கட்டாயமாகக் கவனம் செலுத்த வேண்டுமென்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோன்று, இன்னொரு பிரச்சினையைக்கூட நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். போதுமான இடவசதிகள் பல பள்ளிக்கூடங்களிலே இல்லை என்ற ஒரு நிலைமை இருக்கிறது. போதுமான ஆசிரியர்கள் பல பள்ளிக்கூடங்களிலே இல்லை என்பதையும் நாம் பார்க்கிறோம். அதுவும் குறிப்பாக, அரசுப் பள்ளிக்கூடங்களிலே போதுமான ஆசிரியர்கள் இல்லாமல் இருக்கிற நேரத்திலே தனியார் பள்ளிக்கூடங்களிலே ஓர் இடத்திற்கு 4, 5 ஆசிரியர்களை நியமனம் செய்து வைத்துக்கொண்டு அவர்களுக்குச் சம்பளம் கிடைக்கவில்லை என்று கோரிக்கையைக் கொடுப்பதும், அதற்காக வேண்டி பிரச்சினைகள் ஏற்படுவதும் இன்று நடந்து கொண்டிருக்கின்றன. இந்த முரண்பாட்டை நிச்சயமாக மாற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அரசாங்கத்தைப் பொறுத்த அளவில், ஒரு கொள்கை என்ற முறையிலே அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதாவது, இந்த ஆட்சி வந்ததற்குப் பிறகு 965 ஆரம்பப் பள்ளிகளையும், 412 நடுநிலைப்பள்ளிகளையும் உருவாக்கியதோடு 29,234 இடைநிலை ஆசிரியர்களையும் நியமனம் செய்துள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. ஆனால், இந்தக் கொள்கைக் குறிப்பிலே ஒன்றைக் குறிப்பிடுவதற்கு மறந்து விட்டார்களா, அல்லது வேண்டுமென்றே விட்டுவிட்டார்களா என்று தெரியவில்லை. அதாவது இந்த 4

ஆண்டுகளில் எத்தனை பேர் ஓய்வு பெற்றுச் சென்றார்கள்; எத்தனை பேர் இறந்துவிட்டார்கள்; பதவி உயர்வு பெற்று எத்தனை பேர் போனார்கள்; அந்த இடங்கள் காலியாக வைக்கப்பட்டிருக்கின்றனவா; அல்லது அந்த இடங்கள் எல்லாம் பூர்த்தி செய்யப்பட்டிருக்கின்றனவா? அரசுப் பள்ளிகளில் போதுமான ஆசிரியர்கள் இல்லாதது குறித்து, நாங்கள் அந்தப் பள்ளிகளிலே விசாரிக்கின்ற நேரத்தில் ஓய்வு பெற்றுச் சென்றவர்கள், இறந்துவிட்டவர்கள், பதவி உயர்வில் சென்றவர்களுடைய இடங்கள் எல்லாம் இன்னும் காலியாக இருக்கின்றன என்று சொல்லப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, எல்லாக் காலத்திலேயும் அரசாங்க நிர்வாகத்தில் ஓய்வு பெற்ற ஆசிரியர்களுடைய இடம், இறந்துபோன ஆசிரியர்களுடைய இடம் எல்லாம் சேர்த்துத்தான் நியமிக்கப்படுவது வழக்கம். ஆனால், கடந்த கால ஆட்சியில், மொத்தம் 5 ஆண்டுகளில் 8 ஆயிரம் ஆசிரியர்களை நியமித்தார்கள். இப்போது 50 ஆயிரம் ஆசிரியர்கள் என்ற அளவை எட்டிப் பிடிக்கிறோம் என்றால் என்ன காரணம் என்பதை மணி அவர்கள் (குறுக்கீடு) அல்ல, திரு. ஹேமச்சந்திரன் அவர்கள்—எனக்கு இரண்டு பேரும் ஒன்றாகத் தெரிகிறார்கள்—ஆசிரியர்களிடத்திலேயே கேட்டால் தெரியும். ஏனென்றால், இப்போது நாம் கடமையைச் செய்கிறோம். இடையிலே துண்டு விழுந்த இடங்களை நிரப்புவதிலேதான் சில இடர்ப்பாடுகள் இருக்கின்றன. ஆனால், இப்போது உடனுக்குடன் அந்தந்த ஆண்டு நிறைவேற வேண்டிய கடமை நிறைவேறுகிறது. புதிய ஆசிரியர் பணி இடமும் ஒரு குறிப்பிட்ட அளவில் வழங்கப்பட்டு வருகிறது.

*முற்பகல் 11-15*

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** கல்வித் துறையைப் பாதுகாக்க வேண்டுமென்ற வகையிலேயும், அபிவிருத்தி பண்ண வேண்டுமென்பதிலேயும் கல்வி அமைச்சர், பேராசிரியர் அவர்களுக்கு இருக்கின்ற அக்கறையை ஒரு தடவையும், கொஞ்சமும் நான் குறைத்து மதிப்பிடவில்லை. அவரைவிட எனக்கு அந்த விஷயத்திலே மிகப்பெரிய அனுபவம் இருக்கின்றது. 1980-ல் இருந்தே அந்த அனுபவம் எனக்கு இருக்கின்றது. ஆகவேதான் இப்படிப்பட்ட சில lacunae ஏற்பட்டுவிடக்கூடாது என்பதற்காக, அவர்களுடைய கவனத்திற்கு இந்த விஷயத்தைக் கொண்டுவந்தேன்.

அதே போல, ஏற்கெனவே 1:20 என்ற முறையிலே ஒரு அரசாணை, எண் 250, 29-2-1964-லே போடப்பட்டிருக்கிறது. ஆனால், ஏன் இப்பொழுது 1:40 என்ற . . .



**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஆணையைப் பிறப்பித்த அந்த அரசு அப்பொழுதே அதற்காகப் புதிய நிதி எதுவும் ஒதுக்காமல், 25,000 ஆசிரியர்களை நியமனம் செய்ய வேண்டுமென்ற ஓர் இக்கட்டான நிலைமை ஏற்பட்ட காரணத்தால், முன்னதாக வழங்கி உள்ள நிதிநிலையின் அடிப்படையில் எவ்வளவு பேரை நியமிக்க முடியுமோ, அந்த அளவுதான் நியமிக்க வேண்டுமென்று ஆணை பிறப்பித்த காரணத்தால், என்றைக்கும் 1:20 என்ற அந்த விகித நிலையை எட்டவேயில்லை.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இப்போது பொதுவாக நாட்டிலே ஒரு நிலை பேசப்படுகிறது, மாணவர்களுடைய தரம் குறைந்து விட்டது என்று. நம்முடைய மாணவர்களுடைய தரத்தை உயர்த்த வேண்டும் என்றால், மாணவர்களின் மீதான individual attention என்பது கொஞ்சம் கூட அதிகமாக இருந்தால்தான் அதை எட்ட முடியும். அதற்கு இந்த 1:40 என்பது எந்த அளவுக்கு உதவிகரமாக இருக்கும் என்பதைப் பற்றியுள்ள சந்தேகத்தால்தான் அதைச் சொன்னேன். ஆகவே, individual attention-க்கு மேலும் அதிகமான வாய்ப்புக் கொடுக்கப்பட வேண்டும் என்று இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோன்று, இன்று உயர்படிப்பைக்கூட, தமிழிலே கொண்டுவருவதற்காக, Technical Education, அதேபோன்று, Higher Education-ல் எல்லாம்கூட, Medium of instruction-ஐ தமிழிலே கொண்டுவர வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோன்று, ஒன்றை நான் சுட்டிக்காட்ட விரும்புவது என்னவென்றால், நமது ஆதிதிராவிட சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர்களிலேயிருந்து, ஆசிரியர்கள் வரை வளர்ந்து வரவேண்டுமென்று எண்ணுகிறோம். இங்கே கொள்கைக் குறிப்பிலேகூட, reservation என்பதைப் பொறுத்த அளவிலே, tight-ஆக நாம் கடைப்பிடிக்கிறோம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், நான் ஒன்றை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். கல்லூரிகளிலே பயின்று கொண்டிருக்கிற ஆதிதிராவிட மாணவர்களுக்குக் கடந்த இரண்டாண்டுகளாக கல்விக் கடன் என்ற அந்த உதவித் தொகை வழங்கப்படவில்லை. அது வேண்டுமென்று கேட்டு, பல இடங்களிலே மாணவர்கள், அதற்கான இயக்கங்களை, கிளர்ச்சிகளை நடத்திக் கொண்டிருக்கின்றனர். ஆகவே, நாம் இந்த ஆதிதிராவிட சமுதாயத்திலேயிருந்து ஆசிரியர்களை அதிகமாகக் கொண்டுவருவதற்கு ஏற்கெனவே கடைப்பிடிக்கப்பட்டிருந்த அந்தக் கொள்கையைத் தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டுமென்று நான் வலியுறுத்திக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [2000 ஏப்ரல் 10

அதேபோல, இன்று பல ஆசிரியர்களைப் பொறுத்தவரையிலே, பல முறைகளில் குறைபாடுகள் இருக்கின்றன என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். Medical Inspection Staff என்று பள்ளிக்கூடங்களிலே பல வருடங்களாகப் பலர் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால், அவர்களை இதுவரை நிரந்தரப்படுத்தவில்லை. அவர்களை நிரந்தரப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

அதேபோன்று, approved candidates என்ற முறையிலே, பலரை வேலைக்குத் தேர்வு செய்கிறார்கள். ஆனால், இரண்டு ஆண்டு காலம், மூன்று ஆண்டு காலம், இவர்கள் waiting list-லேயே இருக்கிறார்கள். அவர்களுக்கு நியமனம் கிடைக்கப்பெறவில்லை. அதன் காரணமாக, அந்த list முடிந்துவிட்டவுடன், அவர்கள் பெரிய பாதிப்பிற்கு ஆளாக்கப்படுகிற ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது. அதையும் நாம் எந்த முறையிலே சரிக்கட்ட முடியுமோ, அதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே வலியுறுத்திக்கொள்ள விரும்புகின்றேன்.

அதேபோன்று, 6, 7, 8 வகுப்புகளிலேயெல்லாம் பட்டதாரி ஆசிரியர்கள் இரண்டு பேரை நியமனம் பண்ண வேண்டுமென்று இன்றைக்குக் கொள்கைக் குறிப்பிலே குறிப்பிடப்பட்டிருக்கின்றது; நல்லது. அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். எவ்வளவோ அதிகமான பட்டதாரி ஆசிரியர்கள் படித்து, வேலையில்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு வாய்ப்பு கொடுக்கப்பட வேண்டும். இன்று ஒன்றை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இது வருகிற நேரத்திலே, Secondary Grade Teachers-ஐயும் பாதிக்கக்கூடிய நிலைமை ஏற்படக்கூடாது. தொடக்கக் கல்வி இயக்குநர் அவர்களால் 17-2-1990-லே போடப்பட்ட உத்தரவுப்படி, 1-6-1988 அல்லது அதற்குப் பின்னர் தலைமையாசிரியராகப் பணி உயர்வின் மூலமாகத்தான் நியமனம் செய்ய வேண்டுமென்று கூறப்பட்டுள்ளது. ஆனால் குமரி மாவட்டத்திலுள்ள தனியார் பள்ளிகள் உட்பட தமிழகத்திலேயுள்ள அனைத்துப் பள்ளிகளிலேயும் அதற்கு வேறுபட்ட முறையிலேயுள்ள நிலைதான் இருந்து கொண்டிருக்கின்றது. குமரி மாவட்டத்திலே இருக்கிற ஆசிரியர்கள் அதனால் பாதிக்கப்படுகிறார்கள்.

முற்பகல் 11-20



2000 ஏப்ரல் 10] [திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

ஒன்று முதல் ஐந்து வகுப்புகளாக உள்ள தொடக்கக் கல்வி நிர்வாகத்தைத் தனியாகப் பிரித்தால், கூடுதல் வாய்ப்பு, கல்வித் துறையை உயர்த்துவதற்குக் கிடைக்கும். 200 நாட்கள், படிப்பு நாட்களாக இருந்தது இப்போது, 220 நாட்களாக மாற்றப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்த முறையிலே, தொடக்கப் பள்ளிப் பிரிவைத் தனியாக நிர்வகித்து வருவதற்கான ஏற்பாடுகளை குமரி மாவட்டத்திற்குக் கொண்டு வரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோன்று, தலைமையாசிரியர்கள், உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்களாகப் பதவி உயர்வு வழங்கப்படாமல், இப்போது குமரி மாவட்டத்திலே இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள்கூட இதுசம்பந்தமாக பல முறையீடுகளைக் கொடுத்திருக்கிறார்கள். நான்கூட கல்வி அமைச்சருக்கு இதுசம்பந்தமாக ஒரு கடிதத்தைக் கொடுத்திருக்கிறேன். அதையும் பரிசீலித்து அவர்களுக்குத் தகுந்த உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு விஷயத்தை எடுத்துக்காட்டி, எனது உரையை முடித்துக் கொள்ள விரும்புகிறேன். அதாவது, ஏற்கெனவே, நம்முடைய பல்கலைக்கழகங்கள் சம்பந்தமாக Frank Antony என்பவருடைய வழக்கிலே ஒரு முடிவு சொல்லப்பட்டிருக்கிறது. அதன்படி, நம்முடைய அரசுக் கல்லூரிகள் ஆனாலும் சரி, அரசு உதவி பெறுகிற கல்லூரிகள் ஆனாலும் சரி, அரசு உதவி பெறாத கல்லூரிகள் ஆனாலும் சரி, ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், ஒரே மாதிரியாக உள்ள, எந்த வேறுபாடும் இல்லாத முறையிலே உள்ள service conditions இருக்க வேண்டும். அதாவது, சம வேலைக்கு, சம ஊதியம் இருக்க வேண்டும். அந்தமாதிரி உள்ள நடவடிக்கையை, இப்போது பல தனியார் கல்லூரிகளில் பின்பற்றவில்லை. குறிப்பாக, சுயநிதிக் கல்லூரிகள் என்று சொல்லப்படுகிற கல்லூரிகளில், இதுசம்பந்தமான அந்த நிலைமை கடைபிடிக்கப்படுவதில்லை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இப்போது எல்லா இடங்களிலும் ஒரே பணி நிலைமை பின்பற்றப்பட வேண்டும் என்ற கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கு நம்முடைய கல்வித் துறை போதுமான அளவிற்குக் கவனம் செலுத்தவில்லை என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆசிரியர்களையும், அதேபோன்று மற்ற அலுவலகப் பணியாளர்களையும் சீர்படுத்த எந்தவிதமான நடவடிக்கையும் கல்வித் றை, தனியார் கல்லூரிகளைப் பொறுத்தவரையில் எடுக்கப்படவில்லை; து சரியல்ல. அவர்களையும் service conditions என்ற நிலைமையில் 'துகாத்துக் கொள்வதற்கு, பணி நியமன ஆணை வழங்குவதற்கு, தனியார்

கல்லூரிகளை வலியுறுத்தி அதைப் பெற்றுக் கொடுப்பதற்கு துறை நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர்களுக்குப் பணி, அதேபோன்று ஊதியம் என்ற எந்த விஷயத்திலும் ஒரேமாதிரியாக உள்ள நிலைமையை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேபோன்று, அரசு நிர்ணயித்துள்ள விடுப்புகள் அவர்களுக்கும் இருக்க வேண்டும்.

கடைசியாக நான் சுட்டிக்காட்ட விரும்புவது என்னவென்றால், disciplinary action எடுப்பது சம்பந்தமாக எந்தவிதமான சட்ட திட்டங்களும் இப்போது இல்லாத நிலைமை, இந்த சுயநிதிக் கல்லூரிகளைப் பொறுத்தவரையிலும், அதேபோல் தனியார் கல்லூரிகளைப் பொறுத்தவரையிலும் இருந்து கொண்டிருக்கிறது. அது மாற்றப்பட வேண்டும். பல்கலைக்கழகம் நிர்ணயித்த தகுதிகளைப் பெற்ற ஆசிரியர்களைத்தான் கல்லூரிகளிலே நியமனம் செய்ய வேண்டும் என்று வலியுறுத்தப்பட வேண்டும் என்பது மட்டுமல்ல; அப்படி நியமனம் செய்யப்படுபவர்களுக்கு எல்லாவிதமான பாதுகாப்பையும் ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் தமிழக அரசு கடைப்பிடிக்க வேண்டும் என்பதையும் நான் இப்போது சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கடைசியாக, நான் ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 58 வயது என்பது, ஓய்வு பெறுகிற வயதாக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், பல தனியார் கல்லூரிகளிலேயும், சுயநிதிக் கல்லூரிகளிலேயும் 58 வயதாகியும், retired ஆனவர்களை ஆசிரியர்களாகவும், Principal களாகவும் நியமனம் செய்வது முறைதானா? அதை எப்படி அரசும், இந்தத் துறையும் அனுமதிக்கிறது என்பதை நான் கேட்க விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது) ஆகவே, சுயநிதிக் கல்லூரிகளைப் பொறுத்தவரையில், பல்கலைக்கழகங்களுக்கான அரசு விதிகளுக்கு அப்பாற்பட்டு நடத்துவதை அனுமதிக்கக்கூடாது என்று சொல்லி, வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து, விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இரா. மகேந்திரன்.

**திரு. இரா. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர், முத்தமிழ் அறிஞர், டாக்டர் கலைஞர் அவர்கள், இந்த மாமன்றத்தில் வைத்திருக்கிற மகத்தான நிதிநிலை அறிக்கையைத் தொடர்ந்து, நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள், இந்த அவையிலே வைத்திருக்கிற மானியக் கோரிக்கையில் கலந்து கொண்டு பேசுவதற்கு வாய்ப்பினை வழங்கியிருக்கிற மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவிக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.



இந்த ஆண்டு மொத்த வருவாய்க் கணக்கில் ரூ. 4,648,95,17,000 கல்விக்கு ஒதுக்கீடு செய்து தமிழக மக்களின் கல்வித் தரத்தை உயர்த்தி அவர்களை உன்னதமான நிலைக்கு அழைத்துச் செல்கிறது இந்த அரசு என்பதை எண்ணி நான் மகிழ்ச்சியடைகிறேன்; பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*முற்பகல் 11-25*

உலகமெங்கும் வாழ்கின்ற தமிழ் மக்கள் அனைவரும் நம்முடைய கழக அரசை மனதாரப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன். ஆரம்ப கல்வியைப் பொறுத்தவரையில், அனைவருக்கும் இலவசமாக ஆரம்பக் கல்வியைக் கட்டாயமாக வழங்க அரசு வழிவகை செய்துள்ளதைத் தமிழக மக்கள் அனைவரும் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஒரு நாட்டின் வளர்ச்சி, அந்த நாட்டு மக்கள் பெற்றுவரும் அடிப்படைக் கல்வியைச் சார்ந்து இருக்கிறது. அத்தகைய அடிப்படைக் கல்வியை ஒவ்வொருவரும் நமது மாநிலத்தில் கற்பதற்கு ஏற்ற வகையில் அரசு பல திட்டங்களைத் தீட்டி, வகுப்பறைக் கட்டடங்கள், ஆசிரியர் பணியிடங்கள் போன்ற மிக முக்கியமானவற்றைச் சிறப்பாக அளிக்க வேண்டுமென்று நம்முடைய அரசு ஒரு தலையாய குறிக்கோளை மேற்கொண்டு, செயல்பட்டு செய்து வருகிறது.

தமிழ்நாட்டில் ஒரு கிலோ மீட்டர் தொலைவிற்குள் மாணவர்கள் சென்று அடையும் வகையில், மக்கள் தொகை சுமார் 300-க்கு மேற்பட்டு இருக்கிற அந்தக் கிராமங்களில் கட்டாயமாகத் தொடக்கக் கல்விக்கூடங்கள் அமைய வேண்டுமென்று நம்முடைய அரசு கொள்கையாகக் கொண்டுள்ளதை, இன்றைய தினம் நாம் எண்ணிப் பார்த்துப் பாராட்ட வேண்டும். நம்முடைய அரசு 1998-99 ஆம் ஆண்டில் 312 தொடக்கப் பள்ளிக் கூடங்களையும், 1999-2000 ஆம் ஆண்டில் 400 தொடக்கப் பள்ளிக் கூடங்களையும் தொடங்க ஆணை பிறப்பிக்கப்பட்டு, பள்ளிக்கூடங்கள் தொடங்கப்பட்டிருக்கின்றன. வரும் ஆண்டில் விடுபட்டிருக்கிற சிற்றூர்களில் புதியதாக ஆரம்பப்பள்ளிகளைத் தொடங்க இருப்பதையும் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். 150 ஆரம்பப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாக உயர்த்தப்பட இருப்பதையும் தெரிவித்திருக்கிறார்கள்.

கழக அரசு பொறுப்பேற்ற 4 ஆண்டு காலத்தில் சற்றேறக்குறைய 29 ஆயிரம் ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்பட்டிருக்கின்றன. வருகிற இந்தக் காலகட்டத்தில் 6000 ஆசிரியர் பணியிடங்கள் நிரப்புவதாகவும் அறிவித்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட நம்முடைய அரசுக்கும்,

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், நாட்டு மக்கள் நன்றியைத் தெரிவித்து இருக்கிறார்கள்.

நம்முடைய கழக ஆட்சி பொறுப்பேற்ற பிறகு பணி கிடைத்து இருக்கிற அந்த ஆசிரியப் பெருமக்கள் எல்லாம் இன்றைக்கு கடவுளைக் கும்பிடவில்லை; கடவுளை வணங்கவில்லை; நம்முடைய கலைஞர் அவர்களைத்தான் கும்பிடுகிறார்கள், வணங்குகிறார்கள், வாழ்த்துகிறார்கள். அப்படிப்பட்ட நம்முடைய கழக அரசை நான் இந்த நேரத்தில் பாராட்டுகிறேன்.

நம்முடைய தலைவர் மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் சீரிய முயற்சியின் மூலம் அனைத்துப் பள்ளிகளுக்கும், தூய்மையான குடிநீர் வசதி செய்து தர அரசு நடவடிக்கை எடுத்து இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகிறேன். அதே நேரத்தில் அனைத்துப் பள்ளிக்கூடங்களிலும் அரசு ஆழ்துளைக் கிணறு ஒன்றைக் கட்டாயமாக அமைத்துத் தர வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

கடந்த 4 ஆண்டு காலத்தில் சுமார் 7386 ஆரம்பப் பள்ளிக் கூடங்களுக்குக் கட்டடங்கள் கட்டித் தரப்பட்டுள்ளன. அதேபோல, மேல்நிலைப் பள்ளிகளுக்கு 1597 கூடுதல் வகுப்பறைகளும் கட்டித் தரப்பட்டுள்ளன. சுமார் 662 அறிவியல் ஆய்வுக் கூடங்கள் கட்டியிருப்பதை நான் பெருமையாக இந்த நேரத்தில் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். கழக அரசு ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு 330 நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், 253 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் உயர்த்தி இருப்பதையும், வரும் ஆண்டில் 50 நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும் 5 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் உயர்த்துவது என்ற அறிவிப்பையும் நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இந்த அவைக்குத் தந்திருக்கிறார்கள்.

நம்முடைய அரசை நான் கேட்டுக் கொள்ள விரும்புவதெல்லாம், தேர்வு மையம் வேண்டுமென்று கோரியிருக்கிற அனைத்துப் பள்ளிகளுக்கும், தேர்வு மையம் வழங்கிட அரசு ஆவன செய்ய வேண்டும். பள்ளிகளில் படிக்கின்ற மாணவர்கள், அந்தந்தப் பள்ளிகளிலேயே தேர்வு எழுத அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சென்னையில், ஒரு சில பள்ளிக்கூடங்களில் தேர்வு மையம் இருந்தும், வேறு பள்ளிகளுக்குச் சென்று தேர்வு எழுதுகிறார்கள். தயவு கூர்ந்து மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள்



தேர்வு மையம் கோரியிருக்கிற அந்தப் பள்ளிகளிலேயே தேர்வு எழுத ஆவன செய்ய வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்ள வரும்புகிறேன்.

கணினியைப் பொறுத்தவரையில், நம்முடைய மாணபுமிகு முதல்வர் அவர்கள் அறிவித்து இருக்கிற அந்த அற்புதமான திட்டங்களையெல்லாம் தமிழக மக்கள் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். சென்ற ஆண்டு 666 மேல்நிலைப் பள்ளிகளில் கணினிப்பாடம் புகுத்தப்பட்டு, 557 இடங்களில் கணினி அறிவுக்காக அறைகள் கட்டப்பட்டு இருப்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்போது அனைத்து மேல்நிலைப் பள்ளிகளிலும், கணினிப் பாடம் தொடங்கி இருப்பதை நான் மனதாரப் பாராட்ட விரும்புகிறேன்.

அதேபோல, விளையாட்டுத் துறைக்கு நம்முடைய அரசு ஒரு தொகையை ஒதுக்கி, ஊக்கப்படுத்தி வருகிறது. அந்தத் தொகையை மேலும் உயர்த்தி, தனிக் கவனம் செலுத்தி, விளையாட்டுத் துறையில் மாணவர்களை மேலும் ஊக்கப்படுத்த வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் பணிவன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 11-30

நம்முடைய முதல்வர் அவர்கள் கடந்த காலத்திலே அறிமுகப்படுத்திய மாணவ, மாணவியர்கள் பள்ளிப் படிப்பை முடித்த பின்னால், தங்களுடைய மேல்நிலைப் படிப்பிற்காகவும், வேலைவாய்ப்பிற்காகவும், சாதிச் சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ் பெறுவதற்காக அரசு அலுவலகம் சென்று, பல நாட்கள் காத்திராமல், உடனடியாக பள்ளியிலேயே வழங்கி வருவதை பல ஆயிரம் மாணவ, மாணவிகளும், பெற்றோரும் இன்றைக்குப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

பிளஸ் 2 வரையில் படிக்கிற மாணவர்களுக்கு இலவச bus pass 10 ஆம் வகுப்பு வரை படித்த ஏழையெளியப் பெண்களுக்கு திருமணச் செலவிற்காக ரூபாய் 10 ஆயிரம் வழங்குகின்ற இந்தத் திட்டங்களை கல்வித் தரம் உயர்வதற்காக அறிவித்திருப்பதை நான் மனதாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தொழில்நுட்பக் கல்வியைப் பொறுத்தவரையில், நம்முடைய அரசு தொழில்நுட்பக் கல்வி வளர்ச்சிக்கு முதலிடம் தந்து மாணவர்களுடைய திறமையை வளர்ப்பதிலும், அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதிலும் மிகுந்த அக்கறையோடு செயல்படுகிறது. தொழில்நுட்பக்

கல்வி வளர்ச்சியில் ஒரு பகுதியாக பொறியியல் கல்லூரியில் மாணவர்களின் சேர்க்கை சென்ற ஆண்டை விட இந்த ஆண்டு உயர்ந்து 4,408 மாணவர்கள் கூடுதலாகச் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். அதேபோல் பல்தொழில்நுட்பப் பயிலகத்தில் சென்ற ஆண்டைவிட 3,075 மாணவர்கள் கூடுதலாகச் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கல்லூரிக் கல்விக்காக நம்முடைய அரசு குறிப்பிடத்தக்க வகையில் நிதியை ஒதுக்கியிருக்கிறது. மேலும், வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு தமிழ்நாட்டில் மட்டும் 44 தன்னாட்சிக் கல்லூரிகள் இயங்கி வருவது பெருமைக்குரிய விஷயமாகும். இதனால் கல்வியின் தரம் மேலும் உயர வாய்ப்பு உள்ளது. இங்கு கல்வி பயிலும் மாணவர்கள், வளர்ந்து வரும் கல்வித் தேவைக்கேற்ப புதிய பாடங்களைக் கற்க முடிகிறது. கல்லூரிக் கல்விக்காக தமிழக அரசு பல நல்ல திட்டங்களை அறிவித்திருக்கிறது. இருந்தபோதிலும் கல்லூரிக் கல்விக்காக மேலும் அதிகப் பணத்தை ஒதுக்க வேண்டுமென்று நான் அன்போடு இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அரசாங்கத்தால் நடத்தப்படுகின்ற பெரும்பாலான கல்லூரிகளில் பழைய பாடத் திட்டங்கள்தான் இருக்கின்றன. இவற்றைச் சற்று மாற்றி வேலைவாய்ப்புப் பெறக்கூடிய பாடத் திட்டங்களைப் புகுத்த வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

தனியார் கல்லூரிகளில் பல்வேறு புதிய பாடத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் தனியார் கல்லூரிகளில் ஏழை எளிய மாணவர்கள் சேர்ந்து பயன்பெற முடியாத நிலை இருப்பதை நாம் அறிவோம். எனவே, அனைத்து அரசுக் கல்லூரிகளிலும் புதிய பாடத் திட்டங்கள் வழங்கிட ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மைய அரசு தேர்வுகளான I.A.S., I.P.S., போன்ற தேர்வுகளில் நம்முடைய தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் மிகக் குறைந்த அளவில் தேர்ச்சி பெற்று வருகிறார்கள் என்பதை நாம் அறிவோம். இந்த எண்ணிக்கையை உயர்த்துகின்ற வகையில் நம்முடைய கழக அரசு சிறந்த திட்டங்களை அறிவிக்க வேண்டும். அதாவது அனைத்துக் கல்லூரிகளிலும் I.A.S., I.P.S., போன்ற தேர்வுகளுக்கும் சிறந்த பாடப் பயிற்சிகளை வழங்கி அந்தத் தேர்வுக்குச் சிறப்பைச் சேர்க்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.



என்னுடைய தொகுதியில் கொரட்டியில் இருக்கிற உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்த வேண்டுமென்று அந்தப் பகுதி மக்கள் நம்முடைய அரசை நீண்டகாலமாகக் கோரி வருகிறார்கள். அதற்கு வேண்டிய ஆவணங்களெல்லாம் அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டிலே, அந்தக் கொரட்டி உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்துவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, வெலக்கல்நத்தம் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்த வேண்டும். புத்தகரம் நடுநிலைப் பள்ளியையும், இராமநாயக்கன்பேட்டை, மண்டலநாயுடு குண்டான் போன்ற நடுநிலைப் பள்ளிகளையும் உயர்நிலைப் பள்ளிகளாக உயர்த்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். சென்ற ஆண்டு, என்னுடைய தொகுதியில் பெரியகண்ணாலப்பட்டி, துங்கேரி போன்ற நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக உயர்த்தித் தந்திருக்கிற நம்முடைய கழக அரசை நான் மனதாரப் பாராட்ட விரும்புகிறேன். புதுப்பேட்டை அரசு மேல்நிலைப் பள்ளி சிறந்த முறையில் நடந்து வருகிறது. மாணவ, மாணவியர்கள் அதிக அளவில் பயின்று வருகிறார்கள். அந்தப் பகுதி மக்கள், அதனைப் பெண்கள் உயர்நிலைப் பள்ளியாக உயர்த்த வேண்டுமென்று நம்முடைய அரசைக் கோரியிருக்கிறார்கள். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள், புதுப்பேட்டையிலே ஒரு பெண்கள் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப்பள்ளியாக உயர்த்தித்தர வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இறுதியாக என்னுடைய தொகுதியில் ஒரு கல்லூரி கூடக் கிடையாது. எங்கள் பகுதி மக்கள் நீண்ட காலமாக கல்லூரி வேண்டுமென்று கேட்டு வருகிறார்கள். ஏழை எளிய மாணவர்கள் பயன் பெறுகிற வகையில் கல்லூரியே இல்லாத என்னுடைய தொகுதியில் ஒரு கல்லூரியை மாண்புமிகு அமைச்சர் அவர்களும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும் அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டு, வாய்ப்பிற்கு நன்றி சொல்லி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. ஏ.வி.ஏ. நாசர்.

*முற்பகல் 11-35*

**திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கல்வி மானியக் கோரிக்கையின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த

தங்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கல்வி என்றவுடன் ஞாபகத்திற்கு வருவது இட ஒதுக்கீடுதான். ஏனென்றால் இந்தச் சிறுபான்மைச் சமுதாயம் கல்வியிலே மிகவும் பின்தங்கியிருக்கின்ற ஒரு சமுதாயமாக இருக்கிறது. இன்றுகூட ஒரு பத்திரிகையிலே முஸ்லீம் பெண்களின் நிலை தலித் பெண்களின் நிலையைவிட மிக மோசமான நிலையில் இருக்கிறது என்று எழுதியிருக்கிறார்கள். ஏனென்று சொன்னால், அவர்களுக்குக் கல்வி அறிவு இல்லாததால் அவர்களிடையே விழிப்புணர்ச்சி இல்லை என்று இன்றைக்குச் சொல்லப்படுகிறது. இப்படிப்பட்ட நிலையிலே இட ஒதுக்கீடு இந்தச் சிறுபான்மை மக்களுக்கு அளிக்கும்போது எல்லா வகையிலும் விழிப்புணர்வு பெற்று, தங்களுடைய நிலையை, வாழ்க்கைத் தரத்தை ஏற்றமாக்கிக் கொள்வதற்கு வழி கிடைக்கும். அந்தவகையிலே சென்ற நிதிநிலை அறிக்கையிலேகூட, மாண்புமிகு முதல்வர் அவர்கள், வருகின்ற நிதிநிலை அறிக்கைக்குள்ளாக இட ஒதுக்கீடு வழங்குவதற்கு உண்டான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும் என்று சொன்னார்கள். பிறகு சென்ற டிசம்பர் மாதம் 22 ஆம் தேதி சென்னையில் நடைபெற்ற ஒரு இஃப்தார் விருந்திலே தமிழக முதல்வர் அவர்கள் அன்றும் வாக்குறுதி அளித்தார்கள். தேர்தல் அறிக்கையிலேகூட வருகின்ற நிதிநிலை அறிக்கைக்குள்ளாக இட ஒதுக்கீடு வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும் என்று சொன்னார்கள். ஆனால் நிதிநிலை அறிக்கையிலே இட ஒதுக்கீடு அளிக்கப்படவில்லை என்பது சிறுபான்மை மக்களுக்கு மிகவும் ஏமாற்றம் தருகின்ற வருத்தப்படக்கூடிய ஒரு செயலாக இருக்கின்றது. எனவே மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இந்த சிறுபான்மை மக்கள் மீது கருணை வைத்து, இட ஒதுக்கீட்டை விரைந்து வழங்குவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஆரம்பப் பள்ளிகள் இல்லாத கிராமமே இல்லையென்ற ஒரு நிலை உருவாக்கப்பட வேண்டுமென்று நம்முடைய தமிழக அரசு மிகச் சிறப்பான முயற்சிகளை எல்லாம் மேற்கொண்டு, இப்போது எல்லாக் கிராமங்களிலும், ஒரு கிலோமீட்டருக்குள்ளாக இருக்கக்கூடிய அனைத்துக் கிராமங்களிலும் ஆரம்ப பாடசாலைகளை உருவாக்கிக் கொண்டிருப்பதை தமிழ் மாநில தேசிய லீக்கின் சார்பில் நாங்கள் பாராட்டுகின்றோம். அதே நேரத்திலே ஆரம்பப் பள்ளியின் கல்வித் தரம், அங்கே பயிலக் கூடிய மாணவர்களுடைய கல்வித் தரம் உயர்த்தப்பட வேண்டுமென்பதில் இரு வேறுபட்ட கருத்து இருக்க முடியாது. ஏனென்று சொன்னால் இப்போது ஆரம்ப பள்ளிகளிலே படிக்கின்ற மாணவர்களின் கல்வித் தரம், மற்ற தனியார் ஆங்கில பள்ளிகளிலே பயில்கின்ற மாணவர்களைவிட தரம்



குறைந்ததாக இருக்கின்றது என்ற காரணத்தினால் இப்போது மாணவர்கள், தனியார் ஆங்கில பள்ளிகளைத் தேடிச் செல்ல வேண்டிய நிலை இருக்கிறது. இந்த நிலையைப் போக்க வேண்டுமென்று சொன்னால்—நம்முடைய ஆரம்பப் பாடசாலைகளில் இப்போது ஒரே கூரையின் கீழே ஒரே அறையிலே 5 வகுப்புகளும் நடைபெறுகின்றன. இந்த நிலை மாற்றப்பட வேண்டும். ஒரு வகுப்பில் நடக்கக் கூடிய பாடம் இன்னொரு வகுப்பிலே இருக்கக் கூடிய மாணவர்களுக்கு disturbance-ஆக இருக்கின்ற காரணத்தினால் தனியாகக் கவனம் செலுத்தி அந்த மாணவர்களையும் ஆசிரியர்கள் கவனிக்க முடியவில்லை; மாணவர்களாலும் தனிக் கவனம் செலுத்த முடியவில்லை. இந்த நிலை இருக்கின்ற காரணத்தினால், ஆரம்பப் பள்ளிகளிலே கல்வியின் தரம் என்பது குறைந்ததாகவே இருக்கிறது. எனவே தனித் தனி அறைகளை உருவாக்கி, இனிமேல் கட்டக்கூடிய பள்ளிகளிலே தனித் தனி அறைகளாகக்கட்டி, அந்த மாணவர்களுடைய கல்வித் தரத்தை உயர்த்த வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

சென்ற ஆண்டுகளிலே கல்வியிலே 5 ஆம் வகுப்புப் பாடத் திட்டத்திலே காயிதே மில்லத் அவர்களைப் பற்றிய பாடம் இருந்தது. ஆனால் இது என்ன காரணத்தினாலோ அல்லது எந்தத் தரப்பினராலோ அந்த முயற்சி எடுக்கப்பட்டதோ தெரியவில்லை; அந்தப் பாடம் இந்தக் கல்வி ஆண்டிலே எடுக்கப்பட்டுவிட்டது. அரசியலிலே கண்ணியத்தையும், தன்னுடைய வாழ்க்கையில் கண்ணியத்தையும் நிலைநிறுத்திக் காட்டிய ஒரு கண்ணியமிக்க.....

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரே தலைவருடைய பாடம் தொடர்ந்து ஆண்டுதோறும் வைக்கப்படுகிற முறை கல்வித் துறையிலே கிடையாது. ஓர் ஆண்டிலே டாக்டர் அம்பேத்கர் பாடம் வரும்; ஓர் ஆண்டு காயிதே மில்லத் பாடம் வரும். ஒரு ஆண்டு அறிஞர் அண்ணா பாடம் வரும். ஓர் ஆண்டு மகாத்மா காந்தி பாடம் வரும். அது பாடத் திட்டக் குழு அவ்வப்போது மாற்றி அமைப்பதே தவிர, கண்ணியமிகு காயிதே மில்லத் அவர்களுடைய வாழ்க்கைக் குறிப்பு இடம் பெறக்கூடாது என்று இந்த அரசுக்கோ அல்லது இந்தத் துறைக்கோ அப்படி ஒரு கருத்துக் கிடையாது. அதிலே ஒரு motive கிடையாது; இயல்பாக ஏற்படுகிற ஒரு மாற்றம். இன்னும் சொல்லப்போனால், ஒரே இயக்கத்தைச் சேர்ந்த தலைவர்களிலேகூட ஒரு தலைவர் இந்த ஆண்டு குறிப்பிடப்படுவார், இன்னொரு தலைவர் இன்னோர் ஆண்டு குறிப்பிடப்படுவார். பாடத் திட்ட முறைகளிலே செய்கிற காரியங்களிலே அமைச்சர் தலையிடுவதும்

அவ்வளவு நியாயம் அல்ல. ஆனால் புறக்கணிக்கிற நோக்கம் யாருக்கும் இருக்க இடம் கிடையாது.

*முற்பகல் 11-40*

**திரு. ஏ.வி.ஏ. நாசர்:** இருந்தாலும் இன்று இருக்கக்கூடிய சூழ்நிலையில் கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் அவர்களுடைய வாழ்க்கைக் குறிப்பும், பாடமும் மாணவர்களுக்கு ஒரு நல்ல வழிகாட்டுதலாக இருக்கும் என்ற அடிப்படையிலே அதைத் தொடர வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கோரிக்கையாக வைக்க விரும்புகிறேன்.

அதோடு கிராமப்புறங்களிலே இருக்கக்கூடிய மாணவர்கள் தற்போது நடைமுறையில் உள்ள பல்வேறு போட்டித் தேர்வுகளைப் பற்றி அறியவும், வேலைவாய்ப்பினைப்பற்றித் தெரிந்துகொள்ளவும் இயலாத நிலையில் இருக்கிறார்கள். இந்நிலையினைப் போக்கிட வேண்டும். இதற்குப் பள்ளி மற்றும் கல்லூரிகளில் படிக்கும் மாணவ மாணவியரிடம் ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த வேண்டும். அவ்வாறு செயல்பட்டால் நகர மாணவர்களைப்போல வேலைவாய்ப்பைப் பற்றியும், போட்டித் தேர்வுகளைப் பற்றியும் கிராமப்புற மாணவர்கள் தெரிந்துகொள்ள வாய்ப்பு ஏற்படும். கிராமப்புற மாணவர்கள், ஏழை மாணவர்கள், ஆதிதிராவிட மாணவர்கள், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் ஆகிய இனங்களைச் சேர்ந்த மாணவர்கள் வாழ்க்கைத் தொழில் பற்றிய வழிகாட்டுதல் முறையைத் தெரிந்துகொள்ள முடியாமல் தவறான திசையில் செல்லும் போக்கினைத் தடுத்து அவர்களுக்குச் சரியான பாதையினைக் காட்டி அவர்களுக்குப் பயன்படும் வகையில் ஒரு நல்ல திட்டத்தைத் தீட்டி அரசு செயல்படுத்த வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு எனது புவனகிரி தொகுதியிலே இருக்கக்கூடிய பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் — இங்கே எல்லோரும் பேசும்போது சொல்கிறார்கள் 1:40 இருக்கிறது, 1:20 ஆக்க வேண்டும் என்று சொன்னார்கள். ஆனால் எங்களுடைய அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் புவனகிரியில் — 1:97 இருக்கிறது. 1540 பிள்ளைகள் படிக்கிறார்கள். ஆனால், ஆசிரியர்கள் 28 பேர்கள் இருக்கிறார்கள். தலைமையாசிரியர் உட்பட; உடற்கல்வி ஆசிரியர் உட்பட. இந்த நிலை இருந்தும்கூட அந்த மாணவிகளுடைய கல்வித்திறன் நிச்சயமாக அங்கே இருக்கக்கூடிய ஆசிரியைகளின் நல்ல செயல்பாட்டினால் படிப்படியாக உயர்ந்து கொண்டிருக்கிறது. இருந்தாலும் இன்னும் கூடுதலாக ஆசிரியைகளை நீங்கள்



அளிப்பீர்கள் என்று சொன்னால், நிச்சயமாக அந்த மாணவிகள் மிகச் சிறப்பான கல்வியைப் பெற முடியும். அதோடு மட்டுமல்லாமல் அங்கே உடற்கல்வி ஆசிரியை ஒருவர்தான் இருக்கிறார். இந்த ஒருவர் இருக்கும்போதே அந்தப் பள்ளியில் இருக்கக்கூடிய மாணவிகள் தேசிய அளவிலே நடைபெறுகின்ற விளையாட்டுப் போட்டிகளிலே வெற்றிபெறக்கூடியவர்களாக இருக்கிறார்கள். ஆகவே நீங்கள் இன்னும் 2 உடற்கல்வி ஆசிரியைகளை நியமிப்பீர்கள் என்று சொன்னால் நிச்சயமாக இன்னும் சிறப்பாக அந்தப் பள்ளி செயல்படுவதற்கு வாய்ப்பு இருக்கும்.

அதேபோல எங்கள் தொகுதியில் இருக்கக்கூடிய மற்றப் பள்ளிகளில் எல்லாம் ஆசிரியர்கள் பற்றாக்குறை என்பது இப்போது மிக அதிகமாக இருக்கிறது. எனவே இதை அரசு போக்கித்தர வேண்டும என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு என்னுடைய தொகுதியில் பி.முட்லூர் அரசு மேல்நிலைப் பள்ளியிலே உருது ஆசிரியர் பணியிடம் கடந்த 4 மாதங்களாக காலியாக இருக்கிறது. அதை நீங்கள் நிரப்பித்தர வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு minority பள்ளிகளுக்குக் கொள்கை ரீதியாக 1992 வரைக்கும் நீங்கள் grant வழங்கியிருக்கிறீர்கள். அதற்கு நாங்கள் நன்றி தெரிவித்துக்கொள்கிறோம், பாராட்டுகிறோம். அதே நேரத்திலே 1993 ஆம் ஆண்டிலிருந்து இன்னும் அது வழங்கப்படவில்லை. அந்த அடிப்படையிலே நீங்கள் minority பள்ளிகளுக்கு விரைந்து grant வழங்க வேண்டும். ஏனென்று சொன்னால் இட ஒதுக்கீடு கிடைக்காமல், பள்ளிக்குச் செல்ல முடியாமல், கல்வி கிடைக்காமல் இருக்கின்ற இவர்களுக்கு இப்படிப்பட்ட வாய்ப்புக்களையாவது நீங்கள் ஏற்படுத்தித்தர வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு எனது சொந்த ஊரான ஆயங்குடியிலே ஒரு பள்ளி இருக்கிறது; அரசு உதவி பெறும் முஸ்லீம் உயர்நிலைப் பள்ளி. அந்தப் பள்ளி மிகவும் சிறப்பாக 50 ஆண்டுகளாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இந்தப் பள்ளியிலே 9-வது 10-ஆவது வகுப்புகளுக்கு இப்போது grant கேட்டிருக்கிறார்கள். அதைத் தயவு செய்து நீங்கள் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்று சொன்னால் இது சுயநிதி பள்ளியாக இருந்தாலும் இங்கு நன்கொடைகள் என்பதே வசூலிப்பதில்லை. இந்தப் பள்ளியிலே படிக்கக்கூடிய மாணவர்களில் மிகவும் அதிகமாக தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள், 75% பேர், படிக்கின்றார்கள்.

மீதி இருக்கின்ற 25% தான் minority-கள் அங்கு படித்துக்கொண்டு இருக்கிறார்கள். எனவே அரசு donation வாங்காத இப்படிப்பட்ட பள்ளிகளுக்காவது சிறப்பு விலக்களிப்பாக நீங்கள் grant வழங்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு இப்போது bus pass வழங்குகின்றோம். இந்த bus pass வழங்குவதால் இப்போது என்ன நிலைமை என்றால் கிராமப் பகுதிகளில் இருக்கக்கூடிய நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகளில் இப்போது மாணவர்களுடைய எண்ணிக்கை குறைவாகிக்கொண்டே போகிறது. ஏனென்று சொன்னால் இங்கிருக்கக்கூடிய மாணவர்கள் நகர்ப்புறப் பள்ளிகளில்தான் நல்ல தரமான கல்வி கிடைக்கின்றது என்ற ஒரு தவறான நோக்கத்தோடு நகர்ப்புறத்திற்குச் செல்கின்றார்கள். இதனால் கிராமப் பகுதிகளில் இருக்கக்கூடிய பள்ளிகளில் மாணவர்கள் குறைவாக இருக்கின்ற காரணத்தினால் சில பள்ளிகளை எல்லாம் மூடிவிடக்கூடிய நிலைமைகூட உருவாகிக் கொண்டிருக்கிறது. இதில் ஒரு மாற்றம் செய்ய வேண்டும், bus pass வழங்குவதிலே. எப்படி என்று சொன்னால் ஒரு பள்ளியிலே 8 ஆம் வகுப்பு வரைக்கும் இருக்கிறது என்று சொன்னால் அந்த 8 ஆம் வகுப்பு வரை அங்கே இருக்கக்கூடிய வகுப்பறைகள் எல்லாம் நிரம்பிய பிறகு, அதற்கும் மேற்கொண்டு இருக்கக் கூடியவர்களுக்கு மட்டும் bus pass வழங்கினால் அவர்கள் நகர்ப்புறத்திற்குச் சென்று படிப்பதற்கான வாய்ப்பு இருக்கும். உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் இப்படிப்பட்ட வாய்ப்பை நீங்கள் நடைமுறைப்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-45

அதுமட்டும் அல்லாமல் அரசு விடுதிகளிலே தங்கிப் படிக்கக்கூடிய மாணவர்களுக்கு bus pass வழங்குவதனால் அவர்கள் ஹாஸ்டலிலே தங்குவதில்லை. அவர்கள் bus pass வைத்துக்கொண்டு காலையில் வந்துவிட்டு மாலையில் சென்று விடுகிறார்கள். மதியம் ஒரு வேளை மட்டும்தான் ஹாஸ்டலிலே உணவு உண்ணுகிறார்கள். அப்படிப் பார்க்கப்போனோம் என்று சொன்னால், இதில் ஊழல் நடைபெறுவதற்கு வாய்ப்பு இருக்கின்றது. மதியம் சாப்பிடுகிறவர்கள், இரவில் சாப்பிடுவதில்லை, காலையில் சாப்பிடுவதில்லை. அப்படியென்றால், இந்த உணவு பொருள்களிலெல்லாம் ஊழல் நடைபெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. எனவே அதைக் கருத்தில் கொண்டாவது நீங்கள் இப்படிப்பட்ட



நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

கிராமப்புறங்களில் இருக்கக்கூடிய நூலகங்களில் பணிபுரியக்கூடிய பகுதி நேர நூலகர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தை இவ்வரசு உயர்த்தித்தர வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

பரங்கிப்பேட்டை சரகத்தில் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகத் தகுதிநிலை உயர்த்தப்பட்டுள்ளதால் அங்கு பணியாற்றிய 4 நடுநிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் பதவி உயர்வு பெற்று நியமனம் ஆனார்கள். ஆனால் அவர்களுக்கு உரிய ஊதியம் இன்னும் வழங்கப்படவில்லை. இந்த நிலையில் மற்ற சரகங்களிலேயுள்ளவர்களுக்கெல்லாம் ஊதியம் வழங்கப்பட்டு இருக்கின்றது. மிகக் குறைவான எண்ணிக்கையில் உள்ளவர்களுக்கு மட்டுமே இந்த difference amount வழங்கப்படவில்லை. எனவே அதை அரசு உடனடியாக வழங்கிட வேண்டுமென்று கேட்டு இந்த வாய்ப்பினைத் தந்த துணைத் தலைவருக்கு நன்றியைக் கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வெ. கோவிந்தன்.

***திரு. வெ. கோவிந்தன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2000-2001 ஆம் ஆண்டுக்கான கல்வி மானியத்தின் மீது பேசுவதற்கான வாய்பளித்தமைக்குத் தங்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு

என்பதற்கேற்ப அய்யன் வள்ளுவரின் குறளினின்று, கல்வி என்னும் வற்றாத செல்வம் தனி மனிதனின் வாழ்க்கையை வளம்பெறச் செய்து, அவன் சார்ந்த சமுதாயத்தின் மேம்பாட்டிற்கும் நாட்டின் வளர்ச்சிக்கும் அடித்தளமாக அமைகின்றது என்பது விளங்கும். கிடைக்கும் சந்தர்ப்பங்களைத் தக்கவாறு பயன்படுத்திக்கொள்ளவும், சந்திக்கும் நிகழ்வுகளில் நன்மை தீமைகளைப் பகுத்தறியவும் கல்வி வழிவகை செய்கிறது.

1991 ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி தமிழகத்திலுள்ள 5.59 கோடி மக்களில் 1.80 கோடி பேர் கல்வி அறிவு

பெறாதவர்கள். இவர்களுள் பெண்கள் 64 சதவீதத்தினர். ஆதிதிராவிட வகுப்பில் 65 சதவீதத்தினர் கல்வி அறிவு பெறாதவர்கள்; மலைவாழ் மக்களில் 79 சதவீதத்தினர் கல்வி அறிவு பெறாதவர்கள். கல்வி கற்றவர்களின் எண்ணிக்கையை நம்முடைய கல்வித் துறை பெருகச் செய்யவும் அனைத்துப் பிரிவினருக்கும் அவரவர் நிலைமைக்கேற்றவாறு கல்வி கற்பிக்கும் அமைப்பை உருவாக்குவதற்குமான பணிகளில் கல்வித் துறை ஈடுபட்டிருப்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

நாடு சுதந்திரம் அடைந்து 50 ஆண்டுகள் ஆகியும் தொடக்கக் கல்வி சிறார் அனைவருக்கும் சென்றடையவில்லை. இந்த நிலையைச் சீரமைக்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் 1999-2000 ஆண்டில் அறிவிக்கப்பட்ட தொடக்கக் கல்வி இயக்கம் என்ற சிறப்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதை கல்வி அறிவில் சிறந்த ஆன்றோர்களெல்லாம் இன்று பாராட்டுகின்றனர். அதே நேரத்தில் 14 வயது, 16 வயது நிலையிலுள்ள மாணவர்களின் நலன் கருதி அதிக அளவில் பயன்பெற ஊராட்சி ஒன்றியம் மற்றும் நகராட்சி, மாநகராட்சிகளில் உள்ளடங்கிய நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்பட்டிருப்பதற்குப் பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

100 உயர்நிலைப் பள்ளிகளில் 6 முதல் 10 வகுப்புவரை கைத்தொழில் பாட வேளையில் ஒரு வகுப்பைக் குறைத்து வேளாண்மைப் பாடத்தைக் கற்பிக்க அரசு அறிவித்துள்ளதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11-50

இன்றைய நிலையில் நம்முடைய மாணவர்களெல்லாம் கணினி கற்பதற்கு இந்த அரசு கொடுத்துள்ள முக்கியத்துவத்தை இந்த நாடே நன்கு அறியும். இன்று உலகளவில் கணினிக் கல்வியில் நம் தமிழகத்தைச் சேர்ந்த மாணவர்கள் பெரும் சாதனை படைத்திருக்கிறார்கள். அதேபோன்று, தமிழகத்தில் ஏற்கெனவே 666 மேல்நிலைப் பள்ளிகளில் கணினிப் பயிற்சி தொடங்கப்பட்டுள்ளது. இது கிராமப்புற மாணவர்களுக்கு பெரும் பயனளிக்கிறது என்பதற்காக நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும் அரசு 557 மேல்நிலைப் பள்ளிகளில் கணினிக் கல்வி அறிவியல் கற்பிக்க அறைகள் கட்டப்படுவதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அரசு, தனியார் கல்வி நிறுவனங்களில் கணினிக் கல்வியை ஊக்கப்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



8 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மாணவர்களின் கல்வியை மேம்படுத்தும்பொருட்டு அவர்களுக்கு மாலை வேளையில் சிறப்பு முகாம்களை ஏற்படுத்தி அந்த ஆதிதிராவிட மாணவர்கள் எல்லாம் கல்வி அறிவில் சிறந்து விளங்குவதற்காகத் திட்டத்தை ஏற்பாடு செய்ததற்காக அரசை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையின்போது தமிழகத்தில் கிராமப்புறங்களில் வசிக்கும் மாணவரல்லாத இளைஞர்களுக்குப் பயன்படும் வகையில் விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி வசதிகளை ஏற்படுத்த ஒரு சீரிய திட்டத்தை அறிவித்துள்ளார்கள். இது உண்மையில் வரவேற்கப்பட வேண்டிய ஒரு திட்டமாகும். ஏனெனில், கிராமப்புறங்களில் மாணவர்கள் மற்றும் மாணவரல்லாத இளைஞர்களின் உடல்திறனை வளர்ப்பதுடன், உடற்பயிற்சி செய்வதன் மூலம் நல்ல ஆரோக்கியத்துடனும் அவர்கள் வாழ இது வழி செய்கிறது. மேலும், இளைஞர்கள் தீய பழக்க வழக்கங்களில் ஈடுபடாமல் இருக்கவும், ஏற்கெனவே அப்பழக்க வழக்கங்களுக்கு ஆளானவர்கள் அவற்றிலிருந்து மீளவும் இத்திட்டம் உதவும்.

விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி வசதிகள் தமிழகத்தில் உள்ள அனைத்து ஊராட்சிகளிலும், நகர்ப்புறங்களிலும் அமைக்கப்பட வேண்டும். அங்கு, அவர்களுக்கு உடற்பயிற்சிக்குத் தேவையான பயிற்சிக் கம்பம், பயிற்சி இணைக் கம்பம், கரலாக்கட்டை, எடைத்தூக்கிப் பயிற்சி பெறும் கருவிகள், மேலும் பூப்பந்து மற்றும் கைப்பந்து விளையாட்டுக்கான உபகரணங்கள், செஸ், கேரம், ஆகிய விளையாட்டுக்களுக்குத் தேவையான பொருட்களை வழங்கி ஊக்கப்படுத்தலாம். மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிதிநிலை அறிக்கையில் தமிழக மக்கள்தொகையில் 35 சதவிகிதம் மாணவரல்லாத இளைய தலைமுறையினர் உள்ளதாகக் கூறியுள்ளார்கள். எனவே தமிழகத்தில் உள்ள அனைத்து ஊராட்சிகளிலும் நகர்ப்புறங்களிலும் இந்த மையங்களில் அவர்களுக்குத் தேவையான விளையாட்டுப் பொருட்களை வழங்கி, மையங்களை உருவாக்க இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து National Council for Educational Research and Training நெறிமுறைகளுக்கு உட்பட்டு, வரும் கல்வியாண்டில் கூடுதலாக புதிய ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளைத் தொடங்க தமிழக அரசைக் கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியில் படிக்கும் மாணவிகள்

எல்லாம் தாங்கள் உயர்கல்வியைப் படிக்க வேண்டும் என்றால் வேலூர், சென்னை போன்ற இடங்களுக்குச் செல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அதனால் ஏழையெளிய மாணவிகள் எல்லாம் உயர் கல்வியைப் படிக்க முடியாத நிலை ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆகவே அப்பகுதி பெண்கள் நலன் கருதி பேரணாம்பட்டில் ஒரு மகளிர் கல்லூரியைத் தொடங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதிக்குப் பக்கத்திலுள்ள குடியாத்தத்தில் உள்ள அரசினர் கலைக் கல்லூரியில் போதிய பேராசிரியர்கள் இல்லை. அந்தக் கல்லூரியில் போதிய பேராசிரியர்களை நியமிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, பேரணாம்பட்டுத் தொகுதியில் அரவட்லா என்பது ஒரு மலைப் பகுதி. அது நம்முடைய இணைச் செயலாளருக்கு நன்றாகத் தெரியும். அங்கே இருக்கின்ற மாணவர்கள் எல்லாம் தொடக்கக் கல்வியை முடித்துவிட்டு மேலும் உயர்நிலைப் பள்ளியில் படிக்க வேண்டுமானால் ஏறக்குறைய 10 கிலோமீட்டர் காட்டில் நடந்து வந்துதான் படிக்கக்கூடிய ஒரு நிலை ஏற்படுகிறது. ஆகவே அந்தப் பகுதி மாணவர்கள் நலன் கருதி அங்கே இருக்கிற தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளியாக உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல் பேரணாம்பட்டு ஊராட்சி ஒன்றியத்தில், பாலூர் ஊராட்சியில், ஓணாங்குட்டையில் தொடக்கப் பள்ளி ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து மாதனூர் ஊராட்சியில் அகரம்சேரி ஊராட்சி, எஸ். பாளையம் என்ற இடத்தில் ஒரு தொடக்கப் பள்ளியை இந்த ஆண்டு தொடங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து ஆலங்காயம் ஊராட்சி ஒன்றியம், மேலக்குப்பம் ஊராட்சியில் தொடக்கப் பள்ளி தொடங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையில் எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் நாசர் அவர்கள் பேசும்போது ஒன்றைச் சொன்னார்கள். விடுதியிலே இருக்கிற மாணவர்களுக்கு bus pass வழங்கப்படுவது கிடையாது என்று. பள்ளித் தலைமை ஆசிரியர்கள் யாருக்கு சிபாரிசு செய்கிறார்களோ அவர்களுக்கு மட்டும்தான் bus pass வழங்கப்படுகிறது. விடுதியிலே இருக்கிற மாணவர்களுக்கு



வழங்கப்படுவதில்லை. அப்படி யாருக்கேனும் வழங்கப்பட்டிருந்தால், மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக்காட்டினால் நிச்சயமாக அது இரத்து செய்யப்படும்.

*முற்பகல் 11-55*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி.

**THIRU B. VENKATASAMY:** Honourable Deputy Speaker, Sir, I thank you very much for giving me this opportunity to participate on behalf of the Bharatiya Janata Party in the discussion on Demand No.17- Education, for the year 2000-2001.

I am really very happy to note that the Honourable Minister has mentioned at the beginning of the Policy Note, Ayyan Thiruvalluvar's saying:-

*"In Sandy soil, when deep you delve, you reach the springs below;*

*The more you learn, the freer Streams of Wisdom flow."*

It shows that this Government is more keenly interested to work hard and see that the result is achieved. By delving more and more deep in to the soil, we get water. Like that, by giving more funds to the Education department, our Honorable Minister is able to achieve better results.

For example, in the year 1996, the grant under this Demand is Rs.2,253.86 crores. But, this year the grant is Rs.4,648.95 crores. It has almost doubled, within four years. It shows that this Government is taking a lot of interest in Education. The literacy rate is also going up. For example, in 1991, the literacy rate in Tamil Nadu was 61.80%. In 1997, it was 70%. But, at present, it may be above 80%.

I am very happy to state that in the last year, 20 schools have been given for my constituency. Wherever there was a village with population of more than 300 within a radius of one kilometre, the Government was kind enough to give schools to almost all such villages, in the interest of educating all.

The scheme of 'Compulsory education for all' is also a very good scheme. I would like to press one thing regarding this point. In spite of this compulsory education scheme, some people are not sending their children to schools.

[Thiru B. Venkatasamy] [2000 ஏப்ரல் 10

Those who are not sending their children to schools should be punished. There should be a clause for that. I request the Honourable Minister to see that the law is amended suitably. If you want to enroll children in schools cent per cent, those who are not sending their children should be punished.

Regarding the standard of primary education, I would like to mention that I was working as a teacher earlier and now I visited some schools. The standard of primary education is really very good. The standard of education in primary section has increased and the officers are taking a lot of interest to develop primary education. I am very happy about that. 'Joyful learning' method has also been introduced. Introduction of computer education in all secondary schools is also really commendable.

I came to understand that Chief Minister Shri Chandrababu Naiduji is going to have more computer education in his State of Andhra Pradesh. I have seen his statement. I request you also to see that computer education is given more importance. A lot of vacancies in the computer field at the world level are available. So, our State can make use of these opportunities. by giving computer education to our people, Sir.

Regarding Collegiate Education, I would like to stress that more number of computer engineering colleges should be opened, so that job opportunities would be available in a large measure for our State. On the education side, the Honourable Minister and the officers are taking a lot of interest in improving the standard of education in Tamil Nadu by increasing the literacy rate to make the State one of the best States in India.

In my constituency, there is no college, so far. There is no polytechnic also from the Government side. There is no stadium also. Hosur an industrial city. Nearly 2 lakhs of people are living in Hosur. Sir, I request you to see that a polytechnic, a college and a stadium are also created. I am very happy to know that our Hon. Chief Minister has announced creation of Sports Complexes in almost all the villages in Tamil Nadu, and a Department is also being created to improve Sports, that shows the interest of this Government to improve the rural areas very well.

நண்பகல் 12-00

Regarding minority languages, Sir, I am the member who is representing the Telugu and Kannada people. They and the people studying Urdu are got



2000 ஏப்ரல் 10] [Thiru B. Venkatasamy]

some difficulties. Actually, last year also I spoke about Urdu. I am very happy that in my area all the Urdu teacher posts have been filled up. But I am very sorry to state that the Telugu and Kannada teachers posts have not been filled up. For example, nearly 200 Telugu pandits posts are vacant; Kannada Teachers posts and B.T. posts are also vacant. I came to understand that they called candidates for 14 vacancies from the Recruitment Board but It has sent only 4 candidates. There are lot of B.T. candidates and Telugu Pandits available. But they are screening them. I don't know why they are screening those who have passed. They can be sent for the interview. But they are not sending. They are stopping them. I do not know their way of selection but all these posts should be filled up early, Sir. When they have passed B.A., B.T., there is no scope for screening them once again for the B.T. posts.

Regarding Training Schools, Sir, there are Telugu Training Schools at Krishnagiri, Gangavalli and Chinnadarapuram. No Telugu teacher is posted to teach the pupils in the Training School. Actually, in Gangavalli there is no Telugu School at all. In Chinnadarapuram also there is no Telugu School. How can they go and take practice in the Telugu Schools? So, I request the Hon. Minister to see that at Gangavalli and Chinnadarapuram...(the Gong. was sounded)

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தெலுங்கு பயிற்சி வழங்குவதற்கு, ஏற்கெனவே உள்ள ஆசிரியர் பயிற்சிப் பள்ளிக்கூடங்களைத்தான் பயன்படுத்த வேண்டியிருக்கிறது. அந்த முறையிலே பயிற்சிப் பள்ளிக்கூடம் வேறு இடத்தில் இருந்தாலும், பயிற்சி ஆசிரியர் சென்று பாடம் நடத்திப் பயிற்சி பெறுவதற்கு வேறு இடங்களிலே உள்ள தெலுங்கு மீடியம் உள்ள பள்ளிக்கூடங்கள் அவர்களுக்காகத் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றன. அதைத்தான் தற்போது நடைமுறைப் படுத்தக்கூடிய வாய்ப்பு இருக்கிறது.*

**THIRU B. VENKATASAMY:** I am sorry to state that there is no Telugu School at all. How can they go and get teaching practice? That is the difficulty. So, I request the Hon. Minister to examine this and see that Gangavalli and Chinnadarapuram girls trainees may be transferred to places where there are Telugu Schools, for example to Hosur or Krishnagiri D.I.E.T.

As already stated nearly 200 Telugu Secondary Grade posts are vacant and the Government was also kind enough to post the B.T.s and Telugu

Pandits in Secondary Grade posts and the G.O. has also been issued. I am really thankful to the Government and the officers for doing this.

Coming to the other point, regarding upgrading of Elementary Schools into Higher Elementary Schools in my Constituency, I request you to see that Mudugurichi, Moranapalli, Shoolagiri Blocks are also considered. Sir, upgrading of Alur Government High School into Government Higher Secondary School in Padmanabapuram in Kanniyakumari District, is pending for 40 years. Our Hon. friend Mr. Velayutham, M.L.A. has studied in that school, Sir.

It is pending for 40 years. I request the Hon. Minister to see that it is upgraded as Higher Secondary School. One other High School in Uthanapalli is also to be upgraded. I request you to see that it is also sanctioned Sir.

I have already represented to the Hon. Minister. About 10 pupils who have been trained in Karnataka could not get 50% marks in their P.U.C. Previously exemption was given by the Government to such pupils. (The gong was sounded) I request you to see that these pupils are given exemption. There are only ten people, Sir.

*கருணை அடிப்படையிலே அவர்களுக்குத் தயவுசெய்து வேலை கொடுக்கவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். இல்லையென்றால் 10 பேர் வேறு எங்கும் போய் வேலை வாங்க முடியாது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.*

I thank the Hon. Deputy Speaker for giving me this opportunity to speak a few words on behalf of B.J.P. Thank you very much.

*பிற்பகல் 12-05*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி.

*** டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு மனிதன் பிறக்கின்றபோது ஒரு வாயோடு மட்டும் பிறப்பதில்லை, இரண்டு கைகளோடும் பிறக்கின்றான் என்ற அழகான பொன்மொழிகளை செஞ்சீனத்தை உருவாக்கிய மா சேதுங் குறிப்பிட்டார்கள். அதை எதற்காகக் குறிப்பிட்டார்கள் என்றால், எந்த மனிதனும் இந்த நாட்டிலே வேலையில்லாமல் திண்டாடக் கூடாது, பட்டினி கிடக்கக் கூடாது, அவர்கள் கற்கின்ற கல்வி அவர்களை முழு மனிதனாக மாற்றுவதற்கும் அவர்களுடைய சொந்தக் கால்களிலே நிற்பதற்கும் பயன்பட வேண்டும் என்ற அடிப்படையிலே அதைக் குறிப்பிட்டார்கள். அந்த அடிப்படையிலே பார்க்கின்றபோது இந்திய மண்ணிலே சுதந்திரத்திற்குப் பிறகும்கூட, இன்னும் நம்முடைய கல்வி முறைகள் பட்டயதாரிகளையும் பட்டதாரிகளையும் உருவாக்கக்கூடிய கல்வியாக இருக்கிறதேதவிர, வாழ்க்கை முறைகளை ஒட்டியதாக, படித்துவிட்டு வேலைக்கு அலைய வேண்டிய சூழ்நிலை இல்லாத ஒரு கல்வியை உருவாக்கக்கூடிய நிலை உருவாகவில்லை என்பதுதான் என்னுடைய கருத்து. ஆனால் இந்த மானியத்தில், பள்ளிகளில் படிக்கும்போதே வேளாண்மைக் கல்வி, தொழில் கல்வி புகட்டப்படும் என்று சொல்லி இருக்கிறார்கள். இருந்தாலும்கூட ஒட்டுமொத்தமாக அடிப்படையையே மாற்றி அமைக்க வேண்டும். இங்கே அருகிலே இருக்கக்கூடிய சீனத்தில் 6-வது வகுப்பு படிக்கக்கூடிய ஒரு பள்ளி மாணவி பட்டுச் சேலையை நெய்வதற்குத் தெரிந்து வைத்திருக்கிறாள். 8-வது வகுப்பு பயிலக்கூடிய ஒரு மாணவன் ஒரு Pump set-ஐ உருவாக்கக்கூடிய கல்வியைக் கற்றுக்கொள்கிறான். ஆனால் நம்முடைய கல்வி அப்படிப்பட்ட முறையிலே இருக்கிறதா என்பதுதான் என்னுடைய கேள்வி. எனவே அந்த அடிப்படையிலே நம்முடைய சிந்தனைகள் ஓட வேண்டும். எந்த மனிதனும் கல்வி கற்ற பிறகு, பள்ளியை விட்டு வெளியே வருகிறபோதோ அல்லது கல்லூரியை விட்டு வெளியே வருகிறபோதோ நான் இந்தப் பட்டப் படிப்பைப் படித்து இருக்கிறேன். எனக்கு வேலை கொடுங்கள் என்று கேட்கக்கூடிய அவல நிலை ஒழிக்கப்பட வேண்டும் என்பதே கல்வியினுடைய அடிப்படையாக இருக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய நோக்கம்.



**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உயர்ந்த குறிக்கோள் சில நேரங்களில் நம்மை வழுக்கி விடுகிறது. தொழிற்கல்வி படித்தவர்களுக்கே வேலைவாய்ப்பு வழங்கக்கூடிய நிலை அரசுக்கு இல்லை, அவர்களாகவே வேலை தேடிக் கொள்ள வேண்டும். பொறியியல் பட்டதாரிகள் மட்டும் ஏறத்தாழ 30,000 பேருக்கு மேல் வேலைவாய்ப்பிற்காக அரசாங்கத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கிற நிலைமை இருக்கிறது. மற்றொன்று தொடக்கக் கல்வியிலேயே தொழில் சார்ந்த கல்வி என்று கொண்டு வருகிறபோது, நம்முடைய சமுதாயம் ஏற்கெனவே பாழ்பட்டுப் போன சமுதாயமாக இருக்கிற காரணத்தால், சாதி ஏற்றத்தாழ்வு, வேலை சூழ்நிலை, தாழ்த்தப்பட்டவர்களுடைய நிலை, மேல் வகுப்பாருடைய நிலை என்று ஏற்கெனவே பாகுபாடுகளுக்கு ஆளாகியிருக்கிற காரணத்தால், தொழில் சார்பான கல்வி வருகிறபோது அடித்தட்டுச் சமுதாயம் அந்தத் தொழில் சார்புக் கல்வியிலே மறுபடியும்

முடங்கிப் போகிறது. ஏற்கெனவே குலக் கல்வித் திட்டம் தமிழகத்திலே வந்தபோது அதைக் கடுமையாக தந்தை பெரியார் அவர்கள், பேரறிஞர் அண்ணா அவர்கள் எல்லாம் எதிர்த்ததற்குக் காரணமே, ஏற்கெனவே தொழில் வழியிலே தாழ்ந்த நிலைமைக்கு ஆளாக்கப்பட்டுவிட்ட மக்கள் இந்தத் தொழில் கல்வி மூலமாக ஒரு நேரப படிப்பு படித்து இன்னொரு நேரத்தில் தொழிலில் ஈடுபடுகிறபோது மறுபடியும் சமுதாயத்தில் தாழ்ந்தவர்களாக மாற்றப்படுவார்கள் என்பதற்காகத்தான். ஆகவே தான் அந்தத் தொழில் கல்வியின் அடிப்படையில் வந்து குலக் கல்வித் திட்டத்தை ஏற்க முடியாது என்றார்கள். ஆகவே கிருஷ்ணசாமி அவர்களுடைய நோக்கம் நல்லதாக இருந்தாலும், உழைக்கும் சமுதாயம் வழுக்கி விழாமல் பாதுகாக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் குலக் கல்வித் திட்டத்தை, அந்தத் தொழிலினுடைய அடிப்படையிலே கல்வியைக் கொண்டு வரச் சொல்லவில்லை. நவீன முறையில் வந்திருக்கக்கூடிய, விஞ்ஞானத்திற்கேற்ற முறையிலே உற்பத்தியினுடைய அடிப்படையில் கொண்டுவர வேண்டும். கடந்த காலத்திலே இருந்த அல்லது முன்பு சொல்லப்பட்டது, குலத்தினுடைய அடிப்படையில் சலவைத் தொழிலாளியினுடைய மகன் சலவைத் தொழிலில் ஈடுபட வேண்டும் அல்லது தச்சருடைய மகன் தச்சர் தொழிலில் ஈடுபட வேண்டும் என்பதற்கும், ஒட்டுமொத்தமாகக் கல்வியை உற்பத்தி அடிப்படையில் கொண்டு வரவேண்டும் என்பதற்கும் அடிப்படையில் வித்தியாசம் இருக்கிறது.

பிற்பகல் 12-10

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த உற்பத்தி முறையில் ஒரு தொழில்திறன் மூலம் எல்லோரும் சமநிலை பெறுவதாக இருந்தால் குறைந்தபட்சம் 10 ஆம் வகுப்பு வரையிலாவது பொது அறிவு படிப்பைப் பெற்றால்தான் அதற்கு மேல்நிலையிலே தொழில்சார்ந்த கல்வி பெறுகிறபோது ஓரளவுக்காவது சமத்துவத்தை நாம் காப்பாற்ற முடியும்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்பொழுது கல்வியில் 1 ஆம் வகுப்பில் இருந்து 5 ஆம் வகுப்பு வரையிலும் தமிழ் வழிக்கல்வி பயிற்றுவிக்கப்பட வேண்டுமென்று அரசு உத்தரவு விதித்திருக்கிறது. அது இப்போது நீதிமன்றத்திலே இருக்கிறது. நீதிமன்றத்திலே



தீர்ப்பு எப்படி வரும் என்பதைப் பற்றி நமக்குத் தெரியாது. ஒருவேளை அதைப் பற்றிய தீர்ப்பு எப்படி வந்தாலும் இன்று இருக்கக்கூடிய தனியார் பள்ளிகள், மெட்ரிக்குலேஷன் பள்ளிகள், ஆங்கில வழிக்கல்வி கற்பிக்கக்கூடிய பள்ளிகள் தமிழ்நாடு அரசினுடைய உத்தரவை மீறுவதற்கு வழிவகை செய்யும் வகையிலே Central Syllabus என்ற அடிப்படையிலே எல்லாப் பள்ளிகளும் செல்வதற்குத் திட்டமிட்டு இருப்பதாக அறிகிறோம். அப்படி மெட்ரிக்குலேஷன் பள்ளிகளெல்லாம் Central Syllabus-க்கு மாறுகிறபோது, அந்தப் பள்ளிகளுக்கெல்லாம் தமிழ் வழிக் கல்வி அவசியமில்லை என்பது யதார்த்தமானது. அப்பொழுது இந்த அரசு அதை எப்படிச் சமாளிக்கும் என்பதுதான் என்னுடைய ஆதங்கம்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பதிலை எதிர்பார்க்கிறார். நீதிமன்றத்திலே தீர்ப்புக்காக இருக்கிற போது, இடையிலேயே நான் சில முடிவுகளை, அரசு முடிவாக அறிவிப்பது நியாயமல்ல. அந்த முடிவு வரட்டும். அரசாங்கத்தினுடைய கருத்தை நாங்கள் தெரிவிக்கிறோம்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அடுத்து இப்பொழுது பல பகுதிகளில் ஆதிதிராவிடர் பள்ளிகள் என்று தனியாக இருக்கின்றன. என்னுடைய கருத்தைப் பொறுத்தமட்டிலும், இன்னும் ஆதிதிராவிடர்களுக்கு என்று தனியாகக் கல்வியை ஒதுக்கி பிரித்துப் பார்க்க வேண்டிய அவசியமில்லை. ஒட்டுமொத்தமாகக் கல்வித் துறையின் உள்ளேயே எல்லாப் பள்ளிகளையும், ஆதிதிராவிடர் பள்ளிகளையும் உள்ளடக்குவதுதான் சரியாக இருக்க முடியும் என்று நான் இந்த நேரத்திலே வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக 5 ஆம் வகுப்புக்குப் பிறகும், 10 ஆம் வகுப்புக்குப் பிறகும் இன்னும் மேல்படிப்பைப் பல பெண் குழந்தைகள் தொடர முடியாமல் போவதற்குக் காரணம் அவர்களுடைய வாழ்க்கையிலுள்ள ஏழ்மை நிலை. அதில் மிக முக்கியமானது, விருதுநகர் மாவட்டம், திருநெல்வேலி மாவட்டம்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு உறுப்பினர் பேசுகிறபோது ஆதிதிராவிடர் பள்ளிகளை எடுத்துவிட வேண்டுமென்ற அர்த்தத்தில் அவர் சொன்னார். ஆதிதிராவிடர் பள்ளிகள் இருப்பதன் மூலம், இன்னும் மற்ற இனத்தைச் சார்ந்தவர்களும் ஆதிதிராவிடர் பள்ளிகளில்

படிக்கிறார்கள், படிக்காமல் இல்லை. எனவே தனியாகப் பள்ளி நடத்த வேண்டிய அவசியம் இருக்கிற காரணத்தால், ஆதிதிராவிடர் பள்ளியை எடுத்துவிடும் வகையில் அவர் குரல் கொடுப்பது சரியல்ல என்ற கருத்தைச் சொல்கிறேன்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** கல்வி என்பது எல்லோருக்கும் கட்டாயமாக்கப்பட்ட பிறகு, எல்லாக் குழந்தைகளுக்கும் கல்வி கொடுப்பதற்கு அரசு முன்வந்த பிறகு, ஆதிதிராவிடர்களுக்கு என்று தனியாகப் பள்ளிகள் இன்னும் தொடர வேண்டிய அவசியம் இல்லை என்பதுதான் என்னுடைய கருத்து.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குறுக்கிடுவதற்கு மன்னிக்கவும். அவர் அதிகமாக தலித் மக்களுக்கு தனியாக ஒரு சங்கம் வைத்துப் போராடிக் கொண்டிருக்கிறவர். தலித் மக்களைப் பொறுத்தவரைக்கும் தமிழ்நாட்டில் எந்த அளவுக்கு முன்னேறியிருக்கிறார்கள் என்று தெரிந்துதான் சங்கம் வைத்து, கட்சியை வைத்து நடத்துகிறாரா? அப்படிப்பட்ட மக்களுடைய கல்வித் தரம் உயரவேண்டுமென்று சொன்னால், இதுபோன்ற அமைப்புகள் மூலம், பள்ளிகள் மூலம் அவர்கள் வாழ்க்கையில் முன்னேறுவதற்கு வாய்ப்புகள் கிட்டுகின்றன. அதுசம்பந்தமாக அவர் என்ன கருத்தைச் சொல்கிறார் என்பதைத் தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** அதாவது தலித் குழந்தைகள் படிப்பதற்கு வாய்ப்பு இல்லாமல் இருந்தபோது, பொது இடங்களிலே சென்று படிப்பதற்கு சங்கடங்கள் ஏற்பட்ட நேரத்தில் தலித் மக்களுக்கென்று தனியாகத் தேவைப்பட்டது. இப்பொழுது அது அவசியமில்லை என்று நான் கருதுகிறேன். அது தாழ்வு மனப்பான்மையை மீண்டும் தொடர்ச்சியாக வைப்பதற்குத்தான் வாய்ப்பளிக்குமேதவிர, அந்தச் சூழ்நிலை இப்பொழுது இல்லை என்று நான் கருதுகிறேன்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுவது, ஆதிதிராவிடர் நல வாரியம் மூலம் இயங்குகின்ற ஒரு காலகட்டத்தில், ஆதிதிராவிடர் மாணவர்கள் எல்லாப் பள்ளிகளிலும் சேர்ந்து படிக்க முடியாத நிலை இருந்தபோது, பெருந்தலைவர் காமராசர் அவர்களால் 1,500-க்கு மேற்பட்ட பள்ளிகள் ஆதிதிராவிடர் நல வாரியத்தால் ஆரம்பிக்கப்பட்ட பள்ளிகளை ஆதிதிராவிடர் நலத் துறையில் இருக்கிற தாசில்தார் நிருவகித்து வருகிறார். அந்தப் பள்ளி, கல்வித் துறையின்கீழ் இயங்குமா என்ற அளவில்தான்



நம்முடைய உறுப்பினர் அவர்களுடைய கேள்வி அமைந்துள்ளது. ஆகவே அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அந்த அளவில் எல்லாப் பள்ளிகளும், கல்வித் துறை இயக்குநரின் கட்டுப்பாட்டில் உள்ள மாவட்டக் கல்வி அலுவலர், முதன்மைக் கல்வி அலுவலர்கள் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வரப்படுமா என்பதைத்தான் நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

*பிற்பகல் 12-15*

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** பிரச்சினை என்னவென்றால், ஆதிதிராவிடர் பள்ளிகள் தரம் குறைந்திருப்பதற்கு காரணம் அவை தனியாக இயங்குவதுதான். அவை கல்வித் துறையின்கீழ் கட்டுப்பட்டால் நிச்சயமாக இன்னும் தரம் கூடும் என்பதும் என்னுடைய கருத்து. (மணியடிக்கப்பெற்றது) இரண்டு நிமிடங்களில் பேசி முடித்துவிடுகிறேன்.

அடுத்தது இந்த அரசு பதவியேற்ற உடனேயே இடைநிலை ஆசிரியர்களிடத்திலே, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் போதுமான பேர் படித்துப் பட்டம் பெற்றவர்கள் இல்லாத காரணத்தினாலே பட்டதாரி ஆசிரியர்களுக்கு மூன்று மாதப் பயிற்சி கொடுத்து நியமித்தீர்கள். ஆனால், 1,200 பேரை நியமித்துவிட்டு அத்தோடு அதற்குப் பிறகு விஞ்ஞான...

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விளக்கம் சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். 1200 பேர் வரையிலே நியமிக்கக்கூடிய வாய்ப்பு இருந்தது, முழு அளவுக்கு நியமித்துள்ளோம். 600 பேர் வழக்குகள் போட்டு, அந்த ஒவ்வொரு வழக்குக்கும் நீதிமன்றத்திலே ஒரு இடத்தை அவருக்காக நிரப்பாமல் நிறுத்தி வையுங்கள் என்று, individually நீதிமன்றம் ஒவ்வொரு வழக்கிலும் சொன்னதால்—ஒவ்வொருவருக்கு ஒரு இடம் நிறுத்தி வைக்கச் சொன்னதால்—600 இடங்கள்தான் நிரப்பப்படாமல் மிச்சம் இருக்கின்றன. அவை நீதிமன்றத்தால் தற்போது, நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்ற இடங்கள். நீதிமன்றத்தில் அந்த வழக்குகளுக்கு முடிவு கிடைக்கிறபோது உடனடியாக உரியவர்களுக்கு அந்த இடம் கிடைக்கும்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசு முதலில் போட்ட உத்தரவுப்படி எல்லா ஆசிரியர்களும் நியமிக்கப்படுவார்கள் என்று அறிவித்தால், அத்தனைபேரும் இந்த வழக்குகளை வாபஸ் வாங்குவதற்குத் தயாராக இருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அது தாழ்த்தப்பட்ட சமூகத்திற்குத் தரப்பட வேண்டிய இடம், ஆதிதிராவிடர்களுக்குத் தரப்பட வேண்டிய இடம் என்பதுதான் வாதிடப்பட வேண்டியதேதவிர, ஆதிதிராவிடர் சமூகத்தில் அந்தப் பள்ளிக்கூடங்களில் பாடம் நடத்துவதற்கு வாய்ப்பாக அறிவியலோ, கணிதமோ, ஆங்கிலமோ நடத்துவதற்குத்தான் ஆசிரியர்கள் தேவையென்று ஒரு கொள்கை முடிவை அரசு மேற்கொண்டது; என்ன காரணத்தினால் என்றால் secondary grade, இடைநிலை ஆசிரியர்கள் இருக்க வேண்டிய இடத்தில் பட்டதாரி ஆசிரியர்களை அமர்த்துவோமேயானால், அது நீதிமன்றத் தீர்ப்புக்கு முரண்படுவது என்ற காரணத்தினால் இடைநிலை ஆசிரியர்களால் சிறப்பாக நடத்த முடியாத பாடங்களாக இருக்கின்ற பாடங்களுக்கு, இந்தப் பட்டதாரி ஆசிரியர்களை நாங்கள் பயன்படுத்துகிறோம் என்று அரசு ஒரு விளக்கம் சொல்ல வேண்டிய ஒரு நிலைமை இருக்கிற காரணத்தினாலேதானேதவிர, ஆதிதிராவிடர் சகோதரர்களுக்குள் இன்னார் மட்டும்தான் வேண்டியவர், இன்னார் வேண்டாதவர் என்பதல்ல. தேவைப்படும் படிப்பு அடிப்படையில்தான் இது கருதப்படுகிறது.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** இன்னும்கூட அந்த உத்தரவை முழுமையாக அமல்படுத்துவதற்கு இடைப்பட்ட காலத்திலே போடப்பட்ட அந்த உத்தரவை விலக்கிக்கொண்டு, நீங்கள் போட்ட உத்தரவையே அமலாக்க இந்த நேரத்திலே வலியுறுத்த விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அப்படி ஒரு நிலையை அரசு எடுப்பதானால்—secondary grade—இடைநிலை ஆசிரியர்களின் பணியிடத்திலே பட்டதாரி ஆசிரியர்களை நியமிக்கக் கூடாது என்று விதித்த இன்னொரு தடை அதற்குக் குறுக்கீடாக இருக்கிறது. ஒரு சிறப்புக் காரணத்தைக் காட்டி, இந்த விதிவிலக்கை அரசின் சார்பில் நாங்கள் பெற முயற்சிக்கிறோம்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** கல்லூரிகளில் ஏறக்குறைய 50 வருடங்கள், 60 வருடங்கள் இருக்கக்கூடிய தனியார் கல்லூரிகளில் 100 ஆசிரியர்கள் இருக்கக்கூடிய இடத்திலே ஒரு தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்கூட இப்போது கிடையாது. கோயம்புத்தூரில் சி.பி.எம். கல்லூரி என்று ஒரு கல்லூரி இருக்கிறது. ஏறக்குறைய 60, 70 பேருக்கு மேற்பட்ட ஆசிரியர்கள் இருக்கிறார்கள். ஆனால், ஒரு S.C. கூட கிடையாது. ஒரே ஒரு S.C. இருந்தார், அவரைக்கூட பல காரணங்களைச் சுட்டி, வேறு கல்லூரிக்கு, அரசுக் கல்லூரிக்கு மாற்றிவிட்டார்கள். ஆனால், அரசு ஒரு



நல்ல உத்தரவைப் பிறப்பித்திருக்கிறது. இப்படித் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த இடங்களை நிரப்புகின்ற வரையிலும் மற்றவர்களுக்குக் கூட promotions எல்லாம் கொடுக்கமாட்டோம் என்று எல்லாம் சொல்லியிருக்கிறீர்கள். ஆனால் அதைக்கூட எந்த நிர்வாகமும் கேட்பதாகத் தெரியவில்லை. எனவே மானியங்களைக்கூட வெட்டி அல்லது மானியங்களைக் குறைத்தோ அல்லது மானியங்களை நிராகரித்தோகூட இந்த இட ஒதுக்கீட்டைத் தனியார் பள்ளிகளிலேயும், கல்லூரிகளிலும் உடனடியாக நிரப்புவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையென்றால்...

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தனியார் உதவிபெறுகிற கல்லூரியாக இருந்தாலும் roaster முறைப்படி, அதாவது வகுப்புவாரி அடிப்படையில் 1, 2, 3 என்ற வரிசையில் இன்ன இடத்திற்கு வருகிறபோது இன்ன சமூகத்திற்கு வழங்கவேண்டுமென்ற அடிப்படையில் அவர்கள் வேலை வழங்கக் கடமைப்பட்டவர்கள். ஆனால், 34 இடங்களில், 4 அல்லது 5 S.C. என்ற பிரிவைச் சார்ந்தவர்களுக்குத் தர வேண்டிய இடத்தை, அவர்கள் தராமலே அந்த இடங்களை மற்றவர்களைக் கொண்டு நிரப்பியிருக்கிறார்கள். ஏதேனும் ஒரு பாடத்தில் S.C.-க்குத் தர வேண்டிய இடத்தைத் தர முடியாத அளவுக்கு அவர்களிடையே யாரும் தகுதியுடையவர்களுடைய விண்ணப்பம் வேலைவாய்ப்பு அலுவலகத்திலேயிருந்து கிடைக்காவிட்டால், மாற்று ஏற்பாடு செய்வதற்கு, அரசாங்கத்தினுடைய அனுமதி பெற வேண்டும். அந்த மாற்று ஏற்பாட்டுக்கு அனுமதி தராத ஒரு சூழ்நிலையில் ஏறத்தாழ 34 ஆசிரியர்களில் 17, 18 ஆசிரியர்கள் வரையில் தான் ஏற்கெனவே ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலையில், மிச்சம் இருக்கிற 17 அல்லது 16 ஆசிரியர்களுடைய ஊதியம் அரசால் வழங்கப்படவில்லை. நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. அதற்காகத்தான் அவர்கள் போராட்டம் நடத்துகிறார்கள். தாழ்த்தப்பட்ட சமூகத்திலே 4 பேரைத் தொடர்ந்து நீங்கள் நியமித்துவிட்டுத்தான், இந்த உரிமையைக் கேட்க வேண்டுமென்று அரசின் கல்வித் துறை அவர்களுக்குத் தெரிவித்து இருக்கிறது. அந்த அடிப்படையிலே அவர்கள் போராட்டம் நடத்துகிறார்கள். நாம் நம்முடைய அரசின் நியாயமான கொள்கையைக் காப்பாற்ற முயற்சிக்கிறோம்.

பிற்பகல் 12-20

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கல்வி அமைச்சருடைய நடவடிக்கைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, பல்கலைக் கழகங்களில் இட ஒதுக்கீடு அமலாக்கப்படுவது கிடையாது. தனியார் பள்ளிகளில் என்ன செய்கிறார்கள் என்றால், இட ஒதுக்கீட்டை முதலிலே தாழ்த்தப்பட்டவர்களுக்கு என்று நிர்ணயித்து வேலை கொடுக்கிறார்கள். மூன்று மாதமோ ஆறு மாதமோ கொடுத்து, பிறகு அவர்களைப் பல்வேறு காரணங்களுக்காக நீக்கிவிட்டு, அந்த rotation முறையிலே B.C.யோ அல்லது அவர்களுக்கு வேண்டியவர்களையோ போட்டுக்கொண்டு விடுகிறார்கள். எனவே, இதிலே அரசு முக்கிய கவனம் செலுத்தவேண்டுமென்று வலியுறுத்தி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆ இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கல்வி மானியக் கோரிக்கையின்மீது தமிழ் பா.ம.க.வினுடைய சார்பில் என்னுடைய கருத்துகளை நான் இங்கே முன்வைக்க விரும்புகிறேன்.

அறியாமை என்ற இருளை அகற்றுவதற்கு விரைந்து பயன்படக்கூடிய நேர்மையான ஒரே கருவி கல்வி என்று சொல்வார்கள். அந்த வகையிலே இப்போது அறியாமை இருளை அகற்ற வேண்டிய கல்வியானது, வணிகமயமாகி வருகின்ற ஒரு கேடுபாடான சூழ்நிலை ஒருபக்கம் இருந்தாலும், கல்வியைப் பொறுத்த அளவிலே நாம் அனைவரும் கருத்தூன்றி கவனித்துச் செயல்பட வேண்டிய ஒரு கட்டாயத்திலே இருந்துகொண்டிருக்கிறோம்.

இப்போது அரசு ஒன்றாம் வகுப்பிலேயிருந்து ஐந்தாம் வகுப்பு வரையிலே தமிழ் வழியிலே பாடங்கள் சொல்லித் தரப்பட வேண்டுமென்று ஒரு கொள்கை வகுத்து, அதனை நிறைவேற்றியபோது, அதனை ஏற்றுக்கொள்ளாமல், சில பேர் நீதிமன்றம் செல்லக்கூடிய அவலமான சூழ்நிலைகளை எல்லாம் நாம் இப்போது பார்த்துக்கொண்டிருக்கிறோம். இந்தியாவிலே எந்த மாநிலத்திலேயும் இப்படிப்பட்ட ஒரு மோசமான சூழ்நிலையை யாரும் பார்க்க முடியாது. இப்படி, தாய் மொழிக்கு எதிராகவே, அந்த மாநிலத்திலே வாழ்ந்துகொண்டிருப்பவர்களே, சிலபேர் இத்தகைய வீணான முயற்சியிலே ஈடுபடுகிறார்கள் என்றால், அதற்குப் பிற மாநிலமாக இருந்தால், தக்க பதிலடிகூடக் கொடுத்திருப்பார்கள். ஆனால் இப்போது நீதிமன்றம் இதிலே தலையிடக் கூடாது என்று சொல்லியிருக்கிறது. இந்தப் பிரச்சினை குறித்து யாரும் பேசக் கூடாது



என்பதுபோல ஒரு தடையை விதித்து இருப்பதுபோல, அவர்கள் இப்போது தீர்ப்பை வழங்கியிருக்கிறார்கள். மண்டல் குழு பரிந்துரை அமலாக்கப்பட்ட நேரத்திலேகூட இப்படிப்பட்ட தடைகள் விதிக்கப்பட்டது இல்லை. ஆனால்—ஒரு மாநிலத்தினுடைய ஒரு மிகப் பெரிய பிரச்சினையிலே இப்போது இத்தகைய மோசமான சூழ்நிலைக்குப் போயிருக்கிறார்கள் என்று சொன்னால், நான் அரசை வலியுறுத்தி வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன், அரசு தமிழ் வழியிலே படித்தவர்களுக்குத்தான் வேலைவாய்ப்பிலே முன்னுரிமை அளிக்கப்படும் என்று ஒரு சட்டத்தை இயற்றினால், எதிர்ப்பவர்கள் எல்லாம் மங்கிப்போய், தாமாகவே தமிழ் வழியில் படிப்பதற்கு முன்வந்துவிடுவார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே அரசினுடைய கவனத்திற்குச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, முன்னாள் நீதிபதி மோகன் குழு அளித்த பரிந்துரைகளை அமல்படுத்துவதிலே இந்த அரசு எந்தவித தயவுதாட்சண்யமும் இல்லாமல் உறுதியாக நிற்கவேண்டும் என்பதையும் நான் இந்த நேரத்திலே குறிப்பிட்டுச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

அதேபோல, இப்போது படித்தவர்கள் சொந்த நாட்டை வளப்படுத்துவதற்குப் பதிலாக, அயல்நாடுகளுக்குச் சென்று வேலை தேடுகிற நிலைமைகள் இருப்பதன் காரணமாக, அறிவாளர் பற்றாக்குறை என்று சொல்வார்களே—Brain Drain என்று—அதைப்போல ஒரு கொடுமையான சூழ்நிலை உருவாவதையும் நாம் இந்த நேரத்திலே கருத்திலேகொண்டு சிந்தித்தாக வேண்டும். நம்முடைய நாட்டு மக்களுடைய வரிப் பணத்திலே படித்துவிட்டு, தங்களுடைய திறமைகளை, தங்களுடைய அறிவாற்றலைக்கொண்டு—தங்களுக்குச் சில வசதிகள் கிடைக்கின்றன என்ற காரணத்திற்காக—அண்டை அயல் நாடுகளுக்குச் சென்று, அந்நாடுகளை வளப்படுத்துகின்ற சூழ்நிலைகள் எல்லாம் மாற்றியமைக்கப்பட வேண்டும். அதற்காக, அரசு சிறப்பானதொரு திட்டத்தைத் தீட்டியாவது, சில நாடுகளிலே இராணுவப் பயிற்சியானது கட்டாயமாக்கப்பட்டிருப்பதுபோல, இங்கே, தகவல் தொழில்நுட்பம், மருத்துவம், பொறியியல் போன்ற பல்வேறு தொழிற் படிப்புகளைப் படிப்பவர்கள் அல்லது வேறு சாதாரண கலையியல், அறிவியல் படிப்புகளைப் படிப்பவர்கள் யாராக இருந்தாலும், கட்டாயமாகக் குறைந்தது மூன்றாண்டு காலத்திற்காகவாவது மக்களுக்கு, குறிப்பாக கிராமப்புற மக்களுக்குத் தொண்டு செய்கின்ற வாய்ப்பினைக், கட்டாயப்படுத்த வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள

ஆசைப்படுகிறேன். அப்படியில்லை என்று சொன்னால், இப்போது முடத்தெங்கு எப்படி நட்டவனுக்குப் பயனைத் தராமல், பக்கத்து வீட்டுக்காரனுக்கு நெற்றைத் தருகிறதோ, நெற்றுத் தேங்காய்களைத் தருகிறதோ, அதைப்போல நம்முடைய வரிப் பணத்திலேயிருந்து படித்தவர்கள், நம்முடைய நாட்டினுடைய மேம்பாட்டுக்குப் பயன்படாமல், மற்ற நாடுகளுக்குப் பயன்படுகின்ற ஒரு சூழ்நிலைதான் உருவாகும் என்ற காரணத்தினாலே, அரசு இதனைக் கவனத்திலே கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-25*

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கல்வி மானியம் சற்று விரிவான அடிப்படைகளைப் பற்றி விவாதிக்கப்படுவதாக இருக்கிற காரணத்தால், இறுதியாக நான் என் விளக்கங்களைச் சொல்கிறபோது அனைத்துக்கும் விளக்கம் அளிக்காத குறைபாடு ஏற்படும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்துக்கு ஒரு விளக்கம் சொல்ல விரும்புகிறேன். இந்தியாவினுடைய மக்கள்தொகை எவ்வளவு பெரிதோ அதைப்போல மொத்தத்திலே படிப்பவர்களுடைய எண்ணிக்கையும் அதிகம். ஆண்டுதோறும் படிப்பவர்களுடைய மொத்த எண்ணிக்கையும் அதிகமாகிறது. உயர்படிப்புப் பெற்றவர்கள் விகிதாச்சாரக் கணக்கிலே குறைவாக இருந்தாலும், படித்துப் பட்டம் பெறுபவர்களுடைய எண்ணிக்கை அதிகம். அவர்களுடைய தகுதியையும் திறமையையும் முழு அளவுக்கு வெளிப்படுத்துவதற்கு இந்தியாவிலே அதற்குத் தேவையான வாய்ப்பு வசதிகள் இல்லை. கணினித் துறையிலே உள்ள நம்முடைய அறிவாற்றல் அதிக அளவுக்கு உலகத்திற்குத் தெரிந்ததற்குக் காரணம், அமெரிக்காவிலே உள்ள நம்முடைய கணினித் துறை அறிவியல் வல்லுநர்கள்தான்; உலகத்திலேயே இந்தியாவிலே, குறிப்பாகத் தென்னகத்திலே, தமிழ்நாட்டிலே கணினி வல்லுநர்கள் திறமை மிக்கவர்களாக இருக்கிறார்கள் என்பதை உலகம் புரிந்துகொள்ளக்கூடிய வாய்ப்பை உருவாக்கியவர்கள் வெளிநாட்டிலே சென்று பணியாற்றுபவர்களும், கணினித் தொடர்பான உற்பத்தியிலே ஈடுபடுபவர்களும்தான். ஆகவே, தற்போது `Brain Drain' என்று சொல்லப்படுகிற முறையில் கருதுவோமேயானால், நம்முடைய வளர்ச்சியேகூடத் தடைபடக்கூடிய ஒரு நிலை ஏற்படும். முடத் தென்னையாக இருந்தாலும் அது எங்கேயாவது இளநீர் கொடுத்தாலே போதும்; இளநீர் கொடுக்கிற வளர்ச்சியைத் தடுத்துவிடக் கூடாது.



**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் வெளிநாட்டிற்கு யாரையும் அனுப்ப வேண்டாம் என்று சொல்லவில்லை. அவர்களுடைய அறிவாற்றலை நம்முடைய நாட்டிற்கு முதலிலே பயன்படுத்திக்கொண்டு, மூன்று ஆண்டுக் காலத்திற்காவது குறைந்தது அவர்கள் இங்கே ஏதாவது தொண்டு செய்தால்தான், ஏதாவது பணி செய்தால்தான், அவர்களை மேலைநாடுகளுக்கு அனுப்ப முடியும் என்று சொன்னால் நலமாக இருக்கும் என்பதற்காக இதை நான் குறிப்பிட்டுச் சொன்னேன்.

ஆசிரியர் எண்ணிக்கை விகிதத்தைப் பற்றி மாண்புமிகு கல்வி அமைச்சர் ஏற்கெனவே பதில் சொல்லி இருக்கிறார். இருந்தாலும் ஆசிரியர்கள் மத்தியிலே ஓர் அச்ச உணர்ச்சி இருக்கிறது. 40 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்பதற்குப் பதிலாக, 20 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்று வைத்தால்தான் அவர்களுடைய பணியிடங்கள் சில பாதிக்கப்படாமல் இருக்கும். எனவே அதற்காகவாவது மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் ஆசிரியர்கள் சங்கப் பிரதிநிதிகளை அழைத்துப் பேசி இதற்கு ஒரு சுமுகமான தீர்வு கண்டாக வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற நோக்கத்தில் எந்த மாறுபாடும் இல்லை. இருக்கிற இடங்கள் எதுவும் பாதிக்கப்படாது. இடமாற்றங்கள் ஏற்படும். ஏனென்றால், எனக்குத் தெரிந்தவரையில், 12 மாணவர்கள் இருக்கிற ஆரம்பப் பள்ளிக்கூடத்திலே 2 ஆசிரியர்கள் இருக்கிறார்கள். ஓர் உருதுப் பள்ளிக்கூடம்; அதை நான் குறையாகச் சொல்லவில்லை; 25 மாணவர்களுக்கு 10 ஆசிரியர்கள்; ஒரு நகராட்சி மன்றத் தொடக்கப் பள்ளிக்கூடம், அங்கு 17 மாணவர்களுக்கு 3 ஆசிரியர்கள்; அதேநேரத்தில்—திரு. நாசர் என்று கருதுகிறேன்; அவர் பேசுகிறபோது சொன்னதைப்போல—80 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் இருக்கிற நிலைமையில் சில நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. ஆகவே, இடமாற்றங்கள் மூலமாக, இருக்கிற ஆசிரியர்களை முழு அளவுக்குப் பயன்படுத்திக்கொண்டு, வளர்ச்சிக்காக அரசாங்கம் ஒதுக்கக்கூடிய ஆசிரியர்களையும் புதிதாக நியமிப்பதற்கும் தொடர்ந்து முயற்சிக்கிறோம். எந்த ஆசிரியருக்கும் பணி இழப்பு என்ற நிலை ஏற்படுவதை அரசாங்கம் அனுமதிக்காது. ஆனால் பணிகளை அதிகப்படுத்துகிறபோது, எந்த இடத்தில் அவர்களைப் பயன்படுத்துவது என்பதற்கு rationalisation முறையில் செயற்படுகிறோமே தவிர குறைப்பதல்ல; ஆசிரியர்களின் மொத்த எண்ணிக்கை வளரும்; குறையாது.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்குக்கூட செய்தித்தாள்களிலே செய்திகள் வந்து இருக்கின்றன. 22 ஆண்டு காலமாக மேல்நிலைப் பள்ளிகளினுடைய தொழிற் படிப்புகளிலே பாடத் திட்ட வரையறைகள் மாற்றப்படாமல் இருக்கின்ற காரணத்தினாலே, அவை நடைமுறையிலே ஒத்துவராத பாடத் திட்டங்களைப் பெற்று இருக்கிற காரணத்தினாலே, அவை உடனடியாக மாற்றப்பட வேண்டுமென்று சொல்லப்படுகிறது. அதுமட்டுமல்ல, கணினி முறையிலே, தகவல் தொழில்நுட்ப முறையிலே, ஆண்டுக்கு ஒரு முறை மாற்றங்கள் வந்துகொண்டிருக்கின்றன. அண்மையிலே ஒரு பல்கலைக்கழகத்தினுடைய ஆய்வுக்கு சென்றிருந்த நேரத்திலே சொல்லப்பட்ட கருத்து; மாணவர்களிடமிருந்து வந்த கருத்து; இன்றைய சூழ்நிலைக்கு ஏற்ப, இன்றைய நடைமுறைகளுக்கு ஏற்ப பாடத் திட்ட முறைகள் 2 ஆண்டுகளுக்கு ஒரு முறையாவது மாற்றி அமைக்கப்படுவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும் என்றெல்லாம் அவர்கள் கேட்டு இருந்தார்கள். கல்லூரிப் பாட முறையிலேகூட 7, 8 ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் பாடத் திட்டங்களிலே மாற்றங்கள் கொண்டு வரப்படுகின்றன. எனவே இதையெல்லாம் அரசு கவனத்திலே கொண்டு மாணவர்களுக்குப் பயன்படுகின்ற வகையிலே பாடத் திட்ட முறைகளை மாற்றி அமைக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, அண்மையிலே போலி ஆசிரியர்களைப் பற்றிச் செய்திகள் வந்த வண்ணம் உள்ளன. இதுவரையிலே தமிழகத்திலே 50-க்கு மேற்பட்ட போலி ஆசிரியர்கள் கைது செய்யப்பட்டு இருப்பதாகச் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. போலி நாணயம், போலிச் சாமியார்கள் என்றுதான் கேள்விப்பட்டு இருக்கிறோம். ஆனால் இன்றைக்கு புனிதமான ஆசிரியர் தொழிலிலேயும் போலிகள் நிரம்ப வந்துவிட்ட ஒரு சூழ்நிலை கல்வித் துறையிலே, தொடக்கக் கல்வி இயக்குநரகம் 1995 ஆம் ஆண்டிலே இருந்து ஆசிரியர் பணி நியமன இடங்களிலே அந்தச் சான்றிதழ்களை ஆய்வு செய்தபோது, இந்தப் போலி ஆசிரியர்கள் கண்டு பிடிக்கப்பட்டு இருக்கிறார்கள். (மணியடிக்கப்பெற்றது).

நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புவதெல்லாம், கல்வித் துறையிலே சில கறுப்பாடுகள் இருக்கிற காரணத்தினாலே, இதையெல்லாம் உடனடியாகக் கண்காணித்து அந்தப் போலி ஆசிரியர்களைக் கண்டுபிடிக்க வேண்டும். 1985 ஆம் ஆண்டு முதல் நியமனம் செய்யப்பெற்ற அந்த ஆசிரியர்களுடைய சான்றிதழ்கள் கூட சரிபார்க்கப்படுமேயானால், இன்னும் பல போலி ஆசிரியர்கள் கண்டுபிடிக்கப்படுவார்கள். இதுகுறித்து

223302



C.B.; C.I.D. விசாரணையோ அல்லது C.B.I. விசாரணையோ வைத்து, அரசு ஆவன செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன், அதேபோல...

*பிற்பகல் 12-30*

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசாங்க சான்றிதழ்களைப் போலவே போலியாகச் சான்றிதழ்களைத் தயாரித்துக் கொடுப்பதற்கு Agent-ஆக யாரோ 3, 4 பேர் கூட்டாக இருந்து, அச்சடித்து, தயாரித்து, ரூபாய் நோட்டுகளை அச்சடிப்பதைப்போல இதை அச்சடித்து, 20,000, 30,000 ரூபாய் வாங்கிக் கொண்டு, யாரோ சில பேர்களுக்குக் கொடுத்து, அவர்கள் அந்தப் போலிச் சான்றிதழைக்கொண்டு தாங்கள் படித்ததாக வேலைவாய்ப்பு அலுவலகத்திலே பதிவு செய்து, இடம் பெற்றுவிட்டார்கள். அப்படி 50 பேரோ, 40 பேரோ, யாராக இருந்தாலும், இந்தத் துறைதான் அதைக் கண்டுபிடித்து, நடவடிக்கை எடுத்து, காவல் துறைக்குத் தெரிவித்து போலிச் சான்றிதழ் தயாரித்தவர்களைக் கைது செய்து Criminal வழக்குத் தொடர்வதற்கும் காவல் துறைக்கும் தெரிவித்திருக்கிறது. எந்தச் சான்றிதழ் பற்றிச் சந்தேகம் வந்தாலும் உடனே அந்தச் சான்றிதழ்கள் முழு அளவிற்கு ஆய்வு செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இருக்கிற நேரத்திலே நான் சிலவற்றை வேகமாகச் சொல்லிவிட விரும்புகிறேன். சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே கடந்த 16 ஆண்டுகாலமாக, ஆசிரியர் மற்றும் அலுவலர் நியமனம், மாணவர் சேர்க்கை போன்றவற்றிலே பல்கலைக் கழக விதிமுறைகளுக்கு மாறாக ஏறத்தாழ 400 கோடி ரூபாய்க்கு மேலே நிதி திரட்டப்பட்டதாகவும், அது அந்தப் பல்கலைக்கழகத்தினுடைய வரவுக் கணக்கிலே வைக்கப்படவில்லையென்றும் புகார்கள் வந்தவண்ணம் உள்ளன. உதாரணத்திற்காக, 1997 ஆம் ஆண்டு Audit Report-லேயே மருத்துவக் கல்லூரிக்கு வாங்கிய பணம் வரவு வைக்கப்படவில்லை என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. எனவே அரசு இதிலேயும் கொஞ்சம் கவனம் செலுத்தி, அந்த நிதி, பல்கலைக்கழகத்தினுடைய கணக்கிலே...

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எந்தப் பல்கலைக்கழகமாக இருந்தாலும், கணக்குகளைத்தான் அரசு ஒருவேளை Audit செய்ய முடியும்; கணக்கு வழக்குகள் அரசாங்கத்திற்கு அனுப்பப்படுகிறபோது குறையிருந்தால்,

நடவடிக்கை எடுக்கலாம். கணக்கிலே வராததற்கு அரசாங்கத்தினுடைய பார்வை நேரடியாக அதன் மீது செல்ல முடியாது. அப்படிக் கண்காணிக்க வேண்டுமானால், மொத்தமாக மத்திய அரசு சார்பாக எங்கெங்கே கறுப்புப் பணம் இருக்கிறதோ, அந்தக் கறுப்புப் பணத்தையெல்லாம் அவர்கள் ஆய்வு செய்கிறபோது எடுப்பார்களேயானால், அதன் மூலமாக அந்த நிதி வேண்டுமானால், அரசாங்கத்திற்குக் கிடைக்கலாமே தவிர, அரசாங்கம், தரப்படுகிற வரவு செலவை ஆட்சிக் குழு, Syndicate மூலமாகத் தரப்படுகிற கணக்குகளைத்தான் செயலாளர் மூலமாக, நிருவகிக்க முடியுமே தவிர, பல்கலைக்கழக நிருவாகத்தில் தலையிட இயலாது; சில அரசியல் கட்சித் தலைவர்களைப் பற்றிக்கூட, அவர்கள் எவ்வளவோ ஊழல் செய்தாலும் கூட, சொத்துக் கணக்கு மூலமாகத்தான் நீதிமன்றத்திற்குச் செல்லமுடிகிறதே தவிர, வேறு வழியிலே செல்ல முடியவில்லை என்பதை தீரன் அவர்கள் மிக நன்றாக அறிவார்கள்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை என்ற ஒரு புதிய துறை தொடங்கப்பட்டிருப்பதை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். கிராமப்புறங்களிலே மாணவர்கள் அல்லாத இளைஞர்களுடைய ஆற்றல்கள் இப்போது பல்வேறு வழிகளிலே வீணடிக்கப்படுகின்றன. அதனை நெறிமுறைப் படுத்துவதற்காக இத்தகைய திட்டம் பயன்பட வேண்டும். அப்படிப்பட்ட, உடற்பயிற்சிக்குத் தேவையான, அந்த இடங்களுக்குத் தேவையான கருவிகளை அரசு வழங்கி, ஊக்கப்படுத்த வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

நேரு யுவ கேந்திரா போன்ற இளைஞர் அமைப்புகள் கிராமப்புறங்களிலே மிகமிகக் குறைவாகத்தான் இருக்கின்றன. எனவே, ஒவ்வொரு கிராமந்தோறும் இளைஞர் மன்றங்களைத் தொடங்குவதற்கு, அரசு ஆவன செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். அத்தகைய இளைஞர் மன்றங்கள் மூலமாக அரசினுடைய நலத் திட்டங்களை நாம் மக்களிடையே பரப்புவதற்குப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

10, 11 மாவட்டங்களிலே, மாவட்ட அளவிலே வெளி விளையாட்டு அரங்கங்கள் இல்லாமல் இருந்து கொண்டிருக்கின்றன. இதற்காக மைய அரசு மானியம் தருகின்ற காரணத்தினாலே, எல்லா மாவட்டத் தலைநகரங்களிலேயும் வெளி விளையாட்டு அரங்கத்தை அமைத்துத் தர



அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது, கிராமப்புறங்களிலே உள்ள மாணவர்கள் மேற்படிப்பு படிக்க சரியான வழிகாட்டு நெறிமுறைகள் இல்லாமல் தவியாய்த் தவித்துக்கொண்டு இருக்கிறார்கள். சரியான வேலைவாய்ப்பு வழிகாட்டு நெறிமுறைகள்கூட அவர்களுக்குத் தெரிவதில்லை. எனவே, கிராமப்புறத்திலே உள்ள பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் பயன்பெறுகிற வகையிலே, அவர்களுடைய படிப்பு தொடர்பாக, வாழ்க்கைக் கல்வி பயனுள்ள வகையில் இருக்கிற மாதிரி ஒரு சிறப்புத் திட்டத்தினைத் தீட்டி, அவர்களுக்கு வழிகாட்டுகின்ற நெறிமுறைகளை அரசு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-35

அடுத்தது, உடற்கல்வி ஆசிரியர்கள். தமிழ்நாட்டிலே 250 மாணவர்களுக்கு ஒரு உடற்கல்வி ஆசிரியர் என்று இருந்த நிலைமை மாற்றப்பட்டது. எனவே, 200 மாணவர்களுக்கு ஒரு உடற்கல்வி ஆசிரியர் என்ற வீதத்தில்—ஏனென்றால் உடற்பயிற்சிக்கு முக்கியத்துவம் கொடுக்கின்ற அரசாக இருக்கின்ற காரணத்தால் அந்த முறையைக் கையாள வேண்டுமென்றும், அதுபோல முழுக் கல்வித் தகுதி படைத்த உடற்கல்வி மற்றும் உடற்பயிற்சி இயக்குநர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்படவேண்டுமென்றும், உடற்கல்வி ஆசிரியர்கள், உடற்கல்வி இயக்குநர்களுக்கு, பிற பாட ஆசிரியர்களுக்கு வழங்குவதுபோல உயர் கல்விக்கு ஊக்க ஊதியம் வழங்கப்பட வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகத்திலே அனைத்துப் பல்கலைக்கழகங்களில் பணிபுரியும் ஆசிரியர்கள் அல்லாத பணியாளர்கள் 20,000-க்கு மேல் இருக்கிறார்கள். அவர்களுக்கு ஒரே பதவிக்கு, ஒரேவிதமான ஊதியம் வழங்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. மா. இராமச்சந்திரன். (குறுக்கீடு)

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** பேசி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 16 நிமிடங்களாகப் பேசிக்கொண்டிருக்கிறீர்கள்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** அரை நிமிடத்தில் பேசி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் உரையை நிறைவு செய்யுங்கள்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா காலத்திலிருந்து தொடங்கப்பட்ட மருத்துவ உதவித் திட்டத்தின்கீழ், 30 ஆண்டுகாலமாக தற்காலிகப் பணியாளர்களாகப் பணிபுரியும் 28 ஊழியர்களை நிரந்தரப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியான ஆண்டிமடத்திலே, செந்துறையிலே உள்ள பெண்கள் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகவும், குறிச்சிகளம் உயர்நிலைப் பள்ளியை இந்த ஆண்டு மேல்நிலைப் பள்ளியாகவும் தரம் உயர்த்தித்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். செந்துறையில் பெண்களுக்கான I.T.I. தொடங்கப்பட வேண்டுமென்றும் கேட்டு, நன்றி கூறி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. மா. இராமச்சந்திரன்.

**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் தெள்ளிய நீரோடையாக, திறந்த புத்தகமாக விளங்கிக் கொண்டிருக்கிற கல்வி இலாகாவின்மீது பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்த உங்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய முதல்வர் அவர்கள் நான்காவது முறையாக இந்த நாட்டிலே பொறுப்பேற்ற பின்னால் அளிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையின்மீது எனக்கு முன்னால் பேசுகிறபோது,

நாடொறும் நாடி முறைசெய்யா மன்னவன்

நாடொறும் நாடு கெடும்.

என்ற குறட்பாவை திரு. ஞானசேகரன் அவர்கள் மேற்கோள் காட்டிச் சொன்னார்கள். ஒவ்வொரு நாளும் அல்ல; ஒவ்வொரு நொடியும் இந்த நாடு முன்னேற வேண்டும், இந்த நாடு எப்படி இருக்கிறது என்பதைப் பார்த்து ஆட்சி செலுத்துகிற மன்னவன்தான் நம்முடைய முதல்வர் அவர்கள் என்பதை இந்த நாடு அறியும். (மேசையைத் தட்டும் ஒலி). இந்தக் குறட்பாவே எதற்காக வந்தது என்று சொன்னால் "ஆசிரியர் பயிற்சிக்கல்லூரிகளில் முறைகேடுகள் நடைபெற்று இருக்கின்றன; இதற்கு



முன்னாலே இருந்த ஆட்சிக் காலத்திலே, ஆட்சி செய்தவர்கள் நாளை—தினம் தினம்—இந்த நாடு எப்படி இருக்கவேண்டுமென்பதைப் பார்க்காதவர்கள்'' என்று சொல்வதற்கு நீதியரசர் சீனிவாசன் முதன்முதலாக உச்ச நீதிமன்றத்திலே தீர்ப்பு எழுதுகிறபோது இந்தக் குறளைச் சொல்லி இப்படிப்பட்ட மன்னவன் ஆள வேண்டும், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி முறையாகச் செயல்படவில்லை என்பதைச் சொல்லித்தான் இந்தக் குறளை எழுதி, ஒரு தீர்ப்பை எழுதினார்கள். இன்றைக்கு நம்முடைய முதல்வர் அவர்கள் நாடொறும் நாடி அல்ல

**திரு. சி. ஞானசேகரன்:** Sir, a point of order.

**திரு. மா. இராமச்சந்திரன்;** இதில் Point of order ஒன்றும் இல்லை. I am not yielding. நீதிபதி சீனிவாசன் எழுதியதைத்தானே சொன்னேன். இதிலே வேறு என்ன இருக்கிறது? இதிலே ஒன்றும் இல்லையே....

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருவோணம் இராமச்சந்திரன் அவர்கள் பேசுகிறபோது, நீதியரசர் சீனிவாசன் அவர்கள் உச்சநீதிமன்றத்திலே திருக்குறளைச் சொல்லி தீர்ப்பு எழுதியதாகச் சொன்னார்கள். அவர் "நாடொறும் நாடி" என்கின்ற திருக்குறளைச் சொல்லி தீர்ப்பு எழுதியதே, சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதியரசராக இருந்தபோதுதான் என்பதை அவருடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

**திரு. மா. இராமச்சந்திரன்:** அது உயர்நீதிமன்றத்தில் நீதிபதியாக சீனிவாசன் இருக்கிறபோதுதான்; உச்ச நீதிமன்றத்திலே இதே தீர்ப்பை இதே குறளைச் சொல்லித்தான் மறுபடியும் தீர்ப்பு சொன்னார்கள். ஆகையினால் இதற்கு முன்னாலே இருந்த ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி எப்படி நடந்தது என்பதை நீதிபதி சீனிவாசன் சொன்ன இந்தத் தீர்ப்பை அப்படியே சொன்னார்கள். இதிலே என்ன இருக்கிறது?

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு நீதிபதி, உயர்நீதிமன்றத்தின் நீதிபதியாக இருந்துவிட்டு உச்ச நீதிமன்றத்திற்கு நீதிபதியாகச் சென்றிருந்தால், அவர் அளித்த தீர்ப்பில் வந்த வழக்கை அவரே நிச்சயமாக விசாரித்து தீர்ப்பைச் சொல்ல முடியாது என்பது, நிச்சயமாக அவருக்கும் தெரியும். ஏனோ மாற்றிக் கூறுகிறார். அந்த நீதியரசர் அங்கே அதைக் கூறவில்லை.

[2000 ஏப்ரல் 10

**திரு. மா. இராமச்சந்திரன்:** நீதியரசர் சீனிவாசன் அதைச் சொல்லவில்லை. ஆனால் அங்கிருக்கிற உச்ச நீதிமன்ற நீதிபதி இந்தத் தீர்ப்பைச் சொல்லுகிறபோது, உயர்நீதிமன்றத்திலே நீதிபதி சீனிவாசன் அளித்த தீர்ப்பை உச்சநீதிமன்றத்திலே மேற்கோள் காட்டி அதைச் சொன்னார். அதைத்தான் நான் சொல்கிறேன். அது நீதிமன்றத்தின் தீர்ப்பிலே இருக்கிறது.

*நாடொறும் நாடி முறைசெய்யா மன்னவன்*
*நாடொறும் நாடு கெடும்.*

என்று சொன்னார்கள். ஆனால் இப்போது தினம் தினம், நாளுக்கு நாள் அல்ல; அன்றைக்கு இருந்த காலத்திலே திருக்குறளில் வள்ளுவர் எழுதினார்; ஆனால் இப்போது தினம் தினம் அல்ல; ஒவ்வொரு நொடியும் இந்த நாடு எப்படி இருக்கிறது என்பதைப் பார்த்துக் கொண்டிருக்கிற முதலமைச்சரை நாம் பெற்று இருக்கிறோம் என்பதைத்தான் இங்கே சொன்னேனே தவிர வேறல்ல. அந்தக் காலத்திலே கல்வியைப் பற்றிச் சொல்கிறபோது,

*உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றுங் கற்றார்*
*கடையரே கல்லா தவர்.*

என்று சொன்னார்கள். படித்தவர் முன்னிலையிலே எப்படியாவது கல்வியைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காகவேண்டி, எப்படித் தாழ்ந்து, பணிந்து அதைக் கற்றுக்கொள்ளும் சூழ்நிலை இருந்ததோ, அது போய், இப்போது, நீங்கள் வாருங்கள்; இந்தப் பள்ளியிலே சேருங்கள் என்று சொல்லி, ஒவ்வொரு மாணவனாகத் தேடிப் பிடித்து, 27,000 மாணவர்களை இந்த நாட்டிலே கொண்டுவந்து, மறுபடியும் கல்வி கற்கும் சூழ்நிலையை உருவாக்கியது இந்தத் தொடக்கக் கல்வித் திட்டம்.

பிற்பகல் 12-40

அதுமட்டுமல்ல; இன்றைக்கு இருக்கிற முதலமைச்சர் அவர்கள், தினம் தினம் இந்தக் கல்வியையும், இந்த இலாகாவையும் பற்றி நம்முடைய கல்வி அமைச்சரோடு சேர்ந்து, சிந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். மழலைக் கல்வித் திட்டத்திலே எப்படித் தவறுகள் வந்துவிட்டன என்பதை, இதற்கு முன்னால் இருந்தவர்கள் எல்லாம் பேசினார்கள். இதற்கு முன்னாலே இருந்த ஆட்சிக் காலத்திலே எப்படி நடைபெற்றன என்பதையெல்லாம் சொன்னார்கள். இப்போது 1-வது முதல் 5-வது வகுப்பு வரை மழலைக்



2000 ஏப்ரல் 10] [திரு. மா. இராமச்சந்திரன்]

கல்வி, தமிழிலே இருக்க வேண்டும். தமிழ்தான் தாய்மொழியாக இருக்க வேண்டும் என்பதிலே, அக்கறையாக இருந்துகொண்டு, 1-வது முதல் 5-வது வகுப்பு வரையிலே தமிழ்மொழி இருக்க வேண்டும், தாய்மொழி இருக்க வேண்டும். ஒரு குழந்தை பிறந்தவுடன், தன்னுடைய தாயினுடைய பாலை எப்படிச் சுவைக்கிறதோ, அதைப்போல் ஒருவன் தமிழைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்பதை மனதிலே இருத்தி, அதை அமல்படுத்த முற்பட்டிருக்கிறார்கள். இப்படி 1-வது முதல் 5-வது வரை கொண்டு வந்திருப்பதைப் பார்த்து, நம்முடைய முதலமைச்சர் அவர்களையும், கல்வி அமைச்சர் அவர்களையும் இந்த நாடே பாராட்டுகிறது. ஆனால், பல்வேறு காரணங்களுக்காக, சிலர் நீதிமன்றங்களுக்குப் போயிருக்கிறார்கள். ஆனால், நீதிமன்றங்களில் இருந்து தீர்ப்பு இன்னும் வர இருக்கிறது. உயர்நீதிமன்றத்திலே இருக்கிற தீர்ப்பு விரைவிலே நமக்காக, இந்த ஆட்சிக்காக, இந்த நாட்டுக்காக வரப்போகிறது என்பதை உங்கள் முன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுபோல கல்விக்காக வேண்டி ஆண்டாண்டுதோறும் 500 கோடி ரூபாயை அதிகமாக ஒதுக்கித் தருகிறார். கல்வி என்பது கல்வி மானியத்திலே மட்டும் அல்ல; விவசாயத்துறையிலேயும் இருக்கிறது; ஆதிதிராவிட நலத் துறையிலேயும் இருக்கிறது; அதேபோல மருத்துவத் துறையிலேயும் இருக்கிறது; பிற்படுத்தப்பட்ட துறையிலே சமூக கல்வியிலேயும் இருக்கிறது; கால்நடைத் துறையிலேயும் இருக்கிறது. இப்படி ஒவ்வொரு இலாகாவிலும் கல்வி இலாகா இருந்துகொண்டு இருக்கிறது. அவற்றையெல்லாம் சேர்த்தால் மிக அதிகமான தொகையை ஒதுக்குகிற ஒரு மாநிலம் இந்தியாவில் தமிழகமாகத்தான் இருக்கமுடியும் என்று நான் சொல்லவேண்டி இருக்கிறது.

இப்போது 4,649 கோடி ரூபாயை 17-ஆவது மானியத்திலே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஒதுக்கி இருக்கின்றார்கள். மொத்தமாகச் சேர்க்கிறபோது 4,949 கோடி ரூபாயைக் கல்வி மானியத்திலே ஒதுக்கி கல்வித் துறை மிகச் சிறப்பாகப் பணியாற்றுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஒரு வருடத்திற்கு 48,000 பேர் கணினி பயின்றவர்கள் தமிழகத்திலே வேலைவாய்ப்பைப் பெறுகிறார்கள். அந்த அளவிற்கு கணினியை இந்த நாட்டிலே, இந்தியாவிலே, முதன் முதலாகக் கொண்டு வந்த அமைச்சு எது என்று சொன்னால் நம்முடைய தமிழகத்தினுடைய அமைச்சரவையாகத்தான் இருக்க முடியும்; இந்தத் தமிழ்நாடாகத்தான் இருக்க முடியும். காரணம், கணினியிலே பயின்றவர்கள்தான் இப்போது

வெளிநாடுகளிலே பயிற்சி பெறமுடியும்; வேலைவாய்ப்பைப் பெற முடியும். தமிழகத்தில் மட்டும் அல்ல; இந்தியாவிலேயே, உலகத்திலேயே தமிழன்தான் மிகச் சிறந்த முறையில் Computer-ஐ இயக்குகிறவன் என்கிற பெயரைப் பெற்றிருக்கிறான், உலகத்திலேயே இலண்டனாக இருந்தாலும், அமெரிக்காவாக இருந்தாலும், சிங்கப்பூராக இருந்தாலும், எந்த நாடாக இருந்தாலும் இப்போது தமிழன்தான் மிகத் திறமையாகக் கணினியை இயக்கக் கூடிய திறமையும், வன்மையும் பெற்றவன் என்கிற பெயரையும் பெற்றிருக்கிறான். கணினியை எந்தெந்த மாநிலத்தவரோ இயக்குகிறார்கள் என்று சொல்லலாம். ஆனால் அவர்கள் இயக்குகிற விதங்கள் வேறு; பெரிய அலுவலகங்களிடமோ அல்லது பெரிய Industry-யிடமோ அதைக் கொடுத்துவிட்டு contract basis-லே அதை இயக்கிக் கொண்டிருக்கிறார்கள் அதையெல்லாம் இங்கே காரணம் காட்டுவார்கள். ஆந்திராவிலே சொல்கிறார்கள்; கர்நாடகத்திலே சொல்கிறார்கள் என்று சொல்வார்கள். ஆந்திராவிலே காட்டுகிற கணினி மையம் என்பது வேறு. ஆனால் தமிழகத்திலே இருக்கிற, நம்முடைய பள்ளிகளிலே இப்போது கணினியை அமைத்துக் கொடுத்து இருக்கிறார்கள் என்று சொன்னால், அந்தக் கணினி பயின்றவர்களில் ஓர் ஆண்டுக்கு 48,000 மாணவர்கள் வேலைவாய்ப்புப் பெறுகிற ஒரு வாய்ப்பை இந்த அரசாங்கமும் ஏற்படுத்தித் தந்திருக்கின்றது என்பதை நாமெல்லாம் பாராட்டாமல் இருக்க முடியாது. அதுமட்டும் அல்ல. ஒவ்வொரு பள்ளியிலும் இப்போது கணினி மையம் அமைத்திருக்கிறார்கள். நாங்கள் எல்லாம் கூட ஒவ்வொரு இடமாகச் சென்று மையம் இயங்குகிற விதத்தைப் பார்த்தோம்.

*(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. சி.டி. தண்டபாணி தலைமை)*

அதிலேகூட மிகச் சிறப்பாக இயங்க வேண்டுமென்றால் அரசாங்கமே அந்தக் கணினியை ஏற்படுத்தக்கூடாது. அதை மற்றவர்களுக்கு contract ஆகக் கொடுத்து, கணினியில் முறை மாறுகிறபோது அந்த மாற்றத்தை அவர்களே ஏற்படுத்திக் கொள்ளலாம். அதை அரசாங்கம் ஏற்படுத்திக்கொண்டால் அந்த நடைமுறையை மாற்றுவது சிரமம் என்கிற காரணத்தினாலே, முதல்வர் அவர்கள் அந்தக் கணினி முறையை மற்றவர்களுடைய ஒப்பந்தத்தின் பேரிலே இயக்கிக் கொண்டிருக்கிறார்கள். இந்த மாதிரி திட்டங்கள் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு நொடியும், ஒவ்வொரு காரியம் செய்கிறபோதும் சிந்தித்துச் செயல்படுகிற முதலமைச்சரை நாம் பெற்றிருக்கிறோம். *(மணியடிக்கப்பெற்றது)* நேரம் மிகவும் குறைவாக ஆகியிருக்கிறது. இன்னும் ஒன்றுமே சொல்லவில்லையே.



அதுமட்டுமல்ல, இப்போது ஒவ்வொரு பெரிய மனிதருக்கும் இருக்கின்ற பெரிய வருத்தம், இளைஞர்களை எல்லாம் நல்ல முறையிலே செயல்படுத்த வேண்டும், கல்வி கற்ற பின்னால், பட்டதாரிகளாக இருக்கின்றவர்கள், படித்த இளைஞர்கள் நல் வழியில் வாழ வேண்டும் என்பதே. நன்னடை நல்கல் வேந்தர்க்குக் கடனே என்று சொல்லி, நம்முடைய முதல்வர் அவர்கள் நிதிநிலை அறிக்கையிலேயே அதைக் கொண்டுவந்தார்கள். இளைஞர்கள் எல்லாம் பாழ்பட்டுப் போய்விடுகிறார்கள் என்பதை உணர்ந்த இந்த நாட்டினுடைய தந்தை தாயாக விளங்கக்கூடிய நம்முடைய முதல்வர் அவர்கள் இளைஞர்கள் கெடக்கூடாது என்பதற்காகவேண்டியே இளைஞர் மேம்பாட்டுத் திட்டம் என்று சொல்லி, அதிலே செயலாளராக அசோக் வர்தன் ஷெட்டி அவர்களை நியமித்து, அதற்கான திட்டங்களைத் தயார் செய்து, அந்த இளைஞர்கள் பாழ்படக்கூடாது என்பதற்காக அந்த இலாகாவை ஏற்படுத்தி சிறப்பாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால், அதைப் பாராட்டாமல் இருக்க முடியாது. இன்றைக்கு ஒவ்வொருவரும் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

*பிற்பகல் 12-45*

கிராமத்து மக்களுக்காக 15 சதவீத இடத்தை ஒதுக்கியிருக்கிறார்கள். கிராமத்துப் பள்ளிகளில் படிக்கின்ற மாணவர்களுக்கு 15 சதவீதத்தை ஒதுக்கி இருக்கிறார்கள் என்பதை யாரும் உணராமல் இல்லை. காரணம், பட்டணத்திலே இருப்பவர்கள் அந்த ஒதுக்கீடுகளைப் பெற்றுக்கொள்கிறார்கள். இப்போது ஒவ்வொரு ஜாதியைச் சேர்ந்தவர்களும் பட்டணத்திலே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். படித்தவர்களும், வேலை வாய்ப்பைப் பெற்றவர்களும்தான் அந்த ஒதுக்கீடுகளைப் பெற முடிகிறது. ஆனால் கிராமங்களில் இருப்பவர்கள்...

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** நேரம் ஆகிவிட்டது, உரையை முடித்துக் கொள்ளுங்கள். (குறுக்கீடு) 11 நிமிடங்கள் ஆகிவிட்டன, உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. மா. இராமச்சந்திரன்:** உரையை முடித்துவிடுகிறேன். கிராமத்து மக்களுக்கு, கிராமங்களிலே அலைந்து திரிகின்ற படித்த இளைஞர்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டுமென்று நம்முடைய முதல்வர் அவர்கள் 15% ஒதுக்கீட்டை உருவாக்கித் தந்து, Professional கல்லூரிகளிலே, Engineering கல்லூரிகளிலே, மருத்துவக் கல்லூரிகளிலே, வேலை வாய்ப்பைப் பெறுகிற ஒரு சூழ்நிலையை உருவாக்கித் தந்திருக்கிறார்கள். இந்தக் கல்வி மானியத்திலே

யாரும் குறை சொல்வதற்கு எந்தக் காரணமும் கிடையாது. காரணம், தெள்ளிய நீரோடையாக, முதன் முதலாக இந்த இலாகா எப்படிப் பணியாற்ற வேண்டும், பணியாளர்கள் எப்படி வேலை செய்ய வேண்டும் என்பதற்காக முதல்வர் அவர்கள் ஒரு அரசாணையை வெளியிட்டிருக்கிறார்கள் யாராக இருந்தாலும் Seniority அடிப்படையில் கிடைக்க வேண்டுமென்று சொல்லி......

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** திரு. தி.ப. ஆறுமுகம்.

**திரு. தி.ப. ஆறுமுகம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த நிதியாண்டில் கல்வி மானியக் கோரிக்கையிலே பேச வாய்ப்பளித்த தங்களுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், கல்வி அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2000-2001 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள 21,564.87 கோடி ரூபாய் செலவில் 21.56 விழுக்காடு கல்விக்காக ஒதுக்கி பெரும்பாலானவர்கள் கல்வி அறிவு பெறுவதன்மூலம் தமிழக மக்கள் நல்ல தெளிவும், விழிப்புணர்வும் பெற வழி வகுத்துள்ள நமது அரசை அனைவரும் பாராட்டக் கடமைப்பட்டவர்கள்.

பள்ளிக் கல்விக்காக 4,074.56 கோடி ரூபாயை ஒதுக்கி 1 முதல் 12ஆம் வகுப்பு வரை இலவசக் கல்வி அளிக்க வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. இது சென்ற ஆண்டைவிட ரூ. 504.94 கோடி அதிக செலவு என்பது குறிப்பிடத்தககது. ஒரு நாட்டின் வளர்ச்சியும், அந்த நாட்டின் மக்கள் வாழ்க்கைத் தர வளர்ச்சியும், அந்த நாட்டு அடிப்படைக் கல்வியைச் சார்ந்து இருக்கிறது என்ற அடிப்படையில் மாணவ, மாணவியர் நமது மாநிலத்தில் கல்வி அறிவு பெறுவதற்கு உகந்த வகையில் அனைத்து வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுப்பதுடன் தமிழகத்தில் ஒரு கிலோ மீட்டர் தொலைவிற்குள் மாணவ, மாணவியர் சென்றடையும் வகையில் கடந்த இரண்டு ஆண்டுகளில் 712 புதிய தொடக்கப் பள்ளிகள் தொடங்கப்பட்டு, செயல்பட்டு வருவது மிகவும் பாராட்டுக்குரியது.

6 வயது முதல் 14 வயதுடைய குழந்தைகள் அனைவரும் கட்டாயமாகக் கல்வி பயில வேண்டுமென்ற நல்ல முயற்சியில் நமது அரசு செயல்பட்டு வருவதால் சிறுவர், சிறுமியர்களைப் பள்ளியில் சேர்க்கும் விகிதம் முறையே 98:50, 94:43 எனவும் கண்டறியப்பட்டு அவர்கள் கல்வி கற்பது இடையில் நின்றுவிடாமல் தொடர்ந்து படிக்க பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பது மிகவும் மகிழ்ச்சியளிக்கிறது.



இடைநிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிக் கல்வியில் 14 முதல் 18 வயது பிரிவினரின் நுண்ணறிவுத் திறன், கல்வி ஆர்வம் ஆகியவற்றை வளர்த்து ஒளிவிடச் செய்வதால் சுய தொழில் ஈடுபாட்டிற்கும், உயர் கல்வி நாட்டத்திற்கும் அவர்களைத் தகுதியுடையவர்களாக உருவாக்க எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் நல்ல பலன்களைக் கொடுத்து வருகின்றன. அதற்குத் தேவைப்படுகின்ற அறிவியலறிவு பெற்றிட உரிய பருவம் இடைநிலைக் கல்விப் பருவமாகும்.

வளர்ந்து வருகின்ற நாடுகளில் இன்று அனைத்துத் துறைகளிலும் கணிப்பொறி முறையால் மனித வளத் தட்டுப்பாடின்றி திட்டமிடுதலும் செயலாக்குதலும் நடைமுறையில் உள்ளன. நமது மாணவர்களுக்கும் கணினிக் கல்வி அறிவு வழங்க கணிப் பொறிகளைப் பயன்படுத்தி செயல்முறை இணைந்த கற்றல், கற்பித்தல் என்ற நெறிமுறையோடு இணைந்த அறிவியல் வளர்ச்சிக்கு ஏற்ற கல்வியைக் கற்பிக்க வேண்டும். இதன் அடிப்படையில் சென்ற ஆண்டு 666 மேல்நிலைப் பள்ளிகளில் கணினி ஆய்வுக்கூடங்களுடன் கூடிய 11 ஆம் வகுப்புப் பாடங்கள் தொடங்கப்பட்டு, சிறந்த முறையில் கற்பிக்கப்பட்டு வருகின்றன. 2000-2001 ஆம் ஆண்டில் மீதமுள்ள அனைத்து மேல்நிலைப் பள்ளிகளிலும் கணினிப் பாட வகுப்புகளைத் தொடங்க உள்ளது மகிழ்ச்சி தரத்தக்க, பாராட்டிற்குரிய அறிவிப்பாகும்.

பிற்பகல் 12-50

உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் விஞ்ஞான ஆய்வுக் கூடங்கள் ஆண்டுதோறும் படிப்படியாகக் கட்டப்பட்டு வருவதுடன், அவற்றிற்கான உபகரணங்கள் வழங்கப்பட்டு வருவதும் மகிழ்ச்சிக்குரியது. கல்விக்கூடங்களில் நூலகங்கள் அமைத்து, கல்விக்கான சிறந்த அறிவு பெற அனைத்துப் பாடப் பிரிவுகளுக்கான மாணவர்கள் சிறப்பான கல்வி அறிவு பெறத் தகுந்த கணினி, விஞ்ஞானம், இயற்பியல் போன்ற பலவகை நூல்களும் கிடைக்கப்பெற வேண்டும் என்பதற்கான துறையின் நடவடிக்கைகள் பாராட்டிற்குரியது.

உயர்கல்விக்கான ஒதுக்கீடு ரூ. 812.19 கோடியாகும். தமிழ்நாட்டில் தொழில்நுட்பக் கல்வி பயின்ற பட்டதாரிகள் இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் தொழில் துறையில் பாராட்டத்தக்க வகையிலே பணியாற்றி வருகின்றார்கள் என்பது மிகவும் பெருமைக்குரியதாகும். குறிப்பாக மென்பொருள் படிப்பாளர்களில் பலர், தொழில் திறனால் வளர்ந்து பெரிய தொழில் முனைவர்களாக ஆகியுள்ளார்கள்.

நம் பொறியியல் கல்லூரிகள் மற்றும் தொழில்நுட்பப் பயிலகங்களில் கல்வி கற்பவர்கள் தேசிய அளவில் இரண்டாவது இடத்தில் உள்ளனர் என்பதைப் பெருமையாகக்கொள்ளலாம். பொறியியல் கல்லூரிகளில் சேர ஒற்றைச் சாளர முறை நடைமுறைப்படுத்தியதால் அனைவருக்கும் தகுதியின் அடிப்படையில் தாராளமாக இடம் கிடைக்கிறது.

கலை, அறிவியல் கல்லூரிகளில் பட்டப்படிப்பை முடிப்பதற்கு முன் 3 ஆண்டுகளில் ஒவ்வொரு மாணவனும் குறைந்தது 150 மணி நேரம் கணினிப் பயிற்சி பெறுவது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அது அரசுக் கல்லூரிகளில் செயல்படுத்தப்படுவதை வரவேற்கிறேன். பல்கலைக்கழகங்களைக் கணினி இணையத்தின் மூலம் இணைத்து, தகவல் தொழில்நுட்பக் கல்வியையும் மற்றப் பாடங்களையும் கற்க முயற்சி எடுப்பது வரவேற்கத்தக்கது. தொழில் கல்வி, கலை, அறிவியல் கல்வி ஆகியவற்றில் மாணவிகள் அதிக அளவில் படிக்க முன்வருவது சமுதாயத்தில் நல்ல வரவேற்கத்தக்க மாற்றங்களை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை. கல்லூரிகளில் நாட்டு நலப் பணித் திட்டம் மாணவர்கள் சமுதாயப் பணிகளில் ஈடுபடுவதற்கு முன்னோடியாக அமைகிறது. விளையாட்டுத் துறையில் மாணவர்களை ஈடுபடுத்துவது அவர்களுடைய உடல் நலத்தையும் மன நலத்தையும் செம்மையாக வைத்துக்கொள்ள உதவுகிறது.

பல்கலைக்கழக மானியக் குழு அரசுக் கல்லூரிகள், அரசு உதவி பெறும் கல்லூரிகள், நிரந்தர அங்கீகாரம் பெற்ற சுயநிதிக் கல்லூரிகள், அறிவியல் கல்லூரிகள் ஆகியவற்றிற்குக் கட்டடங்கள் கட்டுவதற்கும், ஆய்வுக்கூடங்கள் அமைப்பதற்கும், ஆராய்ச்சிப் படிப்பிற்கும் நிதி உதவி அளித்து வருகிறது என்பது தெரிந்ததே. ஆனால் கல்லூரி தொடங்கி பத்து ஆண்டுகள் நிறைவு பெற்றும், அனைத்து உள்கட்டமைப்பு வசதிகளைப் பெற்று இருக்கும் சுயநிதிக் கல்லூரிகள், அறிவியல் கல்லூரிகள் பலவற்றிற்குத் தமிழகத்தில் பல பல்கலைக் கழகங்கள் இன்றுவரை நிரந்தர அங்கீகாரம் வழங்கவில்லை. இதனால் இச்சுயநிதிக் கல்லூரிகள், அறிவியல் கல்லூரிகள் பல்கலைக்கழக மானியக் குழுவிடமிருந்து எவ்வித நிதி உதவியையும் பெற முடியவில்லை. ஆனால், பாரதிதாசன் பல்கலைக்கழகம் மூன்று கல்லூரிகளுக்கு நிரந்தர அங்கீகாரம் வழங்கியுள்ளமையால், பல்கலைக்கழக மானியக் குழுவிடம் நிதியுதவி பெற்று, அக்கல்லூரிகளை மேம்படுத்தியுள்ளனர். எனவே அரசு மற்ற பல்கலைக்கழகங்களுக்கும், அனைத்து உள்கட்டமைப்பு வசதிகளைப் பெற்றிருக்கும் சுயநிதிக் கல்லூரிகள், அறிவியல் கல்லூரிகளுக்கு நிரந்தர அங்கீகாரம் வழங்க வேண்டும் என அறிவுரைகள் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், பத்தாண்டு நிறைவு பெற்று சிறப்பாகச்



செயல்படும் சுயநிதிக் கல்லூரிகளுக்கு, அறிவியல் கல்லூரிகளுக்கு தன்னாட்சி நிலை பெறுவதற்கு அக்கல்லூரிகள் விண்ணப்பித்திருந்தால், அக்கல்லூரிகளுக்குத் தன்னாட்சி நிலையை வழங்க வேண்டும் என அரசு பல்கலைக்கழகங்களுக்கு அறிவுறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த மானியக் கோரிக்கையில் பேசுகின்ற அதே நேரத்தில் எனது தொகுதி மேம்பாட்டிற்கான சில முக்கிய வேலைகளை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், சம்பந்தப்பட்ட துறை அமைச்சர் அவர்களையும் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். எனது தொகுதியில் மேற்கும், தெற்குமாக ஓடுகின்ற காவிரி நதியோரத்தில் பத்து, பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாக பாசனத்திற்காக டீசல் எஞ்சின்களை வைத்து, நீரிரைத்து விவசாயம் செய்து வரும் விவசாயிகளுக்கு நிரந்தர தடையில்லாச் சான்று வழங்கி மின் இணைப்பு வழங்கி, நாளும் அதிகரித்து வரும் டீசல் விலை உயர்வால் வருமானமின்றி விவசாயம் செய்யவே விருப்பமின்றி நசிந்துவரும் விவசாயிகளைக் காப்பாற்ற வேண்டுமென பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-55*

கடந்த நான்கு ஆண்டுகளாக, நம்முடைய மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையில் அமைந்துள்ள இந்த ஆட்சியில், மிகச் சிறப்பாக, அனைத்து தரப்பு.... (மணியடிக்கப்பெற்றது) அடிக்கடி நான் பேசுவதில்லை. ஆகவே, இன்னும் ஒரு நிமிடம் கூடுதலாகக் கொடுங்கள்...

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, அடிக்கடி பேசாததால், கல்வியிலே, விவசாயத்தையும் சேர்த்துப் பேசுகிறாரோ? (சிரிப்பு)

**திரு. தி.ப. ஆறுமுகம்:** நான் முடித்துவிடுகிறேன். என்னுடைய தொகுதிக்குத் தேவைப்படுகிற இரண்டொரு வேண்டுகோள்களை மட்டும் வைத்து முடித்துவிடுகிறேன். இந்த ஆட்சியில், மிகச் சிறப்பாக அனைத்துத் துறைகளும் செயல்பட்டு வருவதைப் பாராட்டும் அதேநேரத்தில், குறிப்பாக, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், உள்ளாட்சித் துறை, நெடுஞ்சாலைத் துறை, பொதுப் பணித் துறை, போக்குவரத்துத் துறை ஆகியவற்றைக் குறிப்பிட்டுப் பாராட்டுவது மிகவும் நன்றியுள்ள செயலாகும் என்று கருதுகிறேன். (மணியடிக்கப்பெற்றது) பேசி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** அடுத்து, திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. திய. ஆறுமுகம்:** என்னுடைய தொகுதிக்குட்பட்ட திருச்செங்கோடு நகராட்சி மக்களுக்குக் காவிரி ஆற்றிலிருந்து தண்ணீர் எடுத்து விநியோகம் செய்யும் புதிய திட்டம் ஒன்று மதிப்பீடு 14.6 கோடி ரூபாய் செலவில்...

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** திரு. ஜி. நிஜாமுதீன்.

***திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த கல்வி மானியத்தில் பேச வாய்ப்புத் தந்த, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், தங்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, என்னுடைய உரையைத் தொடங்குவதற்கு முன்பாக எட்டாவது முறையாக, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராகப் பொறுப்பேற்றிருக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், அவருடைய கழகத் தோழர்களுக்கும் என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு நாட்டின் வளர்ச்சி, பொருளாதார முன்னேற்றம், நாகரிக மாற்றங்கள், விவசாய முன்னேற்றம், இப்படி இவை அனைத்துமே, கல்வியை மையமாகக் கொண்டிருக்கின்றன. அந்த வகையிலே, கல்வியை மேம்படுத்துவதற்காக இந்த அரசு, பள்ளிக் கல்வியிலே கணினித் திட்டங்களைக் கொண்டுவருகிற அதேவேளையிலே, கல்வியின் வளர்ச்சிக்கும், ஊக்கத்திற்கும் இந்த அரசு இடையூறாக இருந்து விடுமோ என்ற ஐயப்பாடு எனக்கு ஏற்படுகிறது. அது என்னவென்று சொன்னால், எந்தவொரு வேலைக்கும் குறைந்தபட்சத் தகுதியை நிர்ணயிக்கலாமேயொழிய, அதிகபட்சத் தகுதியை நிர்ணயிப்பது வேலைக்காகத்தான் கல்வி என்ற நிலையை உருவாக்கிவிடும். இந்தக் கருத்து, கல்வியிலே மக்களுக்கு உள்ள ஊக்கத்தையும், ஆக்கத்தையும் கெடுத்துவிடும் என்பதிலே சற்றும் மாற்றுக் கருத்துக் கொண்டவர்கள் யாரும் இருக்க முடியாது. நமது அரசு, பல்வேறு நிலைகளிலே, வேலைகளுக்கு உயர்ந்தபட்சக் கல்வித் தகுதியை நிர்ணயித்து வருகின்றது. அப்படிச் செய்வது, இந்த நாட்டின் முன்னேற்றத்தையே பாதிப்பதாக அமைந்துவிடக்கூடும்.



**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அரசாங்கத்தினுடைய அலுவல்கள், எந்த அளவாக இருந்தாலும், அந்த அலுவலுக்கு விண்ணப்பிக்கிறவர்கள், குறைந்தபட்சம் இந்த அளவு தகுதி பெற வேண்டும் என்றுதான் அறிவிக்கப்பட்டு, அதற்கு மேற்பட்ட தகுதி யாருக்கு வேண்டுமானாலும் இருக்கலாம்; குறைந்தபட்சத் தகுதிதான் அறிவிக்கப்படுகிறதே தவிர, உயர்ந்தபட்சத் தகுதி அல்ல. உயர்ந்தபட்சத் தகுதி என்று ஒன்று, வேலைகளுக்கு அறிவிக்கப்பட முடியாது.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** குறிப்பாக, சாலைப் பணியாளர்கள் 10-வது வகுப்பு 'Pass' செய்திருந்தால், அந்த வேலை கிடையாது என்பதும், பட்டதாரி ஆசிரியர்களை, இடைநிலைக் கல்விப் பணியிடத்திலே அமர்த்தக் கூடாது என்பதும் கல்வியின் ஊக்கத்தைக் குறைப்பதாகவே அமைந்திருக்கிறது.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சில வேலைகளை, சில படிப்புக்கு மேற்படிப்புப் படித்தவர்கள் ஊக்கத்தோடு கடமையுணர்ச்சியோடு செய்யமாட்டார்கள். அந்த விளைவைத் தவிர்ப்பதற்காக, அந்த எல்லைக்கோடு வகுக்கப்பட்டிருக்கலாம்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** அப்படிச் செய்யமாட்டார்கள் என்ற மனப்பான்மையை வளர்ப்பதுதான், உயர் கல்வி போன்ற முன்னேற்றத்திற்கும், நாட்டத்திற்கும் பாதகமாக அமையும். குறிப்பாக, பட்டதாரி ஆசிரியர்கள், ஒரு இலட்சத்து என்பதாயிரத்திற்கு மேல், 40 அல்லது 45 வயதைக் கடந்தவர்கள், வேலைக்குத் திண்டாடிக் கொண்டிருக்கிற அதே வேளையிலே, அவர்கள் இடைநிலை ஆசிரியர்களுக்கான பணியிடங்களில் நியமிக்கப்படமாட்டார்கள் என்று அரசு சொல்லிக் கொண்டிருக்கிற அதேவேளையிலே, தாழ்த்தப்பட்ட பணியிடங்களுக்கு' மாத்திரம், அரசு அந்த விதியைத் தளர்த்தி, பட்டதாரி ஆசிரியர்களை நியமனம் செய்கிறார்கள். அதை நான் தவறு என்று சொல்லவில்லை......

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பட்டதாரி ஆசிரியர்கள் Secondary Grade-க்காக உள்ள அந்தப் பயிற்சியைப் பெற வாய்ப்புப் பெறாதவர்கள். ஆகவே, அந்தக் குறிப்பிட்ட பயிற்சி இல்லாத காரணத்தினாலே அந்த இடங்களில் பட்டதாரிகளை நியமிக்க நீதிமன்றம் ஒப்பவில்லை. டாக்டர்கள்கூட பல நேரங்களில் நர்ஸ்

வேலையை முறையாகப் பார்க்க முடியாது; நர்ஸ் வேலைகளை நர்ஸ்தான் செய்ய முடியும். அதேபோல், Secondary Grade என்பது, குழந்தைகளுக்குப் பாடம் நடத்துவதற்காக அவர்களுடைய மன இயல்புக்கும் சேர்த்து பயிற்சி வழங்கப்படுவதாகக் கூறப்பட்டிருக்கிறது. எந்த அளவு அது வெற்றிகரமாகச் செய்யப்படுகிறது என்பதைப்பற்றி என்னால் சொல்ல முடியாது. ஆனால், பட்டதாரி ஆசிரியர்கள், இந்த மனப் பக்குவத்தோடு குழந்தைகளுக்குப் பாடம் புகட்டுகிற நிலையிலே இல்லை என்பது மொத்தமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு கருத்து. அந்த அடிப்படையிலேதான் வேறுபாடே தவிர, இதிலே பட்டதாரி ஆசிரியர்களுக்கு இடம் தரக்கூடாது என்பதல்ல நோக்கம்.

*பிற்பகல் 1-00*

**திரு. ஜி. நிஜாமுதீன்:** தலைவர் அவர்களே, பட்டதாரி ஆசிரியர்களைப் பணியமர்த்தி, காவல் துறை உதவி ஆய்வர்களைப் பதவி அமர்த்துவதற்குப் பயிற்சி கொடுப்பது போல, வங்கி அலுவலர்களுக்கோ அல்லது Group 1 மற்றும் 2 அலுவலர்களைத் தேர்வு செய்து அவர்களைப் பயிற்சிக்கு அனுப்புவது போல, 3 மாதமோ, 6 மாதமோ அவர்களுக்குப் பயிற்சி கொடுத்து அவர்களை ஆசிரியர்களாக நியமிக்கலாம் என்பதற்கு போதுமான வழிமுறைகள் அரசிடம் இருக்கிறன்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இது குறித்து நீதிமன்றத்திலே கருத்துச் சொல்லி இதைச் செயல்படுத்துவதற்கு ஆவன செய்யப்படும் என்று கூறியிருக்கிறார்கள். அந்தக் கருத்தை நான் வரவேற்கிறேன்.

அதுபோல—1:40—ஓர் ஆசிரியருக்கு 40 மாணவர்கள் என்ற நடைமுறையைக் குறைந்தபட்சம், தொடக்கக் கல்வி நிலையிலாவது தளர்த்தி, 1:20 என்று வேண்டாம், 1-க்கு 35 என்ற விகிதத்திலாவது செயல்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே ஓராசிரியர் பள்ளி என்று தொடங்கியபோது, எந்த எல்லையும் இல்லாமல் 5 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர். ஒன்றில் 10 பேர், ஒன்றில் 9 பேர், ஒன்றில் 8 பேர் என அப்படி வெவ்வேறு அளவிலே 50 பேர் இருந்தாலும் கூட ஓர் ஆசிரியர்தான். இப்போது அத்தனை பள்ளிக்கூடங்களும் இரண்டு ஆசிரியர் பள்ளிக்கூடங்களாக உயர்த்தப்பட்டிருக்கின்றன. இரண்டாவது, ஒரே ஆசிரியர் இருக்கிற பள்ளிக்கூடத்திலே ஐந்து வகுப்புகளையும் நடத்தக்கூடாது. 3 வகுப்புகளோடு நிறுத்திக்கொள்ளுங்கள். உங்களால் பிள்ளைகளுக்குச்

சரியாகப் பயிற்றுவிக்க முடியாது என்று அப்படியும் ஒரு நடைமுறை கொண்டுவரப்பட்டிருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், சில இடங்களில் மொத்த மாணவர்கள் 20, 21 பேர் என்று தான் இருக்கிறார்கள். அங்கு ஓர் ஆசிரியர் இருக்கிறார். 10 பேருக்குக் குறைவாக இருக்கிற பள்ளிக்கூடங்களை, பக்கத்திலே இருக்கக்கூடிய பள்ளிக் கூடங்களிலே சேர்த்து, அந்த ஆசிரியர் பணியைப் பயனுள்ளதாக ஆக்க முடியுமா என்று கருதப்படுகிறது. இதிலே ஒன்று, மாணவர்-ஆசிரியர் விகிதாச்சாரம்; இரண்டு, எத்தனை வகுப்புகள் என்பது; மூன்று, இடவசதி; நான்காவது தூரம்; இவ்வளவையும் சேர்த்துக் கருதி, பயனுள்ள வகையில் இருக்கிற ஆசிரியர்களுடைய பணியைப் பயன்படுத்திக்கொள்ள முயற்சிக்கப்படுகிறது.

**திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** உட்காருங்கள், நீங்கள் அனுமதி கேட்காமலேயே பேசுகிறீர்கள் (குறுக்கீடு) உட்காருங்கள், அவர் பேசட்டும்.

**திரு. ப. கோவிந்தன்:** தலைவர் அவர்களே, point of order

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** இல்லை நீங்கள் உட்காருங்கள். திரு. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 1:40 என்ற கொள்கையை அமல்படுத்த வேண்டாமென்று 1995 ஆம் ஆண்டு, 7-வது மாதம் 22ஆம் தேதி 'முரசொலி'-யிலே வழக்கம்போல் "ஜெயலலிதா அரசு அடம் பிடிக்கிறது. தவறான ஆணையை ரத்து செய்ய மறுக்கின்றது. அரசாணை 250-ஐ மீண்டும் பின்பற்ற வேண்டுமென்று திராவிட முன்னேற்றக் கழகம் வற்புறுத்துகிறது" என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே கூறியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அன்றைய அரசாங்கம் வெளியிட்ட ஆணைகள் அடிப்படையிலே 1:20 என்ற முறையைக் கைவிட்டு, 1:40 என்ற முறைக்குச் செல்லக்கூடாது என்று கூறப்படுகிறது. இன்றைக்கும் எங்களுடைய கொள்கை அதுதான். 1:20 விகிதத்தை நோக்கிப் போகலாம், ஆனால் நடைமுறை எப்படி இருக்கிறது என்று சொன்னால், 1:90, 1:70, 1:50 என்று பல்வேறு விகித நிலையிலே, வெவ்வேறு விதமான சில குறைபாடுகள் ஏற்பட்டு அவற்றையெல்லாம் ஓரளவிற்குச் சமச்சீர் நிலைக்குக் கொண்டுவருவதற்குத் தொடர்ந்து முயற்சிக்கிறோம். இப்போதும்

தொடக்கப் பள்ளிக்கூடத்தில் 1:35, நடுநிலைப் பள்ளிக்கூடத்தில் 1:38, உயர்நிலைப் பள்ளிக்கூடத்தில் 1:45 மேல்நிலைப் பள்ளிக்குப் போனால் 1:28 என்பதுபோன்ற விகிதம் உள்ளது. அதனாலே பள்ளிக்கூடத்தைப் பொறுத்து, வகுப்பைப் பொறுத்து, ஊரைப் பொறுத்து, சூழ்நிலையைப் பொறுத்து, வாத்தியாரைப் பொறுத்து மாணவர் எண்ணிக்கை கூடிக் குறைகிறது.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தனியார், சிறுபான்மைப் பள்ளிகளுக்காக நிர்வாக மானியம் வழங்குவது உண்டு. அது இதுவரையில் 4 சதவீதமாக வழங்கப்பட்டு வந்தது. ஆனால் அரசு, திடீரென்று இந்த ஆண்டு அதனை 3 சதவீதமாகக் குறைத்து வழங்கியிருக்கிறது. இந்த நடவடிக்கையின் மூலம் சிறுபான்மைப் பள்ளிகளும், தனியார்ப் பள்ளிகளும் நசுக்கப்பட்டுவிடுமோ என்கிற அபாய நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த ஆட்சியிலே கல்விக்காக ஊக்கம் தந்து, கடந்த 4 ஆண்டுகளிலே கிட்டத்தட்ட 2 ஆயிரம் கோடிக்கு மேல் நிதியை வழங்கியிருக்கின்ற சூழ்நிலையிலே, தனியார்ப் பள்ளிகளுக்கும், சிறுபான்மைப் பள்ளிகளுக்கும் வழங்குகின்ற Maintenance Grant-ஐ 3 சதவீதமாகக் குறைத்து இருப்பது மிகவும் மோசமான நிலையைத் தோற்றுவிக்கக்கூடும். ஆகவே...

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சிறுபான்மைப் பள்ளிக்கூடங்களுக்கு மட்டும் வழங்கப்படுகிற உதவி நிதியைக் குறைக்கவில்லை; எல்லா Management தனியார் பள்ளிக்கூடத்திற்கும் ஒரேமுறைதான் ஆக, மொத்த ஆசிரியர் ஊதிய மானியம் அதிகமாகிறபோது 4 சதவீதத்திற்கு 2 சதவீதமானால் கூட, அந்த மானியம் அதிகமாகுமே தவிர, பாதிக்கப்படவில்லை. ஆனால், முன்னர் வழங்கிய விகிதத்தில் வழங்கவும் அரசு கருதுகிறது.

*பிற்பகல் 1-05*

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அது அதிகப்படுத்தப்பட்டாலும், சம்பள விகிதத்திலே 4 சதவீதமாக மீண்டும் கொடுக்க இந்த அரசு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதைப்போல, தனியார்ப் பள்ளிகள், சிறுபான்மைப் பள்ளிகளைத் தகுதி உயர்வு செய்யும்போது, அதற்கான மானியத்தை அரசு வழங்குவதில்லை. அரசுப் பள்ளிகளுக்கு மட்டும் வழங்குகின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்பாவு சொல்கின்றபோது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதனைத் தெளிவாகக் குறிப்பிட்டார்கள்; அரசுக்குச்



செலவு கூடுகிறது என்று சொன்னார்கள். நீங்கள் தனியார்ப் பள்ளிக்கும், சிறுபான்மைப் பள்ளிக்கும், பெரும்பான்மைப் பள்ளிக்கும், மானியங்களை வழங்குவதால் அரசுக்குச் செலவு கூடுவதில்லை. அரசுப் பள்ளிகளுக்கு மாத்திரம் உயர்த்துவதால்தான் அரசுக்குச் செலவு கூடுகிறது. ஏனென்றால், ஓர் அரசுப் பள்ளியை உயர்த்துவது என்றால், கட்டடம், இடம், நிலம் அனைத்தையும் அரசே வழங்க வேண்டும். ஆனால் தனியார்ப் பள்ளிகளுக்கு மானியங்களை வழங்கிவிட்டால், இடம், கட்டடம், எல்லாவற்றையும் அவர்களே செய்கின்றார்கள். குறிப்பாக, கல்வியை வழங்குவதிலே, அரசுப் பள்ளிகளைவிட, தனியார்ப் பள்ளிகளும், சிறுபான்மையினர் நடத்தும் பள்ளிகளும், பெரும்பான்மையினர் நடத்தக்கூடிய பள்ளிகளும் மேம்பட்டு இருக்கின்றன என்பதில் ஐயமில்லை. ஆகவே அரசுப் பள்ளிகளை எந்த அளவிற்கு உயர்த்துகிறீர்களோ, அதே சதவிகிதத்தில் மானியம் பெறக்கூடிய தனியார், சிறுபான்மையினர், பெரும்பான்மையினர் பள்ளிகளையும் உயர்த்த வேண்டும். அப்பொழுதுதான், அரசுக்குக் கல்வியிலே வரக்கூடிய செலவுகள் குறையும். ஏனென்றால், தனியார்ப் பள்ளிக்கூடங்களை நடத்துகிறவர்கள், அந்தப் பகுதியிலுள்ள பெரும்பான்மையானவர்களைச் சந்தித்து, donation-ஐப் பெற்று, நிலத்தினை வாங்கிவிடுகிறார்கள்; கட்டடத்தையும் வாங்கிவிடுகின்றார்கள். ஆனால், அரசுப் பள்ளிகளிலே அப்படி நடத்த முடியவில்லை. ஆகவே, அது குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருத்தில் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோலத் தமிழ் ஆசிரியர்கள்; 250 மாணவர்களுக்கு ஒரு தமிழ் ஆசிரியர் இருக்க வேண்டும். ஆனால் 1000 மாணவர்கள் படிக்கக்கூடிய பள்ளிக்கு ஒரே ஒரு தமிழ் ஆசிரியர் இருந்துகொண்டிருக்கிறார். நாம் தமிழ், தமிழ் என்று முழங்குகின்ற நேரத்திலே, அந்தத் தமிழை வளர்ப்பதற்குப் போதிய ஆசிரியர்கள் இல்லையென்றால், எவ்வாறு தமிழை நாம் வளர்க்க முடியும்? ஆகவே இது குறித்து, அரசு கவனத்தில் கொள்ள வேண்டும். நான் தாளாளராகப் பொறுப்பு ஏற்றுக்கொண்டு, நடத்திவரும் கௌதியா உயர்நிலைப் பள்ளி மேல்நிலைப் பள்ளியாக இப்பொழுது உயர்த்தப்பட்டுள்ளது. 1,100 மாணவர்கள் படிக்கின்றார்கள். அங்கே ஒரே ஒரு தமிழ் ஆசிரியர் பணியிடம்தான் வழங்கப்பட்டுள்ளது. அப்படியென்றால், ஆயிரத்து சொச்சம் மாணவர்களுக்கும், அந்த ஆசிரியர் எவ்வாறு, தமிழைக் கற்றுக் கொடுக்க முடியும் என்பது எனக்கு ஐயமாக இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, இதுகுறித்தும், மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

[திரு. ஜி. நிஜாமுதீன்] [2000 ஏப்ரல் 10

அதுபோல, பாலிடெக்னிக்குகளிலே, போதகர்கள் பணியிடங்கள் ஒழிக்கப்பட்டு G.O. 1081 பிறப்பிக்கப்பட்டது. அதன்படி அவர்கள் விரிவுரையாளர்களாக ஆக்கப்பட வேண்டும். 10 ஆண்டுகாலமாக, G.O. 1081 செயல்படுத்தப்படாமல் இருந்தது. அந்த G.O.வைச் செயல்படுத்த வேண்டுமென்பதற்காக G.O. 119-ஐச் சென்ற ஆண்டு பிறப்பித்தார்கள். ஆனால் இன்றுவரை அது செயல்படுத்தப்படவில்லை. அப்படியே இருக்கிறது. அதிலேயும் ஒரு குறைபாடு; 500-க்கு மேற்பட்டவர்கள், போதகர்கள் இருக்கும் போது 112 பேர்களை மட்டும்தான், நாங்கள் விரிவுரையாளர்களாக ஏற்றுக்கொள்வோம், பாக்கியெல்லாம் அப்படியே நிற்பார்கள் என்று சொன்னால், அரசு செய்த தவறுக்கு அவர்கள் எப்படிப் பொறுப்பாக இருக்க முடியும்? அவர்களுக்கு promotions இல்லை; increment இல்லை. அவர்களுக்குப் பின்னால் சேர்ந்தவர்கள் எல்லாம் கூடுதலாகச் சம்பளங்களை வாங்கிக்கொண்டு இருக்கிறார்கள். ஆகவே G.O. 1081-ஐச் செயல்படுத்துவதற்காகக் கொண்டுவரப்பட்ட G.O. 119-ஐ உடனடியாகச் செயல்படுத்த வேண்டும். அதிலே, வெறும் 112 போதகர்கள் மட்டும்தான் விரிவுரையாளர்களாக நியமிக்கப்படுவார்கள் என்று இருந்த அதுவும் செயல்படுத்தப்படாமல் உள்ளது. 500-க்கு மேற்பட்டவர்கள் அந்த நேரத்திலே பணியில் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். பணியமர்த்தியிருப்பது அரசின் தவறு. ஆக அதைக் கவனத்தில் கொண்டு, 500-க்கு மேற்பட்ட போதகர்களையும் விரிவுரையாளர்களாக ஏற்க வேண்டும். அதே நேரத்தில், பல்கலைக்கழகத்தில், அந்தச் சட்டம் செல்லும்போது, அப்படியே upgradation செய்து சேர்த்துக் கொண்டு விட்டார்கள். ஆனால், இதிலே மட்டும் மாற்றமாக இருக்கிறது. அதுதான் ஏன் என்று எனக்கு ஒன்றும் புரியவில்லை. ஆகவே G.O. 1081 என்பதிலே, விரிவுரையாளர்கள் பதவி ரத்து செய்யப்படுகிறது என்று பொதுவாகக் கொடுத்ததை Upgrade பண்ணிக்கொண்டு விட்டார்கள், ஆனால் இதிலே G.O. 1081 அப்படி மாற்றமாகச் செய்யவில்லை; மிகவும் குளறுபடிகள் இருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அதைக் கவனத்தில் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

அதேபோலக் கைத்தொழில் ஆசிரியர்கள் பதவிகள் நியமிக்கப்படும் என்று 1996 ஆம் ஆண்டு, இந்த அவையிலே அமைச்சர் அவர்கள் உறுதி அளித்திருந்தார்கள். அது என்னவாயிற்று என்று தெரியவில்லை. கைத்தொழில் பட்டயம் பெற்றவர்கள் எல்லாம், அப்படியே நின்று கொண்டிருக்கிறார்கள். அரசுப் பணிகள் எல்லாம் காலியாக இருந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, அதுகுறித்து, அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.



2000 ஏப்ரல் 10] [திரு. ஜி. நிஜாமுதீன்]

ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரையில் தமிழைக் கட்டாயக் கல்வியாகக் கொண்டு வரவேண்டுமென்று G.O. வைத்திருந்தோம். அது இன்று வழக்காடுமன்றத்தில் இருந்துகொண்டிருக்கிறது. அதையே சட்டமாக இயற்றியிருந்தால், இதுமாதிரியான நிலை, இரண்டாங்கெட்ட நிலை வந்திருக்காது. ஆகவே, இதைச் சட்டமாக இயற்றிச் செயல்படுத்தவேண்டுமென்று என்னுடைய கருத்தாக வைக்க விரும்புகிறேன்.

அதேபோல, C.B.S.E. கேந்திர வித்யாலயா, D.A.V. போன்று மத்திய அரசால் நடத்தப்படுகின்ற பள்ளிகளிலே, சிறுபான்மையிருக்காக, இட ஒதுக்கீடுகள் இல்லை; அல்லது சிறுபான்மையினர்களின் admissions ஏற்கப்படுவதில்லை. பெரும்பாலான, பள்ளிகளிலே மாணவர்கள் சேர்க்கப்படாமலே, ஒருவர்கூட முஸ்லீம் இல்லை என்ற நிலை இருந்துகொண்டிருக்கிறது. முஸ்லீம் மட்டுமல்ல; மற்ற சிறுபான்மையினரான மொழிச் சிறுபான்மையினர்கூட இல்லை. இல்லை என்ற நிலையிலே ஒரே சாரார் மட்டுமே இருந்துகொண்டிருக்கிற நிலை இருக்கிறது இவையெல்லாம், மக்களுடைய ஊக்கத்தையும், இந்த நாட்டின் மேல் உள்ள பற்றையும் குறைக்கக்கூடியதாகவும், மக்களைத் திசைத் திருப்பக்கூடிய வகையிலேயும் செல்லக்கூடியதாக இருக்கும். ஆகவே, அது குறித்து மத்திய அரசிடம் கலந்து பேசி, இதற்கான முறையான ஏற்பாடுகளை அரசு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். நான் இதை ஏன் இப்போது குறிப்பிடுகிறேன் என்று சொன்னால், முக்கியமான காரணம் இருக்கிறது. மத்தியிலே பொறுப்பேற்றிருக்கக்கூடிய அரசு ஆர்.எஸ்.எஸ்.-ஐப் பின்பற்றிச் செல்லக்கூடிய அரசு என்பதில் எந்த அளவும் ஐயப்பாடு யாருக்குமே இருக்க முடியாது...

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** திரு. சி. ஞானசேகரன். (குறுக்கீடு).

**திரு. ஜி. நிஜாமுதீன்:** ஒரே ஒரு நிமிடத்தில் பேசி முடித்துக் கொள்கிறேன், ஒரே ஒரு நிமிடம்,

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** இல்லை, உங்களுக்கு அளிக்கப்பட்ட நேரம் முடிந்துவிட்டது. திரு. சி. ஞானசேகரன். (குறுக்கீடு) உட்காருங்கள். திரு. சி. ஞானசேகரன், நீங்கள் பேசுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, கல்வி மானியக் கோரிக்கையிலே, பேசுகிற வாய்ப்பினைத் தந்த தங்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியினைக் காணிக்கையாக்கிக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-10

கல்வித் துறையில் அதிக நாட்டம் செலுத்தி, அதிகமாக பணத்தை நாம், இதற்காக ஒதுக்கியும்கூட, இன்னும் பள்ளிகளிலே சேரக்கூடிய மாணவர்கள், இடையிலே, நின்று போகக்கூடிய ஒரு நிலைமை இருப்பது, மிகவும் வருத்தத்திற்குரிய ஒரு செய்தி என்பதை நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன். பள்ளிப் படிப்பை இடையிலே விட்டோர் எண்ணிக்கை என்று வருகிறபோது 1999-2000 ஆண்டில் தொடக்கப் பள்ளிகளிலே 14.41 சதவிகிதம் மாணவர்கள் பள்ளிப் படிப்பை இடையிலே விட்டுவிடுகிறார்கள். கட்டாயக் கல்வி என்று ஒரு சட்டத்தை இயற்றி இருக்கிறோம். அதற்காக நாம் நிறைய பணத்தைச் செலவிட்டு மாணவர்களைப் பள்ளியிலே தொடர்ந்து படிக்கச் செய்ய வேண்டுமென்று பல முயற்சிகளை இந்த அரசாங்கம் எடுத்தாலும்கூட, இன்னும் மாணவர்கள் 12.93 சதவிகிதமும், மாணவியர் 16.07 சதவிகிதமும்—மொத்தமாகக் கணக்கிடுகிறபோது 14.41 சதவிகிதம்—தொடக்கப் பள்ளி மாணவர்கள் பள்ளிப் படிப்பை இடையிலே விட்டுவிடுகிறார்கள்.

நடுநிலைப் பள்ளி மாணவர்களுடைய நிலையை எண்ணிப்பார்க்கிறபோது 36.03 சதவிகிதம் மாணவர்கள், மாணவியர் 34.74 சதவிகிதம் பேர்—மொத்தத்தில் கணக்கிடுகிறபோது 35.43 சதவிகிதம் பேர் நடுநிலைப்பள்ளி மாணவர்கள்—பள்ளிக் கல்வியை இடையிலே விட்டுவிடுகிறார்கள். உயர்நிலைப் பள்ளியைப் பொறுத்த அளவில் மாணவர்கள் 57.97 சதவிகிதமும், மாணவியர் 57.85 சதவிகிதமும்—மொத்தத்தில் கணக்கிடுகிறபோது 57.92 சதவிகிதம்—உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் பள்ளிப் படிப்பை இடையிலே நிறுத்திவிடுகிறார்கள். மேல்நிலைப் பள்ளியினுடைய கணக்கீட்டைப் பார்க்கிறபோது மாணவர் 83.43 சதவிகிதம், மாணவியர் 80.92 சதவிகிதம்—மொத்தத்தில் 82.27 சதவிகிதம் மாணவர்கள்—பாதியிலே படிப்பை நிறுத்திவிடுகிறார்கள் . . .

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அவர் சொன்ன புள்ளிவிவரம் சரிதான். அதிலிருந்து தரப்படுகிற விளக்கம்தான் வேறு. முதல் வகுப்பிலே சேருகிற மொத்த மாணவர்கள் 5 ஆம் வகுப்பிற்குள் 7 பேருக்கு ஒருவர் பள்ளியை விட்டு நீங்குகிறார். Middle School— நடுநிலைப் பள்ளியில் 8 ஆம் வகுப்பு போவதற்குள்ளே மொத்தத்திலே மூன்றில் ஒருவர் பள்ளியை விட்டுவிடுகிறார். 10 ஆம் வகுப்பு வரையிலே போகிறபோதுதான் 100-க்கு 60 பேர், அதாவது முதல் வகுப்பிலே சேர்ந்தவர்களுள் 100-க்கு 60 பேர் இல்லை. அப்புறம் பிளஸ் 2-க்கு போகிறபோது 100-க்கு 85 பேர்,



குறைகிறார்கள். முதல் வகுப்பிலே சேர்ந்த எண்ணிக்கை 100-ஆக இருந்தால் 16 தான் பிளஸ் 2-க்குப் போய்ச்சேருவர். அது ஒன்று. அவர்கள் சில தேர்வுகளிலே வெற்றி பெற்று வரவேண்டும். சிலர் இடம்மாறி வேறு பள்ளிக்கூடத்திலே படிக்க வேண்டும். படித்துத்தான் ஆக வேண்டும் என்கிற ஆர்வம் இருக்க வேண்டும். இவ்வளவும் இல்லாத காரணத்தினால், விலகல் ஏற்படுகிறது. பிளஸ் 2-க்கு முன்னாலேயே 10-வதிலே 7 இலட்சம் பேர் தேர்வு எழுதுகிறார்கள் என்றால் 5 இலட்சம் பேர் வெற்றி பெறுகிறார்கள். 2 அல்லது 3 இலட்சம் பேர்தான் மேல்நிலை வகுப்பிலே சேர வருகிறார்கள். இது சமுதாயத்திலே பெரிய குறைபாடு அல்ல. தொடக்கப் பள்ளிக்கூடத்திலேயே சேராமல் பள்ளிக்கூடத்திற்கே அனுப்பாமல் விட்டுவிடுகிற பிள்ளைகளைச் சேர்ப்பதும், அதிலே பின்தங்கிய சமூகத்துப் பிள்ளைகள் படிப்பதற்கு ஊக்கம் தருவதும் மகளிர் படிப்பதற்கு ஊக்கம் தருவதும் அரசாங்கத்தினுடைய ஒரு கடமை என்ற முறையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மிக, மிகப் பிற்படுத்தப்பட்ட சமூகத்துப் பெண் பிள்ளைகளுக்கு, தாழ்த்தப்பட்ட சமூகப் பெண்பிள்ளைகளுக்கு, 5-வது வரையில் படிப்பதற்கு உதவி, 8-வது வரையில் படிப்பதற்கு உதவி என்று அறிவித்திருக்கிறார்கள். 14 வயது வரையில் எப்படியாவது எல்லோரையும் படிக்கச் செய்யவே அரசு முயற்சிக்கிறது.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் அளித்த விளக்கத்திற்கு நன்றி. இருந்தாலும், ஒன்றை நாம் புரிந்துகொள்ள வேண்டும். பல கோடி ரூபாயை நாம் கல்விக்காகச் செலவழித்து, மாணவர்களைப் பள்ளியிலே சேர்த்து, அவர்களுடைய கல்விக் கண்ணைத் திறக்க வேண்டுமென்று அரசாங்கம் முயற்சி செய்கிறபோது, தேர்ச்சி பெறாமல் நின்று போகிறவர்கள் இருக்கிறார்கள் என்ற கருத்தைச் சொன்னார்கள். தேர்ச்சி பெறாமல் போவதற்கு யார் காரணம்? தரமான கல்வியை நம்மாலே கொடுக்க முடியவில்லை என்பதுதானே அல்லது சுற்றுச்சூழல் சரியாக அமையாமல், பெற்றோர்களும், மற்றவர்களும், மற்ற வேலைக்குப் போய்விட்டார்கள். அதற்கெல்லாம் ஒரு ஆய்வை நடத்தி—ஏன் என்று சொன்னால், மேல்நிலைப் பள்ளிகளுக்கு வருகிறபோது 82.27 சதவிகிதம் பேர் நின்று விடுகிறார்கள் என்று சொல்கிறபோது, கல்வியினுடைய தரம் குறைந்து இருக்கிறது என்பதை நான் இங்கே வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, கல்வி அமைச்சர் அவர்கள் விளக்கம் தந்ததற்குப் பிறகும், ஞானசேகரன் அவர்கள் வேண்டுமென்றே பத்திரிகைகளில் மேல்நிலைப்

பள்ளிக்கு வருகிறவர்களில் 82 சதவிகிதம் மாணவர்கள் இடையிலேயே நின்று விடுகிறார்கள் எனப் பதிவு செய்வதற்காக முயற்சிக்கிறார். உதாரணத்திற்குச் சொல்கிறேன். மேல்நிலைப் பள்ளிகளிலே பிளஸ் 1, பிளஸ் 2-வில், 3 இலட்சம் மாணவர்கள் படிக்க இந்த ஆண்டு வருகிறார்கள் என்றால், அவர்களிலே 82 சதவிகிதம் நடுவிலே நின்றுவிடவில்லை. 1 ஆம் வகுப்பிலேயிருந்து சேர்ந்தார்களே, அந்தக் கணக்கையெல்லாம் சேர்ந்த புள்ளிவிவரங்கள் தந்திருக்கிறார்கள். அதைத்தான் நானும் விளக்கமாகச் சொல்ல விரும்புகிறேன்.

*பிற்பகல் 1-15*

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அமைச்சருடைய விளக்கத்திற்கு இதிலே 1 ஆம் வகுப்பிலிருந்து வந்தாலும் நின்று போனவர்கள் நின்று போனவர்கள்தான். அவர்கள் ஏன் நின்று போனார்கள்? அந்தக் கணக்குத்தான் வேண்டும் என்று நான் கூறுகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நான் சொல்வதை அவர் தவறாக எடுத்துக்கொள்ளக் கூடாது. படிக்காத ஜாதி என்று இந்த நாட்டிலே எவ்வளவு ஜாதி இருந்தது? இப்போதுதானே படிக்க ஆரம்பித்தே, ஒரு தலைமுறை இரண்டு தலைமுறை என்று வந்திருக்கிறது. ஆகவே, அதனுடைய விளைவு—படிக்கவே தேவையில்லை என்று கருதியிருந்த அந்தச் சமூகத்தினுடைய பிரதிபலிப்பு— இதிலே இருக்கத்தான் செய்யும்.

**திரு. சி. ஞானசேகரன்:** என்னுடைய வருத்தமெல்லாம் நாம் இந்த அளவிற்குச் செலவு செய்து இவ்வளவு முயற்சி எடுத்து, இப்படிப்பட்ட ஒரு வீழ்ச்சி இருப்பதை எழுப்பி நிறுத்த வேண்டிய ஒரு கட்டாயம் நமக்கு இருக்கிறது. ஏனென்றால், கல்வித் துறையிலே மத்திய திட்டக் குழு உறுப்பினர், டாக்டர் வெங்கடசுப்பிரமணியம் ஒரு பேட்டியிலே சொல்கிறபோதுகூட இதிலே பள்ளிக் கல்வி மாணவர்களை மட்டுமல்ல, தொழிற் கல்வி பயிலும் மாணவர்கள்கூட 5 சதவீதத்திலிருந்து 8 சதவீதம் வரை பாதியிலே படிப்பை நிறுத்திவிடுகிறார்கள் என்று அவர் ஒரு புள்ளி விவரத்தைக் கொடுத்திருக்கிறார். அதுவும் கிராமப்புறங்களிலே, பிற்படுத்தப்பட்டவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள், குறிப்பாக, முஸ்லிம் மாணவியர் போன்றவர்கள் எல்லாம் பாதியிலே படிப்பை நிறுத்திவிடக் கூடிய ஒரு சூழ்நிலை இருந்துக் கொண்டிருக்கிறது. இதற்கெல்லாம் ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி, நாம் முழுப் பயனை இதன் மூலம் பெறுவதற்கு அரசாங்கம் முயல வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த drop outs என்பது இன்று நேற்று வருவது அல்ல. இடையிலே கல்வியை நிறுத்துவது தொடர்ந்து இருக்கிற பிரச்சினைகள்தான். அதற்காகத்தான் மாண்புமிகு முதல்வர் அவர்கள், கிராமப்புறங்களிலே இருக்கின்ற ஏழை மக்களுடைய சூழ்நிலையைக் கருதித்தான் 6 ஆம் வகுப்பிலேயிருந்து படிக்கின்ற பெண்களுக்கு மாதம் ரூ.100 என்ற ஒரு திட்டத்தை—இந்தியாவிலேயே—அறிவித்திருக்கிற ஒரே முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) இதன் மூலமாக இந்த drop-outs குறிப்பாக பெண்களை, இடையிலே, களை எடுப்பதற்கு, நாற்று நடுவதற்கு என்றெல்லாம் பெற்றோர்கள் நிறுத்திவிடுவதைத் தடுக்க வேண்டுமென்ற எண்ணத்தோடுதான் கலைஞர் அவர்கள் 6 ஆம் வகுப்பிலேயிருந்து மாதம் ரூ.100 என்று சம்பளம் கொடுத்து படிக்க வைக்கிற ஒரு நிலைமையை உருவாக்கியிருக்கிறார்கள். நீண்டகாலமாக இருக்கின்ற இந்த drop-outs பிரச்சினை நிச்சயமாக வருங்காலத்திலே குறையும்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாணவியரை மட்டும் நான் சொல்லவில்லை. மாணவர்களேகூட 83.43 சதவீதம் நின்றுவிடுவதாக இங்கே உங்களுடைய புள்ளிவிவரம் கூறுகிறது. ஆகவே இதற்கு நாம் என்ன செய்யப்போகிறோம்? ஆக இதையெல்லாம் ஒட்டுமொத்தமாகப் பார்க்க வேண்டும். இதைக் குறையாக நான் சொல்லவில்லை. நீங்கள் இந்தக் காரணத்தைக் கொஞ்சம் ஆய்ந்து பார்த்து, இப்படிப்பட்ட drop-outs எப்படி வருகிறது. கிராமப் பகுதிகளிலே, அதுவும் குறிப்பாக தாழ்த்தப்பட்டவர்கள், பிற்படுத்தப்பட்டவர்கள், முஸ்லிம் இன மக்களிடையே, இது இந்த அளவிற்குக் குறைந்து வருவதை நாம் எப்படி அனுமதிக்க முடியும்? சில முஸ்லீம்கள் மட்டும் இப்போது கொஞ்சம் வளர்ந்து விட்டார்கள் என்று எண்ணுகின்றோம். ஆனால் நிறைய பெண்கள், அவர்கள் ஏனோ படிக்க முடியாமல் drop-out ஆகிறார்கள். அதற்கான காரணத்தைக் கண்டறிந்து முழுமையான கல்வியைக் கொடுப்பதற்கு அரசாங்கம் முயல வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து அரசுக் கல்லூரிகளிலே 65 கல்லூரிகளில் இப்போது கணிப்பொறிப் பாடத்தை வைத்திருக்கிறோம். 45 தனியார் கல்லூரிகளில் வைத்திருக்கிறோம். இருந்தாலும்கூட, நிரந்தரமாக இந்தக் கணிப்பொறிப் பாடத்தை நடத்தக்கூடிய ஆசிரியர்கள் அங்கே இல்லாதது வருந்தத்தக்க ஒரு விஷயமாகும். அதனாலே, தரமான கணிப்பொறிக் கல்வி தர முடியாத ஒரு சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே அரசாங்கக் கல்லூரிகளானாலும் சரி . . .

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, கணிப்பொறிக் கல்வியைப் பொறுத்தவரையில், அதற்குத் தரமான ஆசிரியர்கள்தான் இருப்பார்கள். அதேமாதிரி இப்போது மேல்நிலைப் பளளிகளிலே ஏற்படுத்தியிருப்பதிலும் தரமுள்ள பயிற்சி பெற்ற ஆசிரியர்களைக் கொண்டுதான் அந்த 2 மணி நேரம், contract முறைப்படி பள்ளிக்கூடங்களிலே நடத்தப்படுகிறது. தனியாக ஆசிரியர்கள் வைத்தால், அதற்குத் தேவையான அளவு கணிப்பொறிகள் வாங்கிவைக்க முடியாது. ஏனென்றால் அதற்காக கோடிக்கணக்கிலே, எடுத்தவுடனே செலவழிக்க முடியாது. பயன்பாட்டு அடிப்படையிலே கருதப்பட வேண்டும். அதுவும் இப்போது ஏற்படுத்தியிருக்கிற முறையிலே தரமுள்ளவர்கள்தான் ஆசிரியர்களாக இருக்கிறார்கள். எங்காவது தரமான ஆசிரியர் இல்லையென்றால், அந்த நிறுவனத்தின் contract கைவிடப்பட்டு, வேறு நிறுவனம் contract மூலம் நியமிக்கப்படும்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, போலிச் சான்று பற்றி மாண்புமிகு உறுப்பினர் தீரன் அவர்கள் இங்கே சொன்னார்கள். அதிலே கல்வி அமைச்சர் அவர்கள் இங்கே கூறுகின்றபோது இந்தத் துறைதான் போலிச் சான்றிதழ்களைக் கொடுத்து ஆசிரியர் பணிக்கு வந்தவர்களைக் கண்டுபிடித்திருக்கிறது என்ற கருத்தைச் சொன்னார்கள். இதிலே பல மாவட்டங்களிலே திருவண்ணாமலை மாவட்டம், தருமபுரி மாவட்டம், சேலம் மாவட்டம், சிவகங்கை மாவட்டம் என்று பல்வேறு மாவட்டங்களிலே போலிச் சான்றுகளைக் கொடுத்து, ஆசிரியர்கள் உள்ளே பணிக்குச் சேர்ந்து, பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால், இந்தத் துறை தூங்கிக் கொண்டிருக்கிறது என்றுதானே அர்த்தம்?

*பிற்பகல் 1-20*

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, துறை தூங்கவில்லை; ஒரு முறை வைத்து இருக்கிறது. வேலைக்கு விண்ணப்பம் போடுகின்றபோது அவர்கள் தருகின்ற சான்றிதழை வைத்து முதலிலே ஆசிரியர்களை வேலைக்கு எடுத்துக்கொண்டு, அந்தச் சான்றிதழை அதற்கப்புறம்தான் verification-க்கு அனுப்புகிறார்கள். ஏனென்றால், ஒவ்வொரு சான்றிதழும் சரியான சான்றிதழா அல்லவா என்று verification செய்வதற்கு 3 மாதம் ஆகின்றது. ஏனென்றால் 2,000, 3,000 சான்றிதழ்களை verifiy செய்ய வேண்டும். அந்த verification-க்கு வருகிறபோதுதான் இன்னின்ன



சான்றிதழ் தவறு என்று கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்கப்படுகிறது. போலிச் சான்றிதழ் கொடுத்து வேலைக்குச் சேர்வதற்கு அவ்வளவு துணிச்சல் உள்ளவர்களாக அக்கிரமம் செய்ய யாரும் முன்வர மாட்டார்கள் என்ற நம்பிக்கையிலே கொடுக்கின்ற சான்றிதழ் மேற்பார்வையிலே சரியாயிருந்தால், currency note சரியாக இருப்பதாக நம்பி நாம் வாங்குவதைப்போல வேலை தரும் ஆணை தந்துவிட்டு இராமநாதபுரமாக இருந்தாலும், சேலமாக இருந்தாலும், தருமபுரியாக இருந்தாலும் அத்தனை சான்றிதழ்களும் ஆய்வுக்கு அனுப்பப்பட்டு மொத்தமும் ஆய்வு செய்யப்படுகின்றபோது 3 மாதம் 6 மாதங்களில் போலிகள் கண்டுபிடிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அதனுடைய தொடர்ச்சியாக போலிச் சான்றிதழ் தயாரித்த ஒரு கும்பலும் கைது செய்யப்பட்டு இருக்கிறது.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இங்கே அந்த certificate-ஐ நீங்கள் verification செய்யக்கூடிய முறையில், இது தவறான, போலியான certificate என்று கண்டுபிடிக்க முடியாத அளவிறகு அதிலே என்ன அப்படிப் பிரச்சினை எழுகிறது. காரணம், ஒரு மாவட்டத்தில் அல்ல பல மாவட்டங்களிலே பல பேர் இப்படி மோசடி செய்கிறார்கள் என்று சொன்னால், அப்படி இதை யார் அனுமதிக்கின்றார்கள். ஒருவேளை certificate verification செய்கின்றவர்கள் சரியாகக் கவனிக்காமல் வேண்டும் என்றே அதை விட்டுவிட்டு உள்ளே ஆளை விட்டார்களா என்பதுதான் என்னுடைய கேள்வி.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** வேண்டுமென்று விடுவது இல்லை. இன்னும் சொல்லப்போனால் எப்படியாவது ஏமாற்றிப் புகுவது என்று யாரோ சிலபேர் முயற்சிக்கின்றார்கள். மொத்தம் 50 பேர் 60 பேர்களுடைய சான்றிதழ்கள்தான் இந்த நிலைமைக்கு ஆளாகியிருக்கின்றன. 2,000 பேர் 3,000 பேர் தேர்வு செய்கின்றபோது இந்தச் சான்றிதழ்களை அங்கே இருக்கின்ற ஒரு A.E.O., D.E.O., C.E.O. அளவிலே இது சரியா அல்லவா என்று பார்க்க முடியாத காரணத்தினால். தான் அத்தனை சான்றிதழ்களும் மொத்தமாகவே ஆய்வுக்கு அனுப்பப்படுகின்றன. அப்படி அனுப்பப்பட்டுத்தான், அதற்குப் பின்னர் ஆய்வில் அவை கண்டுபிடிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. போலிச் சான்றிதழ் கொடுத்து வேலையிலே சேர்வது ஒன்றும் விளையாட்டு அல்ல; இப்போது சிறைச்சாலைக்குப் போக வேண்டிய நிலையிலே அவர்கள் இருக்கிறார்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அவர்கள் சிறைச்சாலைக்குச் செல்கிறார்கள் என்பதல்ல பொருள். நாம் உண்மையிலேயே இப்படிப் போலி ஆசிரியர்களை உள்ளே விட்டோம் என்று சொன்னால், துறை விழிப்புடன் செயல்படவில்லை என்பதை நாம் ஒத்துக்கொண்டு, இனியாவது விழிப்போடு இந்தத் துறை செயல்பட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். பல Directior-கள் வைத்திருக்கின்றோம். அதற்கென்று ஒரு Directior, அதற்கப்புறம் Elementary Education-க்கு ஒரு Directior. இதற்கெல்லாம் சேர்த்து- என்னைக் கேட்டால் நான் இந்த அரசுக்கு ஓர் ஆலோசனை சொல்வேன். ஒரு I.A.S., படித்த ஆளை ஒரே ஒருவரை மட்டும் Directior ஆகப் போட்டுவிட்டு உருப்படியாக இந்தத் துறையை நடத்துவதற்கு இந்த அரசாங்கம் முன்வர வேண்டும். பல Directior-கள் என்று போட்டுவிட்டு இது ஏனோ தரத்தை இழந்து கொண்டிருக்கிறது என்று நான் வலியுறுத்த கடமைப்பட்டிருக்கிறேன். அடுத்து இப்போது இந்த Teacher training-க்கு என்று நிறைய தனியார் பள்ளிகள் மூலம் மாணவர்களைச் சேர்த்துக் கொண்டிருக்கிறோம்.

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது உங்கள் கட்சி கருத்தா? சொந்தக் கருத்தா? ஏனென்றால் நாளைக்குப் போராட்டம் வந்து எங்கேயாவது மாட்டிக்கொள்ளப் போகிறீர்கள். I.A.S.,தான் போட வேண்டும்; மற்றவர்களை கல்வி இலாக்காவிலே போடக்கூடாது என்று.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் மாற்றுத் தலைவரா? *(சிரிப்பு)*

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, நீங்கள் பத்தரை மாற்றுத் தங்கம் என்கிற காரணத்தினாலே அப்படி மாறி வந்துவிட்டது என்று கருதுகிறேன். *(சிரிப்பு)* Teacher training-க்கு தனியார்கள் நடத்தக்கூடிய பள்ளிகளிலே இன்று *2* இலட்சம் *1* இலட்சம் என்று ஏலம் போட்டு மாணவர்களைச் சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள். இது அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு வரவில்லையா? இதற்கு ஒரு நெறிமுறையை இந்த அரசாங்கம் செய்ய வேண்டாமா? நீங்கள் இப்படி ஏலம் போட்டு சீட்டை *2* இலட்சத்திற்கு விற்று மாணவர்களைச் சேர்த்து கொண்டிருக்கின்றவர்கள் அப்படிப்பட்ட மாணவர்கள் ஆசிரியர்களாக உருவாக்கி வருவார்களேயானல் நாளைக்கு அந்தக் கல்வியினுடைய தரம்



எப்படி இருக்கும்? இதற்காக அரசாங்கம் கொஞ்சம் சிந்தனை செய்ய வேண்டும். எப்படி B.E., M.B.B.S., போன்றவற்றிற்கெல்லாம் நாம் ஒரு நுழைவுத் தேர்வு வைத்து merit மூலம்தான் அவர்களை எடுக்க வேண்டுமென்று வைத்திருக்கிறோமோ, அதுபோன்று, அரசாங்கமே ஒரு தேர்வு நடத்துவதற்கு முன்வர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, பெருமளவிற்கு அரசாங்கத்தினுடைய ஆசிரியர் பயிற்சி கல்வி நிலையங்கள் எதுவாக இருந்தாலும் D.I.E.T. ஆக இருந்தாலும், அரசுக் கல்வி நிலையங்களாக இருந்தாலும், மார்க் அடிப்படையிலேயும், Communal G.O., — வகுப்புவாரி உரிமை—அடிப்படையிலேயும்தான் அந்த இடம் அளிக்கப்பட வேண்டும். அதிலே மாற்றம் இல்லை. சிறுபான்மையோர் நடத்துகிற பள்ளிக்கூடங்களுக்கு அவர்கள் ஒரு தனிச் சலுகை பெற்றிருக்கிறார்கள், அந்தத் தனிச் சலுகை என்பது சிறுபா்ன்மையின மாணவர்கள் விண்ணப்பிப்பார்களேயானால் அவர்களுக்கு இடம் அளிப்பது என்பதாகும். அது அவர்களுடைய உரிமையாக நீண்டகாலமாக இருக்கிறது. சிறுபான்மை அல்லாதார் பள்ளிக்கூடங்களிலேதான் நாம் விதிமுறைகளை எல்லாம் ஓரளவு கடைப்பிடிக்க முடிகிறது. சிறுபான்மை பள்ளிக்கூடத்திலே பெரும்பான்மையைச் சேர்ந்தவர்கள் இடம்பெறுவதற்கு முயற்சிக்கிறபோது சில குறைகள் ஏற்படுகின்றன. ஆனால், அப்படி வருகிறபோது நாங்கள் விசாரிக்கிறபோது தகுந்த ஆதாரத்தோடு புகார் கொடுக்கக்கூடிய ஒரு சூழ்நிலை இல்லை. யாராவது முன்வந்தால், அந்தப் புகார் அடிப்படையில் விசாரணை நடத்தலாம்.

*பிற்பகல் 1-25*

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேர்வைத் தலைவர் அவர்களே, சிறுபான்மைப் பிரிவினர் நடத்தக்கூடிய அந்தப் பள்ளிகளிலேகூட சிறுபான்மைப் பிரிவை சேர்ந்த மாணவர்களைச் சேர்க்கிறபோதேகூட *2* இலட்சம் ரூபாயை வாங்கிக் கொண்டுதானே அவர்கள் கொடுக்கிறார்கள். அதற்கான புகார்கள் வந்திருக்கின்றன. நானேகூட, இயக்குநரிடத்திலே ஒரு Complaint கொடுத்தேன். இப்படிப்பட்ட மாணவர்களைச் சேர்க்க வருகிறபோது நீங்கள் இதிலே தொடர்ந்து எப்படியாவது ஒரு System evole செய்யுங்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** System என்பதை இருக்கிற விதி முறைகளுக்குட்பட்டுத்தான் செய்ய முடியும். இருக்கிற விதிமுறையில் சிறுபான்மையினரைச் சேர்க்க, அவர்கள் தனிச் சலுகை பெற்றிருக்கிறார்கள். அந்தத் தனிச் சலுகையைப் பெற்றது மட்டுமல்ல, எங்கள் பள்ளிக்கூடத்திலே படிக்கிறவர்கள் எங்களுடைய துணைப் பள்ளிக் கூடங்களிலே ஆசிரியர்களாக இருப்பதற்காகத்தான் நாங்கள் அவர்களுக்குப் பயிற்சி தருகிறோம் என்று எங்களிடத்திலே வாதாடுகிறார்கள். எனவே, அவர்களிடத்திலே 2 இலட்சம் ரூபாய் வாங்க முடியுமா என்பது கேள்விக்குரியது..

இரண்டாவது, யார் கொடுத்தாலும் அது ஒரு criminal complaint ஆக இருக்கக் கூடிய அளவிற்கு ஆதாரத்தோடு கொடுத்தால்தான் நடவடிக்கை எடுக்க முடியுமே தவிர, அந்தப் போதுமான ஆதாரம் இல்லாததை வைத்துக்கொண்டு, ஒரு நிர்வாகத்தின்மீது நடவடிக்கை எடுக்கக் கூடிய வாய்ப்பு எந்த அரசாங்கத்திற்கும் இருப்பதற்கில்லை. விதிமுறைகளை மாற்ற முடியுமா என்பது, அரசமைப்புச் சட்டத்திற்குட்பட்டு கருதப்பட வேண்டும்.

**திரு. சி. ஞானசேகரன்:** அரசமைப்புச் சட்டத்திற்கு உட்பட்டு, தாங்கள் ஒரு சட்டத்தை இயற்றியாவது இப்படி விலைபோகிற Teachers Training seat-களைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்று நான் இந்த அரசைப் பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அடுத்து, கல்லூரிகள்; சென்னைப் பல்கலைக்கழகம்கூட ஒரு B.E., கல்லூரிக்கெல்லாம் கடைசி காலகட்டத்தில் affiliation கொடுக்கிறீர்கள். மே மாதத்திலோ, ஜூன் மாதத்திலோ அல்லது ஜூலை மாதத்திலோ நீங்கள் affiliation கொடுத்தீர்கள் என்று சொன்னால், பரவாயில்லை. டிசம்பர் மாதத்திலே கொண்டுபோய் ஒரு கல்லூரியைத் தொடங்குவதற்கு நீங்கள் அனுமதியைக் கொடுத்து அல்லது ஒரு பல்கலைக்கழகம் கொடுக்கிறது என்று சொன்னால், உண்மையிலேயே ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு செய்தி அல்ல. இதைத் தடுத்து நிறுத்துவதற்கும் நீங்கள் ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

Matriculation Schools-ல் அதிக எண்ணிக்கையில் இப்போது அரசாங்கம் தமிழ் வழிக் கல்வியைக் கொண்டு வர வேண்டுமென்று 1 ஆம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரை அது இருக்க வேண்டும் என்று நீங்கள் இப்போது ஓர் அரசாணையைப் பிறப்பித்திருக்கிறீர்கள். ஆனால், 1984-85 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டிலிருந்த மெட்ரிக்குலேஷன் பள்ளிகள் 144 மட்டுமே. ஆனால் இன்று 1999-2000 ஆண்டிலே மெட்ரிக்குலேஷன்





பள்ளிகளினுடைய எண்ணிக்கை 1641. அதிலே 1996-97-லே 1032 பள்ளிகள்தான். அதற்கு முன்னால் 1995-96-லே 885 பள்ளிகள்தான். 1996-97-லே அது Jump ஆகிறது, 1032, அதற்குப் பிறகு 1997-98-லே 1245. 1998-99-லே 1335; 1999-2000-லே 1641 பள்ளிகள். கர்ம வீரர் காமராஜருடைய ஆட்சிக் காலத்தில் இப்படி மெட்ரிக்குலேஷன் பள்ளிகள் மீது மோகம் இல்லை. ஆங்கில மோகம் இல்லாமல் இருந்தது. ஆனால், ஆங்கில மோகத்தை அதிகமாக வளர்த்துவிட்டு, மெட்ரிக்குலேஷன் பள்ளிகளை ஆயிரக்கணக்கிலே உருவாக்கிவிட்டு பிறகு, இதை யாரோ காங்கிரஸ்காரர்கள்—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, அடிப்படையை மாற்றக்கூடாது; வாதம் பண்ணலாம். மக்களினுடைய உரிமை அடிப்படையில் இப்படிப் பள்ளிக்கூடம் நடத்துவதாக இருந்தால், அதைத் தடுப்பதற்கு அரசுக்கு என்ன அதிகாரம் இருக்கிறது? பள்ளிக்கூடம் முறையாக இருக்குமானால், ஏற்கெனவே உள்ள விதிமுறைகளின்படி அந்த அடிப்படைகளோடு விண்ணப்பிப்பார்களேயானால், அதைத் தடுப்பதற்கு நமக்கு வழியில்லை. மக்கள் அப்பள்ளிகட்கு ஆதரவு அளிக்கிற காரணத்தால்தான் இந்த மெட்ரிக்குலேஷன் பள்ளிகள் வளர்ந்தன. இது வளர்ந்த காரணத்தால்தான் தமிழ் வழிக் கல்வி நடத்த வேண்டும் என்பதற்கு அரசு ஆணை பிறப்பித்தது. வளராமல் ஏற்கெனவே இருந்த 144 பள்ளிகளே இருந்திருந்தால் நாங்கள் கவனித்தேகூட இருக்க மாட்டோம். ஆனால், அது 1500 ஆக வளர்ந்த காரணத்தால்தான், அரசுப் பள்ளிக் கூடங்களில் தமிழ் வழிக் கல்வி எப்படி நடைபெறுகிறதோ அதைப்போல தமிழைப் புறக்கணிக்காமல் மெட்ரிக்குலேஷன் பள்ளிகளிலேயும் நடத்த வேண்டுமென்ற நோக்கம் ஏற்பட்டு, அதை வலியுறுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டு, அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அதனுடைய வளர்ச்சியைத் தடுக்க முடியாது. தனியார் கல்வி நிறுவனங்களே தோன்றக் கூடாது என்று சொல்வதற்கு அரசுக்கு உரிமை கிடையாது. அரசு ஏற்படுத்தக்கூடிய விதிமுறைப்படி இன்னின்ன வகையில் நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்ள அல்லது வலியுறுத்துவதற்குத்தான் நமக்கு உரிமை இருக்கிறது.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் உங்களைத் தடுக்க வேண்டும், நேரத்தைப் பாருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** இன்னும் 2,3 விஷயங்கள் இருக்கின்றன. இதோ பேச்சை முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்கு 10 நிமிடங்கள் கொடுக்க வேண்டுமென்று சொல்லி, 20 நிமிடங்களுக்குமேல் பேசிக் கொண்டிருக்கிறீர்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** இதோ பேச்சை முடித்து விடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் விரைந்து பேச்சை முடிக்க வேண்டும்.

**திரு. சி. ஞானசேகரன்:** தலைவர் அவர்களே, இதோ இப்போதே பேச்சை முடித்துக் கொள்கிறேன். B.E., M.B.B.S., admission-லே ஒரு கருத்தை நான் இந்த அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். கிராமப் பகுதி மாணவர்களிலே, நிதியுதவி பெறக்கூடிய பள்ளி அல்லது அரசுப் பள்ளி போன்ற பள்ளிகளிலே படித்தவர்களுக்கு நீங்கள் 15 சதவீத இட ஒதுக்கீட்டைக் கொடுத்திருக்கிறீர்கள்.

பிற்பகல் 1-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

**திரு. சி. ஞானசேகரன்:** சென்னை போன்ற மாநரங்களிலே இருந்து வரக்கூடிய மாணவர்கள்தான், B.E., M.B.B.S.,-ல் பொதுவாக இடத்தைப் பிடித்துவிடுகிறார்கள். ஆகவே மாவட்ட ரீதியாக நீங்கள் ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தோ, B.E., M.B.B.S.,-ல் அந்த மாவட்டத்திற்கு இவ்வளவு என்பதை நீங்கள் ஒதுக்கீடு செய்துவிட்டு அந்த மாவட்ட மாணவர்கள் அந்த seat-களைப் பெறக்கூடிய வாய்ப்புகளை உருவாக்கித் தந்தால், அது பயனுள்ளதாக இருக்கும். இல்லையென்று சொன்னால், மாநகரங்கள் மட்டும் அதிகமான எண்ணிக்கைகளை எடுத்துக்கொண்டு போய்விடுகின்றன. கிராமப்புறத்தில் இருக்கக்கூடிய Mofussil District-ல் இருக்கக்கூடியவர்கள் எண்ணிக்கையிலே வீழ்ந்து விடுகிறார்கள். ஆகவே அந்த system நீங்கள் கொண்டு வரவேண்டும். அதற்கு நீங்கள் உயர்நீதிமன்ற, உச்சநீதிமன்ற தீர்ப்புகள் எல்லாம் இருக்கின்றன என்று சொல்லுவீர்கள். ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து நாம் மாவட்ட அளவிலே இதை



எப்படியாவது கொண்டுவந்து நிறைவேற்றுவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடித்துவிட்டீர்கள், நீங்களே முடியுங்கள். மணி 1-30-க்கு மேல் ஆகிவிட்டது. நாம் இன்னும் ஒரு சட்டமுன்வடிவை ஆய்வு செய்ய வேண்டியிருக்கிறது. உட்காருங்கள். (குறுக்கீடு) சரி, விரைவில் பேசி முடியுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய வேலூர் அரசு பொறியியல் கல்லூரியில் 5 கோடி ரூபாய் ஏற்கெனவே ஒதுக்கினீர்கள். ஆனால், 2 கோடிக்குத்தான் வேலை நடந்திருக்கிறது. இப்போதுதான் Lab எல்லாம் ஆரம்பித்திருக்கிறார்கள். இன்னும் Auditorium இல்லை. Furniture இல்லை. அந்த வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வேலூர் பல்கலைக்கழகம்; சேலத்திற்கு எப்பொழுது பல்கலைக்கழகம் வந்ததோ அப்பொழுதே வேலூருக்கும் பல்கலைக்கழகம் வந்திருக்க வேண்டும். கிட்டத்தட்ட 18 ஆண்டு காலமாக சென்னைப் பல்கலைக்கழகத்தின் University Extension Centre அங்கே இயங்கிக்கொண்டு இருக்கிறது. ஆனால் சேலத்திற்குக் கிடைத்த அந்தப் பலன் எங்களுக்குக் கிடைக்காமல் போய்விட்டது. ஆகவே எங்களுக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் வேலூர் பல்கலைக்கழகத்தை உருவாக்கித் தர வேண்டும்; இந்த ஆண்டு அதைச் செய்து தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டு அமைகின்றேன். நன்றி. வணக்கம்.

## 4. அரசினர் சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்)

### தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு 2000

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்). 2000 ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 5/2000), மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

[2000 ஏப்ரல் 10

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2000 ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 5/2000)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 5 வரை திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 5 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

@31-3-2000 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



2000 ஏப்ரல் 10] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2000 ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 5/2000) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

கல்வி பற்றிய மானியக் கோரிக்கையின் மீதான விவாதம் நாளை தொடரும்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (11-4-2000) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-33 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

-ஏதுமில்லை-

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

62. சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் 1998-99 ஆம் ஆண்டு கணக்குகளின் மீதான தணிக்கை அறிக்கை. (தமிழ், ஆங்கிலம்)

63. மானியக் கோரிக்கை எண் 17, பள்ளிக் கல்வி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2000-2001. (தமிழ்)

64. மானியக் கோரிக்கை எண் 17, பள்ளிக் கல்வி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2000-2001. (ஆங்கிலம்)

65. மானியக் கோரிக்கை எண் 17, உயர் கல்வி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2000-2001. (தமிழ், ஆங்கிலம்)



## இணைப்பு-I

(49 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

### பள்ளிக் கல்வித் துறை

#### தொலைநோக்குக் கொள்கை

*"தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்*
*கற்றனைத் தூறும் அறிவு"*

என்பது அய்யன் திருவள்ளுவர் வாக்கு. கல்வி என்னும் வற்றாத செல்வம் தனி மனிதன் வாழ்க்கையை வளம் பெறச் செய்யவும், அவன் சார்ந்த சமுதாயத்தின் மேம்பாட்டிற்கும், நாட்டின் வளர்ச்சிக்கும், அடித்தளமாக அமைகின்றது. பொருளாதார முன்னேற்றம் அடையாத, ஆனால், கல்வித்தரம் முன்னேறிய நாடுகளில்கூட, இதைக் கண்கூடாகக் காண்கிறோம். வாழ்க்கையில் பொருளாதார வளர்ச்சியடைவதுமட்டுமின்றி, வாழ்க்கையில் பல்வேறு நலன்களையும் முழுமையாகத் துய்க்க, கல்வி கற்றவனால் இயலும். கிடைக்கும் சந்தர்ப்பங்களைத் தக்கவாறு பயன்படுத்தி சாதகமாக்கிக் கொள்ளவும், சந்திக்கும் நிகழ்வுகளின் நன்மை தீமைகளைப் பகுத்தறியவும், கல்வி வழி செய்கிறது. மக்களிடையே கல்வியறிவு பெருகிய நாடுகளில் மக்கள் உடல்நலன்களைப் பேணிக் காப்பதில் முன்னேறி, நோய்களைத் தடுப்பதில் முன்னெச்சரிக்கையாக இருத்தல் போன்றவற்றால் குழந்தைகள், மகளிர், வறியர் ஆகியோரிடையேயும், நோயற்ற வாழ்க்கை அமைந்திருப்பது சுடரிடும் உண்மையாகும். இத்தகைய பயன்மிக்கக் கல்வியைப் பரவலாக அனைவருக்கும் அளிப்பதே கல்வித் துறையின் நோக்கமாகும்.

2. 1991 மக்கட் கணக்கெடுப்பின்படி தமிழகத்திலுள்ள 5.59 கோடி மக்களில் 1.80 கோடி பேர் கல்வியறிவு பெறாதவர்கள். இவர்களுள் பெண்கள் 64 சதவிகிதத்தினர். ஆதிதிராவிடர் வகுப்பினரில் 65 சதவிகிதத்தினர் கல்வி அறிவு பெறாதவர். மலைவாழ் மக்களில் 79 சதவிகிதத்தினர் கல்வி கற்காதவர்கள். கல்வி கற்றவர்களின் எண்ணிக்கை விரைந்து பெருகச் செய்வது துறையின் தலையாயக் குறிக்கோள்.

3. அனைவருக்கும் கல்வி என்ற குறிக்கோளை எய்த, கல்வி கற்கும் வசதி பெற வேண்டியவர்களின் சூழ்நிலை தன்மையின் அடிப்படையில் திட்டங்களை வகுக்க வேண்டியுள்ளது. ஆண்டுதோறும் சுமார் 10 இலட்சம்

[2000 ஏப்ரல் 10

சிறுவர், சிறுமியர் பள்ளியில் சேரும் வயதை அடைகின்றனர். இதைத்தவிர பல்வேறு காரணங்களால் பள்ளியில் கல்வியைத் தொடர்ந்து படிக்க இயலாமல் இடையில் நின்றுவிடும் இளம் வயதினர் எண்ணிக்கை ஒரு புறம்; முதியோர் உள்ளிட்டு 180 இலட்சம் கல்வி கற்காதவர்கள் எண்ணிக்கை மற்றொரு புறம்; இவ்வகையில் அனைத்துப் பிரிவினருக்கும் அவரவர் நிலைமைக்கு ஏற்ற வழியில் கல்வி கற்பிக்கும் அமைப்பை உருவாக்கும் பணியில் இத்துறை ஈடுபட்டுள்ளது.

4. தற்போது தொடக்கப் பள்ளிகளின் எண்ணிக்கையை அதிகரித்து விடுபட்டுள்ள சிற்றூர்களில் அடிப்படைக் கல்வி வசதி ஏற்படுத்துவதும், தமிழகத்தில் அமைந்துள்ள பல நிலையிலுள்ள கல்விச் சாலைகளிலும் அமைந்துள்ள உள்கட்டமைப்பையும் சூழ்நிலையையும் மேம்படுத்தி, பள்ளி மாணவர்களுக்கு கற்பதை விரும்பி ஏற்கும் இனிமையான பட்டறிவாக்கி, மேலும் தொடராது இடைநிற்றலை குறைப்பதும், பள்ளிகளில் மாணவர் பெறும் கல்வி, அவர்கள் சுயமாகச் சிந்திக்கும் அறிவை வளர்க்கும் வகையிலும், நற்பண்புகள் தழைக்கும் வாயிலாகவும் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும், சமுதாய மேம்பாட்டிற்கும், ஏற்ற அடிப்படையாகவும் அமைய ஏற்ற வகையில் கற்பித்தல் அமையவும், ஏற்கெனவே உருவாக்கப்பட்ட கல்வி கட்டமைப்பில் கலவி பெறாமல் விடுபட்ட மக்களிடையே கல்வியறிவை வளர்ப்பதும், இத்துறையின் தொலைநோக்குக் கொள்கையின் முக்கிய அம்சங்களாக இருக்கும்.

5. இதன் அடிப்படையில் பள்ளிக் கல்வித் துறையின்கீழ் இயங்கும் இயக்குநரகங்களின் செயற்பாடும், அவற்றின் கொள்கைகளும், திட்டங்களும் அமைந்துள்ளன. இத்தொலைநோக்குக் கொள்கையைச் செயல்படுத்த முக்கியப் பொறுப்பு வகிக்கும் தொடக்கக் கல்வி இயக்குநரகம், பள்ளிக் கல்வி இயக்குநரகம், பள்ளிசாராக் கல்வி இயக்குநரகம் ஆகியவையும் அவற்றுக்கு உறுதுணையாகச் செயல்படும் ஆசிரியர் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநரகம், பாடநூல் நிறுவனம், பொது நூலக இயக்குநரகம் மற்றும் விளையாட்டு ஆணையம் ஆகியவையும் தத்தம் பணியில் சிறக்க ஈடுபட்டு, கல்வியறிவில் தமிழகத்தை உன்னத நிலைக்கு உயர்த்திட இத்துறை முனைந்து செயல்படுத்தும்.

**மாநில வரவு-செலவுத் திட்டத்தில் பள்ளிக் கல்வி குறித்த நிதி ஒதுக்கீடு**

மானியக் கோரிக்கை 17 - கல்வி என்ற தலைப்பில், 2000-2001 ஆம் ஆண்டிற்கான மொத்த ஒதுக்கீடு ரூ. 4648.95 கோடி ஆகும். இந்த ஒதுக்கீடு சென்ற ஆண்டின் ஒதுக்கீட்டுத் தொகையைவிட ரூ. 504.94 கோடி அதிகமாகும். மேலும், இந்த ஒதுக்கீடு, நிதிநிலை அறிக்கையில் திட்டமிடப்பட்டுள்ள வருவாய் கணக்கிலான மொத்தச் செலவில்



2000 ஏப்ரல் 10]

(ரூ. 21564.87 கோடி) 21.56 விழுக்காடாகும். பள்ளிக் கல்விக்கான மொத்த ஒதுக்கீடு ரூ. 3834.39 கோடி ஆகும். இதில் ரூ. 239.17 கோடி திட்டப் பணிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. பள்ளிக் கல்விக்கான இந்த ஒதுக்கீடு வருவாய் கணக்கிலான மொத்த செலவில் 17.78 விழுக்காடு ஆகும். அனைவருக்கும் கல்வி என்னும் இவ்வரசின் சீரிய குறிக்கோளை அடைவதற்கு ஏற்ற வகை செய்யப்பட்டுள்ளதை இதன் மூலம் கண்கூடாக அறியலாம்.

**அட்டவணை 1**

**2000-2001 ஆம் ஆண்டு செலவுத் திட்ட மதிப்பீடு**
**பள்ளிக் கல்வி**

| கணக்குத் தலைப்பு | திட்டப்பணி | திட்டத்தில் சேராதது | மொத்தம் |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 2059 அரசுப் பள்ளிகள் கட்டடங்கள் பராமரித்தலும் செப்பனிடுதலும் | .. | 763.00 | 763.00 |
| 2202 பொதுக் கல்வி | | | |
| 01 தொடக்கக் கல்வி | 10462.72 | 186979.26 | 197441.98 |
| 02 இடைநிலைக் கல்வி | 10160.66 | 156555.27 | 166715.93 |
| 04 முதியோர் கல்வி | 240.72 | 201.57 | 442.29 |
| 05 மொழி வளர்ச்சி | 2.73 | 296.97 | 299.70 |
| 80 பொதுவானவை-ஏனைய செலவு | .. | 9000.00 | 9000.00 |
| **மொத்தம்** | **20866.83** | **353033.07** | **373899.90** |

[2000 ஏப்ரல் 10

| கணக்குத் தலைப்பு | திட்டப்பணி | திட்டத்தில் சேராதது (ரூபாய் இலட்சத்தில்) | மொத்தம் |
|---|---|---|---|
| 2204 விளையாட்டுகளும் இளைஞர் நலனும் | 1165.10 | 112.93 | 1278.03 |
| 2205 கலையும், பண்பாடும் பொது நூலகங்கள் | 34.38 | 2452.97 | 2487.35 |
| 2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப் பட்டோர் நலன் | 1795.91 | 20.67 | 1816.58 |
| 2235 சமூகப் பாதுகாப்பும், நலனும் | .. | 6.35 | 6.35 |
| திருப்பி வசூலிக்கப் பட்டவை | 54.66 | 3133.31 | 3187.97 |
| பெரு மொத்தம் | **23916.88** | **359522.30** | **383439.18** |

## அட்டவணை - 2

**பிற துறைகளில், பள்ளிக் கல்வி சார்ந்த சில திட்டங்களுக்கும் கீழ்வரும் கணக்குத் தலைப்புகளில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது**

**2000-2001 ஆம் ஆண்டிற்கான செலவுத் திட்ட மதிப்பீடு**

| கணக்குத் தலைப்பு | திட்டப் பணி | திட்டத்தில் சேராதது (ரூபாய் இலட்சத்தில்) | மொத்தம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| அ. வருவாய் கணக்கிற்குட்பட்டது மானியக் கோரிக்கை எண் 27 சமுதாய மேம்பாடு - சமூகக் கல்வி | 27.84 | .. | 27.84 |



2000 ஏப்ரல் 10]

| கணக்குத் தலைப்பு | திட்டப் பணி | திட்டத்தில் சேராதது (ரூபாய் இலட்சத்தில்) | மொத்தம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| மானியக் கோரிக்கை எண் 41 2071 அரசு மானியம் பெறுகின்ற கல்வி நிலையங்களில் பணியாளர்களுக்கு ஓய்வூதியம் | .. | 37738.81 | 37738.81 |
| வருவாய் கணக்கிற்கு உட்படாதது மானியக் கோரிக்கை எண் 55 4202 அரசு இடைநிலைக் கல்வி நிலையங்களுக்கு கட்டடங்களுக்கான மூலதனச் செலவு | 119.36 | .. | 119.36 |
| மொத்தம் .. | **147.20** | **37738.81** | **37886.01** |

**2000-2001 ஆம் ஆண்டுக்கான புதிய திட்டப் பணிகளின் விவரப் பட்டியல்**

| வ. எண் | திட்டங்களின் பெயர் | இறுதிச் செலவு (ரூ. இலட்சத்தில்) | 2000-2001-ல் செலவு |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | **தொடக்கக் கல்வி** | | |
| 1 | 100 தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்துதல் | 121.56 | 101.30 |

[2000 ஏப்ரல் 10

| வ. எண் | திட்டங்களின் பெயர் | இறுதிச் செலவு | 2000-2001-ல் செலவு |
|---|---|---|---|
| | | (ரூ. இலட்சத்தில்) | |
| (1) | (2) | (3) | (4) |
| | **பள்ளிக் கல்வி** | | |
| 2 | 50 ஊராட்சி ஒன்றிய/நகராட்சி/மாநகராட்சி நடுநிலைப் பள்ளிகளை அரசினர்/நகராட்சி/மாநகராட்சி/உயர்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்துதல் | 305.26 | 254.38 |
| 3 | 50 அரசினர் உயர்நிலைப் பள்ளிகள்/நகராட்சி/மாநகராட்சி உயர்நிலைப் பள்ளிகளை அரசினர்/நகராட்சி/மாநகராட்சி மேனிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்துதல் | 657.68 | 547.70 |
| 4 | அரசினர் உயர்நிலைப் பள்ளிகள் 100க்கு அறிவியல் சாதனங்கள் வழங்குதல் | 30.00 | 30.00 |
| | **அரசுத் தேர்வுகள்** | | |
| 5 | சென்னையிலுள்ள தலைமையிட அலுவலகத்தில் கூடுதல் கழிப்பறைகள் கட்டுதல் | 6.00 | 6.00 |
| 6 | சென்னையிலுள்ள தலைமையிட அலுவலகத்தில் வாகனங்களுக்காக கொட்டகை கட்டுதல் | 6.00 | 6.00 |
| 7 | தலைமையிட அலுவலகம் மற்றும் 7 வட்டார அலுவலகங்களின் பயனுக்காக கணினி வாங்குதல் | 7.50 | 7.50 |



2000 ஏப்ரல் 10]

| வ. எண் | திட்டங்களின் பெயர் | இறுதிச் செலவு | 2000-2001-ல் செலவு |
|---|---|---|---|
| | | (ரூ. இலட்சத்தில்) | |
| (1) | (2) | (3) | (4) |
| | **ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி** | | |
| 8 | மாவட்டத் தொடக்கக் கல்வி திட்டம் இல்லாத 3 பிற்படுத்தப்பட்ட மாவட்டங்களில் 30 வட்டார வள ஆதார மையங்கள் ஏற்படுத்துதல் | 150.00 | 150.00 |
| 9 | அரசினர் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் நான்கினுக்குக் கூடுதல் கட்டடங்கள் கட்டுதல் | 150.00 | 60.00 |
| | **தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்** | | |
| 10 | 25 அரசினர் பள்ளிகளில் விளையாட்டு மைதானங்களை மேம்படுத்துதல் | 22.75 | 9.10 |
| 11 | நாகர்கோயிலில் நீச்சல் குளம் கட்டுதல் | 12.50 | 5.00 |
| 12 | திருச்சிராப்பள்ளியில் நீச்சல் குளம் கட்டுதல் | 12.50 | 5.00 |
| 13 | விருதுநகரில் உள்விளையாட்டரங்கம் கட்டுதல் | 22.50 | 9.00 |
| 14 | நாகப்பட்டினத்தில் மாவட்ட விளையாட்டு வளாகம் அமைத்தல் | 26.50 | 10.60 |
| | **ஆசிரியர் தேர்வு வாரியம்** | | |
| 15 | ஆசிரியர் தேர்வு வாரியத்திற்கு 2 கணினிகள் வழங்குதல் | 1.40 | 1.40 |
| | மொத்தம் .. | **1532.15** | **1202.98** |

[2000 ஏப்ரல் 10

# கொள்கை

## 1. தொடக்கக் கல்வி

*1.1* உயிர்களுள் உயர்ந்த அறிவுத் தகுதி பெற்றிருப்பது மனித இனம். மனிதனின் அறிவை வளர்த்துப் பட்டை தீட்டி மெருகேற்றி வைரமாக ஒளிர வைப்பது கல்வி. அத்தகு கடமையைச் செவ்வனே இந்த அரசு ஆற்றி வருவதுடன் சீரிய கல்வி வழங்கும் பணிகளை முனைப்புடன் செயல்படுத்தப் பல திட்டங்களைத் தீட்டி நிறைவேற்றி வருகிறது.

### புதிய பள்ளிகள் திறத்தல்

*1.2* அரசியலமைப்புச் சட்டத்தைச் செயற்படுத்திய நாளிலிருந்து பத்து ஆண்டுகளுக்குள் அனைவருக்கும் இலவச ஆரம்பக் கல்வியைக் கட்டாயமாக வழங்க அரசு வழிவகை செய்ய வேண்டும் என்று விதிக்கப்பட்டிருந்தாலும், அதனை நிறைவேற்றுவதில் பல கடினமான இடர்ப்பாடுகளைக் கடந்து செயலாற்ற வேண்டியுள்ளது. ஒரு நாட்டின் வளர்ச்சி அந்த நாட்டு மக்கள் பெற்றுவரும் அடிப்படைக் கல்வியைச் சார்ந்து இருக்கிறது. அத்தகைய அடிப்படைக் கல்வியை ஒவ்வொரு மாணவனும் மாணவியும் நமது மாநிலததில் பெறுவதற்குகந்த வகையில் அரசு திட்டம் தீட்டி, வகுப்பறைக் கட்டடம், ஆசிரியர் பணியிடங்கள், கற்றல்—கற்பித்தலுக்குத் தேவையான பயன்படு பொருட்கள் போன்றவற்றைச் சிறப்பாக அளிக்க வேண்டும் என்பதே இவ்வரசின் தலையாயக் குறிக்கோளாகும். தமிழ்நாட்டில் ஒரு கிலோமீட்டர் தொலைவிற்குள் மாணவர்கள் சென்றடையும் வகையில் மக்கட் தொகை 300-க்கு மேற்பட்ட அனைத்துச் சிற்றூர்களிலும் தொடக்கப்பள்ளி அமைக்கப்பட வேண்டும் என்பதை அரசு முதன்மைக் கொள்கையாகக் கொண்டுள்ளது. இதனை நிறைவேற்றும் வகையில், 1998-99-ல் 312 தொடக்கப் பள்ளிகளும், 1999-2000-ல் 400 தொடக்கப் பள்ளிகளும் தொடங்க அரசு தகுந்த ஏற்பாடுகளைச் செய்து, மொத்தம் 712 புதிய தொடக்கப் பள்ளிகள் தொடங்கப்பட்டுச் செயல்பட்டு வருகின்றன. விடுபட்டுள்ள எஞ்சிய சிற்றூர்கள் கணக்கெடுக்கப்பட்டுத் தொடக்கப் பள்ளி அமைப்பதன் மூலம் கல்வியில் ஏற்றம் காண இவ்வரசு முயற்சித்து வருகிறது.

### மாணவர் சேர்க்கை

*1.3* தற்போது ஏறக்குறைய பள்ளி செல்லும் வயதுடைய அனைத்துக் குழந்தைகளும் பள்ளியில் முதல் வகுப்பில் சேர்க்கப்பட்டு விடுகின்றனர்.



2000 ஏப்ரல் 10]

தமிழ்நாட்டில் சிறுவர்களைப் பள்ளியில் சேர்க்கும் விகிதம் 98.50 விழுக்காடும், சிறுமிகளில் 94.43 விழுக்காடும் தொடக்கப் பள்ளியில் முதல் வகுப்பில் சேர்க்கப்படுகின்றனர். இவ்வாறு பள்ளியில் சேர்க்கும் குழந்தைகள் விகிதம் மனநிறைவளிக்கும் நிலை தொடர்ந்து இருந்து வருகிறது. பள்ளி வயது குழந்தைகளில் பள்ளியில் சேராமல் விடுபடுபவர்களைச் சரியாகக் கண்டறிந்து அவர்களையும் பள்ளியில் சேர்ப்பது அரசின் குறிக்கோளாகும். மக்கள்தொகையில் பள்ளிச் சேர்க்கையில் இன்னும் விடுபட்டிருக்கும் வகுப்பினர்களின் எண்ணிக்கையையொட்டியும், விடுபட்டிருப்பதன் காரணத்தையும் கண்டறிந்து தீர்வு காண்பதும் அரசின் கொள்கையாகும்.

### மாணவர் திறன்

*1.4* பள்ளியில் சேரும் குழந்தைகளில் ஐந்தாவது வரை தொடர்ந்து படிக்காமல் இடைவிலகுவோர் ஏழில் ஒருவர் (14.41 விழுக்காடு) ஆகும். ஐந்தாம் வுகுப்பு வரை பள்ளியில் தொடர்ந்து பயிலும் மாணவர்களில் 44 விழுக்காடு மாணவர்கள்தான் குறியீட்டுத் திறன் அனைத்தும் பெற்றுள்ளனர் என அறியப்படுகின்றது. தேவையான ஆசிரியர் நியமனம் மூலமும், மாணவர்களின் கல்வித் திறன் வளர்ப்பதற்கு ஏற்ற மறுபயிற்சி ஆசிரியர்கட்கு அளிப்பதன் மூலமும், தொடக்கக் கல்வி பயிற்றுவிக்கப்படும் முறைகளைப் பயனுள்ள வகையில் மேற்பார்வையைத் தொடர்ந்து சீர்செய்யும் நடவடிக்கை எடுப்பதன் மூலமும், குறியீட்டுத் திறன் மேம்படுத்தப்படும்.

### அடிப்படை வசதிகள் உருவாக்குதல்

*1.5* பள்ளியில் மாணவ-மாணவியர் கல்வி கற்றல் இனிமையான சூழலாக அமைய, பள்ளியில் அடிப்படை வசதிகள் இன்றியமையாததாகும். கற்றல் ஆர்வத்தை வளர்க்கும் வகையில் அமைந்த பயில்வதற்கு எளிதான பாடப் புத்தகங்களைத் தயாரிப்பதும், பாடத் திட்டத்தின்படிக் கூடுதல் கற்பித்தல் பொருட்கள் (Teaching Materials) உருவாக்கிக்கொள்ள ஆசிரியர்களைத் தயார் செய்வதும் அரசின் திட்டமாகும். பள்ளியின் சுற்றுப்புறச் சூழலும் கற்றலுக்கு ஏற்றதாக இருத்தல் அவசியம். உறுதியான கட்டடம், குடிநீர் வசதி, கழிப்பறை ஆகியவையும் அமைக்கப்படும். விளையாட்டுப் பொருட்கள் வழங்குவதுடன், விளையாட்டு இடம் அமைப்பதையும் கருத்தில்கொள்ளும்.

[2000 ஏப்ரல் 10

சிறப்புக் கவனம்

1.6 தொடக்கப் பள்ளியினால் அனைத்து மக்களும் பயன்பெறச் சில குறிப்பிடத்தக்கப் பிரிவினருக்குத் தேவையான சிறப்பு நடவடிக்கைகள் எடுப்பதும் அரசின் கொள்கையாகும். எளிதில் அடையவியலாத இடங்களில் குடியிருக்கும் பழங்குடியினர் குழந்தைகளை ஈர்ப்பதற்குத் தனிக்கவனம் செலுத்தப்படும். கண் பார்வை, காது கேட்டல் ஆகியவற்றில் குறைபாடு உடையவர்கள் கல்வி பெறவும் பொதுவான பள்ளிகளில் சேர்ப்பதற்கும் ஆவன செய்யப்படும்.

## 2. இடைநிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிக் கல்வி

### திறன் மிக்க மாணவர்களை உருவாக்குதல்

2.1 அனைத்து அடிப்படை வசதிகளையும் கொண்ட பள்ளிக்கூடம், பொருத்தமான பாடத்திட்டம், சிறந்த கற்றல்-கற்பித்தல் முறைகள் ஆகியவற்றின் மூலம் திறன்மிக்க மாணவர்களை உருவாக்குவதே இடைநிலை-மேல்நிலைப் பள்ளிச் கல்வியின் நோக்கமாகும். 14-18 வயது பிரிவினரின் நுண்ணறிவுத் திறன், கல்வி ஆர்வம் ஆகியவற்றை வளர்த்து ஒளிரச் செய்வதால் சுயதொழில் ஈடுபாட்டுக்கும், உயர் கல்வி நாட்டத்துக்கும் அவர்களைத் தகுதியுடையவர்களாக உருவாக்க முடியும்.

### அறிவியல் கல்வி

2.2 மாணவர்கள் எதிர்கால வாழ்விற்குத் தங்களை ஆயத்தமாக்கிக் கொள்வதற்கு ஏற்ற துறையை - பாடப்பிரிவைத் தேர்ந்தெடுக்க அடிப்படையாகவும், வாயிலாகவும் அமைவது இடைநிலைக் கல்வி. தொடக்கக் கல்வியில் பெறுகின்ற மூன்று முக்கியத் திறன்களாகிய படித்தல், எழுதுதல், கணக்கறிதல் ஆகியவை ஒரு மாணவனை இடைநிலைக் கல்வி பெறத் தகுதியுடையவனாக்குகின்றன. மொழிப்பாட அறிவு பெறுவது தொடர்ந்து தேவைப்படுவதான ஒன்று. முக்கியமாக அறிவியலறிவு பெற மாணவனை ஊக்குவித்திட வாய்ப்பான பருவம் இடைநிலைக் கல்விப் பருவம். மிக விரைவாக வளர்ந்துவரும் அறிவியல் உலகில் ஒரு மாணவன் தன்னையும் தகுதியுடையவனாக்கிக்கொள்ள இக்காலக்கட்டத்தில் அறிவியல் கல்விக்கும் கணிப்பொறி பயிற்சிக்கும் முக்கிய இடம் தரவேண்டியது அவசியம். ஒரு மாணவனிடம் மறைந்து கிடக்கின்ற அரிய ஆற்றல்களை வெளிப்படச் செய்வதற்கு வாய்ப்பான முக்கிய பருவம், இடைநிலைக் கல்விப் பருவம். செயல்முறைப் பயிற்சியுடன் இணைந்து பெறுவதால், மாணவன் தன் திறனை வளர்த்துக்கொள்ளத் துணை செய்வது அறிவியல் கல்வி.



2000 ஏப்ரல் 10]

### கணினி அறிவியல்

2.3 வளர்ந்து வருகின்ற நாடுகளில் இன்றைக்கு அனைத்துத் துறைகளிலும் கையாளப்படும் கணிப்பொறி முறையால், மனித வளத் தட்டுப்பாடின்றித் திட்டமிடுதலும், செயலாக்குதலும் நடைமுறையில் உள்ளன. இன்றைய மாணவர்களின் நுண்ணறிவு ஈர்ப்பு மேம்பாட்டால் நிறையக் கற்கவேண்டும்; அறிய வேண்டும்; தெளிய வேண்டும் என்ற ஆர்வத்தோடு பள்ளிகளுக்கு வருவதால், அதற்கேற்றவாறு திட்டமிட்டு மாணவர்கட்கு வாய்ப்பளிக்க, கணிப்பொறிக் கல்வி வழங்கப்பட வேண்டியதாகிறது. கற்றல்-கற்பித்தல், செயல்முறைகளின் இணைந்த ஒரு கருவியாகக் கணிப்பொறியையும் பயன்படுத்த வேண்டியது இன்றியமையாததாகும். படிப்படியாக அனைத்துப் பள்ளிகளிலும் கணிப்பொறியை நிறுவி, கற்பித்தல், கற்றல் நெறிமுறைகளோடு இணைந்த அறிவியல் வளர்ச்சிக்கு ஏற்ற அடித்தளத்தை இடைநிலை மற்றும் மேல்நிலைக் கல்வி நிலையில் அமைத்தாக வேண்டும்.

### தொழிற்கல்வி

2.4 தொழிற்கல்வி பெறுவதால் சுய வேலைவாய்ப்பு உருவாக்கிக் கொள்ளவும், தொழில்துறை நிறுவனங்களில் தேவைப்படும் வேலைகட்கான திறன் பெறவும், மாணவர்களை ஆயத்தப்படுத்த வேண்டும். புதிய தொழிற்கல்விப் பாடங்களை ஏற்படுத்தி அதிக எண்ணிக்கையில் மாணவர்கள் அப்பாடப் பிரிவுகளில் சேர இடமளித்து, உரிய தரமான பயிற்சி வழங்க வேண்டும். தொழில்நுட்பப் பயிலக மற்றும் தொழிற்பயிற்சி நிறுவன மாணவர்களின் திறனுக்கு இணையாக மேல்நிலைக் கல்வி தொழிற் பாடப்பிரிவு மாணவர்களும் போதிய தரம் பெற வழிவகை செய்யப்பட வேண்டும்.

### பள்ளி அடிப்படை வசதிகள்

2.5 உயர்பள்ளிகளில் அளிக்கப்படும் கல்வி பயனுள்ளதாக அமைய அதற்குத் தேவையான கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல் அவசியம் ஆகும். அறிவியல் பாடங்களில் உரிய தேர்ச்சி பெற ஆய்வகப் பயிற்சி அனுபவம் இன்றியமையாததாகும். அனைத்து உயர் பள்ளிகளிலும், மேல்நிலைப் பள்ளிகளிலும் ஆய்வகக் கட்டடம் உருவாக்குவதும் தேவையான ஆய்வகக் கருவிகளை வழங்குதலும் இன்றியமையாததாகும். போதிய வ்குப்பறை அறிவியல் வளர்ச்சிக்கு நூலக வசதியும் அவசியம்.

வசதிகளும், போதிய தொழில்பயில் வசதியும், கழிப்பறை வசதியும் அனைத்து பள்ளிகளிலும் உருவாக்கும் பணி நடைபெறுகிறது. வலிவுள்ள உடம்பில்தான் உறுதி மிக்க உள்ளம் அமையும் என்ற மொழிக்கு ஏற்ப மாணவர்களிடையே உடல் ஆற்றலை வளர்க்க விளையாட்டு வசதிகளோடு கூடிய திடல்கள் ஏற்படுத்தப்படும்.

**3. ஆசிரியர் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி**

**மறு பயிற்சி, ஆசிரியர் கல்விப் பயிற்சி**

கல்வி பயிற்றுவிக்கும் முறை, ஆசிரியரை மையமாகக் கொண்ட அடிப்படையில் தொடராமல், கல்வி பெறும் குழந்தையை மையமாகக் கொண்ட நோக்கத்தில் அமையவேண்டும். வகுப்பறைகளில் புதிய கல்வி நுட்பங்களை விளக்கும் கருவிகள் பயன்படுத்தப்பட்டு, மாணவரின் கற்றல் ஆர்வத்தை தூண்டும் வகையில் கற்பிக்கும்பொழுது, கல்வியில் மாணவருக்கு முழு ஈடுபாடு ஏற்படுவதால் கல்விப் பயிற்சி சிறக்கும். மாணவர்களுக்குப் பயிற்சி வழங்க உள்ளூரில் கிடைக்கும் பலவகைப் பொருட்களையும் பயன்படுத்திப் பள்ளியைக் கல்வித்திறன் வளர்க்கும் காட்சிக்கூடமாக மாற்றவேண்டும். இதற்கு புதிய மதிநுட்ப அடிப்படையில் அமையும் பயிற்சித் திட்டங்கள் மூலம் முழு ஈடுபாட்டுடன் கூடிய பணித்திறன் மிக்க ஆசிரியர்களை உருவாக்க வேண்டும். இந்நோக்கங்களை எய்துவதற்கு ஏற்ற பயிற்சியளிக்கும் நோக்குடன் ஆசிரியர் பயிற்சி முறை சீரமைக்கப்பட்டு வருகிறது.

**4. பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி**

**கல்லாமை அகற்றுதல்**

கல்லாமையை அகற்ற முறையான பள்ளிக் கல்விமுறை செயல்பட்டாலும், பள்ளியில் சேராதவர்கள், இடையில் நின்றவர்கள், கல்வியறிவினால் பயன்கொள்ள இயலாதவர்கள் இருக்கின்றனர். பொருளாதார முன்னேற்றத்தின் பயன்களை அடையவோ, வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்திக்கொள்ளவோ இயலாதவர்களாக, முறையான கல்வித் திட்டத்தில் தொடராமல் விடுபட்டவர்களுக்கு வாழ்வளிக்கும் நோக்கத்தில் செயல்படுவது பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வித் திட்டமாகும். தமிழகத்தில் எழுத்தறிவு பெற்றவர்களின் எண்ணிக்கை 1991 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி, 61.80 விழுக்காடாக இருந்த நிலை, 1997 மாதிரிக் கணக்கெடுப்பில், 70 விழுக்காடாக உயர்ந்துள்ளது. மீதமுள்ள அனைவருக்கும், குறிப்பாக ஆதிதிராவிடர், பழங்குடியினர் போன்ற நலிந்த பிரிவினருக்கும், மகளிருக்கும் படிப்புத் திறனை அளிப்பது அரசின் குறிக்கோளாகும்.



**5. அரசுத் தேர்வுகள்**

**அறிவுத் திறன் அளவீடு**

மாணவர்கள் அடைந்துள்ள அறிவுத்திறனை அளவிடும் பொருட்டு கல்வி ஆண்டின் இறுதியில் ஒரு தேர்வினை நடத்துதல் இன்றியமையாததாகும். தேர்வு பலகாலமாக நடைபெற்றாலுங்கூட தேர்வு நடத்தும் முறையானது அவ்வப்போது காலத்திற்கு ஏற்ப மாற்றியமைக்கப்படுவது அவசியமாகும். மாணவர்களின் கல்வித் திறனை அளவிடுவதற்கு வாய்ந்த முறைகளுள் தேர்வு ஒரு சிறந்த அளவுகோலாக அமைகிறது. தேர்வு, மாணாக்கர்களின் புரிந்துகொள்ளும் திறனையும், பகுத்தறிந்து ஒப்பாய்வு செய்யும் திறனையும் கணக்கிடும் ஒரு கருவியாகவும் அமைகிறது. இவற்றை அடைவதற்கான தேர்வு முறையைச் செம்மைப்படுத்தும் நோக்குடன் அரசு செயற்படுகிறது.

**6. ஆசிரியர் தேர்வு வாரியம்**

**தகுதியுள்ள ஆசிரியர் தேர்வு**

தேர்ந்த அறிவும், திறனும் கொண்ட ஆசிரியர்களால் மட்டுமே சிறந்த மாணவர்களை உருவாக்க இயலும் என்பதால் ஆசிரியர் தேர்வு வாரியம் உருவாக்கப்பட்டு, அதன் மூலம் உரிய கல்வித் தகுதியும், கற்பிக்கும் திறனும் கொண்ட ஆசிரியர்கள் தேர்வு செய்யப்பட்டு, அரசு உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகள், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள், சட்டக் கல்லூரிகள் மற்றும் தொழில்நுட்பப் பயிலகங்களில் நியமிக்கப்பட்டு வருகின்றனர். ஆசிரியர் தேர்வு வாரியத்திற்கென்று வகுக்கப்பட்டுள்ள நடைமுறை விதிகளால் நேர்மையான முறையில் தரமான ஆசிரியர்கள் தேர்வு செய்யப்பட்டு வருகின்றனர்.

**7. தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம்**

**பாட நூல்கள், குறிப்பேடுகள் வழங்கல்**

அனைத்துப் பள்ளி வகுப்புகட்கும் தேவைப்படும் நல்ல தரமான பாடநூல்கள் மற்றும் குறிப்பேடுகளைத் தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம் மூலம் காலத்தில் தயாரித்து மாணவர்களுக்குக் குறைந்த விலையில் வழங்குவதும், ஏழை மாணவர்களுக்கு இலவசமாக வழங்குவதும் முறையாக நிறைவேற்றப்படுகிறது.

## 8. பொது நூலகங்கள்

### நூலகப் பணிகள்

"ஏராளமான மக்களுக்குத் தனிச் செலவு இல்லாமல், படிக்கும் வசதி" என்பது பொது நூலகத் துறையின் நோக்கமாகும். வாசகர்களை ஈர்க்கும் வகையில் சிறந்த பயனுள்ள நூல்களை நூலகங்களில் இடம்பெறச் செய்தல், நூல்களை ஒளிப்படம் எடுக்க வாசகர்கட்கு வசதி செய்தல், ஒலி-ஒளி நாடா பதிவுப்பெட்டி (வி.சி.ஆர்.) மூலம் கல்விச் செய்திகளை அளித்தல்; சிறந்த நூலகக் கட்டடங்கள் கட்டுதல், பொது நூலக இயக்கத்தை வாசகர் ஆதரவு பெருக்கி, மக்களுக்குச் சிறந்த சேவை செய்தல் மற்றும் ஊர்ப்புறங்களில் நூலகக் கிளைகளை வளர்த்தல் முதலிய நோக்கங்களுடன் பொது நூலகத் துறையின் பணி தொடர்கிறது.

## திட்டங்கள்

## 1. தொடக்கக் கல்வி

### தொடக்கக் கல்வி இயக்கம்

### மாணவர் சேர்க்கை

*1.1* தொடக்கக் கல்வி சமுதாயத்தின் வளர்ச்சிக்கு அடித்தளமாக அமைகிறது. வளர்ந்து வரும் நாடுகளிடையிலும் கல்வியறிவு மிகுந்துள்ள நாடுகளில் வாழ்க்கைத் தரம் உயர்ந்திருப்பதைக் கண்கூடாகக் காண்கிறோம். இந்தியாவில் தொடக்கக் கல்விக்கு அளிக்க வேண்டிய உரிய முனைப்புடன் செயல்படாமை கவலையளிக்கக் கூடியது என்று அமர்த்தியா சென் போன்ற வல்லுநர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். நாடு சுதந்திரம் அடைந்து 50 ஆண்டுகள் ஆகியும் தொடக்கக் கல்வி சிறார் அனைவருக்கும் சென்றடையவில்லை என்ற நிலையைச் சீரமைக்க, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 1999-2000 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்ட "தொடக்கக் கல்வி இயக்கம்" என்ற சிறப்புத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. குறிப்பிட்ட கால அட்டவணையின்படி தொடக்கப் பள்ளிகளில் அனைத்துச் சிறாரையும், குறிப்பாக நலிந்த பிரிவினரின் குழந்தைகள் அனைவரையும் சேர்ப்பதையும், அவ்வாறு சேர்க்கப்பட்டவர்கள் பள்ளிப் படிப்பில் இடையில் நின்றுவிடாமல் காப்பதையும் குறிக்கோளாகக் கொண்டு இத்திட்டம் செயல்படுகிறது.



*1.2* ஆறு முதல் பதினோறு வயது வரம்பில் உள்ள அனைத்து மாணவர்களும் கட்டாய இலவசக் கல்வி பெறச் செய்திடப் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. கட்டாய இலவசக் கல்விச் சட்டமும், கல்வி வழங்க ஏற்ற கட்டமைப்பும் உருவாக்கப்பட்டுள்ளன. இருப்பினும், பள்ளி வயது மாணவர்கள் அனைவரும் தொடக்கக் கல்வி பெறவில்லை என்பதனை உணர்ந்து தொடக்கக் கல்வி இயக்கம் தொடங்கப்பெற்றது. தொடக்கக் கல்வி இயக்கம், *1999* ஏப்ரல் முதல் தீவிரமாக அனைத்து மாவட்டங்களிலும் பின்வரும் செயல்திட்டங்கள் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்டது. கிராமப்புறம் மற்றும் நகர்ப்புறங்களில் உள்ள மக்களிடம் தொடக்கக் கல்வியின் அவசியம், அரசு அளிக்கும் சலுகைகள் போன்ற விவரங்களை விளக்கி விழிப்புணர்வு உருவாக்கப்பட்டது. மாவட்ட ஆட்சித் தலைவர்கள், அனைத்துப் பிரிவு அலுவலர்கள், கல்வித் துறையைச் சார்ந்த மாவட்ட, ஒன்றிய அலுவலர்கள், ஆசிரியர்கள், தலைமை ஆசிரியர்கள் ஆகிய அனைத்துப் பிரிவினரும் முழு ஈடுபாட்டுடன் செயல்பட்டதன் விளைவாக இந்தக் கல்வியாண்டில் *6* முதல் *14* வயது வரை உள்ள *27,000* குழந்தைகள் கூடுதலாகப் பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

### விழிப்புணர்வு முகாம்கள்

*1.3* இத்திட்டத்தின் வாயிலாகப் பள்ளி வயது மாணவர்களின் சேர்க்கை விகிதத்தில் முன்னேற்றம் காணப்பட்டுள்ளது. தொடர்ந்து முன்னேற்றம் காண இத்திட்டம் வரும் ஆண்டும் செயல்படுத்தப்படும். கற்பதற்கேற்ற இனிய (குழந்தைகள் வெறுப்படையாத) சூழ்நிலையை உருவாக்கும் அதே நேரத்தில் தொடக்கக் கல்வியின் அவசியத்தை மக்களிடையே பரப்புவதற்கான விழிப்புணர்ச்சி முகாம்கள் பள்ளி தொடங்குவதற்கு முந்தைய மாதம் நடத்தப்படும். உள்ளாட்சி நிறுவனங்கள், தன்னார்வ நிறுவனங்கள், கல்வியில் அக்கறை கொண்ட பொதுமக்கள் ஆகியோரின் ஒத்துழைப்புடன் நாடெங்குமுள்ள மாணவ, மாணவிகளையும் முழுமையாகப் பள்ளியில் சேர்ப்பதற்கு இந்த முகாம்கள் வழி செய்யும். பள்ளி வயதிலுள்ள அனைத்துச் சிறுவர், சிறுமியர்களை முழுமையாகக் கணக்கெடுத்து அனைவரையும் பள்ளியில் சேர்க்கவே இந்த இயக்கம் நடைபெறும்.

### கற்பிக்கும் முறை, பொருட்கள்

*1.4* பள்ளிகளில் மாணவர்கள் பயில்வது மகிழ்ச்சி தருவதாக அமைய கற்றலில் இனிமை (Joyful Learning) முறைகள் கடைப்பிடிக்கப்படும்.

பாட்டுகள், விளையாட்டுகள் போன்றவற்றின் மூலம் பாடத்தைக் கற்பிக்கும் முறை கைக்கொள்ளப்படும். அனைத்துத் தொடக்கப் பள்ளிகளிலும் ஒலி நாடாக்களும், இசைக் கருவிகளும் வழங்கப்பட்டுள்ளன. ஆசிரியர் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சித் துறையின் மூலம் எளிமையான, இனிமையான பாட்டுக்கள் கொண்ட ஒலி நாடாக்கள் தயாரிக்கப்பட்டு வழங்கப்பட வழி செய்யப்பட்டுள்ளது. இதேபோன்று தொலைக்காட்சி நிறுவனத்துடன் இணைந்து தொடக்கக் கல்விப் பாடங்களை ஒளிபரப்பச் செய்வதுடன், ஒளி நாடாக்கள் தயாரித்து அனைத்து மாணவரும் பயன்பெறுமாறு காண்பிக்கப்படும். இத்தகைய பல்வேறு நடவடிக்கைகள் மூலம் பள்ளியில் சேர்ந்த மாணவியர் இடையில் நின்றுவிடாமல் தொடர்ந்து பயிலும் சூழ்நிலையை உருவாக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**புதிய பள்ளிகள் தொடங்குதல்**

1.5 அனைவருக்கும் முழுமையான தொடக்கக் கல்வி அளிக்கப்பட வேண்டும் என்ற கொள்கைக்கு ஏற்ப, இந்த ஆண்டு புதியதாக 400 தொடக்கப் பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன. 150 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாக உயர்த்தப்பட்டுள்ளன. மற்றும் 100 இடைநிலை ஆசிரியர் பணியிடஙகள் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களாக உயர்த்தப்பட்டுள்ளன. மேலும் ஒவ்வொரு மாவட்டத்திலும் சிறந்த மூன்று பள்ளிகள் தேர்வு செய்யப்பட்டு, ஆசிரியர் தினத்தன்று அப்பள்ளிகளுக்கு, (29 மாவட்டங்களுக்கும் மொத்தம் 87) கேடயங்கள் வழங்கப்பட்டன. 300-க்கும் மேற்பட்ட மக்கள் தொகையுள்ள அனைத்து குக்கிராமங்களின் சிறாரும் எளிதில் செல்லக்கூடிய வகையில் ஒரு கிலோ மீட்டர் தொலைவுக்குள் ஒரு தொடக்கப் பள்ளி அமைக்கும் திட்டம் நிறைவெய்தும் நிலையில் உள்ளது. இதன் தொடர்ச்சியாக, வரும் ஆண்டிலும் விடுபட்ட சிற்றூர்கள் கணக்கிடப்பட்டுப் புதிய பள்ளிகள் தொடங்கப்படும்.

**தொடக்கத்திலேயே பதவிகள் உருவாக்குதல்**

1.6 மேலும்,

(1) 11 முதல் 14 வயதுடையவர்கட்காக 100 தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாக உயர்த்தவும்,

(2) தொடக்கப் பள்ளி நிலையிலிருந்து நடுநிலைப் பள்ளியாக உயர்த்தப்பட்ட பள்ளிகளுக்கு நடுநிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் பதவி வழங்கப்படாத இனங்களுக்கு 494 தொடக்கப் பள்ளித் தலைமை ஆசிரியர் பதவியை நடுநிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் பதவியாக



உயர்த்தவும்,

(3) உயர்நிலைப் பள்ளியாக நிலை உயர்த்தப்பட்ட நடுநிலைப் பள்ளிகளிலிருந்து பிரிக்கப்பட்ட தொடக்கப் பள்ளிகளில் 259 இடைநிலை ஆசிரியர் பதவியை நிலை உயர்த்தி தொடக்கப் பள்ளித் தலைமை ஆசிரியர் பதவியாக மாற்றவும்,

(4) 390 ஓராசிரியர் பள்ளிகளுக்கு இரண்டாம் ஆசிரியர் பணியிடங்கள் வழங்கவும் கருதப்பட்டுள்ளது.

**மாணவர் எண்ணிக்கைக்கேற்ப ஆசிரியர் நியமனம்**

1.7 தொடக்க, நடுநிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் நலனுக்காக, பள்ளிகளில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித்தர அரசு கீழ்க்காணும் திட்டங்களைச் செயற்படுத்த ஆணை பிறப்பித்துள்ளது:

(அ) தொடக்கப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப ஆசிரியர்களை நியமிக்க புதிய நெறிமுறைகளை அரசு வகுத்துள்ளது. அனைத்துத் தொடக்கப் பள்ளிகளிலும் குறைந்தது இரு ஆசிரியர்கள் நியமிக்க அரசு முடிவெடுத்துள்ளது. 1998-99 ஆம் ஆண்டு முதல் இது செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**இலவசப் பாடப் புத்தகங்கள்**

(ஆ) தொடக்கப் பள்ளிகளில் முழுமையாக பள்ளி வயது சிறுவர், சிறுமியரைச் சேர்த்த பின்னர், அவர்கள் இடையில் நின்று விடாமல் இருக்க அரசு, பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. பள்ளிகளில் தொடர்ந்து படிக்க, ஊக்க உதவியாக டாக்டர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தில் பயனடைவோருக்கு இலவசப் பாடப் புத்தகங்கள் வழங்கப்படுகிறது. 1998-99 ஆம் ஆண்டு முதல், ஒன்று முதல் ஐந்து வகுப்புவரை பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் இலவசப் பாடநூல்களை இந்த அரசு வழங்கியுள்ளது. இதன் மூலம் 59.13 இலட்சம் மாணவ, மாணவியர் பயன்பெற்றுள்ளனர். இதற்கு அரசு ரூ. 25.31 கோடி செலவிட்டுள்ளது. வருமாண்டும் இத்திட்டம் தொடரும். இப்புத்தகங்கள் கடந்த மூன்று ஆண்டுகளைப் போலவே, வருமாண்டிலும் கல்வி ஆண்டுத் தொடக்கத்திலேயே வழங்கப்படும்.

[2000 ஏப்ரல் 10

**கட்டட வசதிகள்**

(இ) 920 தொடக்கப் பள்ளிகளுக்குக் கட்டட வசதி ஏற்படுத்தப்பட்டு வருகிறது. தொடக்கப் பள்ளிகளில் இன்னமும் 1988 பள்ளிகளில் தகுந்த கட்டட வசதியுள்ள வகுப்பறைகள் இல்லை எனக் கணக்கெடுக்கப்பட்டுள்ளது. ஊரக வளர்ச்சித் திட்டங்கள் நிதி ஆதாரத்தைக் கொண்டு இவற்றுக்கான கட்டட வசதிகளை உருவாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(ஈ) மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டம் செயற்படும் மாவட்டங்கள் தவிர, இதர மாவட்டங்களில் உள்ள ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளுக்கு அப்பள்ளிகளில் பயன்படுத்தத் தேவைப்படும் எழுதுபொருள் இனங்களை வாங்குவதற்காக 3 ஆசிரியர்கள் வரை உள்ள பள்ளிகள் ஒவ்வொன்றிற்கும் ஆண்டுக்கு ரூ. 300/-ம், 3 ஆசிரியர்களுக்கு மேல் உள்ள ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் ஒவ்வொன்றிற்கும் ஆண்டுக்கு ரூ. 500/-ம், 1996-97 ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது. 1998-99 ஆம் ஆண்டு முதல் நகராட்சிப் பள்ளிகளுக்கும் இத்திட்டம் விரிவாக்கப்பட்டுள்ளது. அனைத்து ஊராட்சி ஒன்றியம், அரசு மற்றும் நகராட்சிப் பள்ளிகளுக்கு கரும்பலகையில் எழுதுவதற்கான சாக்குகட்டி மற்றும் இதர பொருட்கள் வாங்க அரசால் ஒவ்வொரு ஆண்டும் ரூ. 150 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து வழங்கப்பட்டு வருகிறது.

**ஆசிரியர்கள் நியமனத்தில் இட ஒதுக்கீடு**

**தாழ்த்தப்பட்ட/பழங்குடியினர் ஆசிரியர் பற்றாக்குறை**

1.8 அனைத்துக் கல்வி நிலையங்களிலும் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் சமுதாயத்தைச் சார்ந்த ஆசிரியர் பணிகளுக்கான இட ஒதுக்கீடு வழங்குவது உறுதி செய்யப்பட்டுள்ளது. இம்மாநிலத்தில் இச்சமுதாயங்களைச் சார்ந்த பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் பற்றாக்குறை பொதுவாக இல்லையெனினும் இச்சமுதாயங்களைச் சார்ந்த பயிற்சி பெற்ற இடைநிலை ஆசிரியர்கள் போதிய அளவு இல்லை. இக்குறைபாட்டைத் தவிர்க்க, தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி இனத்தைச் சார்ந்த பட்டதாரி ஆசிரியர்களைத் தேர்வு செய்து மாவட்ட ஆசிரியர் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் 3 மாதக் குறுகிய காலப் பயிற்சி அளித்து, இந்த இட ஒதுக்கீட்டின்படி நிரப்பப்படாமல் உள்ள இடைநிலை ஆசிரியர் பணியிடங்களில் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளது. மேலும் 17 மாவட்ட ஆசிரியர் கல்விப் பயிற்சி நிறுவனங்கள் மூலம் ஆண்டுக்கு 850 ஆதிதிராவிட



2000 ஏப்ரல் 10]

மற்றும் பழங்குடியினர் கூடுதலாக இடைநிலை ஆசிரியர் பயிற்சி பெற்று வருகின்றனர். இதன் மூலம் பயிற்சி பெற்ற இவ்வினத்தைச் சார்ந்த இடைநிலை ஆசிரியர்களின் பற்றாக்குறை நிவர்த்தி செய்யப்படுகிறது.

**இடைநிலை வகுப்புகளில் பட்டதாரி ஆசிரியர் நியமனம்**

1.9 மாணவர்களின் அறிவியல் ஆற்றலை வளர்க்க, பயிற்சி அளிக்க, இடைநிலைக் கல்வி ஒரு முக்கியமான நிலையாக உள்ளது. தேசியக் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் வழிகாட்டுதல் முறைகளின்படிச் சீர்செய்யப்பட்ட பாடத் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து, நடுநிலைப் பள்ளிகளில் 6, 7, 8 ஆம் வகுப்புகளில் அறிவியல் மற்றும் கணக்குப் பாடங்களை இடைநிலை ஆசிரியர்களால் சிறப்பாகக் கற்பிப்பதற்கு இயலாத நிலை உள்ளது. ஆகையால், நடுநிலைப் பள்ளிகளில் கல்வியின் தரத்தை உயர்த்த முன்னோடியாக 8 ஆம் வகுப்பிற்குக் கற்பிக்க, 1999-2000 ஆம் ஆண்டில் 100 இடைநிலை ஆசிரியர் பணியிடங்கள் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களாக நிலை உயர்த்தப்பட்டுள்ளன.

**தொடக்கக் கல்விக்கு கட்டமைப்பு வசதிகள்**

1.10 கடந்த 4 ஆண்டுகளில் தொடக்கக் கல்விக்கு ஏற்படுத்தித் தரப்பட்டுள்ள கட்டமைப்பு வசதிகள் பின்வருமாறு:

| | | 1996-97 | 1997-98 | 1998-99 | 1999-2000 | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| (அ) | புதிய தொடக்கப் பள்ளிகள் | 85 | 168 | 312 | 400 | 965 |
| (ஆ) | நடுநிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப் பட்டவை | 21 | 41 | 200 | 150 | 412 |
| (இ) | வகுப்பறை கட்டடங்கள் கட்டித் தரப்பட்ட பள்ளிகள் | 2149 | 1257 | 3060 | 920(*) | 7386 |
| (ஈ) | இடைநிலை ஆசிரியர் காலிப் பணியிடங்கள் நிரப்பப்பட்டவை | 9887 | 8852 | 3799 | 6696 | 29234 |

(*) ஊரக வளர்ச்சித் துறையால் கட்டப்பட்டு வருகிறது.

[2000 ஏப்ரல் 10

**(1) பத்தாவது நிதிக் குழு**

**அடிப்படை வசதிகள்**

பத்தாவது நிதிக் குழு பரிந்துரையின்படி தொடக்கப் பள்ளிகளில் வசதிகள் மேம்படுத்த, கடந்த இரண்டு ஆண்டுகளில் (1998-99 & 1999-2000) கீழ்க்காணும் பட்டியலில் உள்ளவாறு, பள்ளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது:

| வரிசை எண் | இனங்கள் | பயனடையும் பள்ளிகள் எண்ணிக்கை | ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை |
|---|---|---|---|
| | | | (ரூ. கோடியில்) |
| 1 | கட்டடம் | 31 | 1.48 |
| 2 | குடிநீர் | 3992 | 6.96 |
| 3 | கழிப்பிட வசதி | 2052 | 2.48 |
| | மொத்தம் .. | .. | **10.92** |

**(2) பதினோராவது நிதிக் குழு**

தொடக்க/நடுநிலைப் பள்ளிகளில் கூடுதல் வகுப்பறை வசதிகள், குடிநீர் வசதிகள், கழிவறை வசதிகள், மின் இணைப்பு வசதிகள், தளவாடச் சாமான்கள் ஆகியவற்றை ஏற்படுத்தித் தருவதற்காக சுமார் ரூ. 20.03 கோடி அளவிற்கு 11வது நிதிக் குழுவின் பரிந்துரைக்காக கீழ்க்கண்டவாறு செயற்குறிப்புகள் அனுப்பப்பட்டுள்ளன:

| வரிசை எண் | இனங்கள் | பயன்பெற உள்ள பள்ளிகள் | அனுமதி கேட்டுள்ள தொகை (ரூபாய் கோடியில்) |
|---|---|---|---|
| 1 | கட்டடம் | 150 | 7.25 |
| 2 | குடிநீர் | 4000 | 6.97 |
| 3 | கழிப்பிட வசதி | 2156 | 2.76 |
| 4 | மின் இணைப்பு வசதி | 990 | 0.85 |
| 5 | தளவாடச் சாமான்கள் | 1000 | 2.20 |
| | மொத்தம் .. | | **20.03** |



2000 ஏப்ரல் 10]

**(3) ராஜீவ் காந்தி குடிநீர்த் திட்டம்**

ராஜீவ் காந்தி குடிநீர் திட்டத்தின்கீழ் அனைத்துப் பள்ளிகளுக்கும் முழுமையான குடிநீர் வசதி செய்து தர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கடலூர், பெரம்பலூர், ஈரோடு, கோயம்புத்தூர் ஆகிய நான்கு மாவட்டங்களிலும் குடிநீர் வசதி வருமாண்டிலிருந்து செய்து தரப்பட உள்ளது. குடிநீர் வடிகால் வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவருடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்பட்டு உள்ளார். 2001-2002 ஆம் ஆண்டில் மேலும் நான்கு மாவட்டங்களில் இத்திட்டத்தின்கீழ் பள்ளிகளுக்கு குடிநீர் வசதி செய்து தர நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**தமிழ்வழிக் கல்வி**

**மழலையர் பள்ளிகளில் தமிழ்**

1.11 தமிழகத்தில் மொழிச் சிறுபான்மையினருக்கான பள்ளிகள் தவிர, பிற பள்ளிகளில் தமிழ் மொழி அனைவருக்கும் கற்பிக்கப்பட்டு வருகிறது. மழலை வயதினர் மனவளர்ச்சிக்கு பாதிப்பின்றி எளிதான வகையில் தாய்மொழியில் பாடங்கள் கற்பிக்கப்பட வேண்டுமென்பது அரசின் கொள்கையாகும். குறிப்பாக மழலையர் பயிலும் பள்ளிகளில் மொழிப்பாடம் தவிர்த்து பிறபாடங்கள் ஆங்கிலத்தில் கற்பிப்பதை மாற்றியமைக்க வேண்டுமென்ற கொள்கையை அரசு மேற்கொண்டுள்ளது. இனிவரும் காலங்களில் மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளிகளில் தமிழ் மொழியை ஒரு பாடமாக நடத்துவதோடு பிற பாடங்களை ஆங்கில மொழியில் நடத்துவதை மாற்றி குறைந்தது மூன்றில் இரண்டு பாடங்களையாவது, அதாவது, சமூகவியல், கணிதம், அறிவியல் ஆகிய மூன்றில் இரண்டு பாடங்களைத் தமிழ் அல்லது தாய்மொழி வழியில் கற்பிக்க வேண்டுமென்று அரசு முடிவெடுத்துள்ளது. ஏற்கெனவே கல்வித் துறையினுடைய ஏற்பு பெற்ற மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளிகளானாலும், 1999-2000ஆம் கல்வி ஆண்டிலிருந்து மேற்குறிப்பிட்டுள்ள மூன்றில் இரண்டு பாடங்களை தமிழில் அல்லது தாய்மொழியில் பயிற்றுவிக்க முன்வருகின்ற பள்ளிகளுக்குத்தான் தொடர்ந்து ஏற்பு வழங்கும் கொள்கை செயல்படுத்தப்படுகிறது. தமிழ் மொழி வழியில் இயங்குகின்ற மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளிகளுக்கு ஏற்புக் கட்டணம் பாதியாகக் குறைக்கப்பட்டதோடு இப்பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு பாட நூல்கள் அரசின் சார்பில் இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது. தமிழ் வழிக் கல்வியைச் செயல்படுத்தும் வகையில்

[2000 ஏப்ரல் 10

மாநிலத்திலுள்ள மழலையர் பள்ளிகளுக்கான பாடத் திட்டம் வகுத்தளிக்கப்படும், ஏற்பு அளிக்கப்படாத பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் அரசு அங்கீகரித்துள்ள பள்ளிகளில் மேல்வகுபபில் சேர விண்ணப்பிக்கும்போது, அப்பள்ளிகளில் தேர்வு நடத்தி அத்தேர்வுகளில் பெறும் தகுதி அடிப்படையிலேயே உரிய வகுப்புகளில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

**நீதிபதி மோகன் குழு பரிந்துரைகள்**

1.12. மழலையர் பள்ளி உட்பட உயர்கல்வி வரை தமிழ்மொழியைப் பயிற்று மொழியாகச் செயல்படுத்தக் கோரி தமிழ்ச் சான்றோர்கள் அரசின் முன் கோரிக்கை வைத்ததையடுத்து நீதிபதி திரு. எஸ். மோகன் அவர்கள் தலைமையில் குழு அமைக்கப்பட்டு, அக்குழுவின் பரிந்துரைகள் மீது பின்வரும் முடிவுகள் எடுக்கப்பட்டு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

(1) அனைத்துப் பள்ளிகளிலும் (மாநில அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகள் மற்றும் அரசு நிதியுதவி பெறாத ஏற்பளிக்கப்பட்ட பள்ளிகள, மெட்ரிகுலேஷன் பள்ளிகள் அனைத்திலும்) தமிழ் அல்லது தாய்மொழியே முதல் மொழியாகப் பயிற்றுவிக்கப்பட வேண்டும்.

(2) முதல் வகுப்பிலிருந்து 5ஆம் வகுப்பு வரை அனைத்து மாநில அரசு பாட முறை பின்பற்றும் பள்ளிகள் மற்றும் மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் தாய்மொழி அல்லது தமிழ் மட்டுமே பயிற்று மொழியாக இருக்க வேண்டும்.

(3) மூன்றாண்டு காலத்திற்குள் அனைத்துப் பள்ளிகளிலும் 1 முதல் 5 வகுப்புகளில் தாய் மொழி அல்லது தமிழைப் பயிற்று மொழியாக மாற்றியமைக்க வேண்டும். 2000-2001 ஆம் ஆண்டு முதல், முதல் வகுப்பில் தாய்மொழி அல்லது தமிழ்மொழியே பயிற்று மொழியாக இருக்க வேண்டும். படிப்படியாக மேல் வகுப்புகளுக்கும் பயிற்றுமொழி மாற்றம் செய்யப்பட வேண்டும்.

(4) ஆறாம் வகுப்பில் மாணவர்கள் சேர்க்கை குறித்து தற்போதுள்ள நடைமுறையே தொடர்ந்து கடைப்பிடிக்கப்படும். ஏற்பளிக்கப்படாத/அங்கீகாரம் அளிக்கப்படாத பள்ளிகளில் படித்தவர்களுக்கும், தனியே பயின்றவர்களுக்கும் சம்பந்தப்பட்ட பள்ளிகள் அளவிலேயே நுழைவுத் தேர்வு நடத்தித் திறமை, தகுதி கண்டு மாணவர்கள் சேர்க்கப்பட வேண்டும்.



2000 ஏப்ரல் 10]

(5) மெட்ரிகுலேஷன் வாரிய விதிகளில் ஆங்கிலத்துடன் தமிழ் மற்றும் தாய்மொழியும் பயிற்று மொழியாகச் சேர்க்கப்படும். இதற்கான மெட்ரிகுலேஷன் பள்ளிகளின் விதிகளுக்குத் தனியாக திருத்தங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

(6) அனைத்து அரசு மற்றும் நிதியுதவி பெறும் பள்ளிகளிலும், அரசு நிதி உதவி பெறாத ஏற்பளிக்கப்பட்ட பள்ளிகளிலும், மெட்ரிகுலேஷன் பள்ளிகளிலும் முதன்மை மொழி, தமிழ் அல்லது தாய்மொழி என்று பள்ளிகளின் மொழி பற்றிய விதி மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.

**1.13. மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டம்**

(இத்திட்டம் குறித்த ஒரு விளக்கக் குறிப்பேடு தனியாக வைக்கப்பட்டுள்ளது.)

**2. இடைநிலை மற்றும் மேல்நிலைக்கல்வி**

**அடிப்படை வசதி செய்து தருதல்**

- **வகுப்பறை வசதிகள்**

2.1 அனைத்து உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளுக்கும் வகுப்பறைகள், குடிநீர் வசதி, கழிப்பிட வசதி, அறிவியல் ஆய்வக வசதிகள் போன்றவை ஏற்படுத்தித்தர முன்னுரிமை அளித்து இவ்வரசு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. அனைத்துப் பள்ளிகளுக்கும் கட்டட வசதி அடிப்படைத் தேவையாக உள்ளது. இதற்காக 1996-97ஆம் ஆண்டில், 138 அரசு உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் ரூ.5.48 கோடி செலவிலும், 1997-98 ஆம் ஆண்டில், 299 அரசு உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் ரூ.10.02 கோடி செலவிலும் கூடுதல் வகுப்பறைகள் கட்டப்பட்டுள்ளன. 1998-99 ஆம் ஆண்டில், 420 அரசு உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் ரூ.24.99 கோடி செலவில் கூடுதல் வகுப்பறைகள் கட்டப்பட்டுள்ளன. 1-1-1999 நிலவரப்படி அடிப்படை வசதிகள் செய்து தருதல் என்பதைப் பொறுத்தமட்டில், 2233 அரசு உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளுக்கு, 8162 கூடுதல் வகுப்பறைகள் தேவைப் படுகின்றன. இதற்காக, சுமார் ரூ.200 கோடி தேவைப்படுமெனக் கணக்கிடப்பட்டுள்ளது. 1999-2000 ஆம் ஆண்டில் ஊரக வளர்ச்சித் துறை திட்டங்களின் நிதி ஆதாரத்துடன் 734 பள்ளிகளில் வகுப்பறைகள் கட்டப்பட்டு வருகின்றன.

[2000 ஏப்ரல் 10

**கழிப்பறை வசதிகள்**

*2.2* அனைத்து பள்ளிகளுக்கும் மைய ஊரக சுகாதார திட்டத்தின் கீழ் கழிப்பறை வசதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் மாணவியர் பயிலும் பள்ளிகளில் கழிவறை வசதி ஏற்படுத்துவதற்குத தனியாக நிதி ஒதுக்கீடு செய்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 1997-98 ஆம் ஆண்டில் ரூ. 144 இலட்சம் செலவில் 200 பள்ளிகளுக்கும், 1998-99ஆம் ஆண்டில் ரூ. 160 இலட்சம் செலவில் மேலும் 200 பள்ளிகளுக்கும் கழிவறை வசதி செய்து தரப்பட்டுள்ளது. 1-1-1999 நிலவரப்படி 2632 அரசு உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் கழிவறை வசதிகள் செய்துதர வேண்டியுள்ளது. இப்பள்ளிகளுக்கு கழிவறை வசதிகள் செய்துதர உரிய நடவடிக்கை எடுக்கும்படி ஊரக வளர்ச்சித் துறை இயக்குநர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

**பொருத்தமான பாடதிட்டம் மூலம் கற்றல்-கற்பித்தல் செயல்முறைகளை உயிரோட்டமுடையதாக்குதல்**

**பாடத் திட்டம் சீரமைத்தல்**

*2.3* கற்றல்-கற்பித்தல் சிறப்பாக அமைய வேண்டுமெனில் அந்தந்த வகுப்புக்குப் பொருத்தமான சிறந்த பாடத்திட்டம் மிகவும் இன்றியமையாதது. இதனை கருத்திற்கொண்டு, 1 முதல் 12 முடிய உள்ள வகுப்புகளில் பின்பற்றப்படும் பாடத் திட்டத்தைச் சீரமைத்திடக் கீழ்க்கண்ட கோட்பாடுகள் ஏற்கப்பட்டுள்ளன:

(அ) தமிழக அரசின் கொள்கை மற்றும் வழிகாட்டுதல்.

(ஆ) 1986 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட தேசியக் கல்விக் கொள்கை அடிப்படை.

(இ) யஷ்பால் கல்விக் குழுவில் அறிக்கையின்படிச் சுயசிந்தனைத் திறன் வளர்த்திட ஏதுவாகப் பள்ளிக் குழந்தைகளின் பாடச் சுமைகளைக் குறைத்தல்.

(ஈ) பாடத்திட்ட வளர்ச்சி குறித்து தேசியக் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் நெறிமுறை தழுவல்.

(உ) முனைவர் மால்கம் ஆதிசேஷய்யாவின் அறிக்கையின்படி மாணவர் கற்கும் திறனுக்கேற்ப கற்பிக்கும் வழிமுறையை ஆசிரியர்கள் கைக்கொள்ளச் செய்தல்.



2000 ஏப்ரல் 10]

(ஊ) அண்டை மாநிலங்களின் பாட திட்டம், மத்திய வாரிய பள்ளிக் கல்விப் பாடத் திட்டம் ஆகியவற்றின் பாடத் திட்டத்தோடு ஒப்பாய்வு செய்தல்.

**திருத்தப்பட்ட பாடத் திட்டம்**

*2.4* இதனடிப்படையில், 1 முதல் 12 வகுப்புகளுக்கான பாடத் திட்ட வரைவினை அரசு ஏற்று அனுமதி வழங்கியுள்ளது. திருத்தப்பட்ட பாடத் திட்டத்தின் அடிப்படையில் பாட நூல்கள் முறையாகத் தயாரிக்கப்பட்டு அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என உயர்மட்ட வல்லுநர் குழு பரிந்துரைத்துள்ளது. இது படிப்படியாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. புதுப்பிக்கப்பட்ட பாடத் திட்டத்தினையொட்டிப் புதிதாகத் தயாரிக்கப்பட்ட பாட நூல்கள் 1995-96 ஆம் ஆண்டில் 1, 6, 11 ஆம் வகுப்புகளிலும், 1996-97 ஆம் ஆண்டில் 2, 7, 9, 12 ஆம் வகுப்புகளிலும், 1997-98 ஆம் ஆண்டில் 3, 8, 10 ஆம் வகுப்புகளிலும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. 1998-99 ஆம் ஆண்டில் புதிய பாடத் திட்டத்தின்படி எழுதப்பட்ட 4 ஆம் வகுப்பிற்கான பாடப் புத்தகங்கள் கற்பிக்கப்பட்டன. 1999-2000 ஆம் ஆண்டில் 5 ஆம் வகுப்புக்கான புதிய பாடத் திட்டப்படி தயாரித்த பாட நூல்கள் பயிற்றுவிக்கப்படுகின்றன. 2000-2001 ஆம் ஆண்டுக்கான முதல் வகுப்புப புத்தகங்கள் திருத்தப்பட்டு புதிதாக வடிவமைக்கப்பட்டுள்ளன. 2001-2002 ஆம் ஆண்டில் 2, 3 ஆம் வகுப்புகளுக்கானப் புத்தகங்கள் திருத்தி புதிதாக வடிவமைக்கப்படும்.

*2.5* தற்போதுள்ள புத்தகங்களில் உள்ள சுமையைக் கண்டறிந்து குறைப்பதற்குப் பரிந்துரை வழங்க முன்னாள் பள்ளிக் கல்வி இயக்குநர் திரு. சிவஞானம் தலைமையில் ஓர் உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டது. இக்குழு மாணவர்கள், பெற்றோர், கல்வியாளர் ஆகியோரைக் கலந்து, உரிய பரிந்துரைகளை அளித்துள்ளது. இவற்றை ஆய்வு செய்து இப்பரிந்துரைகளை ஏற்று 6 முதல் 10 ஆம் வகுப்புகளுக்கான அறிவியல் பாடப் புத்தகங்களில் திருத்தம் செய்யப்பட்டு வெளியிடப்பட்டன. பாடத் திட்டம் திருத்தியமைக்கப்பட்டு ஐந்து ஆண்டுகள் முடிவுற்ற நிலையில் உள்ளதால் தற்போதைய தேவைக்கேற்ப புதிய பாடத் திட்ட முறையை வகுக்க வல்லுநர் குழு வருமாண்டில் அமைக்கப்படும். கல்வியாளர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் ஆகியோரின் கருத்துக்களை அறிந்து இக்குழு அளிக்கும் புதிய பாடத் திட்ட முறை செயலுக்கு வரும்.

**மெட்ரிகுலேசன்/ஆங்கிலோ இந்தியப் பள்ளிகள்**

2.6 ஒரே மாதிரியான தரமான பாட நூல்கள் நியாயமான விலையில் கிடைக்கும் வகையில் மெட்ரிகுலேசன் பள்ளிகளுக்கான 10 ஆம் வகுப்புப் பாட நூல்கள் அனைத்தையும் பதிப்பிப்பதை 1997-98 ஆம் ஆண்டு முதல் அரசுரிமையாக்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது. அந்தப் பாட நூல்களை தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம் அச்சிட்டு வழங்குகின்றது. மேலும் ஆங்கிலோ-இந்தியப் பள்ளிகளுக்கு பத்தாம் வகுப்பு பாடங்களை அந்த வாரியம் தயாரித்திட, பாடநூல் கழகம் அச்சிட்டு வழங்கும். இதனால் முன்னர் தனியார் பதிப்பகத்தாரால் வெளியிடப்பட்ட பாட நூல்களின் விலைகளைக்காட்டிலும் கணிசமான அளவு குறைந்த விலையில் அந்தப் பாடப் புத்தகங்கள் கிடைக்க வழி செய்யப்பட்டுள்ளது.

**கல்வி வசதிகளை விரிவாக்குதல்**

**(அ) உயர்நிலைப் பள்ளிகள்**

**கூடுதல் உயர் பள்ளிகள்**

2.7 பெரும்பான்மையான குடியிருப்புப் பகுதிகளிலிருந்து 5 கி.மீ. தூரத்திற்குள் உயர்நிலைப் பள்ளி வசதி ஏற்படுத்தப்பட வேண்டுமென அரசு விழைகிறது. குடியிருப்புப் பகுதிகளின் தேவைக்கேற்ப 14-16 வயது நிலையில் உள்ள மாணவர்களை அதிக அளவில் பள்ளிகளில் சேர்ப்பதற்கு ஏற்ற வழிவகை செய்யும் பொருட்டு ஒவ்வொரு ஆண்டும் புதிய உயர்நிலைப் பள்ளிகள் திறக்கப்படுகின்றன. இவ்வாண்டில் 80 ஊராட்சி ஒன்றிய/நகராட்சி/மாநகராட்சி நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்பட்டுள்ளன. வரும் ஆண்டிலும் 50 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்படவுள்ளன. அரசு கொள்கையின்படி ஊரக வளர்ச்சியை முதன்மை நோக்கமாகக் கொண்டு கிராமப்புறங்களில் புதிய அரசு உயர்நிலைப் பள்ளிகள் திறக்க அனுமதி வழங்கப்படுகிறது. மேலும் நடப்பாண்டில் மாநிலத்தில் உள்ள 100 உயர்நிலைப் பள்ளிகளில் 6 முதல் 10 வரையிலான வகுப்புகளில் கைத்தொழில் பாடத்துக்கென்று ஒதுக்கப்பட்டுள்ள 4 பாட வேளைகளில் ஒரு பாடவேளையில் வேளாண்மைப் பாடத்தைக் கற்பிக்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இது தவிர, தற்பொழுது வேளாண்மைப் பாடம் தொழிற் கல்வியாக கற்பிக்கப்பட்டு வரும் மேல்நிலைப் பள்ளிகளில்





வேளாண் தொழிற் பாடம் பயிற்றுவிக்கும் அதே ஆசிரியர்களைக் கொண்டே அப்பள்ளிகளில் 6 முதல் 10 வகுப்புகளில் வாழ்க்கைத் தொடர்பான பாடத்துக்கென்று ஒதுக்கப்பட்டுள்ள நான்கு பாட வேளைகளில் ஒரு பாட வேளையில் வேளாண்மைப் பாடத்தை இக்கல்வியாண்டிலிருந்து கற்பிப்பதற்கும் வகை செய்யப்பட்டுள்ளது.

**(ஆ) மேல்நிலைப் பள்ளிகள்**

**புதிய மேல்நிலைப் பள்ளிகள்**

2.8 1999-2000 ஆம் ஆண்டில் 51 அரசு உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்பட்டன. வரும் ஆண்டில் 50 அரசு உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**அறிவியல் கல்வி முன்னேற்றம்**

**அறிவியல் ஆய்வகங்கள்**

2.9 அறிவியல் கல்வி முன்னேற்றத் திட்டத்தின்படி மாநிலத்திலுள்ள அனைத்து அரசு உயர்நிலைப் பள்ளி/மேல்நிலைப் பள்ளிகளிலும் ஆய்வகம் அமைக்கப்படவேண்டும். இன்றைய நிலவரப்படி 1,110 அரசு உயர்நிலைப் பள்ளிகளில் ஆய்வகக் கட்டடங்கள் அமைத்துக் கொடுக்க வேண்டியுள்ளது. மேல்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தமட்டில், 1998-99 ஆம் ஆண்டுவரை உள்ள அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கும் ஆய்வகக் கருவிகள் வழங்கப்பட்டுவிட்டன. 1998-99 ஆம் ஆண்டில் 173 அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கும், 200 அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கும் ரூ.25.60 கோடி செலவில் ஆய்வுக்கூடங்கள் கட்டித் தரப்பட்டுள்ளன. அறிவியல் ஆய்வகக் கட்டடங்களைப் பொறுத்தமட்டில், 1998-99 ஆம் ஆண்டுவரை நிலை உயர்த்தப்பட்ட அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கு வசதி செய்து தரப்பட்டுள்ளது. 1999-2000 ஆம் ஆண்டில் 40 அரசுமேல்நிலைப் பள்ளிகளுக்கும், 200 அரசு உயர்நிலைப்பள்ளிகளுக்கும் ரூ.100 இலட்சம் செலவில் அறிவியல் ஆய்வகக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. வரும் ஆண்டிலும், இதேபோன்று 100 அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கு, ரூ.30 இலட்சம் செலவில் அறிவியல் உபகரணங்கள் வழங்கப்பட உள்ளன.

## கணினிக் கல்வி

2.10 மேல்நிலைப் பள்ளிகளில் கல்வி பயின்று வெளியே வரும் மாணவர்கள் கணினி அறிவும் பெற்றவர்களாகவும் இருக்க வேண்டுமென்பது அரசின் கொள்கையாகும். கணினியியலில் திறமை பெற்றவர்களை உருவாக்கும் நோக்கத்தோடு அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளிகளிலும் 11, 12 ஆம் வகுப்புகளில் கணினியியல் விருப்பப் பாடமாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 1999-2000 கல்வியாண்டில் 666 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் கணினியியல் பாடம் அறிமுகபபடுத்தப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள அரசு மேல்நிலைப் பள்ளிகளில் வரும் கல்வியாண்டில் அறிமுகப்படுத்தப்படும். இதனால் ஒவ்வொரு பள்ளியிலும் 40 மாணவர்கள் என்ற அடிப்படையில் சுமார் 48,000 மாணவர்கள் ஆண்டுதோறும் மென்பொருள் துறையில் வேலை பெறும் வாய்ப்பிற்குத் தகுதியுடையவர்களாவார்கள். நிபுணர்களின் கருத்துக்களின் அடிப்படையில் உருவாக்கப்படும் பாடமுறையை, கணினியியல் கற்பிப்பதில் தேர்ச்சி பெற்ற, பெயர் பெற்ற நிறுவனங்கள் மூலம், பள்ளிகளில் கணினிகளை நிறுவி, கற்பிக்கும் முறை அறிமுகப்படுத்துப்படடு உள்ளது. 557 மேல்நிலைப் பள்ளிகளில் கணினி அறிவியல் கற்பிக்க அறைகள் கட்டப்பட்டு வருகின்றன.

## கணினி அறிவியல் பாடத் திட்டம்

2.11 ஏற்கெனவே வகுக்கப்பட்ட மேல்நிலை வகுப்புகளுக்கான கணினி பாடத் திட்டம் தற்போதைய கணினி அறிவியல் தேவைக்கு ஏற்றதாக இல்லை. இதில் முழுமையான மாற்றம் தேவையென உணரப்பட்டு, இதற்காக திரு. அனந்தகிருஷ்ணன் தலைமையில் தகவல் தொழில்நுட்பத் துறைக் குழு அமைக்கப்பட்டது. இக்குழு மேல்நிலை வகுப்புகளுக்கான கணினி பாடத் திட்டம் குறித்து விவாதித்தது. இக்குழு இவ்வாண்டு போதுமான கால இடைவெளி இன்மையால், இவ்வாண்டு 11-ஆம் வகுப்பிற்கும் அடுத்த ஆண்டு 12-ஆம் வகுப்பிற்கும் சில மாறுதல்கள் செய்யலாம் எனவும், வரும் கல்வி ஆண்டு முதல் தற்போதைய கணினி அறிவியல் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு 11, 12-ஆம் வகுப்புகளுக்குப் பாடத் திட்டத்தை முழுமையாக மாற்றியமைக்கலாம் எனவும் பரிந்துரை செய்துள்ளது. தகவல் தொழில்நுட்பக் குழு வல்லுநர்கள் அளித்துள்ள பரிந்துரைகளை ஏற்று, கணினி அறிவியலின் வருங்கால முன்னேற்றங்களைக் க்ருத்தில் கொண்டு பாடத் திட்டங்களை மாற்றியமைத்துள்ளது. இப்பாடத் திட்டங்களை நடத்த ஆசிரியர்களைத் தயார்படுத்தவும், கணினிகளில் தேவைப்படும் மாற்றங்களை மேற்கொண்டு



பாடத்திட்டங்களை நடைமுறைப்படுத்த ஆணையிடப்பட்டுள்ளது. 2000-2001 ஆண்டில் 9 மற்றும் 10ஆம் வகுப்புகளில் இப்பாடத்தை அறிமுகப்படுத்த கருதப்பட்டுள்ளது. 2000-2001 ஆம் ஆண்டுக்குரிய 9 மற்றும் 10 ஆம் வகுப்புக்குரிய பாடத் திட்டம் ஒரே புத்தகமாக வெளியிடப்படும். செய்முறை அடிப்படையில் (Learning by doing) புத்தகங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. ஏற்பளிக்கச் செய்யப்பட்டுள்ள புதிய பாடத் திட்டங்களைத் தரம் உயர்ந்த காகிதத்தில் அச்சிட்டு தமிழ்நாடு பாடநூல் கழகம் பாடப் புத்தகங்களாக வெளியிடும்.

## கணினி பாட வினா வங்கிகள்

2.12 பாடத் திட்டங்களைத் திருத்தி அமைத்துள்ளதைக் கருத்தில் கொண்டு வரும் 2000-2001 ஆம் கல்வியாண்டிலும் அடுத்த 2001-2002 ஆம் கல்வியாண்டிலும் அதனைத் தொடர்ந்து வரும் ஆண்டுகளிலும் கணினிப் பாடத் தேர்வுத் தாள்களில், தேவையான முன்னேற்பாடுகளுடன் தயார் செய்து வினா வங்கியை உருவாக்கி, அவ்விவரங்களை ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும், அரசுத் தேர்வுகள் இயக்குநர் தெரிவிப்பார். தகவல் யுகமாக மாறிவரும் இவ்வேளையில், அரசின் முனைப்பான இந்த முயற்சிகள், தமிழக மாணவர்களுக்கு வேலைவாய்ப்புள்ள நல்ல எதிர்காலத்தை உருவாக்குமென அரசு கருதுகிறது. இது தவிர ஒவ்வொரு அரசு மேல்நிலைப் பள்ளியிலும், தலைமை ஆசிரியர் உட்பட ஐந்து ஆசிரியர்களுக்கு கணினி அறிவியலில் பயிற்சி அளிக்கவும் வகை செய்யப்பட்டுள்ளது.

## போதிய ஆசிரியர்களை நியமித்து மாணவர்களின் கற்றல் முறைகளைச் சீர்படச் செய்தல்

### போதிய ஆசிரியர்கள் நியமனம்

2.13 பள்ளிகளில் கற்பித்தல் பணி பாதிக்கப்படாமலிருக்கவும், அனைத்துப் பள்ளிகளிலும் வேலை நாட்களில் தவறாமல் கற்பிக்கவும், பள்ளிகளில் போதிய ஆசிரியர்களை நியமித்தல் மிகவும் தேவையானதாகும். 1999-2000ஆம் ஆண்டில் 2237 ஆசிரியர் காலிப்பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. அரசு உள்ளாட்சி மற்றும் தனியார் உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளி ஆகியவற்றின் ஆசிரியர் பணியிடங்களை நிர்ணயிக்க நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்துரைகளை ஏற்று அரசு நெறிமுறைகளை வகுத்துள்ளது. மேல்நிலைப் பள்ளிகளுக்கு முன்னர் இருந்தது போல் இரண்டு பிரிவு பாடத் திட்டத்திற்கேற்ப கூடுதல் ஆசிரியர் பதவிகள் உருவாக்கப்பட்டுள்ளன. இதே வகையில் உயர்நிலைப் பள்ளிகளிலும் கூடுதல் பதவிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

[2000 ஏப்ரல் 10

**நடுநிலைப் பிரிவுகளில் பட்டதாரி ஆசிரியர்கள்**

2.14 மாணவர்களின் அறிவியல் ஆற்றலை வளர்க்க, பயிற்சி அளிக்க இடைநிலைக் கல்வி ஒரு முக்கியமான நிலையாக உள்ளது. தேசியக் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் வழிகாட்டுதல் முறைகளின்படி இயற்றப்பட்ட பாடத் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து 6, 7, 8 ஆம் வகுப்புகளில் அறிவியல், கணக்குப் பாடங்களை இடைநிலை ஆசிரியர்கள் சிறப்பாக கற்பிப்பது கடினமாக உள்ளது. ஆகையால் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் நடுநிலைப் பிரிவுகளில் இப்பாடங்களுக்கு, அறிவியல் மற்றும் கணித பட்டதாரி ஆசிரியர்களைக் கொண்டு படிப்படியாக நிரப்பலாம் என முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இதன் முதற்கட்டமாக, 1999-2000 ஆம் ஆண்டில் 100 இடைநிலை ஆசிரியர் பணியிடங்கள் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களாக நிலை உயர்த்தப்பட்டுள்ளன.

**மேல்நிலைப் பள்ளிக் கல்வி நிலையில் தொழிற்கல்வி**

**தொழிற் கல்வி ஆசிரியர் பணி வரன்முறை**

2.15 மேல்நிலைப் பள்ளி நிலையில் தொழிற் கல்வித் திட்டத்தைச் செயல்படுத்துவதில் தமிழகம் முன்னோடியாகத் திகழ்கிறது. விவசாயம், மனை அறிவியல், வணிகவியல், பொறியியல் மற்றும் தொழில் நுட்பவியல், சுகாதாரம் மற்றும் இதர பாடங்கள் என்ற 6 இனங்களில், 66 பாடப் பிரிவுகள் மேல்நிலைப் பள்ளி நிலையில் தொழிற்கல்வித் திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. மாநிலத்தில், மொத்தமுள்ள 2,943 அரசு மற்றும் அரசு உதவி பெறும் மேல்நிலைப் பள்ளிகளில், 1,389 மேல்நிலைப் பள்ளிகளில் தொழிற் கல்விப் பாடம் கற்பிக்கப்படுகிறது. மேனிலை வகுப்புகளில் பயிலும் 6.94 இலட்சம் மாணவர்களில் 1.09 இலட்சம் மாணவர்கள், அதாவது 15.70 விழுக்காடு மாணவர்கள், தொழிற் கல்வி பாடத்திட்டத்தின் கீழ் பயின்று வருகின்றனர். தொழிற் கல்விப் பாடப் பிரிவுகளில் முழுநேர ஆசிரியர்களாகவும், பகுதிநேர ஆசிரியர்களாகவும் மொத்தம் 3,366 தொழிற் கல்வி ஆசிரியர்கள் பணிபுரிந்து வருகின்றனர். நடப்பாண்டில் முழுநேர தொழிற் கல்வி ஆசிரியர் பணியிடங்களுக்கு தற்காலிக பணிவிதிகள் வெளியிடப்பட்டுள்ளன. இதனால், இதுகாறும் பணி வரன்முறை செய்யப்படாமல் இருந்த 1,990 முழுநேர தொழிற் கல்வி ஆசிரியர்களுக்கு பணி வரன்முறை செய்யப்படும். மேலும், நடப்பாண்டில் 100 மேல்நிலைப் பள்ளிகளில் வேளாண்மைத் தொழிற் கல்விப் பாடப்பிரிவுகளை அறிமுகப்படுத்தி, இதற்கென அரசு 100 தொழிற் கல்வி ஆசிரியர் பணியிடங்களை உருவாக்கியுள்ளது. இப்பணியிடங்கள்



2000 ஏப்ரல் 10]

இவ்வாண்டு ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் தேர்வு செய்யப்பட்டு நிரப்பப்பட உள்ளன.

**பள்ளி நூலக வசதி**

**இணை மான்யத் திட்டம்**

2.16 பள்ளி மாணவர்கள் தங்களது பொது அறிவை வளர்த்துக் கொள்ளவும், பாடத் திட்டம் தொடர்பான தமது அறிவுத் திறமையை மேம்படுத்திக்கொள்ளவும் பள்ளி நூலகம் மிகவும் பயன்தரக்கூடிய ஒன்று. தமிழகத்திலுள்ள அனைத்து உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளிலும் நூலகங்கள் அமைக்கப்பட வேண்டும். இதற்காகும் மொத்த செலவினத்தை அரசே ஏற்பதென்பது இயலாது. மொத்தச் செலவினத்தில் அரசு 50 விழுக்காடும் பொதுமக்கள் பங்குத்தொகையாக 50 விழுக்காடும் என்னும் இணை மான்யத் திட்டத்தின்படி முன்வரும் பள்ளிக்கு ரூ.50,000 மதிப்புள்ள நூலகப் புத்தகங்கள் வாங்கி வழங்கப்படும். முதற்கட்டமாக 1998-99ஆம் ஆண்டில், 200 அரசு உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளுக்கு ஒவ்வொரு பள்ளிக்கும் ரூ.50,000 வீதம் ரூ.100 இலட்சம் செலவில் நூலகப் புத்தகங்கள் வழங்கப்பட்டன. 1999-2000 ஆம் ஆண்டிலும் இதே போன்று 200 பள்ளிகளுக்கு ரூ.100 இலட்சம் மதிப்புள்ள புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளது.

**பெற்றோர்-ஆசிரியர் கழகங்களின் செயற் பாடுகளை முறைப்படுத்துதல்**

**நோக்கங்கள்**

2.17 1975 ஆம் ஆண்டு சங்க விதிகளின்படி பதிவு செய்யப் பெற்ற சங்கங்களாக 1994-95 ஆம் ஆண்டிலிருந்து, பெற்றோர் ஆசிரியர் கழகங்கள் இயங்கி வருகின்றன. பள்ளியின் கல்வித் தரத்தை உயர்த்துவதையே நோக்கமாகக் கொண்டு ஆசிரியர்களும் பெற்றோர்களும் ஒத்துழைப்பதற்கு பெற்றோர் ஆசிரியர் கழகம் ஒரு சிறந்த கட்டமைப்பாக விளங்குகின்றது. இந்த அமைப்பின் நோக்கங்களாவன:

(அ) பள்ளி வயது எய்திய எல்லாக் குழந்தைகளையும் பள்ளியில் சேர்ப்பதற்கு வழி செய்தல்.

(ஆ) படிப்பைத் தொடராமல் பள்ளியை விட்டு இடையில் நின்றுவிடும் குழந்தைகளைப் பள்ளியில் தக்க வைப்பதற்குத் துணையாகும் முயற்சிகளை மேற்கொள்ளுதல்.

[2000 ஏப்ரல் 10

(இ) கல்வித் தரமும் - மாணவர் திறமும் வளர்வதற்குரிய கற்பித்தல்-கற்றல் செயற்பாடுகளின் மேம்பாட்டுக்கு உதவுதல்.

**ஆற்றும் பணிகள்**

2.18 இத்தகைய பெற்றோர்-ஆசிரியர் கழகங்கள் பள்ளி நலன் கருதி பொது மக்களிடமிருந்து பள்ளி வளர்ச்சிப் பணிகளுக்காக நன்கொடை திரட்டும் உரிமை பெற்றவை. பொது மக்களிடமிருந்து அசையும், அசையா சொத்துக்களை நன்கொடையாகப் பெற்று, அடிப்படைத் தேவைகளாகிய கட்டடங்களையும், சுற்றுச் சுவர்களையும் அமைத்துத் தருவதிலும், இதர வசதிகளாகிய மின்சாரம், குடிநீர், கழிப்பிடம் முதலியவற்றை ஏற்படுத்தித் தருவதிலும், ஆய்வகத்திற்காகப் பொருள்கள், நூலகத்திற்கான புத்தகங்கள் வாங்கி வழங்குவதிலும், பெற்றோர் ஆசிரியர் கழகங்கள் முன்னின்று செயலாற்றி வருகின்றன. மருத்துவம், பொறியியல் போன்ற தொழிற் கல்வியில் சேருவதற்கான நுழைவுத் தேர்வு எழுதுவோர்க்கு பயன்தருமாறு இலவசப் பயிற்சி வகுப்புகள், 1996 ஆம் ஆண்டிலிருந்து பெற்றோர் ஆசிரியர் கழகம் நடத்தி வருகிறது. மாணவர்களின் நலனுக்காக மாணவர் கையேடு ஒன்றினை வெளியிட்டு வருகிறது. புதிய பாடத்திட்டத்தின் கீழ் 1999 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்வு எழுதிய பத்தாம் வகுப்பு, பன்னிரண்டாம் வகுப்பு மாணவர்களுக்குப் பயன்படும் வகையில் வினா வங்கி ஏடுகள், தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளியிட்டது. அதேபோன்று, 2000 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்வு எழுதும் மாணவர்களுக்கும், பெற்றோர்-ஆசிரியர் கழகம் இவ்வசதிகளைச் செய்து தந்துள்ளது.

**பள்ளிச் சீரமைப்பு மாநாடுகளை நடத்துதல்**

**பொதுமக்கள் நன்கொடைகள்**

2.19 தமிழகத்திலுள்ள அனைத்து உயர்நிலை/மேல் நிலைப் பள்ளிகளிலும் கல்வி மேம்படுவதற்குத் தேவைப்படும் அடிப்படை வசதிகளான விளையாடுமிடம், கட்டடம், கழிப்பிட வசதி, குடிநீர் வசதி, மின் வசதி, கற்பிக்கும் கருவிகள், விளையாட்டுக் கருவிகள் முதலான தேவைகளைப் பூர்த்தி செய்யப் பள்ளிச் சீரமைப்பு மாநாடு நடத்தும் திட்டம் வழி செய்கிறது. இந்த வசதிகளைப் பூர்த்தி செய்யப் பொதுமக்களிடமிருந்து நன்கொடைகள் பெறப்படுகின்றன. இத்திட்டத்தை முழு ஆர்வத்துடனும், முழு ஈடுபாட்டுடனும் வெற்றிகரமாகச் செயல்படுத்த வேண்டுமென அனைத்துக் கல்வித் துறை அலுவலர்களும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்கள். 1997-98 ஆம் ஆண்டில், 6 மாவட்டங்களில் சீரமைப்பு மாநாடு நடத்தப்பட்டு ரூ.39.68 கோடி



2000 ஏப்ரல் 10]

மதிப்புள்ள சொத்துக்களும், 1998-99 ஆம் ஆண்டில், 5 மாவட்டங்களில் இம்மாநாடு நடத்தப்பட்டு ரூ.46.57 கோடி மதிப்புள்ள சொத்துக்களும், 1999-2000ஆம் ஆண்டில், 4 மாவட்டங்களிலிருந்து ரூ.35.05 கோடி மதிப்புள்ள சொத்துக்களும் கீழ்க்குறிப்பிட்டுள்ளவாறு நன்கொடையாகப் பெறப்பட்டுள்ளன. இதுவரும் ஆண்டுகளிலும் விரிவாகச் செயற்படுத்தப்படும்.

| மாவட்டம் | அசையும் சொத்து | அசையாச் சொத்து | மொத்தம் |
|---|---|---|---|
| | (ரூபாய் கோடியில்) | | |
| ***1997-1998*** | | | |
| மதுரை | 1.92 | 7.41 | 9.33 |
| நீலகிரி | 0.11 | 0.19 | 0.30 |
| கோயம்புத்தூர் | 3.58 | 13.24 | 16.82 |
| இராமநாதபுரம் | 0.96 | 8.31 | 9.27 |
| பெரம்பலூர் | 0.52 | 2.77 | 3.29 |
| புதுக்கோட்டை | 0.11 | 0.56 | 0.67 |
| மொத்தம் | **7.20** | **32.48** | **39.68** |
| ***1998-99*** | | | |
| தஞ்சாவூர் | 1.12 | 5.16 | 6.28 |
| கரூர் | 1.35 | 2.90 | 4.25 |
| திருநெல்வேலி | 2.74 | 12.26 | 15.00 |
| கன்னியாகுமரி | 0.73 | 7.15 | 7.88 |
| தூத்துக்குடி | 1.93 | 11.23 | 13.16 |
| மொத்தம் | **7.87** | **38.70** | **46.57** |
| ***1999-2000*** | | | |
| விருதுநகர் | 1.99 | 6.61 | 8.60 |
| திண்டுக்கல் | 1.97 | 8.16 | 10.13 |
| விழுப்புரம் | 0.45 | 3.80 | 4.25 |
| ஈரோடு | 3.79 | 8.28 | 12.07 |
| மொத்தம் | **8.20** | **26.85** | **35.05** |

### தாழ்த்தப் பட்ட மற்றும் பழங்குடியின மாணவர்களின் கல்வித் தரம் உயர்த்த வழி செய்யும் திட்டங்கள்

#### சிறப்புப் பயிற்சிகள்

2.20 8 முதல்12 ஆம் வகுப்புவரை பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவ மாணவியரின் கல்வியை மேம்படுத்தும் வகையில் சிறப்பு மேற்பார்வைக் கல்வித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பள்ளி வேலை நாட்களில் பள்ளி நேரம் முடிந்த பிறகு, மாலை வேளைகளில் ஆங்கிலம், கணக்கு, அறிவியல் பாடங்களில் சிறப்புப் பயிற்சிகள் தரப்படுகின்றன. இத்திட்டம், தற்போது 625 உயர்நிலைப் பள்ளிகளிலும், 375 மேல்நிலைப் பள்ளிகளிலும் செயல்படுத்தப்படுகிறது. மேலும், வீட்டில் போதுமான வசதிகள் இல்லாத இதர மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்கு உதவுவதற்கென்று பல பள்ளிகளில், பகல் உணவு இடைவேளையின் போதும், மாலை நேரங்களிலும் ஆசிரியர்களால் தனி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. இத்திட்டம், ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் திங்கள் முதல் பிப்ரவரி திங்கள் முடிய மேல்நிலைப் பள்ளிகளில் 8 ஆசிரியர்களாலும், உயர்நிலைப் பள்ளிகளில் 3 ஆசிரியர்களாலும், அந்தந்தப் பள்ளிகளின் தலைமையாசிரியர்களின் மேற்பார்வையில் நடத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கென அரசு 1999-2000ஆம் ஆண்டில் ரூ.16.75 இலட்சம் செலவு செய்துள்ளது. வரும் ஆண்டுகளிலும் இத்திட்டம் முனைப்புடன் செயல்படுத்தப்படும்.

### திறமைமிக்க கிராமப்புற மாணவ, மாணவியர்க்கு ஊக்கப் பரிசுத் தொகை வழங்குதல்

#### கிராமப்புற மாணவர்களுக்கு உதவித் தொகை

2.21 கிராமப்புறங்களில் பயிலும் படிப்புத் திறன் மிக்க மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும், திறன்காண் தேர்வு முறையைத் தமிழக அரசு செயற்படுத்தி வருகிறது. கிராமப் பகுதியில் 8 ஆம் வகுப்புத் தேர்ச்சி பெற்ற மாணவ மாணவியர்க்கு ஆண்டுதோறும் அரசுத் தேர்வு இயக்குநரால், மே திங்களில் திறமைகாண் தேர்வு நடத்தப்படுகிறது. இந்தத் தேர்வின் மூலம் ஒவ்வொரு மாவட்டத்திலும், திறமைமிக்க 50 மாணவர்களும் 50 மாணவியரும் ஆக 100 பேர் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். ஒவ்வொருவருக்கும், 9 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரையில் தொடர்ந்து 4 ஆண்டுகளுக்கு,



ஆண்டுதோறும் ரூ.1,000 வீதம் படிப்பதற்கு உதவித் தொகை வழங்கப்படுகிறது. அரசு இதற்கென ஆண்டுக்கு ரூ.1 கோடி செலவிடுகிறது.

### பள்ளி இறுதித் தேர்வு மற்றும் மேல்நிலைத் தேர்வுகளில் முதல் மூன்று நிலை பெறும் மாணவர்களுக்குச் சலுகை

#### மேல் படிப்புச் செலவை அரசே ஏற்றல்

2.22 மாணவர்களின் படிப்பு ஆர்வத்தை ஊக்குவிக்கும் வகையில் அரசு இப்புதிய திட்டத்தை அறிவித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஆண்டும் பள்ளி இறுதிப் பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்ற முதல் மூன்று மாணாக்கர்களுக்கு மேல்நிலைப் படிப்பு முடிக்கும் வரை ஆகும் செலவை அரசே ஏற்றுக்கொள்ளும். இதே போல் மேல்நிலைக் கல்வி பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற முதல் மூன்று மாணாக்கர்களுக்கு உயர் கல்விக்கான செலவை (மருத்துவம், பொறியியல் முதலான தொழிற்கல்விச் செலவு உட்பட அனைத்தையும்) அரசே ஏற்றுக்கொள்ளும். இத்திட்டம் 1996-97 ஆம் ஆண்டிலிருந்து தமிழக முதல்வர் கலைஞர் அறிவித்தவாறு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. 1997-98 ஆம் ஆண்டு முதல் மாவட்ட அளவிலும் விரிவுபடுத்தப்பட்டு, மாவட்டத்தின் முதல் மூன்று மாணவர்களுக்கும் இச்சலுகைகள் அளிக்கப்பட்டு வருகிறது. 1998-99 ஆம் ஆண்டு 101 மாணவர்களுக்கு கல்லூரிப் படிப்பிற்கும், 125 மாணவர்களுக்கு மேல்நிலைப் பள்ளிப் படிப்பிற்கும் படிப்புதவித் தொகையாக ரூ.18 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. 1999-2000 ஆம் ஆண்டில் 10 ஆம் வகுப்பில் முதல் மூன்று நிலை பெற்ற 119 மாணவ, மாணவியர்களும், 12 ஆம் வகுப்பில் முதல் மூன்று நிலை பெற்ற 101 மாணவ, மாணவியர்களும் இத்திட்டத்தின் மூலம் பயன்பெற்றுள்ளனர். ரூ.22.94 இலட்சம் இத்திட்டத்திற்கெனச் செலவிடப்பட்டுள்ளது.

### வாழ்வொளித் திட்டம்

#### மாணவர் உடல் நலம் காத்தல்

2.23 பள்ளி மாணவ மாணவியர்களின் உடல் நலனை கண்காணிப்பது பெற்றோர், ஆசிரியர் மற்றும் அரசின் தலையாயக் கடமையாகும். சிறு வயதிற் காணப்படும் சில சிறிய மருத்துவ ரீதியாகக் குணப்படுத்தக்கூடிய பாதிப்புகளைக் கண்டறிந்து தக்க தருணத்தில்

[2000 ஏப்ரல் 10

சிகிச்சையளிக்காவிட்டால் இச்சிறிய பாதிப்புகள் தீராத நோய்களாக மாறி வருங்கால தலைமுறையின் உடல்நலத்தைப் பாதிப்பதுடன் அவர்களின் முன்னேற்றத்திற்கும் பெரும் தடையாகவும் மாற வாய்ப்புள்ளது. இதன் முக்கியத்துவத்தைக் கருத்திற்கொண்டு, 1999-2000 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் தமிழகத்திலுள்ள பள்ளிக் குழந்தைகளின் நலம் காக்க, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வாழ்வொளித் திட்டத்தினை அறிவித்தார்கள். இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் பள்ளிகளில் பயிலும் ஒட்டுமொத்த மாணவ, மாணவியரின் உடல் நலம் காத்து, தகுந்த மருத்துவத்தின் மூலம், எதிர்காலச் சந்ததியினர் நலவாழ்வு வாழ உதவ வேண்டும் என்பதேயாகும். குறிப்பாகப் பள்ளிப் பருவத்தில் ஏற்படும் தொண்டைப் புண்கள் சரியாகக் கண்காணித்து சிகிச்சையளிக்காவிட்டால், அதுவே எதிர்காலத்தில் இருதய நோயாக மாறும் தீமையைத் தடுக்கலாம் என்பது மருத்துவ வல்லுநர்களின் கருத்தாகும். இதன் அடிப்படையில் வாழ்வொளித் திட்டத்தினை அனைத்துப் பள்ளிகளிலும் செயல்படுத்த மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையினால் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது.

**நடைமுறைப்படுத்துதல்**

*2.24* இதன்படி வாழ்வொளித் திட்டம், அரசு மற்றும் அரசு உதவி பெறும் அனைத்துப் பள்ளிகளிலும் நடைமுறைப்படுத்தப்பட்டு, தொடர்ந்து செயல்படுத்தப்படுகிறது. வியாழக்கிழமைதோறும் வாழ்வொளித் திட்ட நாளாகக் கடைப்பிடிக்கப்படுகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள பள்ளிகள் மற்றும் மாணவர்களின் எண்ணிக்கையினைக் கணக்கெடுத்து, அவற்றைப் பகுத்து மாவட்டத்தில் பரவலாக உள்ள ஒவ்வொரு அரசு ஆரம்பச் சுகாதார நிலையத்துடனும் இணைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வியாழக்கிழமைகளிலும் சிகிச்சையளிப்பதற்காக ஒரு மருத்துவருக்கு 200-250 மாணவர்கள் என்ற விகிதத்தில் ஒதுக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு மாணவருக்கும் பரிசோதனை குறித்த சுகாதார அட்டை வழங்கப்பட்டு பதிவு செய்யப்படுகிறது. இவ்வட்டையில் 14 வகையான நோயின் தன்மை குறிக்கப்பட்டுள்ளது. தேவைப்படும் மாணவர்களுக்குத் தேவையான மேல் சிகிச்சை அளிக்கப் பரிந்துரை செய்து, உரிய மேற் சிகிச்சை அளிக்கப்படுகிறது. வாழ்வொளித் திட்டத்தினைச் சிறப்பாகச் செயல்படுத்த ஒவ்வொரு பள்ளியிலும் இப்பணிக்காகக் குறைந்தபட்சம் இரண்டு ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட்டு பயிற்சி அளிக்கப்படுகிறது. இதன் தொடர்ச்சியாக இத்திட்டத்தில் மாணவ சுகாதார தொண்டர்களாக (Health guides) மேல் வகுப்பு மாணவர்களை ஈடுபடுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



2000 ஏப்ரல் 10]

**மாணவர்கட்கு எளிதாகச் சான்றிதழ்கள் கிடைக்கச் செய்யும் திட்டம்**

*2.25* மாணவ மாணவியர் பள்ளியில் படித்து முடித்த பின்னர், தங்களது மேல் படிப்பிற்காகவும், வேலைவாய்ப்பிற்காகவும், சாதிச் சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ் மற்றும் குடும்ப வருமானச் சான்றிதழ் இவைகளைப் பெற அரசு அலுவலகங்களுக்குச் சென்று பல நாள் காத்திருக்காமல் இருப்பதற்காகவும், இதற்கான நடைமுறைகளைச் சீரமைக்கும் நோக்குடனும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 1999-2000 ஆம் ஆண்டில் சான்றிதழ்கள் வழங்கும் புதிய திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் சம்பந்தப்பட்டப் பள்ளிகளின் மூலம் பிப்ரவரி, 2000 முடிய சான்றிதழ் கேட்டு அனுப்பப்பட்டுள்ள விண்ணப்பங்கள், வழங்கப்பட்டுள்ள சான்றிதழ்கள் பற்றிய விவரங்கள் கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ளன:

| வகுப்பு | மாணவர்களின் எண்ணிக்கை | சான்றிதழ் | அனுப்பப்பட்டுள்ள விண்ணப்பங்கள் | வழங்கப்பட்டுள்ள சான்றிதழ்கள் |
|---|---|---|---|---|
| 12-ம் வகுப்பு | 280499 | சாதிச் சான்று | 176914 | 162776 |
| | | வருமானச் சான்று | 163724 | 133352 |
| | | இருப்பிடச் சான்று | 166400 | 143297 |
| 10-ம் வகுப்பு | 514876 | சாதிச் சான்று | 367210 | 337367 |
| | | வருமானச் சான்று | 336700 | 281583 |
| | | இருப்பிடச் சான்று | 345477 | 299219 |

மாணவ, மாணவியர் பள்ளியை விட்டு விலகும் ஏப்ரல், 2000-க்குள் சான்றிதழ் கோரிய அனைவருக்கும் முழுமையாக வழங்கப்பட்டுவிடும். 2000-2001 ஆம் ஆண்டிலும் பள்ளிப் படிப்பை முடித்துச் செல்லும் மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கும் திட்டம் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படும்.

**சாரணர் இயக்கம்**

2.26 தமிழ்நாட்டில் 4,042 பள்ளிகளில் சாரணர் இயக்கம் செயல்பட்டு வருகிறது. இதில், 82,600 சாரணர்களும், 48,029 சாரணியர்களும் சாரணர் பயிற்சி பெறுவதுடன் நாட்டின் சமூக நலப் பணிகளிலும் பங்கேற்றுத் தொண்டாற்றி வருகின்றனர். திறமையான 2000 சாரண, சாரணியர்களுக்கு, 1998-99 ஆம் ஆண்டு முதல் "இராஜ்ய புரஸ்கார்" விருது வழங்கப்பட்டு வருகிறது. இதற்கென அரசு ஆண்டுதோறும் ரூ.5 இலட்சம் செலவிடுகிறது.

2.27. 1999-2000ஆம் ஆண்டில் சாரண, சாரணியர் இயக்கத்தின் பொன்விழா ஆண்டுக் கொண்டாட்டம் (ஜம்பூரி) சென்னையில் 27-1-2000 முதல் 1-2-2000 முடிய மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இதற்காக மாநில அரசு ரூ.15 இலட்சம் உதவித் தொகை வழங்க உள்ளது. இதில் 15,000 சாரண, சாரணியர் கலந்து கொண்டனர். இந்தியாவைத் தவிர, ஸ்ரீலங்கா, சிங்கப்பூர், பங்களாதேஷ், நேபாளம், பூட்டான், மியன்மார் ஆகிய நாடுகளிலிருந்தும் சாரண, சாரணியர் கலந்து கொண்டனர். விழாவின் இறுதி நாளன்று, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் தலைமையேற்று, சிறப்பாகச் செயல்பட்ட சாரண, சாரணியருக்குப் பரிசுகளை வழங்கினார்.

**தேசிய மாணவர் படை**

2.28 தமிழ்நாட்டில் 692 பள்ளிகளில் தேசிய மாணவர் படை இயக்கம் செயல்பட்டு வருகிறது. இதில் 63,663 மாணவர்களும், 5,050 மாணவிகளும் பயிற்சி பெற்று வருகின்றனர். 1999 ஆம் ஆண்டு, ஜனவரித் திங்கள், 26 ஆம் நாள் டெல்லியில் நடைபெற்ற குடியரசு நாள் அணி வகுப்பில் தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவர் முதல் பரிசு பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

**இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம்**

2.29 இந்திய இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம், 1920 ஆம் ஆண்டு நம் நாட்டில் தொடங்கப்பட்ட ஓர் அமைப்பாகும். இச்சங்கம், சுமார் 2,800 பள்ளிகளில் நன்முறையில் இயங்கி வருகிறது. இதில், 2,80,000



மாணவர்கள் ஈடுபட்டுள்ளனர். இச்சங்கம், மனித நேயத்தைப் பாதுகாக்கும் பொருட்டு பொதுச் சேவைகளில் ஈடுபட்டு வருகிறது. இரத்த வங்கிகள் ஏற்படுத்தி, அதன் மூலம் தானாக முன்வரும் நபர்களிடமிருந்து இரத்தம் எடுக்கப்பட்டு, இரத்த வங்கிகளில் சேமிக்கப்படுகிறது. இதன் மூலம் நோயால் அவதிப்படும் மிகவும் நலிவுற்ற நிலையிலுள்ள குழந்தைகளுக்கும், விபத்துகளில் பாதிக்கப்படும் பொதுமக்களுக்கும் உதவி செய்வதில் இச்சங்கம் முக்கியப் பங்கு வகிக்கிறது.

**நாட்டு நலப்பணித் திட்டம்**

2.30 உத்தமர் காந்தியின் நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்ட 1969 ஆம் ஆண்டு, செப்டம்பர் திங்கள், 24 ஆம் நாள் முதலாக நாட்டு நலப்பணித் திட்டம் தொடங்கப்பட்டது. ஆனால், தமிழ்நாட்டில் இத்திட்டம், 1980-81 ஆம் ஆண்டில்தான் மேல்நிலைப் பள்ளிகளில் துவங்கப்பட்டது. முதன் முதலில் 10,000 மாணவர்களைக் கொண்டு 200 மேல்நிலைப் பள்ளிகளில் தொடங்கப்பட்ட இத்திட்டம் தற்போது, 1,170 மேல்நிலைப் பள்ளிகளில் 58,500 மாணவர்களுடன் செயல்பட்டு வருகிறது. நாட்டு நலப்பணித் திட்டத்திற்கு ஆகும் செலவினை, 7:5 என்ற வீதத்தில் மத்திய மாநில அரசுகள் மேற்கொள்கின்றன.

**மகளிர் கல்வி**

**கல்வியில் முன்னேற்றம்**

2.31 மகளிர் கல்வி கற்பதை ஊக்கப்படுத்துவதற்காக அரசு, பல்வகை நலத்திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. மகளிர் உரிமை வாழ்வுக்கு இன்றியமையாத சம உரிமையும், சமூக நீதியும் மகளிருக்குக் கல்வி அளிப்பதன் மூலமே எய்தலாகும். மகளிருக்கான நலத் திட்டங்களைச் செயல்படுத்துவதால் பெண்கள் கல்வி பெறுவதில் பெரிய முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. 30-9-1999 நாள் நிலவரப்படி 72.85 இலட்சம் மொத்த பள்ளி வயது பெண் குழந்தைகளில், 55.94 இலட்சம் பெண்கள் கல்வி கற்று வருகின்றனர். பள்ளிகளில் மகளிர் சேர்க்கை 76.80 விழுக்காடாகும். பல்வேறு மகளிர் கல்வி நலத் திட்டங்களின் பயனாக பெண்களின் கல்வித் திறனிலும் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இதன் விளைவாக, 1999 மார்ச் திங்களில் நடைபெற்ற பள்ளியிறுதி மற்றும் மேல்நிலை வகுப்புகளுக்கான பொதுத் தேர்வில், மாணவர்களைக்காட்டிலும் மாணவிகள் தேர்ச்சி விழுக்காட்டில் நல்ல முன்னேற்றம் பெற்றுள்ளனர். இது பெண் கல்வி முன்னேற்றத்திற்கு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.

| | தேர்வு விழுக்காடு | |
|---|---|---|
| | மாணவர்கள் | மாணவிகள் |
| பள்ளி இறுதி வகுப்புத் தேர்வு (பத்தாம் வகுப்பு) | 63.66 | 72.47 |
| மேல்நிலை வகுப்புத் தேர்வு (+2 வகுப்பு) | 74.32 | 84.17 |

**தாழ்த்தப்பட்ட/பழங்குடியினர் பெண் கல்வி**

2.32 அதிக எண்ணிக்கையில் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி இன மாணவர்களைச் சேர்த்துப் பயிலச் செய்யவும், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி இனப் பெண்கள் கல்வி கற்கச் செய்யவும் பணியாற்றும் ஆசிரியர்களை ஊக்குவிக்கும் வகையில் 6, 7, 8 மற்றும் 9, 10 ஆம் வகுப்புக்களில் (முறையே 11-14 மற்றும் 14-16 வயதுப் பிரிவுகளில்) தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மாணவர்களை அதிக அளவில் பள்ளிகளில் சேர்த்துத் தொடர்ந்து படிக்கவைக்கும் முதல் 3 தலைமையாசிரியர்களுக்கு ஊக்கப் பரிசுத் தொகை வழங்கப்படுகிறது. அந்த ஊக்கத் தொகை விவரம்.

| | | வகுப்புகள் | |
|---|---|---|---|
| | | 6 - 8 | 9 - 10 |
| முதல் பரிசு | - | ரூ.500/- | ரூ.500/- |
| இரண்டாம் பரிசு | - | ரூ.300/- | ரூ.300/- |
| மூன்றாம் பரிசு | - | ரூ.200/- | ரூ.200/- |

**உடற்பயிற்சிக் கல்வி**

2.33 6 ஆம் வகுப்பிலிருந்து 12 ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கு உடற் பயிற்சிக் கல்வியும் வழங்கப்படுகிறது. மேல்நிலைப் பள்ளிகளில் 11, 12 ஆம் வகுப்புகளில் உடற்பயிற்சிக் கல்வி போதிக்க உடற்பயிற்சியில் முதுகலைப் படிப்பில் தேர்ச்சி பெற்ற உடற்கல்வி இயக்குநர்களையே நியமிக்க வேண்டும். இத்திட்டத்தின் கீழ் மொத்தமுள்ள 868 பணியிடங்களில், இதுநாள் வரை 744 நிலை-2 உடற்கல்வி இயக்குநர் பணியிடங்கள் நிலை-1 பணியிடங்களாக உயர்த்தப்பட்டுள்ளன.





**விளையாட்டுப் போட்டிகள்**

2.34 பள்ளி மாணவர்களிடையே விளையாட்டிலும், போட்டி விளையாட்டுகளிலும் ஆர்வத்தைத் தூண்டும் வகையிலும், அவற்றில் திறமையானவர்களை உரிய பருவத்தில் கண்டறியும் பொருட்டும், பல்வேறு நிலைகளில் விளையாட்டுப் போட்டிகள் நடத்துவது அவசியமாகும். இதனைக் கருத்திற்கொண்டு பள்ளிகளில் விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கான விரிவான திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. பள்ளிகளில் விளையாட்டு மற்றும் போட்டிகளை மேம்படுத்த மத்திய அரசு 1-4-1998 முதல் நிதி உதவி வழங்க முன்வந்துள்ளது. வட்டார, மாவட்ட மற்றும் மாநில அளவில் மூன்று நிலைகளில் இப்போட்டிகள் நடத்தப்படும். இதற்காக 1999-2000-ம் ஆண்டில் ரூ.24.50 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. மாநில அளவிலான பாரதியார் விளையாட்டுப் போட்டிகள் 12-1-2000 முதல் 14-1-2000 வரை கோயமுத்தூரில் நடத்தி முடிக்கப்பட்டுள்ளது. 42-வது மாநில அளவிலான குடியரசு நாள் விளையாட்டுப் போட்டிகள் சேலம் மாவட்டத்தில் 10-2-2000 முதல் 14-2-2000 முடிய 5 நாட்கள் நடத்தி முடிக்கப்பட்டுள்ளது.

**கட்டமைப்பு வசதிகள்**

2.35 கடந்த 4 ஆண்டுகளில் இடைநிலை/மேல்நிலைக் கல்விக்கு ஏற்படுத்தித் தரப்பட்டுள்ள கட்டமைப்பு வசதிகள் பின்வருமாறு:

| | | 1996-97 | 1997-98 | 1998-99 | 1999-2000 | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| (அ) | நடுநிலைப்பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப் பட்டவை | 99 | 71 | 80 | 80 | 330 |
| (ஆ) | உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்பட்டவை | 81 | 80 | 41 | 51 | 253 |

[2000 ஏப்ரல் 10

| | | 1996 -97 | 1997 -98 | 1998 -99 | 1999-2000 | மொத் தம் |
|---|---|---|---|---|---|---|
| (இ) | கூடுதல் வகுப்பறைகள் கட்டப்பட்ட பள்ளிகள் | 138 | 299 | 420 | 734* | 1591 |
| | அனுமதிக்கப்பட்ட தொகை (ரூ. கோடியில்) | 5.48 | 10.02 | 24.99 | .. | 40.49 |
| (ஈ) | கழிவறை வசதி ஏற்படுத்தித் தரப்பட்ட பள்ளிகள் | .. | 200 | 200 | .. | 400 |
| | அனுமதிக்கப்பட்ட தொகை (ரூ. கோடியில்) | .. | 1.40 | 1.60 | .. | 3.00 |
| (உ) | அறிவியல் ஆய்வகக் கட்டடங்கள் ஏற்படுத்தித் தரப்பட்ட பள்ளிகள் | 170 | 119 | 373 | .. | 662 |
| | அனுமதிக்கப்பட்ட தொகை (ரூ. கோடியில்) | 3.49 | 10.00 | 25.60 | .. | 39.09 |
| (ஊ) | அறிவியல் கருவிகள் வழங்கப்பட்ட பள்ளிகள் | 250 | 714 | 240 | 240 | 1444 |
| | அனுமதிக்கப்பட்ட தொகை (ரூ. கோடியில்) | 1.31 | 3.37 | 1.00 | 1.00 | 6.68 |
| (எ) | உயர்நிலை, மேல் நிலைப் பள்ளிகளில் நிரப்பப்பட்ட ஆசிரியர் காலிப் பணியிடங்கள்-- | | | | | |
| | 1. இடைநிலை ஆசிரியர் | 2260 | 1158 | 1538 | 1251 | 6207 |
| | 2. பட்டதாரி ஆசிரியர் | 638 | 615 | 1234 | 351 | 2838 |
| | 3. மொழி ஆசிரியர் | 104 | 204 | 102 | 215 | 625 |



2000 ஏப்ரல் 10]

| | 1996 -97 | 1997 -98 | 1998 -99 | 1999-2000 | மொத் தம் |
|---|---|---|---|---|---|
| 4. முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் | 713 | 753 | 810 | 420 | 2696 |
| 5. உடற்கல்வி ஆசிரியர் | 648 | 682 | .. | .. | 1330 |
| 6. கலை ஆசிரியர் | 499 | 108 | .. | .. | 607 |
| **மொத்தம்** | **4862** | **3520** | **3684** | **2237** | **14303** |

(*) ஊரக வளர்ச்சித் துறை மூலம் கட்டப்பட்டு வருகின்றன.

## 3. ஆசிரியர் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி

3.1 மாணவர்கட்குத் தரமான கல்வி வழங்குவதற்கு ஏதுவாக, ஆசிரியர் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககமும், 29 மாவட்டங்களிலுள்ள மாவட்ட ஆசிரியர் கல்விப் பயிற்சி நிறுவனங்களும் இணைந்து, ஆசிரியர் பயிற்சியாளர்கட்குக் கல்வி மற்றும் கற்பித்தல் சார்ந்த அடிப்படையான பயிற்சியை அளிக்கின்றன.

### குறிக்கோள்கள்

3.2 இவ்வியக்ககத்தின் நோக்கங்களை, ஆசிரியர் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி என்ற மூன்று கூறுகளாகப் பிரிக்கலாம்.

(அ) மாவட்ட ஆசிரியர் கல்விப் பயிற்சி நிறுவனங்களில் பயிலும் பயிற்சி ஆசிரியர்களின் திறன்களையும், தொழில் திறமையையும் மேம்படுத்தி ஆசிரியர் கல்விப் பணித் திட்டத்தை, ஏற்றுக் கொள்ளப்பட்ட தேசிய நிலைக்கு உயர்த்துதல்;

(ஆ) கல்வித் தர மேம்பாட்டிற்கான பாடப் புத்தகங்கள், கையேடுகள், பயிற்சியேடுகள், ஒலி, ஒளி நாடாக்கள் உள்ளடக்கிய கற்பித்தல் கருவிகள் ஆகிய கற்றல்—கற்பித்தல் கருவிகளைத் தயாரித்தல்:

(இ) அடுத்த 3 ஆண்டுகளுக்குள் அனைத்து ஆசிரியர்களுக்கும் புத்தறிவுப் பயிற்சி அளித்தல்;

[2000 ஏப்ரல் 10

(ஈ) தொடக்க மற்றும் இடைநிலைக் கல்வி வழங்கும் பல்வேறு பகுதிகளில் ஆய்வுகள் மேற்கொள்ளுதல், அனைத்து நிலை ஆசிரியர்களிடமும் ஆய்வு நோக்கை ஊக்குவித்தல்;

(உ) நூலறிவை நடைமுறையில் தெளியும் பொருட்டு செயலாராய்ச்சியில் கண்டறிந்தவற்றைப் பரப்புதல்.

**நிர்வாகத் திறன்கள்**

3.3 மேற்காணும் குறிக்கோள்களை அடையக் கீழ்க்கண்ட நிர்வாகத் திறன்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

தேசிய ஆசிரியர் கல்வி அமைப்புடனும், பல்கலைக்கழகத் துறைகளுடனும் கலந்தாலோசித்து எல்லா நிலையிலும் . ஆசிரியர் பயிற்சிக் கல்வியின் பாடத் திட்டத்தைச் சீர்செய்து திருத்தி அமைத்தல்.

படிப்படியான நிலைகளில் எல்லா வகுப்புகளுக்கும் பாடப் புத்தகங்களும், கையேடுகளும், பயிற்சியேடும் தயாரித்தல்.

கல்வித் தொலைக்காட்சி நிலையத்தின் மூலம் பாடங்களைத் தெளிவிக்கும் ஒலி-ஒளி நாடாக்கள் தயாரித்தல்.

உடல்நலக் கல்வி, மக்கள்தொகைக் கல்வி, உயிர்கொல்லி நோய்க் (எய்ட்ஸ்) கல்வி, மழலையர் கல்வி, நிறுவனத் திட்டமிடுதல் ஆகியவற்றிற்கான கற்றல் ஆதாரப் பொருட்களைத் தயாரித்தல்.

தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளி ஆசிரியர்களுக்குப் பாடப்பொருள், கற்பித்தல் முறை மற்றும் பொதுத் தலைப்புகளில் பணியிடைப் பயிற்சி அளித்தல்.

பாடப் புத்தகங்கள் மற்ற கற்றல்-கற்பித்தல் கருவிகள் ஆகியவற்றின் பயன்பாடு குறித்து ஆய்தல்.

பள்ளி மற்றும் வகுப்பறை சூழல் குறித்த செயல்முறை ஆய்வுகள் மேற்கொள்ள ஆசிரியர்களையும், மாவட்ட ஆசிரியர் கல்விப் பயிற்சி நிறுவனங்களையும் ஊக்குவித்தல்.

ஆய்வின் முடிவுகளைப் பரப்ப ஆசிரியர் கல்வி, ஆராய்ச்சி, பயிற்சி இயக்ககம் மற்றும் மாவட்ட ஆசிரியர் கல்விப் பயிற்சி நிறுவனங்களில் செய்தி மலர்கள் வெளியிடுதல்.



2000 ஏப்ரல் 10]

பயிற்சி குறித்த பல்வகைத் திட்டமிடுதலுக்கு வசதியாக மாவட்டங்களில் புள்ளி விவர மையங்கள் பராமரித்தல்.

**புதிய மாவட்ட ஆசிரியர் கல்விப் பயிற்சி நிறுவனங்களுக்குக் கட்டடங்கள்**

3.4 புதிதாக மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ள கீழ்குறிப்பிட்டுள்ள 8 மாவட்டங்களில் மாவட்ட ஆசிரியர் கல்விப் பயிற்சி நிறுவனங்களுக்கென ரூ.12 கோடி செலவில் புதிய கட்டடங்கள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

(1) நாகப்பட்டினம் (குருக்கத்தி)

(2) விழுப்புரம் (ஜி. அரியூர்)

(3) திருச்சிராப்பள்ளி (லால்குடி)

(4) சேலம் (உத்தமசோழபுரம்)

(5) திருவாரூர் (மன்னார்குடி)

(6) தேனி (உத்தமபாளையம்)

(7) காஞ்சிபுரம் (களியாம்பூண்டி)

(8) பெரம்பலூர் (கீழப்பழூர்)

**அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள்**

**கட்டடங்கள்**

3.5 மாவட்ட ஆசிரியர் கல்விப் பயிற்சி நிறுவனங்களுடன், திருநெல்வேலி மாவட்டத்தில் சமூகரெங்கபுரம், கரூர் மாவட்டத்தில் சின்னதாராபுரம், சேலம் மாவட்டத்தில் கெங்கவல்லி, விருதுநகர் மாவட்டத்தில் ஜோகில்பட்டி, வேலூர் மாவட்டத்தில் இராணிப்பேட்டை, சென்னையில் இராயப்பேட்டை, தஞ்சாவூர், கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் 8 அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் இயங்கி வருகின்றன. இவற்றில் ஒவ்வொன்றிலும் ஆண்டுதோறும் 80 மாணவ/மாணவியர் பயிற்சி பெற்று வருகின்றனர். இந்நிறுவனங்கள் அனைத்திலும் உள்ள கட்டடங்கள் பழமை வாய்ந்தவை. எனவே, இவற்றை ஆசிரியர் பயிற்சிக்கான தேசியக் குழு நிர்ணயித்துள்ள விதிமுறைகளின்படி புதுப்பித்து கூடுதல் கட்டடங்கள் கட்டுவதற்குச் சுமார் ரூ.300.49 இலட்சம் செலவில் திட்டமிடப்பட்டுள்ளது. இதில் முன்னுரிமையின் அடிப்படையில் இராயப்பேட்டை,

இராணிப்பேட்டை, கங்கவல்லி மற்றும் சின்ன தாராபுரம் ஆகிய இடங்களிலுள்ள அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் ரூ. 150 இலட்சம் செலவில் கூடுதல் கட்டட வசதிகளை உருவாக்கித்தர முடிவு செய்யப்பட்டு, 2000-2001 ஆம் ஆண்டில் ரூ.60 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**தொடக்கக் கல்வி ஆசிரியர்களுக்கானப் பணியிடைப் பயிற்சி**

**பணியிடைப் பயிற்சி**

*3.6* தமிழ்நாடு மாநில அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் மூலம் ஒன்றாம் வகுப்புப் பாடநூல்கள் மாற்றியமைக்கப்பட்டு வருகின்றன. வரும் கல்வி ஆண்டில் இப்புதிய புத்தகங்களைப் பயன்படுத்தி தமிழ்நாட்டிலுள்ள அனைத்து முதல் வகுப்பு ஆசிரியர்களும் கற்பிப்பார்கள். இப்புதிய நூல்களைக் கையாண்டு, மாணவர்களுக்கு மகிழ்ச்சிகரமாகக் கற்பிப்பது எவ்வாறு என்பதில் அனைத்து முதல் வகுப்பு ஆசிரியர்களுக்கும் 2000-2001 ஆம் கல்வி ஆண்டில் பயிற்சி அளிக்கப்படும். ஒரே நேரத்தில் மாவட்டத்திற்கு 500 ஆசிரியர்கள் வீதம் 29 மாவட்டங்களில் 14,500 ஆசிரியர்களுக்கு இப்பயிற்சி அளிக்கப்படும்.

**தொடக்கக் கல்வி ஆசிரியர்களுக்கான சிறப்புப் புத்தறிவுப் பயிற்சி**

**புத்தறிவுப் பயிற்சி**

*3.7* சிறப்புப் புத்தறிவுப் பயிற்சியின் முக்கிய நோக்கம், தேசியக் கல்விக் கொள்கையில் கூறப்பட்டவாறு குறைந்தபட்சக் கல்வித் திறன் பெறச் செய்ய அடைய வேண்டிய திறன்களை அறிமுகப்படுத்துவதாகும். 1993-94 ஆம் ஆண்டு முதல் இத்திட்டத்தின் மூலம் முதலாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரையிலுமான தமிழகத்திலுள்ள அனைத்து இடைநிலை ஆசிரியர்களுக்கும், துவக்கப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கும் பயிற்சிகள் அளிக்கப்பட்டு விட்டன. இத்திட்டத்தின்கீழ் ஆறாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை பாடம் நடத்தும் ஆசிரியர்களுக்கும் பயிற்சி அளிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**வட்டார வள ஆதார மையங்கள்**

**வட்டார வள ஆதார மையங்கள்**

*3.8* தேசிய கல்விக் கொள்கையின்படி அனைவருக்கும் தொடக்கக் கல்வி அளிக்க வலியுறுத்தப்படுகிறது. பள்ளி வயதைக் கடந்த குழந்தைகள், வேலை செய்யும் குழந்தைகள், நலிவுற்ற வகுப்பைச் சார்ந்த குழந்தைகள்,



பள்ளிப்படிப்பை இடையில் நிறுத்திய குழந்தைகள் மற்றும் எல்லா பள்ளி வயது குழந்தைகளும் 2000 ஆம் ஆண்டுக்குள் முறையான பள்ளித் திட்டத்தில் சேர்ந்து கல்வி பெறச் செய்வது என்பது மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டத்தின் நோக்கமாகும். மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டம் செயல்பட்டு வரும் 7 மாவட்டங்களில் வட்டார வள ஆதார மையங்கள் (Block Resource Centre) ஏற்படுத்தப்பட்டு, அம்மையங்களுடன் மாவட்ட ஆசிரியர் கல்விப் பயிற்சி நிறுவனங்கள் ஒருங்கிணைந்து, அனைவருக்கும் கட்டாயத் தொடக்கக் கல்வி என்ற இலக்கினை அடைய ஒரு இணைப்புப் பாலமாக செயல்பட்டு வருகின்றது. இதே போன்று மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டம் செயல்படுத்தப்படாத 22 மாவட்டங்களில் வட்டார வள ஆதார மையங்களை ஏற்படுத்த அரசு முனைந்துள்ளது. அனைத்து மாவட்டங்களிலும் இதனைப் படிப்படியாகச் செயல்படுத்தலாமெனக் கருதி, 2000-2001 ஆம் ஆண்டில் முன்னோடியாக தேனி மாவட்டத்தில் 8 மையங்களும், திருவாரூர் மாவட்டத்தில் 10 மையங்களும், சிவகங்கை மாவட்டத்தில் 12 மையங்களும் ஆக மொத்தம் 30 வட்டார வள ஆதார மையங்களை ரூ.150 இலட்சம் செலவில் அமைத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**ஆசிரியர் பட்டயப் பயிற்சிக்கான புதிய கல்வித் திட்டம்**

**பட்டயப் பயிற்சிப் பாடத் திட்டம் மறு ஆய்வு**

*3.9* *1994-95*-ல் தொடக்கநிலை/இடைநிலை/மேல்நிலைப் பள்ளி மாணாக்கர்களுக்கான கலைத் திட்டமும், புதிய பாடத் திட்டமும், குறைந்தபட்ச கற்றல் மற்றும் வாழ்க்கைக்குத் தேவையான திறன் விளக்கமும் உள்ளடக்கிய பாடப் புத்தகங்கள் எழுதி வழங்கப்பட்டுள்ளன. ஆனால், 1990-ல் எழுதிய ஆசிரியர் கல்விக் கலைத் திட்டம் இன்னும் பயன்படுத்தப்படுகிறது. இது மிகவும் பழமையானது. இக்காலத்திற்குத் தேவையான குறைந்தபட்ச கற்றல் திறன் உள்ளிட்ட மற்றும் வாழ்க்கைக்குத் தேவையான திறன்களை வளர்க்கும் ஆசிரியர் பட்டயப் பயிற்சிக் கல்வி என்பது மிகவும் தேவையான ஒன்றாகும். இதன் அடிப்படையில் தேசிய ஆசிரியர் கல்விக் குழுமம் தயாரித்த திறன் அடிப்படையிலான கலைத் திட்டத்தினைப் பின்பற்றி ஆசிரியர் கல்விக் கலைத் திட்டம் ஒன்றைத் தயாரிக்கக் கருதப்பட்டு, இதற்கென, ஆசிரியர் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநர் தலைமையிலான 12 பேர் கொண்ட வல்லுநர் குழு ஒன்று அமைக்கப்பட்டது. இக்குழு தெரிந்தெடுக்கப்பட்ட பாடக் குழு

உறுப்பினர்களின் துணை கொண்டு பல்வேறு கருத்துப்பட்டறைகள் நடத்திக் கண்ட திறன்கள் அடிப்படையில், ஆசிரியர்கள் தங்களை ஈடுபடுத்தி பாடம் நடத்துவதற்குரிய ஆசிரியர் கல்விக் கலைத் திட்டத்தைத் தயாரித்துள்ளது. முதன் முறையாக, பணிமுன் ஆசிரியர் பயிற்சிக்குரிய, திருத்தியமைக்கப்பட்ட திறன் அடிப்படையிலான கலைத் திட்டம் நூல் வடிவில் தயாரிக்க திட்டமிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு பாடத்திலும் வல்லுநர்கள் மற்றும் நூலாசிரியர்கள் தெரிந்தெடுக்கப்பட்டு திறன் அடிப்படையிலான கலைத் திட்டத்தைத் தயாரிக்கச் செயல்படுத்தப்படுவர். இக்கலைத் திட்டம் ஒவ்வொரு ஆசிரியர் பயிற்சிப் பள்ளியிலும், மாவட்ட ஆசிரியர் கல்விப் பயிற்சி நிறுவனத்திலும் கள ஆய்வு செய்யப்பட்டு, வல்லுநர்களின் ஒப்புதலுடன் இறுதியாக்கப்படும்.

**புதிய பாடத் திட்டம்**

*3.10* ஆசிரியர் கல்விப் பட்டயப் பயிற்சிக்காக தயாரிக்கப்படவுள்ள புதிய பாடத் திட்டத்தில், கைத்தொழில், உடற்பயிற்சிக் கல்வி, யோகாசனம், ஊனமுற்றோருக்கு ஒருங்கிணைந்த கல்வி ஆகியவற்றையும் சேர்ப்பதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது. இதே போன்று, இடைநிலை ஆசிரியர் பயிற்சியாளர்களுக்கும், பட்டதாரி ஆசிரியர் பயிற்சியாளர்களுக்கும் கணினிக் கல்விப் பயிற்சித் திட்டத்தைப் பாடத் திட்டத்தில் சேர்க்கலாம் எனக் கருதப்பட்டுள்ளது.

**தகவல் தொழில் நுட்பத்தில் பயிற்சி**

*3.11* மேல்நிலைப் பள்ளிகளில் தகவல் தொழில்நுட்பம் குறித்த பாடத் திட்டத்தை அரசு அறிமுகப்படுத்தியுள்ளதால் இதில் ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டியுள்ளது. கல்வி பற்றிய தகவல் தொழில்நுட்ப மையப் பிரிவு ஒன்று ஒவ்வொரு மாவட்ட ஆசிரியர் கல்விப் பயிற்சி நிறுவனத்திலும் இயங்கி வருகிறது. இதற்கென ஆசிரியர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். ஆனால் தகவல் தொழில் நுட்பத்தில் போதிய பயிற்சி இல்லாததால் இப்பிரிவு சரிவரச் செயல்படவில்லை. எனவே மாவட்ட ஆசிரியர் கல்விப் பயிற்சி நிறுவனத்தில் கல்வித் தகவல் தொழில்நுட்பப் பிரிவில் பணிபுரியும் 40 கல்விப் பணியாளர்களுக்கும், அண்ணா பல்கலைக் கழகம் மூலம் கடந்த ஜனவரித் திங்களில் இரு வார கால அளவில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.



**ஆதிதிராவிட/பழங்கு[illegible] மாணவியர்க்கு சிறப்பு வகுப்புகள்**

*3.12* இடைநிலை [illegible] [illegible]களுக்கு கடந்த ஆண்டுகளில் ஆதி திராவிட/பழங்குடி [illegible] பயிற்சித் தகுதி உடையவர்கள் தேவையான அளவி[illegible] [illegible]தால், 17 மாவட்டக் கல்விப் பயிற்சி நிறுவனங்கள் [illegible] [illegible]லும் 50 ஆதிதிராவிட/பழங்குடி இனத்தவர்க்கு (25 [illegible] [illegible]) 1997-98 ஆம் ஆண்டு தனியாகப் பயிற்சி வகுப்பு தொட[illegible]து. இதனால் கூடுதலாக ஆண்டுக்கு 850 ஆதிதிராவிட/பழங்குடி [illegible] மாணவியர் பயன் பெற்று வருகின்றனர். இச்சிறப்புப் பயிற்சித் தி[illegible] தற்போதும் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது. சிறுபான்மை [illegible] இடைநிலை ஆசிரியர் பயிற்சிக்கான சேர்க்கை இடங்களும் [illegible] [illegible] உயர்த்தப்பட்டு சிறுபான்மை மொழிப் [illegible] [illegible] வருகின்றன.

**அங்கீகாரம் இரத்து [illegible] பயிற்சிப் பள்ளிகளில் பயின்று பாதிக்கப்பட்ட மாண[illegible]ருக்கு நிவாரணம்**

*3.13* அங்கீகாரம் இரத்து [illegible]யப்பட்ட பயிற்சிப் பள்ளிகளில் பயின்று பாதிக்கப்பட்ட மாணவ[illegible] நீண்ட நாளைய வேண்டுகோளுக்கு, நிவாரணமாக மாவட்ட ஆசிரியர் கல்விப் பயிற்சி நிறுவனங்கள், அரசு ஆசிரியர் பயிற்சிப் பள்ளி[illegible] ஆகியவற்றிலுள்ள இடைநிலை ஆசிரியர் பயிற்சிக்கான மொத்த இ[illegible]களில் 30 விழுக்காடு, 1998-99 ஆம் ஆண்டு முதல் இவர்களுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்டு அவர்களைச் சேர்ப்பதற்காகவே வயது வரம்பு 5 ஆண்டுகள் தளர்த்தப்பட்டு ஆண்டுதோறும் 696 மாணவர்கள் சேர்க்கப்பட்டு வருகின்றனர். இந்த ஒதுக்கீடு தொடர்ந்து கடைபிடிக்கப்பட்டு வரும். இந்த மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள 30 விழு[illegible]டினை அதிகரிக்கும் கருத்துருவையும் அரசு ஆராய்ந்து வருகிறது.

**திறந்தவெளிப் பள்ளித் திட்டம்**

**திறந்தவெளிப் பள்ளி**

*3.14* பத்தாம் வகுப்பு வரையில் பள்ளிப் படிப்பைத் தொடர்ந்து படிக்க இயலாமல் இடையில் நிறுத்தி விட்டவர்கள் தொடர்ந்து படித்து, பத்தாம் வகுப்புக் கல்வித் தகுதியைப் பெறுவதற்கு வழி செய்வதற்கென தமிழ்நாடு

[2000 ஏப்ரல் 10

திறந்தவெளிப் பள்ளித் திட்டம் முன்னோடித் திட்டமாகச் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் வீட்டில் இருந்து கொண்டே கல்வி கற்பதற்கு வழி செய்வதால் குறிப்பாக இல்லத்தரசிகள், சமுதாயத்தில் நலிவடைந்த பிரிவினரைச் சார்ந்த பெண்கள், அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் பணியாற்றி வரும் அடிப்படை ஊழியர்கள், பொருளாதாரக் காரணங்களினால் பள்ளிப் படிப்பைக் கைவிட்டவர்கள் போன்ற அனைத்து மக்களும் படித்துப் பயன் பெறுவதற்கு வழிவகை செய்வதே இத்திட்டத்தின சிறப்பு. இதனால் எட்டாம் வகுப்புத் தேர்ச்சி பெற்றவர்கள் நேரடியாக இத்திட்டத்தில் சேர்ந்து பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெறும் வாய்ப்பினைப் பெறுகின்றார்கள். திருத்தி அமைக்கப்பட்ட புதிய பாடத் திட்டத்தின்படித் திறந்தவெளிப் பள்ளிக் கல்வித் திட்டத்திற்குரிய பாடப் புத்தகங்களும் தயாரிக்கப்பட்டுள்ளன. திறந்தவெளிப் பள்ளியில் வழங்கப்படும் பத்தாம் வகுப்புச் சான்றிதழ் அரசுத் தேர்வுத் துறை வழங்கும் இடைநிலைப் பள்ளியிறுதி சான்றிதழுக்கு இணையானதாக ஏற்கப்பட்டு, வேலை வாய்ப்பிற்கும் பயன்படும் தகுதியுடையது.

### கல்வித் தொலைக்காட்சி

*3.15* பள்ளிக் குழந்தைகளுக்கு பாடந் தொடர்பான விளக்கம் தரக்கூடிய ஒலி-ஒளி நிகழ்ச்சிகளைத் தயாரிப்பதே கல்வித் தொலைக்காட்சிப் படப்பதிவு நிலையம் ஏற்படுத்தப்பட்டதன் நோக்கமாகும்.

### ஒலி-ஒளி நாடாக்கள் தயாரித்தல்

*3.16* *1999-2000* ஆம் ஆண்டில் கல்வித் தொலைக்காட்சிப் படப்பதிவு நிலையம் 5 முதல் 8 ஆம் வகுப்பு வரையிலான மாணவர்கட்குப் பயனளிக்கும் வகையில் எல்லாப் பாடங்களிலும் ஒளி நாடா நிகழ்ச்சிகளைத் தயாரித்து சென்னைத் தொலைக்காட்சியின் "காண்போம் கற்போம்" கல்வி ஒளிபரப்பிற்கு வழங்கியுள்ளது. 5 முதல் 8 ஆம் வகுப்பு மாணவர்களுக்குப் பயனளிக்கும் வகையில் ரூ.2.5 இலட்சம் செலவில் கல்வித் தொலைக்காட்சிப் படப்பதிவு நிலையத்தில் இருந்து 20 ஒலி நாடாக்களை, வட்டார வள ஆதார மைய மேற்பார்வையாளர்கள்/உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்கள்/மாவட்ட ஆசிரியர் கல்விப் பயிற்சி நிறுவன முதல்வர்கள் ஆகியோர் மூலம் பள்ளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.



2000 ஏப்ரல் 10]

மாவட்ட ஆசிரியர் கல்விப் பயிற்சி நிறுவனங்களுக்கும், வட்டார வள ஆதார மையங்களுக்கும் ஒளி நாடா நிகழ்ச்சிகள் வழங்கப்பட்டுள்ளன. 6 முதல் 8 வகுப்புவரை உள்ள மாணவர்களுக்கு அறிவியல் மனப்பாங்கையும் சிந்தனையையும் வளர்க்க, 2000-2001ஆம் கல்வி ஆண்டில் 45 ஒளி நாடாக்களையும், 75 ஒலி நாடாக்களையும் தயாரித்து தொலைக்காட்சி வழியும், வானொலி வழியும் பள்ளிகளைச் சென்றடைய திட்டமிடப்பட்டுள்ளது. அறிவியலின் அடிப்படைக் கருத்துக்களை மாணவர்கள் புரிந்து கொள்ள உள்ளூர் சூழலில் கிடைக்கும் பொருட்களையும், கருவிகளையும் கொண்டு சோதனைகள் செய்து காட்டப்படுவதையும் படமாக்கப்படும்.

*3.17* தேசியக் கல்வி, ஆராய்ச்சி, பயிற்சி நிறுவனம், மாநிலக் கல்வித் தொழில்நுட்ப மையங்கள் மற்றும் வெளிநாட்டுக் கல்வி அமைப்புகள் தயாரித்துள்ள ஒலி/ஒளி நிகழ்ச்சிகளையும் பெற்று நமது தேவைக்கேற்ப மாற்றியமைத்து, பள்ளிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

### கட்டமைப்பு மேம்பாடு

*3.18* தொடக்கக் கல்விச் சீரமைப்பு குறித்து பல்வேறு கருத்துக்கள் ஆராயப்பட்டு பள்ளிகளில் பாடமுறையை ஒலி-ஒளிப் பேழைகள் மூலம் கற்பிக்கலாம் என்று கருத்து தெரிவிக்கப்பட்டது. இதற்கென ஆசிரியர் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககத்தில் இயங்கும் கல்வித் தொலைக்காட்சிப் பிரிவினை மேம்படுத்தலாமெனவும் முடிவு செய்யப்பட்டது. இதற்கென நவீன தொழில்நுட்பக் கருவிகள் ரூ.99 இலட்சம் மதிப்பீட்டில் வாங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இத்தொழில்நுட்பக் கருவிகள் மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்ட நிதியிலிருந்து உலக வங்கி நிதி நிபந்தனைகளுக்குட்பட்டு வாங்கப்படும்.

*3.19* கல்வித் தொலைக்காட்சிப் படப்பதிவு நிலையத்தில் அவசியமான சீரமைப்புப் பணிகளை முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ள ஏற்கப்பட்டு, 2000-2001ஆம் ஆண்டில் ரூ.16.10 இலட்சம் செலவில் பணிகள் தொடங்கப்படவுள்ளன.

[2000 ஏப்ரல் 10

**4. பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் [illegible]**

*4.1.* கல்லாமையை இல்லாமை [illegible] நெறிக்கோளைச் செயல்படுத்த தமிழ்நாட்டில் கல்வி [illegible] தலைமையில் தமிழக எழுத்தறிவு முனைப்பு ஆணையம் செயல்பட்டு வருகிறது.

**அறிவொளி இயக்கம்**

**முழு எழுத்தறிவு இயக்கம்**-*(15 முதல் [illegible] பிரிவினர்)*

**இயக்கம் நிறைவு பெறல்**

*4.2.* இந்த இயக்கம் 1990-91 ஆம் ஆண்டு [illegible] ஆட்சியர்களால் அந்தந்த மாவட்டங்களில் தொடங்கப்பட்டு [illegible] 1999-ல் நிறைவு பெற்றது. இவ்வியக்கத்தின் மூலம் இதுவரை 79.70 இலட்சம் பேர் கற்றவர்களாக மாற்றப்பட்டுள்ளனர். இதற்காக மைய அரசு ரூ.32.73 கோடியும், மாநில அரசு ரூ.13.70 கோடியும் செலவிட்டுள்ளன. முழு எழுத்தறிவு இயக்கம் அனைத்து மாவட்டங்களிலும் நிறைவு [illegible].

**தொடர்கல்வி இயக்கம்**

**கற்றதைத் தொடரல்**

4.3 புதிதாக எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் கற்றதை மறந்துவிடாது நிலை நிறுத்திக்கொள்ளும் திறன் பெறும் [illegible] தொடர் கல்வித் திட்டம் நடைபெறுகிறது. இது மாவட்டத்தில் முழு எழுத்தறிவுத் திட்டம் முடிவடைந்த பிறகு, ஓராண்டுக்குச் செயல்படுத்தப்படுகின்றது. தமிழகத்தில் அறிவொளி தொடர்கல்வித் திட்டம் 25 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு நிறைவடைந்துள்ளது. தற்பொழுது, சென்னை மாவட்டத்தில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மைய அரசு ரூ.16.25 கோடியும், மாநில அரசு ரூ.[illegible] கோடியும் செலவிட்டுள்ளன. இத்திட்டத்தின் மூலம் 37.8 இலட்சம் பேர் பயனடைந்துள்ளனர். எஞ்சிய 3 மாவட்டங்களில் (காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் விழுப்புரம்) விரைவில் இத்திட்டம் விரிவுபடுத்தபபடும்.



2000 ஏப்ரல் 10]

**வளர்கல்வி மையங்கள்**

**எழுத்தறிவு பெற்றோர் தொடர்ந்து கற்றல்**

*4.4* முழு எழுத்தறிவுத் திட்டம், தொடர் கல்வித் திட்டம் ஆகியவற்றின் தொடர்ச்சியாக வளர் கல்வித் திட்டம் தமிழகத்தில் கன்னியாகுமரி, திருநெல்வேலி, விருதுநகர், மதுரை, தேனி, சிவகங்கை, இராமநாதபுரம், புதுக்கோட்டை, வேலூர் ஆகிய *9* மாவட்டங்களில், *2920* வளர் கல்வி மையங்கள் செயல்பட்டு வருகின்றன. தற்போது கோவை, ஈரோடு, சேலம், நாமக்கல், திருவண்ணாமலை, கடலூர், திருச்சி, பெரம்பலூர், கரூர், திண்டுக்கல், நாகை, திருவாரூர், தருமபுரி, தஞ்சாவூர் ஆகிய *14* மாவட்டங்களில் வளர் கல்வி மையங்கள் தொடங்க மைய அரசின் இசைவு கோரப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள *6* மாவட்டங்களில் தொடர் கல்வி இயக்கம் முடிவு பெற்றபின் இத்திட்டம் படிப்படியாகச் செயல்படுத்தப்படும். அறிவொளி மற்றும் தொடர் கல்வி இயக்கங்களின் மூலம் எழுத்தறிவு பெற்றவர்கள் தொடர்ந்து கற்றதை மறந்து விடாமல் நிலை நிறுத்திக் கொள்ள, கிராம நூலகங்கள் மூலம் சிறு சிறு நூல்கள், வார, மாத இதழ்கள், செய்தித்தாள்கள் ஆகியவற்றை படித்துப் பயன் பெற உதவும் திட்டமாக இது செயல்பட்டுவருகிறது. மேலும் அரசு வளர்ச்சித் திட்டங்களை மக்களுக்கு எடுத்துக் கூறுதல், தொழில் பயிற்சி அளித்தல், குழு விவாதம், பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் போன்றன இம்மையங்களின் மூலம் நடத்தப்படுகின்றன. இத்திட்டத்திற்கு மாவட்ட ஆட்சியர் தலைவராகச் செயல்படுவார். மாவட்டத்திலுள்ள *8* முதல் *10* தொடர் கல்வி மையங்களுக்கு ஒரு முதன்மை வளர் கல்வி மையம் செயல்பட்டு வருகிறது. இதற்குப் பொறுப்பாளராக ஒரு தொடர்பாளர் இருப்பார். மக்கள் நலப் பணியாளர்களும் இப்பணியில் ஈடுபடுத்தப்படுவர். இம்மையங்கள் நன்கு செயல்பட அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வது இவரது பொறுப்பாகும். இத்திட்டத்தின் முதல் மூன்று ஆண்டுகளுக்கான செலவினத்தை மைய அரசு முழுமையாக ஏற்றுக்கொள்ளும். பின்னர், இரண்டு ஆண்டுகளுக்கு மாநில அரசும், மத்திய அரசும் செலவினத்தை *50:50* என்ற பங்கீடு முறையில் ஏற்றுக்கொள்ளும். இதற்குப் பிறகு மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊராட்சி ஆகிய அமைப்புகளிடம் நிரந்தரமாகச் செயல்படத்தக்க வகையில் ஒப்படைக்கப்படும்.

[2000 ஏப்ரல் 10

**உழைப்போர் பல்நோக்குக் கல்வி நிறுவனம்**

**பல்வகைப் பயிற்சிகள்**

4.5 உழைக்கும் தொழிலாளர்களின் பிள்ளைகள் மற்றும் அடித்தளத்திலுள்ள மக்களுக்கு, தொழில் திறன் பெற்று தற்சார்புடையவர்களாக வாழும் திறமைபெற இந்த உழைப்போர் பல்நோக்குக் கல்வி நிறுவனம் உதவுகிறது. இத்தகைய நிறுவனங்கள் சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி ஆகிய மூன்று மாவட்டங்களில் மைய அரசின் முழு நிதியுதவியுடன் செயல்படுகின்றன. தொழிலாளர் குடும்பங்களைச் சார்ந்த இளைஞர்களிடமும், பின் தங்கிய மக்களிடமும் தொழில்நுட்பத் திறன்களை மேம்படுத்தவும், வேலை வாய்ப்பினை உருவாக்கிக் கொள்ளும் நோக்கிலும் இந்நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்நிறுவனங்கள் மூலம் குறுகிய காலப் பயிற்சிகளான சோப்பு, சோப்புத் தூள், ஷாம்பு, வாசனைப்பத்தி, பினாயில் போன்ற பொருட்களைத் தயாரிக்கும் பயிற்சிகளும், சுற்றுப்புறச் சுகாதாரம், சிறு குடும்ப நெறி, எய்ட்ஸ் எச்சரிக்கை போன்ற விழிப்புணர்வூட்டும் பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றன. இதுவரை 118 வகையான பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன. நீண்ட காலப் பயிற்சிகளான வீட்டு மின் இணைப்புப் பணி, நீர் இறைப்பு இயந்திரம் பழுதுபார்த்தல், தட்டச்சு, தையல் பயிற்சி, வண்ணத் திரை அச்சிடுதல், சுவரொட்டி தயாரிப்பு, தொலைக்காட்சி/வானொலிப் பெட்டி பழுது பார்த்தல், புகைப்படம் எடுத்தல் போன்ற பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றன. இதுவரை 136 நீண்ட காலப் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. இப்பயிற்சிகள் மூலம் ஆண்டொன்றுக்கு [illegible] பேர் பயனடைந்துள்ளனர்.

**சிறப்புக் கல்வித் திட்டம்**

**குழந்தை தொழிலாளர்களுக்கான திட்டங்கள்**

4.6. தொழிற்சாலைகளில் பணிபுரியும் 6-14 வயது சிறார் தொழிலாளர் பிரிவினருக்கான சிறப்புத் திட்டத்தின்கீழ் தூத்துக்குடி, விருதுநகர், வேலூர், சென்னை ஆகிய மாவட்டங்களில் 700 மையங்கள் அடங்கிய 7 திட்டங்கள் முதற்கட்டமாக மைய அரசும், மாநில அரசும் வழங்கிய நிதியுடன் செயல்படுத்தப்பட்டு 1998, டிசம்பரில் நிறைவு பெற்றுள்ளன. தற்போது, இரண்டாம் கட்டமாக மேற்குறிப்பிட்ட 700 மையங்கள் அடங்கிய 7 திட்டங்கள் தொடர்ந்து செயல்படுத்தப்படுகின்றன. இதன் மூலம் 17,500 சிறார் தொழிலாளர்கள் பயன் பெறுவர்.



2000 ஏப்ரல் 10]

4.7 குழந்தைத் தொழிலாளர்கள் அதிகம் உள்ள மாவட்டங்களிலும், எழுத்தறிவில் பின்தங்கிய மாவட்டங்களிலும் பள்ளிப் படிப்பை இடையில் விட்டவர்களான 6-14 வரை வயதுள்ள சிறுவர் சிறுமியர் பயன்பெறும் வண்ணம் 90 பள்ளிசாராக் கல்வித் திட்டங்களுக்கு மைய அரசு அனுமதி வழங்கியுள்ளது. இத்திட்டம் வருமாண்டிலிருந்து செயல்படுத்தப்படும்.

**5. அரசுத் தேர்வுகள்**

**துறையின் பணிகள்**

5.1 கல்வித் துறை சார்ந்த பல தேர்வுகள் நடத்துவது, தேர்வு முடிவுகளை வெளியிட்டுச் சான்றிதழ்களை வழங்குவது ஆகிய பணிகள் அரசுத் தேர்வுகள் இயக்ககத்தின் முக்கியப் பணிகளாகும். மறைபொருள் தன்மையை ஒவ்வொரு நிலையிலும் காப்பதே இத்துறையின் தலையாய கடமையாகும். இப்பணி ஆற்றுவதில் ஒவ்வொரு ஆண்டும் பெருகிவரும் தேர்வு எழுதும் மாணவர் எண்ணிக்கை ஒரு சவாலாக அமைகிறது. எனவே, பொறுப்புப் பகிர்தல் முறையைப் பின்பற்றுவதன் மூலம் இச்சவாலுக்கு ஈடுகொடுத்து தேர்வு நடத்தும் முறையில் கவனம் செலுத்த வேண்டிய திறன்பாடுகள், மறைபொருள் தன்மை காத்தல், குறைபாடுகளற்ற முறையில் தேர்வு முடிவினை வெளியிடுதல் ஆகிய குறிக்கோள்களை அடைய வழி செய்யப்பட்டுள்ளது.

**பாதுகாப்பு அறைகலன்கள்**

5.2 இத்துறையில் தேர்வுக்காகப் பெறப்படும் அசல் சான்றிதழ்கள் உரிய அலுவலர்களால் பாதுகாப்பாக வைக்கப்பட வேண்டியுள்ளது. எனவே, அரசுத் தேர்வுகள் துறையின் தலைமை அலுவலகம் மற்றும் மண்டல அலுவலகங்கட்கு 1999-2000 ஆம் ஆண்டில் ரூ. 11.50 இலட்சம் செலவில் அறைகலன்கள் வாங்கப்பட்டுள்ளன.

**பள்ளி சார்ந்த தேர்வுகள்**

5.3 அரசுத் தேர்வுகள் இயக்ககத்தால் 40 வகையான அரசுத் தேர்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன. இவற்றுள், பள்ளி இடைநிலை (எஸ்.எஸ்.எல்.சி.) மற்றும் மேல்நிலைத் தேர்வுகள் (+2) பெரிய அளவிலானவை. இவை மட்டுமின்றி ஆங்கிலோ இந்தியன், மெட்ரிக்குலேசன், ஆசிரியர் கல்விப் பட்டயத் தேர்வு, கைத்தறி, நெசவு, இசை, மரவேலை, தையல், அச்சு மற்றும் விவசாயம் போன்ற தொழில்பாடம் தொடர்பான தேர்வுகளும் இவ்வியக்ககத்தால் நடத்தப்படுகின்றன.

**பிற தேர்வுகள்**

5.4. மைய அரசு பணியாளர் தேர்வாணையம், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் போன்ற நிறுவனங்களுக்காக இவ்வியக்ககம் 30 தேர்வுகளை நடத்தி வருகிறது.

**கேட்டல், பேசுதல் திறன் தேர்வு**

5.5 மேல்நிலைக் கல்வியின் 1997 ஆம் ஆண்டு, மார்ச் தேர்வு முதல் மாணவர்களின் கேட்டல், பேசுதல் திறனறிய மொழிப் பாடங்களின் பகுதியாக இதற்கான தேர்வு ஒன்று புதிதாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு 20 மதிப்பெண் வழங்கி, அந்தந்தப் பள்ளி ஆசிரியர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**மாற்று எண் மதிப்பீட்டு முறை**

**விடைத்தாள் மதிப்பீடு**

5.6 விடைத்தாள் மதிப்பீட்டில் மறைபொருள் தன்மையைக் காத்திடும் பொருட்டு, மேல்நிலைத் தேர்வில் இயற்பியல், வேதியியல், உயிரியல், தாவரவியல், விலங்கியல் மற்றும் கணிதம் ஆகிய 6 பாடங்களுக்கு மாற்று எண் வழங்கி விடைத்தாள்கள் மதிப்பீடு செய்யப்பட்டுவந்தன. மேலும் வணிகவியல், கணக்குப்பதிவியல், வணிகக்கணிதம், தொழிற்பாடப் பிரிவில் பொறியியல் தொடர்புடைய பாடங்கள் ஆகியவற்றுக்கும் மாற்று எண் வழங்கி விடைத்தாள்கள் மதிப்பீடு செய்யும் முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மெட்ரிக் தேர்வு, ஆங்கிலோ இந்தியன் பள்ளித் தேர்வு, ஆசிரியர் பயிற்சிப் பட்டயத் தேர்வு ஆகியவற்றின் தேர்வர்கள் விடைத்தாளுக்கும் மாற்று எண் வழங்கி விடைத்தாள் மதிப்பீடு செய்யப்படுகின்றது.



5.7 1999 ஆம் ஆண்டு, மார்ச்/ஏப்ரலில் நடந்த பொதுத் தேர்வுகளில் கலந்து கொண்டோர், தேர்ச்சி பெற்றோர் எண்ணிக்கை விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:

| தேர்வின் பெயர் | தேர்வர்களின் எண்ணிக்கை | | தேர்ச்சி விகிதம் |
|---|---|---|---|
| | பதிவு செய்தவர் | தேர்ச்சி பெற்றவர் | % |
| இடைநிலைக் கல்வித் தேர்வு | 6,39,736 | 4,34,380 | 67.90 |
| மேல்நிலைக் கல்வித் தேர்வு | 4,02,930 | 3,20,933 | 79.65 |
| மெட்ரிக் தேர்வு | 62,588 | 57,580 | 92.00 |
| ஆங்கிலோ இந்தியத் தேர்வு | 4,596 | 4,458 | 97.00 |

**மறைபொருள் தன்மை காத்தல்**

5.8 அரசுத் தேர்வுகள் முறையில் மறைபொருள் தன்மையைக் காக்கும் பொருட்டு, ஆலோசனைகள் வழங்க பள்ளிக் கல்வித் துறையின் முன்னாள் இயக்குநர்களைக் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவின் பரிந்துரைகள் அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்டு தேர்வினை நல்ல முறையில் மறைபொருள் தன்மையைக் காக்க வல்லதாகச் செய்யப்பட்டுள்ளது.

**போலிச் சான்றிதழ் தடுத்தல்**

5.9 இடைநிலை, மேல்நிலை, ஆங்கிலோ இந்தியன், மெட்ரிக்குலேஷன் ஆகியவற்றின் மதிப்பெண் சான்றிதழ்களுக்கும் மற்றும் ஆசிரியர் பட்டயத் தேர்வு சான்றிதழுக்கும் முப்பரிமாண வில்லை ஒட்டும் முறை (Hologram Sticker) அறிமுகப்படுத்தப்படவுள்ளது. பொதுத் தேர்வுகளில் "பார்கோட்" (Bar Code) முறையைப் பின்பற்ற வேண்டுமென்று அரசு முடிவெடுத்துள்ளது. அதனை சோதனை முறையில் நடைமுறைப்படுத்த 2000 ஆம் ஆண்டு மார்ச்/ஏப்ரலில் நடைபெறும் ஆங்கிலோ-இந்தியப் பள்ளிகள் பொதுத் தேர்வில் அறிமுகப்படுத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இம்முறையால் சான்றிதழ்கள் நல்ல முறையில்

[2000 ஏப்ரல் 10

பாதுகாக்கப்படுவதோடு, போலிச் சான்றிதழ்கள் வெளிவருவதையும் தடுக்கலாகும்.

*5.10* 2000 ஆம் ஆண்டு, மார்ச்/ஏப்ரல் பொதுத் தேர்வு முதல், பொதுத் தேர்வுகளின் வினாத்தாள்களைப் பாதுகாத்து வைப்பதற்காக இரு பூட்டு முறையுள்ள 1000 இரும்பு அலமாரிகள் வாங்கி வழங்கப்பட்டுள்ளன.

**மதிப்பெண் முறையில் மாற்றம்**

*5.11* மேல்நிலை (+2) பொதுத் தேர்வில் செயல்முறை கலந்த (Theory subjects involving practicals) எழுத்துப் பாடங்களில் எழுத்துத் தேர்வுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள 150 மதிப்பெண்ணில், அப்பாடத்தில் தேர்ச்சி பெற குறைந்தபட்சம் 40 மதிப்பெண்ணும், செயல்முறைத் தேர்வில் குறைந்தபட்சம் 30 மதிப்பெண்ணும் கட்டாயம் பெறவேண்டுமென்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது. அதே போன்று ஆங்கிலோ இந்தியன் மற்றும் மெட்ரிக்குலேஷன் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் அறிவியல் பாடத்தில் தேர்ச்சி பெற, எழுத்துத் தேர்வு மற்றும் செயல்முறைத் தேர்வில், எழுத்துத் தேர்வில் 200-க்கு 70-ம், செயல்முறைத் தேர்வில் குறைந்தபட்ச மதிப்பெண் 35-ம் கட்டாயம் பெற வேண்டும் என்றும் அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இத்திட்டமானது அந்தந்த வாரிய கூட்டங்களின் தீர்மானங்களின் அடிப்படையில் முடிவெடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டமானது, 2001 ஆம் ஆண்டு மார்ச்/ஏப்ரல் பொதுத் தேர்வு முதல் செயல்படுத்தப்படும்.

*5.12* பத்தாம் மற்றும் பன்னிரண்டாம் வகுப்பு இறுதித் தேர்வு மதிப்பெண் சான்றிதழ்கள் இவ்வாண்டு முதல் தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளும் கொண்டதாக வழங்கப்படும்.

## 6. ஆசிரியர் தேர்வு வாரியம்

**வாரியப் பணிகள்**

*6.1* பள்ளிக் கல்வி இயக்குநரகத்தின் மேற்பார்வையில் உள்ள உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகள், சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிகளின்கீழ் வரும் உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகள், ஆதிதிராவிடர் நலத் துறைப் பள்ளிகள், சீர்மரபினர் பள்ளிகள், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைப் பள்ளிகள், வனத் துறையால் நடத்தப்படும் பள்ளிகள் ஆகியவற்றின் பட்டதாரி ஆசிரியர், மொழி ஆசிரியர், பட்ட மேற்படிப்பு ஆசிரியர் பணியிடங்களுக்கும், அரசுக் கலை/அறிவியல் கல்லூரிகள், அரசு பொறியியல் கல்லூரிகள், அரசுத் தொழில்



2000 ஏப்ரல் 10]

நுட்ப பயிலகங்கள் ஆகியவற்றிற்கான விரிவுரையாளர், பயிற்றுநர் பணியிடங்களுக்கும், இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வரும் திருக்கோயில்கள் நடத்தும் கல்லூரிகளின் விரிவுரையாளர்களின் பணியிடங்கள். அரசு சட்டக் கல்லூரி விரிவுரையாளர் பணியிடங்கள் ஆகியவற்றிற்கும் வேலை வாய்ப்பக பதிவு முன்னுரிமை அடிப்படையில், ஆசிரியர்கள் நேர்காணலுக்கு அழைக்கப்பட்டு, அவர்களது கல்வித் தகுதிகளுக்கேற்பவும், நேர்காணலில் பெறும் மதிப்பெண்கள் அடிப்படையிலும், இனச்சுழற்சி முறையின் வரிசைப்படி ஆசிரியர் தேர்வு வாரியத்தால் தேர்வு செய்யப்படுகின்றனர்.

**தேர்ந்தெடுக்கும் முறை**

*6.2* தகுதி வாய்ந்த ஆசிரியர்களை அவர்களது முன் அனுபவம், பணிக்காகப் பதிவு செய்து காத்திருந்த காலம், கூடுதல் கல்வித் தகுதி அடிப்படையில் தேர்வு செய்வதற்கான மதிப்பெண் வழங்கும் முறை 1997-98 ஆம் ஆண்டில் சீரமைக்கப்பட்டது. இதன் அடிப்படையில் ஆசிரியர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு வருகின்றனர்.

**செயல்பாடு விவரம்**

*6.3* நேர்காணல் மதிப்பீடுகள், கணிப்பொறியில் பதிவு செய்யப்படுவதன் மூலம் மிக துல்லியமாகவும், விரைந்தும் தெரிவு செய்து முடிவுகளை அறிவிக்க ஏதுவாகிறது. இதன் பயனாக இவ்வாரியம், 1996-97 ஆம் கல்வியாண்டில் சுமார் 1700 முதுகலை/பட்டதாரி ஆசிரியர்களையும், 1997-98 ஆம் கல்வியாண்டில் 1770 முதுகலை/பட்டதாரி ஆசிரியர்களையும் தேர்வு செய்தது. 1998-99 ஆம் ஆண்டில் 1119 முதுகலை ஆசிரியர்களும், 865 பட்டதாரி ஆசிரியர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 1999-2000 ஆம் ஆண்டில், 446 முதுகலை ஆசிரியர்களும், 638 பட்டதாரி ஆசிரியர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஆதிதிராவிடர்/பழங்குடியினர் இனத்திற்கு ஒதுக்கப்பட்டு நிரப்ப இயலாமையினால் தேக்கமடைந்த பணியிடங்களை நிரப்பும் வகையில் ஆசிரியர் தேர்வு வாரியம் செயல்பட்டு அவ்வினத்தினருக்காகவே 1996-97 ஆம் ஆண்டில் சிறப்புத் தேர்வுகள் நடத்தி, 62 முதுகலை பட்டதாரி ஆசிரியர்களையும், 78 பட்டதாரி ஆசிரியர்களையும் தேர்வு செய்தது. அவ்வாறே, 1997-98 ஆம் கல்வியாண்டிலும் அவ்வினத்தைச் சார்ந்த 42 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களையும், 23 பட்டதாரி ஆசிரியர்களையும் தேர்வு செய்தது. 1998-99 ஆம் கல்வியாண்டில், இவ்வினத்தைச் சார்ந்த 19 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களையும், 19 பட்டதாரி ஆசிரியர்களையும் தேர்வு

செய்தது. இவ்வாண்டில் 41 முதுகலைப் பட்ட ஆசிரியர் காலிப் பணியிடங்கள் மதிப்பீடு தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையிலிருந்தும், முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் காலிப் பணியிட விவரம் கோயம்புத்தூர் மாநகராட்சியிலிருந்தும், 8 பட்டதாரி ஆசிரியர் காலிப் பணியிட மதிப்பீடு ஊனமுற்றோர் நலம் மற்றும் மறுவாழ்வுத் துறையிடமிருந்தும் பெறப்பட்டு, இக்காலிப் பணியிடங்களைப் பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகள் ஆசிரியர் தேர்வு வாரியத்தால் எடுக்கப்பட்டுள்ளன.

**பின்னடைவுப் பணியிடங்களுக்குத் தேர்ந்தெடுத்தல்:**

6.4 அரசு ஆணையிட்டதையொட்டி பின்னடைவுப் பணியிடங்களுக்கென 100 கலை, அறிவியல் கல்லூரி விரிவுரையாளர்கள் சிறப்பு/நேரடி நியமனம் மூலம் தாழ்த்தப்பட்ட வகுப்பினர்/பழங்குடியினத்தவர் தேர்வு செய்யப்பட்டனர். மேலும் பொதுப்போட்டி வாயிலாக 98 விரிவுரையாளர்கள் தேர்வு செய்யப்பட்டனர். மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆணையின் பேரில் பார்வையற்றோருக்கெனத் தமிழ்மொழி பாட கல்லூரி விரிவுரையாளர் பணிக்குப் பார்வையற்ற ஒருவர் தேர்வு செய்யப்பட்டார். இவ்விரிவுரையாளர் தேர்வுக்கு நடத்தப்பட்ட நேர்காணல் அமர்வுகளில் தாழ்த்தப்பட்டோர் நலம் காக்கும் நோக்கில் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்த உறுப்பினர் ஒருவர் கூடுதலாக அமர்த்தப்பட்டார். ஆசிரியர் தேர்வு வாரியத் தேர்வுகளைப் பாராட்டும் வகையில் இந்து சமய அறநிலையத் துறையின் நிர்வாகத்திலுள்ள திருக்கோயில்கள் நடத்தும் கல்லூரிகளின் விரிவுரையாளர் தேர்வும் ஆசிரியர் தேர்வு வாரியத்திடம் நடப்பாண்டில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## 2000-2001 ஆம் ஆண்டுக்கான செயல் திட்டம்

**வேளாண் ஆசிரியர்கள் தேர்ந்தெடுத்தல்:**

6.5 புதிய பாடத் திட்டமாக வேளாண் பாடம் அறிமுகப்படுத்தப்படுவதையொட்டி, வேளாண் பட்டதாரி ஆசிரியர்களைத் தொழிற் கல்வி ஆசிரியர்களாகத் தேர்வு செய்யும் பொறுப்பு ஆசிரியர் தேர்வு வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அரசுப் பள்ளிகளில் உருவாகும் காலிப் பணியிட மதிப்பீடுகளை விரைந்து பெற்று, கூடுதல் குழுக்கள் உருவாக்குவதன் வாயிலாக தகுதி வாய்ந்த ஆசிரியர்களைத் தேர்வு செய்து பட்டியலை கோடை விடுமுறைக்குள் நியமன அலுவலர்களுக்கு அனுப்பத் திட்டமிடப்பட்டுள்ளது.



6.6. ஆசிரியர் கல்வி, ஆராய்ச்சி, பயிற்சி இயக்குநரின் நிர்வாகத்தின் கீழ் உள்ள இயக்குநரகம், மாவட்ட ஆசிரியர் கல்விப் பயிற்சி நிறுவனங்கள் மற்றும் அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் உள்ள முதல்வர், மூத்த விரிவுரையாளர், விரிவுரையாளர் மற்றும் இளம் விரிவுரையாளர் ஆகிய பதவிகளுக்குரிய ஆசிரியர்களை தேர்வு செய்யும் பொறுப்பும் ஆசிரியர் தேர்வு வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

6.7 அரசு பொறியியற் கல்லூரிகள் மற்றும் அரசு தொழில்நுட்ப பயிலகங்களில் ஏற்படும் காலிப் பணியிடங்களில் நியமனம் செய்ய தரம் மிக்க ஆசிரியர்களை தேர்வு செய்யும் பணி ஆசிரியர் தேர்வு வாரியத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

6.8 அரசு சட்டக் கல்லூரி விரிவுரையாளர் பணிக்கும் தரம் மிக்கவர்களை தேர்வு செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 7. தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம்

**பாடநூல் அச்சிடல்:**

7.1 தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம், 1970 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இக்கழகம், 1 முதல் 12 ஆம் வகுப்பு வரையிலான பாடநூல்களை அச்சிட்டு வழங்கிவருகிறது. இக்கழகம் மாற்றியமைக்கப்பட்ட புதிய பாடத்திட்டத்தின்படி, 1995-96 ஆம் கல்வி ஆண்டு தொடங்கி 1998-99 ஆம் கல்வியாண்டு முடிய, 5 ஆம் வகுப்புக்கான பாடநூல்கள் தவிர அனைத்து வகுப்புகளுக்குமான பாடநூல்கள் யாவற்றையும் புதுப்பித்து வெளியிட்டுள்ளது. 1999-2000 ஆம் கல்வியாண்டில் 5 ஆம் வகுப்பிற்கான புதிய பாடநூல்களையும் வெளியிட்டுள்ளது. வரும் ஆண்டில், 348 தனித்தனிப் பாடநூல் தலைப்புகளில், 515 இலட்சம் பாடநூல் பிரதிகளை 123 இலட்சம் மாணவர்கள் பயனடையும் வகையில் இக்கழகம் அச்சிட்டு உரிய காலத்தில் வழங்கும். இதற்கான மொத்தச் செலவு ரூ. 40.40 கோடி ஆகும்.

7.2 நடப்புக் கல்வி ஆண்டில் மெட்ரிக்குலேசன் பள்ளிகளுக்கான 10 ஆம் வகுப்புப் பாடநூல்களை 11 தலைப்புகளில், 8 இலட்சம் பிரதிகள் அச்சிட்டு இக்கழகம் வெளியிட்டுள்ளது. வரும் ஆண்டிலும் இப்பணி தொடரும். மேலும், ஆங்கிலோ இந்தியப் பள்ளிகளுக்கு 10 ஆம் வகுப்பு பாடங்களை இந்த வாரியம் தயாரித்திட, பாடநூல் கழகம் அச்சிட்டு வழங்கும்.

## திருத்தப்பட்ட பாடநூல்கள்:

7.3 பள்ளிப் பாடச் சுமையைக் குறைக்க அமைக்கப்பட்ட உயர்மட்டக் குழு பரிந்துரையின்படி, பாடச் சுமை குறைக்கும் பணித் தொடர்பாக ஆசிரியர் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககத்தால் பாட நூல்கள் திருத்தப்பட்டு 1,2,3,6 மற்றும் 8 ஆம் வகுப்புகளில் சில பாடநூல்கள் மறுபதிப்பில் திருத்திய பதிப்புகளும், கையிருப்பில் உள்ள பாடநூல்களுக்குத் திருத்தம் ஒட்டு அச்சடித்தும் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. 10, 12 ஆம் வகுப்புகளுக்கு உயர்மட்டக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் சில பாட நூல்களுக்கு வரும் கல்வியாண்டில் திருத்தம் செய்து வெளியிடப்பட்டுள்ளது.

## எழிலான வண்ணங்களில் தரமான குறிப்பேடுகள்:

7.4 வரும் கல்வியாண்டில் இக்கழகம் ஆதிதிராவிடர் நலத் துறைக்கு ரூ. 7.80 கோடி மதிப்புள்ள குறிப்பேடுகள் தயாரித்து வழங்கவிருக்கிறது. மற்ற மாணவர்களுக்கு சுமார் ரூ.3 கோடி மதிப்புள்ள குறிப்பேடுகள் எழிலான வண்ணங்களில் தரமாகத் தயாரித்து நியாயமான விலையில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமும், சில்லரை விற்பனையாளர்கள் மூலமும் வெளிச்சந்தையில் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

7.5 இக்கல்வியாண்டில் 5 ஆம் வகுப்புக்கான பாடநூல்களின் மேலட்டைகளை "லேமினேட்" செய்து வெளியிடப்பட்டது. அதே போன்று, வரும் கல்வியாண்டில் ஒன்றாம், இரண்டாம் வகுப்புப் பாடநூல்களின் மேலட்டைகள் லேமினேட் செய்து வழங்கப்படும். இதற்கென கூடுதலாக ரூ. 18.00 இலட்சம் செலவாகும்.

## சான்றோர் அறிவுரைகள்:

7.6 மாணவர்களிடையே ஒற்றுமை உணர்வை ஊட்டும் வகையில், தீண்டாமை அநீதி, சமய நல்லிணக்கம், சாதி ஒற்றுமை பற்றியச் சான்றோர் அறிவுரைகள் பல பாடநூல்களில் சேர்க்கப்பட்டுள்ளன.

## அகராதி, வரைபடத் தொகுப்பு வெளியிடல்:

7.7 உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளி மாணவர்கள் பயனுக்காக அகராதியும் (ஆங்கிலம், தமிழ்), வரைபடத் தொகுப்பும் (Atlas) இவ்வாண்டு வெளியிடப்படும். அறிவியல் விளக்கம் தரும் சிறப்பு நூல்களை அச்சிட்டு வழங்கும் கருத்துருவும் ஆய்வில் உள்ளது.



## நூல் கிடங்குகள்:

7.8 பாடநூல் கழகம் அச்சிட்ட நூல்களைப் பாதுகாத்து வைத்திட காஞ்சிபுரம், சிவகாசி ஆகிய இடங்களில் ஒவ்வொன்றும் ரூ. 68 இலட்சம் செலவில் கிடங்குகள் கட்டவும் திட்டமிடப்பட்டுள்ளது.

## 8. பொது நூலகங்கள்

### வாசகர் வட்டம்:

#### அமைப்பு:

8.1 பொது நூலக இயக்ககத்தை மக்கள் இயக்கமாக மாற்றி பொது மக்களிடையே படிக்கும் பழக்கத்தை ஊக்குவிக்கும் வகையில் ஒவ்வொரு நூலகத்திற்கும் கல்வியாளர்கள், நூலக ஆர்வலர்கள், உள்ளூர் தலைவர்கள் முதலானோரைக் கொண்டு வாசகர் வட்டம் என்ற அமைப்பு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை, 1045 நூலகங்களில் வாசகர் வட்டம் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாசகர் வட்டம் மூலம் நூல்கள் அறிமுகம், கவியரங்கம், இலக்கியக் கூட்டம் முதலான பயனுள்ள நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

### நூல்கள் வாங்குதல்:

#### ஆன்றோர் சான்றோர் நூல்கள்:

8.2 நாள்தோறும் வளர்ந்து வரும் அறிவியல் முன்னேற்றத்தின் பயனை அடைய விரும்பும் மக்களின் தேவையை நிறைவு செய்ய ஆண்டுதோறும் சுமார் நான்கு கோடி ரூபாய் அளவிற்குத் தரமான நூல்கள் நூல் தேர்வுக் குழுவினால் தேர்ந்தெடுக்கப்பட்டு வாங்கப்படுகின்றன. 1999-2000 ஆம் ஆண்டில் வாசகர்கட்கும் பயன்படக்கூடிய ஆன்றோர் மற்றும் சான்றோர்களின் நூல்களை வாங்கிட ரூ. 60 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. கல்கத்தாவிலுள்ள இராசாராம் மோகன் ராய் அறக்கட்டளை, இந்தியாவிலுள்ள அனைத்து மாநிலங்களுக்கும் நூலக வளர்ச்சிக்கு இணை மானியம் அளித்து வருகிறது. கடந்த ஆண்டு ரூ. [illegible] இலட்சம் இவ்வறக்கட்டளையிலிருந்து இணை மானியமாகப் பெறப்பட்டுள்ளது.

[2000 ஏப்ரல் 10

**நூலகக் கட்டடங்கள் கட்டுதல்**

**சுகாதாரச் சூழல்:**

8.3 நூலகங்களுக்குப் படிக்க வரும் வாசகர்கள் சுகாதாரச் சூழலில் காற்றோட்டமுள்ள கட்டடங்களில் அமர்ந்து படிக்க ஏதுவாக வாடகைக் கட்டடங்களில் செயல்பட்டு வரும் நூலகங்களுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. மொத்தமுள்ள 1590 நூலகங்களில், 842 நூலகங்களுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. மேலும் 52 நூலகக் கட்டடங்களுக்கான கட்டுமானப் பணி ரூ. 348.45 இலட்சம் செலவில் நடைபெற்று வருகிறது. மேலும், 44 நூலகங்களுக்குக் கட்டடங்கள் கட்ட நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**குடிமைப்பணி நாடுவோருக்கான சிறப்பு வசதிகள்**

**குடிமைப் பணி மையங்கள்**

8.4 இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி, வங்கிகள், இரயில்வே தேர்வாணையம், மத்திய தேர்வாணையம், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் ஆகியவை நடத்தும் போட்டித் தேர்வுகளில் இளைய தலைமுறையினர் மற்றும் சமுதாயத்தில் நலிந்த பிரிவினர் பங்கு கொள்ளும் வகையில் "குடிமைப் பணி மையங்கள்" என்ற பிரிவு மாவட்ட மைய நூலகங்களிலும் பெரு நகர நூலகங்களிலும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இம்மையங்களில் சராசரியாக ரூ. 20 இலட்சம் மதிப்புள்ள 8,000 சிறந்த நூல்கள் வாங்கி வைக்கப்பட்டுள்ளன. வாசகர்களிடையே இம்மையங்களின் பணி மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது. இத்தகைய குடிமைப் பணி மையங்கள் சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, காஞ்சிபுரம், திருவள்ளூர், வேலூர், திருவாரூர், தேனி, திருநெல்வேலி, திண்டுக்கல், தஞ்சாவூர், ஈரோடு, நாகர்கோவில், புதுக்கோட்டை, நீலகிரி ஆகிய மாவட்டத் தலைநகர்களில் சீரிய முறையில் பயன்பட்டு வருகின்றன.

**ஊர்ப்புற நூலகங்கள்**

8.5 நூலகப் பயனை கிராமப்புறங்களிலும் நீட்டித்து, அம்மக்களும் பயனடையும் வகையில் அரசு, 625 ஊர்ப்புற நூலகங்கள் திறக்க அனுமதித்துள்ளது. இதில் 589 ஊர்ப்புற நூலகங்கள் தற்போது திறக்கப்பட்டு, சிறப்பாகப் பணியாற்றி வருகின்றன. மீதமுள்ள 36 ஊர்ப்புற நூலகங்கள் திறக்கத் தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



2000 ஏப்ரல் 10]

**வாசகர்களுக்கு கூடுதல் வசதிகள்**

**ஒளிப்பட வசதிகள்:**

8.6 வாசகர்கள், தாங்கள் வாசிக்கும் நூல்களில் முக்கியமான பகுதிகளைத் தேவைப்பட்டால் ஒளிப்படம் எடுத்துக்கொள்ள, சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, சேலம், திருநெல்வேலி, காஞ்சிபுரம், வேலூர், தஞ்சாவூர், ஈரோடு, தூத்துக்குடி, கடலூர், நீலகிரி ஆகிய மாவட்டங்களில் ஒளிப்படம் எடுக்கும் கருவி (ஜெராக்ஸ் இயந்திரம்) அமைக்கப்பட்டுள்ளது.

**தொலைக்காட்சிப் பெட்டிகள்:**

8.7 பொதுமக்கள் நூலகங்களில் படிக்கும் வசதிமட்டுமன்றி அன்றாடச் செய்திகள், விளையாட்டு நிகழ்ச்சிகள் மற்றும் கல்வி வளர்ச்சி ஆகியவற்றைப் பற்றியும் அறிந்து கொள்ளும் வகையில் 21 மாவட்டங்களில் தொலைக்காட்சிப் பெட்டிகள், ஒலி-ஒளி நாடா பதிவுப்பெட்டி (வி.சி.ஆர்) வசதி ஆகியவை அமைக்கப்பட்டு வாசகர்களின் தேவைக்குப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

**நூலகங்களை நவீனப்படுத்துதல்:**

8.8 பொது நூலகங்கள் அனைத்தையும் நவீனப்படுத்தும் முறையிலும், வாசகர்கள் தேவையை உடனுக்குடன் பூர்த்தி செய்யும் வகையிலும் கணிப்பொறி வசதி செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. முதற்கட்டமாக கன்னிமாரா பொது நூலகத்தில் ரூ. 7.8 இலட்சம் செலவில் கணிப்பொறி அமைக்கப்பட்டுள்ளது. இதுதவிர, அனைத்து மாவட்ட மைய நூலகங்களிலும் கணிப்பொறி வசதி அமைத்துத் தரக் கருதி, முதற்கட்டமாக சென்னை, கோயம்புத்தூர், மதுரை மாவட்ட மைய நூலகங்களில் கணிப்பொறி வசதி அளிக்கப்பட்டுள்ளது. மேலும் 1999-2000 ஆம் நிதியாண்டில், திருச்சி, சேலம், திருநெல்வேலி ஆகிய மூன்று மாவட்ட மைய நூலகங்களிலும் ரூ. 15 இலட்சம் செலவில் கணிப்பொறி வசதி அளிக்கப்பட்டுள்ளது. சேலம், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மற்றும் தஞ்சாவூர் மாவட்ட நூலக ஆணைக்குழுக்களில் நடமாடும் நூலகங்கள் இணைக்கப்பட்டுள்ளன.

8.9 1999-2000 ஆம் ஆண்டில் 10 புதிய கிளை நூலகங்கள் திறக்கப்பட்டு அவைகளைப் பராமரிக்க 10 மூன்றாம் நிலை நூலகர் பணியிடங்களும் உருவாக்கப்பட்டுள்ளன.

## நிதியாதாரத்தைப் பெருக்குதல்

### வருவாய், நன்கொடைகள்:

8.10 நூலக ஆணைக்குழுக்கள் நூலக வரி வசூல் மூலம் கிடைக்கும் வருவாயைக் கொண்டே செயல்படுகின்றன. கடந்த சில ஆண்டுகளில் நூலக வரி வசூல் விவரம் வருமாறு:

| | |
|---|---|
| 1994-95 | ரூ. 6.12 கோடி |
| 1995-96 | ரூ. 7.83 கோடி |
| 1996-97 | ரூ. 7.93 கோடி |
| 1997-98 | ரூ. 21.00 கோடி (முந்தைய ஆண்டுகளின் நிலுவைத் தொகை உட்பட) |
| 1998-99 | ரூ. 10.49 கோடி |
| 1999-2000 (ஏழு மாதங்கள் மட்டும்) | ரூ. 5.17 கோடி |

வளர்ந்து வரும் நூலகத் தேவைக்கு இவ்வருவாய் போதுமானதாக இல்லை. எனவே பொது மக்களை நூலக இயக்கத்தில் ஆர்வம் கொள்ளச் செய்து, நூலகங்களில் நிதி ஆதாரத்தைப் பெருக்க பொது மக்களிடத்தில் அன்பான வேண்டுகோள் மூலம் நன்கொடைகள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. அவ்வாறு இதுவரை பெறப்பட்ட நிதி விவரம்:

| | | பெறப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| (1) | புரவலர் நன்கொடை மூலம் (புரவலர் எண்ணிக்கை 10421) | ரூ. 104.21 |
| (2) | கட்டடம்/காலிமனை மதிப்பு | ரூ. 624.00 |
| (3) | தளவாடங்கள் | ரூ. 255.00 |



### செய்தி மடல்

8.11 பொது நூலகத் துறை சார்பாகப் பொது நூலகச் செய்தி மடல் என்ற காலாண்டு இதழ் 1996 சூலை - செப்டம்பர் முதல் வெளியிடப்பட்டு வருகிறது. இவ்விதழில் பொது நூலகத் துறையின் வளர்ச்சிப் பணிகளும், பொது நூலக இயக்ககம் சம்பந்தப்பட்ட பல்வேறு சிறந்த செய்திகளும் இடம்பெற்று இது வாசகர்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

## கன்னிமாரா பொது நூலகம்

### கட்டமைப்பு வசதிகள்:

8.12 சென்னை மாநகரத்தில் கன்னிமாரா பொது நூலகம் வியத்தகு நூலகமாக விளங்குவதுடன் சிறந்த சேவை செய்து வருகிறது. இதன் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு சிறப்பு அஞ்சல் தலையும், அஞ்சல் வெளியுறையும் வெளியிடப்பட்டுள்ளன. தவிர, ரூ. 179 இலட்சம் செலவில் இணைப்புக் கட்டடம் ஒன்றும் கட்டப்பட்டுள்ளது. இந்நூலக வசதிக்காக ரூ. 100.40 இலட்சத்திற்கு தளவாடங்கள், நூல் அடுக்குகள் ஆகியவை வாங்கப்பட்டுள்ளன. கன்னிமாரா பொது நூலக வாசகர்களின் பயன்பாட்டிற்காக, 1999-2000 ஆம் ஆண்டில் ரூ. 10.86 இலட்சம் செலவில் கூடுதல் நூல்கள் வாங்கப்பட்டுள்ளன. அரிதான பழுதடைந்த நூல்கள் கட்டுமானம் செய்யும் பொருட்டு ரூ. 3 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. கன்னிமாரா பொது நூலகத்தில் இடம் பெற்றுள்ள பல அரிய நூல்களையும், ஆவணங்களில் உள்ள தகவல்களையும் கால முதிர்ச்சியால் அழியாமல் பாதுகாக்கும் பொருட்டு ரூ. 1.08 இலட்சம் செலவில் நுண்படப் பிரிவு ஒன்றும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

### கன்னிமாரா மூலக் கட்டட வேலைப்பாடுகளைப் புதுப்பிக்கும் பணி:

8.13 நூற்றாண்டு விழாக்கண்ட கன்னிமாரா பொதுநூலக மூலக் கட்டடத்தை அதன் தொன்மை மாறாமல் பேணிக் காக்கும் பொருட்டு புதுப்பிக்கும் பணி ரூ. 1.21 கோடி மதிப்பீட்டில் 1999 ஆம் ஆண்டில் இந்திய அரசின் தொல்பொருள் ஆய்வுத் துறையால் மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகிறது. இதற்கென மூன்றில் இரண்டு பங்கு செலவினத் தொகை ரூ. 80.68 இலட்சம் மைய அரசும், மூன்றில் ஒரு பங்கு செலவினத் தொகை ரூ. 40.52 இலட்சம் மாநில அரசும் வழங்கியுள்ளன. தற்போது மேற்கூரை பிரிக்கப்பட்டு சுத்தம் செய்யும் பணியும், தஞ்சை கலைஞர்களைக் கொண்டு சுவர் ஓவியங்கள் புதுப்பிக்கும் பணியும் நடைபெற்று வருகின்றன.

[2000 ஏப்ரல் 10

## இணைப்பு-II

# தமிழ்நாடு மாநில அனைவருக்கும் கல்வி இயக்கம்

### மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டம்

### (ம.தொ.க.தி)

*2000-2001*

### அத்தியாயம்-1

### 1.0 முன்னுரை

அனைவருக்கும் தரமான தொடக்கக் கல்வியை அளிக்கவேண்டும் என்ற நோக்கத்தில் தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் பல்வகைச் செயல்பாடுகளில், 'கி.பி.2000-க்குள் பள்ளி வயதுக் குழந்தைகள் அனைவருக்கும் தொடக்கக் கல்வியளிக்கப்படவேண்டும்' என்னும் பிரதான நோக்குடன் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டமும் ஒன்று.

### 1.1 இத்திட்டத்தின் சிறப்புக் கூறுகள்

இத்திட்டம் பின்வரும் முக்கியக் குறிக்கோள்களுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது:

* தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில் பரவலாக்கப்பட்ட திட்டமிடுதல், மேலாண்மை, மேற்பார்வை போன்றவற்றின் மூலம் அனைவருக்கும் தொடக்கக் கல்வியை உறுதிசெய்தல்.
* சமுதாயப் பங்கேற்பிலிருந்து பள்ளியைச் சமூகம் தன்சொத்தாகக் கொள்ளுதல் என்ற நிலை நோக்கிச் செல்லுதல்.
* மகிழ்வுறு கற்றல் மூலம் எல்லாக் குழந்தைகளும் அனைத்துத் திறன்களையும் அடைவதை உறுதிசெய்தல்.

### 1.2 மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டத்திற்கு மாவட்டங்களைத் தேர்ந்தெடுத்தல்

பெண்கள் எழுத்தறிவுநிலை தேசிய சராசரிக்கும் குறைவாக உள்ள தருமபுரி, திருவண்ணாமலை, கடலூர், விழுப்புரம் ஆகிய மாவட்டங்கள் இத்திட்டத்துக்கு முதற்கட்டமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டன. இம்முதற்கட்ட மாவட்டங்களில் மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டம் 1994-95 முதல் 2000-2001 வரை செயல்படுத்தப்படும்.



2000 ஏப்ரல் 10]

அறிவொளி இயக்கம் வெற்றிகரமாகச் செயல்பட்ட புதுக்கோட்டை மாவட்டமும், பெண் கல்வியறிவு குறைவாய் உள்ள பெரம்பலூர் மாவட்டமும், சமூக, பொருளாதார நிலையில் பின்தங்கியுள்ள இராமநாதபுரம் மாவட்டமும் இத்திட்டச் செயல்பாட்டுக்கான இரண்டாம் கட்ட மாவட்டங்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டன. இம்மாவட்டங்களில் மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டமும் 1997-98 முதல் 2002-2003 வரை செயல்படுத்தப்படும்.

### 1.3 மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டத்தின் குறிக்கோள்கள்

1. சிறந்த கற்றல் கற்பித்தல் சூழ்நிலையை உண்டாக்குவதற்கு ஏற்றவகையில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல்.
2. பள்ளிவயதுக் குழந்தைகள் அனைவரையும் (SC, ST, பெண்குழந்தைகள், வசதி வாய்ப்பற்றோர் உட்பட) பள்ளிகளில் சேர்த்து அனைவரும் ஐந்தாம் வகுப்பு வரையாவது தொடர்ந்து கற்கச் செய்தல்.
3. ஒவ்வொரு நிலையிலும் எல்லாக் குழந்தைகளுக்கும் தரமான கல்வியளித்துக் குறைந்தபட்சக் கற்றல் இலக்குகளை எய்தச் செய்து மாணவர் திறனை உயர்த்துதல்.
4. பள்ளி மேம்பாட்டிற்காகச் சமுதாயத்தின் முழு ஈடுபாட்டையும் பெறுதல்.

### 1.4 திட்டச் செலவினம்

முதற்கட்ட மாவட்டங்களுக்கு ஏழு ஆண்டுகளுக்கும் ரூ. 12,597.21 இலட்சமும், இரண்டாம் கட்ட மாவட்டங்களுக்கு ஆறு ஆண்டுகளுக்கும் ரூ. 9244.29 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளன.

இந்த மொத்த ஒதுக்கீட்டில் 85% இந்திய அரசும் மீதி 15% மாநில அரசும் தங்கள் பங்குகளாக ஏற்கின்றன. இத்தொகை இத்திட்டத்தின் பல்வகைச் செலவுகளுக்கும் பின்வருமாறு பிரித்தளிக்கப்படுகிறது:

| | |
|---|---|
| தரமேம்பாடு | 70% |
| கட்டுமானப்பணி | 24% |
| மேலாண்மை | 6% |

[2000 ஏப்ரல் 10

# அத்தியாயம்-II

## 2.0 மேலாண்மை அமைப்பு

### 2.1 நிர்வாக அமைப்பு

'தமிழ்நாடு மாநில அனைவருக்கும் கல்வி இயக்கம்' என்ற பதிவுசெய்யப்பட்ட சங்கம், இத்திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. இவ்வமைப்பின் ஆட்சிக் குழு, செயற்குழு என்னும் இரு குழுக்கள் உள்ளன. ஆட்சிக் குழுவில் மாண்புமிகு முதலமைச்சர் தலைவராகவும், கல்வியமைச்சர் துணைத் தலைவராகவும் இருந்து வருகின்றனர். இதில் நடுவணரசு, மாநில அரசுகளின் பிரதிநிதிகள், இயக்குநர்கள், ஆசிரியர்கள், கல்வியாளர்கள் ஆகியோர் உறுப்பினர்களாக உள்ளனர்.

செயற்குழுவுக்குத் தமிழ்நாடு அரசு மாநில பள்ளிக் கல்வித் துறையின் செயலர் பதவி முறைத் தலைவராகவும், துறைச் செயலர்கள் (அ) அவர்களால் நியமிக்கப்படுபவர்கள், உயர்நிலை அலுவலர்கள், துறைத் தலைவர்கள், நடுவணரசுப் பிரதிநிதிகள், கல்விநிறுவனப் பிரதிநிதிகள் ஆகியோர் உறுப்பினர்களாகவும் உள்ளனர்.

இவ்விரு அமைப்புகளுக்கும் மாநிலத் திட்ட இயக்குநர் உறுப்பினர்-செயலராவார்.

மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்ட மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர்களைப் பதவிமுறைத் தலைவர்களாகக் கொண்டு மாவட்டக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர் இக்குழுவின் செயலராகவும் மாவட்டத் திட்ட ஒருங்கிணைப்பாளராகவும் செயல்படுகிறார்.

இத்திட்டத்தை நல்ல முறையில் செயல்படுத்துதல், திட்ட வளர்ச்சியை மதிப்பிடுதல், மேற்பார்வையிடுதல் ஆகியவற்றுக்கு மாநில, மாவட்ட அலுவலகங்கள் பொறுப்பேற்கின்றன.

### 2.2 ஒன்றியப் பயிற்சி மையங்கள்

பணியிடைப் பயிற்சி ஆசிரியர்களுக்கு எளிதில் கிடைக்கும் வண்ணம் முதற்கட்ட மாவட்டங்களில் 72 ஊராட்சி ஒன்றியங்களில் ஒன்றியப் பயிற்சி மையங்கள் நிறுவப்பட்டுள்ளன. அப்பயிற்சி மையங்களில் ஆசிரியர்களுக்குப் பணியிடைப் பயிற்சிகள் நடத்துவதற்கேற்ற வகையில் நல்ல கட்டடங்கள் கட்டித்தரப்பட்டுள்ளன. இரண்டாம் கட்ட மாவட்டங்களில் 34 ஒன்றியங்களிலும் 34 பயிற்சி மையங்கள் கட்டுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஒன்றியப் பயிற்சி மையங்களுக்கு அறைகலன்களும் பிற கருவிகளும் வழங்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு ஒன்றியப் பயிற்சி



2000 ஏப்ரல் 10]

மையத்திலும் பட்டதாரி ஆசிரியர் நிலையில் மேற்பார்வையாளர் ஒருவரும், தொடக்கப் பள்ளி இடைநிலை ஆசிரியர் நிலையில் ஆசிரியப் பயிற்றுநர் மூவரும் நியமிக்கப்பட்டுள்ளனர். இப்பயிற்சிமைய அலுவலர்கள், ஆசிரியர்கள், மழலையர் கல்விப் பணியாளர்கள், பெற்றோர்-ஆசிரியர் கழக உறுப்பினர்கள், கிராமக் கல்விக் குழு உறுப்பினர்கள் முதலியவர்களுக்குப் பணியிடைப் பயிற்சி அளிக்கின்றனர்.

### 2.3 கருத்தாய்வு மையங்கள்

ஆசிரியர்களுக்கு அளிக்கப்படும் பணியிடைப் பயிற்சியையும், கலந்தாலோசித்தலையும் பரவலாக்கும் வகையில் ஏழு திட்ட மாவட்டங்களிலும் 1023 கருத்தாய்வு மையங்கள் நிறுவப்பட்டுள்ளன. எட்டு முதல் பத்து பள்ளிகளைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு ஒரு கருத்தாய்வு மையம் அமைக்கப்பட்டு அவ்வாசிரியர்கள் மாதந்தோறும் ஒரு சனிக்கிழமையில் இம்மையக் கூட்டத்தில் கலந்து கொள்வர். கற்றல் கற்பித்தலில் தோன்றக் கூடிய பிரச்சினைகள், கற்பித்தலில் ஏற்படும் சிரமங்கள், கற்பித்தல் பொருளில் கடினப் பகுதிகளாகக் கண்டறியப்பட்டவை போன்ற பொருள்கள் குறித்து இக்கூட்டங்களில் விவாதிப்பர். இப்பள்ளிகளைச் சார்ந்த தலைமை ஆசிரியர்களில் பணிமூப்பு வாய்ந்தவரும், கற்பித்தலில் ஆர்வமுடையவருமான தலைமையாசிரியர் ஒருவர் மைய ஒருங்கிணைப்பாளராகவும் மற்றொரு மூத்த தலைமையாசிரியர் உதவி ஒருங்கிணைப்பாளராகவும் செயல்படுவர்.

ஒன்றியப் பயிற்சி மையங்கள், கருத்தாய்வு மையங்கள்

(கட்டம் I & கட்டம் II)

| மாவட்டம். | ஒன்றியப் பயிற்சி மையங்கள் | கருத்தாய்வு மையங்கள் |
|---|---|---|
| தருமபுரி | 18 | 176 |
| திருவண்ணாமலை | 18 | 191 |
| கடலூர் | 14 | 144 |
| விழுப்புரம் | 22 | 191 |
| பெரம்பலூர் | 10 | 97 |
| புதுக்கோட்டை | 13 | 119 |
| இராமநாதபுரம் | 11 | 105 |
| மொத்தம் | **106** | **1023** |

[2000 ஏப்ரல் 10

### 2.4 திட்டமிடுதலும் நிதி ஒதுக்கீடும்

அடிப்படை நிலையிலிருந்து சமுதாயம், ஆசிரியர்கள், கல்விசார் அலுவலர்கள் ஆகியோர் பங்கேற்பு முறையில் கூடி, ஆண்டுப் பணித்திட்ட அறிக்கையைத் தயாரிக்கின்றனர். பள்ளிகள், கருத்தாய்வு மையங்கள், ஒன்றியப் பயிற்சி மையங்கள் ஆகியவற்றில் தயாரிக்கப்பட்ட திட்டங்களை மாநில மாவட்டத் திட்டமிடல் குழுக்கள் தொகுத்தளிக்கின்றன. பள்ளிகளில் தலைமையாசிரியரால் தயாரிக்கப்படும் பள்ளி மேம்பாட்டுத் திட்டங்கள் பள்ளி பற்றிய விவரங்கள் அனைத்தையும், இவ்வாண்டு, அடுத்த ஆண்டு பள்ளியில் சேர்க்கப்படவேண்டிய குழந்தைகளின் பெயர் உட்படத் திரட்டித் தரக்கூடியதாய் உள்ளன. பள்ளிசார்ந்த கிராமக் கல்விக் குழு உறுப்பினர்கள், ஆசிரியர்கள், தலைமை ஆசிரியர்கள் அனைவரும் பள்ளிக்குரிய திட்டம் தயாரிப்பதில் ஒன்று கூடிச் செயல்படுகின்றனர். பள்ளி மேம்பாட்டுத் திட்டத்தில் ஏற்கெனவே உள்ள வசதிகள், தேவைப்படும் வசதிகள் மேற்கொள்ளக் கூடிய செயல்களுக்கான உத்திகள் நடைமுறைகள் போன்ற பலவும் பணச் செலவுடனோ, செலவின்றியோ நிறைவேற்றப்படக்கூடியவை இடம் பெறுகின்றன.

மாநிலத் திட்டமிடற் பிரிவால் தயாரிக்கப்பட்ட பயிற்சியேட்டின் உதவியுடன் பள்ளி மேம்பாட்டுத் திட்டங்களைத் தயாரிக்கத் தலைமையாசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. கருத்தாய்வுமைய, ஒன்றியப் பயிற்சி மைய அளவிலான செயல்திட்டங்கள் மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டத்தின் குறிக்கோள்களை எட்டுவதற்காக மேற்கொள்ளப்படவேண்டிய செயல்களைத் தெளிவாக விளக்குகின்றன. மாவட்ட, ஒன்றிய அளவிலான திட்டமிடற் பிரிவு சார்ந்த குழுவினர் மாவட்டக் கல்வித் தகவலமைப்பு சேகரித்த விவரங்களை பகுப்பாய்வு செய்து எதிர்வரும் ஆண்டுக்கான இலக்கை நிர்ணயிக்கும். திட்ட வடிவங்கள் மாவட்டத் தொடக்க கல்வித் திட்டத் தலைமையகத்துக்குச் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னதாக மாவட்ட, மாநிலத் திட்டங்கள் ஆய்வுசெய்து தேவையான மாற்றங்களை மேற்கொள்ளும்.



2000 ஏப்ரல் 10]

## அத்தியாயம் - III

### 3.0 திட்டக் கூறுகள்

### வசதிகளை மேம்படுத்துவதற்கான திட்டம்

### 3.1 அடிப்படை வசதிகள்

பள்ளியின் அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் வகையில் தேவையான பள்ளிகளில் கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. முதற்கட்ட மாவட்டங்களில் திட்டமிடப்பட்ட 913 வகுப்பறை, ஒன்றியப் பயிற்சி மையக் கட்டடங்களுள் 912 முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள ஒன்றும் முடியும் தருவாயில் உள்ளது. சமுதாயப் பங்கேற்பில் மேற்கொள்ளப்பட்ட 9 கட்டுமானப் பணிகள் அனைத்தும் முடிக்கப்பட்டுவிட்டன. இரண்டாம் கட்ட மாவட்டங்களில் திட்டமிடப்பட்ட 441 கட்டுமானப் பணிகளுள் 275 முடிக்கப்பட்டுள்ளன. ஆசிரியர் கல்வி ஆராய்ச்சிப் பயிற்சி இயக்ககத்திற்கு ஒரு கட்டடமும் மாவட்டக் கல்வி பயிற்சி நிறுவனங்களுக்கு இரண்டு கூடுதல் கட்டடங்களும் திட்டமிடப்பட்டுள்ளன. புதுக்கோட்டை மாவட்ட கல்வி பயிற்சி நிறுவனத்திற்கு அனுமதிக்கப்பட்ட கூடுதல் கட்டடப்பணி முடிக்கப்பட்டுள்ளது.

சிக்கன அடிப்படையில் நவீன வடிவமைப்பில் கட்டடங்கள் கட்டுவதற்காக ஏழு மாவட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட ரூ.50 இலட்சத்தில் திட்டமிடப்பட்ட 15 வகுப்பறைக் கட்டடங்களில் 12 கட்டடப் பணிகள் தொடங்கப்பட்டு விரைந்து முன்னேறி வருகின்றன.

முதற்கட்ட மாவட்டங்களில் திட்டமிடப்பட்ட 1063 குடிநீர் வசதிப்பணிகளில் 687 முடிக்கப்பட்டு மீதி 376-ம் வளர்நிலையில் உள்ளன.

இதுபோன்றே முதற்கட்ட மாவட்டங்களில் திட்டமிடப்பட்ட 1063 கழிவறைப் பணிகளில் 1047 முடிக்கப்பெற்று 16 பணிகள் வளர்நிலையில் உள்ளன.

இரண்டாம் கட்ட மாவட்டங்களில் திட்டமிடப்பட்ட 441 பள்ளிகளில் 43 பள்ளிகளுக்கு குடிநீர் வசதியும் 275 பள்ளிகளுக்கு கழிவறை வசதியும் முடிக்கப்பட்டு மீதமுள்ள பணிகள் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

செயற்குழு தீர்மானித்தபடி, கட்டுமானப் பணிக்கு ஒதுக்கீடு செய்யப்படும் 24% ஒதுக்கீட்டை 36% ஆக உயர்த்தினால் புதியதாகத்

[2000 ஏப்ரல் 10

தொடங்கப்படும் பள்ளிகளுக்குக் கட்டடங்களும், நிரந்தரக் கட்டடங்கள் இல்லாத இடங்களில் கூடுதல் கட்டடங்களும், குடிநீர், கழிவறை வசதிகளும் செய்துதரப்படும். இப்பரிந்துரைக்கு மத்திய அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

**கட்டுமானப்பணிகள் (வகுப்பறைகள்/அலுவலகங்கள்)**

| மாவட்டங்கள் | திட்டமிடப் பட்டவை | முடிக்கப்பட்டவை | | | வளர்நிலையில் உள்ளவை |
|---|---|---|---|---|---|
| | | ஒன்றியப் பயிற்சி மையம் | வகுப் பறைகள் | மொத்தம் | |
| மாநிலம்/ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம் | 2 | .. | .. | .. | 1 |
| மாவட்டக் கல்விப் பயிற்சி நிறுவனம் | 3 | .. | .. | 2 | 1 |
| மொத்தம் | 5 | .. | .. | 2 | 2 |
| **கட்டம் I** | | | | | |
| தருமபுரி | 306 | 18 | 288 | 306 | .. |
| திருவண்ணாமலை | 289 | 18 | 271 | 289 | .. |
| கடலூர் | 141 | 13 | 128 | 141 | .. |
| விழுப்புரம் | 177 | 22 | 154 | 176 | 1 |
| மொத்தம் | **913** | **71** | **841** | **912** | **1** |
| **கட்டம் II** | | | | | |
| பெரம்பலூர் | 137 | 7 | 79 | 86 | 51 |
| புதுக்கோட்டை | 153 | 7 | 117 | 124 | 29 |
| இராமநாதபுரம் | 151 | 4 | 61 | 65 | 86 |
| மொத்தம் | **441** | **18** | **257** | **275** | **166** |



2000 ஏப்ரல் 10]

**குடிநீர், கழிவறை வசதிகள்**

| மாவட்டங்கள் | குடிநீர் வசதி | | | கழிவறை வசதி | | |
|---|---|---|---|---|---|---|
| | இலக்கு | முடிக்கப் பெற்றவை | வளர் நிலையில் உள்ளவை | இலக்கு | முடிக்கப் பெற்றவை | வளர் நிலையில் உள்ளவை |
| **கட்டம் I** | | | | | | |
| தருமபுரி | 356 | 234 | 122 | 356 | 356 | .. |
| திருவண்ணாமலை | 314 | 208 | 106 | 314 | 312 | 2 |
| கடலூர் | 166 | 103 | 63 | 166 | 162 | 4 |
| விழுப்புரம் | 227 | 142 | 85 | 227 | 217 | 10 |
| மொத்தம் | **1063** | **687** | **376** | **1063** | **1047** | **16** |
| **கட்டம் II** | | | | | | |
| பெரம்பலூர் | 137 | .. | 137 | 137 | 86 | 51 |
| புதுக்கோட்டை | 153 | 43 | 110 | 153 | 124 | 29 |
| இராமநாதபுரம் | 151 | .. | 151 | 151 | 65 | 86 |
| மொத்தம் | **441** | **43** | **398** | **441** | **275** | **166** |

**கட்டுமானப் பணிகளின் விவரங்கள்**

*(ஊரக வளர்ச்சித் துறையினரால் மேற்கொள்ளப்படுபவை உட்பட)*

*நிலுவையிலுள்ள கட்டுமானப் பணிகளின் விவரங்கள்*

| வ. எண். | விவரம் | கட்டம் I | | | கட்டம் II | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | திட்டமிடப் பட்டவை | முடிக்கப் பட்டவை | வளர்நிலையில் உள்ளவை | திட்டமிடப் பட்டவை | முடிக்கப் பட்டவை | வளர்நிலையில் உள்ளவை |
| 1. | 2/3 வகுப்பறைகள் | 842 | 841 | 1 | 407 | 257 | 150 |
| 2. | ஒன்றியப் பயிற்சி மையங்கள் | 71 | 71 | .. | 34 | 18 | 16 |
| 3. | கழிவறைகள் | 1063 | 1047 | 16 | 441 | 275 | 166 |
| 4. | குடிநீர் வசதி | 1063 | 687 | 376 | 441 | 43 | 398 |
| 5. | தலைமை நிலையப் பயிற்சி மையம் | 1 | 1 | .. | 1 | .. | 1 |
| 6. | மாவட்டக் கல்விப் பயிற்சி நிறுவனம் | 1 | 1 | .. | 2 | 1 | 1 |



## 3.2 புதிய பள்ளிகள் திறத்தலும் கூடுதல் ஆசிரியர்கள் நியமனமும்

1997-98-ல் முதற்கட்ட திட்ட மாவட்டங்களில் 1026 கூடுதல் ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டு அவர்களுக்குரிய ஊதியம் மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டத்தினால் வழங்கப்படுகிறது.

பள்ளியில்லாக் குடியிருப்புகளில் பள்ளிவசதி செய்து தருவதற்காக ஏழு மாவட்டங்களிலும் 332 பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன. 1998-1999 ஆம் ஆண்டு 139 பள்ளிகளும் 1999-2000 ஆம் ஆண்டு 193 பள்ளிகளும் திறக்கப்பட்டுள்ளன. இப்பள்ளிகளில் பணிபுரியும் தலைமையாசிரியர், ஆசிரியர்களுக்கான ஊதியம் மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டத்தினால் வழங்கப்படுகிறது.

2000-2001-ல் புதிய பள்ளிகள் திறப்பதற்காக 160 குடியிருப்புகள் கண்டறியப்பட்டுள்ளன.

**1997-98-ல் புதிய ஆசிரியர்கள் நியமன விவரம்**

| மாவட்டங்கள் | ஆசிரியர்கள் |
|---|---|
| தருமபுரி | 487 |
| திருவண்ணாமலை | 144 |
| கடலூர் | 89 |
| விழுப்புரம் | 306 |
| **மொத்தம்** | **1026** |

[2000 ஏப்ரல் 10

**1998-1999, 1999-2000 ஆம் ஆண்டு திறந்த புதிய பள்ளிகள் விவரம்**

| மாவட்டங்கள் | 1998-1999 | 1999-2000 |
|---|---|---|
| தருமபுரி | 63 | 107 |
| திருவண்ணாமலை | 17 | 26 |
| கடலூர் | 8 | 10 |
| விழுப்புரம் | 9 | 29 |
| **மொத்தம்** | **97** | **172** |
| பெரம்பலூர் | 11 | 2 |
| புதுக்கோட்டை | 24 | 13 |
| இராமநாதபுரம் | 7 | 6 |
| மொத்தம் | 42 | 21 |
| **ஆகமொத்தம்** | **139** | **193** |

### 3.3 கல்வி பெறாதோர் சிறப்புப் பள்ளி:

மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டத்தின் நோக்கமான, கி.பி.2000-க்குள் அனைவர்க்கும் கல்வி' இலக்கை எய்தும் வகையில் 18 ஒன்றியங்களில் 1,057 கல்வி பெறாதோர் சிறப்புப் பள்ளிகள் திறக்கப்பட்டுள்ளன. பொதுவாக மாலையில் 2 மணி நேரம் நடைபெறும் இச்சிறப்புப் பள்ளிகளில் 24,979 குழந்தைகள் பயன்பெறுகின்றனர். இவற்றால் குழந்தைத் தொழிலாளர்களும், பள்ளியைவிட்டு இடையில் விலகிய குழந்தைகளும் பயன்பெறுகின்றனர். இக்கல்வி பெறாதோர் சிறப்புப் பள்ளிகளில் பயிலும் குழந்தைகளின் கல்வி நிலை மதிப்பீடு செய்யப்பட்டு, தகுதியுடையோர் முறைசார் பள்ளிகளில் சேர்க்கப்பட்டு வருகின்றனர். பிற மாணவர்கள் இப்பள்ளிகளில் தொடர்ந்து கற்கின்றனர். இப்பள்ளிகளில் பயிலும் மாணவர்களில் தகுதியுடையவர்களை உரிய வகுப்புகளில் சேர்த்துக்கொள்ள அனுமதித்து தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளது.



2000 ஏப்ரல் 10]

இரண்டாம் கட்ட மாவட்டங்களில் 6,182 குழந்தைகள் பயிலும் 245 மையங்கள் உள்ளன.

**கல்வி பெறாதோர் சிறப்புப் பள்ளிகள் பற்றிய விவரம்**

| மாவட்டங்கள் | கல்வி பெறாதோர் சிறப்புப் பள்ளிகள் | |
|---|---|---|
| | மையங்கள் | மாணவர்கள் |
| தருமபுரி | 163 | 3608 |
| திருவண்ணாமலை | 297 | 7439 |
| கடலூர் | 268 | 6490 |
| விழுப்புரம் | 329 | 7442 |
| **மொத்தம்** | **1057** | **24979** |
| பெரம்பலூர் | 118 | 2972 |
| புதுக்கோட்டை | 37 | 1027 |
| இராமநாதபுரம் | 90 | 2183 |
| **மொத்தம்** | **245** | **6182** |

**தொடர்ந்து கற்றலை மேம்படுத்துவதற்கான திட்டம்**

### 3.4 விழிப்புணர்வு முகாம்கள்:

மக்களிடையே விழிப்புணர்வை உண்டாக்கவும், 100% சேர்க்கையை உறுதி செய்யவும் ஒவ்வொரு பள்ளியின் சார்பிலும் விழிப்புணர்வு முகாம்களும், சேர்க்கை விழாக்களும் நடத்தப்பட்டன.

இத்தகைய விழாக்களின் பயனாக மாணவர் சேர்க்கை, குறிப்பாகப் பெண் குழந்தைகளின் சேர்க்கை வீதம் உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது. மேற்கொள்ளப்பட்டுள்ள பலவகைச் செயற்பாடுகளையும் விளக்கும் வகையில் மாநிலத் திட்ட இயக்ககம் துண்டுப்பிரசுரங்கள், இதழ்கள், சுவரொட்டிகள் முதலியவற்றைத் தயாரித்து வழங்கியுள்ளது. சேர்க்கை

நேரங்களில் அகில இந்திய வானொலி மூலமாகவும், சுவரொட்டிகள் மூலமாகவும் விளம்பரங்கள் மேற்கொள்ளப்பட்டன.

### 3.5 குழந்தைகள் சேர்க்கை விழா

தமிழ்நாடு அரசால் அனைத்து மாவட்டங்களிலும் அமைக்கப்பட்ட தொடக்கக் கல்வி இயக்கம் மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்ட மாவட்டங்களில் தன் பங்கை ஆற்றி 1999-2000 கல்வியாண்டில் பள்ளி வயதுக் குழந்தைகளைப் பள்ளியில் சேர்க்க உதவியது. ஒவ்வொரு பள்ளியும் 100% சேர்க்கையை உறுதி செய்வதற்காகப் பள்ளியில் சேரத் தகுதி வாய்ந்த குழந்தைகளின் பட்டியலைத் தயாரித்தது. இவ்வகை நடவடிக்கையால் ஒன்றாம் வகுப்பில் மாணவரைச் சேர்க்கும் முயற்சியில் மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டம் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை எட்டியது.

### 3.6 சமுதாயப் பங்கேற்பு

பள்ளியின் செயல்பாடுகளில் பங்கேற்கும் வகையிலும், பள்ளி வரவு செலவுக் கணக்குகளில் பொறுப்பேற்கும் வகையிலும் ஒவ்வொரு தொடக்க, நடுநிலைப் பள்ளியிலும் பெற்றோர் ஆசிரியர் கழகம், கிராமக் கல்விக் குழு ஆகிய அமைப்புகள் தொடங்கப்பட்டுள்ளன. பெற்றோர் ஆசிரியர் கழகங்களும், கிராமக் கல்விக் குழுக்களும் தங்கள் பள்ளிகளின் வளர்ச்சியில் மிகுந்த ஆர்வமும் ஈடுபாடும் காட்டுவதுடன், குழந்தைகளைப் பள்ளிகளில் சேர்ப்பதிலும், அன்றாட நடவடிக்கைகளிலும் பங்கேற்கின்றனர். மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டம் பற்றியும், பள்ளிகளின் செயல்பாடுகளில் பங்கேற்கும் வழிமுறை பற்றியும் அறியத்தக்க வகையில் இக்குழுக்களைச் சேர்ந்தவர்களுக்குப் புத்துணர்வுப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. இவ்வகை அமைப்பில் உள்ளவர்களுக்கு நேரிடைப் பங்கேற்பு முறையில் நடைபெற்ற தொலையரங்கப் பயிற்சி அளிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

### தரமேம்பாட்டிற்கான திட்டங்கள்

### 3.7 பாடநூல்கள்

1999-2000 கல்வியாண்டில் மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டத்தினால் தயாரிக்கப்பட்ட செயலடிப்படையிலான ஐந்தாம் வகுப்புப் பாடநூல்கள் தமிழ்நாட்டில் அனைத்துத் தொடக்கப் பள்ளிகளிலும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டம்



ஐந்தாம் வகுப்பு ஆசிரியர்களுக்கான கையேடுகளையும் தயாரித்து அச்சேற்றி வழங்கியுள்ளது.

முதல் வகுப்புப் பாடநூலைத் திருத்தியமைக்கும் பணியை, தமிழ்நாடு அரசு, மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டத்திடம் ஒப்படைத்துள்ளது. செயலடிப்படையிலான குழந்தை நேயப் பாடநூல்கள் தயாரிக்கப்பட்டுத் தமிழ்நாடு பாடநூல் கழகத்தால் அச்சிடப்பட்டுள்ளன.

இவ்வாண்டு ஒன்றாம் வகுப்புப் பாடநூல்கள் தயாரிக்கப்பட்ட முறையிலேயே 2000-2001 ஆம் ஆண்டில் இரண்டாம் வகுப்புப் பாடநூல்களை மாற்றியமைக்கும் பணியை மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டம் மேற்கொள்ளவுள்ளது.

ஏழு திட்ட மாவட்டங்களிலும் உள்ள பள்ளிகளில் 1,2,3 ஆம் வகுப்புகளில் பயிலும் அனைத்து மாணவர்களும் தம் அடைவுநிலையை மேம்படுத்திக் கொள்ளும் வகையில் பயிற்சியேடுகள் வழங்கப்பட்டுள்ளன.

### 3.8 கற்றல் கற்பித்தல் துணைக்கருவிகள், அடிப்படை வசதி மானியம்

கற்றல் கற்பித்தல் துணைக்கருவிகள் செய்வதற்கும் வாங்குவதற்கும் ஒவ்வொரு தொடக்கப்பள்ளி ஆசிரியருக்கும் ஆண்டொன்றுக்கு ரூ.500 வழங்கப்படுகிறது. இதற்காக 1999-2000 ஆண்டிற்கு முதற்கட்ட மாவட்டங்களுக்கு ரூ.121.99 இலட்சமும், இரண்டாம் கட்ட மாவட்டங்களுக்கு ரூ.50.25 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பள்ளியிலும் கிராமக் கல்விக் குழுவும் தலைமையாசிரியரும் கூட்டுக் கணக்கு முறையில் இந்நிதியைச் செலவிடுகின்றனர். குழந்தைகளைப் பள்ளியில் சேர்ப்பதை மேம்படுத்தவும் மக்களிடையே விழிப்புணர்வு உண்டாக்கவும் கிராமக் கல்விக் குழு முக்கியப் பொறுப்பேற்கிறது.

மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்ட மாவட்டங்களிலுள்ள உதவிபெறும் பள்ளிகள் நீங்கலாக தொடக்க, நடுநிலைப் பள்ளிகளில் அவசியமான பொருள்களையும் அறைகலன்களையும் வாங்கவும், பள்ளி வசதியை மேம்படுத்தவும் ஒவ்வொரு பள்ளிக்கும் ஆண்டொன்றுக்கு ரூ.2,000 வீதம் வழங்கப்படுகிறது. இச்செலவுக்கென 1999-2000 ஆண்டில் முதற்கட்ட மாவட்டங்களுக்கு ரூ.131.29 இலட்சமும், இரண்டாம் கட்ட மாவட்டங்களுக்கு ரூ.53 இலட்சமும் வழங்கப்பட்டது.

[2000 ஏப்ரல் 10

*1999-2000*-ல் பள்ளிகளுக்கு வழங்கப்பட்ட அடிப்படை வசதி, கற்றல் கற்பித்தல் கருவிகள் மானியம்:

(ரூபாய் இலட்சத்தில்)

| மாவட்டங்கள் | கற்றல் கற்பித்தல் கருவிகள் | அடிப்படை வசதி |
|---|---|---|
| தருமபுரி | 34.20 | 44.30 |
| திருவண்ணாமலை | 29.35 | 31.12 |
| கடலூர் | 27.25 | 23.00 |
| விழுப்புரம் | 31.19 | 32.87 |
| மொத்தம் | **121.99** | **131.29** |
| பெரம்பலூர் | 16.14 | 14.42 |
| புதுக்கோட்டை | 16.12 | 20.08 |
| இராமநாதபுரம் | 17.99 | 18.50 |
| மொத்தம் | **50.25** | **53.00** |

## 3.9 பணியிடைப் பயிற்சிகள்

திட்டக் குறிக்கோளை எட்டுவதற்கான மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டத்தின் நோக்குடன் அமைக்கப்பட்ட கூறுகளுள் ஒன்றாக தரமேம்பாடு உள்ளது. அதன் அங்கமாக பள்ளி முதல் மாநிலம் வரையுள்ள அனைத்து அலுவலர்களுக்கும் பல்வகைப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. இப்பயிற்சிகள் தேவையின் அடிப்படையில் வடிவமைக்கப்பட்டு மாவட்டக் கல்விப் பயிற்சி நிறுவனங்கள், ஒன்றியப் பயிற்சி மையங்கள், கருத்தாய்வு மையங்கள் சார்ந்த அலுவலர்களால் வழங்கப்படுகின்றன. இப்பயிற்சிகள் வகுப்பறை நிகழ்வுகள் செயலடிப்படையில் குழந்தைமையமான மகிழ்வுறு கற்றல் கற்பித்தல் அடிப்படையில் தயாரிக்கப்பட்டு அளிக்கப்படுகின்றன.

கிராமக் கல்விக் குழு, பெற்றோர் ஆசிரியர் கழக உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் ஆகியோருக்கும்



2000 ஏப்ரல் 10]

கருத்தாய்வு மையங்களில் ஒருநாள் புத்துணர்வுப் பயிற்சி அளிக்கப்பட்டது. இப்பயிற்சிகளால் கிராமச் சமுதாயம் பள்ளியின் செயல்பாடுகளில் திட்டமிடுதல் நிலையிலிருந்தே பங்கேற்கின்றன.

## 3.10 தொலைநிலைக் கல்வித் திட்டம்

கல்வியின் தரத்தை உயர்த்துவதில் பணியிடைப் பயிற்சி மிகமுக்கியமான இடத்தை வகிக்கிறது. இதைக் கருத்தில்கொண்டு ஆசிரியர்களுக்கு நேருக்கு நேர் தரப்படும் பயிற்சியுடன் தொலைத் தொடர்பு மூலம் பயிற்சியளிக்க முடிவு செய்யப்பட்டது. *1997* முதல் தொலைநிலைக் கல்வி நடுவண் அரசு நிலையில் செயல்படுகிறது.

தொலைநிலைக் கல்வித் திட்டத்தின் கீழ் சுயகற்றலுக்கான அச்சிட்ட கட்டகங்கள், ஒலி, ஒளி சாதனங்கள் முதலியவற்றின் மூலம் ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. ஆசிரியர்களின் தேவையடிப்படையில் மேற்காண் கட்டகங்கள், ஒலி, ஒளி நாடாக்கள் தொலைநிலைக் கல்வித் திட்டத்தால் தயாரிக்கப்பட்டன.

பணிமனைகளின் மூலம் பயிற்சிக் கையேடுகளும், சுயகற்றல் துணைக் கருவிகளும் தயாரிக்கப்பட்டு, *1999* ஏப்ரலில் தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்குக் கணிதப் பாடத்திலும், *1999* மே மாதத்தில் மாவட்டக் கல்விப் பயிற்சி நிறுவன ஆசிரியர்களுக்கு செயலாராய்ச்சியிலும் தொலை நிலைக் கல்விப் பயிற்சி நடத்தப்பட்டது.

*1999* செப்டம்பரில் சமுதாயச் செயற்பாட்டிற்கான தொலைநிலைக் கல்விப் பயிற்சி நடத்தப்பட்டது. இவ்வாண்டு இயலாதோருக்கான ஒருங்கிணைந்த கல்வி பற்றிய தொலைநிலைக் கல்விப் பயிற்சி நடத்தத் தீர்மானிக்கப்பட்டு, இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு மார்ச் *1,2* தேதிகளில் நிகழ்ச்சி ஒளிபரப்பப்பட்டது.

**சிறப்புக் கண்ணோட்டம் பெறும் மாணவர்களுக்கான திட்டம்**

## 3.11 இயலாதோருக்கான ஒருங்கிணைந்த கல்வி

உடல் உறுப்புக்குறை (அ) பிற குறைபாடு கொண்டவர்களுக்குக் கல்வி வாய்ப்பு மறுக்கப்படலாகாது. எனவே, இயலாக் குழந்தைகளுக்குத் தொடக்கக் கல்வி அளிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்காக மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்ட மாவட்டங்களிலும், ஒன்றியங்களிலும் விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

இயலாக் குழந்தைகளின் பெற்றோர்களில் ஒருவர் கிராமக் கல்விக் குழுவின் ஒரு உறுப்பினராக இருப்பார். இயலாக் குழந்தைகளுக்குச் சிறப்புக் கல்வியளிக்கும் நிறுவனங்களின் பிரதிநிதிகளைக் கொண்டு மாநில வளக்குழு அமைக்கப்பட்டுள்ளது. இவ்வகைக் குழந்தைகளின் ஒருங்கிணைந்த கல்வி குறித்த கையேடு ஒன்று மாநிலத் திட்ட அலுவலகத்தால் தயாரிக்கப்பட்டுப் பயிற்சிக் காலத்தில் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டது.

தன்னார்வ நிறுவனங்களின் உதவியுடன் முதன்முதலாக மாவட்டத்துக்கு ஓர் ஒன்றியம் வீதம் இயலாதோருக்கு கல்வியளிப்பதற்காக ஏழு ஒன்றியங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன. ஒவ்வொரு ஒன்றியத்திலும் பொது ஆசிரியர்களுக்கு ஒருங்கிணைந்த கல்வியில் பயிற்சியளிப்பதற்காக மூன்று சிறப்பாசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அனைத்துப் பொது ஆசிரியர்களும் இயலாதோருக்கு ஒருங்கிணைந்த கல்வி அளிப்பதில் பயிற்சியளிக்கப்பட்டனர். இத்தகையதொரு பயிற்சி தொலைநிலைக் கல்வி மூலம் 2000 மார்ச் 1, 2 தேதிகளில் காதுகேளாதோர் தொடர்பாக அளிக்கப்பட்டது.

இத்திட்டம் பிற ஒன்றியங்களுக்கும் வரும் ஆண்டுகளில் விரிவாக்கப்படவுள்ளது.

### 3.12 சிறப்புப் பயிற்சி வகுப்புகள்

3, 4, 5 வகுப்புகளில் பயிலும் ஆதி திராவிடர், பழங்குடியினர் பெண் குழந்தைகளின் அடைவுநிலை மேம்பாட்டிற்காக பள்ளி நேரம் முடிந்த பிறகு சிறப்பு வகுப்புகள் நடத்தப்படுகின்றன. முதற்கட்ட மாவட்டங்களில் 2060 மையங்களில் 53100 பெண் குழந்தைகள் இம்முறையில் பயன்பெறுகின்றனர். இரண்டாம் கட்ட மாவட்டங்களில் 523 மையங்களில் 12,339 மாணவியர் பயன்பெறுகின்றனர். அந்தந்தப் பள்ளிகளில் பணிபுரியும் தொண்டுமனப்பான்மையும், ஆர்வமும் உள்ள ஆசிரியர்கள் இவ்வகுப்புகளை நடத்துவதில் ஈடுபட்டுள்ளனர். இவ்வாசிரியர்களுக்கு மாணவி ஒருத்திக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.10/- வீதம் ஊதியமாக வழங்கப்படுகிறது.



**சிறப்புப் பயிற்சி வகுப்புகள் பற்றிய விவரம்**

| மாவட்டங்கள் | சிறப்புப் பயிற்சி வகுப்புகள் | |
|---|---|---|
| | மையங்கள் | மாணவியர் |
| தருமபுரி | 306 | 7460 |
| திருவண்ணாமலை | 625 | 13958 |
| கடலூர் | 580 | 15192 |
| விழுப்புரம் | 554 | 16490 |
| **மொத்தம்** | **2065** | **53100** |
| பெரம்பலூர் | 262 | 5680 |
| புதுக்கோட்டை | 116 | 2912 |
| இராமநாதபுரம் | 145 | 3747 |
| **மொத்தம்** | **523** | **12339** |

## திட்டமிடுதல், மேலாண்மை

### 3.13 பள்ளி மேம்பாட்டுத் திட்டங்கள்

நுண்ணலகுத் திட்டமிடுதல், பள்ளி வரைபடம் தயாரித்தல் ஆகியவற்றின் அடிப்படையில் திட்டமிடும் பணிக்குப் பள்ளிகள் அடிப்படை அலகுகளாகக் கொள்ளப்படுகின்றன. செயல் திட்டங்கள் ஆக்கபூர்வமான அடிப்படையில் அவ்வப் பள்ளித் தலைமையாசிரியர்களால் தயாரிக்கப்படுகின்றன. இத்திட்டங்கள் ஒன்றிய அளவில் மேற்பார்வையிடப்பட வேண்டியது அவசியம் என்று உணரலாகிறது. அத்துடன் இவ்வாறு தயாரிக்கப்பட்ட திட்டங்கள் ஆண்டுப் பணித்திட்டத்தில் இடம் பெறுவதும், நடைமுறையில் சிறப்புற மேற்கொள்ளப்பட வேண்டுவதும் அவசியம் என்று கருதப்படுகிறது.

பள்ளி மேம்பாட்டுத் திட்ட மாதிரியை விளக்குவதற்காகவும், செயல்படுத்துவதற்காகவும் 7 மாவட்டங்களிலும் உள்ள பள்ளிகளின் தலைமையாசிரியர்களுக்குப் பங்கேற்பு முறையிலான ஒரு நாள் பணிமனை ஒன்று நடத்தப்பட்டது.

### 3.14 கருத்தாய்வு மையத் திட்டங்கள்:

இது பள்ளி மேம்பாட்டுத் திட்டங்களில் வேண்டப்பட்ட தீர்வு காணத்தக்க அத்தனை செய்திகளும் உள்ளடக்கியதாயிருக்கும் கருத்தாய்வு மையத்திட்டச் செயற்பாடுகளை அம்மைய ஒருங்கிணைப்பாளரும் மேற்பார்வையிடுவர்.

இத்தகைய கருத்தாய்வு மையத் திட்டங்கள் முதன் முதலில் 1999-2000 ஆம் ஆண்டு 7 மாவட்டங்களிலும், மாவட்டத்திற்கு ஒரு மையம் வீதம் 7 மையங்களுக்குத் தயாரிக்கப்பட்டன. ஒரு முன்னோடித் திட்டமாக அமைந்து இதன் அடிப்படையில் எல்லாப் பள்ளிகளும் அவ்வக் கருத்தாய்வு மையங்களுடன் இணைக்கப்பட்டு கருத்தாய்வு மையத் திட்டங்களுடன் பள்ளிச் செயல் திட்டங்களும் ஒருங்கிணைக்கப்படும். இவையும் கருத்தாய்வு மைய ஒருங்கிணைப்பாளர்களால் மேற்பார்வையிடப்படும்.

### 3.15 ஒன்றிய அளவிலான திட்டங்கள்:

பள்ளி மேம்பாட்டுத் திட்டச் செயல் திட்டங்களை உள்ளடக்கிய கருத்தாய்வு மையத் திட்டங்கள் ஒன்றிய அளவில் ஒருங்கிணைக்கப்படும். ஒன்றிய, கருத்தாய்வு மைய நிலைகளில் உள்ள திட்டங்களுக்கு ஒன்றியப் பயிற்சி மையங்கள் பொறுப்பேற்கின்றன. ஒன்றிய மையம் திட்டத்தைச் செயல்படுத்தும் அமைப்பாகவும், மேற்பார்வை அமைப்பாகவும் செயல்படும். உதவிக் கல்வி அலுவலர், கூடுதல் உதவிக் கல்வி அலுவலர், ஒன்றியப் பயிற்சி மைய மேற்பார்வையாளர், ஆசிரியப் பயிற்றுநர் மூவர் ஆகிய அறுவர் ஒன்றியச் செயற்பாட்டுக் குழு உறுப்பினர்களாவர். இவர்கள் ஒன்றியத்திலுள்ள கருத்தாய்வு மையங்களைத் தமக்குள் பகிர்ந்து கொண்டு செயல் திட்டங்களைச் செயல்படுத்துவர்.

### 3.16 ஆராய்ச்சியும், மதிப்பீடும்

மாநில திட்ட அலுவலகத்திலுள்ள ஆராய்ச்சி, மதிப்பீட்டுப்பிரிவு மாவட்டக் கல்வி பயிற்சி நிறுவன அலுவலர்களுக்கும், ஆசிரியப் பயிற்றுநர்களுக்கும், தலைமை ஆசிரியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் செயலாராய்ச்சித் திட்டங்களை மேற்கொள்வதற்கான பயிற்சியை



அளித்தது. இந்த அலுவலர்கள் தங்களுக்கு ஏற்ற ஆர்வமுள்ள பொருளை ஆராய்ச்சிக்காக எடுத்து ஆய்வு செய்வதில் பயிற்சி அளிக்கப்படுகின்றனர்.

மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டத்தின் செயல்பாடுகளையும், தேர்ந்தெடுக்கப்பட்ட பொருள்களையும் பற்றி ஆராய்வதில் பல்கலைக்கழகப் பேராசிரியர்களும், கல்வியாளர்களும்கூட ஈடுபடுகின்றனர். திட்டமிடப்பட்ட எட்டு தலைப்புகளில் ஐந்து தலைப்புகள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆராய்ச்சி அறிஞர்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

# அத்தியாயம் IV

## 4.0 நிதி ஒதுக்கீடும் செலவினமும்

### 4.1 ஆண்டுச் செலவினங்கள்

31-03-1999 வரை முதற்கட்ட மாவட்டங்களுக்கு ரூ.9585.93 இலட்சமும், இரண்டாம் கட்ட மாவட்டங்களுக்கு ரூ.4277.68 இலட்சமும் ஒதுக்கப்பட்ட ஆண்டுப் பணித்திட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதில் 31-03-1999 வரை திட்டச் செயற்பாடுகளுக்காக செலவிடப்பட்ட தொகை ரூ.7202.11 இலட்சமும், ரூ.1477.78 இலட்சமும் ஆகும். இவை முறையே 75%ம், 34%ம் ஆகும்.

1999-2000 ஆண்டுக்கு முதற்கட்ட மாவட்டங்களுக்குத் தொடர் செயல் உட்பட ஒதுக்கப்பட்ட தொகை ரூ.2577.76 இலட்சம், இரண்டாம் கட்ட மாவட்டங்களுக்கு ரூ.2885.10 இலட்சம் ஆகும். ஜனவரி வரை செலவிடப்பட்ட தொகை இருகட்ட மாவட்டங்களுக்கும் முறையே ரூ.1717.247 இலட்சம், ரூ.1282.938 இலட்சம்.

1999-2000 ஆண்டுக்குத் தமிழ்நாடு அரசு தன் பங்கான 15%க்கு ரூ.700 இலட்சம் ஒதுக்க வகை செய்து ரூ.251.57 இலட்சத்தை விடுவிக்க அனுமதித்தது. இது போன்றே நடுவணரசின் அனுமதியை எதிர்நோக்கி 2000 -2001 ஆம் ஆண்டுக்கு ரூ.700 இலட்சம் ஒதுக்க வழி வகை செய்துள்ளது.

**பெறப்பட்ட நிதி, வழங்கப்பட்ட தொகை, செலவிடப்பட்ட தொகை**

(ரூபாய் இலட்சத்தில்)

| விவரம் | கட்டம் I | கட்டம் II |
|---|---|---|
| மொத்தத் திட்ட ஒதுக்கீடு | 12597.210 | 9244.290 |
| 31-03-1999 வரை ஒதுக்கீடு | 9585.930 | 4277.680 |
| 31-3-1999 வரை பெறப்பட்ட நிதி | 8879.916 | 3355.974 |
| 31-3-1999 வரை செலவிடப்பட்ட தொகை | 7202.109 | 1447.779 |
| 1999-2000-க்கு நிதி ஒதுக்கீடு | 2577.763 | 2885.096 |
| 1999-2000-க்கு பெறப்பட்ட நிதி (நடுவணரசின் பங்கு) | 925.000 | 500.000 |
| 2000 ஜனவரி வரை செலவு | 1717.247 | 1282.938 |
| செலவு விழுக்காடு | 67 | 44 |



### 4.2 2000-2001 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு

கட்டம் I, II மாவட்டங்களுக்கு 2000-2001 ஆம் ஆண்டுக்கு முறையே ரூ.2627 இலட்சமும், ரூ.2373 இலட்சமும் ஒதுக்கிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

**திட்ட ஒதுக்கீடு**

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | தேர்வு செய்யப்பட்ட மாவட்டங்கள் | திட்ட ஒதுக்கீடு | 1999-2000 வரை திட்ட மதிப்பீடு | 2000-2001 ஆண்டுக்கு நிதிஒதுக்கீடு (1999-2000 ஆம் ஆண்டில் நிலுவையில் உள்ள பணிகள் உட்பட) |
|---|---|---|---|---|
| 1. | 2. | 3. | 4. | 5. |
| 1. | **முதற்கட்ட நான்கு மாவட்டங்கள்** தருமபுரி, திருவண்ணாமலை, கடலூர், விழுப்புரம். | 12597.21 | 12163.69 | 2627.00 |
| 2. | **இரண்டாம் கட்ட மூன்று மாவட்டங்கள்** புதுக்கோட்டை, இராமநாதபுரம், பெரம்பலூர். | 9244.29 | 7162.78 | 2373.00 |

## அத்தியாயம்-V

### 5.6 செயற்பாட்டுக் குறியீடு

### 5.1 பள்ளிகள் இல்லாக் குடியிருப்புகளுக்கு/பகுதிகளுக்கு பள்ளி வசதி வழங்கல்

கி.மீ. சுற்றளவில் பள்ளிகள் இல்லாதவையும், 300-க்கு மேல் மக்கள் தொகையுடையவையுமான குடியிருப்புகளில் தொடக்கப் பள்ளிகள் திறப்பது தமிழக அரசின் கொள்கையாகும். மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டம் செயல்படும் 7 மாவட்டங்களில் 1998-99, 1999-2000 ஆகிய இரு ஆண்டுகளில் 332 தொடக்கப் பள்ளிகளை தமிழக அரசு திறந்துள்ளது. 2000-2001-ல் தகுதி வாய்ந்த எல்லாக் குடியிருப்புகளிலும் ஏறத்தாழ 160 தொடக்கப்பள்ளிகளைத் திறப்பதன் மூலம் அனைத்துக் குடியிருப்புகளுக்கும் கல்வி வசதி வழங்கப்பட உள்ளது. இத்திட்டம் முடிவதற்குள் தகுதி வாய்ந்த அனைத்துக் குடியிருப்புகளிலும் பள்ளிகள் திறக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**1998-1999, 1999-2000ஆம் ஆண்டு திறந்த புதிய பள்ளிகள் விவரம்**

| மாவட்டங்கள் | 1998-1999 | 1999-2000 |
|---|---|---|
| தருமபுரி | 63 | 107 |
| திருவண்ணாமலை | 17 | 26 |
| கடலூர் | 8 | 10 |
| விழுப்புரம் | 9 | 29 |
| மொத்தம் | **97** | **172** |
| பெரம்பலூர் | 11 | 2 |
| புதுக்கோட்டை | 24 | 13 |
| இராமநாதபுரம் | 7 | 6 |
| மொத்தம் | **42** | **21** |
| ஆகமொத்தம் | **139** | **193** |



**பள்ளி வசதி பெற்றுள்ள குடியிருப்புகளின் விழுக்காடு**

| மாவட்டங்கள் | 1998-1999 | 1999-2000 |
|---|---|---|
| தருமபுரி | 92 | 96 |
| திருவண்ணாமலை | 96 | 96 |
| கடலூர் | 93 | 95 |
| விழுப்புரம் | 97 | 99 |
| பெரம்பலூர் | 98 | 98 |
| புதுக்கோட்டை | 97 | 98 |
| இராமநாதபுரம் | 97 | 97 |

ஆதாரம்: ஆண்டுப் பணித் திட்டம், மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டம்

### 5.2 மாணவர் சேர்க்கை

பள்ளி வயதுக் குழந்தைகள் அனைவரையும் பள்ளிகளில் சேர்ப்பதற்காகக் கிராமக் கல்விக் குழு, பெற்றோர் ஆசிரியர் கழகம், சமுதாயம் ஆகியவற்றின் உதவியுடனும் ஒத்துழைப்புடனும் மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்ட மாவட்டங்கள் அனைத்திலும் சேர்க்கை விழாக்களும், விழிப்புணர்வு முகாம்களும் நடத்தப்பட்டன. பள்ளி வயதுக் குழந்தைகளின் எண்ணிக்கையைச் சரியாகக் கணக்கிடுவதற்காக தொடக்க, நடுநிலைப் பள்ளிகள் சார்ந்த குடியிருப்புகளில் வீடுதோறும் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. பள்ளிகளிலிருந்து தொகுக்கப்பட்ட கல்விப் புள்ளி விவரங்கள் பள்ளி கருத்தாய்வு மைய /ஒன்றிய/ மாவட்ட நிலையில் உரிய படிவங்களில் கணினியில் பதிவு செய்யப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அங்கீகாரம் பெற்ற, பெறாத மழலையர் பள்ளிகள், மெட்ரிகுலேஷன் பள்ளிகள் தொடர்பாகத் தனித்தனி விவரங்கள் சேகரிக்கப்பட்டன.

அங்கீகாரம் பெறாதவையும், அங்கீகாரம் பெற்றவையுமான மழலையர் பள்ளிகள், மெட்ரிகுலேஷன் பள்ளிகள், கல்வி பெறாதோர்க்கான சிறப்புப் பள்ளிகள்,

[2000 ஏப்ரல் 10

பள்ளிகளிலும் பயிலும் குழந்தைகளைக் கணக்கில் கொள்ளாததால் மாவட்டங்களில் மொத்த மாணவர் சேர்க்கை, வயது வரம்பினர் சேர்க்கை விகிதங்கள் நிலையாகவோ சற்றே குறைந்தோ, உயர்ந்தோ காணப்படுகிறது. இவ்விரு வகையிலும் சேர்க்கப்பட்ட குழந்தைகளைக் கணக்கில் எடுத்துக் கொண்டால் மொத்தச் சேர்க்கை வீதம் 90 சதவிகிதம் முதல் 102 சதவிகிதம் வரை அமைகிறது.

1999-2000 கல்வியாண்டுத் தொடக்கத்தில் நடத்தப்பட்ட தொடக்கக் கல்வி இயக்கம் தலைமையாசிரியர்களும், ஆசிரியர்களும் பெரும்பாலும் பள்ளி வயதுக் குழந்தைகள் அனைவரையும் ஒன்றாம் வகுப்பில் சேர்க்கப் பெரிதும் உதவியது. மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டம் மொத்த மாணவர் சேர்க்கை விகிதம், வயது வரம்பினர் சேர்க்கை விகிதம், பள்ளி வசதி பெற்றுள்ள குடியிருப்புகளின் விழுக்காடு, மாணவர் ஆசிரியர் விகிதம் போன்றவற்றில் ஆக்கபூர்வமான தாக்கத்தை உண்டாக்கியுள்ளதை இணைப்பிலுள்ள அட்டவணை காட்டும்.

**30-9-1999-ன்படி பள்ளிகள், ஆசிரியர்கள், மாணவர்கள் பற்றிய விபரம்**

(கட்டம் I & கட்டம் II)

| மாவட்டங்கள் | பள்ளிகளின் எண்ணிக்கை | ஆசிரியர்களின் எண்ணிக்கை | மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| தருமபுரி | 2,279 | 6,888 | 2,99,258 |
| திருவண்ணாமலை | 1,702 | 6,145 | 2,31,530 |
| கடலூர் | 1,407 | 6,080 | 2,14,890 |
| விழுப்புரம் | 2,002 | 7,512 | 3,28,274 |
| பெரம்பலூர் | 837 | 3,720 | 1,25,324 |
| புதுக்கோட்டை | 1,354 | 3,956 | 1,47,164 |
| இராமநாதபுரம் | 1,146 | 3,970 | 1,42,394 |
| **மொத்தம்** | **10,727** | **38,271** | **14,88,834** |



2000 ஏப்ரல் 10]

**மொத்த வயது வரம்பினர் சேர்க்கை விகிதம்**

| மாவட்டங்கள் | மொத்தச் சேர்க்கை விகிதம் | | வயது வரம்பினர் சேர்க்கை விகிதம் | |
|---|---|---|---|---|
| | 1998-99* | 1999-2000 | 1998-1999 | 1999-2000 |
| தருமபுரி | 93 | 84 | 71 | 67 |
| திருவண்ணாமலை | 99 | 91 | 71 | 74 |
| கடலூர் | 96 | 78 | 66 | 65 |
| விழுப்புரம் | 90 | 85 | 70 | 71 |
| பெரம்பலூர் | 91 | 88 | 70 | 72 |
| புதுக்கோட்டை | 102 | 83 | 68 | 69 |
| இராமநாதபுரம் | 101 | 95 | 73 | 78 |

குறிப்பு: *1998-99 ஆண்டுக்கு மொத்தச் சேர்க்கை விகிதம் கணக்கிடுகையில் அங்கீகாரம் பெற்ற பள்ளிகள், அங்கீகாரம் பெறாத பள்ளிகள், மெட்ரிக்குலேஷன் பள்ளிகள், மாற்றுப் பள்ளிகளில் சேர்க்கப்பட்ட குழந்தைகளும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளனர்.

ஆதாரம்: மாவட்டக் கல்வித் தகவல் அமைப்பு

## 5.3 ஆசிரியர் நியமனம், மாணவர்-ஆசிரியர் விகிதம்

முதற்கட்ட மாவட்டங்களில் ஓராசிரியர் பள்ளிகளில் இரண்டாவதாக ஓர் ஆசிரியரையும், 100 மாணவர்களுக்கு மேல் உள்ள ஈராசிரியர் பள்ளிகளில் மூன்றாவதாக ஓர் ஆசிரியரையும் மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டம் நியமித்துள்ளது. மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட பணியிடங்களுடன் தமிழ்நாடு அரசு மேலும் புதிய பணியிடங்களை அனுமதித்தது. ஆண்டுத் தொடக்கத்தில் மாவட்டத் திட்டம் ஒருங்கிணைப்பாளர்கள் ஆசிரியர் பணியிடங்களை நிரவல் செய்தனர். இதனால் மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டத்தின் 7 மாவட்டங்களில் ஆசிரியர்-மாணவர் விகிதம் 1:41லிருந்து 1:39ஆகக் குறைந்துள்ளது.

**மாணவர் ஆசிரியர் விகிதம்**

| மாவட்டங்கள் | 1998-99 | 1999-2000 |
|---|---|---|
| தருமபுரி | 47 | 43 |
| திருவண்ணாமலை | 40 | 38 |
| கடலூர் | 35 | 35 |
| விழுப்புரம் | 45 | 44 |
| பெரம்பலூர் | 38 | 34 |
| புதுக்கோட்டை | 39 | 37 |
| இராமநாதபுரம் | 39 | 36 |
| *சராசரி* | ***41*** | ***39*** |

ஆதாரம்: மாவட்டக் கல்வித் தகவல் அமைப்பு.

## 5.4 குறிப்பிட்ட குழுவினர் பற்றிய பகுப்பாய்வு:

பள்ளியின் தரத்தையும், மாணவர்களின் அடைவு நிலையையும் மதிப்பிடுவதற்காக மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டத்தைச் சார்ந்த 3 மாவட்டங்களில், 9 ஒன்றியங்களில் 1998-99-ல் குறிப்பிட்ட குழுவினர் பற்றிய ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டது. இந்த முன்மாதிரி ஆய்வுப் பள்ளிகளின் நிலையைத் தெளிவாகப் படம்பிடித்துக் காட்டியதால் 1999-2000 ஆண்டில் 106 ஒன்றியங்களிலும் உள்ள தொடக்கப் பள்ளிகளின் விவரங்களைச் சேகரித்து அப்பள்ளிகளில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது.

1994-95-ல் ஒன்றாம் வகுப்பில் சேர்ந்த மாணவர்களைக் கணக்கில் கொண்டு, அடுத்த ஐந்தாண்டுகளில் தொடக்கக் கல்வியை முடிப்பது வரை அவர்களது முன்னேற்றத்தைக் கண்காணிப்பதன் அடிப்படையில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ்வாய்வின்மூலம் மாணவர்களின் தொடக்கக் கல்வி, ஐந்தாண்டுகளில் முடிக்கும் விகிதம், இடைவிலகல் விகிதம் ஆகியவை மதிப்பிடப்படுகின்றன. இவ்வாய்வின்மூலம், 1994-95-ல் ஒன்றாம் வகுப்பில் சேர்ந்த குழந்தைகளில், 5 ஆண்டுகளில் தேர்வுபெறாத, திரும்பக் கற்றவர்களின் விழுக்காடு அறியப்படலாகிறது. திரும்பக் கற்பவர்கள் சிலர் ஐந்தாண்டுகளுக்கு மேற்பட்ட காலத்தில் தொடக்கக் கல்வியை முடிப்பர்.





இதுபோன்றே 1994-95-ல் 1 ஆம் வகுப்பில் சேர்ந்த மாணவர்களுக்கும், 1996-97-ல் 1 ஆம் வகுப்பு சேர்ந்த மாணவர்களுக்கும் இடையே அவர்கள் 3 ஆம் வகுப்பு முடிக்கும் விகித வேறுபாடு பற்றிக் கணக்கிடப்பட்டது. இவ்வாய்வினால் 3 ஆம் வகுப்பு முடிப்போர் விகிதம் 67.7 விழுக்காட்டிலிருந்து 71.4 விழுக்காடாக உயர்ந்துள்ளது அறியப்பட்டது. இவ்வுயர்வு திருவண்ணாமலையில் குறைந்தபட்சம் 1.6 விழுக்காடாகவும் விழுப்புரத்தில் 5 விழுக்காடாகவும் உள்ளது. 3 ஆம் வகுப்பு முடிப்போர் விகிதம் ஏற்கனவே திருவண்ணாமலையில் அதிகமாயிருந்ததால் தற்போது வேறுபாடு சற்றே குறைவாகக் காணப்பட்டது.

இவ்வாய்வுகள் பள்ளிகளின் தரத்தை வெளிப்படுத்துவதுடன், பள்ளிகளின் செயல்பாட்டுக்கேற்ப அவற்றை வகைப்படுத்துவதற்கு கல்வியாளர்களுக்கு உதவுகின்றன. குழந்தைகளை வகுப்புகளில் தேர்வு பெறாது திரும்பக் கற்பதற்கும், இடைவிலகுவதற்குமான காரணங்கள் இவ்வாய்வின்மூலம் கண்டறியப்படுகின்றன. மாணவர்களின் அடைவுநிலையை மேம்படுத்துவதற்கும், பள்ளியின் தரத்தை உயர்த்துவதற்கும், உரிய வழிமுறைகளையும், செயல்பாடுகளையும் திட்டமிடுவதற்கு இவ்வாய்வுகள் திட்ட அலுவலர்களுக்குப் பெரிதும் உதவுகின்றன.

2000-2001-ஆம் ஆண்டிற்கான திட்டச் செயல்பாடுகள் இவ்வாய்வின் அடிப்படையில் அமையும். ஒன்றிய, மாவட்ட அலுவலர்கள் இவ்வாய்வைப் பகுத்தாய்ந்து, எதிர்வரும் திட்டச் செயல்பாடுகளில் உரிய உத்திகளையும். அணுகு முறைகளையும் சேர்ப்பர். ஒவ்வொரு ஒன்றியத்திலுமுள்ள பள்ளிகள் செயல்பாட்டுக்கேற்ப வகைப்படுத்தப்பட்டுத் திறமான மேற்பார்வைக்காகவும், கற்பித்தல் சார்ந்த உதவிகள் வழங்குவதற்காகவும் ஒன்றிய, மாவட்ட அலுவலர்களிடையே பிரித்து வழங்கப்பட்டுள்ளன.

5 ஆம் வகுப்பை முடிக்கும் மாணவர்களின் விகிதம் எல்லா மாவட்டங்களிலும் 51% முதல் 61% வரை உள்ளது. மாணவர்களின் அடைவுநிலையை மேம்படுத்துவதன்மூலம் தேர்வு பெறாது திரும்பக் கற்போர் விகிதத்தைக் குறைப்பதுடன் வகுப்பறைச் செயல்பாடுகளை ஆர்வமும், கவர்ச்சியும் உடையனவாகச் செய்வதன் மூலம் இடைவிலகுவோர் விகிதத்தையும் குறைத்தால், அனைத்துக் குழந்தைகளுக்கும் தொடக்கக்கல்வியை அளிப்பது பெரியதொரு பிரச்சினையாக இராது.

[2000 ஏப்ரல் 10

இவ்வாய்வு ஆண்டுகளில் இடைவிலகியோர் விழுக்காடு 15 முதல் 22 வரையிலும், தேர்வு பெறாது திரும்பக் கற்போர் விழுக்காடு 25 முதல் 30 வரையிலும் இருந்தது என்பதை அட்டவணை விளக்குகிறது. இவ்விரு விகிதங்களும் குறைக்கப்படுமானால் 5 ஆண்டு தொடர்ந்து கற்று முடிப்போர் எண்ணிக்கை கணிசமாக அதிகரிப்பது திண்ணம்.

### குறிப்பிட்ட குழுவினர் பற்றிய ஆய்வு

*1994-95-ல் 1 ஆம் வகுப்பில் சேர்க்கப்பட்டு 1998-99-ல் 5 ஆம் வகுப்பு முடித்த மாணவர்.*

| மாவட்டங்கள் | 5 ஆண்டுகளில் 5ஆம் வகுப்பு முடிப்போர் விகிதம் | இடை விலகியோர் விகிதம் | தேர்வுபெறாது திரும்பக் கற்போர் விகிதம் |
|---|---|---|---|
| தருமபுரி | 50.74 | 21.93 | 27.34 |
| திருவண்ணாமலை | 60.44 | 14.63 | 24.93 |
| கடலூர் | 57.27 | 13.54 | 29.19 |
| விழுப்புரம் | 56.44 | 17.95 | 25.61 |
| பெரம்பலூர் | 52.05 | 18.47 | 29.48 |
| புதுக்கோட்டை | 53.72 | 17.67 | 28.62 |
| இராமநாதபுரம் | 52.26 | 17.78 | 29.96 |
| சராசரி | **57.01** | **17.57** | **27.41** |

**2000-2001 ஆம் ஆண்டுக்கான செயல்திட்டம்:**

1. பள்ளிகள் இல்லாப் பகுதிகளில் புதிய பள்ளிகளைத் திறந்து ஆசிரியர்களையும், தலைமை ஆசிரியர்களையும் நியமிப்பதன் மூலம் பள்ளி வசதியைச் செய்து தருதல்.



2000 ஏப்ரல் 10]

2. பகல் நேரங்களில் மாற்றுப் பள்ளிகள் நடத்துதல்; மாற்றுப் பள்ளிகள் தொடங்கவியலாத குடியிருப்புகளில் பள்ளியில் சேராத, இடைவிலகிய குழந்தைகளின் பட்டியல் தயாரித்தல்; அவர்களை முறையாய்ப் பள்ளிகளில் சேர்க்க முயற்சிகள் மேற்கொள்ளல்.

3. நவீன தொழில் நுட்பத்தைப் பயன்படுத்திச் சிக்கன அடிப்படையில் பள்ளிக் கட்டடங்களைக் கட்டுதல்.

4. ஒவ்வொரு மாவட்டத்திலும், 'செய்திமடல்' மாதந்தோறும் தொடர்ந்து வெளியிடுதல்.

5. சமுதாயப் பங்கேற்புக்கு எடுத்துக்காட்டாகத் திகழக்கூடியதும் சமுதாயப் பங்கேற்பைப் பெறுவதற்குத்தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடியதுமான பள்ளிகளைப் பற்றித் 'தனி ஆய்வு' (Case Study) மேற்கொள்ளுதல்.

6. எதிர்வரும் கல்வியாண்டில் திருத்தியமைக்கப்பட்ட ஒன்றாம் வகுப்புப் பாடநூல் அறிமுகப்படுத்தப்படவுள்ளதால் ஒன்றாம் வகுப்பு ஆசிரியர்களுக்குப் பணியிடைப் பயிற்சி வழங்கவும், 5 வகுப்பாசிரியர்களுக்கு வலுவூட்டல் பயிற்சி வழங்கவும் வழிவகை செய்தல்.

7. 1, 2, 3 வகுப்பு மாணவர்களுக்குப் பயிற்சியேடுகள் அச்சிட்டு வழங்குதல்.

8. 1999-2000-ல் ஒன்றாம் வகுப்புப் பாடநூல்கள் திருத்தியமைக்கப்பட்டதுபோல, இவ்வாண்டு இரண்டாம் வகுப்புப் பாடநூல்களைத் திருத்தியமைத்தல்.

9. செயலடிப்படையிலான, குழந்தை மைய கற்றல் கற்பித்தல் முறைகளைப் பின்பற்றும் 'மாதிரிப் பள்ளி' களை எல்லா ஒன்றியங்களுக்கும் விரிவுபடுத்துதல்.

10. செயலடிப்படையில் குழந்தை மையக் கற்றல் கற்பித்தல் முறைகளில் ஆசிரியர்களுக்குத் தொடர்ந்து பணியிடைப் பயிற்சி அளிக்க வழிவகை செய்தல்.

11. பள்ளிகளில் பல்வகுப்புக் கற்பித்தல் முறையை வலுப்பெறச் செய்தல்.

12. மாணவர்களின் அடைவுநிலையை மேம்படுத்துவதற்காக விரிவான, தொடர் மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல்.

13. இயலாக் குழந்தைகளுக்கு ஒருங்கிணைந்த கல்வி அளிப்பதற்காக ஒவ்வொரு மாவட்டத்திலுள்ள மேலும் இரண்டு ஒன்றியங்களைத் தேர்ந்தெடுத்து ஒவ்வொரு ஒன்றியத்துக்கும் சிறப்பாசிரியர்கள் நியமிக்கப்படுவதன் மூலம் இயலாதோருக்கான ஒருங்கிணைந்த கல்வியைத் தீவரமாக்குதல்.

14. எல்லாப் பகுதிகளிலும், எல்லா நிலைகளிலும் ஆசிரியர் பயிற்சிகான தொலைநிலைக் கல்வித் தொழில்நுட்பத் திறன்களை உயர்ந்தபட்சம் பயன்படுத்திக் கொள்ளுதல்.

15. 'பள்ளிகளில் குழந்தை மையக் கற்றல் கற்பித்தல் இடம்பெறுகிறதா' என்பதை மேற்பார்வையிடுவதற்காக ஒன்றிய அலுவலர்களான உதவிக் கல்வி அலுவலர்கள், கூடுதல் உதவிக் கல்வி அலுவலர்கள், ஒன்றியப் பயிற்சி மைய மேற்பார்வையாளர்கள் போன்றோருக்கு உரிய பயிற்சிகள் அளித்தல்.

16. ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள் ஆகியவற்றைச் சார்ந்த வல்லுநர்களின் பணியைப் பயன்படுத்தி மாவட்ட திட்ட செயல்பாடுகளின் விளைவு பற்றி ஆய்வுச் செயல்களை மேற்கொள்ளுதல்.

### முடிவுரை

மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டத்தின் செயல்பாட்டிலும் திட்டச் செயற்பாடுகளை மேற்கொண்டதன் விளைவாலும் மாணவர் சேர்க்கை கூடியுள்ளது. இடைவிலகியோர் விகிதம் குறிப்பிடத்தக்க அளவு குறைந்துள்ளது. பெண் குழந்தைகளின் சேர்க்கை அதிகரித்திருப்பது சிறப்புச் சாதனையாகும். குறிப்பிட்ட குழுவினைப் பற்றிய ஆய்வு 106 ஒன்றியங்களிலும் மேற்கொள்ளப்பட்டதிலிருந்து எல்லா மாவட்டங்களிலும் தொடக்கக் கல்வியை நிறைவு செய்யும் விகிதம் போதிய அளவு உயர்ந்துள்ளது என்பதும், குழந்தைகளின் அடைவுநிலை மேம்பாட்டின் மூலம் தேர்வுபெறாது திரும்பக் கற்போரின் விகிதம் குறைக்கப்படுமானால் அனைத்துப் பள்ளி வயதுக் குழந்தைகளுக்கும் தரமான கல்வி அளிக்கும் கனவு நனவாகும் என்பதும் விளங்குகிறது. இத்திட்டத்தின் தாக்கம் அனைத்துக் கூறுகளிலும் வெளிப்படையாகப் புலப்படுகிறது. மேலும் வகுப்பறையில் ஒரு சிறந்த நிரந்தரமான மாற்றத்தைக் கொண்டு வருவதற்கும் குழந்தைகளின் அடைவு நிலையை மேம்படுத்துவதற்கும் உரிய ஒவ்வொரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படுகிறது.



## இணைப்புகள் III

# உயர் கல்வித் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு

## மானியக் கோரிக்கை எண் 17 - கல்வி

## 2000-2001

### 1. கொள்கை விளக்கம்

இருபத்தொன்றாம் நூற்றாண்டில் மக்களின் பயனுக்காக, சமூக, பொருளாதார அமைப்பு முறைகளை மாற்றியமைப்பதற்கான முதன்மைக் கருவியாக உயர்கல்வி அமைந்துள்ளது. தகவல் தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தியும், அறிவு வளர்ச்சியையும் வேலை வாய்ப்புகளின் பெருக்கத்தையும் வலியுறுத்திக் கற்பித்தலிலும், கற்றலிலும் புதுமையான வழி முறைகள் கொண்டு வருவதன் வாயிலாக உலகம் முழுவதும், உயர் கல்வி முறையில் பல பல மாற்றங்கள் கொண்டு வரப்படுகின்றன.

1.2. புதிய நூற்றாண்டில் எழும் தேவைகளை உடனுக்குடன் கவனித்து நிறைவு செய்யும்பொருட்டு, இம்மாநிலத்தில், உயர் கல்வி முறை வலிமை பெறச் செய்வதில், தமிழ்நாடு அரசு தனி நாட்டம் செலுத்துகிறது. தற்போதுள்ள கல்வி வசதிகள் மற்றும் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை நிலைப்படுத்துவதிலும், தொழில்நுட்பக் கல்விக்கும் அதற்கு நிகராக உயர் தரமுடைய கலை, அறிவியல் மற்றும் மானுடவியல் கல்வித் திட்டங்களுக்கும் சமச்சீரான அளவில் நாட்டஞ் செலுத்துதலிலும் தமிழ்நாடு அரசின் முயற்சிகள், முனைப்புடையதாக அமையும். அதே நேரத்தில், மகளிர் ஊரகப் பகுதிகளில் வாழும் மக்கள் மற்றும் சமுதாயத்திலுள்ள தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் ஆகியோர் உள்ளிட்ட சமுதாயத்தின் நலிந்த பிரிவினரின் கல்வித் தேவைகள் குறித்தும் தமிழ்நாடு அரசு அக்கறை எடுத்துக்கொள்கிறது.

1.3 "மானியக் கோரிக்கை 17-கல்வி" என்ற தலைப்பின்கீழ், மொத்த வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீடு ரூபாய் 4648.95 கோடியாகும். இதில், உயர் கல்வித் துறைக்கென ஒதுக்கப்பட்ட தொகை ரூபாய் 812.79 கோடியாகும். இது கல்விக்கான மொத்த ஒதுக்கீட்டில் 17.48 விழுக்காடு ஆகும்.

1.4 தமிழ்நாட்டிலுள்ள தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்களில் பயின்ற பட்டதாரிகள், இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் தொழில் துறையில்

பாராட்டத்தக்க வகையில் பணியாற்றுகின்றனர் என்பது மிகவும் பெருமைக்குரியதாகும். அவர்களில் பலர், தொழில் திறனால் வளர்ந்து பெரிய தொழில் முனைவர்கள் ஆகியுள்ளனர்.

1.5. இம்மாநிலத்தில், பொறியியல் கல்லூரிகளிலும் மற்றும் பல்தொழில் நுட்பப் பயிலகங்களிலும் சேர்த்துக் கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கை, தேசிய அளவில் இரண்டாவது இடத்தில் உள்ளது. ஓராண்டில் பொறியியல் கல்லூரிகளில் அனுமதிக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை 35,230யும், பல்தொழில்நுட்பப் பயிலகங்களில் அனுமதிக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை 47,500யும் எட்டியுள்ளது. புதிய கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதைவிட, இந்தக் கல்வி நிறுவனங்களில் அளிக்கப்படும் கல்வியின் தரத்தை மேம்படுத்துவதே அரசின் கொள்கையாகும். இந்நோக்கத்திற்காக, வெளியுலகில் இடம்பெறும் தொழில்நுட்ப/உத்திகளில் தோன்றுகின்ற புத்தம் புதிய மேம்பாடுகளையும், வளர்ச்சிகளையும் கருத்தில் கொண்டு அவ்வப்போது பொறியியல் கல்வி முறையையும், பாடத்திட்டத்தையும் நிலை உயர்த்துவதற்கான திட்டங்களை அரசு செயற்படுத்தும். பெரும்பாலான தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்களில் ஆசிரியர்களுக்குக் கடும் பற்றாக்குறை நிலவுகிறது. இதனை நிறைவு செய்யும்பொருட்டு, தகுதியுடைய ஆசிரியர்களுக்குப் பயிற்சியளிப்பதற்காக அரசு தனி முயற்சி மேற்கொள்ளும். பயிற்சியின்போது அல்லது பட்டம் பெற்ற பின்னர், வேலைவாய்ப்புகளைப் பெறுவதற்காகத் தொழிற்சாலைகளுக்கும், கல்வி நிறுவனங்களுக்கும் இடையில் நெருங்கிய தொடர்பை ஊக்குவிக்க அரசு சிறப்புக் கவனம் செலுத்தும்.

1.6 தமிழ்நாட்டிலுள்ள பொறியியல் கல்லூரிகளில், முற்றிலும் வெளிப்படையான, ஒளிவு மறைவற்ற தன்மையையுடைய மாணவர் சேர்க்கை முறையைக் கொண்டுவரும் நோக்குடன், இவ்வரசு 1997-98 ஆம் ஆண்டில் மாணவர் சேர்க்கைக்காக ஒற்றைச் சாளர முறை என்ற ஒரு புதிய முறையை அறிமுகப்படுத்தி, மாணவர்களின் தகுதி முன்னுரிமையைக் காக்கும் வகையில் சேர்க்கை நடைமுறையைச் சீராக்கியுள்ளது. இந்நடைமுறையைத் திட்டமிட்டு நிறைவேற்றும் பணியை அண்ணா பல்கலைக்கழகம் 1997-98 ஆம் ஆண்டிலிருந்து வெற்றிகரமாகச் செயற்படுத்தி வந்துள்ளது. இந்த முறைக்கு மாணவர்கள், பெற்றோர்கள், பொதுமக்கள் மற்றும் இதழ்கள் ஆகிய அனைத்துத் தரப்பினரிடமிருந்தும் ஒருமித்த வகையில் மனமுவந்த பாராட்டுகள் கிடைத்துள்ளன.

1.7 தமிழ்நாடு காலங்காலமாகவே, அடிப்படை அறிவியல், கணிதம், இலக்கியம், பொருளாதார அறிவியல் போன்ற பல துறைகளில் சிறப்பான இடம் வகித்து வந்துள்ளது. தமிழ் நாட்டைச் சேர்ந்த கல்வியாளர்கள்





ஆராய்ச்சியாளர்கள் ஆகியோர் அறிவியல் துறைக்கு ஆற்றியுள்ள அரும்பணி, உலகளாவிய பாராட்டைப் பெற்றுள்ளது. மிகவும் மதிப்பு வாய்ந்த அறிவியல் அரங்கங்கள் சிலவற்றில் அவர்கள் கலந்து கொண்டு, நமது மாநிலத்திற்குப் பெருமை ஈட்டித் தந்துள்ளனர்.

1.8 அதே சமயத்தில், நமது நாட்டில், அண்மைக் காலத்தில் கலை, அறிவியல் துறைகளில் கல்வியின் தரம் குறைந்துகொண்டேவரும் போக்கினை அரசு அறிந்துள்ளது. புகழ்பெற்ற கல்வி நிறுவனங்களின் கலை, அறிவியல், பட்ட மேற்படிப்புப் பாடத்திட்ட முறைகள்கூட, கல்வித் தகுதியில் சிறந்த மாணவர்களை ஈர்க்கத் தவறியுள்ளன. இந்நிலைமை, நாடு தழுவிய அளவில் கவலையளிப்பதாகவுள்ளது. சிறந்த திறமை வாய்ந்த மாணாக்கர்களை நமது கல்வி நிறுவனங்கள் ஈர்க்கும் வகையில் இன்றுள்ள போக்கினை மாற்றுவதற்குப் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. வரும் ஆண்டுகளில் கலை, அறிவியல் ஆகிய துறைகளில் முன்னர் பெற்றிருந்த தகுதியை நிலை நிறுத்திக் கொள்வதற்கான சிறப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசு விழைகிறது. தமிழ்நாட்டின் கல்லூரிகள் பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றில் கலை, அறிவியல், பட்ட மேற்படிப்பு பாடத்திட்ட குறைகளைச் சீரமைத்து, கல்வித் தகுதியை உயர்த்த தனிக் கவனம் மேற்கொள்ளப்படும்.

1.9 தமிழ்நாட்டிலுள்ள பெரிய பல்கலைக்கழகங்கள் ஒவ்வொன்றிலும் நமது மாநிலத்திற்கு மிகவும் தொடர்புடையதாக அமையும். தேர்ந்தெடுக்கப்பட்ட கலை மற்றும் அறிவியல் துறைகள் சிலவற்றில், “உயர் தனிச் சிறப்பு மையம்'' (Centre of Excellence) ஏற்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆய்வு செய்யப்படும். உயர் தனிச் சிறப்பு மையங்களை ஏற்படுத்துவதற்குரிய சிறப்புத் துறைகளையும் கல்வி நிறுவனங்களையும் தெரிவு செய்வதற்கான வழிகாட்டி நெறிமுறைக் கோட்பாடுகளை அரசு வகுக்கும்.

1.10 பட்டப் படிப்பு துவக்க நிலையிலிருந்தே திறமைமிக்க மாணவர்கள், பட்ட மேற்படிப்புகளிலும் ஆராய்ச்சிகளிலும் சேரும் வகையில், அவர்களை ஈர்ப்பதற்காக, கலை மற்றும் அறிவியல் சார்ந்த அனைத்து முக்கியமான பாடப்புலங்களையும், உள்ளடக்குகின்ற வகையில் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆய்வுகள் செய்யப்படும். இது தொடர்பான நடவடிக்கை முதற்கண் உயிர் அறிவியல், பொருண்மை அறிவியல், மொழியியல், கணினியியல், பொருளாதார அறிவியல் மற்றும் கணிதம் ஆகிய ஆறு முக்கிய பாடப்புலங்களில் செயற்படுத்தப்படுவதற்கு முயற்சி மேற்கொள்ளப்படும். பின்னர், இந்த முயற்சி ஏனைய முக்கியமான பாடப்புலங்களுக்கும் நீட்டிக்கப்படும்.

*1.11* பட்டப்படிப்பு நிலையில், அனைத்து மாணவர்களும், நமது முதல் பட்டத்தைப் பெறுவதற்கு முன்னதாக, குறைந்தது 150 மணி நேரம் கணினிப் பயிற்சி பெறுவது உறுதிப்படுத்தப்படும். இப்பயிற்சியின் மூலம் கணினியைத் தன்னம்பிக்கையுடன் பயன்படுத்துவதற்கும், தெரிந்தெடுத்துள்ள குறிப்பிட்ட பாடவியலில் கணினி அறிவைப் பயன்படுத்துவதற்கும், பயிற்சி வழங்குவதுடன் அவர்கள் பட்டம் பெற்றவுடன், வேலைவாய்ப்பைப் பெறுவதற்கும், உதவியாக இருக்கும். முதற்கண், இத்திட்டம், இம்மாநிலத்திலுள்ள 60 அரசுக் கல்லூரிகளில் செயற்படுத்தப்படும். பின்னர், இத்திட்டம் ஏனைய அரசு மானியம் பெறும் கல்லூரிகள் மற்றும் தனியார் கல்வி நிலையங்களுக்கும் விரிவுபடுத்துவது குறித்து ஆய்வு செய்யப்படும்.

*1.12.* கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள், அவர்கள் பட்டப் படிப்பு முடித்த பின்னர், வேலைவாய்ப்பைப் பெறவியலும் பொருட்டு அதற்குத் தேவையான அறிவும், அனுபவமும் பெறும் வகையில் அம்மாணவர்களுக்குப் பயன்படுமாறு பாடமுறைகளை அரசு விரிவுபடுத்தும். மாணவர்களின் முதற்பட்டப்படிப்பு திட்டத்திலேயே, வேலை நோக்கத்திற்கு ஏற்ற பாட முறைகளையும் உள்ளடக்கியதாக அமையும் வகையில் போதிய அளவிற்கு நீக்குப்போக்கு உடையதாக இருக்கும் வண்ணம், கலை, அறிவியல் கல்லூரிகளின் பாடத்திட்டங்களும், பாடப்பிரிவுகளும் அவ்வப்போது மறு ஆய்வு செய்யப்பட்டு அவ்வக்காலத்து வேண்டப்படும் முன்னேற்றங்களைக் கொண்டமையாக ஆக்கப்படும்.

*1.13.* தமிழ்நாடு மாநிலத்தில், அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்கள் பெரும் எண்ணிக்கையில் உள்ளன என்பது மிகவும் மனநிறைவு அளிக்கக் கூடியதாகும். கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களைப் பொறுத்த வரையில், தேசிய தர மதிப்பீடு ஏற்பளிப்பு மன்றத்தால் மதிப்பீடு செய்யப்பட்டு, தரமுள்ள நிறுவனம் என்கிற தகுதியைப் பெறுவதற்கும், தொழிற்கல்வி நிறுவனங்களைப் பொறுத்தவரையில், தேசீய தர ஏற்பளிப்பு வாரியத்தால் தரம் பெற்ற நிறுவனங்கள் என்கிற சான்றினைப் பெறுவதற்கும், தரத்தை உயர்த்திட முனையும் வகையில், மாநிலத்தில் உள்ள ஒவ்வொரு உயர்கல்வி நிறுவனத்தையும் ஊக்குவிப்பதே அரசின் கொள்கையாகும். தரம் வாயந்த நிறுவனம் என்கிற ஏற்பளிப்பைப் பெறுவதற்கு இக்கல்வி நிறுவனங்களில் கற்பித்தல், கற்றல் மற்றும் நிருவாகம் ஆகியவற்றின் தரத்தினை மேம்படுத்துவது போன்று, புதிய கல்வித் திட்டத்தை வகுக்கவும் இவைகட்கு



ஊக்கமளிக்கப்படுகின்றது. உயர்தர மதிப்பீட்டினை எய்த இந்நிறுவனங்களின் ஆசிரியர்கள் மற்றும் நிர்வாகிகளுக்கு புத்தறிவுப் பயிற்சி வசதிகள் அளிக்க அரசு ஆதரவு அளிக்கும்.

*1.14.* மாணவர்களிடம் அமைந்துள்ள தனித் திறமைகளைக் கண்டறியும் வகையில் கல்லூரிகளிலும், பல்கலைக்கழங்களிலும் உடற்பயிற்சி முறைகளையும், வசதிகளையும் மேம்படுத்துவதில் அரசு கவனம் செலுத்துகிறது.

*1.15.* இம்மாநிலத்தில் கணிப்பொறி இணைய வசதியைப் பயன்படுத்துபவர்களின் எண்ணிக்கை தற்போது உயர்ந்து வருகின்றது. அண்மைக் காலத்தில் தகவல் தொழில்நுட்பத் துறையில் ஏற்பட்டுவரும் வளர்ச்சியைப் பயன்படுத்திக்கொள்ளப் பல்கலைக்கழகங்கள் முனைந்துள்ளன. இதன் பயனாக அனைத்துப் பல்கலைக்கழகங்களும், ஒரு பொதுவான கணினி தகவல் தளத்துடன் இணைக்கப்படும். இதில் ஒவ்வொரு பல்கலைக்கழகமும் வளர்த்துள்ள அதன் தனித்தன்மைகள் சிறப்பான இடம் பெறும். இப்பல்கலைக்கழகங்களின் பாடத்திட்டங்களையும், பயிற்சி முறை செயற்பாடுகளையும் அறிய விரும்புகின்ற மாணவர்கள் மற்றும் பொதுமக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவு செய்கின்ற வகையில், அவற்றைப் பற்றிய அனைத்து விவரங்களையும், அவற்றின் தனிப்பட்ட தகவல் கணினி தகவல் தளத்தின் மூலம் அறியச்செய்யும். இத்தகைய விவரங்களில் பல்கலைக்கழங்களின் ஆட்சிமுறை, அவைகளுடன் இணைக்கப்பட்ட கல்லூரிகளில் கற்பிக்கப்படும் பாடங்கள், கல்வித்தகுதிகள், தேர்வுகள், மாணவர்களைச் சேர்ப்பது தொடர்பான கொள்கைகள், ஆராய்ச்சிக்கான நிதிஉதவிகள், [illegible] முதலான பலவும் அ[illegible] புத்தக வெளியீடுகள், நூல்நிலையத் தகவல்கள் [illegible]

*1.16.* கல்வி ஆதாரங்களான இதழ்கள், புத்தகங்கள், [illegible] தகவல் பதிவுக் குறுந்தகடுகள் (C.D. [illegible] வாயிலாகப் படிக்கவியலும் [illegible] மாணவர்களை எளிதாக[illegible] மற்றும் முக்கிய அறிக்கைகள் ஆகியவை [illegible] பல்கலைக்கழகங்களின் நூல் நிலையங்களையும் ஒருங்கிணைக்கத் தகுந்த முயற்சி எடுக்கப்படுகிறது. அடையும் வகையில், அனைத்துப் புத்தகங்கள் மற்றும் இதழ்களின் விலை மிகவும் உயர்ந்து வருவதால், இம்முயற்சியால், எந்தவொரு பல்கலைக்கழகத்திலும் உள்ள மாணவர் அல்லது ஆசிரியர், பிற பல்கலைக்கழக நூல் நிலையங்களில் கிடைக்கப்பெறும் நூல்களையும் இதழ்களையும் ஏனைய தகவல்களையும் பயன்படுத்திக் கொள்வது எளிதாகிறது. கணினி தகவல் இணையத்தொடர்பு கிடைக்கப்பெற்ற பின்னர், உலகில், எந்தவொரு நூல் நிலையத்திலும் உள்ள தகவல் ஆதாரங்களை உடனுக்குடன் அறியவும்,

அவற்றை விரைவில் பெறுவதற்குமான சிறப்பு வசதிகளைப் பல்கலைக்கழங்கள் பெற்றிருக்கும். காலப்போக்கில் ஆசிரியர் மாணவர் மட்டுமின்றிப் பொதுமக்களும் பயன்கொள்ளும் வகையில், பல்கலைக்கழகங்களின் நூல்நிலைய வசதிகள் அவர்கட்கு எளிதில் கிடைக்கும் வழிகாணப்படும்.

1.17. தகவல் தொழில்நுட்பத்தில் அண்மைக் காலத்தில் ஏற்பட்டுள்ள வியத்தகு முன்னேற்றம் காரணமாக உலகம் முழுவதிலும் உள்ள பல பல்கலைக்கழகங்கள் (கணினி) இணையத்தளத்தின் வாயிலாக பாட வகுப்புகளை நடத்தி வருகின்றன. மாநிலத்திலுள்ள ஏனைய கல்வி நிறுவனங்களின் தேவைகளை நிறைவு செய்யவும், கணினி இணையத்தைப் பயன்படுத்துவதன் மூலம், தொலைவழிக் கல்வி வசதிகளை நல்கவும் தமிழ்நாட்டிலுள்ள பல பல்கலைக்கழகங்களும் கணினி இணையத்தளத்தின் வாயிலாகக் கல்வி பயிலும் வசதிகளை வழங்கச் சிறப்பான முயற்சி மேற்கொண்டுள்ளது என்பதைக் குறித்துப் பெருமிதம் கொள்ளலாம். வெளிநாட்டைச் சேர்ந்த உயர்கல்வி நிறுவனங்களுடன் இணைந்து உயர்நிலைச் சிறப்புத் துறைகளில் கணினி தளத்தின் வாயிலாக கல்வித்திட்டங்களை வழங்குவதற்கு வேண்டிய ஒப்பந்தங்களைச் செய்துகொள்ள மாநிலத்திலுள்ள உயர்கல்வி நிறுவனங்களுக்கு தமிழ்நாடு அரசு ஊக்கமளித்து வருகிறது. தமது கல்வித் திட்டங்களை நாட்டின் ஏனைய பகுதிகளிலும் வெளிநாடுகளிலும் கொண்டு சென்று அறிமுகப்படுத்தி தமது கல்விப்பணிகளை மேம்படுத்த முற்படுகின்ற கல்வி நிறுவனங்களுக்கு அரசு ஊக்கமளிக்கும்.

1.18. கலை மற்றும் அறிவியல் கல்வியிலும், பொறியியல் மற்றும் மேலாண்மைக் கல்வியிலும், பட்டப்படிப்பு மற்றும் பட்டமேற்படிப்புகளில் மகளிர் அதிக எண்ணிக்கையில் சேர்ந்து படிக்கின்ற வகையிலான பெரிய மாற்றம் அண்மை ஆண்டுகளில் நிகழ்ந்துள்ளது. தற்போது, இம்மாநிலத்தில் பட்டமேற்படிப்பு கல்வித் திட்டங்களில், மாணவர் எண்ணிக்கையில் 40 முதல் 45 விழுக்காடு மகளிரும், பட்டப்படிப்புக் கல்வித் திட்டங்களில் 50 முதல் 55 விழுக்காடு மகளிரும் இடம் பெற்றுள்ளனர். பதக்கம், பரிசுகள், மதிப்பு வரிசை நிலை ஆகியவற்றிலும் மாணவிகளின் சாதனை விகிதம் மிக அதிகமாக உள்ளது. மகளிருக்கு வேலைவாய்ப்பு அளிப்பதில் காலங் காலமாக இருந்துவரும் தடையும் தயக்கமும் கணிசமான அளவிற்குக் குறைந்து வந்துள்ளது. உயர்கல்வியில், அனைத்து நிலைகளிலும் குறிப்பாக, தனித்திறன், அறிவு, தேர்ச்சி ஆகியவை தேவைப்படக் கூடிய துறைகளிலும், மகளிர் பங்கை பெறும் அளவை உயர்த்த வேண்டுமென்பதே மாநில அரசின் கொள்கையாகும். முனைவர் படிப்பை மேற்கொள்ள விழையும் மாணவிகளுக்குத் தனி ஊக்க உதவித் தொகை அளிப்பதையும் அரசு பரிசீலிக்கும்.



## 2000-2001 மாநில வரவு செலவுத் திட்டத்தில் உயர் கல்வித் துறை குறித்த நிதி ஒதுக்கீடு

### அட்டவணை-1

மானியக் கோரிக்கை 17-கல்வி என்ற தலைப்பின்கீழ் உயர் கல்வி துறைக்கான மொத்த செலவினத் தொகை ரூ.812.79 கோடி ஆகும். இதில் ரூ.17.97 கோடி திட்டப் பணிகளுக்கானதாகும். மாநில வருவாய்க் கணக்கின் பேரிலான மொத்தச் செலவான ரூ.21564.87 கோடியில் கல்விக்கான செலவு 3.76 விழுக்காடு எனக் கணக்கிடப்படுகிறது.

| | கணக்குத் தலைப்பு | திட்டப் பணி | திட்டத்தில் சேராதது | மொத்தம் |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 20.59 | அரசுக் கல்லூரிகள், கட்டடங்கள் பராமரித்தலும், செப்பனிடுதலும் | .. | 715.50 | 715.50 |
| 2202 | பொதுக் கல்வி | | | |
| 03 | பல்கலைக்கழக கல்வியும் உயர் கல்வியும் | 832.37 | 62020.56 | 62852.93 |
| 2203 | தொழில்நுட்பக் கல்வி | 360.69 | 14837.29 | 15197.98 |
| 2204 | போட்டி விளையாட்டுகளும் இளைஞர் நலப் பணிகளும் | | | |
| 102 | தேசிய மாணவர்படை மற்றும் தேசிய பணித் திட்டம் | 325.50 | 1396.70 | 1722.00 |
| 2205 | கலையும் பண்பாடும் | | | |
| 104 | ஆவணக் காப்பகங்கள் | 29.05 | 340.75 | 369.80 |
| 2235 | சமூகப் பாதுகாப்பும் நலனும் படிப்புதவித் தொகைகளும் பயிற்சி உதவித் தொகைகளும், (Scholarships and Stipends) | .. | 4.69 | 4.69 |
| 2551 | மலைப்பிரதேச மேம்பாடு (Remote Sensing) | 0.04 | .. | 0.04 |
| 3425 | அறிவியல் பணிகளும், ஆராய்ச்சியும் | 219.23 | .. | 219.23 |
| 3454 | மக்கள் தொகை கணக்கெடுப்பும் ஆய்வுப் புள்ளியியல் விவரம் | | | |
| 110 | Gazetters and Statistical Memoirs | 28.27 | .. | 28.27 |
| | நிகர மொத்தம் | 1795.05 | 79315.49 | 81110.64 |
| | திருப்பி வசூலிக்கப்பட்டவை | 2.89 | 165.53 | 168.42 |
| | **தொகு மொத்தம்** | **1797.94** | **79481.02** | **81279.06** |

[2000 ஏப்ரல் 10

## 2000-2001 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீடு

### அட்டவணை -2

| கணக்குத் தலைப்பு | | திட்டப் பணி | திட்டத்தில் சேராதது | மொத்தம் |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| மானியக் கோரிக்கை எண்: 36 | | | | |
| மானியக் கோரிக்கை எண்: 55 | | | | |
| 4202 | கல்வி, போட்டி விளையாட்டு, கலை, பண்பாடு குறித்த மூலதனச் செலவு | | | |
| 01 | பொதுக் கல்வி | | | |
| 203 | பல்கலைக்கழகக் கல்வியும் ஏனைய உயர் கல்வியும் | 438.55 | .. | 438.55 |
| 02 | தொழில்நுட்பக் கல்வி | | | |
| 104 | பல்தொழில்நுட்பப் பயிலகங்கள் | 0.01 | .. | 0.01 |
| 105 | பொறியியல்/தொழில்நுட்பக் கல்லூரிகள், கல்வி நிறுவனங்கள் | 20.15 | 30.01 | 50.16 |
| | நிகர மொத்தம் | **458.71** | **30.01** | **488.72** |
| மானியக் கோரிக்கை எண் 61 | | | | |
| 6202 | கல்வி,போட்டி விளையாட்டு, கலை பண்பாட்டிற்கான கடன்கள் | | | |
| 01 | பொதுக் கல்வி | | | |
| 203 | பல்கலைக்கழகக் கல்வியும் உயர் கல்வியும் | 12.00 | .. | 12.00 |
| 02 | தொழில்நுட்பக் கல்வி | .. | .. | .. |
| 800 | ஏனைய கடன்கள் | .. | .. | .. |
| | நிகரமொத்தம் | 12.00 | .. | 12.00 |
| | தொகு மொத்தம் | **470.71** | **30.01** | **500.72** |



2000 ஏப்ரல் 10]

## பகுதி இரண்டு திட்டம் 2000-2001

| வரிசை எண் | திட்டப் பணிகளின் விவரம் | இறுதி நிலைச் செலவு | 2000-2001-இல் செலவு |
|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| | கல்லூரிக் கல்வி (திட்டப் பணிகள்) | | |
| 1 | அரசினர் கல்லூரிகள் பத்தில் கணினி வன்பொருள் வழங்குதல் | 7.00 | 7.00 |
| 2 | அரசினர் கல்லூரி ஏழில் ஆய்வுக்கூட வசதிகளை வலுப்படுத்துதல் | 21.00 | 21.00 |
| 3 | அரசினர் கல்லூரிகள் பத்தொன்பதில் கணினி ஆய்வுக்கூட வசதிகளை மேம்படுத்துதல் | 47.50 | 47.50 |
| 4 | அரசினர் கல்லூரிகள் இருபதில் ஆதிதிராவிடர்/பழங்குடியினர்/ மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு சிறப்புப் பயிற்சி | 2.00 | 2.00 |
| 5. | தன்னாட்சி உரிமை பெற்ற அரசினர் கல்லூரிகள் எட்டில் தற்போதுள்ள நூலக வசதிகளை வலுப்படுத்துதல் | 12.00 | 12.00 |
| | | **89.50** | **89.50** |
| | தமிழ்நாடு ஆவணக் காப்பகம் (திட்டப் பணிகள்) | | |
| 6 | மைக்ரோ ஃபிலிம் பிரிவுக்காக ப்ராஸஸர் ஒன்று வாங்குவதற்காக (திட்டத்தில் சேராதது) | 10.00 | 10.00 |
| 7 | தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தில் 7,8,9 அடுக்குகளைக் கொண்ட அலமாரிகளைப் பேணி வருதல் | 5.00 | 5.00 |
| | | **15.00** | **15.00** |

### பகுதி இரண்டு திட்டம் 2000-2001

| வரிசை எண் | திட்டப் பணிகளின் விவரம் | இறுதி நிலைச் செலவு | 2000-2001-இல் செலவு |
|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| | **தொழில்நுட்பக் கல்வி (திட்டப் பணிகள்)** | | |
| 8 | வேலூர் தந்தை பெரியார் அரசினர் தொழில்நுட்ப நிறுவனத்தில் மின்னணுவியல் பொறியியல் ஆய்வுக்கூடத்தை ஏற்படுத்துதல் | 75.00 | 36.00 |
| 9 | திருநெல்வேலி அரசினர் பொறியியல் கல்லூரியில் கணினி உதவியால் தயாரிக்கும் ஆய்வுக்கூடத்தை மேம்படுத்துதல் | 13.00 | 13.00 |
| | | **88.00** | **49.00** |
| | **அண்ணா பல்கலைக்கழகம் (திட்டப் பணிகள்)** | | |
| 10 | கணினி உதவியால் வடிவமைக்கும் ஆய்வுக்கூடத்தை வலுப்படுத்துதல் | 28.80 | 6.00 |
| | **தமிழ்நாடு அறிவியல் மற்றும் தொழில் நுட்ப மையம் (திட்டப் பணிகள்)** | | |
| 11 | அறிவியல் நகரத்திற்கு தகவல் மையம் ஏற்படுத்துதல் | 20.00 | 3.00 |
| | **தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றம் (திட்டப் பணிகள்)** | | |
| 12 | தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றத்திற்கு மானியங்கள் வழங்குதல் | 20.00 | 20.00 |
| மொத்தம் | திட்டத்தில் சேராதது | 5.00 | 35.00 |
| | திட்டப் பணிகள் | 256.30 | 147.50 |
| பெரு மொத்தம் | | 261.30 | 182.50 |



**2. தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றம் :**

2.1. மாநில அளவிலான உயர் கல்வித் திட்டங்களை மேம்படுத்துவதற்கும், உயர் கல்விக்கான மாநில மற்றும் பல்கலைக்கழக நல்கை நிதிக் குழுவின் திட்டங்களை ஒருங்கிணைப்பதற்கும் உதவும் வகையில் தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றம், ஒரு தன்னாட்சி நிறுவனமாக 1992ஆம் ஆண்டு தமிழக சட்டப் பேரவையில் இயற்றப்பட்ட சட்ட வாயிலாக உருவாக்கப்பட்டது. இந்நிறுவனம் மாநிலக் கல்வி அமைச்சரைத் தலைவராகக் கொண்டு செயல்படுகிறது.

2.2. மன்றத்தின் முக்கியப் பணிகள்:

(அ) உயர் கல்வி மற்றும் ஆய்வு தொடர்பாக அரசு பல்கலைக்கழகங்கள் கல்லூரிகள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்கள் ஆகியவை அணுகும்போது அவற்றுக்குத் தக்க ஆய்வுரைகள் வழங்குதல்.

(ஆ) உயர் கல்வி மேம்பாட்டிற்கான தகுந்த திட்டங்களை மாநில அளவில் உருவாக்குதல்.

(இ) பல்கலைக்கழக நிதி நல்கைக் குழு அவ்வப்போது வழங்கும் நெறிமுறைகளுக்கிணங்க உயர் கல்வி நிறுவனங்களின் தரத்தை மேம்படுத்தும் வகையில், அவற்றின் செயல்பாடுகளைத் திட்டமிட்டு உருவாக்கிடவும் அவற்றை நிறைவேற்றவும் உதவி செய்தல்.

(ஈ) மாநில அளவில் உள்ள கல்லூரிகள் பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களின் மேம்பாட்டுத் திட்டங்களைத் தெரிவு செய்து மன்றத்தின் குறிப்பு மற்றும் பரிந்துரையுடன் பல்கலைக்கழக நிதி நல்கைக் குழுவிற்கு அனுப்புதல் மற்றும் திட்டப் பணிகளில் செயலாக்கத்தைக் கண்காணித்தல்.

(உ) உயர் கல்வி நிறுவனங்களுக்கிடையே ஒத்துழைப்பினை உயர்த்துதல், ஒருங்கிணைத்தலை மேம்படுத்தல் மற்றும் அவை தொழில் நிறுவனங்களுடன் தொடர்பு கொள்வதற்கான வாய்ப்பு வசதிகளைக் கண்டறிதல்.

(ஊ) பல்கலைக்கழக நிதி நல்கைக் குழு மற்றும் அரசு விதிமுறைகளுக்கிணங்க, புதிய உயர் கல்வி நிறுவனங்களை தோற்றுவிப்பதற்கான நெறிமுறைகளை வடிவமைத்தல்.

(எ) மாநிலத்தில் உயர் கல்விக்கென கூடுதல் நிதி ஆதாரங்களை ஏற்படுத்தும் வழிவகை குறித்து அறிவுரை நல்குதல்.

[2000 ஏப்ரல் 10

(ஏ) உயர் கல்விக்கான பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் மற்றும் இதர கல்வி நிறுவனங்களில் பாடத் திட்டத்தை செழுமைப்படுத்தவும், காலத்திற்கேற்றவகையில் கல்வித் தரத்தை சீரமைக்கவும் உதவுதல்.

(ஐ) தன்னாட்சிக் கல்லூரி மற்றும் பல்கலைகழகங்களின் தேர்வுகளின் தரம் உயரவும், தொடர்ந்து செம்மையாக நடைபெறும்வகையில் சீரமைக்கவும் உரிய அறிவுரைகள் பகர்தல்.

(ஒ) கல்வித் தரத்தை நிர்ணயித்து அதன் தொடர்ச்சியான உயர்வுக்கு வழிவகுத்திட பல்கலைக்கழக நிதி நல்கைக் குழுவிற்குத் தேவையான உதவி புரிதல்.

2.3. உயர் கல்வி சார்ந்த பல்வேறு துறைகளுக்கான பாட நூல்களைத் தமிழில் வெளியிட முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதுகாறும் 70 பாட நூல்கள் தமிழில் வெளியிடப்பட்டுள்ளன. தொடர்ந்து மேலும் பல நூல்கள் தமிழில் வெளியிடப்படவுள்ளன.

2.4. எதிர்காலத் திட்டங்கள் :

தமிழ்நாட்டில் அனைத்துப் பல்கலைக்கழகங்களின் தேவைக்கேற்றபடி அவைகளுக்கெனப் பொதுத் தகவல் இணைய மையம் உருவாக்குதல் (Web Site), மேலும் புதிய தொழிற்பாடங்களைத் தொடங்குதல், சமுதாயக் கல்லூரிகளைத் தோற்றுவித்தல், பல்கலைக்கழகங்களில் சிறப்பு மையங்களை (School of Excellence) மேம்படுத்துதல், பாட நூல்களைத் தமிழில் எழுதி வெளியிடுதல், கருத்தரங்கு/பயிலரங்குகளை நடத்துதல் போன்ற சிறப்பு நடவடிக்கைகளில் இம்மன்றம் கவனம் செலுத்தி வருகின்றது.

2.5. அரசின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் மன்றத்தின் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

### 3. கல்லூரிக் கல்வி

3.1. 1965ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட கல்லூரிக் கல்வித் துறை தற்கால வளர்ச்சிக்கேற்ப உயர் கல்வியில் பல்வேறு முன்னேற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. தமிழகத்தில் கல்லூரிகள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்கவகையில் அதிகரித்துள்ளது. தற்போது கல்லூரிக் கல்வி இயக்ககத்தின்கீழ் 385 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், 22 கல்வியியல் கல்லூரிகளும், 9 கீழ்த்திசைக் கல்லூரிகளும்,



2000 ஏப்ரல் 10]

4 உடற்கல்வியியல் கல்லூரிகளும், 2 நிதியுதவி பெறும் சமுதாயப் பணிப் பள்ளிகளும், ஆக மொத்தம் 422 கல்லூரிகள் இயங்கி வருகின்றன. இவைகளில் சென்ற ஆண்டு (1999-2000) அரசு அனுமதியுடன் தொடங்கப்பட்ட, 20 புதிய சுயநிதிக் கல்லூரிகளும் அடங்கும்.

#### 3.2 மகளிர் கல்வி

3.2.1. 2000-2001 ஆம் ஆண்டில் பெண்கள் உயர் கல்வி முன்னேற்றம் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக அமையும். 1980-81ஆம் ஆண்டின் நிலவரப்படி உயர் கல்வியில் 64,000 மாணவியர் கல்வி கற்றனர். ஆனால், 1999-2000ஆம் ஆண்டின் நிலவரப்படி 1,83,000 மாணவியர் கல்வி கற்கின்றனர். இது உயர் கல்வியில் பெண்கள் ஏறத்தாழ மும்மடங்கு முன்னேற்றம் பெற்றுள்ளனர் என்பதற்குச் சான்றாகும். 1998-99 ஆம் ஆண்டில் இரண்டு அரசு பெண்கள் கலைக் கல்லூரிகள் சமூக ரீதியாகவும், கல்வியிலும் மிகவும் பின்தங்கிய ஊரகப் பகுதிகளான நிலக்கோட்டை மற்றும் சிவகங்கை ஆகிய இடங்களில் தொடங்கப்பட்டன. இவ்விரு மகளிர் கல்லூரிகளிலும் கணிப்பொறி அறிவியல், மின்னனுவியல், உயிர் வேதியியல், நுண்ணுயிரியல், ஊட்டச்சத்து அறிவியல், சுற்றுலா வளர்ச்சி ஆகிய பாடப்பிரிவுகள் மாணவிகளுக்குப் பயிற்றுவிக்கப்படுகின்றன. உயர் கல்வி பயின்ற பிறகு வேலைவாய்ப்புக்கு இப்பாடங்கள் பயனுள்ளவையாக அமையும்.

3.2.2. தமிழ்நாட்டில் உள்ள 422 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில், 120 கல்லூரிகள் மகளிருக்கானவை. மகளிர் கல்லூரிகள் இல்லாத இடங்களில் உள்ள ஆடவர் கல்லூரிகளில் உள்ள இடங்களில் 30 விழுக்காடு வரை மாணவியர்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டும் எனக் கல்லூரி முதல்வர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஏழை, எளிய குடும்பங்களில் உள்ள மாணவிகள் கல்வி பெறுவதை ஊக்குவித்திட பெரியார் ஈ.வெ.ரா. நாகம்மை இலவச படிப்புத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

3.3. வேலைவாய்ப்புள்ள பாடப்பிரிவுகளைத் தொடங்குதல் :

பல்கலைக்கழக நிதி நல்கைக் குழுவின் முழுமையான உதவியுடன் அரசுக் கல்லூரிகளில் வேலைவாய்ப்புள்ள பாடப்பிரிவுகளைத் தொடங்குவது 2000-2001ஆம் ஆண்டில் முக்கியத் திட்டமாகக் கொள்ளப்பட்டுள்ளது.

3.4. உயர் கல்வித் துறையில் தகவல் தொழில்நுட்பவியல் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. இதனைப் பயிற்றுவிப்பதைப் பரவலாக்குவதில்

[2000 ஏப்ரல் 10

அரசு முனைந்து ஈடுபட்டுள்ளது. தற்போது, 48 அரசு கலைக் கல்லூரிகளில் தகவல் தொழில்நுட்பவியல் பாடப்பிரிவுகள் தொடங்கப்பட்டு அவற்றில் ஏறத்தாழ 1,446 மாணவ, மாணவியர் பயலுகின்றனர்.

3.5 தேசிய மதிப்பீடு மற்றும் தகுதி ஏற்றச் சான்றளிப்பு தேசிய மதிப்பீடு மற்றும் தகுதி ஏற்றச் சான்றளிப்புக் குழு பல்கலைக்கழக மானியக் குழுவினால் கல்வி நிறுவனங்கள் மற்றும் கல்வி சார்ந்த அமைப்புகள் ஆகியவற்றின் தர நிர்ணயத்திற்காகவும், தர மேம்பாட்டுக்கு வழி வகுப்பதற்காகவும் 1994-ல் ஏற்படுத்தப்பட்ட ஒரு தன்னாட்சி அமைப்பாகும். இவ்வமைப்பு கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் தர நிர்ணயத்துக்கான தகுதிகளை மதிப்பீடு செய்து, ஒவ்வொன்றுக்கும் புள்ளிகள் அளித்து, தர நிர்ணயம் செய்கிறது. தற்போது 12 அரசுக் கல்லூரிகளும், 16 நிதியுதவி பெறும் கல்லூரிகளும் தரநிர்ணயம் செய்யப்பட்டு தரச்சான்று பெற்றுள்ளன. இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் அதிக அளவில் தரம் பெற்ற கல்லூரிகள் உள்ளன என்றும் அறியப்படுகிறது.

## 3.6. கல்லூரிகளுக்குத் தன்னாட்சி வழங்குதல்:

3.6.1. உயர் கல்வித் துறையில் கல்வித் தர மேம்பாட்டுக்கு மிகவும் தேவையெனக் கருதப்படுவது கல்லூரிகளுக்குத் தன்னாட்சி உரிமை வழங்குதல் ஆகும். கல்லூரிகளுக்கு கல்விச் சுதந்திரம் அளிக்கும் பொருட்டு, தமிழகத்தில் 1978-79 முதல் தகுதி வாய்ந்த கல்லூரிகளுக்குத் தன்னாட்சி நிலை வழங்கப்பட்டு வருகிறது. தமிழகத்தில்தான் அதிகமாக தன்னாட்சி உரிமை பெற்ற கல்லூரிகள் இயங்கிவருவது குறிப்பிடத்தக்கது. நாட்டில் வேறெந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு தமிழ்நாட்டில் மொத்தம் 44 தன்னாட்சிக் கல்லூரிகள் இயங்கி வருவது பெருமைக்குரியது. பல்கலைக்கழகப் பாடத் திட்டங்களை கைக்கொள்ளாமல் இக்கல்லூரிகள் தாமாகவே பாடத் திட்டங்களை வகுத்துக்கொண்டு செயல்பட்டு வருவதால் இங்கே கல்வி பயிலும் மாணவர்கள், வளர்ந்து வரும் கல்வித் தேவைக்கேற்ப புதிய பாடங்களைக் கற்க முடிகிறது. இதனால் கல்வியின் தரம் உயர வாய்ப்பு உள்ளது. மேலும் இத்தகைய தன்னாட்சி உரிமம் பெற்ற கல்லூரிகள் தற்போதுள்ள பாடப்பிரிவுகளுடன் அதிகப்படியான பட்டயப் படிப்புகள் மற்றும் சான்றிதழ் படிப்புகள் ஆகியவற்றை நடத்தி வருகின்றன. தன்னாட்சி உரிமம் பெற்ற கல்லூரிகள் அதிக அளவில், பல்கலைக்கழக நிதிக் குழுவின் நிதியுதவி பெறும் தகுதியைப் பெற்றுள்ளன. பல்கைலைக்கழக மானியக் குழு தற்போதுள்ள தன்னாட்சி உரிமம் பெற்றுள்ள கல்லூரிகளை ஆய்வு செய்து, அதன் செயற்பாட்டினை அறிந்து மேலும் 5 ஆண்டுகளுக்குத் தன்னாட்சி உரிமை தொடரப் பரிந்துரை செய்கிறது.



2000 ஏப்ரல் 10]

## 3.7 அரசு மற்றும் நிதி உதவி பெறும் கல்லூரி ஆசிரியர்கள் நியமனம் :

ஆசிரியர் தேர்வு வாரியம், அரசுக் கல்லூரிகளில் விரிவுரையாளர்களைத் தேர்வு செய்யும் பணியை மேற்கொண்டு வருகிறது. 1998-99ஆம் ஆண்டிற்கான பொது நேரடி நியமனத்தின்கீழ் நிரப்பப்படாமல் உள்ள 141 பணியிடங்களை நிரப்பிட அறிவிக்கை வெளியிட்டு, 98 பேர்களைத் தெரிவு செய்துள்ளது. தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு, நியமன ஆணைகள் விரைவில் வழங்கப்படும். மேலும் அரசுக் கல்லூரிகளில் தாழ்த்தப்பட்ட/பழங்குடி இனத்தவரைக் கொண்டு 100 விரிவுரையாளர் பணியிடங்களை நிரப்பிட அரசு ஆணை வழங்கியுள்ளது. அதனையொட்டி ஆசிரியர் தேர்வு வாரியம் 73 பேர்களைத் தெரிவு செய்துள்ளது. 1999-2000 கல்வியாண்டில் வயது முதிர்வு மற்றும் இறப்பினால் ஏற்படும் காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கு நிதியுதவி பெறும் கல்லூரிகளின் நிர்வாகத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

## 3.8 தாழ்த்தப்பட்ட/பழங்குடியினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட இனத்தைச் சார்ந்த மாணவர்களுக்குச் சிறப்புப் பயிற்சி வகுப்புகள் நடத்துதல்:

3.8.1. அரசுக் கல்லூரிகளில் பயிலும் தாழ்த்தப்பட்ட/பழங்குடியினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட இனத்தைச் சார்ந்த மாணவர்களில் குறிப்பாக பின்தங்கிய பகுதிகளிலிருந்து வரும் மாணவர்கள் பல்கலைக்கழகத் தேர்வில் ஆங்கிலம், கணிதம் மற்றும் அறிவியல் பாடங்களில் தேர்ச்சி பெறுவதில் மிகவும் பின்தங்கியுள்ளனர். இத்தகைய மாணவர்கள் மேற்கண்ட பாடங்களில் முழுமையான அளவில் தகுதி அடையச் செய்வதற்காக, சிறப்புப் பயிற்சி அளிக்க தீர்மானிக்கப்பட்டு, இத்தகைய சிறப்புப் பயிற்சி வகுப்புகள் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இத்தகைய சிறப்புப் பயிற்சி பெறும் மாணவர்கள் பல்கலைக்கழகத் தேர்வில் நல்ல மதிப்பெண்கள் பெறக்கூடிய வாய்ப்பு ஏற்படுகிறது.

3.8.2 மேற்கண்ட திட்டம் 1999-2000ஆம் ஆண்டில் 10 அரசுக் கல்லூரிகளில் செயல்படுத்தப்பட்டது. இதற்காக ரூ.1 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, கல்லூரிக்கு ரூ.10,000 வீதம் பத்து கல்லூரிகட்குப் பகிர்ந்தளிக்கப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் 3,331 மாணவ, மாணவியர் பயன் அடைந்துள்ளனர். 2000-2001-ல் இத்திட்டத்தை விரிவாக்கம் செய்து, 20 கல்லூரிகளில் செயல்படுத்திட ரூ.2 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

## 3.9 ஆசிரியர்களின் தர மேம்பாட்டுத் திட்டம் :

தற்கால நிலைக்கேற்ப அரசுக் கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர்களின் ஆராய்ச்சிப் படிப்பை மேம்படுத்திட, பல்கலைக்கழக நல்கைக் குழு

நிதியுதவியுடன் ஆசிரியர்கள் ஆராய்ச்சிப் படிப்பில் சேர்ந்து தகுதியை வளர்த்துக் கொள்ள ஆண்டுதோறும் அனுப்பி வைக்கப்படுகின்றனர். 9-வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 1999-2000ஆம் ஆண்டில் பல்கலைக்கழக நல்கைக் குழு நிதியுதவியுடன், 164 அரசு கல்லூரி ஆசிரியர்களை எம்.ஃபில்./பி.எச்.டி. ஆய்வு மேற்கொள்ள இசைவளிக்கப்பட்டுள்ளனர். 2000-2001-ல் இத்திட்டத்தின்கீழ் அதிக எண்ணிக்கையில் அரசுக் கல்லூரி ஆசிரியர்கள் இவ்வாராய்ச்சிப் பயிற்சியினை மேற்கொள்ளவிருக்கின்றனர்.

## 4. இளைஞர் செயற்பாடுகள்

**தேசிய மாணவர் படை:**

4.1 இந்தியாவில் முதன்மை வாய்ந்த இளைஞர் இயக்கமான தேசிய மாணவர் படை 1948-ல் உருவாக்கப்பட்டது நல்லொழுக்கம், கட்டுப்பாடு, துணிவுடைமை, தோழமையுணர்வு, தலைமையேற்கும் திறமை, சமயச் சார்பின்மை, வீரச்செயல் ஆற்றும் எழுச்சியுணர்வு, போட்டி விளையாட்டுகளில் நேர்மை ஆகிய நற்பண்புகளையும் தன்னலமற்ற தொண்டு ஆர்வத்தையும் இளைஞர்களிடையே உருவாக்கி, அவர்களைப் பயன்மிக்க குடிமக்களாக ஆக்குவது தேசிய மாணவர் படையின் நோக்கமாகும்.

4.2. மத்திய பாதுகாப்பு அமைச்சகத்தின் மூலம் பாதுகாப்புத் துறை செயலாளர் பொறுப்பில் தேசிய மாணவர் படை இயக்ககம் நிர்வகிக்கப்படுகிறது. தமிழ்நாட்டில் தேசிய மாணவர் படையைச் செம்மையாகவும், திறன்படவும் நிர்வகிக்கும் பொறுப்பினைத் தமிழக அரசு இந்த இயக்ககத்தின் துணைத் தலைமை இயக்குநருக்கு அளித்துள்ளது. தேசிய மாணவர் படை குறித்த செலவை மத்திய அரசும், மாநில அரசும் ஏற்கின்றன.

4.3. 1999-2000 ஆம் ஆண்டில் 88,328 தமிழக மாணவர்கள் தேசிய மாணவர் படையில் சேர்ந்துள்ளனர். தமிழ்நாடு அரசு தனது பங்காக ரூ. 1,315 இலட்சம் கடந்த ஆண்டிற்கென ஒதுக்கீடு செய்துள்ளது. மேலும் 2000-2001-ல் இதற்காகக் கூடுதல் தொகை ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது.

4.4. இந்தியா முழுவதிலுமுள்ள 16 மாநில தேசிய மாணவர் படை இயக்கங்களுள் தமிழ்நாடு தேசிய மாணவர் படைக் குழு புதுதில்லியில், நடைபெற்ற குடியரசு தின முகாமில் கலந்துகொண்டு, தேசிய அளவில் முதலாவதாக வந்து, "பிரதமர் பதாகையை" (Prime Minister's Banner)



வென்றெடுத்துள்ளது. தமிழ்நாடு தேசிய மாணவர் படைக் குழு இதுகாறும் 11 முறை தேசிய அளவில் முதலாவதாக வந்துள்ளது என்பது பாராட்டுக்குரியதாகும்.

4.5. தமிழக அரசு, தேசிய மாணவர் படையினருக்கு ஊக்கம் அளிக்கும் பொருட்டு கீழ்க்காணும் சலுகைகளை அளித்துள்ளது:

(அ) தேசிய மாணவர் படை பயிற்சியில் சிறந்தவர்களுக்கு உதவித்தொகையாக முதுநிலைப் பிரிவில் 80 மாணவர்களுக்கு ரூ. 1200 வீதமும், இளநிலைப் பிரிவில் 90 மாணவர்களுக்கு ரூ. 600 வீதமும் ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது.

(ஆ) தேசிய மாணவர் படை, இயங்குகின்ற கல்லூரி ஒவ்வொன்றிலும் தேசிய மாணவர் படை சான்றிதழ் உடையவர்களுக்கு இளநிலை மற்றும் முதுநிலை பட்டப் படிப்பில் ஒவ்வோர் இடம் ஒதுக்கப்படுகிறது. அவ்வாறே பல்தொழில்நுட்பப் பயிலகங்கள் ஒவ்வொன்றிலும் ஓரிடம் ஒதுக்கப்படுகிறது.

(இ) 2000ஆம் ஆண்டு குடியரசு தின விழாவில் கலந்துகொண்ட தேசிய மாணவர் படையினருக்கு அளிக்கப்பட்டு வந்த ஊக்கத் தொகை ரூ.100-லிருந்து ரூ.1,000 ஆக உயர்த்தி வழங்கப்பட்டது.

(ஈ) பொறியியற் கல்லூரிகளில் தேசிய மாணவர் படையினருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 2 இடங்கள் 10 இடங்களாக வரும் கல்வியாண்டிலிருந்து உயர்த்தப்படுகிறது.

**நாட்டு நலப்பணித் திட்டம்:**

4.6. தமிழ்நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்களிலும், கல்லூரிகளிலும், பல்தொழில்நுட்பப் பயிலகங்களிலும் நாட்டு நலப்பணித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதற்கான செலவினம் 7:5 என்ற விகிதத்தில் மத்திய அரசாலும், மாநில அரசாலும் பகிர்ந்துகொள்ளப்பட்டு வருகிறது. பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், தொழில்நுட்பப் பயிலகங்கள் மற்றும் பள்ளிகளில் பயிலும் 1,65,000 மாணவத் தொண்டர்களின் எண்ணிக்கை 2000-2001 ஆம் கல்வியாண்டு முதல் 1,70,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. சிறப்பு முகாம்களில் பங்கு பெறும் மாணவர்களின் எண்ணிக்கை 2000-2001 ஆம் கல்வியாண்டு முதல் 82,500-லிருந்து 85,000 ஆக உயர்த்தப்பட்டு உள்ளது. பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் மற்றும் பல்தொழில்நுட்பப் பயிலகங்களில் 965 அலகுகள் செயல்பட்டு வருகின்றன. நாட்டு நலப்பணித் திட்டம் கல்லூரிக் கல்வி இயக்குநரின் கட்டுப்பாட்டில் உள்ளது.

[2000 ஏப்ரல் 10

4.7. 1999-2000 ஆம் ஆண்டில் முகாம்கள் நடத்துவதற்காக மானியத் தொகையாக, பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளுக்கு ரூ. 1,81,77,666-ம், பள்ளிகளுக்கு ரூ.99,00,000-ம் ஆக மொத்தத்தில் ரூ. 2,80,77,666 வழங்கப்பட்டுள்ளது.

## 5. பல்கலைக்கழகக் கல்வி

5.1. தமிழகத்தில் 11 பல்கலைக்கழகங்கள் செயல்படுகின்றன. இப்பல்கலைக்கழங்கள் பின்வரும் மூன்று வகைகளைச் சார்ந்தவையாகும்:.

இணைப்பு உரிமை வகை:—**(Affiliating type)**

(1) சென்னை பல்கலைக்கழகம்
(2) மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
(3) பாரதியார் பல்கலைக்கழகம்
(4) பாரதிதாசன் பல்கலைக்கழகம்
(5) மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
(6) பெரியார் பல்கலைக்கழகம்

ஒருமை வகை:—**(Unitary type)**

(7) அண்ணாமலை பல்கலைக்கழகம்
(8) அண்ணா பல்கலைக்கழகம்
(9) அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம்
(10) அழகப்பா பல்கலைக்கழகம்

நிகர்நிலை வகை:—**(Deemed type)**

(11) அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர் கல்வி நிறுவனம்

### சென்னை பல்கலைக்கழகம்

5.2. 1857 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட சென்னை பல்கலைக்கழகம், அடிப்படையில் இலண்டன் பல்கலைக்கழகத்தை ஒத்த அமைப்புடையதாகும். 1904 ஆம் ஆண்டிலும், பிறகு 1923 ஆம் ஆண்டிலும் சட்ட மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு, இப்பல்கலைக்கழக நிர்வாகச் சீர்திருத்தம் செய்யப்பட்டது.



2000 ஏப்ரல் 10]

5.3. சென்னை பல்கலைக்கழகம் இப்போது கற்பித்தலும், ஆய்வும் மேற்கொள்கின்ற 78 துறைகளையும், இணைக்கப்பெற்ற 113 கலை அறிவியல் கல்லூரிகளையும், 56 பொறியியற் கல்லூரிகளையும், 8 கல்வியியல் கல்லூரிகளையும், 6 கீழ்நிலைக் கல்லூரிகளையும், 1 உடற்கல்வியியல் கல்லூரியையும், 33 ஆய்வு நிறுவனங்களையும் கொண்டுள்ளது. வேலூரில் பட்ட மேற்படிப்பு விரிவாக்க மையம் உள்ளது. 14 கல்லூரிகள் தன்னாட்சிக் கல்லூரிகளாகச் செயல்படுகின்றன. நான்கில் மூன்று பங்கு கல்லூரிகள் குறிப்பிட்ட பாடங்களில், மாலை நேரக் கல்லூரிகளாகவும் செயல்படுகின்றன. மொத்தத்தில் பல்வேறு பட்ட மேற்படிப்புகள் உட்பட 225 பாடங்கள் உள்ளன.

5.4. மேலும், இப்பல்கலைக்கழகத்தில், 77 பாடக் கல்வி குழுக்களும், ஓர் ஆய்வுக் குழுவும் செயல்படுகின்றன. இக்குழுக்கள் பாடத் திட்டம், பாடத் திட்டங்களின் விதிமுறைகள் ஆகியவற்றைக் கண்காணிக்கின்றன. சேப்பாக்கம், மெரினா, தரமணி ஆகிய இடங்களில் உள்ள சென்னை பல்கலைக்கழக வளாகங்களில் 78 ஆய்வுத் துறைகள் உள்ளன.

### அண்ணாமலை பல்கலைக்கழகம்

5.5. உயர் கல்வியினையும், ஆராய்ச்சியினையும் ஊக்குவிக்கும்வகையில் உடனுறை பல்கலைக்கழகம் உருவாக்க வேண்டும் என்ற செட்டிநாட்டரசர் வள்ளல் அண்ணாமலையார் அவர்களின் சீரிய நோக்கத்தினால் அண்ணாமலை பல்கலைக்கழகம் 1929 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது. அண்ணாமலை பல்கலைக்கழகம் 52 பல்வேறு கல்வித் துறைகளுடன் பணியாற்றி வருகிறது. முறைசார் துறைகளில், ஆங்கிலத் துறையில் முதுகலை அமெரிக்கக் கல்வியறிவு (American Studies) வணிகவியல் துறையில் முதுகலை வணிகக் கல்வியறிவு (Master of Business Studies), நிதி பற்றிய கல்வியறிவு (Master of Financial Services) போன்ற புதிய பாடங்களுடன் வேலைவாய்ப்புப் பட்டய வகுப்புகள் பலவும் தொடங்கப்பட்டுள்ளன.

5.6. பல்கலைக்கழகத்தில் ஏறக்குறைய அனைத்து உயர் கல்வித் துறைகளிலும், வட்டார, தேசிய மற்றும் பன்னாட்டு நிறுவனங்களின் நிதி உதவியுடன் பல்வேறு ஆராய்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. சில ஆராய்ச்சித் திட்டங்கள் அயல்நாட்டுப் பல்கலைக்கழகங்களின் கூட்டு முயற்சியுடன் நடைபெற்று வருகின்றன.

5.7. பல்கலைக்கழக ஆசிரியர்கள் பலருக்கு உலக சுகாதார நிறுவனம், பொதுநல அரசுக் குழாம், டானிடா, பன்னாட்டு சுழற்சங்கம் ஆகிய

அமைப்புகளிலிருந்து ஆராய்ச்சி உதவித் தொகை அளிக்கப்பட்டு வருகிறது. தொலைதூரக் கல்வி இயக்ககம், உயர் கல்வியில் விரிவாக்கப்பட்டுள்ளது.

*5.8.* கடல்வாழ் உயிரியல் உயர் ஆய்வு மையம், பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் "கோஸிஸ்ட்" (Cosist-Committee on Strengthening of Infrastructure in Science and Technology) திட்டத்தின்கீழ் ஆராய்ச்சியினை மேம்படுத்தவும், பன்னாட்டு அளவிலான விஞ்ஞான மேம்பாட்டிற்கு இணையாகத் தரம் உயர்த்தவும் சிறப்பு நிதியுதவி பெற்று வருகிறது.

## மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

*5.9.* மதுரை காமராசர் பல்கலைக்கழகம் 1966 ஆம் ஆண்டு சென்னை பல்கலைக்கழக ஆட்சிப் பரப்பில் ஒரு பகுதிக்கு உரியதாக அமைக்கப்பட்டது. தொடக்கம் முதல் இப்பல்கலைக்கழகம் தரம் வாய்ந்த திட்டங்கள் மற்றும் நடவடிக்கைகளுக்குப் பெயர் பெற்றதாகவும், கல்விச் சீரமைப்பு மற்றும் சமுதாய நோக்குடைய திட்ட ஆராய்ச்சிகள் நடத்துவதிலும், பங்கேற்பதிலும் விரைந்து முன்னேறியுள்ளது. இப்பல்கலைக்கழகம், உயர் கல்விக் கோட்பாடுகளை நிறைவு செய்யும் விதத்தில் தரம் வாய்ந்த நிறுவனமாக வளர்ச்சியடைந்து வருகிறது. மதுரை, விருதுநகர், திண்டுக்கல், சிவகங்கை, தேனி மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் உள்ள கல்லூரிகளுக்கு இணைப்பு வழங்குவதுடன் உயர் கல்வி பயிற்றுவிக்கும் பல்கலைக்கழகமாகவும் இது விளங்குகிறது. இப்பல்கலைக்கழகத்தில் 315 ஆசிரியர்கள் பணி ஆற்றுவதுடன் 73 துறைகளும் 7 தகவல் மையங்களும் உள்ளன. இணைப்பு வழங்கப்பட்ட 89 கல்லூரிகளும், 5 மாலை நேரக் கல்லூரிகளும், 10 சிறப்புப் பள்ளிகளும், செயல்படுகின்றன. இதன் மூலம் 16 இலட்சம் மாணவர் பயனடைகின்றனர்.

*5.10.* எட்டாவது திட்டக் காலத்தில் சுற்றுச்சூழல் தொலையுணர்வுத் துறையும் (Environmental Remote Sensing), வரை கலைத் துறையும் (Cartography) தொடங்கப்பட்டுள்ளன. இவை இப்பல்கலைக்கழகத்தின் சிறப்புப் பிரிவுகளாகும்.

*5.11.* இப்பல்கலைக்கழகம், அடிப்படைப் பிரச்சினைகள் குறித்த தரம் மிக்க ஆய்வுகளை மேற்கொள்ள ஏதுவாக, கடந்த பத்து ஆண்டுகளில் நல்ல உள்கட்டமைப்பு வசதிகளைப் பெற்றுள்ளது. தற்போது இயங்கிவரும் அறிவியல் பள்ளிகளின் ஆய்வு நடவடிக்கைகள், Phd.. திட்டத்தோடு நின்று விடுவதில்லை. கடந்த சில ஆண்டுகளாக, அறிவியல் ஆய்வுப் பல்கலைக்கழகங்களுக்கும், நிறுவனங்களுக்கும் இடையில் கலந்து



மேற்கொள்ளப்படும் சர்வதேச ஆய்வுத் திட்டங்கள் பலவற்றுள், தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்களினால் வழங்கப்படும் ஆய்வுத் திட்டங்களை பல்கலைக்கழக விஞ்ஞானிகளின் ஒத்துழைப்பினால் தீவிர ஆய்வுப் பணி நடைபெற்று வருகின்றது.

*5.12.* அதேபோல, கலை மற்றும் மானுடவியல் பள்ளிகளிலும் ஆய்வுத் திட்டங்கள் பல நடந்தேறி வருகின்றன. தற்போது ஒன்பது தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்களின் நிதியுதவி பெறப்பட்ட 80 ஆய்வுத் திட்டங்கள் நடத்தப்பெற்று, அவைகளில் சில திட்டங்கள் வெற்றிகரமாக முடிக்கப்பெறும் நிலையை எய்தியுள்ளன.

*5.13.* 1987 ஆம் ஆண்டு மத்திய அரசின் உயிரியல் தொழில் துறை, இப்பல்கலைக்கழகத்தின் உயிரியல் தொழில்நுட்பப் பிரிவினை ஓர் உயர் தொழில்நுட்ப ஆராய்ச்சி மையமாக அங்கீகரித்துள்ளது. இன்று இந்தியாவிலுள்ள ஐந்து உயர் தொழில்நுட்ப ஆராய்ச்சி மையங்களில் இது முக்கியமானதாகத் திகழ்கிறது. உயிரியல் தொழில்நுட்ப வல்லுநர்களுக்கான பயிற்சி மற்றும் முன்னோடித் திட்டங்களான, மரபியல் நுட்பம், மரபியல் சார்ந்த பூச்சிக் கட்டுப்பாடு ஆகியவற்றில், இத்துறை சாதனை படைத்துள்ளது.

*5.14.* மத்திய அரசினால் ஏற்பளிக்கப்பட்டுள்ள பிறிதொரு உயர் தொழில்நுட்ப ஆராய்ச்சி மையமான நுண்ணுயிரியல் நுட்பத் துறை, இயற்கை உரமான நீலப்பச்சைப்பாசி என்னும் உயிரி உரம் (Bio-Fertilizer) தயாரிப்பது பற்றி ஆய்வு செய்து, அந்தப் பணியில் வெற்றி பெற்றுள்ளது. இந்த உரத்தை எவ்வகையில் பயன்படுத்துவது என்பது குறித்த கருத்தரங்குகளை இத்துறை, விவசாயிகளுக்கு நடத்தி, பயிற்சியும் அளித்து, பயனும் கண்டுள்ளது.

*5.15.* பட்டம் மற்றும் பட்டமேற்படிப்பு, கல்வித் தரத்தை மேம்படுத்துதல், மதிப்பீட்டு முறை, சுற்றுச்சூழல் கல்வி, செய்தி மற்றும் நூலக முறை, முதியோர் மற்றும் தொலை தொடர்பு கல்வி, வேலை வாய்ப்புடன் கூடிய புத்தம்புது தொழில்நுட்பப் பாடங்கள் அறிமுகப்படுத்துதல், மனித உரிமை, பெண் கல்வி மற்றும் மேலாண்மைக் கல்வி ஆகியவை இப்பல்கலைக்கழகத்தின் துறைகளுள் சிறப்புத் தகுதி பெற்றுள்ளன.

## பாரதியார் பல்கலைக்கழகம்

*5.16.* தேசியகவி சுப்ரமணிய பாரதியார் பெயரில் 1982 ஆம் ஆண்டு இப்பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது. பாரதி பாடியுள்ளவாறு "பயிற்றிப்

பல கல்வி நந்து இந்தப்பாரை உயர்த்திடல் வேண்டும்" என்னும் குறிக்கோள் கொண்டதாக இப்பல்கலைக்கழகம் விளங்குகிறது. இப்பல்கலைக்கழகம் அறிவியல், தொழில்நுட்பம், சமூகம் மற்றும் பொருளாதாரம், மனிதவளம் மற்றும் இளைஞர்களிடையே காணப்படும் படைப்புத்திறன் போன்ற கல்வியை மேம்படுத்துவதிலும் நமது நாட்டில் சமத்துவம் மற்றும் மதச்சார்பின்மை போன்ற கோட்பாடுகள் அடிப்படையில் தேசிய வளர்ச்சியை மேம்படுத்தும் வகையிலும் பணியாற்றி வருகிறது.

5.17. இப்பல்கலைக்கழகம் பல்வேறு வகையான கல்வித் திட்டங்களை உருவாக்கியுள்ளது. குறிப்பாகத் தற்கால பிரச்சினைகளை மையமாகக் கொண்டு சமுதாயத்திற்குத் தேவையான கருத்துக்களை, கருத்தரங்குகள், மாநாடுகள், பணிமனைகள் வாயிலாக உருவாக்குகின்றது.

5.18. குறிப்பாகத் தமிழ்நாட்டிற்குத் தேவையான மனிதவள ஆற்றலை வளர்த்தெடுக்கும் வகையில் பட்ட மேற்படிப்பு, எம்.ஃபில். மற்றும் பி.எச்.டி. ஆய்வுத் திட்டங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. வரும் ஐந்தாண்டுகளில் பல்கலைக்கழகம் மேற்கொள்ளவிருக்கும் கல்வி மற்றும் ஆய்வுத் திட்டங்களின் முக்கிய நோக்கங்கள் பின்வருமாறு:—

(அ) பாடத் துறைகளின் தரத்தையும் மாணவர்களின் அறிவு ஆற்றலையும் மேம்படுத்துதல்;

(ஆ) அடிப்படை உள்கட்டமைப்பைப் பெருக்குதல்;

(இ) நவீன முறையில் கற்பித்தலை மேம்படுத்துதல்.

இப்பல்கலைக்கழகம் கணிதவியல் துறை, புள்ளியியல் துறை, போன்ற 20 துறைகளைக் கொண்டுள்ளது.

**குறுகிய காலத் திட்டங்கள்:**

5.19. சமூகத்தின் உடனடித் தேவைகளை நிறைவேற்றுவதற்கு மனித வள மேம்பாட்டிற்கான சில செயல் திட்டங்களை உருவாக்குவது பல்கலைக்கழகத்தின் குறுகிய காலத் திட்டமாகும். அத்திட்டத்தின்படி உயிர்த்திரள் சக்தி (Biomass Energy), மரபியல் ஆய்வு (Genetics Research) மென்படலங்கள் (Thin Films), அதிவேகக் கடத்தி (Super Conductors), மருந்துவகை வேதியியல் (Pharmaceutical Chemistry), வனப் பொருள் வேதியியல் (Forest Products Chemistry), அனங்கக உயிர் வேதியியல் (Bio-Inorganic Chemistry), செல் மரபியல் (Cyto Genetics), திசு வளர்ப்பு (Tissue Culture), தொழில் துறைப் பொருளாதாரம் (Industrial Economics, பொது



நிதியியல் பொருளாதாரம் (Public Economics), மக்கட் தொகையியல் (Population Studies), பாய்ம இயற்பியல் (Fluid Dynamics), வானியல் அலைகள் (Atmospheric Waves), அறிவியல் தமிழ் (Scientific Tamil), புள்ளியியல் (Statistics), தரக்கட்டுப்பாடு (Quality Control), கல்வி நுட்பவியல் (Education Technology), செயற்கை கணினி அறிவுத்திறன் (Artificial Intelligence and Expert Systems), மென் பொருள் நுட்பவியல் (Software Technology), கணினி துணை கொண்டு வடிவமைப்பு மற்றும் தயாரிப்பு (Computer Aided Design and Manufacturing) போன்ற புதிய பாடத் துறைகளை உருவாக்கிட இப்பல்கலைக்கழகம் கருதியுள்ளது.

**பாரதிதாசன் பல்கலைக்கழகம்**

5.20. புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பெயருடன் விளங்கும் இப்பல்கலைக்கழகம் 1982 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. இப்பல்கலைக்கழகத் துறைகளும், சிறப்புத் தகுதி பெற்ற உயர் ஆய்வுப் பள்ளிகளும், இப்பல்கலைக்கழகத்தோடு இணைவு பெற்ற கல்லூரிகளும் கல்வி கற்பித்தலோடு ஆய்வுப் பணிகளையும், விரிவாக்கப் பணிகளையும் மேற்கொண்டுள்ளன. இப்பல்கலைக்கழகத்தோடு தன்னாட்சித் தகுதி பெற்ற 7 கல்லூரிகள் உட்பட 67 கல்லூரிகளும், பல்கலைக்கழக ஒப்புறுதி பெற்ற 10 கல்வி நிறுவனங்களும் இணைந்துள்ளன.

5.21. மேலும், திருவெறும்பூரிலுள்ள பாரத மிகுமின் நிறுவனத்தோடு ஒருங்கிணைந்த பாரதிதாசன் மேலாண்மைப் பள்ளி அந்நிறுவன வளாகத்தில் அமைந்துள்ளது. பல்கலைக்கழகத்தின் 22 துறைகள், பள்ளிகள் மற்றும் மையங்களில் 108 ஆசிரியர்கள் பணியாற்றி வருகின்றனர். இப்பல்கலைக்கழகத்தின் அனைத்து துறைகளும் பட்டமேற்படிப்புக் கல்வி வழங்கும் சிறப்பைப் பெற்றுள்ளன. இப்பல்கலைக்கழகத்தில் முதுகலை, முதுஅறிவியல், முதுதொழில்நுட்பவியல் பயிலும் மாணவர்களும், ஆய்வியல் நிறைஞர் (எம்.ஃபில்.) முனைவர் (பி.எச்.டி.) பட்ட ஆய்வினை மேற்கொள்ளும் ஆராய்ச்சி மாணவர்களுமாக மொத்தம் 600-க்கும் மேற்பட்டவர்கள் பயிலுகின்றனர்.

5.22. மிகக் குறுகிய கால அளவில் கல்வியில் பல்வேறு புதிய மாற்றங்களை இப்பல்கலைக்கழகம் கொண்டு வந்துள்ளது.

அவற்றுள் சில பின்வருமாறு:—

(1) பிற நிறுவனங்கள் பின்பற்றத்தக்கதாகத் திகழ்கின்ற தனித் தன்மை வாய்ந்த பள்ளிகளான பாரதிதாசன் எரியாற்றல் பள்ளியும், பாரதிதாசன்

மேலாண்மை நிறுவனமும், கல்வியளித்தல், நிர்வாகம், நிதி ஆகிய அனைத்திலும் தன்னாட்சி பெற்று விளங்குகின்றன.

(2) இப்பல்கலைக்கழகத்தின் உயிர் அறிவியல் பள்ளி, தனிச் சிறப்புமிக்க ஒருங்கிணைந்த ஐந்தாண்டு முதுமை உயிர் அறிவியல் கல்வியை வழங்குகிறது. இக்கல்வியில் முதல் மூன்றாண்டுகள் பல்துறைசார் அடிப்படைக் கல்வியாகவும், இறுதி இரு ஆண்டுகள் விலங்கறிவியல், பயிர் அறிவியல், உயிர் நுட்பவியல், நுண்ணுயிரியல் ஆகியவற்றில் சிறப்பறிவுக் கல்வியாகவும் வழங்கப்படுகிறது.

(3) இந்திய அரசின உயிர்நுட்பவியல் துறையினர் வழங்கிய ரூ. 2.5 கோடிக்கும் மேற்பட்ட நிதியுதவியைக் கொண்டு தேசியக் கடல்சார் நீலநிற நுண்ணுயிரி ஆய்வு வசதி மையம் ஒன்று (National Facility for Marine Cyanobacteria Research Centre) இப்பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

(4) அனைத்திந்திய தொழில்நுட்பக் கல்விக் கழகத்தின் உதவியோடு இப்பல்கலைக்கழகத்தின் தொலையுணர்வு மையம், முதுதொழில் நுட்பவியல் கல்வியை அளித்து வருகிறது.

(5) ஆசிரியர்கள் வகுப்பறைப் பயிற்சி அளிப்பதற்கு ஏதுவாக வகுப்பறைகளில் நிகழ்த்தவேண்டிய விரிவுரைகளை ஒளிநாடாக்களில் பதிவு செய்து, ஆசிரியர் பணிக்குத் துணையாகும் தொலைக்காட்சி முறை கல்வி வசதி, பல்கலைக்கழக நிதி நல்கைக் குழு உதவியுடன் நிறுவப்பட்டுள்ளது.

(6) பட்டப் படிப்பு, பட்ட மேற்படிப்பு பயிலும் மாணவர்கள் வழக்கமாக வகுப்பறையில் கற்கும் கல்வியோடு, வேலைவாய்ப்புடன் கூடிய ஏதேனும் ஒரு சான்றிதழ் பட்டயப் படிப்பையும் பெறுவதற்குரிய சிறப்பு வாய்ப்பினை இப்பல்கலைக்கழகம் வழங்குகிறது.

(7) கல்லூரி ஆசிரியராவதற்குத் தகுதிபெற தேசிய அளவில் நடத்தப்பெறும் தகுதிகாண் தேர்வுகளுக்கு ஈடாக மாநில அளவிலான கல்வித் தேர்வினை நடத்தும் பொறுப்பை மாநில அரசும், பல்கலைக்கழக நிதி நல்கைக் குழுவும், இப்பல்கலைக் கழகத்திடம் ஒப்படைத்துள்ளன.

### அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம்

5.23. மகாகவி பாரதி நூற்றாண்டு விழாவின் அடையாளமாக 1984-ல் அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம், கொடைக்கானலில் தோற்றுவிக்கப்பட்டது. மகளிரியல் கல்வியை மேம்படுத்துதல், மகளிரியல் ஆய்வுகளை மேற்கொள்ளுதல், மகளிர் மேம்பாடு குறித்த திட்டங்களுக்கு ஆலோசனை நல்குதல், ஒருங்கிணைத்தல் ஆகிய பொறுப்புகள் பல்கலைக்கழகத்திற்கு அளிக்கப்பட்டன.



5.24. முனைவர் பட்டப்படிப்பு/இளநிலை ஆய்வுப் படிப்பு/முதுகலைப் பட்ட வகுப்பு/இளங்கலைப் பட்ட வகுப்பு என்று அனைத்து நிலைப் பாடத் திட்டங்களும், ஆய்வு மற்றும் விரிவாக்கப் பணிகளும் மகளிரியலை முதன்மைப்படுத்தி வடிவமைக்கப்பட்டுள்ளன. தமிழகத்தில் மகளிரியலை மையப்படுத்தி செயற்படும் பல்கலைக்கழகம் இதுவாகும். மரபு சார்ந்த அறிவுத் துறைகளில் மகளிர் பங்களிப்பு பற்றி ஆய்வு செய்து மகளிர் நோக்கினை உருவாக்கிப் பயனுறும்விதத்தில் செயலாற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

5.25. இளநிலை மற்றும் முனைவர் பட்ட ஆய்வுகள் பகுதிநேர ஆய்வு/முழுநேர ஆய்வு/பல்கலைக்கழக மானியக் குழு நிதி நல்கை ஆய்வு ஆகியவற்றில் கண்பார்வை இழந்த ஒரு ஆய்வாளர் உட்பட 9 பேர் ஈடுபட்டுள்ளனர். கோடை தொடர் வகுப்புகள் மூலம் ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது. இன்றுவரை, பல்கலைக்கழகத்தின் மூலம் 74 முனைவர் பட்டங்களும், 365 இளநிலை ஆய்வுப் பட்டங்களும் வழங்கப்பட்டுள்ளன. பெண் சிசுக்கொலை, தலைச்சுமையாக விறகு தூக்கிகள் நிலை, கல் உடைப்போர் நிலை, பாட நூல்களில் பாலியல் வேறுபாடு, மகளிரும், பொருளாதாரமும், விழுமிய கல்வி போன்ற தலைப்புகளில் ஆய்வுகள் முற்றுப்பெற்றுள்ளன.

5.26. பெண்கள் தமது வாழ்வு நிலையை உயர்த்தும்படி பிறரைச் சார்ந்து நின்ற நிலையினின்று விடுபட்டு தற்சார்பு நிலையை அடைவதற்கு உதவும் வகையாகப் பல்வேறு விரிவாக்கப் பணிகளையும் செயல்படுத்தி வருகிறது. இப்பல்கலைக்கழகத்தின் வாயிலாக இதுவரை 40 தலைப்புகளில் நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. அவை, ஆய்வுத் திட்டங்கள், சமூகப் பரிசீலனைகள், மகளிர் திறனாய்வுசார் படைப்பிலக்கியப் பங்களிப்பு முதலான பல பொருள் சார்ந்தவை.

### அழகப்பா பல்கலைக்கழகம்

5.27. 1985 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட அழகப்பா பல்கலைக்கழகம் ஆராய்ச்சி மேம்பாடு மற்றும் உயர் கல்விப் பயிற்சி போன்ற துறைகளில் முனைப்போடு செயலாற்றுவதைக் குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

5.28. இப்பல்கலைக்கழகம் இயற்பியல் (Physics), தொழிலக வேதியியல் (Industrial Chemistry), கணிதவியல் (Mathematics), கணினி இயல் (Computer Science), நிறுவனச் செயலரியல் (Corporate Secretaryship), தமிழியல், மகளிரியல், கல்வியியல், உடற்கல்வியியல், விளையாட்டியல் இயன் மருத்துவவியல் (Sports Physiotherapy) படிகவியல் (Crystal Growth), ஆழ்கடலியல் மற்றும் கடற்கரையியல் (Oceanography and Coastal Area Studies) போன்ற துறைகளில் கற்பித்தலும் ஆய்வும் மேற்கொண்டுள்ளது. இந்தத் துறைகளில் சமூகத் தேவையைக் கருத்தில் கொண்டு பாடத் திட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

5.29. உடற்கல்வியியல் துறையில் முதுகலை இயன் மருத்துவவியல் (Master of Sports Physiotherapy) வகுப்பு புதிதாகத் தொடங்கப்பட்டுள்ளது. பகுதிநேரப் பயிற்சி வழியாகவும் அப்பட்டம் பெறுவதற்கான வாய்ப்பும் வழங்கப்படுகிறது. இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் இயன் மருத்துவம் பயின்ற அறிஞர்களுக்கு மிகுந்த தேவை இருப்பது குறிப்பிடத்தக்கது. ஆழ்கடலியல் மற்றும் கடற்கரை இயலில் முதுகலை அறிவியல் பட்ட வகுப்பு (M.Sc., Oceanography and Coastal Area Studies) தொடங்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமான கடற்கரையோரப் பகுதிகள் தொண்டியில் உள்ளன. ஆழ்கடலியல் மாணவர்களின் கல்விக்கு, ஆய்விற்கும் அப்பகுதி சிறந்த பயிற்சிக் களமாக உள்ளது.

5.30. மகளிர் மேம்பாட்டிற்கென இப்பல்கலைக்கழகத்தில் உள்ள மகளிர் கல்வி மையம், ஆராய்ச்சி மற்றும் செயல்திட்டங்களில் முனைப்போடு செயலாற்றி வருகிறது. மகளிரிடையே சுயஉதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டு, திட்டமிடுதல் மற்றும் சேமித்தல் ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

### மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

5.31. மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் 1990 ஆம் ஆண்டு முதல்வர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களால் தொடங்கப்பட்டது. இப்பல்கலைக்கழகம் பல புது வழிகள் கண்டு உயர் கல்வி அரங்கத்தில் ஒரு முத்திரை பதித்துள்ளது.

5.32. பல்கலைக்கழகத்திலுள்ள பன்னிரெண்டு துறைகளும் முதுநிலைப் பட்டப்படிப்புக் கல்வியினைத் தெரிவு சார்ந்த தேர்ச்சி முறைத் திட்டத்தின்கீழ் 1996-97 ஆம் கல்வியாண்டு முதல் தொடங்கியுள்ளன. விரும்பிய பாடத்தில் பயிற்சி பெறுதல் என்னும் இத்திட்டத்தின்படி, மாணவர்கள் தாம் விரும்பும் பாடத்தை ஒவ்வொரு பருவத்திற்கென தேர்ந்தெடுத்துப் பயில வாய்ப்பளிக்கப்படுகிறது.





5.33. இப்பல்கலைக்கழகம் கற்பித்தலுக்கும், ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கப் பணிகள் மேற்கொள்ளவும், சிறந்த வாய்ப்புகளைப் பல்வேறு புலங்களில் (துறைகளில்) இருக்கும் கருப்பகுதியிலிருந்து பெற்றிருக்கிறது.

5.34. பல்கலைக்கழகத்தின் சுற்றுப்புறச்சூழல் அறிவியல் மையம், தென்னிந்தியாவிலேயே, அக்கல்வி வழங்கும் முக்கியமான மையமாக ஏற்கப்பட்டுள்ளது. இந்த மையம் கழிவுச்சுழற்சி, தொழிற்சாலைக் கழிவுகளின் நச்சுத்தன்மை, கழிவுநீர் மற்றும் பயனற்ற வெற்று நிலப்பகுதியின் உயிரினங்கள், ஆகிய பாடங்களை மூலப்பகுதியாகக் கொண்டு கற்பிக்கிறது. சமூகவியல் துறை, குழந்தைத் தொழிலாளர் மற்றும் பெண்களின் நிலை போன்ற பாடங்களைச் சிறப்பு முன்னுரிமை அளித்துக் கற்பித்து வருகிறது. இப்பல்கலைக்கழகத்தில் கடற்புறப் பகுதிகளைப் பற்றிய கல்வியளிக்கும் பயிற்றகம், கடற்பகுதிகளை நிர்வாகம் செய்யும் கல்வியையும், கடல் உயிர் உற்பத்தி விளைவுகளையும், கடல்வாழ் உயிரின நுட்பவியல் கல்வியையும், சிறப்பு முன்னுரிமைப் பகுதிகளாகக் கொண்டுள்ளது. விண்ணப்பிக்கும் மாணவர்களுக்கு அவர்கள் தேர்வு எழுதிய விடைத்தாளின் நகலினை வழங்குவதில் இப்பல்கலைக்கழகம் முன்னோடியாகத் திகழ்கிறது.

### பெரியார் பல்கலைக்கழகம்

5.35. 1997-ல் தமிழக முதல்வர் மாண்புமிகு கலைஞரால் தோற்றுவிக்கப்பட்ட பெரியார் பல்கலைக்கழகத்துடன் 45 கல்லூரிகள இணைக்கப்பட்டுள்ளன. இவற்றுள் 33 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், 12 பொறியியல் கல்லூரிகளும் அடங்கும். இவைகளில் 11 கல்லூரிகளில் மாலைநேர வகுப்புகளும் நடத்தப்படுகின்றன.

5.36. பெரியார் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ள கல்லூரிகளில் மொத்தம் 79 வகையான பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. இவற்றுள் வழக்கமான கலை மற்றும் அறிவியல் பாடங்களைத் தவிர கணினி அறிவியல், கணினிப் பயன்பாடு, நுண்ணுயிரியல், செயல்முறை நுண்ணுயிரியல், உணவு மற்றும் உணவக நிர்வாகம், வணிக நிர்வாகம், வங்கி நிர்வாகம், கூட்டாண்மை செயல்பாடு, செய்தி நுட்பவியல் நிர்வாகம், செய்தி அறிவியல் நிர்வாகம், கணினி மென்பொருள் அறிவியல், கருவிக்கட்டுப்பாடு பொறியியல், கணினி வடிவமைப்பு, கணினி நிர்வாகம், செய்தி நுட்பவியல், நெசவு நுட்பவியல், வேதிப் பொறியியல், கட்டடக்கலை பொறியியல், செயல்முறை அறிவியல், பல்துறை தொழில்நுட்பவியல், உயிர் வேதியியல், கணினி தகவல் தொடர்பு ஆகிய சிறப்புப் பாடங்கள், பட்ட மற்றும் பட்டமேற்படிப்பு வகுப்புகளில் கற்பிக்கப்படுகின்றன.

5.37. தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டுக் கழகத்தின் உதவியுடன் இரத்த வங்கி திறக்கவும், எய்ட்ஸ் விழிப்புணர்ச்சி முகாம் நடத்தவும் ஒவ்வொரு கல்லூரிக்கும் ரூ. 2,500/- வீதம் 19 கல்லூரிகளுக்கு நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது.

**அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர் கல்வி நிறுவனம்**

5.38. கோயம்புத்தூரில் இயங்கிவரும் அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் உயர் கல்வி நிறுவனம் 1988-ல் நிகர்நிலைப் பல்கலைக்கழகமாக உயர் தகுதி பெற்றது.

5.39. இந்நிறுவனத்தில் மனையியல், அறிவியல், மனிதவியல், கல்வியியல் மற்றும் பொறியியல் ஆகிய 5 துறைகள் தனித்தனி முதல்வரின்கீழ் செயல்பட்டு வருகின்றன. 1989-90 முதல் இளநிலைப் பட்டப்பிரிவில் 2 முக்கியப் பாடங்களும், 2 துணைப் பாடங்களும் சேர்க்கப்பட்டுள்ளன. இங்கு ஒரு கல்வியாண்டு 2 பருவமாக பகுக்கப்பட்டு ஒவ்வொன்றும் 100 நாட்கள் கொண்டதாக இயங்கி வருகின்றன. இருபருவமுறைத் திட்டத்தில் மாணவர்களின் முறையான வருகை மிக அவசியமானதாகும். மாணவர்களின் தேர்வுச் சுமையைக் குறைக்கும் வண்ணம் பாடத்தேர்வுகள் அனைத்தும் அந்தந்தப் பருவ காலத்திலேயே நடத்தப்பட்டு வருகின்றன.

**முதுகலை எம்.எஸ்ஸி. (மனையியல்)**

5.40. முதுகலை நிலையில், முதுகலை மனை அறிவியல், எம்.பில். மற்றும் பி.எச்.டி. நிலையில் குடும்ப நிர்வாகம், உணவு அறிவியல் மற்றும் ஊட்டச்சத்து, மனித மேம்பாடு, மனை அறிவியல் விரிவாக்கப் பிரிவுகள் ஆகியவை இப்பல்கலைக்கழகத்தின் சிறப்புத் துறைகளாகும். நுகர்வோர் கல்வி, கிராமப்புற குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல், பழங்குடியினர், ஊட்டச்சத்து, மருத்துவத் தாவரங்கள் பற்றிய படிப்பு ஆகியவை இப்பல்கலைக்கழகத்தின் முனைப்புக் களங்களாகும்.

**அறக்கட்டளைகள்**

5.41. உயர் கல்வித் துறையின் ஆளுகையின் கீழ்வரும் 10 பல்கலைக்கழகங்களிலும், பெருந்தலைவர்களின் பெயர்களில் 21 அறக்கட்டளைகளை, ஒவ்வொன்றுக்கும் ரூ. 25 இலட்சம் வீதம் மொத்தம் ரூ. 525 இலட்சம் மூலதனத்தில் தமிழ்நாடு அரசு உருவாக்கியுள்ளது. அதிலிருந்து வரும் வட்டித் தொகையில் அந்தந்தப் பல்கலைக்கழகத்திலும் அதன் இணைப்புக் கல்லூரிகளிலும் பயிலும் மாணவர்களை



ஊக்குவித்திடும் முறையில் சிறந்த மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

5.42. சென்னை, அண்ணா பல்கலைக்கழகத்தில் கண்ணியமிகு காயிதேமில்லத் மற்றும் டாக்டர் எம்.ஜி.ஆர். ஆகியோர் பெயர்களில் இரண்டு அறக்கட்டளைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இத்தொகை நிரந்தர வைப்பில் வைக்கப்பட்டு, அதன்மூலம் ரூ. 15,62,843/- வட்டித் தொகையாக கிடைத்துள்ளது. அத்தொகையிலிருந்து படிப்புதவித் தொகையாக 154 மாணவர்களுக்கு ரூ. 10,60,000/- அளிக்கப்பட்டுள்ளது.

5.43. சென்னை பல்கலைக்கழகத்தில் அறிஞர் அண்ணா பெயரிலும் சம்புவராயர் பெயரிலும் இரண்டு அறக்கட்டளைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

5.44. அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் வள்ளலார் மற்றும் இராமசாமி படையாச்சியார் பெயர்களில் இரண்டு அறக்கட்டளைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவ்வறக்கட்டளை நிதியிலிருந்து வட்டியாக இதுவரை ரூ. 15,97,603/- பெறப்பட்டுள்ளது. மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் மன்னர் திருமலைநாயக்கர், மருதுபாண்டியர், மாவீரர் சுந்தரலிங்கம் ஆகியோர் பெயர்களில் மூன்று அறக்கட்டளைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

5.45. கோவை, பாரதியார் பல்கலைக்கழகத்தில் காமராசர் பெயரில் அறக்கட்டளை ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத்தொகை நிரந்தர வைப்பில் வைக்கப்பட்டு, அதன்மூலம் ரூ. 3,75,000/- வட்டித் தொகையாக கிடைத்துள்ளது. அத்தொகையிலிருந்து படிப்புதவித் தொகையாக 66 மாணவர்களுக்கு ரூ. 2,12,000/- அளிக்கப்பட்டுள்ளது.

5.46. திருச்சி, பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் பெரும்பிடுகு முத்தரையர், தீரன் சின்னமலை மற்றும் வீரன் அழகுமுத்துக்கோன் ஆகியோர் பெயர்களில் மூன்று அறக்கட்டளைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்த அறக்கட்டளைகளிலிருந்து வட்டித் தொகையாக கிடைக்கப்பெற்ற பணத்தில் 249 மாணவர்களுக்கு ரூ. 5,36,000/- அளிக்கப்பட்டது. சேலம், பெரியார் பல்கலைக்கழகத்தில், டாக்டர் அம்பேத்கர் பெயரிலும், இராஜாஜி பெயரிலும் இரண்டு அறக்கட்டளைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இத்தொகை நிரந்தர வைப்பில் வைக்கப்பட்டு, அதன்மூலம் ரூ. 5,61,000/- வட்டித் தொகையாகப் பெறப்பட்டு அதில் ரூ. 20,000/- படிப்புதவித் தொகையாக 20 மாணவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது.

5.47. காரைக்குடி, அழகப்பா பல்கலைக்கழகத்தில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், வ.உ. சிதம்பரனார் ஆகியோர் பெயர்களில் இரண்டு அறக்கட்டளைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இத்தொகை நிரந்தர வைப்பில் வைக்கப்பட்டு அதன் மூலம் ரூ. 15,42,235/- வட்டித் தொகையாக கிடைத்துள்ளது. அத்தொகையிலிருந்து ரூ. 3,66,000/- படிப்புதவித் தொகையாக 61 மாணவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது. திருநெல்வேலி, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில், கட்டபொம்மன், புலித்தேவன், நேசமணி ஆகியோர் பெயர்களில் மூன்று அறக்கட்டளைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவ்வறக்கட்டளைத் தொகை நிரந்தர வைப்பில் வைக்கப்பட்டு அதன் மூலம் ரூ. 25,23,853/- வட்டித் தொகையாக கிடைத்துள்ளது. அத்தொகையிலிருந்து 255 மாணவர்களுக்குப் படிப்புதவித் தொகையாக ரூ. 7,81,000/- அளிக்கப்பட்டுள்ளது.

5.48. கொடைக்கானல், அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்தில் இராணி மங்கம்மாள் பெயரில் அறக்கட்டளை ஏற்படுத்தப்பட்டுள்ளது. அவ்வறக்கட்டளைத் தொகை நிரந்தர வைப்பில் வைக்கப்பட்டு அதன்மூலம் ரூ. 5,10,416/- வட்டித் தொகையாகக் கிடைத்துள்ளது. அத்தொகையிலிருந்து படிப்புதவித் தொகையாக 195 மாணவிகளுக்கு ரூ. 4,06,952/- அளிக்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு அரசு உருது மொழி அகாடமி**

5.49. தமிழ்நாட்டில் உருது மொழியைப் பரப்பவும், அம்மொழி வளர்ச்சிக்குகந்த உதவிபுரியவும், உருது மொழி அகாடமி உருவாக்கப்பட வேண்டுமென இஸ்லாமிய சமூகத்திடமிருந்தும், உருது கல்வி அமைப்புகளிடமிருந்தும் முறையீடுகள் பெறப்பட்டு வந்தன. அவற்றை ஏற்றுக்கொண்ட தமிழ்நாடு அரசு "தமிழ்நாடு அரசு உருது மொழி அகாடமி" என்னும் பெயருடன் உருது கல்வியாளர்களைக் கொண்ட அமைப்பை தோற்றுவித்துள்ளதுடன் இதற்கு முதற்கட்டமாக ரூ. 15 இலட்சம் நிதி வழங்கியும் ஆணையிட்டுள்ளது.

## 6. தொழில்நுட்பக் கல்வி

6.1. தொழில்நுட்பக் கல்வியானது, மாணவர்களின் திறமையை வளர்ப்பதிலும், தேசத்தின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதிலும், வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதிலும் பயன்மிக்கப் பங்களிக்கிறது. எனவே தமிழக அரசு தொழில்நுட்பக் கல்வி வளர்ச்சிக்கு முதலிடம் தந்துள்ளது. 1957 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட மாநில தொழில்நுட்பக் கல்வித் துறை மூலம் தொழில் நுணுக்கப் பட்டப் படிப்பு, பட்டய



மேற்படிப்பு, ஆராய்ச்சித் துறை போன்ற பல நிலைகளிலும் சிறந்த வளர்ச்சி அடைந்துள்ளது. எட்டாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் தமிழகத்தில் கணிசமான அளவில் தொழில்நுட்பக் கல்வி வளர்ச்சி எய்தியது. 1999-2000 ஆம் ஆண்டிற்குப் புதிதாக 7 பொறியியற் கல்லூரிகளையும், 3 பல்தொழில்நுட்பப் பயிலகங்களையும் தொடங்க, அனைத்திந்திய தொழில்நுட்பக் கல்விக் குழு அனுமதி அளித்தது. சென்னை புரசைவாக்கத்தில் மாணவர்களின் நலன் கருதி, நாடாளுமன்ற உறுப்பினர் திரு. முரசொலி மாறன் அவர்கள் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து வழங்கிய நிதியினை அடிப்படையாகக் கொண்டு புதியதாக அரசு பல்தொழில்நுட்பப் பயிலகம் தொடங்கப்பட்டுள்ளது. தற்காலிகமாக இப்பல்தொழில்நுட்பப் பயிலகம், சென்னை மையப் பல்தொழில்நுட்ப வளாகத்தில் இயங்கி வருகிறது. இப்பயிலகத்தில், மூன்று பிரிவுகளில் 180 மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

6.2. தொழில்நுட்பக் கல்வி வளர்ச்சியின் ஒரு பகுதியாக, புதிய பொறியியற் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை மற்றும் புதிய பாடப் பிரிவுகளைத் தொடங்கியதால் ஏற்பட்ட கூடுதல் மாணவர் சேர்க்கை, ஆகியவற்றால் பொறியியற் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை சென்ற ஆண்டைவிட 4,908 மாணவர்கள் (17 விழுக்காடு) கூடுதலாக 1999-2000-ல் சேர்க்கப்பட்டுள்ளனர். இதேபோல் பல்தொழில்நுட்பப் பயிலகங்களில் சென்ற ஆண்டைவிட கூடுதலாக 3,075 மாணவர்கள் (7 விழுக்காடு) கூடுதலாகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

### 6.3. பல்தொழில்நுட்பப் பயிலகங்களில் ஒற்றைச் சாளர முறை

1998-99 ஆம் கல்வியாண்டு முதல் பொறியியற் கல்லூரி மாணவர்கள் சேர்க்கையின்போது கடைப்பிடிக்கப்பட்ட ஒற்றைச் சாளர முறை, பல்தொழில்நுட்பப் பயிலகங்களிலும் கடைப்பிடிக்கப்பட்டது. இதன்படி முதலாண்டிலேயே மாணவர்களுக்குப் பாடப் பிரிவுகள் ஒதுக்கப்பட்டுவரும். பல்தொழில்நுட்பப் பயிலகங்களில் மாணவர் சேர்க்கை இந்த ஆண்டும் (2000-2001) ஒற்றைச் சாளர முறையில் மேற்கொள்ளப்படும். மாணவர்கள் பத்தாம் வகுப்பில் பெற்ற மதிப்பெண்களுடன், பொது நுழைவுத் தேர்வின் மதிப்பெண்களும் கணக்கில் கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் தகுதி முன்னுரிமை வழங்கும் முறையில் மாணவர் சேர்க்கை நடைபெறும்.

### 6.4. கிராமப்புற மாணவர்களுக்கான இட ஒதுக்கீடு

1997-98 ஆம் ஆண்டு முதல் பொறியியற் கல்லூரிகளில் மாணவர்கள் மொத்த சேர்க்கையில், 15 விழுக்காடு இடங்கள் ஊராட்சிகளில் உள்ள

மேல்நிலைப் பள்ளிகளில் மேல்நிலைக் கல்வியை முடித்த மாணவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**6.5 எவரும் பட்டப்படிப்பு பயிலாத குடும்பத்திலிருந்து பொறியியற் கல்லூரிகளில் பி.இ./பி.டெக். பயிலும் மாணவர்களுக்கு நிதியுதவி**

எவரும் பட்டப்படிப்பு பயிலாத குடும்பத்திலிருந்து தொழிற்கல்வியில் சேர்ந்து பயிலும் மாணவர்களின் கல்விக்காகும் அனைத்துச் செலவுகளையும் ஆண்டுதோறும் அரசு ஏற்றுக்கொள்ளும் என மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அறிவித்துள்ளார். இத்திட்டத்தின்கீழ் 1996-97-லிருந்து 1999-2000 வரையில் மொத்தம் ரூ. 3,47,273/- நிதி உதவி பெற்று, 40 மாணவர்கள் பயனடைந்துள்ளனர்.

**6.6 பணியிடங்களை நிரப்புதல்**

வரும் ஆண்டில் அரசுப் பொறியியற் கல்லூரிகளுக்கு 79 விரிவுரையாளர் பதவிகளை ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் நேரடி நியமனம் செய்யக் கருதப்பட்டுள்ளது. இவற்றுள் 40 பணியிடங்கள் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி வகுப்பைச் சார்ந்தவர்களைக் கொண்டு நிரப்பப்படும்.

**6.7 பல்தொழில்நுட்பப் பயிலகத்திற்கான கனடா-இந்தியக் கூட்டுறவுத் திட்டம்**

தமிழகத்தில் தொழிற்கல்வியை நவீனமயமாக்குவதற்காக கனடா அரசின் கூட்டுறவோடு "கனடா-இந்தியப் பயிலக கூட்டுறவுத் திட்டம்" ஏற்கப்பட்டுள்ளது. இத்திட்டம் தமிழ்நாடு, கர்நாடகம், கேரளம் ஆகிய 3 மாநிலங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட தொழில்நுட்பப் பயிலகங்களில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்திற்கு "கனடா அனைத்துலக முன்னேற்றக் குழு" நிதி உதவி அளித்துள்ளது.

இத்திட்டம் 1993 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு முதற் கட்டம் 3 ஆண்டு காலம் என்ற அளவில் நிறைவுபெற்று, தற்போது இரண்டாவது கட்டம் தொடர்கின்றது. பல்தொழில்நுட்பப் பயிலகக் கல்வியில் நிறுவனத் திறனை வலுப்படுத்துதல், நிலையான வழிமுறைகளின் வளர்ச்சி போன்றவையும் இத்திட்டத்தின் நோக்கங்களுள் அடங்கும். நிர்வாக வளர்ச்சி, முறைசாராக் கல்வி, ஆசிரியர் பயிற்சிக் கல்வி, தொலைதூரக் கல்வி, மகளிர் முன்னேற்றம் மற்றும் சுற்றுப்புறச் சூழல் மேம்பாடு ஆகியவை இத்திட்டத்தின் ஐந்து பகுதிகளாகும்.



**6.8 சமுதாயத் தொழில்நுட்பப் பயிலகத் திட்டம்**

கிராமப் பகுதியில் பல்தொழில்நுட்பப் பயிலகத்திற்கும், கிராம மக்களுக்கும் பெரிய அளவில் இணைப்பினை ஏற்படுத்துவதில் ஊக்கம் காட்டுவதும், ஊரக வளர்ச்சிப் பணியினை மேற்கொள்ளக்கூடிய தொழில்நுட்பத் திறனை ஊரகப் பகுதிகளில் மேம்படுத்துவதன் மூலம் அப்பகுதியின் முன்னேற்றத்திற்குத் துணைசெய்வதும் "சமுதாயப் பல்தொழில்நுட்பப் பயிலகத்தின்" குறிக்கோளாகும். சமுதாயத் தொழில்நுட்பக் கல்வித் திட்டத்தினை, மைய அரசு நிதியுதவியுடன் தமிழ்நாட்டில் தொடங்குவதற்கு அனுமதி அளித்துள்ளது. இத்திட்டம் பல்தொழில்நுட்பப் பயிலகங்களுக்கு விரிவுபடுத்தியதன் மூலம் 4 மகளிர் பல்தொழில்நுட்பப் பயிலகங்கள் உட்பட 34 பயிலகங்களில் இத்திட்டம் செயல்பட்டு வருகிறது.

**6.9 தொழில்நுட்பக் கல்விக்கான உலக வங்கி உதவித் திட்டம்**

உலக வங்கி நிதியுதவியுடன் தமிழ்நாட்டில் இரண்டாவது தொழில்நுட்பக் கல்வித் திட்டம், பல்தொழில்நுட்பப் பயிலகக் கல்வியை மேம்படுத்தும் நோக்குடன் 1992 முதல் கீழ்க்காணும் மும்முனை அணுகுமுறைகளில் ஆரம்பிக்கப்பட்டது.

1. கொள்திறன் விரிவாக்கம் (Capacity Expansion)
2. தரமேம்பாடு (Quality Improvement)
3. திறப்பாடு முன்னேற்றம் (Efficiency Improvement)

இத்திட்டத்தின்கீழ் மாணவிகள் தங்கிப் படிக்க விடுதிகள், கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள் மற்றும் இயந்திர அறைகள் கட்டுவதற்கென அரசு மற்றும் அரசு உதவிபெறும் பல்தொழில்நுட்பப் பயிலகங்களில் ரூ. 900 இலட்சம் செலவிலும், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் வைப்பதற்கான அறைகள் கட்டுவதற்கென ரூ. 321 இலட்சம் செலவிலும் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளன. புதிதாக மாற்றி அமைக்கப்பட்ட பாடத் திட்டங்களுக்கேற்பவும் ஆய்வகங்களை மேம்படுத்தவும், பழைய இயந்திரங்கள்/உபகரணங்களுக்குப் பதிலாகப் புதியவற்றை அமைத்துப் பயிற்சி தரவும் மாணவர்களின் திறனை உயர்த்தவும் தொடர் கல்வித் திட்டத்தின் மூலம் தொழிற்சாலைகளுக்குத் தேவையான ஆய்வு/கலந்து ஆலோசித்து அறியும் வசதிகள் செய்து தரவும் ரூ. 2162 இலட்சம் மதிப்பில் இயந்திரங்கள்/உபகரணங்கள்/கணிப்பொறிகள் மற்றும் அதைச் சார்ந்த மென்பொருள், வன்பொருட்கள் அனைத்து திட்ட பல்தொழில்நுட்பப் பயிலகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

பல்தொழில்நுட்பப் பயிலகங்களில் உள்ள நூலகங்களை மேம்படுத்துவதன் மூலம் மாணவ/மாணவியர் தங்களது சிறப்புப் பிரிவில் கூடுதல் அறிவு பெறுவதற்கு ஏற்ற நூல்கள் மற்றும் இதர கற்பிப்பு சாதனங்கள் ரூ. 102.70 இலட்சம் மதிப்பில் வாங்கப்பட்டுள்ளன.

புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள பட்டமுறி/பட்டய வகுப்புகளுக்கென அரசு நிதியுதவி பெறும் பயிலகங்களில் தோற்றுவிக்கப்பட்ட 145 ஆசிரியப் பணியிடங்களில் 131 ஆசிரியர்கள் முறையான அடிப்படையில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

### 6.10 அரசுத் தொழில்நுட்பத் தேர்வுகள்

பலதுறை தொழில்நுட்பத் தேர்வு எழுதுகின்றவர்கட்குச் சான்றிதழ் வழங்குவதில் தொடர்ந்து ஏற்பட்டு வந்த கால தாமதம் தற்போது நீக்கப்பட்டு, ஜூலை 1999 வரையிலான சான்றிதழ்கள் வழங்கப்பட்டுவிட்டன. இவை தனியார் அஞ்சல் (கூரியர்) மூலம் தேர்வு எழுதியவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

### 6.11 திருத்திய ஊதிய விகிதங்கள்

அரசு மற்றும் அரசு மான்யம் பெறும் பொறியியற் கல்லூரிகள்/ அண்ணா பல்கலைக்கழகம்/பல்தொழில்நுட்பப் பயிலகங்கள் மற்றும் சிறப்புப் பயிலகங்களில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு 1-1-1996 முதல் அகில இந்திய தொழில்நுட்பக் குழுமத்தின் திருத்திய ஊதிய விகிதங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

### 6.12 போர் வீரருக்கு பெருமை சேர்த்தல்

பணி படர்ந்த காஷ்மீரில், கார்கில் போரில் பங்கேற்ற திரு. எம். குணசேகரன் அவர்களின் பணியினைப் பாராட்டும் முறையில், அவரது புதல்வி செல்வி ஷாலினிக்கு, சுயநிதி பொறியியல் கல்லூரியில் பொறியியற் இளநிலை பட்டப்பிரிவில் கட்டண இடத்திற்குப் பதிலாக இலவச இடம் அளிக்கப்பட்டுள்ளது.

## 7. அண்ணா பல்கலைக் கழகம்

7.1 1978 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட அண்ணா பல்கலைக்கழகத்தில் 26 பட்டப்படிப்புத் திட்டங்கள், 52 பட்ட மேற்படிப்புத் திட்டங்கள், 5 பட்ட மேற்படிப்பு பட்டயத் திட்டங்கள் ஆகியவற்றுடன் 5 பாடத் திட்டங்களில் ஆய்வு முதுவர் படிப்பும் நடத்தப்பட்டு வருகின்றன. மேலும்,



முனைவர் (Ph.D.) பட்ட படிப்பும், எம்.எஸ். பட்ட (ஆய்வு) படிப்பும் பயில எல்லாத் துறைகளிலும் வசதிகள் உள்ளன. இந்தத் திட்டங்களில் பெரும்பான்மையானவை பொதுவாக மைய அரசு மற்றும் தமிழக அரசின் வளர்ச்சித் திட்டங்களோடு தொடர்புடையவை.

7.2 உயிரித் தொழில்நுட்பம், படிக வளர்ச்சி, தொலை நுட்பவியல், சுற்றுப்புறப் பொறியியல், நீர் ஆதாரங்கள், கடல் மேலாண்மை, மின்னணுச் செய்தி ஆகிய துறைகளில் இப்பல்கலைக்கழகம் பாராட்டத்தக்கப் பணிகளைச் செய்து வருகிறது. கற்பித்தலும், ஆய்வும் அதன் விரிவாக்கமும், இன்னபிறவும், நாளுக்கு நாள் வளர்ந்து வரும் நாட்டின் தேவைகளுக்கு ஏற்றவாறு வளர்ந்து வருகிறது. அதோடு மட்டுமின்றித் தொழில்நுட்பத் திறன்களையும் மேம்படுத்தி வருகிறது. அண்ணா பல்கலைக்கழகம் மிகப்பெரிய வளர்ச்சித் திட்டமொன்றைத் தீட்டி உள்நாட்டிலிருந்தும், வெளிநாட்டிலிருந்தும் பல்வேறு அமைப்புகளிடமிருந்தும் நிதி உதவிகளைப் பெற்று உள்கட்டமைப்பு வளர்ச்சிக்கும், பல்வேறு வகைப்பட்ட துறை வளர்ச்சிக்கும் புதிய பாடப் பிரிவுகளுக்கும் பயன்படுத்தி வருகிறது.

7.3 பட்டப்படிப்புத் திடடத்திற்கு ஏறக்குறைய 850 மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்கள். மேலும், பட்டமேற்படிப்பு திட்டத்தின்கீழ் சேரும் மாணவர்களின் எண்ணிக்கையும் 800 ஆகும். இப்பல்கலைக்கழகம் பெற்றிருக்கும் முழுநேரப் படிப்புத் திட்டங்களில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை ஒரு ஆண்டிற்கு ஏறக்குறைய 5500 ஆகும். அவர்களுள் மாணவியரின் எண்ணிக்கை 27 விழுக்காடு ஆகும்.

7.4 அண்ணா பல்கலைக்கழகம் நடத்தும் பாடப் பிரிவுகள் சுரங்கப்பொறியியல் (Mining Engineering), இரப்பர் தொழில்நுட்பம் (Rubber Technology), மட்பாண்டத் தொழில் (Ceramic Technology), காலணி தயாரிப்பு (Footwear Science and Engineering), கட்டடப் பொறியியலும் அதன் மேலாண்மையும் (Construction Engineering and Management), உயிரித் தொழில்நுட்பம் (Bio-Technology), பெட்ரோலிய சுத்திகரிப்பு நிலையங்கள் மற்றும் பெட்ரோலியப் பொருட்கள் (Petroleum Refineries and Petrochemical Engineering), போர் விமானங்கள் (War Planes), சர்க்கரைத் தொழில் (Sugar Technology), நிலவியல் செய்திகள் (Geo Informatics) அச்சுத் தொழில் நுட்பம் (Printing Technology) உற்பத்தி மூலங்கள் ஆகிய துறைகளுக்குத் தேவைப்படும் தொழில்நுட்ப அறிவுரைகளையும், தேவைப்படும் வேலையாட்களின் எண்ணிக்கை முதலான செய்திகளையும் தருவதில் முன் நிற்கிறது.

7.5 புதிய மீட்டாக்க ஆற்றல் மூலங்களுக்கான ஆய்வு மையம் தமிழக அரசின் உதவியுடன் நிறுவப்பட்டது. இம்மையம் சூரிய ஆற்றல், காற்று ஆற்றல், ஆற்றல் சேமக்காப்பு, ஆற்றல் சிக்கனம், சூழல்காப்பு, மேலாண்மை ஆகிய துறைகளில் பயிற்சித் திட்டங்கள், குறுங்கால வகுப்புகள், பயிலரங்குகள் ஆகியன நடத்துவதுடன், ஆய்வு, வளர்ச்சிப் பணிகளையும் மேற்கொண்டுள்ளது.

7.6 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக் குழுமத்தின் நிதி உதவியைக் கொண்டு, கட்டடத் தொழில்நுட்ப மையம் நிறுவப்பட்டது. இம்மையம் பொறியாளர்களுக்கும், துணைப் பணியாளர்களுக்கும் பயிற்சி வகுப்புகள் நடத்துவதுடன் சிக்கனமாக வீடுகட்டும் நோக்கில் ஆய்வு, வளர்ச்சிப் பணிகளில் ஈடுபட்டு வருகிறது. மாநில, மைய அரசுகளின் கட்டட மேம்பாட்டுக் குழுக்கள் அனைத்திலும் இம்மையம் பங்கு பெற்றுள்ளது.

7.7 வானூர்தித் துறையையும், மின்னணுவியல் துறையையும், இணைத்து உருவாக்கப்பட்டதே வான் மின்னணுவியல் துறை. விமானம், செயற்கைக்கோள் அமைப்புகளில் தேவைப்படும் சிக்கலான மின்னணுவியல் அமைப்புகள், சுற்றுகள் ஆகியவற்றைக் குறித்த ஆய்வுத் துறை இது. தமிழக அரசு, மைய அரசு, மத்திய மின்னணுவியல் துறை, பல்கலைக்கழக மானியக் குழு ஆகியவற்றின் ஆதரவில் இப்பாடத் துறை நடைபெறுகிறது. எம்.ஈ. பட்டப்படிப்பு மூலமாகவும், வான் மின்னணுவியல் துறையிலுள்ள பொறியாளர்கள் அறிவியலாளர்களுக்கான தொடர் கல்வித் திட்டங்கள் மூலமாகவும் அத்துறைக்குத் தேவையான தொழில்நுட்பப் பணியாளர்களை உருவாக்க உதவி வருகிறது.

7.8 இந்நாட்டின் எதிர்காலத்திற்கே புதிய வடிவம் அளிக்கும் வகையில் வளர்ந்து வரும் தகவல் தொழில்நுட்பப் புரட்சியிலும் முன்னணி நிலையைக் காத்துக் கொள்வதற்கு அண்ணா பல்கலைக்கழகம் முனைந்து செயல்பட்டு வருகிறது. இத்துறையில் உலகத் தரம் வாய்ந்த வல்லுநர்களை உருவாக்கும் நோக்கில், அண்ணா பல்கலைக்கழகத்தின் கல்விப் பயிற்சியில் பெண்டாபோர் நிறுவனத்தின் தொழில்நுட்ப வல்லமையையும் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் உயர் பள்ளி ஒன்றை நிறுவி நடைமுறைத் திட்டப் பணிகள் வாயிலாகப் பயிற்றுவிக்கும் திட்டத்துக்கும் வழிவகுக்கப்படுகிறது. அண்ணா பல்கலைக்கழக பெண்டாபோர் தொடர்பியல் கணிப்பொறி மையத்தின் வாயிலாகத் தகவல் தொழில்நுட்பக் கல்வியில் புதியதோர் சிகரத்தை எய்தும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு, இத்துறை சார்ந்த உயர்நிலை நுட்பங்களில் தேர்ச்சி பெற்றவர்களாகத் தொழில்நுட்ப வல்லுநர்களைப் பயிற்றுவிக்கும் திட்டம் செயல்படும்.



7.9 தமிழக அரசின் வீட்டுவசதித் திட்டங்களோடு தொடர்புடைய நகர்ப்புற, நாட்டுப்புற வீட்டுவசதி, நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றில், வலுவான துறையமைப்பை (Strong Department) அண்ணா பல்கலைக்கழகம் கொண்டிருக்கிறது. அத்தகைய திட்டங்களில் குறிப்பிடத்தக்கவை நீர்நிலைப் பயன்பாட்டு மேம்பாட்டுத் திட்டம், நகரமைப்பில் மனித சக்தியைப் பயன்படுத்துவதற்கான புள்ளி விவரத் திட்டம், நிலத்தடி நீர், நிலவியல், வேளாண்மை, வனப் பாதுகாப்பு, மீன் வளர்ப்பு ஆகியவற்றின் முன்னேற்றத் திட்டங்கள் ஆகும்.

7.10 தொலை உணர்வு நிறுவனமானது, பல்வேறு செயலாக்கத் திட்டங்களை தொலை உணர்வுத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நிறைவேற்றி வருகிறது. அத்தகைய திட்டங்களில் மேற்குத் தொடர்ச்சிமலை வளர்ச்சித் திட்டம், மலைப்பகுதிகளின் வளர்ச்சித் திட்டம், ஊராட்சிகளுக்கான வளத்தகவல் அமைப்புத் திட்டம், நிலத்தடி நீர் மீட்டுட்டுத் திட்டம், கடற்கரைப் பகுதிகளின் தகவல் அமைப்புத் திட்டம் போன்றவை உள்ளடங்கும். இதுவரை இந்நிறுவனம் நடத்தியுள்ள 63 பயிற்சித் திட்டங்களில் 700-க்கும் மேற்பட்ட அரசு அலுவலர்கள் பயனடைந்துள்ளனர். தற்போது தமிழக அரசின் நில அளவியல், பதிவேடுகள் துறை அலுவலர்களுக்கான பயிற்சித் திட்டமொன்று விரிவான அளவில் நடைபெற்று வருகிறது.

7.11 ஜெர்மன் அரசின் உதவியுடன் கணிப்பொறி வழி வடிவமைப்பு மற்றும் உற்பத்திச் செயல் மையம் ஒன்றும் நிறுவப்பட்டுள்ளது. படிக வளர்ச்சித் தொழில்நுட்பத் துறையின் உயர்நுணுக்கங்களை உணர்ந்தே, பல்கலைக்கழக மானியக் குழு இம்மையத்திற்கு தேசிய மையம் எனும் தகுதி அளித்து படிக வளர்ச்சி மையம் அண்ணா பல்கலைக்கழகத்தின் உறுப்பாக நிறுவ உதவியுள்ளது. லேசர் துறையின் முக்கியத்துவத்தையும், அதன் தொழில்நுட்பத்தையும் அறிந்த மனித ஆற்றலின் தேவையைக் கருதி லேசர் தொழில்நுட்ப மையம் தொடங்கப்பட்டது. தொழிற்சாலைகள் மற்றும் மருத்துவமனைகளில் லேசரின் பயன்பாட்டினை உயர்த்தும் வண்ணம் இம்மையத்தில் ஆராய்ச்சிகள் நடைபெறுகின்றன.

7.12 தொழில்கல்விப் பட்டப் படிப்புகளுக்கான நுழைவுத் தேர்வை நடத்துதல், ஒற்றைச் சாளர முறையில் பொறியியற் கல்விக்குச் சேர்க்கை ஆகிய இருபெரும் பொறுப்புகளையும் தமிழக அரசு, அண்ணா பல்கலைக் கழகத்தின்பால் ஒப்படைத்துள்ளது.

7.13 பல்கலைக்கழகத்தின் சிறப்பு வாய்ந்த முன்னாள் மாணவர்கள் தமது தாய் பல்கலைக்கழகத்தின் வளர்ச்சியில் அக்கறை கொண்டு தொடர்ந்து ஒத்துழைப்பு நல்கி வருகின்றனர். இப்பல்கலைக்கழகத்தின் முன்னாள் மாணவர் திரு. கே.பி. சந்திரசேகர் அவர்களின் குடும்ப நிதிக்கட்டளையானது, கணினி இணைவு மற்றும் தகவல் தொடர்புக்கான AU-KBC மையம் நிறுவ ரூ. 2.50 கோடி நிதி வழங்கியுள்ளமை பாராட்டுக்குரியதாகும்.

7.14 அனைத்திந்திய தொழில்நுட்ப அவையால் அனுப்பப்பட்ட தேசிய ஏற்பளிப்பு மன்றத்தின் வல்லுநர் குழு இப்பல்கலைக்கழகத்திற்கு வந்திருந்து 56 படிப்புத் திட்டங்கள் செயல்படும் முறைகளை மதிப்பீடு செய்து 48 திட்டங்களுக்கு "ஏ" (முதல்) தரம் ஐந்து ஆண்டு காலத்திற்கு வழங்கியுள்ளது.

7.15 அண்ணா பல்கலைக்கழகம் இணையவலை (Web)யினாலான மேற்படிப்பினை கணிப்பொறி அறிவியல், பயன்முறை மின்னணுவியல், ஆற்றல் அமைப்புகள், கட்டமைப்புப் பொறியியல் மற்றும் குளிர்பதன காற்றுப் பதனாக்க பொறியியல் ஆகிய துறைகளில் அறிமுகம் செய்துள்ளது. மேற்குறிப்பிட்ட பாடத் திட்டங்கள் கணினி இணையத்தில் (Internet) கலந்துரையாடல் முறையில் வழங்கப்படுகிறது. இந்திய அரசின் தகவல் தொழில்நுட்ப கோட்பாட்டிற்கு இணங்க தகுதிப்புள்ளி சேமிப்புக் கொள்கையை (Credit Bank Policy) அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த முறையில் அண்ணா பல்கலைக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ள இதர பல நிறுவனங்களில் கற்பிக்கும் பாடத் திட்டங்களையும் அதில் பெறும் தேர்ச்சிகளையும் கணக்கில் கொண்டு இணைத்து, பட்டம் அல்லது பட்டயம் அல்லது சான்றிதழ்களை இப்பல்கலைக்கழகத்தில் இருந்து பெற வழி செய்யப்பட்டுள்ளது.

## 8. மண்டலப் பொறியியற் கல்லூரி, திருச்சிராப்பள்ளி

8.1 மண்டலப் பொறியியற் கல்லூரி, திருச்சிராப்பள்ளி 1964-65 ஆம் ஆண்டு மத்திய மாநில அரசுகளின் கூட்டு முயற்சியால் தொடங்கப்பட்டு தற்போது இந்தியாவிலுள்ள தலைசிறந்த பொறியியற் கல்லூரிகளில் ஒன்றாகத் திகழ்கிறது. 778 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள இக்கல்லூரியில் 3560 மாணவர்கள் பயில்கின்றனர். மற்றும் 560 அலுவலர்கள் பணிபுரிகிறார்கள். இக்கல்லூரியில் 15 துறைகளில் 10 இளங்கலைப் பொறியியற் பட்டப்படிப்புகளும், 31 முதுகலைப் பட்டப்படிப்புகளும் பயிற்றுவிக்கப்படுகின்றன. இக்கல்லூரியில் இளங்கலைப் பட்டப்படிப்பு மாணவர்கள் 50 விழுக்காட்டினர் தமிழ்நாடு



பொறியியற் பட்டப்படிப்பு நுழைவுத் தேர்வு மூலமாகவும், எஞ்சியோர் மற்ற மாநில மண்டலப் பொறியியற் கல்லூரிகள் மூலமாகவும் தெரிவு செய்யப்படுகின்றனர். இக்கல்லூரியில் பட்டப்படிப்பில் அனைத்துத் துறைகளிலும் சிறந்த கல்விப் பயிற்சி வழங்குவதுடன் குறிப்பாகத் தகவல் தொழில்நுட்பவியல் கல்விக்குச் சிறப்பிடம் தரப்படுகிறது.

### 8.2 நிர்வாகம்

இக்கல்லூரி நிறுவனங்கள் பதிவுச் சட்டத்தின்கீழ்ப் பதிவு செய்யப்பட்டு 16 பேர் கொண்ட ஆளுநர் குழுவால் நிர்வகிக்கப்படுகிறது. ஆளுநர் குழுவின் தலைவர், தமிழக அரசின் கல்வி அமைச்சராவார். இக்கல்லூரி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் இணைக்கப்பட்டுத் தன்னாட்சி அமைப்பாகச் செயல்பட்டு வருகிறது. இந்தியாவில் உள்ள 17 மண்டலப் பொறியியல் கல்லூரிகளில் 15 ஆண்டுகளுக்கு மேலாகத் தன்னாட்சி பெற்று விளங்கும் சிறந்த கல்வி நிறுவனமாக திருச்சி மண்டலப் பொறியியற் கல்லூரி விளங்குகிறது.

### 8.3 நிதி நிர்வாகம்

இக்கல்லூரிக்குத் தேவைப்படும் கட்டடம், தளவாடப் பொருட்கள் அறைகலன்கள் முதலியவற்றிற்காகும் தொடராச் செலவினத்திற்கு முழு மானியமும், மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட பட்டமேல் படிப்புகளுக்கு ஆகும் செலவிற்கு முழுத் தொடர் மானியமும் மத்திய அரசு வழங்குகிறது. இளங்கலைப் பட்டப்படிப்புகளுக்கான செலவினங்களுக்கு மத்திய அரசும், மாநில அரசும் 50:50 என்ற விகிதத்தில் தொடர் மானியம் வழங்குகின்றன.

### 8.4 சிறப்பு வசதிகள்

இந்நிறுவனத்தில் 24 மணிநேரமும் இயங்கும் கணிப்பொறி மையம் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. இதில் ஒரே சமயத்தில் 300 மாணவர்கள் பயிற்சி பெறும் வசதி உள்ளது. இக்கணிப்பொறி மையத்திற்கெனத் தனி நூலகம் உள்ளது. இங்குள்ள தன்பயன் கணிப்பொறிகள் (Personal Computers) கணிப்பொறி மையத்திலுள்ள அலுவலர்களாலும் மாணவர்களாலும் செய்யப்பட்டவையாகும். கணிப்பொறிகளின் பழுதுபார்ப்பும், பராமரிப்பும் இம்மையத்திலுள்ள அலுவலர்களால் மேற்கொள்ளப்படுகிறது. இக்கணிப்பொறி மையத்தில் இக்கல்லூரியிலுள்ள மாணவர்களுக்கு மட்டுமின்றி, திருச்சி நகரைச் சுற்றியுள்ள தொழிற்சாலைகள், கல்விக்கூடங்கள், கல்லூரிகளிலுள்ளவர்களும் பயிற்சி பெறும் வகையில் பல வகுப்புகள் நடத்தப்படுகின்றன. மேலும், பொது

[2000 ஏப்ரல் 10

மற்றும் தனியார் தொழில் நிறுவனங்களுக்குப் பொறியியல் சம்பந்தமான ஆலோசனை வழங்கும் பணியும் நடைபெறுகிறது. இக்கல்லூரி டாட்டா-ஐபிஎம் நிறுவனத்துடன் ஓர் உடன்பாடு செய்துகொண்டு, இக்கல்லூரியிலுள்ள மாணவர்கள் மட்டுமின்றி அருகிலுள்ள கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த மாணவர்களும் பயன்பெறும் வகையில் மென்பொருள் ஆய்வகம் (Software Laboratory) ஒன்றை நிறுவும் முயற்சியில் உள்ளது. இதனால் மாணவர்களின் வேலைவாய்ப்பு மேலும் பெருகும் வாய்ப்பு உள்ளது.

8.5 இந்திய - இங்கிலாந்து அரசுகள் உதவியளிக்கும் எரிசக்தி மையத் திட்டத்தின்கீழ், காற்றுவிசை மூலம் மின்சக்தி தயாரித்தல், சூரிய ஒளியிலிருந்து மின்சக்தி தயாரித்தல், மேலும் சில பொருட்களிலிருந்து மின்சக்தி தயாரித்தல் முதலிய ஆய்வுப் பணிகளுக்காக ரூ. 150 இலட்சம் செலவில் ஆய்வுக் கூடங்கள் கட்டப்படுகின்றன. இந்த ஆய்வுக் கூடங்களுக்கு ரூ.180 இலட்சம் செலவில் உபகரணங்கள் வாங்கப்பட்டுள்ளன. இந்த ஆய்வுக் கூடங்கள் இக்கல்லூரியின் பல்வேறு பிரிவுகளில் படிக்கும் மாணவர்களுக்கும் பயன்படுகின்றன. இக்கல்லூரியில் பயிலும் மாணவர்களின் தொழில் பயிற்சித் திறன் சிறப்பாக உள்ளதால், அவர்களுள் 95 விழுக்காட்டினர் படிப்பு முடிவதற்கு முன்னரே பிற மாநிலங்களிலும் வெளிநாடுகளிலும் வேலை வழங்கப்பெற்று வருகின்றனர்.

8.6 இக்கல்லூரி இந்தியாவிலேயே மூன்றாவது சிறந்த பொறியியற் கல்லூரியாக விளங்குகிறது. மற்றும் இந்தியாவில் உள்ள 12 சிறந்து கணிப்பொறி கல்வி வழங்கும் நிறுவனங்களில் இக்கல்லூரியும் ஒன்று. தேசிய தர ஏற்பளிப்பு வாரியம் இக்கல்லூரியினை மார்ச் 1997இல் பார்வையிட்டு ஆய்வு செய்து இக்கல்லூரியில் நடத்தப்பெறும் ஒன்பது படிப்புப் பிரிவுகளுக்குத் தர ஏற்பளிப்புச் சான்று வழங்கியுள்ளது.

### 9. தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றம்

9.1 நமது மாநிலத்தின் வளர்ச்சி, அறிவியல் தொழில்நுட்ப முன்னேற்றத்தின் மூலம்தான் ஏற்படலாகும் என்பதை உணர்ந்துகொண்ட மாநில அரசு, இத்தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றத்தை 1984ஆம் ஆண்டு நிறுவியது. தமிழ்நாட்டின் சமூகப் பொருளாதார வளர்ச்சியை உயர்த்தும் நோக்குடன் விவசாயம், சுகாதாரம், கல்வி, சக்தி, மனிதவளம் போன்ற துறைகளில் அறிவியல் தொழில்நுட்பத் திட்டங்களை உருவாக்கி நிறைவேற்றும் பொறுப்பை இம்மன்றம் ஏற்றுள்ளது. இம்மன்றம், மத்திய மாநில அரசுகளின் இணைந்த முயற்சியின் வடிவாகத் திகழ்கிறது.



2000 ஏப்ரல் 10]

மாநில அரசின் ஐந்தாண்டுத் திட்டங்களில், வளர்ச்சித் துறைகளில், அறிவியல் தொழில்நுட்பப் பகுதிகளை உருவாக்குவதற்கான ஆலோசனைகள் வழங்கி வருகிறது. தமிழக அரசின் கல்வி அமைச்சர் இம்மன்றத்தின் தலைவராகச் செயல்படுகிறார்.

9.2 தமிழக அரசு 1984 முதல் 2000 வரை கீழ்வரும் அறிவியல் மேம்பாட்டுத் திட்டங்களுக்கான மானியமாக ரூ.508 இலட்சம் வழங்கியுள்ளது.

1. அறிவியல் தொழில் நுட்பவியல் ஆராய்ச்சித் திட்டங்கள்.
2. அறிவியல் தொழில் நுட்பவியல் செய்தி திரட்டும அமைப்பு.
3. அறிவியல் தொழில் நுட்ப அறிவைப் பரப்புதல்.
4. தொழில்முனைவோர் வளர்ச்சித் திட்டம்.
5. இளம் விஞ்ஞானிகளுக்கு ஊக்கமளிப்பதுடன், பயண ஊக்கத் தொகை மற்றும் ஆராய்ச்சி பயிற்சித் தொகை வழங்குதல்.
6. கருத்தரங்குகள் மற்றும் ஆய்வரங்குகள் நடத்தும் கல்வி நிறுவனங்களுக்கு நிதி உதவி.
7. குழு விவாதங்கள்.
8. ஆராய்ச்சியாளர் - தொழில் நிறுவனங்களிடை கருத்துப் பரிமாற்றம்.
9. அறிவியல் தொழில் நுட்பவியல் நூல்கள் மற்றும் தமிழில் வெளியாகும் துளிர், அறிக அறிவியல் போன்ற ஏடுகளுக்கு உதவி.
10. மாணவர் ஆய்வுத் திட்டம்.
11. தமிழ்நாட்டு விஞ்ஞானிகளுக்குப் பரிசுத் திட்டம்.
12. கிராமப்புறங்களிலிருந்து இளம் மாணவ விஞ்ஞானிகளை உருவாக்கும் திட்டம்.
13. கிராமப்புறங்களில் அறிவியல் சார் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த உதவுதல்.

9.3 இதுவரை 80 அறிவியல் தொழில்நுட்பவியல் திட்டங்களை இம்மன்றம் நிறைவேற்றியுள்ளது. மேலும் 40 திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ஆய்வுகளில் கண்ட தெரிவுகள்,

பரிந்துரைகள் ஆகியவற்றின் தொடர்பான நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது.

9.4 கிராமப்புறங்களில் சுயவேலை வாய்ப்புகளை உருவாக்குவதற்காக இளைஞர்களுக்கும், பெண்களுக்கும் தொழில் பயிற்சி அளிக்கப்படுகிறது. தொழில் நிறுவனங்கள், உயர் கல்வி மற்றும் தொழில் நுட்ப கல்வி நிலையங்கள், அரசுத் துறைகள் மற்றும் நிதி நிறுவனங்களிடையே கருத்துப் பரிமாற்றத்துக்கு வழிவகை செய்கிறது.

9.5 அறிவியல் ஆய்வாளர்களுக்கு விருது வழங்கும் திட்டத்தின்கீழ் ஆண்டுதோறும் பத்து துறைகளில் தலைசிறந்த ஆய்வுக் கண்டுபிடிப்புகளைக் கண்டறிந்து அறிவியல் ஆய்வாளர் பதின்மருக்குத் தலா ரூ.10,000/-மும், ஒரு தாமிரக் கேடயமும் வழங்கப்படுகிறது.

9.6 கிராமப்புறங்களிலிருந்து இளம் மாணவ விஞ்ஞானிகளை உருவாக்கும் திட்டம் மிகச் சிறப்பாக செயல்படுத்தப்படுகிறது இத்திட்டத்தின் மூலம் மாவட்டத்திலுள்ள பள்ளிகளில் எட்டாம் வகுப்பில் பயிலும் மாணவர்கள் ஐம்பது பேர், எழுத்துத் தேர்வு மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு, கோடை விடுமுறையில் ஒரு மாத காலம், ஏதேனும் ஒரு கல்லூரியில் அல்லது பல்கலைக்கழகத்தில் தங்கி அங்குள்ள தேர்ந்த பேராசிரியர்கள் மூலம் அறிவியல் பாடங்களில் சிறந்த பயிற்சி வழங்கப்படுகிறது. சோதனைக் கூடங்களில் சிறு ஆய்வுகளைச் செய்து பார்க்கவும் அனுமதிக்கப்படுவர். தொழிற்கூடங்களுக்கும், அறிவியல் மையங்களுக்கும், ஆய்வு நிறுவனங்களுக்கும் அழைத்துச் செல்லப்பட்டு அவை செயல்படும் முறை விளக்கப்படும். மைய அரசு கல்வித் துறையின் மனித வள மேம்பாட்டு நிறுவனத்தின் நிதி உதவியுடன் 1998-99ஆம் ஆண்டில் 13 மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. 2000-2001ஆம் ஆண்டில் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்த வேண்டும் என்ற முனைப்போடு இம்மன்றம் செயல்படுகிறது. இதற்கு மைய அரசு ரூ.30 இலட்சம் நிதி உதவி வழங்க இருக்கிறது.

9.7 மேற்கண்ட திட்டங்களுடன் கிராமப்புறங்களில் உள்ள பாரம்பரியக் கைவினைஞர்களுக்கு அறிவியல் தொழில்நுட்ப முறைகளை அறிமுகம் செய்து அவர்கள் தொழிலை மேம்படுத்துதல் என்ற திட்டத்திற்கு ரூ.5 இலட்சத்தில் திட்டமிடப்பட்டுள்ளது.

## 10. தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம்

10.1 தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம் ஒரு தன்னாட்சி நிறுவனமாக தமிழக அரசினால், 1983 ஆம் ஆண்டு நிறுவப்பட்டு, கல்வி



அமைச்சர் தலைமையின்கீழ் இயங்கி வருகிறது. மக்களிடையிலும் குறிப்பாக மாணவர்களிடையிலும் அறிவியல்-தொழில்நுட்ப விழிப்புணர்வை உருவாக்குவது இம்மையத்தின் முக்கிய நோக்கமாகும்.

10.2 பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையத்தில் "நகர்ப்புற வளர்ச்சிக் கூடம்" ஒன்றை ஏற்படுத்திட அரசு ஆணையிட்டுள்ளது. இக்கூடம் அமைத்திட சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம், சென்னை குடிநீர் மற்றும் கழிவு நீர் அகற்று வாரியம், தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியம், சென்னை மாநகராட்சி ஆகியவை அந்தந்த வாரிய/குழுமத்தின் ஒப்புதலுடன் தலா ரூ. 5 இலட்சத்தை மையத்திற்குச் செலுத்த வேண்டும் என முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இது குறித்தச் செயல்பாடுகள் அனைத்தையும் ஒருங்கிணைத்திட, ஒரு வழிகாட்டுக் குழு மற்றும் தொழில்நுட்பக் குழு ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன. மேற்கண்ட "நகர்ப்புற வளர்ச்சிக் கூடம்" இந்த நிதியாண்டில் அமைத்திட அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இசைவளித்தத் துறைகளிலிருந்து இதுவரை ரூ.20 இலட்சம் பெறப்பட்டுள்ளது.

10.3 "தகவல் தொடர்பு தொழில்நுட்பக் கூடம்" அமைத்து உடன் உறவாடும் காட்சிப் பொருள்கள் வைத்திட ரூ.30 இலட்சங்கள் ஒப்பளிக்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இது குறித்த பணிகள் தொடங்கப்பட்டு, இந்த ஆண்டிற்குள் முடிவடைந்து விடும்.

10.4 மேலும், கருத்தரங்கம், பயிலரங்கம், மாணவர்களுக்கான வினாடி வினாப் போட்டி மற்றும் முக்கிய வானியல் நிகழ்வுகளின்போது அவை குறித்த விளக்கஞ்செய்யும் முகாம்கள், சிறப்புத் தொலைநோக்கி மூலம் வானினை நோக்குதல் ஆகியவற்றை இம்மையம் சிறப்பாக நடத்தி வருகின்றது.

10.5 திருச்சிராப்பள்ளி, அண்ணா அறிவியல் மையத்தில் ரூ.128 இலட்சம் செலவில் கோளரங்கம் கட்டப்பட்டு, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 10-6-1999 அன்று நாட்டு மக்களுக்கு ஒப்பளிக்கப்பட்டது.

இக்கோளரங்கத்தில் உள்ள படக்கருவி மற்றும் இதர சாதனங்கள் ரூ.150 ட இலட்சம் மதிப்பில் ஜப்பானிய அரசால், "இந்திய-ஜப்பானியப் பண்பாட்டு உறவு" அடிப்படையில் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது. இதில், ரூ.39 இலட்சம் செலவில் கணிப்பொறி கட்டுப்பாடுகள் அரசு ஒப்புதலுடன் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், அறிவியல் மையத்தில் ரூ.25 இலட்சம் செலவில் ஒரு காட்சிக்கூடம் கட்டவும், அதில் ரூ.10 இலட்சம்

செலவில் காட்சிப் பொருள்கள் அமைத்திடவும் அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

*10.6.* இத்தகைய மையங்களை ஏற்படுத்தி, அதன் பயன்கள் விரிவடைய வேண்டும் என்ற நோக்கத்துடன், கோயம்புத்தூரில் ஒரு மண்டல அறிவியல் மையமும், வேலூரில் ஒரு மாவட்ட அறிவியல் மையமும் அமைத்திட அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

## 11. அறிவியல் நகரம்

*11.1* சென்னை நகரிலுள்ள கிண்டி மற்றும் தரமணி பகுதியில் அமைந்துள்ள இந்தியத் தொழில்நுட்பக் கழகம், அண்ணா பல்கலைக்கழகம், மத்திய தோல் ஆய்வு மையம், பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையம் முதலான 60-க்கும் மேற்பட்ட மைய மற்றும் மாநிலக் கல்வி மற்றும் ஆய்வு நிறுவனங்களை உள்ளடக்கிய இவ்வளாகம் அறிவியல் நகரம் என வரையறுக்கப்பட்டுள்ளது.

*11.2* அறிவியல் நகரம் ஒரு இலாபநோக்கமற்ற நிறுவனமாகப் பதிவு செய்யப்படும். தமிழக முதலமைச்சர் அவர்கள் இதன் தலைவராகவும். கல்வி அமைசசர் அவர்கள் இதன் துணைத் தலைவராகவும் இருப்பர். நான்கு புகழ்மிக்க விஞ்ஞானிகள்/தொழில்நுட்ப வல்லுநர்கள்/முக்கிய நிறுவனங்களின் தலைவர்கள் ஆகியோர் இந்நிறுவனத்தின் உறுப்பினர்களாக இருப்பர்.

*11.3* அறிவியல் நகரிலுள்ள நிறுவனங்களில் 1,500 பி.எச்.டி. பட்டம் பெற்றவர்களும், 3,500 அறிவியல் ஆய்வாளர்களும் உள்ளனர். இந்நகரில் 1,500க்கும் மேற்பட்ட ஆய்வுகள் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறைகளில் நடைபெறுகிறது. இங்கு ரூ. 500 கோடிக்கும் மேற்பட்ட மதிப்புள்ள அறிவியல் நுட்பக் கருவிகள் உள்ளன.

## 12. தமிழ்நாடு ஆவணக்காப்பகம்

*12.1* அரசு ஆவணங்களை ஒருங்கிணைத்து காத்துவைப்பதற்குச் சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் 1805 ஆம் ஆண்டு வில்லியம் பென்டிங் பிரபு அவர்களால் தமிழ்நாடு ஆவணக்காப்பகம் முதன் முதலில் தோற்றுவிக்கப்பட்டது. பின்னர், இது ஒரு முழுமையான ஆவணக்காப்பகமாக வடிவமைக்கப்பட்டு, தற்போது எழும்பூரில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க வளாகத்திற்கு 1909ஆம் ஆண்டில் மாற்றப்பட்டு



இயங்கி வருகிறது. இங்குள்ள ஆவணங்கள் முந்நூறு ஆண்டுகளுக்கும் மேற்பட்டவை. அவை டேனிஷ், டச்சு, ஆங்கிலம், பிரன்ச், பெர்சியன் மற்றும் மோடி மொழிகளில் எழுதப்பட்டுள்ளன. இவற்றில் மிகவும் பழமை வாய்ந்த ஆவணங்கள் 1657 ஆம் ஆண்டைச் சார்ந்த டச்சு ஆவணங்கள் ஆகும். ஆங்கிலம் தவிர ஏனைய மொழிகளில் உள்ள ஆவணங்கள், அவற்றில் புதைந்து கிடக்கும் வரலாறுகளை வெளிக்கொணர மொழிபெயர்க்கப்பட வேண்டியதாக உள்ளது. ஆவணங்கள் அனைத்தும் அறிவியல் முறைகளைப் பயன்படுத்திப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

### 12.2 ஆவணக்காப்பக நூலகம்

ஆவணக்காப்பகத்தின் அறை ஒன்றில் சிறப்பு நூலகம் ஒன்று சுமார் இரண்டரை இலட்சம் அரிய நூல்களுடன் இயங்கி வருகிறது. அவற்றில் மிகப் பழமையான நூல் 1633ஆம் ஆண்டைச் சார்ந்ததாகும். வல்லுநர்களுக்கும், வரலாற்று ஆராய்ச்சியாளர்களுக்கும் இந்நூலகம் மிகவும் பயன்படும் சிறப்புடையதாகும். தமிழ்நாடு ஆவணக்காப்பகத்தின் 90 ஆண்டு வரலாற்றில், ஆவண நூலகத்திற்கு என ரூ. 97 இலட்சம் செலவில் தனிக் கட்டடம் கட்டப்பட்டு, அந்நூலகம் இந்தியக் குடியரசுப் பொன் விழா ஆண்டு முதல் இயங்கி வருகிறது. நடப்பு நிதியாண்டில் ரூ.9.50 இலட்சம் மதிப்பீட்டில் கணிப்பொறிகள் அமைக்கப்பட்டதன் மூலம் தமிழ்நாடு ஆவணக்காப்பகம் கணினித் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திக்கொள்ளும் நிலைக்கு உயர்ந்துள்ளது.

### 12.3 ஆராய்ச்சிக்கூடம்

அனைத்து வசதிகளுடன், குளிர்சாதனம் அமைந்த ஓர் ஆராய்ச்சிக்கூடம் தமிழ்நாடு ஆவணக்காப்பகத்தில் இயங்கி வருகிறது. தமிழ்நாடு ஆவணக்காப்பகம், வரலாற்று ஆய்வில் முனைவர் பட்ட ஆய்வுக்குரிய ஆராய்ச்சி மையமாகச் சென்னைப் பல்கலைக்கழகத்தால் இசைவளிக்கப்பட்டுள்ளது. மேலும் உள்நாட்டிலிருந்து மட்டுமன்றி வெளிநாடுகளிலிருந்தும் ஆராய்ச்சியாளர்களும், மாணவர்களும், எம்.பில். போன்ற ஆராய்ச்சி பட்டத்திற்காகவும் வேறு தேவைக்கும் பல்வேறு பொருளில் ஆராய்ச்சி மேற்கொண்டு பயன் அடைகின்றனர்.

### 12.4 மாவட்ட விவரச்சுவடி பிரிவு

மாவட்ட விவரச்சுவடிகளைத் தொகுத்து வெளியிடும் பணியினை தமிழ்நாடு ஆவணக்காப்பகம் நிறைவேற்றி வருகிறது. திருச்சிராப்பள்ளி மாவட்ட விவரச்சுவடித் தொகுதி 1, தொகுதி 2 வெளியிடப்பட்டு உள்ளது.

53-79--20

திருநெல்வேலி மாவட்ட விவரச் சுவடி தயாரிக்கும் பணியும், செங்கற்பட்டு மாவட்ட விவரச்சுவடியும் அண்மையில் முடிவடைந்துள்ளது.

### 12.5 மாவட்ட ஆவணக்காப்பகங்கள்

இந்திய வரலாற்று ஆவணங்கள் குழுவின் பரிந்துரையின் பேரில், ஒவ்வொரு மாவட்டத்திலும், அரசு அலுவலகங்களில் உள்ள முப்பதாண்டுகளுக்கு மேற்பட்ட ஆவணங்களை ஒருங்கிணைத்துப் பாதுகாக்க மாவட்ட அளவில் மாவட்ட ஆவணக் காப்பகங்களை அரசு தோற்றுவித்துள்ளது. இதுவரை கோயம்புத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி, மதுரை, கடலூர், தஞ்சாவூர் மற்றும் சென்னை ஆகிய ஏழு மாவட்டங்களில் மாவட்ட ஆவணக்காப்பகங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

## அத்தியாயம்-I

### முன்னுரை

1.1 ஒரு சமுதாயத்தின் வலிமை, அச்சமுதாய மக்களின் மனரீதியான நலத்தையும், உடல்ரீதியான வலிமையையும் பொறுத்துள்ளது. அறிவு, சக்தியாயின், உடல்வலிமை சொத்தாகும். ஒருவரின் ஆளுமை முழுமையான வளர்ச்சி பெறுவதற்கு விளையாட்டு அத்தியாவசியமானது. விளையாட்டு, ஒருங்கிணைந்து செயல்படுவதன் முக்கியத்துவத்தையும், நேர்மையாகச் செயல்படும் பக்குவத்தையும் கற்றுத் தருவதுடன், வெற்றியையும் தோல்வியையும் சமமாக ஏற்றுக்கொள்ளக்கூடிய மனத் திண்மையையும் அளிக்கிறது. தனி நபர் உறுதியுடன் முயற்சி செய்யவும், தன்னிலை இழக்காமல் தேடல் உணர்வுடனும் வளர்ச்சியடைய விளையாட்டு உதவுகிறது.

1.2 மாணவர் சமுதாயத்தில், நன்னடத்தையை வளர்ப்பதையும், சேவை மனப்பான்மையை மேம்படுத்துவதையும் முக்கியக் குறிக்கோளாகக் கொண்டு தற்போது தேசிய மாணவர்படை, சாரணர், சாரணியர் மற்றும் நாட்டு நலப்பணித் திட்டம் ஆகியவை இயங்குகின்றன. மைய அரசைச் சார்ந்த 'நேரு யுவகேந்திரா சங்கேதன்' (இளைஞர் மன்றம்) பணிகளைத் தவிர, மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்காக இருக்கின்ற மாணவரல்லாத இளைஞர் சமுதாயத்தை மேம்படுத்துகின்ற குறிக்கோளுடன் செயல்பட வேறு அமைப்புகள் இல்லை. மைய அரசாலும், மாநில அரசாலும் அண்மைக் காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட பல திட்டங்களை, மாணவரல்லாத இளைஞர்கள் சமுதாயத்திற்குப் பயன்படும்



வகையில் சீரிய முறையில் ஒருங்கிணைத்துச் செயல்படுத்தினால், அவர்களை ஆக்கப்பூர்வமான சக்தியாக உருவாக்க முடியும்.

### 1.3 இளைஞர்களுக்கெனப் புதிய துறை

விளையாட்டின் முக்கியத்துவத்தையும் இளைஞர்களின் ஆற்றலையும் அங்கீகரிக்கும் வகையில், மாண்புமிகு தமிழக முதல்வர் 2000-2001ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட உரையின்போது 'இளைஞர்கள் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை' என்ற புதிய துறையை உருவாக்க அறிவித்துள்ளார். இதுகாறும், விளையாட்டு மற்றும் சாரண சாரணியர் துறை, பள்ளிக் கல்வித் துறையின் கீழும், தேசிய மாணவர் படை மற்றும் நாட்டு நலப்பணித் திட்டம் உயர்கல்வித் துறையின் கீழும் செயல்பட்டு வந்தன. மாணவரல்லாத சமுதாயத்தினருடைய நலன் கருதி, செயல்படுவதற்குக் குறிப்பாக தனித் துறை இல்லை. புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட இளைஞர்கள் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை இனிமேல் விளையாட்டு, சாரண சாரணியர், தேசிய மாணவர் படை, நாட்டு நலப்பணித் திட்டம் மற்றும் கிராமப்புற, நகர்ப்புற மாணவரல்லாத சமுதாயத்தினருக்கான நலத் திட்டங்கள் ஆகியவற்றிற்கான பணிகளை மேற்கொள்ளும். இளைஞர்கள் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் முதல் கொள்கை விளக்கக் குறிப்பாக இது அமைகிறது.

### குறிக்கோள்களும், இலக்குகளும்

### 1.4 இத்துறையின் முக்கியக் குறிக்கோள்கள்:

1. மாவட்டத் தலைநகரங்களில், பள்ளி மற்றும் கல்லூரிகளில் விளையாட்டிற்கான விளையாட்டு அரங்க மற்றும் ஆடுகள வசதிகளை உருவாக்குதல்.

2. அனைத்து ஊராட்சிகள் மற்றும் நகர்ப்புறங்களில் உள்ளரங்க விளையாட்டுகள், சிறு ஆடுகள விளையாட்டுகள் மற்றும் உடற்பயிற்சி செய்வதற்கான வசதிகளுடன் விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு மையங்கள் பொதுமக்களுக்காக உருவாக்குதல்.

3. திறமை மிக்க விளையாட்டு வீரர்களைக் கண்டறிந்து, அவர்களுக்குத் தக்க பயிற்சி மற்றும் நிதியுதவி அளித்து அவர்கள் தேசிய மற்றும் பன்னாட்டு விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொண்டு வெற்றிவாகை பெறச் செய்தல்.

[2000 ஏப்ரல் 10

4. தலைசிறந்த விளையாட்டு வீரர்களுக்கு விருதுகளும், பல்வேறு ஊக்க உதவிச் சலுகைகளும் வழங்குதல்.

5. மேல்நிலைப் பள்ளி மற்றும் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு நம்பிக்கையூட்டும் எதிர்காலத்திற்கான வேலைவாய்ப்பு மற்றும் சுயதொழில் ஆகியவற்றிற்கு ஆலோசனைகள் வழங்குதல்.

6. மாணவர் மற்றும் மாணவரல்லாத இளைஞர்களிடையே சாகசச் செயல்கள் செய்ய ஆர்வத்தையும், உடற்பயிற்சி செய்ய ஆவலையும் ஊக்குவித்தல்; போக்குவரத்து விதிகள், முதலுதவி, சுகாதாரம், துப்புரவு, சமச்சீர் உணவு, பண்பு நலன்கள் ஆகியவற்றைப்பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.

7. மாணவரல்லாத சமுதாயத்தினரிடையே அறிவியல் முனைப்பு, சமுதாய நல்லிணக்கம் மற்றும் சேவை மனப்பான்மை ஆகியவற்றை வளர்த்திடல்.

8. அனைத்துக் கிராமங்களிலும் மற்றும் நகர்ப்புறங்களிலும் இளைஞர் மன்றங்கள்/சங்கங்கள்/சுயஉதவிக் குழுக்கள் அமைப்பதும், அவற்றின் மூலம் தொண்டர் படையை உருவாக்கி மக்களிடையே 'நமக்கு நாமே' என்ற கொள்கையின்மீது பிடிப்பும், அதனால் கல்வியறிவு, அறிவியல் முனைப்பு, சமுதாய நல்லிணக்கம், தேசிய ஒருமைப்பாடு ஆகியவற்றை மேம்படுத்துதல் மற்றும் நமது பாரம்பரியப் பண்பாடுமீது பெருமை கொள்ளச்செய்தல்.

9. விளையாட்டு மற்றும் இளைஞர்கள் நலன் வளர்ச்சியின் நோக்கத்தில் மைய மற்றும் மாநில அரசுகளின் திட்டங்களைச் செயல்படுத்துதல்.

10. பல்வேறு விளையாட்டுப் போட்டிகள், இளைஞர் விழாக்கள் மற்றும் கண்காட்சிகள் நடத்தி இளைஞர்களிடம் எழுச்சியையும் உத்வேகத்தையும் மலரச் செய்தல்.

1.5 தமிழ்நாடு கடந்த ஆண்டுகளில் குழுப் போட்டிகளிலும், தனித் திறன் போட்டிகளிலும், தேசிய மற்றும் பன்னாட்டு அளவில் முன்னிலை வகித்து வருகிறது. இது தமிழக அரசால் ஏற்படுத்தப்பட்ட விளையாட்டுக் கட்டமைப்பு, பயிற்சி வசதிகள், விளையாட்டுப் போட்டிகள் நடத்துதல் மற்றும் விளையாட்டு வீரர்களுக்கு அளிக்கப்படுகின்ற ஊக்க உதவித் தொகை ஆகியவற்றால் ஏற்பட்டது.

1.6 மாநிலத்தில் விளையாட்டு மற்றும் இளைஞர்கள் நலன்களை மேம்படுத்துவதற்குத் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்



2000 ஏப்ரல் 10]

கண்காணிப்பு அமைப்பாக உள்ளது. தமிழக அரசு 1997ஆம் ஆண்டு 10 கோடி ரூபாய் அளவிற்கு நிதி திரட்ட விளையாட்டு மேம்பாட்டு நிதி ஒன்றை ஏற்படுத்தியுள்ளது. அரசு, ஒரு கோடி ரூபாயை இந்த மைய நிதிக்குத் தொடக்க நிதியாக வழங்கியது. இந்த நிதியில் 50 விழுக்காடு அளவு ஆதரவாளர்கள் நன்கொடை மூலமும், தாராள மனப்பான்மைக் கொண்ட புரவலர்கள் மூலமும் திரட்டப்படும். இந்த மைய நிதியின் மூலம் கிடைக்கப் பெறுகின்ற வட்டித் தொகையானது மாவட்ட மற்றும் மாநில விளையாட்டுக் கழகங்களுக்கு நிதியுதவியும் மற்றும் தற்போதுள்ள விளையாட்டுக் கட்டமைப்பு வளாகங்களைப் பராமரிக்கவும் பயன்படுத்தப்படும்.

1.7 நாட்டு நலப்பணித் திட்டத்தின் மாநில ஒருங்கிணைப்பாளராக உறுப்பினர்-செயலர், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் அவர்கள் 1996ஆம் ஆண்டு நாட்டு நலப்பணித் திட்டம் கல்லூரிக் கல்வி இயக்ககத்திற்கு மாற்றப்படும்வரை இருந்தார்.

## அத்தியாயம்- 2

### விளையாட்டு வசதிகள் கட்டமைப்பு

### 2.1 மாவட்டத் தலைநகரங்களில் மாவட்ட விளையாட்டு வளாகங்கள் ஏற்படுத்துதல்

மைய அரசு மாவட்டத் தலைநகரங்களில் மாவட்ட விளையாட்டு வளாகத்தை ஏற்படுத்த மானியம் தந்து உதவி வருகின்றது. இத்திட்டத்தின் கீழ், மைய அரசு 50:50 விகிதாச்சாரத்தின்படி உச்ச வரம்பு மானியமாக ஒரு கோடி ரூபாய் தருகின்றது. மலைப்பாங்கு மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளுக்கு 75:25 விகிதாச்சாரத்தின்படி உச்ச வரம்பு மானியமாக 1.50 கோடி ரூபாய் தருகின்றது. தமிழ்நாட்டில் கோவை, திண்டுக்கல் மற்றும் நீலகிரி மாவட்டங்களில் இந்தச் சிறப்புச் சலுகையின் கீழ் மானியம் பெற திட்டமிடப்பட்டுள்ளது.

மாநில அரசு தனது அரசாணை நிலை எண் 9, கல்வித் துறை, நாள் 5-1-1994-ன் மூலம் தன்னுடைய பங்காகக் கீழ்கண்டவாறு ஆணையிட்டுள்ளது:--

| | | |
|---|---|---|
| 1. | மைய அரசின் பங்கீடு .. | 50 விழுக்காடு |
| 2. | மாநில அரசின் பங்கீடு .. | 25 விழுக்காடு |
| 3. | விளையாட்டரங்கக் குழு பங்கீடு .. (பொதுமக்களின் நன்கொடைகள்) | 25 விழுக்காடு |

**பின்வரும் வசதிகளை ஏற்படுத்த நிறைய வாய்ப்புகள் இருக்கின்றன:**

| வரிசை எண் | விளையாட்டு வசதிகள் | மைய அரசால் பரிந்துரைக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | திறந்தவெளி விளையாட்டரங்கம் 8 ஓடுதளப் பாதைகளைக் கொண்ட 400 மீ. ஓடுதளம், கால்பந்து, வளைகோல்பந்து மைதானங்கள் மற்றும் மாணவ, மாணவியர்க்கென தனித்தனியே உடைமாற்றும் அறைகள் மற்றும் கழிப்பறை வசதிகள். .. .. .. | 36 |
| 2. | திறந்த வெளி விளையாட்டு மைதானங்கள், கையுந்துப் பந்து, கூடைப்பந்து மற்றும் ஒன்று அல்லது இரண்டு மரபுவழி விளையாட்டுக்கள், கோ-கோ, கபடி அல்லது உள்ளூரில் விளையாடும் பிரபலமான விளையாட்டு .. .. | 10 |
| 3. | பல்நோக்கு உடல்திறனைப் பெருக்கும் கருவி, பளுதூக்கும் கருவி வைக்கும் அறை .. | 10 |
| 4. | 6 நீச்சல் பாதைகளுடன் நீர் சுத்திகரிப்புக் கருவியுடன் கூடிய 25மீx13மீ அளவிலான நீச்சல் குளம் .. .. .. | 50 |
| 5. | மரத்தாலான ஆடுகளத்தைக் கொண்ட-35மீx19மீx12.5மீ அளவு குறையாமல் மாணவ, மாணவியர்க்கென உடைமாற்று அறைகள் மற்றும் கழிப்பறை வசதிகள் கொண்ட உள் விளையாட்டரங்கம் .. .. | 90 |
| 6. | மொத்தத்தில் 80 படுக்கைகளைக் கொண்ட விடுதியில் குறைந்தபட்சம் மாணவியர்க்கென 30 படுக்கைகள் .. .. .. | 60 |
| | மொத்தம் .. .. | **256** |



மைய அரசு, உச்சவரம்பு மானியத் தொகை ரூபாய் 1 கோடி (பழங்குடியினர், மலைவாழ் பகுதியினர் நீங்கலாக) என நிர்ணயித்துள்ளதால், விளையாட்டு விடுதி வசதிகளை ஏற்படுத்துவதைத் தவிர்த்து, மற்ற வசதிகளைக் கொண்ட மாவட்ட விளையாட்டு வளாகங்களை மேம்படுத்துவதென தற்போது உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதற்கான பங்கீட்டுத் தொகை பின்வருமாறு:-

(ரூ. இலட்சத்தில்)

| வரிசை எண் | விளையாட்டு வசதிகள் | உத்தேச மதிப்பீடு | மைய அரசின் உச்ச வரம்பு மானியம் | மாநில அரசின் பங்கீடு |
|---|---|---|---|---|
| 1. | திறந்தவெளி விளையாட்டு அரங்கம், 400 மீ. ஓடுதளம், கால்பந்து, வளை கோல்பந்து, மைதானங்கள் வசதிகளுடன் .. | 36 | 18 | 9 |
| 2. | கையுந்துப் பந்து/ கூடைப்பந்து, ஆடுகளங்கள் மற்றும் கோ-கோ, கபடி ஆடுதளங்கள் .. | 10 | 5 | 2.50 |
| 3. | பல்நோக்கு உடல் திறனைப் பெருக்கும் கருவி, பளுதூக்கும் கருவி வைக்கக் கூடிய அறை .. | 10 | 5 | 2.50 |
| 4. | 6 நீச்சல் பாதையுடன் 25x13மீ நீச்சல்குளம் .. | 50 | 25 | 12.50 |
| 5. | 35x19x12.5மீ மரத்தாலான தளத்துடன் உள் விளையாட்டு அரங்கம் .. | 90 | 45 | 22.50 |
| | மொத்தம் .. | **196** | **98** | **49.00** |

மேற்கண்ட 5 வசதிகளுடைய மாவட்ட விளையாட்டு வளாகம் ஏற்படுத்திட மாநில அரசின் பங்கீட்டுத் தொகை ரூ. 49 இலட்சம் ஆகும்.

தற்பொழுது, கீழ்க்கண்ட 11 மாவட்டத் தலைநகரங்களில் விளையாட்டு வளாக வசதி ஏதும் இல்லை.

1. நாகப்பட்டினம்
2. திருவாரூர்
3. விழுப்புரம்
4. சிவகங்கை
5. திருவள்ளூர்
6. நாமக்கல்
7. திண்டுக்கல்
8. கரூர்
9. திருவண்ணாமலை
10. பெரம்பலூர்
11. தேனி

ஏனைய 17 மாவட்டங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள விளையாட்டு வசதிகள் விவரம் பின்வருமாறு:



| வரிசை எண் | மாவட்டம் | வெளி விளையாட்டு அரங்கம் | | | நீச்சல் குளம் | உள் விளையாட்டரங்கம் |
|---|---|---|---|---|---|---|
| | | 400மீ ஓடுதளம் கால்பந்து, வளைகோல் பந்து | வெளி விளையாட்டு மைதானங்கள் | ஜிம் | | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1. | தஞ்சாவூர் | உண்டு | உண்டு | உண்டு | உண்டு | இல்லை |
| 2. | தருமபுரி | உண்டு | உண்டு | உண்டு | உண்டு | இல்லை |
| 3. | நீலகிரி | உண்டு | உண்டு | உண்டு | இல்லை | உண்டு |
| 4. | சேலம் | உண்டு | உண்டு | உண்டு | இல்லை | உண்டு |
| 5. | மதுரை | உண்டு | உண்டு | உண்டு | இல்லை | உண்டு |
| 6. | இராமநாதபுரம் | உண்டு | உண்டு | உண்டு | இல்லை | இல்லை |
| 7. | விருதுநகர் | உண்டு | உண்டு | உண்டு | இல்லை | இல்லை |
| 8. | திருநெல்வேலி | உண்டு | உண்டு | உண்டு | இல்லை | இல்லை |
| 9. | தூத்துக்குடி | உண்டு | உண்டு | உண்டு | இல்லை | இல்லை |
| 10. | கன்னியாகுமரி | உண்டு | உண்டு | உண்டு | இல்லை | இல்லை |
| 11. | காஞ்சிபுரம் | உண்டு | உண்டு | உண்டு | இல்லை | இல்லை |
| 12. | ஈரோடு | உண்டு | உண்டு | உண்டு | இல்லை | இல்லை |
| 13. | கோவை | உண்டு | உண்டு | உண்டு | இல்லை | இல்லை |
| 14. | திருச்சி | உண்டு | உண்டு | உண்டு | இல்லை | இல்லை |
| 15. | கடலூர் | உண்டு | உண்டு | உண்டு | இல்லை | இல்லை |
| 16. | வேலூர் | உண்டு | உண்டு | இல்லை | இல்லை | இல்லை |
| 17. | புதுக்கோட்டை | உண்டு | இல்லை | இல்லை | இல்லை | இல்லை |

28 மாவட்ட விளையாட்டு வளாகங்களில் மேற்குறித்த 5 விளையாட்டு வசதிகள் படிப்படியாக ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. சென்னை மாநகரில் கீழ்க்கண்ட விளையாட்டு வசதிகள் உள்ளன:-

1. ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம், பெரியமேடு, கால்பந்து மைதானம் (புல்தரை), தடகள ஓடுதளம் (400மீ. 8 செயற்கை இழை ஓடுபாதை) மூன்று கையுந்துப் பந்து களங்கள், மின்னொளி வசதி மற்றும் மின்னணு கணக்கியல் கருவி போன்ற வசதிகளுடன்.

2. பல்நோக்கு உள்விளையாட்டு அரங்கம், பெரியமேடு, கையுந்துபந்து, கூடைப்பந்து, மேசைப்பந்து, சிறகுப்பந்து, குத்துச்சண்டை, மல்யுத்தம், பளுதூக்குதல் போன்ற விளையாட்டுக்களுக்கான வசதிகளுடன்.

3. வளைகோல்பந்து விளையாட்டு அரங்கம், எழும்பூர், செயற்கை இழை புல்தரையுடன்.

4. நீச்சல்குள வளாகம் 50x25 மீ. போட்டிக்கான நீச்சல்குளம், 25x18மீ. முக்குளிக்கும் நீச்சல்குளம், 20x25மீ. பயிற்சி நீச்சல் குளம்.

5. டென்னிஸ் விளையாட்டரங்கம் 7 ஆடுகளங்களைக் கொண்டது.

[2000 ஏப்ரல் 10

6. நேரு பூங்கா விளையாட்டு வளாகம் - கால்பந்து மைதானம், 400 மீ. தடகள ஓடுதளப்பாதை, இரண்டு கூடைப்பந்து ஆடுகளங்கள், இரண்டு கபடி ஆடுகளங்கள், இரண்டு டென்னிஸ் ஆடுகளங்கள், இரண்டு கையுந்துப் பந்து ஆடுகளங்கள் மற்றும் ஒரு ஸ்குவாஷ் உள் விளையாட்டரங்க வசதிகளுடன்.

7. ஷெனாய்நகர் நீச்சல்குளம் - 33x21மீ. நீச்சல் குளம், ஒரு கையுந்துப் பந்து ஆடுகளம், ஒரு சிறகுப் பந்து ஆடுகளம் வசதிகளுடன்.

8. அண்ணா நீச்சல் குளம், மெரினா (புதுப்பிக்கப்பட்டு வருகின்றது).

## 2.2 ஊரகப் பகுதிகளில் அமைந்துள்ள பள்ளிகளில் விளையாட்டு மைதானம் மேம்படுத்துதல் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் வாங்க மானியம்

ஊரகப் பகுதிகளில் அமைந்துள்ள பள்ளிகளில் விளையாட்டு மைதானங்களை மேம்படுத்தவும் அல்லது விளையாட்டு உபகரணங்கள் வாங்கவும் (நிரந்தரம் மற்றும் நிரந்தரமல்லாத) அல்லது இரண்டிற்கும் மைய அரசு ரூபாய் 1.50 இலட்சம் மானியம் அளித்து வருகின்றது. இத்திட்டத்தின்கீழ் மானியம் பெறும் ஊரகப் பள்ளிகள்:

1. நிலையான அளவுடன் கூடிய ஆடுகளம் அமைக்க உதவி கோருதல்.
2. குறைந்தபட்சம் 200 மாணவர்களைக் கொண்ட பள்ளி.
3. ஒரு முழுநேர உடற்கல்வி ஆசிரியர் இருக்க வேண்டும்.
4. அப்பள்ளியானது, ஆண்டுக்கு ரூ.10,000/- அளவில் பராமரிப்பு மற்றும் விளையாட்டு உபகரணங்கள் வாங்குவதற்கும் வசதி படைத்ததாக இருத்தல் வேண்டும். பெற்றோர் ஆசிரியர் கழக நிதியிலிருந்தோ அல்லது வேறுவகைகளிலோ நிதியினைப் பெறும் நிலையில் இருத்தல் வேண்டும்.

மைய அரசு ஓராண்டுக்கு ஓர் ஒன்றியத்திற்கு ஒரு பள்ளிக்கும், ஓர் ஐந்தாண்டுத் திட்டத்தில் ஓர் ஒன்றியத்தில் இரண்டு பள்ளிகளுக்கு மிகாமலும் நிதியுதவி வழங்கும்.

இத்திட்டத்தின்கீழ், தமிழகத்திலுள்ள 385 ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஓர் ஒன்றியத்திற்கு இரண்டு பள்ளிகள் வீதம் 770 பள்ளிகளில் விளையாட்டு மைதானங்களை மேம்படுத்தவும், விளையாட்டு உபகரணங்கள் வாங்கவும் மைய அரசின் நிதியுதவி பெற்று, படிப்படியாக இத்திட்டத்தை நிறைவேற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது.



2000 ஏப்ரல் 10]

## 2.3 அரசுப் பள்ளிகளில் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்த மானியத் திட்டம்

மைய அரசு 50 விழுக்காடு நிதியுதவி வழங்கும் மற்றொரு திட்டம் உள்ளது. உயர்ந்தபட்ச உதவி ரூ. 5 இலட்சமாகும். அதற்கான வசதிகளாவன:

(1) விளையாட்டுத் திடல்களை மேம்படுத்துதல்.

(2) திறந்தவெளி கான்கிரீட் சறுக்குத் தரை வளையம் அமைத்தல்.

(3) ஓடுகளப் பாதை/வளைகோல்பந்து/கால்பந்து/கிரிக்கெட் மைதானம்.

(4) உள்விளையாட்டரங்கக் கூடம் (17x17x17மீ) அளவு.

(5) நீச்சல்குளம் 25x13மீ. அளவு

2000-2001ஆம் நிதியாண்டில் 25 அரசுப் பள்ளிகளில் மைய அரசு உதவிபெற உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## 2.3 ஊரக விளையாட்டு மையங்கள்

385 ஊரக விளையாட்டு மையங்கள் (ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒன்று), போதிய விளையாட்டு வசதியைக் கொண்ட பள்ளிகளில் அமைக்கப்பட்டுள்ளன. அப்பள்ளிகள், அருகில் உள்ள பள்ளிகளில் படிக்கும் மாணவர்கள் மற்றும் மாணவரல்லாதவர்கள் பள்ளியில் இருக்கும் விளையாட்டு வசதிகளை உபயோகப்படுத்திக்கொள்ளவும், பள்ளி மைதானத்தில் போட்டிகளை நடத்தவும், பொது ஆடுகளமாக பயன்படுத்திக் கொள்ளவும் அனுமதி வழங்க விருப்பமுடைய பள்ளிகளாக இருத்தல் வேண்டும். ஒரு மையத்திற்கு ரூ.10,000/- மதிப்பிலான விளையாட்டுக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

1999-2000 ஆம் ஆண்டில் 100 ஊராட்சி ஒன்றியங்களில் மேலும் 100 இரண்டாவது ஊரக விளையாட்டு மையங்கள் மாற்றுப் போட்டிகளை நடத்தும் பொது ஆடுகளமாக இருக்கும் வகையில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மீதமுள்ள 285 ஊராட்சி ஒன்றியங்களில் இரண்டாவது ஊரக விளையாட்டு மையங்கள் படிப்படியாக ஏற்படுத்தப்படும்.

[2000 ஏப்ரல் 10

**2.4 ஊராட்சி மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் மாணவரல்லாத இளைஞர்களுக்கு விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு மையங்களை ஏற்படுத்துதல்**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 2000-2001 ஆம் ஆண்டு நிதிநிலையறிக்கையின்போது - விளையாட்டு வசதிகள், உடற்பயிற்சி செய்ய வசதிகள் தற்போது பள்ளிகளில் உள்ளதென்றும், மொத்த மக்கள் தொகையில் 35 விழுக்காடு அளவிற்கு உள்ள மாணவரல்லாத இளைஞர்கள் மேற்கூறிய வசதிகளைப் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். அவர்களை, தீய பழக்க வழக்கங்களிலிருந்து பாதுகாக்கும்பொருட்டும், அவர்களுடைய ஓய்வு நேரத்தைச் செவ்வனே செலவிட விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு மையங்களை அனைத்து ஊராட்சிகளிலும் நகர்ப்புறப் பகுதிகளிலும் படிப்படியாக ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு மையமும் கீழ்க்கண்ட வசதிகளைக் கொண்டதாக இருக்கும்:

1. நீளம் தாண்டுதல், மும்முனை தாண்டுதல் மற்றும் உயரம் தாண்டுதல் பயிற்சிக்கான மணற்குழி (10மீx2.5மீx5மீ.)

2. இணைக்கம்பம், நேர்க்கம்பம், பளுதூக்குதல், கர்லாக் கட்டையுடன் கூடிய வசதிகளைக் கொண்ட திறந்தவெளி உடற்பயிற்சி மையம்.

3. சிறிய இடவசதி கொண்ட விளையாட்டுகளான கையுந்துப்பந்து, பூப்பந்து, வளையப்பந்து மற்றும் கபடி போன்ற விளையாட்டு வசதிகளை அமைத்துத் தருதல்.

4. உள்விளையாட்டுகளான கேரம் மற்றும் சதுரங்கம் ஒவ்வொரு மையத்திற்கும் செலவு ரூ.25,000/- ஆகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 2000-2001 ஆம் ஆண்டில் 5000 விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு மையங்களைத் தோற்றுவிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**2.5 கிழக்கு கடற்கரைச் சாலையில் உள்ள முட்டுக்காட்டில் நீர்சாகச விளையாட்டு வளாகம் ஏற்படுத்துதல்**

காஞ்சிபுரம் மாவட்டம், முகத்துவார கிராமமான முட்டுக்காட்டில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மகிழ்ச்சியைத் தரக்கூடிய படகு சவாரியை நடத்தி வருகிறது. இந்திய விளையாட்டுக் குழுமத்தின் சார்பில் நடத்தப்பட்ட ஆய்வு அறிக்கையில், தரமான நீர்சாகச விளையாட்டு வளாகம் ஏற்படுத்த வசதிகளைக் கொண்டது எனக் கூறப்பட்டுள்ளது.



2000 ஏப்ரல் 10]

இவ்விடம் சென்னைக்கும் மாமல்லபுரத்திற்கும் இடையில், இந்திய மற்றும் அயல்நாட்டுச் சுற்றுலா பயணிகள் பயன்படுத்தக்கூடிய நீர்சாகச விளையாட்டு வளாகம் அமைய வாய்ப்புள்ளது. இந்த மையம் புகழ்பெற்ற மையமாக மாறினால், நமது உள்நாட்டு பொருளாதாரம் வளர்ச்சியடையும்.

தமிழ்நாடு அரசு, முட்டுக்காட்டில் அயலார் துணையுடன் நிலையானதொரு பன்னாட்டு நீச்சல் விளையாட்டு வளாகம் அமைக்கத் தேவையான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து தக்க நடவடிக்கை எடுக்கும்.

[2000 ஏப்ரல் 10

# அத்தியாயம் - 3

## பயிற்சித் திட்டங்கள்

முறையான பயிற்சி என்பது முறையே, திறமைவாய்ந்த விளையாட்டு வீரர்களின் திறனை அதிகப்படுத்துவதற்கும், சாதனைகளை ஏற்படுத்துவதற்கும் ஒரு திறவுகோலாகும். இதனைக் கருத்திற்கொண்டு, தமிழக அரசு பல்வேறு வயது பிரிவுகளைக் கொண்ட விளையாட்டு வீரர்கள் பயனடையும் வகையில் பல்வேறு பயிற்சித் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது.

### 3.1 விளையாட்டுப் பள்ளிகள் மற்றும் விளையாட்டு விடுதிகள்

நம் மாநிலத்தில் மூன்று விளையாட்டுப் பள்ளிகளையும், நான்கு விளையாட்டு விடுதிகளையும் அரசு ஏற்படுத்தியுள்ளது.

| வரிசை எண் | விளையாட்டுப் பள்ளியின் பெயர் | பயிற்சியளிக்கும் வசதிகள் |
|---|---|---|
| 1. | ஒய்.எம்.சி.ஏ. விளையாட்டுப் பள்ளி, நந்தனம், சென்னை. | தடகளம், கால்பந்து, வளைகோல்பந்து மற்றும் நீச்சல் |
| 2. | சுவாமி சிவானந்தா மேல்நிலைப் பள்ளி, பெரியநாயக்கன்பாளையம், கோயம்புத்தூர். | தடகளம், கூடைப்பந்து, கையுந்துப் பந்து |
| 3. | நெய்வேலி பழுப்பு நிலக்கரி கழக விளையாட்டுப் பள்ளி, நெய்வேலி. | தடகளம், கிரிக்கெட், கால்பந்து |



2000 ஏப்ரல் 10]

| வரிசை எண் | விளையாட்டு விடுதி அமைந்துள்ள இடம் | பயிற்சியளிக்கும் வசதிகள் |
|---|---|---|
| 1. | திருச்சிராப்பள்ளி | தடகளம், கால்பந்து, கையுந்துப்பந்து |
| 2. | மதுரை | தடகளம், கால்பந்து, கூடைப்பந்து |
| 3. | திருநெல்வேலி | தடகளம், வளைகோல்பந்து, கையுந்துப்பந்து. |
| 4. | ஈரோடு (மாணவியருக்கு மட்டும்) | தடகளம், கூடைப்பந்து, கையுந்துப்பந்து. |

தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் 8ஆம் வகுப்பிலும் அல்லது 11-வது வகுப்பிலும் சேர்க்கப்பட்டு, அவர்கள் படிப்பைத் தொடரும் காலத்தில், அவர்களுக்கு முறையே மூன்று அல்லது இரண்டு ஆண்டுகள் விளையாட்டுப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

விளையாட்டுப் பள்ளிகள் மற்றும் விளையாட்டு விடுதிகளில் சேர்க்கப்பட்ட மாணவர்களுக்கு, அரசு, உணவிற்காகவும், மற்ற தலைப்பிலும் கீழ்க்கண்டவாறு மானியம் அளிக்கிறது:

| | | |
|---|---|---|
| அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் மொத்த எண்ணிக்கை | - | 710 |
| மாதம் ஒன்றிற்கு ஒரு மாணவனுக்கு வழங்கப்படுகின்ற உணவிற்கான தொகை (10 மாதங்களுக்கு மட்டும்) | - | ரூ.600 |
| சீருடை மற்றும் விளையாட்டு உபகரணங்களுக்கான படி ஒரு மாணவனுக்கு | - | ரூ.700 |
| ஆண்டுக்கு ஒரு முறை ஒரு மாணவனுக்குண்டான விளையாட்டுப் பொருட்கள் வாங்க, படி | - | ரூ.250 |

| | | |
|---|---|---|
| ஒரு மாணவனுக்கு ஓர் ஆண்டிற்கு வழங்கப்படுகின்ற பணித்தொகை | | |
| (அ) விளையாட்டுப் பள்ளி | - | ரூ.400 |
| (ஆ) விளையாட்டு விடுதி | - | ரூ.300 |

### 3.2 சிறப்பு விளையாட்டு விடுதி

*கல்லூரி செல்லும் மாணவர்களுக்கென ஒரு சிறப்பு விளையாட்டு விடுதி. சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கில் கீழ்க்கண்ட விளையாட்டுகளில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. 1) தடகளம் 2) கூடைப்பந்து 3) குத்துச் சண்டை 4) நீச்சல் மற்றும் 5) கையுந்துப்பந்து. இந்த விடுதி, தேசிய அளவில் பல விளையாட்டு வீரர்களைத் தந்துள்ளது.*

| | | |
|---|---|---|
| அனுமதிக்கப்பட்ட மொத்த மாணவர்களின் எண்ணிக்கை | - | 50 |
| மாணவர் ஒருவருக்கு ஒரு மாதத்திற்கான உணவிற்கான தொகை (10 மாதத்திற்கு) | - | ரூ.1200 |
| சீருடை மற்றும் விளையாட்டு உபகரணங்களுக்கான படி ஒரு மாணவருக்கு ஆண்டு ஒன்றுக்கு | - | ரூ.1650 |
| ஆண்டொன்றுக்கு ஒரு மாணவருக்கு படிப்புக் கட்டணம் | - | ரூ.1500 |

### 3.3 வேலூர் சத்துவாச்சாரியில் பளுதூக்கும் விளையாட்டிற்கென சிறப்பு மேம்பாட்டு மையம்

*வேலூருக்கு அருகிலுள்ள சத்துவாச்சாரியை இருப்பிடமாகக் கொண்ட பளுதூக்கும் விளையாட்டு வீரர்கள் நாட்டிற்காகவும், மாநிலத்திற்காகவும், பதக்கங்களையும், புகழினையும் பெற்றுத் தந்துள்ள காரணத்தினால் 1-8-1997 முதல் அங்கு பளுதூக்கும் விளையாட்டில் சிறப்பு மேம்பாட்டு மையம் ரூ.11.87 இலட்ச மொத்த மதிப்பீட்டில் நிறுவப்பட்டு*



*செயல்படுத்தப்பட்டு வருகிறது. தகுதி வாய்ந்த பயிற்சியாளரால் 30 விளையாட்டு வீரர்களுக்கு (மாணவர் மற்றும் மாணவரல்லாதோர்) பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்த மையத்தை மேலும் விரிவுபடுத்தி அங்கு பளுதூக்கும் விளையாட்டு வீராங்கனைகளுக்கென ஒரு விடுதியை நிறுவ இந்திய விளையாட்டுக் குழுமத்திடம் நிதி கோரப்பட்டுள்ளது. ஓர் ஆண்டில் 300 நாட்களுக்கு அங்கு பயிற்சி பெறுகின்றவர்களுக்கு நாள் ஒன்றுக்கு சிற்றுண்டித் தொகையாக ரூ. 10/-ம் மற்றும் அவர்கள் வீட்டிலிருந்து மையத்திற்கு வந்துபோக, போக்குவரத்துத் தொகையாக ரூ. 10/-ம் வழங்கப்படுகிறது. இதற்காக, ஆண்டொன்றுக்கு ஒரு மாணவருக்கு விளையாட்டு உபகரணப்படியாக ரூ.1890/- வழங்கப்படுகிறது. இதற்காக ரூ.3.53 இலட்சம் ஆண்டொன்றுக்கு தொடர் செலவினமாக ஏற்படுகிறது.*

### 3.4 கோவையில் கூடைப்பந்து விளையாட்டிற்கெனச் சிறப்பு மேம்பாட்டு மையம்

*கோயம்புத்தூரில் கூடைப்பந்து விளையாட்டு பிரபலமான விளையாட்டாகும். கோவை நகரைச் சுற்றியுள்ள பகுதிகளிலிருந்து 20 வயதுக்குட்பட்ட மாணவர்களின் திறமையின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட 25 மாணவர்களுக்குப் பயிற்சியளிக்க 1-8-1997 முதல் விளையாட்டு மேம்பாட்டு மையம் ரூ.6.30 இலட்சம் செலவில் ஆரம்பிக்கப்பட்டது. தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் கோவை நேரு விளையாட்டரங்கிற்கு தினந்தோறும் பயிற்சி பெற வருகின்றார்கள். அவர்களுக்கு விளையாட்டு உபகரணப்படியாக ஆண்டொன்றுக்கு ஒரு மாணவருக்கு ரூ.3,200-ம், வீட்டிலிருந்து பயிற்சி மையத்திற்கு வந்து செல்வதற்கு, போக்குவரத்துச் செலவினமாக தினம் ஒன்றிற்கு ரூ.10 மற்றும் ஒரு மாணவனுக்கு சிற்றுண்டிச் செலவிற்காக நாள் ஒன்றிற்கு ரூ.10-ம் ஆண்டுதோறும் 300 நாட்களுக்கு வழங்கப்படுகிறது. இதற்காக ஆண்டொன்றுக்குத் தொடர் செலவினம் ரூ.3.55 இலட்சம் ஆகும்.*

### 3.5 திருநெல்வேலியில் வளைகோல்பந்து விளையாட்டிற்கு என சிறப்பு மேம்பாட்டு மையம்

*திருநெல்வேலி அதிக அளவில் தேசிய மற்றும் சர்வதேச அளவில் வளைகோல்பந்து விளையாட்டு வீரர்களை வழங்கியுள்ளதால், அங்கு வளைகோல்பந்து விளையாட்டிற்கு என சிறப்பு மேம்பாட்டு மையம் 1-8-1997 முதல் ரூ.5.30 இலட்சம் தொடர் செலவினத்தில் செயல்பட்டு வருகிறது. தகுதி வாய்ந்த பயிற்றுநர்களால் 30 மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு மாணவனுக்கும் ரூ.3600/- விளையாட்டு உபகரணப்படியாக வழங்கப்படுகிறது. ஆண்டொன்றில் 300 நாட்களுக்கு,*

வீட்டிலிருந்து பயிற்சி மையத்திற்கு வந்து போக போக்குவரத்திற்காக நாளொன்றுக்கு ரூ.10-ம் மற்றும் சிற்றுண்டி செலவினத்திற்காக நாளொனறிற்கு ஒரு விளையாட்டு மாணவனுக்கு ரூ.10-ம் வழங்கப்பட்டு வருகிறது.

**3.6 தனியார் கல்லூரிகளில் இணை விளையாட்டு மேம்பாட்டு மையங்கள்**

விளையாட்டுத் துறையில் தங்களுக்கென்று தேர்ந்தெடுக்கப்பட்ட விளையாட்டுகளில் தகுதிகளைப் பெற்ற தனியார் கல்லூரிகள் இத்திட்டத்தின்கீழ் சேர்க்கப்பட்டுள்ளன. அந்தக் கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்கள் குறிப்பிட்ட தகுதிகளின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டு இணை விளையாட்டு மேம்பாட்டு மையங்களில் சேர்க்கப்பட்டுள்ளார்கள். மாதம் ஒன்றுக்கு ஒரு மாணவனுக்கு உணவுத் தொகைச் செலவினமாக ரூ.600/-ம், ஆண்டொன்றுக்கு ஒரு மாணவனுக்கு விளையாட்டு உபகரணப் படி ரூ.500/-ம் வழங்கப்படுகிறது. இந்தத் திட்டத்திற்கான அங்கீகரிக்கப்பட்ட செலவினத் தொகை ரூ. 8.98 இலட்சமாகும்.

1997-98 ஆம் ஆண்டு முதல் திருப்பத்தூர் தூய இருதயக் கல்லூரியில் கையுந்துப்பந்து விளையாட்டிற்கென முதல் சிறப்பு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் தொடங்கப்பட்டது. 1999-2000ஆம் ஆண்டு முதல் ஆண்களுக்காக ஐந்து கல்லூரிகளும், பெண்களுக்காக இரண்டு கல்லூரிகளும் இத்திட்டத்தின்கீழ் நிறுவப்பட்டன. கல்லூரிகளின் விவரம் பின்வருமாறு:

| வ. எண் | கல்லூரியின் பெயர் | விளையாட்டுகள் | பயிற்சிபெறும் மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | தூய இருதயக் கல்லூரி, திருப்பத்தூர். | கையுந்துப்பந்து | 18 |
| 2. | ஜமால் முகமது கல்லூரி, திருச்சி | கால்பந்து | 20 |
| 3. | தூயவளனார் கல்லூரி, திருச்சி | கையுந்துப்பந்து | 18 |
| 4. | அமெரிக்கன் கல்லூரி, மதுரை | வளைகோல்பந்து | 20 |
| 5. | சென்னை கிறித்தவக் கல்லூரி தாம்பரம். | தடகளம் | 10 |
| 6. | லயோலா கல்லூரி, சென்னை | தடகளம் | 10 |
| | | கூடைப்பந்து | 12 |
| 7. | நிர்மலா கல்லூரி (மகளிர்) கோவை | கூடைப்பந்து | 12 |
| 8. | மகளிர் கிறித்தவக் கல்லூரி, நாகர்கோவில் | தடகளம் | 10 |
| | மொத்தம் | | **112** |



**3.7 மாவட்ட அளவிலான கோடைகாலப் பயிற்சி முகாம்கள்**

ஒவ்வோராண்டும் மாவட்டத் தலைநகரங்களில் 16 வயதிற்குட்பட்ட மாணவர் மற்றும் மாணவரல்லாத ஆண், பெண் இருபாலாருக்கும் மாவட்ட அளவிலான பயிற்சி முகாம்கள் கீழ்க்கண்ட விளையாட்டுகளில்—தடகளம், கூடைப்பந்து, கால்பந்து, வளைகோல்பந்து மற்றும் கையுந்துப்பந்து விளையாட்டுகளில் நடத்தப்படுகிறது. இத்திட்டத்திற்கு ரூ.1.16 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**3.8 மாநில அளவிலான கோடைக் காலப் பயிற்சி முகாம்**

கோடைக் காலத்தில் ஒவ்வோராண்டும் தடகளம், கூடைப்பந்து, கால்பந்து, வளைகோல்பந்து மற்றும் கையுந்துப்பந்து விளையாட்டுப் பிரிவுகளில் குடியரசு தின விளையாட்டுப் போட்டிகள் மற்றும் பாரதியார் தின விளையாட்டுப் போட்டிகளில் சிறப்பிடங்களைப் பெற்ற 16 வயதிற்குட்பட்ட மாணவ, மாணவியருக்கு தங்கும் வசதியுடன் கூடிய 21 நாட்களைக் கொண்ட மாநில அளவிலான கோடைக்கால பயிற்சி முகாம் நடத்தப்பட்டு வருகின்றது. சுழற்சி முறையில், இந்தப்பயிற்சி முகாம் ஒவ்வோராண்டும் ஒரு மாவட்டத் தலைநகரத்தில் நடத்தப்படுகின்றது. 2000-ம் ஆண்டிற்கான கோடைக்கால பயிற்சி முகாம் புதுக்கோட்டையில் நடத்தப்படவுள்ளது. இதற்கு ரூ.2.99 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**3.9 14 வயதிற்குட்பட்ட மாணவர்களுக்கென சிறப்புப் பயிற்சி முகாம்கள்**

ஒவ்வோராண்டும் தடகளம், கூடைப்பந்து, கால்பந்து, வளைகோல்பந்து, கையுந்துப்பந்து மற்றும் நீச்சல் விளையாட்டுகளில் 14 வயதிற்குட்பட்ட

ஆண் மற்றும் பெண்பாலருக்கென நடத்தப்படுகின்ற இளமையில் தெரிந்தெடுக்கும் விளையாட்டுப் போட்டிகளில் தேர்ந்தெடுக்கப்படுகின்ற திறமைமிக்க விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளுக்கு 1999-2000-ம் ஆண்டுமுதல், சிறப்பு பயிற்சி முகாம்களை நடத்த தமிழக அரசு அனுமதி அளிக்க ஒப்புதலளித்துள்ளது. ஒலிம்பியன்/ சர்வதேச விளையாட்டு வீரர், மாநில விளையாட்டுக் கழகங்களின் பிரதிநிதிகள், பயிற்றுநர்கள் மற்றும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய அலுவலர்களைக் கொண்ட தேர்வுக்குழு திறமைமிக்க விளையாட்டு வீரர்களை இப்பயிற்சி முகாமிற்குத் தேர்வு செய்கிறது. 165 மாணவ, மாணவியர் (கால்பந்து விளையாட்டில் 15 மாணவர் மற்ற 5 விளையாட்டுப் பிரிவுகளில் ஒவ்வொரு விளையாட்டிலும், 15 மாணவர் மற்றும் 15 மாணவியர்) இந்த சிறப்புப் பயிற்சி முகாமில் பயிற்றுவிக்கப்படுவார்கள். இதற்கான நிதி ஒதுக்கீடு ரூ.5 இலட்சமாகும்.

இந்தப் பயிற்சி முகாம் மூன்று கட்டமாக நடத்தப்படுகின்றது. ஒவ்வொரு கட்டப் பயிற்சி முகாமின் கால அளவு 21 நாட்களாகும். முதற்கட்டப் பயிற்சி முகாம், 1999 நவம்பர் மாதத்தில், சென்னை, ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கில் நடத்தப்பட்டது. இரண்டாம் மற்றும் மூன்றாம் கட்டப் பயிற்சி முகாம்கள் 2000-ம் ஆண்டு ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் நடத்தப்படவுள்ளது.

**3.10 மாநில விளையாட்டு போட்டிகளில் பதக்கம் பெறுவோருக்கு சிறப்புப் பயிற்சி முகாம்கள்**

மாநில விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்களைப் பெறுகின்ற மாணவர்கள் மற்றும் மாணவரல்லாத விளையாட்டு வீரர்களுக்கு 21 நாட்கள் கால அளவைக் கொண்ட சிறப்பு விளையாட்டுப் பயிற்சி முகாம்கள் 157 விளையாட்டு வீரர்களுக்கு கீழ்க்கண்ட விளையாட்டுக்களில் 1999-2000-ம் ஆண்டு முதல் நடத்தப்படவுள்ளது.

1. தடகளம் (25 மாணவர்கள் மற்றும் 25 மாணவியர்கள்)
2. கால்பந்து (16 மாணவர்கள் மற்றும் 16 மாணவியர்கள்)
3. வளைகோல்பந்து (16 மாணவர்கள் மற்றும் 16 மாணவியர்கள்)
4. கூடைப்பந்து (12 மாணவர்கள் மற்றும் 12 மாணவியர்கள்)
5. கையுந்துப்பந்து (12 மாணவர்கள் மற்றும் 12 மாணவியர்கள்)



இத்தகைய பயிற்சி முகாமிற்கான முதல் பயிற்சி முகாம் சென்னையில் 2000 மே மாதத்தில் நடத்தப்படவுள்ளது. இதற்காக நிதி ஒதுக்கீடு ரூ.2.70 இலட்சமாகும்.

**3.11 பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் பெறுபவர்களுக்கு சிறப்புப் பயிற்சி முகாம்கள்**

1999-2000-ம் ஆண்டு முதல், பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்களைப் பெறுகின்ற விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளுக்கு 21 நாட்கள் காலஅளவு கொண்ட சிறப்புப் பயிற்சி முகாம்கள் மொத்தம் 157 மாணவர்களுக்கு கீழ்க்கண்ட விளையாட்டுப் பிரிவுகளில் நடத்தப்படவுள்ளது.

1. தடகளம் (25 மாணவர்கள் மற்றும் 25 மாணவியர்கள்)
2. கால்பந்து (16 மாணவர்கள் மற்றும் 16 மாணவியர்கள்)
3. வளைகோல்பந்து (16 மாணவர்கள் மற்றும் 16 மாணவியர்கள்)
4. கூடைப்பந்து (12 மாணவர்கள் மற்றும் 12 மாணவியர்கள்)
5. கையுந்துப்பந்து (12 மாணவர்கள் மற்றும் 12 மாணவியர்கள்)

இத்தகைய பயிற்சி முகாமிற்கான முதல் பயிற்சி முகாம் கோவை பாரதியார் பல்கலைக்கழகத்தில் மே-2000 மாதத்தில் நடத்தப்படவுள்ளது. இதற்காக நிதி ஒதுக்கீடு ரூ.2.70 இலட்சமாகும்.

**3.12 இந்திய விளையாட்டுக் குழுமத்தின் விளையாட்டுப் பயிற்சி மையங்கள்**

இந்திய விளையாட்டுக் குழுமம் கீழ்க்கண்ட இடங்களில் விளையாட்டுப் பயிற்சி மையங்களை நிறுவியுள்ளது.

1. ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம், சென்னை - வளைகோல்பந்து விளையாட்டுப் பிரிவில் 27 மாணவர்கள் மற்றும் கால்பந்து விளையாட்டுப் பிரிவில் 25 மாணவர்கள்.

2. நேரு பூங்கா விளையாட்டு வளாகம், சென்னை - வளைகோல்பந்து விளையாட்டுப் பிரிவில் 23 மாணவியர்கள் மற்றும் கையுந்துப் பந்து விளையாட்டுப் பிரிவில் 13 மாணவியர்கள்.

[2000 ஏப்ரல் 10

3. சேலம் மகாத்மா காந்தி விளையாட்டரங்கம்-கூடைப்பந்து விளையாட்டுப் பிரிவில் 3 மாணவர், கையுந்துப்பந்து விளையாட்டுப் பிரிவில் 16 மாணவர்கள் மற்றும் தடகள விளையாட்டுப் பிரிவில் 21 மாணவர்கள்.

மாநில அரசு விளையாட்டு வீரர், வீராங்கனைகள் தங்குவதற்கான இடவசதியும், பயிற்சி பெறுவதற்கான விளையாட்டுக் கட்டமைப்பு, வசதிகளை ஏற்படுத்தித் தரவும், இந்திய விளையாட்டுக் குழுமம் பயிற்றுநர்களை அமர்த்தியும், தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவ, மாணவியர்களுக்கு இலவச உணவு மற்றும் விளையாட்டுப் பொருட்களை வழங்கியும், பயிற்சி அளித்தும் வருகின்றன. இந்திய விளையாட்டுக் குழுமம் இத்திட்டத்திற்கான விளையாட்டு வீரர்களைத் தேர்ந்தெடுக்கின்றது.

**3.13 மாவட்டங்களில் கிரிக்கெட் விளையாட்டினை ஊக்குவித்தல்**

கிரிக்கெட் மிகவும் பிரபலமான விளையாட்டாகும். அவ்விளையாட்டைப் பொறுத்தமட்டில், பயிற்சி முகாம்களையும், விளையாட்டுப் போட்டிகளையும் தமிழ்நாடு கிரிக்கெட் சங்கம் நடத்தி வருகின்றது. இந்திய விளையாட்டுக் குழுமத்தைச் சார்ந்த ஒரு கிரிக்கெட் பயிற்றுநர் சென்னையில் பணி புரிந்து வருகின்றார். மேலும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தைச் சார்ந்த ஒரு கிரிக்கெட் பயிற்றுநர் கடலூரில் பணிபுரிந்து வருகின்றார். மற்ற மாவட்டங்களில் பயிற்சி பெற்ற கிரிக்கெட் பயிற்றுநர்கள் இல்லை. எனவே, தேவையைக் கருதி, கிரிக்கெட் விளையாட்டில் சிறந்து விளங்கிய முன்னாள் கிரிக்கெட் விளையாட்டு வீரர்களின் பணிகளை பகுதிநேரப் பயிற்றுநர் பணிக்கு மாவட்டங்களில் உபயோகப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

**3.14 விளையாட்டு மருத்துவ மையம்**

விளையாட்டுத் துறையில் விளையாட்டு மருத்துவத்தின் முக்கியத்துவத்தைக் கருத்திற்கொண்டு, சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கில் விளையாட்டு மருத்துவ மையத்தைத் தொடங்கிட முடிவெடுக்கப்பட்டுள்ளது. விளையாட்டு மருத்துவத்தில் சிறப்பான தேர்ச்சி பெற்ற மருத்துவர், உடற்கட்டு பயிற்சியாளர் மற்றும் பயிற்றுநர் ஆகியோர் ஒருங்கிணைந்து செயல்பட்டு தனிநபர் விளையாட்டு வீரரின் திறமைகளை விஞ்ஞானரீதியாக ஆராய்ந்து, அந்த விளையாட்டு வீரர்கள் உயர்மட்ட அளவில் சாதனைகள் பல புரிய அவர்களுக்குத் தேவையான பயிற்சித் திட்டங்களை வகுத்துத் தருவார்கள்.



2000 ஏப்ரல் 10]

**3.15 விளையாட்டு மேம்பாட்டிற்கான தொலைநோக்குத் திட்டம்.**

2020ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்திற்கு விளையாட்டுத் துறையில் மேம்பாடுகளைச் செய்ய விளையாட்டு மேம்பாட்டிற்கான தொலைநோக்குத் திட்டம் தயாரிக்கப்பட்டு வருகின்றது. அதனடிப்படையில், தமிழ்நாட்டில் விளையாட்டுப் போட்டிகளை மேம்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக ரூ.1 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## அத்தியாயம் - 4

### விளையாட்டுப் போட்டிகள் நடத்துதல்

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையமும் இந்திய விளையாட்டுக் குழுமமும் விளையாட்டு வீரர்கள் அவரவர்களுக்குரிய பல்வேறு வயது பிரிவுகளில் உள்ள விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கும் வகையில் விளையாட்டுப் போட்டிகளை நடத்தி வருகின்றன.

**1. . தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் நடத்தப்படும் விளையாட்டுப் போட்டிகள்:**

**4.1 மாநில விளையாட்டுப் போட்டிகள்**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மாநில விளையாட்டுப் போட்டிகள் ஆண்டுதோறும் நடத்தப்படவேண்டுமென்ற கருத்தினை முன் வைத்து அதனை இந்திய சுதந்திர தின பொன்விழாவின் கொண்டாட்டங்களுடன் இணைந்து நடத்திட அறிவுறுத்தியதன் பேரில் மாநில விளையாட்டுப் போட்டியின் தொடக்க விழா நடத்தப்பட்டது. அதற்காக நிதி ஒதுக்கீடு ரூ. 20 இலட்சம் வழங்கப்பட்டது. மாநில விளையாட்டுப்போட்டிகள் கீழ்க்கண்ட 14 விளையாட்டுகளில் நடத்தப்பட்டு வருகின்றன. 1. தடகளம் 2. டிரையத்லான் 3. சிறகுப்பந்து 4. நீச்சல் 5. டென்னிஸ் 6. மேசை பந்து 7. பளுதூக்குதல் 8. சிலம்பம் 9. கூடைப்பந்து 10. கால்பந்து 11. வளைகோல்பந்து 12. கபடி 13. கோ-கோ மற்றும் 14. கையுந்து பந்து, மேற்கண்ட விளையாட்டுகளில் மாணவ மாணவியர், மாணவரல்லாதோர் பெருமளவில் கலந்து கொள்கின்றனர்.

**4.2 மாணவர் மற்றும் மாணவரல்லாத இளைஞர்களுக்கான ஒன்றிய, மாவட்ட மற்றும் மாநில அளவிலான ஊரக விளையாட்டுப் போட்டிகள்**

கிராமப்புற இளைஞர்களிடையே போட்டி மனப்பான்மையையும், போராடும் ஆற்றலையும் வளர்க்கும்பொருட்டு ஒன்றிய அளவிலான ஊரக விளையாட்டுப் போட்டிகள் தமிழகத்திலுள்ள அனைத்து 385 ஒன்றியங்களிலும் ரூ.7.50 இலட்சம் செலவில் தடகளத்திலும் (5 போட்டிகள்) மற்றும் அந்த ஒன்றியத்தில் பிரபலமான ஏதாவது மூன்று விளையாட்டுகளிலும் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. பள்ளிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள ஊரக விளையாட்டு மையங்கள் இப்போட்டிகளை நடத்துவதற்கான இடமாக உள்ளது. இதே போன்று, ஊரக விளையாட்டு



மையங்களுக்கிடையேயான தடகளப்போட்டிகள் மாவட்ட மற்றும் மாநில அளவில் மாணவர் மற்றும் மாணவரல்லாத இளைஞர்களுக்காக ஒவ்வோர்ஆண்டும் ரூ.5.44 இலட்சம் செலவில் நடத்தப்படுகின்றன. 2000-2001 ஆம் ஆண்டு முதல் தடகள விளையாட்டில் அதிகப் போட்டிகளையும் மற்றும் அதிக குழு போட்டிகளையும் ஒன்றிய, மாவட்ட மற்றும் மாநில அளவில் விரிவாக நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**4.3 தமிழ்நாடு பல்கலைக்கழகங்களுக்கிடையேயான விளையாட்டுப் போட்டிகள்.**

கல்லூரி அளவிலான விளையாட்டு வீரர்களை ஊக்கப்படுத்தும் வகையில் தமிழ்நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்களுக்கிடையே தடகளம், கால்பந்து, வளைகோல்பந்து, கூடைப்பந்து, கையுந்துப்பந்து, கபடி, மேசைப்பந்து, டென்னிஸ் மற்றும் பூப்பந்து ஆகிய விளையாட்டுகளில் போட்டிகள் ஒவ்வோர் ஆண்டும் ரூ.4 இலட்சம் செலவில் நடத்தப்பட்டு வருகின்றன.

**4.4 விளையாட்டுப் பள்ளி/விளையாட்டு விடுதிகளுக்கிடையேயான விளையாட்டுப் போட்டிகள் மற்றும் இதர போட்டிகளில் பங்கேற்றல்**

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் கட்டுப்பாட்டின் கீழ் மூன்று விளையாட்டுப் பள்ளிகள் மற்றும் நான்கு விளையாட்டு விடுதிகள் இயங்கி வருகின்றன. விளையாட்டுப் பள்ளி/விடுதிகளுக்கிடையேயான விளையாட்டுப் போட்டிகள் ஒவ்வோர் ஆண்டும் தடகளம், கூடைப்பந்து, கால்பந்து, வளைகோல்பந்து மற்றும் கையுந்துப்பந்து ஆகிய விளையாட்டுகளில் நடத்தப்பட்டு வருகின்றன. இப்போட்டிகளிலிருந்து ஒவ்வொரு விளையாட்டிலும் சிறந்த விளையாட்டு வீரர்களைக் கொண்ட ஓர் அணி தேர்வு செய்யப்பட்டு மாநில விளையாட்டுச் சங்கங்களால் நடத்தப்படும் போட்டிகளில் கலந்து கொள்கிறது. நிதி ஒதுக்கீடு ஆண்டிற்கு ரூ.3.25 இலட்சம்.

**4.5 இளமையில் தேர்ந்தெடுத்தல் போட்டிகள்**

பள்ளியில் பயிலும் 14 வயதிற்குட்பட்ட மாணவ மாணவியரிடையே உள்ள விளையாட்டுத் திறனைக் கண்டறிய தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் இளமையில் தேர்ந்தெடுத்தல் போட்டிகளை ஒவ்வோர் ஆண்டும் ரூ. 7 இலட்சம் செலவில் பின்வரும் 6 விளையாட்டுகளில் நடத்துகிறது. 1. தடகளம் 2. கூடைப்பந்து 3. கால்பந்து 4. வளைகோல்பந்து 5. நீச்சல் மற்றும் 6. கையுந்துப்பந்து.

[2000 ஏப்ரல் 10

### 4.6. அண்ணா சைக்கிள் போட்டி

பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளை நினைவுகூறும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் செப்டம்பர் 15ஆம் தேதி அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் 16 வயதிற்குட்பட்ட சிறுவர் சிறுமியருக்கு தனித்தனியாக மாவட்ட அளவிலான அண்ணா சைக்கிள் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. மாநில அளவிலான சைக்கிள் போட்டி ஒவ்வோர் ஆண்டும் நவம்பர் மாதத்தில் சுற்று முறையில் ஒரு மாவட்டத்தில் நடத்தப்பட்டு வருகிறது. நிதி ஒதுக்கீடு ரூ. 1 இலட்சம்.

### 4.7 சென்னைப் பெருநகர அரசு ஊழியர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள்.

சென்னைப் பெருநகரில் உள்ள அரசு ஊழியர்களுக்கிடையே விளையாட்டை ஊக்குவிக்கும்பொருட்டு, ஒவ்வோர் ஆண்டும் விளையாட்டுப் போட்டிகள் ஆண்கள் மற்றும் பெண்களுக்காக ஐந்து வெவ்வேறு வயது பிரிவில் பின்வரும் விளையாட்டுகளில் நடத்தப்பட்டு வருகின்றன. தடகளம், கையுந்துப் பந்து, பூப்பந்து, மேசைப்பந்து மற்றும் சிறகுப்பந்து. நிதி ஒதுக்கீடு ரூ.25,000.

### 4.8 அகில இந்திய அரசு பணியாளர்களுக்கிடையேயான விளையாட்டுப் போட்டிகள்

தமிழ்நாட்டைச் சார்ந்த அரசுப் பணியாளர்கள் அணி வெவ்வேறு மாநிலங்களில் சுற்று முறையில் நடத்தப்படும் தேசிய அளவிலான அரசுப் பணியாளர்கள் போட்டியில் பங்கேற்று வருகிறது. இதற்கான நிதி ஒதுக்கீடு ரூ.75,000. 1999-2000 ஆம் ஆண்டில் தமிழக அணி திருவனந்தபுரத்தில் நடைபெற்ற தேசிய அளவிலான கால்பந்து மற்றும் சிறகுப்பந்து போட்டிகளில் பங்கேற்றது.

1999-2000ஆம் ஆண்டில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், தேசிய அளவிலான அகில இந்திய அரசுப் பணியாளர்களுக்கிடையேயான டென்னிஸ் போட்டியினை நுங்கம்பாக்கம் டென்னிஸ் விளையாட்டரங்கில் ரூ.1.45 இலட்சம் செலவில் நடத்தியது. இதில் தமிழகத்தைச் சார்ந்த இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகள் உட்பட 14 மாநிலங்களைச் சார்ந்த வீரர்களும் மத்திய அரசு அதிகாரிகளும் பங்கேற்றனர்.



2000 ஏப்ரல் 10]

## II. இந்திய விளையாட்டு குழுமத்தால் நடத்தப்படும் விளையாட்டுப் போட்டிகள்

### 4.9 அகில இந்திய ஊரக விளையாட்டுப் போட்டிகள்

இந்திய விளையாட்டுக் குழுமம் ஒவ்வோர் ஆண்டும் அகில இந்திய ஊரக விளையாட்டுப் போட்டிகளை ஒன்பது விளையாட்டுகளில் 16 வயதிற்குட்பட்ட சிறுவர் சிறுமியருக்காக நடத்தி வருகிறது. தமிழக அணி தேசிய அளவிலான போட்டிகளில் தொடர்ந்து பங்கேற்று வருகிறது. 1999-2000 ஆம் ஆண்டில், தமிழகம் ஒட்டுமொத்த வாகையத்திறகான கோப்பையைப் பெற்றது. நிதி ஒதுக்கீடு ஆண்டிற்கு ரூ. 3 இலட்சம்.

### 4.10 தேசிய மகளிர் விளையாட்டு விழா

இந்திய விளையாட்டுக் குழுமம் மகளிருக்காக வயது வரம்பின்றி 13 விளையாட்டுகளில் தேசிய மகளிர் விளையாட்டு விழாவை நடத்தி வருகிறது. தமிழக அணி இவ்விழாவில் தொடர்ந்து பங்கேற்று வருகிறது. நிதி ஒதுக்கீடு ரூ.5 இலட்சம்.

[2000 ஏப்ரல் 10

# அத்தியாயம் - 5

## உதவித் தொகைகள், விருதுகள் மற்றும் ஊக்கத் தொகைகள்

தமிழக அரசு தலைசிறந்த விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளுக்கு எண்ணற்ற உதவித் தொகைகள், விருதுகள் மற்றும் ஊக்கத்தொகைகள் வழங்கி வருகின்றது.

### 5.1 விளையாட்டு உதவித் தொகைத் திட்டம்

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் இத்திட்டத்தின் கீழ் 14 விளையாட்டுப் போட்டிகளில் தலைசிறந்த விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளுக்கு (குறைந்தபட்சம் மாநில அளவில் பதக்கம் பெற்றவர்) உதவித் தொகையாக ஒரு முறை மட்டும் உயர்நிலை/மேல்நிலைப் பள்ளி மாணவராக இருந்தால் ரூ.5000/-மும், கல்லூரி/பல்கலைக்கழக மாணவராக இருப்பின் ரூ.6500-ம் ஓர் ஆண்டிற்கு மொத்தத்தில் ரூ. 6 இலட்சத்திற்கு மிகாமலும் வழங்கி வருகின்றது.

1998-99ஆம் ஆண்டு, கீழ்க்கண்டவாறு உதவித் தொகைகள் வழங்கப்பட்டன

| | | |
|---|---|---|
| உயர்நிலை/மேல்நிலைப் பள்ளி மாணவர்கள் | .. | 39 |
| கல்லூரி/பல்கலைக்கழக மாணவர்கள் | .. | 55 |

### 5.2 முதலமைச்சரின் மாநில விளையாட்டு விருது

பன்னாட்டுப் போட்டிகளில் தமிழகத்திற்குப் பெருமை சேர்த்த தலைசிறந்த விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளைக் கௌரவிக்கும் வகையில், தமிழக அரசு "முதலமைச்சரின் மாநில விளையாட்டு விருது" ஒன்றை ஏற்படுத்தி 2 விளையாட்டு வீரர்கள் 2 விளையாட்டு வீராங்கனைகளுக்குத் தலா ரூ.1 இலட்சத்திற்கான ரொக்கப் பரிசினையும், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சின்னம் பொறித்த வெள்ளிக் கேடயம் ஒன்றினையும் பரிசாக வழங்கி வருகின்றது.

### 5.3 தேசிய விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வென்றோருக்கு ரொக்கப் பரிசுகள்

மணிப்பூர் மாநிலம், இம்பாலில் 1999ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் நடைபெற்ற ஐந்தாவது தேசிய விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் வென்றோருக்கு தங்கம் ரூ 50,000, வெள்ளி - ரூ.30,000, வெண்கலம்- ரூ.20,000 என்ற வகையில் ரொக்கப் பரிசுகள் வழங்கப்பட்டன. தமிழ்நாட்டைச்



2000 ஏப்ரல் 10]

சேர்ந்த விளையாட்டு வீரர் மற்றும் வீராங்கனைகள் மொத்தம் 16 தங்கப் பதக்கங்களும், 15 வெள்ளி மற்றும் 17 வெண்கலப் பதக்கங்களும் பெற்றனர். மேற்கண்ட விருதுகளுக்கான மொத்த செலவு ரூ.24.15 இலட்சமாகும்.

### 5.4 சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வென்ற விளையாட்டு வீரர்களுக்கு அடுக்குமாடி/காலி மனை இடங்கள் ஒதுக்கீடு செய்தல்

தமிழ்நாடு அரசு, ஒலிம்பிக்ஸ், ஆசிய விளையாட்டுப் போட்டிகள் மற்றும் சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்று பதக்கம் வென்ற விளையாட்டு வீரர், வீராங்கனைகளின் திறமையைப் பாராட்டுமுகத்தான், அடுக்குமாடி/காலி மனை இடங்களை ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பித்துள்ளது.

| | | |
|---|---|---|
| தங்கப் பதக்கம் | .. | உயர் வருமானப் பிரிவு அடுக்குமாடி/காலி மனை |
| வெள்ளிப் பதக்கம் | .. | நடுத்தர வருமானப் பிரிவு அடுக்கு மாடி/காலி மனை |
| வெண்கலப் பதக்கம் | .. | குறைந்த வருமானப் பிரிவு அடுக்குமாடி/காலி மனை |

இதுவரை 13 விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் இத்திட்டத்தின் மூலமாகப் பயன் பெற்றுள்ளனர்.

மேற்படி சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொண்டு பதக்கங்கள் பெறும் விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளுக்கு அடுக்குமாடி/காலிமனை ஒதுக்கீடு செய்வதற்குப் பதிலாக உயர் அளவு ரொக்கப் பரிசினை வழங்கி கௌரவிக்கும் ஒரு திட்டம் அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது.

### 5.5 சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கும் விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளுக்கு மானியம்

தமிழ்நாட்டைச் சார்ந்த தலைசிறந்த விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளுக்கு சர்வதேசப் போட்டிகளில் பங்கேற்க மைய அரசின் பயணச் செலவின உதவியினைப் பெறாதபட்சத்தில், அவர்கள் ஒவ்வொருவருடைய கோரிக்கையைத் தனித்தனியே ஆராய்ந்து, விமானப் பயணக் கட்டணத்தை அனுமதித்து, தமிழ்நாடு அரசு மானியம் வழங்கும். 1996-97 முதல் இதுவரை இத்திட்டத்தின்கீழ் 29 விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் பயன்பெற்றுள்ளனர்.

### 5.6 அங்கீகரிக்கப்பட்ட தமிழ்நாடு மாநில விளையாட்டுக் கழகங்களுக்கு மானியம் வழங்குதல்

அங்கீகரிக்கப்பட்ட தமிழ்நாடு மாநில விளையாட்டுக் கழகங்களுக்கு தேசிய மற்றும் தென்மண்டல அளவிலான விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கும் மற்றும் அப்போட்டிகளில் தமிழக அணி கலந்து கொள்வதற்கும் மானியம் வழங்கப்படுகின்றது. 1999-2000ஆம் ஆண்டில் மொத்தம் ரூ.16.50 இலட்சம் இம்முறையில் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

### 5.7 நலிந்த நிலையிலுள்ள விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளுக்கு ஓய்வூதியம் வழங்குதல்

தற்போது நலிந்த நிலையிலுள்ள கடந்த காலங்களில் சிறந்து விளங்கிய விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் அவர்களுடைய மாத வருமானம் ரூ.500-க்கு மிகாமலும், 58 வயதைக் கடந்தவராகவும் உள்ள விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளுக்கு ஓய்வூதியமாக மாதமொன்றுக்கு ரூ.500 வீதம் அவர்களுடைய வாழ்நாள் முழுவதும் வழங்கப்படுகிறது. இதுவரை 33 நலிந்த நிலையிலுள்ள விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் இத்திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் பெற்று வருகின்றனர்.

### 5.8 திறமையான விளையாட்டு வீரர்களுக்கென பணி ஒதுக்கீடு செய்தல்

திறமையான விளையாட்டு வீரர்களுக்கென பணி ஒதுக்கீடு செய்கையில், கல்வித் துறையின் 5-3-1984ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 244-ன்படி பொது விளம்பரத்தின் மூலம் அரசு பொதுத் துறை நிறுவனங்களில் நியமனம் செய்யப்படும் பணியிடங்களுக்கு மொத்த மதிப்பெண்களில் கூடுதலாக 50 சதவீத மதிப்பெண்கள் (எழுத்துத் தேர்வில் பெற்ற மதிப்பெண்களில் அல்லது எழுத்துத் தேர்வு இல்லாதபட்சத்தில், நேர்காணல் தேர்வில் பெற்ற மதிப்பெண்கள் அடிப்படையில்) தரலாம் என்று ஆணையிட்டுள்ளது. இந்த அரசாணையைச் செயல்படுத்தும்போது, பல இடையூறுகள் நேர்வதைக் காணலாம்.

உள் துறையின் (காவல்-5) 18-7-1995ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 1072-ல் பல்கலைக்கழக/மாநில/இந்திய அளவில் நடத்தப்படும் விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்றுக் கொண்ட மிகச்சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு, காவல் துறையில் கீழ்க்காணும் பணியிடங்களில் நேரிடை நியமனத்தில் 10 சதவீதம் ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.



1. காவலர்கள் கிரேடு 2 (ஆண் மற்றும் பெண்)
2. காவல் துறை உதவி ஆய்வாளர் (ஆண் மற்றும் பெண்)
3. காவல் துறை உதவி கண்காணிப்பாளர்

ஆதிதிராவிடர், பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் ஆகிய இனங்களுக்குச் செய்யப்படும் ஒதுக்கீடானது தொழிற்கல்விப் பிரிவுகளில் பின்பற்றப்படும் செங்குத்துமுறை (Vertical reservation) போன்று அல்லாமல் சமமான ஒதுக்கீடு (Horizontal reservation) முறையில் இருக்க வேண்டும்.

சீருடைப் பணியாளர் தேர்வு ஆணையம், தேசிய/மாநில/பல்கலைக்கழக அல்லது மாவட்ட அளவில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொண்ட சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு நேர்காணலில் 10 மதிப்பெண்களுக்கு முறையே 2, 1, 1/2 என்ற விகிதத்தில் மதிப்பெண்கள் அளிக்கிறது. இந்த மதிப்பெண்கள் எழுத்து, நோகாணல் ஆகிய தேர்வுகளில் எடுத்த மொத்த மதிப்பெண்களைக் காட்டிலும் மிகவும் குறைவாகவே இருக்கின்றது. எனவே, அவ்வாறு காவல் துறையில் தேர்வு செய்யப்பட்டவர்கள் தங்களுடைய எழுத்து மற்றும் நேர்காணல் தேர்வுகளில் எடுத்த மதிப்பெண்களின் அடிப்படையிலேயே தேர்வு செய்யப்பட்டார்களே ஒழிய, அவர்கள் விளையாட்டு ஒதுக்கீட்டின்கீழ் தேர்வு செய்யப்படவில்லை.

மேற்கண்ட 2 அரசாணைகளுக்கு, கல்வி மற்றும் காவல் துறைகளைக் கலந்தாலோசித்தப்பின், பொதுத் துறை நிறுவனங்களிலும், சீருடைப் பணியாளர்கள் துறையில் அடங்கியுள்ள காவல் துறை, சிறைத் துறை, தீயணைப்புத் துறை மற்றும் வனத் துறை போன்ற துறைகளிலும் தொழிற்கல்விப் பிரிவுகளின் அனுமதியைப் போன்று 'விளையாட்டு அடிப்படையில் ஒதுக்கீடு' செய்ய புதிதாக உருவாக்கப்பட்ட இளைஞர்கள் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை தேவையான திருத்தங்கள் கொண்டு வர முயற்சி செய்யும். தவறான வழிமுறைகளைக் கடைப்பிடித்து பணி ஒதுக்கீட்டுக்குத் தேர்வுபெறும் முறையைத் தவிர்க்கும்பொருட்டு, பன்னாட்டுப் போட்டிகளிலும், தேசிய அளவிலான போட்டிகளிலும் கலந்து கொண்ட விளையாட்டு வீரர்களை மேற்கண்ட முறையில் தேர்வு செய்யலாம்.

## அத்தியாயம் - 6

### இளைஞர்கள் நலத் திட்டங்கள்

**6.1 முன்னுரை**

இளைஞர்கள், அதாவது 15-35 வயதுக்குட்பட்டவர்கள் மாநிலத்தின் மொத்த, மக்கள் தொகையில் 1/3 பங்காக உள்ளனர். சமுதாயத்தின் துடிப்புமிக்க, திறமைமிக்க இந்தப் பிரிவை ஒழுங்காகக் கையாள்வதன் மூலம் அவர்களிடம் உள்ள சக்தியைத் தனி மனித வளர்ச்சிக்கும், சமூக மேம்பாட்டுக்கும் பயன்படுத்தலாம். இளைஞர்களிடையே அவர்களின் தனித்துவத்தை உணரச் செய்தல், சமுதாய சேவை மனப்பான்மையை மேம்படுத்துதல், "நமக்கு நாமே" என்ற கொள்கையில் பிடிப்பு ஏற்படுத்துதல் ஆகியவை இளைஞர்கள் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் முக்கிய நோக்கங்களாக உள்ளன. இத்துறையின் செயல்பாடுகள் மாணவ இளைஞர் சமுதாயம் மட்டுமன்றி பெரும்பான்மையான மாணவரல்லாத இளைஞர் சமுதாயத்தின் நலன்களையும் கருத்திற்கொண்டுள்ளது. பெரும்பான்மையான இளைஞர் நலத் திட்டங்கள் பல்வேறு துறைகள்—பள்ளிக் கல்வித் துறை, உயர் கல்வித் துறை, ஊரக வளர்ச்சித் துறை, ஆதிதிராவிடர் நலன் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை-செயல்படுத்தி வருகின்றன. இளைஞர்கள் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பணி அடிப்படையில் மாற்றம் ஏதுமில்லாமல் மாற்றங்களை ஏற்படுத்த தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

**6.2 தேசிய மாணவர் படை**

இந்தியாவில் முதன்மை வாய்ந்த இளைஞர் இயக்கமான தேசிய மாணவர் படை 1948-ல் உருவாக்கப்பட்டது. நல்லொழுக்கம், கட்டுப்பாடு, துணிவுடைமை, தோழமையுணர்வு, தலைமையேற்கும் திறமை, சமயச் சார்பின்மை, வீரச்செயல் ஆற்றும் எழுச்சியுணர்வு, போட்டி விளையாட்டுகளில் நேர்மை ஆகிய நற்பண்புகளையும் தன்னலமற்ற தொண்டு ஆர்வத்தையும் இளைஞர்களிடையே உருவாக்கி, அவர்களைப் பயன்மிக்க குடிமக்களாக ஆக்குவது தேசிய மாணவர் படையின் நோக்கமாகும். 'ஒற்றுமை மற்றும் ஒழுக்கம்' அதன் கோட்பாடாகும்.



மத்திய பாதுகாப்பு அமைச்சகத்தின் மூலம் பாதுகாப்புத் துறைச் செயலாளர் பொறுப்பில் தேசிய மாணவர் படை இயக்ககம் நிர்வகிக்கப்படுகிறது. தமிழ்நாட்டில் தேசிய மாணவர் படையைச் செம்மையாகவும், திறன்படவும் நிர்வகிக்கும் பொறுப்பினைத் தமிழக அரசு இந்த இயக்ககத்தின் துணைத் தலைமை இயக்குநருக்கு அளித்துள்ளது. தேசிய மாணவர்படை குறித்த செலவை மத்திய அரசும் மாநில அரசும் ஏற்கின்றன.

1999-2000ஆம் ஆண்டில் 88,328 தமிழக மாணவர்கள் தேசிய மாணவர் படையில் சேர்ந்துள்ளனர். தமிழ்நாடு அரசு தனது பங்காக ரூ.1,315 இலட்சம் கடந்த ஆண்டிற்கென ஒதுக்கீடு செய்துள்ளது. மேலும் 2000-2001-ல் இதற்காகக் கூடுதல் தொகை ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது.

இந்தியா முழுவதிலுமுள்ள 16 மாநில தேசிய மாணவர்படை இயக்கங்களுள் தமிழ்நாடு தேசிய மாணவர் படைக்குழு புதுதில்லியில் நடைபெற்ற குடியரசு தின முகாமில் கலந்துகொண்டு, தேசிய அளவில் முதலாவதாக வந்து "பிரதமர் பதாகையை" வென்றுள்ளது. தமிழ்நாடு தேசிய மாணவர் படைக்குழு இதுகாறும் 11 முறை தேசிய அளவில் முதலாவதாக வந்துள்ளது என்பது பாராட்டுக்குரியதாகும்.

தமிழக அரசு, தேசிய மாணவர் படையினருக்கு ஊக்கம் அளிக்கும்பொருட்டு கீழ்க்காணும் சலுகைகளை அளித்துள்ளது.

(அ) தேசிய மாணவர் படை பயிற்சியில் சிறந்தவர்களுக்கு உதவித்தொகையாக முதுநிலைப்பிரிவில் 80 மாணவர்களுக்கு ரூ.1200 வீதமும், இளநிலைப்பிரிவில் 90 மாணவர்களுக்கு ரூ.600 வீதமும் ஆண்டுதோறும் வழங்கப்படுகின்றன.

(ஆ தேசிய மாணவர் படை இயங்குகின்ற கல்லூரி ஒவ்வொன்றிலும் தேசிய மாணவர் படை சான்றிதழ் உடையவர்களுக்கு இளநிலை மற்றும் முதுநிலை பட்டப்படிப்பில் ஒவ்வோர் இடம் ஒதுக்கப்படுகிறது. அவ்வாறே பல்தொழில்நுட்பப் பயிலகங்கள் ஒவ்வொன்றிலும் ஓரிடம் ஒதுக்கப்படுகிறது.

(இ) 2000 ஆம் ஆண்டு குடியரசு தின விழாவில் கலந்து கொண்ட தேசிய மாணவர் படையினருக்கு அளிக்கப்பட்டு வந்த ஊக்கத் தொகை ரூ.100/-லிருந்து ரூ.1000/- ஆக உயர்த்தி வழங்கப்பட்டது.

(ஈ) பொறியியற் கல்லூரிகளில் தேசிய மாணவர் படையினருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 2 இடங்கள் 10 இடங்களாக வரும் கல்வியாண்டிலிருந்து உயர்த்தப்படுகிறது.

### 6.3 நாட்டு நலப்பணித் திட்டம்

நாட்டு நலப் பணித் திட்டம் தமிழகத்தில் 1170 பள்ளிகள் (50 தொண்டர்கள் வீதம் 1170 அலகுகள்), 528 கல்லூரிகள் மற்றும் தொழில்நுட்பப் பயிலகங்களில் (100 தொண்டர்கள் வீதம் 1065 அலகுகள்) செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாநிலத்திலுள்ள மொத்த நாட்டு நலப்பணித்திட்ட தொண்டர்களின் எண்ணிக்கை 1,65,000 ஆக உள்ளது. 2000-2001 ஆம் கல்வியாண்டு முதல் இந்த எண்ணிக்கை 1,70,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இதற்கான செலவினம் 7:5 என்ற விகிதத்தில் மத்திய அரசாலும், மாநில அரசாலும் பகிர்ந்து கொள்ளப்பட்டு வருகிறது. 1999-2000 ஆம் ஆண்டிற்கான நாட்டு நலப்பணித் திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு ரூ.5.11 கோடி ஆகும். (பள்ளிகளுக்கு ரூ.1.86 கோடி, கல்லூரிகள் மற்றும் தொழில்நுட்பப் பயிலகங்களுக்கு ரூ. 3.25 கோடி). இந்த மானியத் தொகை அன்றாட பணிகள் சிறப்பு முகாம்கள் நடத்துவதற்கும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. நாட்டு நலப்பணித் திட்ட பணிகளாவன—வளாகங்களை மேம்படுத்துதல், மரம் நடுதல், இரத்த தானம் செய்தல், கல்வியறிவு இயக்கம், எய்ட்ஸ் நோய் பற்றிய விழிப்புணர்வு இயக்கம், உடல் நலம், சத்துணவு, குடிசைப் பகுதிகளை மேம்படுத்துதல், சேவை நிறுவனங்களுடன் இணைந்து செயல்படுதல் மற்றும் பல.

### 6.4 சாரண சாரணியர் இயக்கம்

சர்வதேச இயக்கமான சாரண சாரணியர் இயக்கத்தின் முக்கியக் குறிக்கோள் பள்ளி மாணவ மாணவியரிடையே நல்லொழுக்கத்தை வளர்த்தல், நாட்டுப்பற்று உணர்வு, இரக்க மனப்பான்மை, சமூகப் பணி ஆகியவைகளை புகட்டுவதாகும். 'எப்போதும் தயாராக இரு' என்பது அதன் கோட்பாடாகும். இந்த இயக்கம் தமிழ்நாட்டில் 3430 பள்ளிகளில் இயங்கி வருவதுடன், இந்த இயக்கத்தில் 74,500 மாணவர்களும் 43,889 மாணவியரும் உறுப்பினர்களாக உள்ளனர். 1998-99 ஆம் ஆண்டு முதல், 2000 சிறந்த சாரண சாரணியருக்கு 'இராஜ்ய புராஸ்கர்' விருது வழங்கப்பட்டு வருகிறது. அரசு இதற்காக ரூ.5 இலட்சம் செலவு செய்கிறது.

### 6.5 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகள் குறித்து வழிகாட்டுதல்

உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் படிக்கும் மாணவர்கள் அவர்களுக்குண்டான பல்வேறு போட்டித் தேர்வுகளைப் பற்றியும், வேலைவாய்ப்புகளைப் பற்றியும், சுய தொழிலுக்கான வாய்ப்புக்களைப் பற்றியும் போதுமான வழிகாட்டுதல்



இல்லாமல் இருக்கின்றார்கள். கிராமப்புறப் பகுதிகள் மற்றும் சிறிய நகரங்களில் வாழ்கின்ற மாணவர்கள் தங்கள் எதிர்காலத்தைப் பற்றி திட்டமிடத் தெரியாத தேக்க நிலையில் உள்ளார்கள். உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் படிக்கின்ற மாணவ சமுதாயத்திற்கு சரியான வேலை வாய்ப்பிற்கான வழிகாட்டும் முறையை இணையம் உட்பட மின்னணுவியல் மற்றும் பத்திரிகை மூலம் பரவலாக அனைவரும் அறியும்படி இத்துறை வழிவகுத்து ஆவன செய்து முக்கிய பங்காற்றும்.

## II. மாணவரல்லாத இளைஞர்களுக்கான திட்டங்கள்

### 6.6 இளைஞர் விடுதிகள்

நமது நாட்டின் பாரம்பரியப் பண்பாட்டைப்பற்றித் தெரிந்துக்கொள்ள இளைய சமுதாயம் மேற்கொள்ளும் பயணங்களை ஊக்குவிக்கும் பொருட்டு இளைஞர் விடுதிகள் கட்டப்படுகின்றன. இளைஞர்கள் மேற்கொள்ளும் கல்விச் சுற்றுலா, சாகசச் சுற்றுலா, இன்பச் சுற்றுலா, சரித்திரப் புகழ்பெற்ற மற்றும் பாரம்பரிய கலாச்சார மையங்களுக்குச் செல்லும்போது அவர்களுக்கு குறைந்த செலவிலான தங்கும் வசதிகளை அளிக்கும் நோக்கத்தோடு இளைஞர் விடுதிகள் கட்டப்படுகின்றன.

இது மைய அரசும் மாநில அரசும் இணைந்து செயல்படுத்தும் திட்டமாகும். மாநில அரசு இளைஞர் விடுதி கட்டுவதற்கான நிலத்தை இலவசமாகத் தருகிறது. மைய அரசு கட்டுமானப் பணிகள் மற்றும் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்கிறது.

தற்சமயம் தமிழ்நாட்டில் சென்னை, மதுரை, தஞ்சாவூர் மற்றும் திருச்சி ஆகிய நகரங்களில் இளைஞர் விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. உதகமண்டலத்தில் இளைஞர் விடுதி கட்டுவதற்கு மைய அரசு கொள்கை அளவில் ஒப்புதல் வழங்கியுள்ளது. மத்திய பொதுப் பணித் துறை கட்டுமானப் பணிக்கான வரைபடங்களைத் தயாரித்து வருகிறது.

மாமல்லபுரம், இராமேஸ்வரம் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் புதிதாக இளைஞர் விடுதிகளைக் கட்டுவதற்கான கருத்துரு மைய அரசுக்கு பரிந்துரை செய்து அனுப்பப்பட்டுள்ளது.

### 6.7 இளைஞர் விழா

இளைஞர் விழாக்கள் ஒவ்வோர் ஆண்டும் மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் இளைஞர்களிடையே அர்த்தமுள்ள சுமுகமான

நட்புறவையும், ஒருவரையொருவர் புரிந்துகொள்ளும் வாய்ப்பினை ஏற்படுத்தும் நோக்கத்துடனும் நடத்தப்பட்டு வருகின்றன. மாநில அரசின் ஒதுக்கீடு ரூ.1.3 இலட்சம் ஆகும். மைய அரசும் இதேபோன்று ஒவ்வோர் ஆண்டும் தேசிய அளவில் இளைஞர் விழாவினை சனவரித் திங்கள் 12-16 வரை நடத்தி வருகிறது. இவ்விழாக்களில் பல்வேறு மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களைச் சார்ந்த அணிகள் 18 வெவ்வேறு போட்டிகளிலும், போட்டிகள் அல்லாத கலை நிகழ்ச்சிகளிலும் பங்கேற்கின்றனர். தேசிய இளைஞர் விருதுகள் இந்த விழாவின் போது வழங்கப்படுகின்றன.

## 6.8 வீரதீரச் செயல்களை ஊக்குவிக்கும் திட்டம்

மைய அரசின் 50 விழுக்காடு மானிய உதவியுடன் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இளைஞர்களைப் பேணுவது, சவால்களை எதிர்கொள்ளும் திறன், பரந்த மனப்பான்மை, ஒருங்கிணைந்த கூட்டு முயற்சி மற்றும் கடினமான சூழ்நிலைகளை எதிர்கொண்டு விரைந்து முடிவெடுக்கும் திறனை வளர்ப்பதை குறிக்கோளாகக் கொண்டு இத்திட்டம் செயல்பட்டு வருகிறது. பின்வரும் வீரதீரச் செயல்களுக்காக மாநில அரசுகள், கல்வி நிறுவனங்கள், அரசு சார்பற்ற நிறுவனங்கள், தனிநபர் குழுக்கள் உதவி வழங்கப்படுகிறது.

நீண்ட தூரப் பயணம், நீண்ட நடைப் பயணம், முகாம் அமைத்தல், மலைக்குன்று ஏற்றம், மலையேற்றம், சைக்கிள் பயணம், பனிச் சறுக்குதல், படகு சவாரி, நீர் சறுக்குதல், தொலைதூர நீச்சல், காற்றில் மிதத்தல், குதித்தல், பாய்மரச் சவாரி, துடுப்புப் போட்டி பாராசூட்டிங் மற்றும் பல.

1998-99ஆம் ஆண்டில் 100 மாணவர்கள் மற்றும் சென்னை மாநகராட்சியைச் சார்ந்த மாமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழு நீலகிரியில் நீண்டதூர மலையேற்றம் செய்தனர். இதற்கு மைய அரசிடமிருந்து ரூ.0.57 இலட்சம் மானியம் பெறப்பட்டது.

## 6.9. இளைஞர்களுக்குப் பயிற்சியளிக்கும் திட்டம்

15-35 வயதுள்ள கிராமப்புற இளைஞர்களுக்காக மைய அரசால் உருவாக்கப்பட்ட திட்டமாகும். அந்தந்த இடத்திலுள்ள தேவைகளைக் கருத்திற்கொண்டு தக்க பயிற்சி அளிப்பதன் மூலம் இளைஞர்களிடம் மறைந்து கிடக்கும் திறமைகளை வெளிக்கொணரவும், சுய வேலைவாய்ப்பு மற்றும் போதிய வேலைவாய்ப்பு வசதிகளைப் பெருக்கிடுவதையும் இத்திட்டம் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. வேளாண்மை, கால்நடைப் பராமரிப்பு, பால்வளம், கோழிவளர்ப்பு, தையற்கலை, வானொலிப் பெட்டி



மற்றும் தொலைக்காட்சி பழுதுபார்ப்பு, கணினிப் பயிற்சி போன்றவைகள் இப்பயிற்சித் திட்டத்தில் அடங்கியுள்ளன. இத்திட்டம் மாநில அரசு, அரசு சார்பற்ற நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தப் பயிற்சி முகாமின் கால அளவு ஒரு மாதம் முதல் ஆறு மாதம் வரை கொண்டதாகும்.

இத்திட்டத்தின்கீழ் பயிற்சி பெறும் பங்கேற்பாளர்களுக்கு மைய அரசு, அவர்களின் இருப்பிடத்திலிருந்து பயிற்சி நடைபெறும் இடத்திற்கு சென்று வர இரண்டாம் வகுப்பு இரயில் கட்டணம் அல்லது குறுகிய தூர பேருந்துக் கட்டணம், உணவு, தங்குமிடம் மற்றும் இதர செலவினங்களுக்காக அதிகபட்சமாக ஒருவருக்கு ஒரு நாளைக்கு ரூ. 50 வீதம் வழங்கி வருகிறது.

## 6.10 தேசிய ஒருமைப்பாட்டினை ஊக்குவித்தல்

இத்திட்டத்தின்கீழ், தேசிய ஒருமைப்பாட்டினைப் பேணவும் மற்றும் மத நல்லிணக்கத்தை மேம்படுத்தவும் நடத்தப்படும் பல்வேறு நிகழ்ச்சிகளுக்காக மைய அரசு நிதியுதவி வழங்கி வருகிறது. இதில் அடங்கியுள்ள இரண்டு முக்கிய பயிற்சித் திட்டங்கள்:—

(அ) தேசிய ஒருமைப்பாட்டு முகாம்

(ஆ) மாநிலங்களுக்கிடையே இளைஞர்கள் பரிவர்த்தனை

தேசிய ஒருமைப்பாட்டு முகாம் நாட்டின் பல்வேறு பகுதிகளில் 7-10 நாட்கள் நடத்தப்படுகிறது. இதில் 50 முதல் 200 இளைஞர்கள் பங்கேற்கலாம். இந்த முகாம்களில் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களைச் சார்ந்த இளைஞர்கள் ஒன்றாகத் தங்கியும், உணவருந்தியும், ஒருவரையொருவர் புரிந்து கொண்டும், கலைநிகழ்ச்சிகளில் பங்கேற்றும் மற்றும் தொழில் முகாமில் பங்கேற்றும் வருகின்றனர்.

மாநிலங்களுக்கிடையே இளைஞர்கள் பரிவர்த்தனையின்கீழ், ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட மாநிலங்களைச் சார்ந்த மாணவர்கள் மற்றும் மாணவரல்லாத இளைஞர்கள் மற்ற மாநிலங்களுக்குச் சென்று அங்குள்ள மாறுபட்ட கலாச்சாரத்தைத் தெரிந்துகொள்ள ஏதுவாகிறது.

15-35 வயதிற்குட்பட்டவர்கள் அனைவரும் இத்திட்டத்தில் பங்கேற்கலாம். குறிப்பாக 1. ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் 2. இளைஞர் மன்றங்கள் அல்லது தன்னார்வ நிறுவனங்களில் உறுப்பினர்களாக உள்ள மாணவரல்லாத இளைஞர்கள், 3. விவசாய குடும்பத்தைச் சார்ந்தவர்கள்

[2000 ஏப்ரல் 10

4. தொழிலாளர் அமைப்பைச் சார்ந்தவர்கள் போன்றோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

இத்திட்டத்திற்கான நிதியுதவி பின்வருமாறு:

(அ) உணவு மற்றும் தங்குமிடம் - மாநகரங்கள் அல்லது மாநில தலைநகரங்களாயின், ஒருவருக்கு ஒரு நாளைக்கு ரூ.40, மற்ற இடங்களுக்கு ஒருவருக்கு ஒரு நாளைக்கு ரூ.35.

(ஆ) பயணக் கட்டணம் - இரண்டாம் வகுப்பு இரயில் கட்டணத்தில் 90 விழுக்காடு அல்லது பேருந்துக் கட்டணம்.

(இ) அச்சிடுதல் மற்றும் வெளியிடுதல்-இளைஞர்கள் பரிவர்த்தனை நிகழ்ச்சி பற்றிய அறிக்கைகளை அச்சிட்டு வெளியிடுவதற்கான விலை நிகழ்வு ஒன்றுக்கு ரூ.1000-க்கு மிகாமல் வழங்கப்படுகிறது.

### 6.11 இளைஞர்களுக்கான கண்காட்சித் திட்டம்

இத்திட்டத்தின் குறிக்கோள், தேசிய வளர்ச்சியில் இளைஞர்களின் ஈடுபாட்டினை மதித்து வளர்த்தல், மதச் சார்பற்ற தன்மையை ஊக்குவித்தல் தேசிய ஒருமைப்பாடு, வேற்றுமையில் ஒற்றுமை, இந்தியக் குடிமகன் என்பதில் பெருமைப்படுதல், சமூக தீமைகளை ஒழித்தல் போன்றவையாகும். இத்திட்டம் மாநில அரசு, அரசு சார்பற்ற நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நாட்டுப்புற நடனம், நாட்டுப்புறப் பாடல்கள், வர்ணம் தீட்டுதல், கலை மற்றும் கைத்தொழில், புத்தகங்கள், பல்வேறு வளர்ச்சிப் பணிகள் மற்றும் இளைஞர்கள் சார்ந்த திட்டங்கள் ஆகியவை மைய அரசின் நிதியுதவிடன் நடத்தப்படுகின்றன. இத்திட்டதிற்கான நிதியுதவி பின்வருமாறு:-

(அ) நாட்டுப்புற நடனம், நாட்டுப்புறக் கலைகள் மற்றும் பாடல்கள், வர்ணம் பூசுதல், கலை மற்றும் கைத்தொழில் மற்றும் தேசிய அளவிலான இளைஞர்கள் மாநாடு/கலந்துரையாடல்/கருத்தரங்கம்/இளைஞர்கள் முகாம்கள் நடத்துதல் ஆகியவற்றிற்கு—

1. உணவுக் கட்டணம் ரூ.20 நபர் ஒருவருக்கு ஒரு நாளைக்கு.
2. பயணக் கட்டணம்- பங்கேற்பாளர் தங்குமிடத்திலிருந்து முகாம் நடக்கும் இடத்திற்கு வர குறுகிய வழி பயணக் கட்டணம்.



2000 ஏப்ரல் 10]

3. அனுமதிக்கப்பட்ட செலவினத் தொகையிலிருந்து 25 விழுக்காடு எதிர்பாரா செலவினங்களுக்காக அனுமதிக்கப்படுகிறது.

(ஆ) ஏனைய தேசிய கருத்துத் திட்டங்களுக்கு 90 விழுக்காடு ஒதுக்கீடு.

### 6.12 மலைவாழ் பகுதியில் இளைஞர் நலத்தினை ஊக்குவிக்கும் சிறப்புத் திட்டம்

மலைவாழ்பகுதி இளைஞர்களுக்கிடையே தலைமையேற்கும் தன்மையை வளர்க்கும் பயிற்சித் திட்டங்கள், சுயவேலைவாய்ப்புத் திறனை வளர்க்க உதவும் தொழில் பயிற்சிகள், கண்காட்சிகள் இத்திட்டத்தின் கீழ் நடத்தப்படுகின்றன. இத்திட்டம் மாநில அரசு, அரசு சார்பற்ற நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள் மூலம் செயல்படுத்தப்படுகிறது. ஏனைய இளைஞர் நலத் திட்டங்களுக்கு வழங்கப்படுகின்ற நிதியுதவியைப் போன்று இத்திட்டத்திற்கும் வழங்கப்படுகிறது.

### 6.13 இளைஞர் மன்றங்கள்/சங்கங்கள்/சுய உதவி குழுக்கள் அமைப்பதை ஊக்குவித்தல்

நேரு யுவ கேந்திரா சங்கேதன், மைய அரசின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறையின்கீழ் செயல்படுகின்ற ஒரு சுயாட்சி நிறுவனமாகும். இந்நிறுவனம் 15-35 வயதிற்குட்பட்ட மாணவரல்லாத கிராமப்புற இளைஞர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணத்துடன் பல்வேறு கிராமப்புற இளைஞர் மன்றங்களை அமைத்துள்ளது. நேரு யுவ கேந்திரா சங்கேதன் மூலம் மாநில அரசின் "நமக்கு நாமே" திட்டங்களும், பல்வேறு ஐ.இ.சி. செயல்பாடுகளும் நடைபெற்று வருகின்றன. இளைஞர்கள் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை மாநிலத்தின் ஒவ்வொரு கிராமப் பஞ்சாயத்துகளிலும் இளைஞர் மன்றங்களை அமைப்பதை முக்கியக் குறிக்கோளாகக் கொண்டு இளைஞர் மன்றங்களை அமைக்கும் இயக்கத்தினை வலுப்படுத்த முனையும்.

ஊரக வளர்ச்சித் துறை, மைய அரசின் நிதி ஆதாரத்துடன் செயல்பட்டு வரும் சுவர்ண ஜெயந்தி கிராம் சுவரோஸ்கர் யோஜனா என்ற திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ், வறுமைக் கோட்டின்கீழ் வாழும் மக்களை ஒன்றிணைத்து சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்படுகின்றன. அவர்கள் குறைந்தபட்சம் ஆறு மாத காலத்திற்காவது சிக்கனம்-உடன்-கடன் வழங்கும் அமைப்பில் பங்கேற்க ஊக்கமளிக்கப்படுகிறார்கள். சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டு

223302
இணைப்புகள்

நிலையாக இருக்கும்பட்சத்தில் அக்குழுக்கள் சுழற்சி முறையில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையிடமிருந்தும், வங்கிகளிலிருந்தும் நிதியுதவி மற்றும் மானியக் கடன் பெற தகுதியுள்ளவர்களாகிறார்கள். இளைஞர்கள் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, ஊரக வளர்ச்சித் துறையுடன் இணைந்து, கிராமப்புறங்களில் 15-35 வயதிற்குட்பட்ட மாணவரல்லாத கிராமிய இளைஞர்களைக் கொண்ட 1000 சுய உதவிக் குழுக்களை 2000-2001ஆம் ஆண்டில் அமைக்க முயலும். இந்த சுய உதவிக் குழுக்கள் எதிர்காலத்தில் கிராமப்புறங்களில் இளைஞர் மன்றங்கள் அமைக்க முக்கியக் கருவாக அமையும்.

இதேபோன்று, 2000-2001ஆம் ஆண்டில் ஒவ்வொரு கிராமப் பஞ்சாயத்துக்கள் மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் இளைஞர் மன்றங்களை அமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும். இந்த மன்றங்கள் அந்தப் பகுதியில் அமைக்கப்படவுள்ள விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி மையங்களைப் பராமரிக்கும்.

## 6.14 மாநில இளைஞர் ஆலோசனைக் குழு அமைத்தல்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 'மாநில இளைஞர் ஆலோசனைக் குழு' அமைத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது. மாநில அரசின் பல்வேறு துறைகளின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் இளைஞர்கள் நல செயல்பாடுகளை ஒருங்கிணைக்கும் உச்ச அமைப்பாக இது விளங்கும்.

## 6.15 முடிவுரை:

தமிழக அரசின் பல்வேறு துறைகள் மூலம் விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் மேம்பாட்டுக்கான செயல்பாடுகளை ஊக்குவிக்கும் வகையில எண்ணற்ற திட்டங்கள் நடைமுறையில் இருப்பினும், அவற்றை ஒருங்கிணைத்துப் புதிய பரிமாணமும் அதிக அழுத்தமும் அளிப்பதன் மூலம் ஒருமித்த தாக்கத்தை ஏற்படுத்துவது அவசியமாகிறது.

இந்நோக்கத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட இளைஞர்களின் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை இளைய தலைமுறையினரிடையே சீரிய நல்லொழுக்கத்தைப் புகுத்துவதிலும், மதச் சார்பற்ற மனப்பான்மையையும் விளையாட்டு வீரர்களின் நற்பண்புகளையும் தன்னலம் கருதா சேவை மனப்பான்மையையும் ஊக்குவிப்பதிலும் ஈடுபடும்.